PENTATUCH (EXCLUDING GENESIS 1-12 CHAPTERS

இயேசுக்கிறிஸ்து யார்?

பேராசிரியர் சைமன் கிரீன்லீஃப் எல்லா காலங்களுக்கும் தலைசிறந்த வழக்கறிஞராய் விளங்கிவருகிறார். அவரது "நிச்சயத்தைக் குறித்த பிரமாணங்கள்" “Laws of Evidence” அநேக ஆண்டுகாலங்களாய் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையான ஒழுங்குமுறை பரிசீலனைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள ஒரு பல்கலைக் கலகத்தில் அவர் சட்டம் போதித்துக் கொண்டு இருந்த சமயத்தில், அங்குள்ள மாணவர்களில் ஒருவன் சரித்தர பூர்வமான ஒருவரை "நிச்சயத்தைக் குறித்த பிரமாணங்களைக்கொண்டு" விவரிக்க முடியுமா என வினவினான். கிரீன்லீஃப் அம்மாணவனை நோக்கி விவரிக்க முடியும் என ஒத்துக்கொண்டவராய், அச்சரித்திரப் பூர்வமான நபர் யார் என அவனை நோக்கி வினவினார். அதற்கு அம்மாணவன் மறுமொழியாக, பரிசீலனைக்குரிய அந்நபர் இயேசுக்கிறிஸ்து என்றான். பேராசிரியர் கிரீன்லீஃப் ஒத்துக்கொண்டவராய் பரிசீலனைக்காக இயேசுக்கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள முன்வந்தார், அவர் தனது பரிசீலனையை முடித்துக்கொண்ட போது, அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் பேராசிரியர் கிரீன்லீஃப் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள எல்லா நீதி சார்ந்த அலுவலர் அனைவருக்கும் வெளிப்படையான ஒரு கடிதத்தை எழுதி அதில் தான் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவை கண்டுகொண்ட விதத்தை விவரித்து இருந்தார். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த விஷயங்கள் சரித்திரப்பூர்வமாய் மிகத் துள்ளியமானவை என முழு நிச்சயத்துடன் ஆதாரங்களுடன் எழுதி அனுப்பினார். மட்டுமல்லாது இயேசுக்கிறிஸ்து மனிதரைவிட மேம்பட்டவர் என்றும், அவர் கடவுளோ அல்லது இல்லையோ என்பதை பரிசீலித்த போது, அவர் கடவுளைத் தவிர வேறு எவருமல்லர் என்பதை மிக உறுதியாய் ஆராய்ந்து கண்டுகொண்டேன். அவரைக் கடவுளாய் கண்டுகொண்டமாத்திரத்தில் அவரை எனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டேன் என எழுதினார். ஆகவே நீதித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு நபரும் "நிச்சயத்தைக் குறித்த பிரமாணத்தை" பயன்படுத்தும் பொழுது, அவரைக்குறித்து தவறாய் புறிந்துகொள்வதை தவிர்த்து, ஒருவேளை அவரை உங்களது சொந்த இரட்சகராய் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் மேற்கூறிய பிரமாணத்தின் மூலம் அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்றும் சரித்திரப் பூர்வமாய் அவரைக் குறித்த விஷயங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதையும் கண்டுகொள்ளுங்கள் என எழுதி முடித்தார்.

நான் எவ்வாறு இரட்சிப்படைய முடியும்?

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருக்கும் இரட்சிப்பு என்பது கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

இரட்சிப்பு என்பது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், தேவனின் அண்டசராசரத்தில் அனைவராலும் எடுத்துக்கொள்ளப் படக்கூடியதாயும்

இருக்கிறது. பாவிகளின் இரட்சிப்பு என்பது தேவன் பாவத்தை கண்டும், காணாமல் கடந்து செல்லும் காரியமாகாது. தேவன் பாவிகளை முற்றிலும் நீதியின் அடிப்படையில், தனது தெய்வீக பரிசுத்த குணாதிசயத்தின் அடிப்படையில், இரட்சிக்கிறவராய் இருக்கிறார். இது கிருபை என அழைக்கப்படுகிறது. இது தேவனை மட்டும் சார்ந்ததாய் இருக்கிறது, இதற்கென மனிதன் எவ்வித கிரியையும் நடப்பிக்க அவசியமில்லை. அளவிட முடியாத இவ்வண்ட சராசரத்தின் சிருஷ்டிப்பானது, தேவன் பாவிகளை இரட்சிக்கும் திட்டத்தை விட, மிகவும் குறைவாகவே எடுத்துக்கொள்ளப்படுகிறது.

எப்படியிருப்பினும், தேவனுடைய இரட்சிப்பை ஒரு பாவி ஏற்றுக்கொள்வது என்பது வாழ்வில் மிக எளிதான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஐசுவரியவானாய் இருத்தல் அவசியமற்றது, ஞானமுள்ளவராகவோ, மற்றும் படிப்பறிவுள்ளவராகவோ இருத்தல் அவசியமற்றது. வயதோ அல்லது தோலின் நிறமோ இதற்கு எவ்விதமான தடையையும் கொண்டுவருவது இல்லை. தேவனுடைய மீட்பில் இருக்கும் எண்ணிமுடியாத நன்மைகளானது, மிக எளிதாய் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் இருக்கிறது, இப்பரந்த அண்டசராசரத்தில் ஒருவரும் இதை அடைந்து கொள்வதற்கு விதிவிலக்கின்றி காணப்படுகின்றனர்.

நான் ஒரு கிறிஸ்தவனாவது எவ்வாறு?

ஒரு எளிய படி எடுத்து வைப்பதை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம். முதலாவது, நான் ஒரு பாவியாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 3:23; 6:23; எசேக்கியேல் 18:4; யோவான் 5:24).

இரண்டாவதாக, பூரணமாய் இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுடன் உறவுகொள்ளும் விருப்பத்தை உணருதல் வேண்டும், மற்றும் அவ்வாறு உறவுகொள்ள நான் பூரணமற்றவனாய் இருக்கிறேன் என்பதை உணருதல் வேண்டும், நான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே ஒரே இரட்சகர் என்று கண்டுகொள்ள அவசியமாய் இருக்கிறது. (1 கொரி. 15:3; 1 பேதுரு 2:24; ஏசாயா 53:6; யோவான். 3:16).

மூன்றாவதாக, எனது சொந்த சுயசித்தத்தை பயன்படுத்தி கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எனது இரட்சகராய் ஏற்றுக்கொண்டுள்ளேன் மற்றும் அவரை தனிப்பட்ட விதத்தில் அவர் எனக்காய் மரித்தார் என்று விசுவாசித்து, எனது தனிப்பட்ட வாழ்வின் வழியாகவும், அவரைத் தனிப்பட்ட ஒரு நபராகவும் ஏற்றுக்கொள்ளுதல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. (யோவான் 1:12; 3:36; அப். 16:31; 4:12).

இரட்சிப்பின் விளைவுகள்:

இதன் விளைவுகள் என்பது நம்புவதற்கரிய அற்புதமாய் இருக்கிறது:

எனது பாவங்கள் அகற்றப்பட்டுவிட்டன. (யோவான் 1:29),

நான் தற்பொழுது நித்திய ஜீவனை அடைந்து இருக்கிறேன் (1 யோவான் 5:11,12),

நான் கிறிஸ்துவுக்குள் புது ஜீவியாய் மாறி இருக்கிறேன் (2 கொரி. 5:17),

பரிசுத்த ஆவியானவர் எனது வாழ்வை தமது வாசஸ்தலமாய் எடுத்துக் கொண்டுள்ளார் (1 கொரி. 6:19),

நான் ஒருபோதும் அழிந்து போவதில்லை (யோவான் 10:28-30).

இவ்வுண்மைகள் வாழ்வின் மிகப்பெரிய பரிமாற்றங்களாய் இருக்கின்றன. இதுவே எல்லா மக்களின் இலக்காய் இருக்கிறது; இதுவே நாம் இங்கிருப்பதற்கு மேலான நோக்கமாய் இருக்கிறது. கிறிஸ்தவராகதவர்களை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை பின்பற்றச் செய்யும் இவ்வெளிய போதனைகளால் உற்சாகப்படுத்தி, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் மறுபடி பிறந்த்து நித்திய வாழ்வையடைய உற்சாகப்படுத்துங்கள். (மத். 11:28; யோவான் 1:12; அப். 4:12; 16:31).

© Evangelical Bible College of Western Australia 2004 - PO Box 163 Armadale Western Australia 6992

Many other Christian resources are available freely from our internet web site: www.ebcwa.org.au and www.newstartbibleministries.org.au for weekly messages.

For further information contact Dr Peter Moses at PO Box 163 Armadale WA 6992 or email Brian Huggett brianhuggett@bigpond.com.au

We encourage you to freely copy and distribute these materials to your Pastor and friends. You only, need written permission from EBCWA if you intend using the materials in publications for resale. We encourage wide distribution freely!

பஞ்சாகமம்

பஞ்சாகமம் என்பது பழைய ஏற்பாட்டில் மோசேயின் முதல் ஐந்து புஸ்தகங்களாய் விளங்குகின்றன. அவைகள் ஆதியாகமம்,, யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், மற்றும் உபாகமம்.
இத்தொடர்ப் பயிற்சியில் இப்புஸ்தகமானது / இக்கோப்பானது, இந்த ஐந்து புஸ்தகங்களில் இருந்து 42 பாடங்களைக் கொண்டுள்ளதாய் இருக்கிறது.

<u>ஆதியாகமம்</u>

<u>பாடம் 1 - அதிகாரம் 12</u>

ஆபிரகாம் ஈராக்கில் உள்ள மொசப்பத்தோமியா பள்ளத்தாக்கின் ஊர் என்னும் பட்டண்திலிருந்து வந்தவராய் இருக்கிறார். இவர் கிறிஸ்துவுக்கு முன் கிட்டத்தட்ட 2100 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தவர் இதினிமித்தம் நாம் சிலுவைக்கு பின்னால் இருக்கிறோம் இவர் சிலுவைக்கு முன்னால் இருக்கிறார். இக்காலங்களில் மேற்கத்திய ஐரோப்பிய நாடுகளில், பண்டைய புறஜாதிய பழக்கவழக்கங்களில் நாகரீகமடையாத காலத்தில், ஊர் என்னும் கல்தேயப்பட்டணம் நாகரீகத்தில் கொடிகட்டி பறந்து வந்தது. இதினிமித்தம் ஆபிரகாம் மிகவும் நாகரீகமடைந்த சூழலிலை

பிரதிபலிக்கிறவராய் இருக்கிறார். இவர் அவரது சந்ததியில் தலைவராய் இருந்தார்.

ஆதியாகமம் 12:1-3.
தேவனது போதனைகள் இவ்விடத்தில் மிகவும் தெளிவுடன் இருந்தது. அவிசுவாசமுள்ள உனது குடும்பத்தை விட்டு வெளியேறி வடதிசை மற்றும் மேற்கு திசை நோக்கி பிரயாணம் செய் என தேவன் கூறினார். இதற்கிசைய ஆபிரகாம் தேவன் சொற்படி புறப்பட்டு போனார். இக்காலத்தில் ஆபிரகாம் ஒரு யூதனாய் இருக்கவில்லை அவர் கல்தேய புறஜாதியானாய் இருந்தார். இவர் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்ததினிமித்தம் இவர் ஒரு எபிரெயனாய் மாறினார். இந்த வசனங்களில் ஒரு யூதனாய் இருப்பதற்குரிய ஆதாரங்களைப் பெற்று இருக்கிறோம். யூதர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்தவர்களாய் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். எபிரெயர் என்பதன் பொருள் ஆற்றைக்கடந்த ஒருவர் என்பதாகும். தேவனது வாக்குத்தத்தங்கள் மும்முறை உரைக்கப்படுகிறதாய் இருக்கிறது - நான் உன்னை ஒரு தேசமாக்குவேன் / ஜாதியாக்குவேன், - உன்னை ஆசீர்வதிப்பேன், - உன் பெயரை பெருமைப் படுத்தி ஆசீர்வதிப்பேன்.

ஆதியாகமம் புஸ்தகத்தை, விசுவாசம் மற்றும் தோல்வி என வகையறுக்கலாம். ஆபிரகாம் அப்படியே அச்சடிக்கும் வகையிலான பரிசுத்தவானாய் உங்களுக்கு இருக்கக்கூடாது. ஆபிராகமை பெரியவராக்கியது எதுவென்றால், அவர் விழுந்தபோது, அங்கேயே இருந்துவிடவில்லை, அவர் அவ்விடத்திலிருந்து எழுந்தார், தனது பாவங்களை அறிக்கை செய்தார், தேவனுடன் தன்னை சரிசெய்துகொண்டு முன்னேறிச் சென்றார்.
இங்கு அவர் எவ்வாறு தோல்வியுற்றார்? இதற்கான பதில் ஆதியாகமம் 11:27ல் கொடுக்கப் பட்டுள்ளது. தேராகு, ஆபிரகாமின் தகப்பன் பெயர், இதன் பொருள் "தாமதம்" “delay”. இவர் ஆபிரகாமின் வாழ்வில் தாமதிக்கச் செய்கிறவராய் இருந்தார். ஆபிராம் என்பதன் பொருள் "உயர்வான தகப்பன் மற்றும் காற்றுள்ள இடங்கள் அல்லது உயர்த்தப்பட்ட ஒருவர்" “father of high and windy places or exalted one” இவரது சகோதரனின் பெயர் நாகோர் இதன் பொருள் "தூங்குதல்" “sleepy” ஆரான் என்பதன் பொருள் "வறண்டுபோன இடம்" “a dried up place” ஆபிரகாமின் மனைவி சாராய் என்பதன் பொருள் "தொல்லை கொடுப்பவள்" “nag”. இவள் மிகவும் கவர்ச்சியுள்ளவளாய் இருந்தாள் ஆனால் எப்பொழும் மனமடிவாக்குகிறவளாய் இருந்தாள். இப்படிப்பட்ட தாயானவள் பின்னர் சாராளாய் மறுகிறாள் சாராள் என்பதன் பொருள் "இளவரசி" “princess”.

மனப்பான்மை
ஆபிரகாமுக்கு 100 வயதாகும் வரை, அவரது குடும்பம், ஒரு பெரிய பிரச்சனைக்குரியதாய் இருந்து வந்தது, சாராள் பிரச்சனைக்குரியவளாய் இருந்து அவர்களது 90 முதல் 100 வயது வரை மனமடிவாக்குகிறவளாய் இருந்து வந்தாள். அவர்களுக்கு இருந்து வந்த பிரச்சனைகள், அவர்களது ஆவிக்குரிய வாழ்வில் என்ன நிகழ்ந்து கொண்டு இருந்தது என்பதை, பிரதிபலித்துக்காட்டுகிறதாய் இருந்தது. 1 பேதுரு 3:5-7 ல்

காட்டப்பட்டுள்ளபடி, அவர்களது பிரச்சனையானது சாராய் தேவனுக்கும் தனது புருஷனுக்கும் முன்பதாக தலைவணங்கி, ஆபிரகாமை ஆண்டவனே என அழைக்கும் வரைக்கும் நீடித்தது. இதன் விளைவு, அவள் அதன் பின்னர் மலடியாய் இல்லாது, ஆவிக்குரிய முதிர்ச்சியடையத் துவங்குதலை உருவாக்கிற்று.
இதை நாம் நடைமுறைப் படுத்தும்போது, நமது ஆவிக்குரிய வளர்ச்சியானது, நமது வாழ்வில் நம்முடன் இணைந்து வளருகிறதாய் இருக்கிறது. நமது மகிழ்ச்சிக்கான சிறப்பான தனிப்பட்ட முதலீடு என்பது, கிருபையிலும், கர்த்தரை அறிகிற அறிவிலும் வளருவதுதாய் இருக்கிறது. இது நித்தியத்தில் நித்தியமான பலன்களை பெற்று வாழ்வது மட்டுமல்லாது, இங்கு நீங்கள் வாழும்போது உங்கள் வாழ்வானது அளவிடமுடியாத ஆசீர்வாதத்திற்குரியதாய் இருக்கும். உங்களுக்கு சமாதானமும், உங்கள் ஆத்துமத்தில் செழிப்பும் உங்களது நண்பர்கள் ஆச்சரியப்பட்டு பொறாமை படக்கூடிய வகையில் உங்கள் வாழ்வில் இருக்கும். இப்படிப்பட்ட வாழ்வானது அவர்களுக்கு முன்னதாய் சாட்சியாய் இருந்து, எப்படி இப்படிப்பட்ட மாறுதல்கள் உங்கள் வாழ்வில் நிகழ்ந்தது எனக்கூறி கிறிஸ்துவுக்கு நேராய் அவர்களை வழிநடத்த ஏதுவுண்டாக்கும்.

தேவனுடைய வழிநடத்துதல்

தனது சொந்த பட்டணத்தை விட்டு செல்ல ஆபிரகாம் தேவனிடத்திலிருந்து கட்டளை பெற்று இருந்தும், அக்கட்டளைக்கு ஆபிரகாம் முற்றிலும் கீழ்ப்படியாதவராய், தனது தகப்பனையும் கூடவே கூட்டிக்கொண்டு சென்றார் என்பதை ஆதியாகமம் 11:31-32 நமக்கு காட்டுகிறதாய் இருக்கிறது.

ஆதியாகமம் 12:1 ல் தேவன் ஆபிரகாமுக்கு காண்பிக்கும் தேசத்திற்கு போகும்படி கூறப்பட்டது. அவரது தகப்பன் எப்படியோ, டைகிரிஸ், யூப்ரடீஸ் ஆற்றின் முகத்துவாரதின் உள்ள ஆரான் பட்டணம் வரை வந்து சேர்ந்தார்.

இங்கிருந்து அவர்கள் சிரியாவின் வழியாய் கானானுக்குள் பிரவேசிக்க, அவர்களுக்கு ஒட்டகப்பயணம் அவசியமாய் இருந்தது. எப்படியோ ஆபிரகாம் தனது தகப்பன் தேராகு மரிக்கும் வரையில் ஆரானில் தங்கியிருந்தார். அநேக விசுவாசிகளும் தங்களது சொந்த குடும்பத்துடன் பிண்ணி பிணைக்கப்பட்டுள்ளனர். இதன் பொருள் அவர்கள் கர்த்தருக்கு கீழ்படிகிற விஷயத்தில் குடும்பத்துடன் ஒத்துப்போகிறவர்களாய் இருக்கிறார்கள். ஆரான் என்னும் பட்டணம் ஆபிரகாமுக்கும் ஆவிக்குரிய வறட்சியை அளிப்பதாய் இருந்தது. ஆபிரகாம் தலைசிறந்த வியாபாரியாய் விளங்கினார், அதனிமித்தம் பொருளாதார ரீதியில் மிகவும் பணக்காரராய் வளர்ந்தார் ஆனால் ஆவிக்குரிய ரீதியில் அவர் மிகவும் ஏழ்மைநிலையில் காணப்பட்டார். தேராகு வாழ்வை தேவன் முடிக்க வேண்டியதாய் இருந்தது, இதினிமித்தம் ஆபிரகாம் முன்னேறி செல்ல வழியுண்டானது.

அனுபவத்தில் விசுவாசிகள் முன்னேறி செல்லாது இருக்கும் போது இரு காரியங்கள் சம்பவிக்கலாம். ஒன்று அவர்கள் அலமாறியில் வைத்து விட்டால், அது சம்மந்தப்பட்ட ஆசீர்வாதங்களை மற்றவர்கள்

அனுபவிப்பார்கள், மற்றொன்று, அவர்கள் பாதி மட்டும் சென்று இன்னும் முன்னேறிச் செல்லாமல் இருப்பார்களேயானால், தேவன் களையெடுக்கும் கருவி கொண்டு களையெடுத்து, அவர்கள் முன்னேறி செல்ல தடையாய் உள்ள காரியங்களை அகற்ற / களைஎடுக்க வகைசெய்வார்.
எப்படியிருப்பினும் நீங்கள் தேவனிடம் தோற்றுப்போனாலும், அவர் உங்களை தோற்றுப்போக விடவே மாட்டார். இவ்வாறு ஆபிரகாம் அநேக ஆண்டுகளை ஆரானில் வீணடித்த போதும், தேவன் அவருடன் தொடர்ந்து இடைபடுகிறவராய் இருந்தார். மட்டுமல்லாது உங்கள் வாழ்விலும் காலத்தை வீணடித்ததும், தோல்வியை தழுவினதும் உண்டானால், அதை உணரும் தருணத்தில் அறிக்கை செய்து தொடர்ந்து முன்னேறுகிறவர்களாயிருங்கள். நீங்கள் உயிரோடிப்பீர்களானால் அவர் உங்களது வாழ்வைக் குறித்து நோக்கமுடையவராய் இருக்கிறார். தேவன் அதை நிறைவேற்றி தீர்க்கும் போது நீங்கள் மரிப்பீர்கள்.

ஆதியாகமம் 12:4-5.

ஆபிரகாமின் 75 வது வயதில் மிகவும் ஐசுவரியமுள்ள மனிதனாய் கானானுக்குள் பிரவேசித்தார், கானான் என்பதன் பொருள் "ஓய்வு பெறும் இடம்" "the place of rest". இதன் முக்கியத்து வத்துவத்திற்கான காரணங்கள், நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்ததினிமித்தம் உங்கள் ஆத்துமாவில் இளைப்பாறுதலை பெறுகிறீர்கள், மற்றும் பூகோள ரீதியில் தேவனக்கு சித்தமான இடத்தில் இருக்கிறீர்கள். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு இந்த தேசத்தில் வாசம் செய்த போது, அவர்களுக்கு சமாதானமும் செழிப்பும் உண்டாயிருந்தது, அவர்கள் அத்தேசத்தை விட்டு வெளியே இருந்த போது, ஐக்கியத்திற்கு புறம்பானார்கள். தோல்விக்கான காரணத்தை நாமறிவோம், பவுலைப்போல ரோமர் 7. ல், ஐக்கியம் கொள்வதில் உள்ளேயும், வெளியேயும் இருக்கிறவர்களாய் இருக்கிறோம்.

ஆதியாகமம் 12:6-9.

ஆபிரகாம் பெத்தேலில் [தேவனுடைய வீட்டில்] ஒரு பலிபீடத்தைக் கட்டி கர்த்தரை தொழுதுகொண்டார். பெத்தேல் தனக்கு மேற்கே இருந்தது, மற்றும் ஆயிப்பட்டணம் [தகர்க்கப்பட்ட இடம்] கிழக்காய் இருந்தது. அங்கிருந்து ஆபிரகாம் பிரயாணப்பட்டு பேசப்படுகிற இடங்களாய் அத்தேசத்தில் பல இடங்களை குறியிட்டான். அத்தேசத்தில் ஆபிரகாமுக்கு ஒன்பது காரியங்கள் இருந்தன:-

[அ] சீகேம் - புயம் அல்லது வல்லமை. அத்தேசத்தில் இருக்கும் காலத்தில் அவர் வல்லமை பெற்றவராய் இருந்தார்.

[ஆ] மோரியா - அறிவுரை அல்லது போதனை. ஆபிரகாமுக்கு தேவன் அத்தேசத்தில் போதனை அளித்தார்.

[இ] கானானியர்கள் - அவர்கள் சுவிஷேசம் அளிப்பதற்கு ஒரு தருணமாய் இருந்த போதும், அவர்கள் மகா பயங்கரமானவர்களாய் இருந்தனர்.

[ஈ] தேவனுடைய வாக்குத்தத்தம் - ஆபிரகாம் தனது சந்ததியினர் அத்தேசத்தை சுதந்தரித்து கொள்வார்கள் என்ற இந்த வாக்குத்தத்தை பெற்றுக்கொள்கிறவராய் இருந்தார்.

[உ] ஆபிரகாம் ஒரு பலிபீடத்தைக்கட்டினார் - இது அவர் தேவனுடன் கொண்ட ஐக்கியத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

[ஊ] ஆபிரகாமுக்கு கூடாரம் இருந்தது. புரதாண சரித்திரத்தில் இக்காலம் மிகவும் மோசமான காலமாய் உலக சரித்திரம் அறிவிக்கிறது, இக்காலத்தில் அநேக ஜனங்கள் கோட்டைகள் எழுப்பப்பட்ட அரணான பட்டணத்திற்குள் வாசம் செய்தனர், ஆனால் இக்காலத்தில் ஆபிரகாம் கூடாரத்தில் வாசம் செய்தது, அவர் தேவன் மீது வைத்திருந்த விசுவாசத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. ஆபிரகாம் 300 ஆண் வேலையாடகளைப் பெற்றிருந்தார், அவர்கள் யுத்தம் செய்வதற்கு பயிற்றுவிக்கப்பட்டிருந்தனர். ஆபிரகாம் நெகேமியாவைப் போன்று, கையில் ஈட்டியுடன் நின்று ஜெபிப்பதற்கு ஆயத்தமாய் இருந்தார்.

[எ] பெத்தேல் - தேவனுடைய வீடு.

[ஏ] ஆயி - அழிவுகளின் குவியல். கிறிஸ்தவர்களாகிய நாம், அழிவின் வீடாகிய பழைய பாவ சுபாவம் மற்றும் தேவனுடைய வீடு அல்லது ஆவிக்குரிய வாழ்வு இதற்கிடையே நடந்து கொண்டு இருக்கிறோம்.

[ஐ] அத்தேசத்தில் ஏற்பட்ட பஞ்சம் ஆபிரகாமின் விசுவாசத்திற்கு ஒரு பரீட்சையாய் இருந்தது.

இப்பரீட்சையில் ஆபிரகாம் தோல்வியை தழுவிக்கொண்டு, பஞ்சம் மிக்கொடூரமானதாய் இருந்தபடியால் எகிப்திலே அவர் தங்கிவிட்டார். தேவன் அவரை கானானுக்கு செல்லப் பணித்தார், அங்கேயே வாழும்படி கேட்டுக்கொண்டார், ஆனால் ஆபிரகாம் எகிப்துக்கு சென்றார்.

எகிப்து எப்பொழுதும் உலகப்பிரகமான காரியங்களுக்கு அடையாளமாய் வேதாகமம் கூறுகிறதாய் இருக்கிறது. எகிப்திற்குள் கடந்து செல்வது ஒவ்வொரு முறையும் தோல்வியின் அடையாளமாய் இருக்கிறது. 1 கொரிந்தியர் 10:13ன் படி ஆபிரகாம் கர்த்தரை நம்பியிருக்க வேண்டியதாய் இருந்தது. எகிப்திற்கு சென்ற ஆபிரகாம் தொடர் பாவங்களை இழைக்க நேரிட்டது. ஆபிரகாம் அத்தேசத்தில் தேவன் மீது இருந்த நம்பிக்கையை இழந்து தோல்வியுற்று, எகிப்துக்கு சென்றபோது மிக மோசமான பாவத்தை இழைக்க நேரிட்டது.

கீழ்ப்படியாமை

ஆதியாகமம் 12:10-13 வசனங்களில் ஆபிரகாம் தனது ஜீவன் அபாயத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில், தனக்கும் சாராளுக்கும் உள்ள உறவை குறித்து

பொய் சொல்லும்படி சொன்னார். அவரது பாவம் பொய்யின் கலவையாய் இருந்தது, அது கோழைத்தனமானதாயும், கவலைப் படுகிறதாயும் இருந்தது. தேவன் ஒரு குமாரனை அத்தேசத்தில் வாக்குப்பண்ணியிருந்தார். அவர் மரித்துவிட்டால் ஒரு குமாரனை உருவாக்க முடியாது போய்விடுமே.

இதினிமித்தம் ஆபிரகாம் தேவனில் நம்பிக்கை வைக்க வில்லை. ஆபிரகாம் எகிப்தில் கண்டிப்பாய் இருக்கக்கூடாது. ஆபிரகாம் தேவனது வாக்குத்தத்தை விசுவாசிப்பதை முற்றிலும் தடைசெய்துவிட்டார் இது எல்லா பாவங்களையும் விட மோசமானதாய் இருக்கிறது. நீங்கள் ஐக்கியத்தை விட்டு வெளியேறி எவ்வளவு நேரம் இருந்தாலும் பாவத்தோடு பாவத்தை கூட்டுகிறவர்களாயிருக்கிறீர்கள்.

12:14-16ல் அவர்கள் எகிப்திற்குள் பிரவேசித்த போது, எகிப்தியர்கள் சாராளைக் குறித்து, அவள் மிகவும் கவர்ச்சிகரமாய் இருக்கிறாள், பார்வோன் அவளை அடைவதற்கு முயற்சிசெய்வான், மற்றும் அவளை தனக்கு வைப்பாட்டியாக வைத்துக்கொள்வான் என எண்ணினார்கள். பார்வோன் சரியான வழியில் செயல்பட்டு ஆபிரகாமுக்கு பரிசத்திற்கான வெகுமதிகளை அவளுக்காய் கொடுத்தான்.

சாராளின் நிமித்தம் ஆபிரகாம் மரிக்காதிருக்க நினைத்தான். உங்களது புருஷன் மரிக்காத பட்சத்தில் அவனை மணக்க இயலாது. சாராளின் நிமித்தம் கர்த்தர் பார்வோனை வாதித்தார். சாராளை ஆபிரகாம் பாதுகாக்க தவறினாலும் தேவன் அவளை பாதுகாத்தார். சாராளின் ஸ்தானத்தை அறிந்த பார்வோன், ஆபிரகாமை இப்பொழுது எச்சரிக்கிறதை பார்க்கிறோம். இது புறஜாதியாருக்குள் ஒரு விசுவாசியை குறித்து மோசமான சாட்சியும், மிக மரியாதைக்குரிய செயலுமாய் இருக்கிறது.

தேவனுக்கு விருப்பமில்லாத இடத்துக்கு நீங்கள் செல்லக்கூடாது. ஆபிரகாம் தான் செய்த பாவத்தை அறிந்தார், அப்பாவத்திற்காய் வருந்தி மனந்திரும்பினார். பார்வோன் அவிசுவாசியான ஒழுக்கசீலனாய் இருந்து, தொடர்ந்து சாராளை தனது மனைவியாய் ஏற்றுக்கொண்டு வாழ ஆபிரகாமுக்கு கூறுகிறான். இது ஆபிரகாமின் மனநிலையை எந்த அளவுக்கு பாதித்து இருக்கும். ஆபிரகாம் எகிப்தை விட்டு கானானுக்குள் மறுபடியும் வந்து சேர்ந்தார்.

நமது கீழ்ப்படிதல் என்பது மிகப்பெரிய ஆசீர்வாதத்திற்கு ஆதாரமாய் இருக்கிறது, அதே சமயம் நமது கீழ்ப்படியாமை நமது வாழ்விலும் பிறரது வாழ்விலும் முறண்பாடுகள், மற்றும் வருத்தங்களுக்கு காரணமாய் அமைகிறது. ஆபிரகாம் எகிப்தில் தனக்கு கிடைத்த அனைத்தையும் சேர்த்துக்கொண்டு (திருடிக்கொண்டு) எகிப்தியருக்கு முன்னதாக தெளிவான சாட்சியுடன் எகிப்தை விட்ட வெளியேறி, பெத்தேலாகிய ஆசீர்வாதத்தின் வீட்டிற்கு திரும்பினார்.

உபதேசம்

ஆபிரகாம் - விசுவாசம்

1. வேதபகுதி - ஆதியாகமம் 11:26 - 25:10; அப்போஸ்தலர் 7:2-8.

2. சுய சரிதை:

ஆபிரகாம் சேமின் சந்ததியில் தேராகுவின் குமாரனாய் வழிவந்தவர், இவர் ஊர் என்னும் கல்தேயப் பட்டணத்தில் சுமார் 2030 கி.மு வில் பிறந்தார். இவர் ஆபிராம் என அறியப்படுகிறார் (உன்னதமான தகப்பன் மற்றும் காற்றுள்ள இடங்கள்) பின்னர் இவர் ஆபிரகாம் என மறுபெயர் சூட்டப்பட்டார் (அநேக தேசங்களுக்கு தகப்பன்) (ஆதி. 17:5) இது இவருக்கு ஈசாக்கின் பிறப்பினால் உண்டானது. இவர் தேவனுடைய சிநேகிதர் என அறியப்படுகிறார் (2 நாளாகமம் 20:7) தேவனது கட்டளையின் படி ஊர் என்னும் பட்டணத்தைவிட்டு வெளியேறினார். (ஆதியாகமம் 12:1). அவர் தன் ஜாதி ஜனத்தை விட்டு வெளியேறக் கேட்டுக்கொள்ளப்பட்டார், ஆனால் அவர் தனது தகப்பனாகிய தேராகுவையும், தன் சகோதரனின் குமாரனாகிய லோத்துவையும் கூட்டிக்கொண்டு புறப்பட்டார். அவர் சிலகாலம் ஆரானில் தங்கிவிட்டார் (வறண்ட இடம்) அங்கு தனது தகப்பன் தேராகு மரிக்கும் வரை இருந்தார். (ஆதியாகமம் 11:32). வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசித்த பொழுது, தனது சகோதரனின் குமாரனாகிய லோத்து மிகவும் வளப்பமான செழிப்புள்ள இடத்தை தெரிந்து கொண்டு அவன் செல்லுமாறு மனமுவந்து அனுப்பிவிட்டார். (ஆதியாகமம் 13:8-11) சோதோமை மற்ற இராஜாக்கள் படையெடுத்து பிடித்துக்கொண்டு சென்றபோது, லோத்து மற்றும் அவனது உடமைகள் அனைத்தும் கொள்ளையாக கொண்டு போகப்பட்டு, பின்னர் ஆபிரகாமால் அவைகள் அனைத்தும் திரும்ப பெறப்பட்டன. (ஆதியாகமம் 14). ஆபிரகாமின் விசுவாசம் கவலையினால் சோதிக்கப்பட்டது ஆதியாகமம் 15, அவர் தனது எதிர்காலத்தை தானே அமைத்துக்கொள்ள தனது மனைவியின் தாதிப்பெண்ணாகிய ஆகார் மூலம் இஸ்மவேலை பெற்றுக்கொண்டார். (ஆதியாகமம் 16). அதன் பின்னர் ஆபிரகாம் சாராள் இருவரும் பிள்ளை பெறுவதற்குரிய வயதை தாண்டிவிட்டனர், ஆபிரகாமுக்கு ஈசாக்கு (நகைப்பு) என்னும் குமாரன் அருளப்படும் எனக் கூறப்பட்டது. (ஆதியாகமம் 18:10-15). ஈசாக்கு பிறந்தார் (ஆதியாகமம் 21:2), அவர் வளர்ந்து தனது வாலிப பருவத்தை அடைந்தார். ஆபிரகாம் தனது அற்புத குழந்தையாகிய ஈசாக்கை பலியிட கேட்டுக்கொள்ளப்பட்டார் (ஆதியாகமம் 22:2). ஈசாக்கு விறகு கட்டைகளை மோரியா மலைக்கு சுமந்து சென்றார். ஈசாக்கை பலி செலுத்தும் தருணத்தில் ஆபிரகாமின் விசுவாசம் உறுதி செய்யப்பட்டு ஈசாக்கிற்கு பதிலாய் முட்புதரில் சிக்கிக்கொண்டிருந்த ஆட்டுக்கடா பலியாய் அற்பணிக்கப்பட்டது. (ஆதியாகமம் 22:10-13). ஆபிரகாம் தனது 175 வது வயதில் மரித்தார் (ஆதியாகமம் 25:7) அவரை மம்ரேயில் அடக்கம் செய்தனர் (ஆதியாகமம் 25:9).

3. பகுப்பாய்வு

ஆபிரகாமின் விசுவாசம் அவரது வாழ்வில் அநேக சந்தர்ப்பங்களில் காணக்கூடியதாய் இருந்தது.

a) பாதுகாப்பான கல்தேய பட்டணமாகிய ஊர் என்னும் பட்டணத்தை விட்டு வெளியேறி போது, (ஆதியாகமம் 11:32).
b) அவர் முற்றிலும் புதிய தேசத்திற்கு சென்றார் (ஆதியாகமம் 12:1-3).
c) அவரது முதற்செயல் பலிபீடம் கட்டுவதாய் இருந்தது (ஆதியாகமம் 12:8).
d) அவர் தனது தேவைகளுக்காய் தேவனை நம்பினார் (ஆதியாகமம் 13:8,9,18).
e) ஆபிரகாம் தன்னிடத்தில் வெறும் 318 யுத்த புருஷர்களைக்கொண்டு லோத்துவையும் அவனது உடமைகளையும் மீட்டுக்கொடுத்து அவனை பாதுகாத்தார். (ஆதியாகமம் 14:14).
f) ஆபிரகாம் பயம் மற்றும் சந்தேகத்தை எதிர்க்க விசுவாசத்தைப் பயன்படுத்தினார் (ஆதியாகமம் 15:5-6).
g) ஈசாக்கை பலி செலுத்திய போது அவனுக்கு பதிலாக ஏதாவது அளிக்கப்படும் என விசுவாசத்துடன் இருந்தார் (ஆதியாகமம் 22:8).
h) தேவன் பார்த்துக்கொள்வார் என்பதைக் குறித்து உணர்வுள்ளவராய் இருந்தார் (யெஹோவாயீரே) (ஆதியாகமம் 22:14).
i) ஆபிரகாம் தனது குமாரனாகிய ஈசாக்குக்கு தனது இனத்தாரில் மனமகள் கிடைப்பாள் என விசுவாசித்தார். (ஆதியாகமம் 24:3,4).

4. அடிப்படைக் கோட்பாடு

a) கிறிஸ்தவ வாழ்க்கை முழுதும் விசுவாசத்தை சார்ந்தே ஆரம்பமாகிறது (ரோமர் 3:28).
b) ஒரு மிஷனரி ஆவதற்கு இது விசுவாசத்தை எடுத்துக்கொள்கிறதாய் இருக்கிறது (ஆதியாகமம் 12:4; எபிரெயர் 11:8).
c) ஆபிரகாமின் விசுவாசமானது தேவனை முதலிடத்தில் வைக்க காரணமாய் அமைந்தது. (ஆதியாகமம் 12:8; எபிரெயர் 11:10).
d) தேவனில் உள்ள விசுவாசமானது பெருந்தன்மையுள்ள செயல்பாடுகளில் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது (கலாத்தியர் 5:23).
e) விசுவாசமானது அபாய காலகட்டத்தில் தைரியத்தை அளிக்கிறதாய் இருக்கிறது, விஷேசமாய் போர் சம்பந்தபட்ட காரியங்களில் மிகுந்த தைரியத்தை அளிக்கிறது (சங்கீதம் 18:39).
f) வேத வசனங்களைக் குறித்த அறிவு, உபதேசங்கள், மற்றும் அடிப்படை சித்தாந்தங்கள் போன்றவைகளை விசுவாசத்துடன் பயன்படுத்தும்போது கவலையை அவைகள் அகற்றுகின்றனவாய் இருக்கின்றன. (ஆதியாகமம் 15:6; சங்கீதம் 43:5).
g) நம்பிக்கையற்ற சூழலில் தேவன் சகாயம் அளிக்கிறவராய் இருக்கிறார். மிக நெருக்கடியான சூழலில் தவிப்போருக்கு விசுவாசம் ஆறுதலுக்கு காரணங்களை கண்டுகொள்கிறதாய் இருக்கிறது. (சங்கீதம் 18:6).
h) விசுவாசம், தேவன் தனது பிள்ளைகளுக்கு பெரிய சகாயராய் இருக்கிறார் எனக் காண்கிறது (மத்தேயு 6:26).

i) விசுவாசம் என்பது மனிதனுக்கும் தேவனுக்குமிடையே உள்ள ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரே உறவாய் திகழ்கிறது, மற்றும் தேவன் மனித தகுதிக்கு அப்பாற்பட்ட நிலையில் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கவராய் இருக்கிறார். (ரோமர் 3:27).
j) விசுவாசமானது ஒருவரின் எதிர்கால நிச்சயத்தை உறுதி செய்கிறதாய் இருக்கிறது, மற்றும் ஒருவரது குடும்பத்தின் எதிர்காலமாயும் இருக்கிறது. (உபாகமம் 5:10).
k) விசுவாசத்தினால் எல்லாம் ஆகும் (மத்தேயு 17:20).

<u>பாடம் 2 -- அதிகாரம் 13</u>

மாம்சீகத்துக்குரிய விசுவாசி

நீங்கள் ஒருபோதும் பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு விஷயங்களை வேறு கோணத்தில் கண்ணோக்கக்கூடாது. அவ்வாறு செய்வீர்களானால் நீங்கள் தவறு செய்ய நுழைகிறீர்கள் என சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. மத்தேயு சுவிஷேசம் யூதக்கண்ணோட்டத்தில் எழுதப்பட்டு இருக்கிறது, இது அவிசுவாசிகளான யூதர்களுக்கு அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

உண்மையில் மாம்சீகத்துக்குரிய விசுவாசிகள் கொரிந்திய சபையில் இருந்தனர் என 1 கொரி. 3:1-3 வசனங்களில் காட்டப்பட்டுள்ளது. அந்த சபையில் உள்ள விசுவாசிகள் வளருகிறவர்களாய் இருந்தனர் மற்றும் அவர்கள் அவிசுவாசிகளைப் போல செயல்படாது இருந்தனர்.

இன்றைய நாட்களில் உள்ள அநேக சபைகளில் வருத்தப்படக்கூடிய விஷயம் என்னவெனில் சரியான உபதேசத்தை பிரசிங்கியாது அல்லது சுவிஷேசத்தை அறிவியாது அவர்களது சபையில் குழந்தை விசுவாசிகளை வைத்துக்கொண்டிருப்பதாகும். நாம் மாம்சீகத்திற்குரிய விசுவாசிகளை பரிசீலனை செய்யும் போது, அவர்கள் லோத்தைப்போன்று இருந்து, முக்கியமாய் அவர்கள் இரட்சிப்படைந்த விசுவாசிகள் மற்றும் இரட்சிப்போடு எல்லாம் முடிந்துவிட்ட நிலையில் வாழ்பவர்கள்.

நாம் இரட்சிக்கப்பட்டவுடன் ஆவிக்குரியவர்களாகிறோம், ஐக்கியத்தை விட்டு வெளியேறும் போது, மாம்சீகத்திற்குரியவர்களாகிறோம். நீங்கள் ஒன்று ஆவிக்குரியவர்களாகவோ அல்லது மாம்சீகத்திற்குரியவர்களாகவோ இருக்கிறீர்கள். அநேக சபைகள் கொரிந்து சபையைப் போன்றே இருக்கின்றன. அவர்கள் முழுவதும் கிறிஸ்தவர்களாயிருந்து புறஜாதியாரைப் போன்று வாழ்ந்து ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கிறிஸ்தவர்களாய் சபைக்கு வருகிறவர்களாய் இருக்கின்றனர்.

நாம் இப்பொழுது லோத்துவின் வாழ்வை பரிசீலனை செய்வோம், அவன் இரட்சிக்கப்பட்டவன் ஆனால் அவனது ஆவிக்குரிய வாழ்வை இணைந்து வாழமுடியாதவனாய் இருந்தான். இதினிமித்தம் அவனது குடும்பம் மற்றும் அவனது சொத்து யாவற்றையும் இழக்க நேர்ந்தது.

நீங்கள் நீண்ட கால ஊழியத்தில் இருப்பீர்களானால், வழக்கமாய் மாம்சீகத்திற்குரியவர்களாய் வாழ்பவர்கள் எல்லாவற்றையும் இழந்து, தொல்லை கொடுக்கும் வாழ்வு, வாழ்ந்து வருவதை கண்கூடாய் காண்பவர்களாய் இருப்பீர்கள். இப்படிப்பட்டவர்கள் தொடர்ந்து பாவத்தில் வாழ்ந்து தோல்வியை தழுவிக்கொண்டு மாம்சீகத்தில் வாழ்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

லோத்து

லோத்து ஆபிரகாமின் சகோதரனின் குமாரனாய், ஊர் என்னும் பட்டணத்தை விட்டு வெளியேறிய ஆபிரகாமுடன் புறப்பட்டு வந்தவன் (ஆதியாகமம் 11:31). அவனது பெயரின் பொருள் "இரகசியமாய் சுயத்தைத் தேடுகிறவன்" "secret self-seeking". அவன் தனது பெயருக்கு பொருந்து வகையில் வாழ்ந்தான். ஆபிரகாமும் லோத்தும் மிகவும் ஐசுவரியவான்களாகி, அவர்களது மிருக ஜீவன்களின் பெருக்கம் அவர்கள் ஒருமித்து வாசம் பண்ணக்கூடாத அளவுக்கு பெருகி, அவர்களது சம்பத்தை பூமி தாங்கக்கூடாததாய் இருந்தது. (ஆதியாகமம் 13:6) இதினிமித்தம் ஆபிரகாம் மற்றும் லோத்து இவர்களது மந்தைமேய்ப்பவர்களிடையே வாக்குவாதம் உண்டானது (ஆதியாகமம் 13:7). இதினிமித்தம் ஆபிரகாம் சமரசம் பண்ண முற்பட்டார்.(ஆதியாகமம் 13:8). இப்பொழுது ஆபிரகாம் லோத்துவுக்கு மேய்ச்சலுக்கு செழிப்பான இடத்தை தெரிந்துகொள்ள முதல் தருணத்தை அளித்தார். (ஆதியாகமம் 13:9).

லோத்து யோர்தான் சமவெளியை ஆய்வு செய்து, சோதோமுக்கு அருகான செழுமை நிறைந்த பச்சை புல்வெளியை தனக்காய் தெரிவு செய்தான். (ஆதியாகமம்13:11). ஆபிரகாம் கர்த்தருடன் தானிருக்க தெரிவு செய்துகொண்டார். லோத்து சுயநலவாதியாகவும் சுயத்தை மையமாய் கொண்டு வாழ தெரிந்து கொண்டமையால் இது அவனது வீழ்ச்சிக்கு காரணமாய் அமைந்தது. ஆபிரகாம் தேவனை சார்ந்துகொண்டு முன்செல்கிறவராய் இருந்தார்.

அடிப்படைக் கோட்பாடு: உங்களது வாழ்வை கர்த்தரது கையில் அற்பணித்து இருப்பீர்களானால் நீங்கள் ஒருபோதும் ஏமாந்து போகமாட்டீர்கள் அல்லது தவறிப் போகமாட்டீர்கள். நீங்கள் தேவனை தெரிவு செய்ய வைப்பீர்களானால், நீங்கள் ஒரு போதும் எதையும் இழந்து போகமாட்டீர்கள்.

மாம்சீக விசுவாசியின் வாழ்க்கை:

லோத்து சோதோமில் நியாதிபதியாய் மாறினான். இது "அவன் ஒலிமுக வாசலில் அமர்ந்திருந்தான்" என்கிற சொற்றொடர் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. (ஆதியாகமம் 19-.1). அவன் அந்நாட்களில் பூமியிலேயே மிகவும் கீழ்த்தரமான நிலைக்குச் சென்றிருந்த பட்டணத்தை விட்டு வேறுபடுத்த இயலாதவனாய் வாழ்ந்துவந்தான். லோத்து மாம்சீகத்துக்குரிய விசுவாசியாய் இருந்ததற்கு பலவிதமான குணாதிசயங்கள் ஆதியாகமம் 19 ம் அதிகாரத்தில் காண்பிக்கப் படுகின்றன. அவன் நித்தியத்தைக்காட்டிலும் நேரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறவனாய் இருந்தான். அவன் திரும்ப உருவாக்கப்படுதலை [regeneration] விட மறுமலர்ச்சிக்கு [reform] (social gospel). அதிக முக்கியத்துவம் அளிக்கிறவனாய் இருந்தான்.

இன்றைய அளவில் அநேக ஸ்தாபனங்கள் திரும்ப உருவாக்கப்படுதலை [regeneration] விட மறுமலர்ச்சி சார்ந்த [social gospel] பிரசங்கங்களையே அதிகமாய் பிரசிங்கிக்கின்றனர். ஒவ்வொரு முறையும் மனிதன் இவ்வித முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவன் விழுந்துபோகிறவனாய் இருக்கிறான் உ.ம். கம்யூனிஸம். மனிதன் இவைகளை தேவன் செய்ய அனுமதிக்கும் போது அங்கு உண்மையான எழுப்புதல் மற்றும் பெரிய அளவில் செழிப்பு உருவாகிறதாய் இருக்கிறது. தேவன் தனிப்பட்ட நபருக்கு இவ்வகையான அழுத்தத்தை தருகிறவராய் இருக்கிறார்.

ஐக்கியத்திற்கு வெளியே ஒரு விசுவாசி மகிழ்ச்சியற்ற வீட்டினரையும், மிகவும் ஏழ்மையான சமுதாய வாழ்வையும் உடையவனாய் இருக்கிறான். (13:2,3). தூதர்கள் அவனுடன் தங்க விரும்பவில்லை. ஐக்கியத்திற்கு புறம்பே இருக்கும் விசுவாசிக்க கடமை உணர்வை குறித்து அக்கரையற்றவனாய் இருக்கிறான். மிகவும் தாழ்ந்த நிலையில் கடமையை நிறைவேற்றுவது, தாழ்ந்த நிலையில் உள்ள கிறிஸ்தவத்தையும் அது ஸ்தாபிக்கப்பட்டவிதத்தையும் காட்டுகிறதாய் இருக்கிறது. (13:5-9). லோத்து சோதோமின் மனுஷரை "சகோதரரே" என அழைக்கிறான். - அவர்கள் அவிசுவாசிகளாய் இருந்தும் இவனுக்கு அவர்கள் சகோதரர்களாய் விளங்கினர்.

அடிப்படைக் கோட்பாடு: விசுவாசிகள் ஐக்கியமின்றி இருப்பார்களேயானால் அவர்கள் அவிசுவாசிகளை பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் ஒரு விசுவாசி, அவிசுவாசியுடன் சாட்சியின்றி இருக்கின்றனர். (13:14) ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் விசுவாசி சிட்சிக்கப்படுகிறார் ஆனால் நியாயந்தீர்க்கப்படுவதில்லை. (13: 15-17, ரோமர் 8: 1, எபிரெயர் 12:6). ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் விசுவாசி பயத்தினிமித்தமும், கவலையினிமித்தமும் மனோரீதியாக பாதிப்புக் குள்ளாகிறார். (13:18,19). ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் விசுவாசிக்கு எவ்வகையான பாவமானாலும் அதை எதிர்க்கும் திறனை இழந்து விடுகிறார். (13:31-36). இப்படிப்பட்ட காரியங்கள் லோத்துவை குடித்து வெறித்து மற்றும் தனது சொந்த மகள்களுடன் பாலுறவு கொள்ளும்படியான பாவங்களை வைத்தது.

நீங்கள் ஒரு கிறிஸ்தவராய் இருந்துகொண்டு மாம்சீகமான முறையில் ஜீவித்துக்கொண்டு இருப்பீர்களானால், நீங்கள் அதற்கான விபரீத கிரயங்களை கொடுத்தே தீரவேண்டும் என்பதைக்குறித்து வேதாகமத்தில் அநேக இடங்களில் காட்டப்பட்டுள்ளது. இதினிமித்தம் இரட்சிக்கப்பட்டு, நித்திய பாதுகாப்பை அடைந்து, தேவனுக்கு மகிமையாய் வாழ்ந்துவிடுங்கள். இது குறித்து எபிரெயர் 12:4-13 வசனங்களில் காண்பிக்கப்பட்டுள்ளது, அநேக சந்தர்ப்பங்களில் ஜனங்கள் ஆலோசனைக்காய் வரும்பொழுது, அவர்கள் மாம்சீகப்பிரகாரமாய் வாழ்ந்துவருகிறார்கள் அவற்றை எவ்வாறு கையாளுவது என அறியாது இருக்கிறார்கள் அல்லது மாம்சீகப்பிரகாரமாய் வாழும் ஒருவரால் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதினிமித்தம் நீங்கள் அறிந்துகொள்ள வேண்டிய முக்கியமான காரியம், வேதாகமத்தில் இதுகுறித்த போதனைகள் என்னென்ன உண்டு என்பதை பகுத்து அறிந்துகொள்ளுதல் மிகவும் அவசியமாய் இருக்கிறது. ஆதியாகமம் 12 மற்றும் 13 அதிகாரங்களில் ஆபிரகாம் எவ்வாறு விசுவாசக்குறைவினால் துன்பங்களை அனுபவித்தார் என்றும், மற்றும் மிகவும் மோசமான பாவங்களை இழைத்தார் என்றும், எபிரெயர் 3 மற்றும் 4 அதிகாரங்களில் யாத்திராகம சந்ததியினரை அது எவ்விதம் பாதித்தது என்பதையும் காண்பிக்கப்பட்டுள்ளது.

உபதேசங்கள்

நித்திய பாதுகாப்பு

1. When a person truly trusts Jesus Christ for salvation, he is saved forever. He cannot lose his salvation.

2. POSITIONAL APPROACH (Romans 8:38-39)
We are united with Christ ("in Christ"). Absolutely nothing can separate us from the love of God which is in Christ.

3. LOGICAL APPROACH (Romans 8:32, Romans 5)
As unbelievers we are enemies of God (Romans 5), as believers we are his children. If he did the most for his enemies what will he do for his children? This excludes loss of salvation for he saved us while we were his enemies.

4. GOD'S HANDS APPROACH (John 10:28, Psalm 37:24)
Neither shall anyone seize them out of my hand. God is all-powerful.

5. EXPERIENTIAL APPROACH (2 Timothy 2:12-13)

If we deny Christ He is going to deny us rewards (context=suffering and rewards). If we renounce Him, HE REMAINS FAITHFUL. The believer is in Christ and Christ indwells the believer. He cannot deny Himself.

6. THE FAMILY APPROACH (Galatians 3:26, John 1:12)
When you believe in Christ you are born again as a child of God. You cannot be unborn, once a child always a child.

7. THE INHERITANCE APPROACH (1 Peter 1:4-5)
We have an inheritance incorruptible, undefiled which fadeth not away, reserved in heaven for us who are kept by the power of God. Perfect tense - it will always be reserved, since it is kept by God, not us.

8. THE SOVEREIGNTY APPROACH (2 Peter 3:9, Jude 24)
He is not willing that any should perish - refers to the whole human race (2 Peter 3:9) Now unto him who is able to keep you from falling (from perishing). Once you are saved, it is His will that you don't perish.

9. THE BODY APPROACH (1 Corinthians 12:21, Colossians 1:18)
Christ is the head, we are the members of the body. If any are lost, the body of Christ is incomplete.

10. THE GREEK TENSE APPROACH (Ephesians 2:8-9)
"For by Grace are ye saved." Perfect tense of the verb "sozo". For by Grace have you been saved in the past so that you go on being saved forever.

11. THE SEALING MINISTRY OF THE HOLY SPIRIT APPROACH (2 Corinthians 1:22, Ephesians 1:13, 4:30)
In the ancient world the seal was a guarantee for protection. The indwelling of the Holy Spirit guarantees our security.

1. ஒரு நபர் இரட்சிப்புக்காக உண்மையிலே இயேசுக்கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கும்போது, அந்நபர் அதன் பின்னர் வாழ்நாள்முழுதும் இரட்சிக்கப்பட்டவராகவே இருக்கிறார். அவர் ஒருபோதும் தனது இரட்சிப்பை இழந்து போவது இல்லை.

2. ஸ்தானம் குறித்த அணுகுமுறை: (ரோமர் 8:38-39).
நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளோம் (கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்) கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு முற்றிலுமாய் நம்மை ஒன்றும் பிரிக்கமாட்டாது.

3. சட்டப்பூர்வமான அணுகுமுறை: (ரோமர் 8:32, ரோமர் 5).

அவிசுவாசிகளாய் நாமிருந்தபோது, தேவனுக்கு பகைஞராய் இருந்தோம். (ரோமர் 5), நாம் விசுவாசிகளானபோது அவரது பிள்ளைகளாயிருக்கிறோம். தனது சத்துருக்களுக்கு அவர் அதிகமாய் செய்து இருக்கும்போது, தமது பிள்ளைகளுக்காய் அவர் என்னென்ன செய்யவிருக்கிறார்? நாம் அவரது சத்துருக்களாய் இருந்தபோது நம்மை இரட்சித்தவர், நமது இரட்சிப்பு இழக்கப்படாவண்ணம் இருக்கச் செய்கிறவராய் இருக்கிறார்.

4. தேவனுடைய கரங்கள் சார்ந்த அணுகுமுறை: (யோவான்10:28, சங்கீதம்37:24.)
எனது (தேவனது) கரத்தில் உள்ளதை ஒருவனாலும் பறித்துக்கொள்ள முடியாது. தேவன் சர்வ வல்லவர்.

5. அனுபவரீதியான அணுகுமுறை: (2 தீமோத்தேயு 2:12-13).
நாம் கிறிஸ்துவை மறுதளிப்போமானால் அவரும் நம்மை மறுதளிப்பார். (இதன் பொருள் = உபத்திரவம் மற்றும் பிரதிபலன்). நாம் அவரை மறுதளிக்கும் போதும் அவர் உண்மையுள்ளவராகவே இருக்கிறார். ஒரு விசுவாசி கிறிஸ்துவுக்குள் இருக்கிறார், கிறிஸ்து விசுவாசியில் வாசம்பண்ணுகிறார். அவர் தம்மைதாமே மறுதளிக்கமாட்டார்.

6. குடும்ப அணுகுமுறை: (கலாத்தியர் 3:26, யோவான் 1:12).
நீங்கள் இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, மறுபடியும் பிறந்து தேவனின் பிள்ளையாயிருக்கிறீர்கள். நீக்கள் பிறவாத நிலையில் இருக்கமுடியாது. ஒருமுறை நீங்கள் பிள்ளைகளானால், எப்பொழுதும் நீங்கள் பிள்ளைகளாகவே இருக்கிறீர்கள்.

7. சுதந்தரிக்கும் அணுகுமுறை: (1 பேதுரு 1:4-5)
நமக்கு mopahjJk; khrw;wJk; thlhjJkhfpa சுதந்திரம் பரலோகில் உண்டு, அவைகள் தேவ வல்லமையினாலே நமக்காக பாதுகாப்பாய் வைக்கப்பட்டுள்ளது. அது நமக்காகவே வைக்கப்பட்டுள்ளது. நாமல்ல தேவனே அதை நமக்காக வைத்திருக்கிறார்.

8. ஏகாதிபதித்துவ அணுகுமுறை: (2 பேதுரு3:9, யூதா 24)
ஒருவரும் அழிந்து போவது தேவனுக்குச்சித்தமல்ல. இந்த வாக்கியம் முழு மனுக்குலத்திற்கும் பொருந்தும். 2 பேதுரு3:9 tOthjgb cq;fisf; fhf;fTk;> (அழிவிலிருந்து காத்தல்) ஒருமுறை நீங்கள் இரட்சிப்படைந்து இருக்கிறீர்கள் எனில், தேவன் நீங்கள் அழிந்து போகாவண்ணம் காக்க சித்தமுள்ளவராய் இருக்கிறார்.

9. சரீர அணுகுமுறை: (1 கொரிந்தியர்12:21, கொலோசெயர் 1:18)
கிறிஸ்து தலையாய் இருக்கிறார், நாம் அவரது சரீரத்தின் அங்கங்களாய் இருக்கிறோம். யாராவது இழக்கப்படுவார்களேயானால், கிறிஸ்துவின் சரீரம் முழுமையடையாது.

10. கிரேக்க இலக்கண அணுகுமுறை: (எபேசியர்2:8-9)
"கிருபையினாலே இரட்சிக்கப்பட்டு இருக்கிறீர்கள்" "sozo". சோஜோ என்கிற கிரேக்கச்சொல், வினைச்சொல்லின் முடிந்துவிட்ட காலத்தை குறிக்கிறது. கிருபையின் மூலம் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் இவ்வாக்கியம் இறந்த காலத்தைக்குறிக்கிறது, இதன் பொருள் நீங்கள் எந்நாளும் இரட்சிக்கப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்.

11. பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுகிற அணுகுமுறை: (2 கொரிந்தியர் 1:22, எபேசியர்1:13, 4:30).
பண்டைய உலகில் முத்திரை என்பது, பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்கக்கூடியதாய் இருந்தது. நமக்குள் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவர் நமது பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்கக்கூடியவராய் இருக்கிறார்.

மாம்சீகம் CARNALITY

1. விசுவாசி இரட்சிப்படைந்த பின்னர் பழைய பாவ சுபாவத்தை பெற்று இருத்தல் (1யோவான் 1:8, ரோமர் 7:14,15).

2. பழைய பாவ சுபாவம் மிகவும் கொடூரமானதாய் இருக்கிறது (எரேமியா 17:9).

3. விசுவாசி பழைய பாவ சுபாவத்தின் ஆதிக்கத்தில் இருப்பாரானால் அவர் மாம்சீகத்துக்குரிய குழந்தை என அழைக்கப்படுகிறார். (1கொரி. 3:1-3, ரோமர் 7:14).

4. பழைய பாவ சுபாவம் ஒரு விசுவாசி விரும்பும் ஆவிக்குரிய செயல்களை தடைசெய்து, தான் விரும்பும் பாவங்களை செய்யத் தூண்டுகிறதாய் இருக்கிறது (ரோமர் 7:15).

5. பழைய பாவ சுபாவத்தைக் குறித்த உணர்வு மாம்சீகப் பிறப்பின் போதிலிருந்து அவசியப்படுகிறதாய் இருக்கிறது. (சங்கீதம் 51:5).

6. இதினிமித்தம் நமது மாம்சீகப் பிறப்பிலிருந்தே நாம் ஆவிக்குரிய மரணத்திலிருக்கிறோம் எனத் தீர்மானிக்கப்படுகிறது (ரோமர் 5:12).

7. பழைய பாவசுபாவம் பலதரப்பட்ட முகங்களைக் கொண்டதாய் இருக்கிறது: இதன் பெலவீனப்பகுதி பாவங்களைப் பிறப்பிக்கிறதாய் இருக்கிறது, இதன் பெலமுள்ள பகுதி மனுஷீக நன்மைகளை பிறப்பிக்கிறதாய் இருக்கிறது. இது துறவரம் அல்லது சிற்றின்பம் இவைகளுக்கு நேராய் வழிநடத்தும் தன்மையுள்ளதாய் இருக்கிறது. அநேக விதங்களில் துறவறம் ஆவிக்குரியது என தீர்மானிக்கப்பட்டு இருக்கிறது.

ஆவிக்குரிய தன்மை
SPIRITUALITY

1. எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும் பரிசுத்த ஆவியானவர் வாசம்பண்ணுகிறவராய் இருக்கிறார். நாம் அவருக்கு, நமது வாழ்வை அற்பணித்து, அவரை ஆண்டுகொண்டு வழிநடத்த அனுமதிப்பதை, "ஆவியினால் நிரப்பப்படுவது" அல்லது "ஆவியில் நடந்துகொள்வது" எனக்கூறுகிறவர்களாய் இருக்கிறோம்.

2. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதை கீழ்க்காணும் காரியங்களால் இழக்கிறவர்களாய் இருக்கிறோம்:

a) ஆவியானவரை துக்கப்படுத்துதல் -- பாவம் செய்வதன் மூலம்.

b) ஆவியானவரை அவித்துப்போடுதல் -- அவரது வழிநடத்துதலுக்கு ஒப்புக்கொடாது இருத்தல் மூலம்.
c) இது மாம்சீகம் என அழைக்கப்படுகிறது, அல்லது மாமிசத்தால், பழைய பாவ சுபாவத்தால் ஆழுகை செய்யப்படுவது.

3. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதை திரும்ப அடையும் வழிகள்:

a) பாவத்தை அறிக்கை செய்வதன் மூலம் (1 யோவான் 1:9).
b) தேவனுக்கு உங்களது வாழ்வை அற்பணிப்பதன் மூலம் (ரோமர் 12:1-2)
c) இது ஆவிக்குரிய தன்மை என அழைக்கப்படுகிறது, அல்லது பரிசுத்த ஆவியானவர் மூலம் ஆழுகை செய்யப்படுவது என அறியப்படுகிறது.

4. தேவனால் அங்கீகரிக்கப்படும் நற்கிரியைகள் பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே உருவாக்க முடியும் -- நமது சொந்த பெலத்தால் எதையாகிலும் செய்தால் அது தேவனால் அங்கீகாரம் பெறாது. (ரோமர் 8:8-9, 1 கொரி. 3:10-15).

5. ஆவிக்குரிய விசுவாசி:

a) தேவனை பிரதிபலிக்கிறவராய் இருக்கிறார் (எபேசியர் 5:1, 1 யோவான் 3:9).
b) கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிரவராய் இருக்கிறார் (யோவான் 7:39, யோவான் 16:14).
c) நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார் (ரோமர் 8:2-4, ரோமர் 13:8).

<u>பாடம் 3 -- அதிகாரம் 14</u>

சமவெளிகளின் யுத்தம்

ஆபிரகாம் தனது சகோதரனின் குமாரனாகிய மாம்சீகத்துக்குரிய லோத்தை விட்டுப் பிரிந்தார். இங்கு நாம் மாம்சீகத்துக்குரிய விசுவாசிக்கு, ஆவிக்குரிய விசுவாசியினால் திறக்கப்படுகிற வாசல் மூலம் இழப்பை திரும்பப் பெறுதலும், ஆபத்திலிருந்து மீட்டுக்கொள்ளப்படுதலும் நிகழுவதைக் காண்கிறோம். இது சமவெளிகளின் ராஜாக்கள் மற்றும் கெதர்லாகோமேரை சேவித்த இராஜாக்களின் குழுவினருக்கு இடையே நடந்த யுத்தத்தை உள்ளடக்கியதாய் இருக்கிறது.

இப்பொழுது ஏலாமில் இருந்து கெதலாகோமேர் இராஜா வந்து, தற்போது இந்த ஸ்தலம் ஈரானில் இருக்கிறது, இங்கு இச்சம்பவங்களுக்கு பின்னர் சுமார் 1500 ஆண்டு கழிந்து எஸ்தர் ஆளுகை செய்யப்போகிற இடத்தில் நிகழ்ந்த சம்பவமாய் இது இருக்கிறது. இந்த கெதலாகோமேர் மிகவும்

வல்லமை பொருந்தின இராஜாவாகவும், தற்போது இவன் வரி மற்றும் மானியங்களை சவக்கடல் பிராந்தியங்களில் ஆளுகை செய்பவர்களிடமிருந்து பெற்று வந்தான். சமவெளியின் இராஜாக்கள் இவனுக்கு பாதுகாப்பளிப்பதற்கான மானியங்களை செலுத்திவந்தனர்.

சமவெளியின் ஜனங்கள் தங்களுக்கு போதுமான வல்லமை இருக்கிறது எனத்தவறாய் உணர்ந்துகொண்டு, ஏலாமியரின் இராஜாவாகிய கெதலாகோமேருக்கு விரோதமாய் யுத்தம் பண்ண முயன்றனர். கெதலாகோமேர் ஈரானிலிருந்து புறப்பட்டு, ஈராக் வழியாய், சிரியா தேசம் மூலம் கானானுக்குள் பிரவேசித்தான். இது அவனது இராணுவ செயல்பாட்டு வழிமுறையாய் தனது சத்துருக்களாகிய சோதோம் சமவெளியில் இருந்தவர்களுடன் இருந்தது. அவன் சோதோமின் சமவெளிக்கு யுத்தத்திற்கு வராது அவன் ரெபதீமில் யுத்தம் செய்தனர் அங்கு இராட்சதர்கள் இருந்தனர்.

பண்டைய உலகில் இராணுவம் கடந்து வந்து, ஆண்கள் அனைவரையும் கொன்றுபோடுவார்கள், இதர பிரஜைகளை அவர்கள் அடிமைகளாய் விற்பனை செய்வர், இதை பெரிய ஆதாயம் தரும் பணியாய், இராணுவப் பணியாய் மேற்கொள்வர்.

இவர்கள் காதேஸ் பர்னேயா மட்டும் வந்து சமவெளியின் இராஜாக்களோடு யுத்தம் செய்து, தாங்கள் வடதிசை நோக்கி செல்லுமுன்னர் தெற்கேயுள்ள தேசங்களை கொள்ளையிட்டு தங்கள் வசமாக்கிக்கொண்டனர். அவன் மலைகளுள்ள பள்ளாத்தாக்கு மட்டும் வந்திருப்பானேயானால் சமவெளியின் இராஜாக்கள் குன்றுகள் நிறைந்த உயர் ஸ்தலங்களில் வைத்து அவனை மடக்கியிருந்திருப்பார்கள்.

சமவெளிகளில் தாக்கப்படவேண்டிய ஐந்து பட்டணங்கள் இருந்தன. சமீப காலத்தில் சியாவில் உள்ள ஏப்லட் என்ற இடத்தில் களிமண்ணாலான கற்பலகை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது, அதில் இக்காலங்களில் வர்த்தகம் செய்த பட்டணங்கள் பட்டியலிடப்பட்டிருந்தது. சமவெளியின் ஐந்து பட்டணங்களும் ஆதியாகமம் 14:2,8 ல் உள்ளபடியே அதன் வரிசைக் கிரமத்தில் கொடுக்கப் படிருந்தன.

ஆபிரகாம் மற்றும் லோத்து இக்காலத்தில் செழிப்புடன் இருந்தனர். கண்டுபிடிக்கப்பட்ட களிமண் பலகைகளில் இப்பட்டணங்கள் இருந்தன என்பதை மட்டும் கூறாமல் ஆபிரகாமைப் பற்றியும் கூறுகிறதாய் இருக்கிறது. இதினிமித்தம் ஆதியாகமத்தை பற்றிய சரித்திரத்தைக் கூறும்போது நமக்கு ஆணித்தரமான ஆதாரங்கள் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சீதோன் சமவெளியில் நடைபெற்ற யுத்தம் நடந்த இடத்தில், தார்க்கேணிகள் இருந்தன இவைகளில் எரி வாயு, கச்சா எண்ணெய் மற்றும் நிலக்கீள் போன்றவை இருந்தன. பள்ளத்தாக்கின் இராஜாக்கள் வடக்கு நோக்கி ஓடிப்போயினர். கொமோராவின் இராஜா கொல்லப்பட்டான்,

சோதோமின் இராஜா உயிர்தப்பினான். அவர்கள் வடக்கு நோக்கி செல்கையில் லோத்துவையும் அவனுக்குண்டான யாவையும் அவர்களுடன் கொண்டு சென்றனர்.

லோத்து தீமையுடன் ஒத்துப்போதல்:

இங்கு குறிப்பிடத்தக்கது என்னவென்றால் லோத்து சோதோமின் பாதுகாப்பான அரணுக்குள் வாழ்ந்தான், ஆபிரகாமோ கூடாரத்தில் வாழ்ந்தார். லோத்து பட்டணத்திற்குள் பிரவேசித்து வாழ்ந்துவந்தான். இதை அவன் செய்த போது, தீமையுடன் ஒத்துப்போகிறவனாய் அப்பட்ட ணத்துள் வாழ்ந்தான். லோத்துவின் வாழ்க்கையானது கிறிஸ்தவனுக்கு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அவனது சமுதாய செயல்பாடுகள், ஒரு விசுவாசி இவ்வாறு சிந்திப்பது போல் இருக்கிறது, அவன் அத்தீமையான சமுதாயத்தில் வாழ்ந்து அவர்களில் மறுமலர்ச்சி உண்டுபண்ணி, தீமை செய்யும் ஜனங்களுடன் வாழ்வதன் மூலம், அவர்களுக்கு சமுதாய நலன் அல்லது முன்மாதிரி' உருவாக முயன்று இருக்கலாம் என நம்பப்படுகிறது.

அவன் அப்பட்டணத்தில் நியாதிபதியாய் இருந்து அரசியல் காரியங்களில் தலையிட்டு காரியங்களை சிறப்பானதாய் உருவாக்க முயன்றான். இதுவும் கூட முக்கியம் வாய்ந்ததாய் கருதப்படுகிறது, நாம் நமது தேசத்தின் உண்மைக்காய் நிற்க முற்படவேண்டுமேயல்லாது, தீமை செய்கிறவர்களுடன் உட்காருதல் கூடாது.

ஒரு கிறிஸ்தவனாய் இருந்து, தீமை செய்யும் மனிதருடன் இருப்பீர்களானால், அவர்கள் தேவனால் சிட்சிக்கப்படும்போது, நீங்களும் அச்சிட்சையை பெறுகிறவர்களாய் இருப்பீர்கள். இதினிமித்தம் தீமைசெய்கிறவர்களை விட்டு விலகியிருப்பது மிகவும் அவசியமான ஒன்று. லோத்து சோதோமுக்கு நிகழப்போவதை அறிந்து விசனமடைந்தான், அவன் அங்கேயே வாசமாய் இருப்பதை நாடினான். அவன் அங்கு சென்று நீதியை பிரசங்கிக்க வேண்டியவனாய் இருக்கும்போது அவன் சென்று அவர்களுடன் சேர்ந்து வசிக்கலானான். இதன் விளைவு அவனது இரு குமாரத்திகளைத்தவிர அவனது முழுகுடும்பத்தையும் இழக்க நேரிட்டது.

ஆபிரகாம் சூழ்நிலையை மறுபரிசீலனை செய்தல்:

வசனம் 13ல் ஆபிரகாம் அச்சூழலை மதிப்பீடு செய்தார். அழிவானது அவிசுவாசி எழும்ப தயாராகும் சந்தர்ப்பத்தில் கூட தாக்கும் போது, எபிரெயனாகிய ஆபிரகாமை இந்த புறஜாதியன் காணும்படி வந்தான். ஆபிரகாம் லோத்துவை விட்டு பிரிந்து வாழ்ந்தான் மற்றும் சமவெளியின் பட்டணங்களில் இது அவரது சாட்சியை விளங்கப்பண்ணிற்று.

துன்பங்கள் தாக்கும் தருணத்தில், நீங்கள் சாட்சியுடனிருப்பீர்களானால் அவிசுவாசி உங்களிடம் கடந்து வருவான். நீங்கள் அவர்களுக்கு சுவிஷேசம் மற்றும் உபதேசங்களை மட்டும் அளிக்கிறவர்களாயிருப்பீர்கள் காரணம்

நீங்கள் அவர்களுக்குள் சில மாதங்கள் அல்லது வருடங்கள் சாட்சியாய் இருந்து வந்திருக்கிறீர்கள். நமது வாழ்வே ஜனங்களுக்கு கைப்பிரதியாய் இருக்கின்றன.

ஆபிரகாம் மம்ரேயில் [மரியாதைக்குரிய] மற்றும் ஆசகேலில் [திராட்சை குலை] வாழ்ந்தார் இவ்விரண்டு பட்டணங்களுடன் அவருக்கு உடன்படிக்கை இருந்தது. ஆபிரகாம் விசுவாசிகளுடன் மட்டும் உடன்படிக்கை செய்து இருப்பாரேயானால், இவ்விரண்டும் ஆபிரகாமின் சாட்சியாய் இருந்திருக்கும்.

லோத்தை விட்டு பிரிந்தது எண்ணிக்கையில் குறைவுக்கு வழிநடத்திற்று இது அவருக்கு லாபகரமானதாய் இருந்தது. அக்குழுவை விட்ட நீங்கியது அவருக்கு களையெடுக்கப்பட்டதாய் இருந்தது, ஆனால் தேவன் இப்பொழுது எண்ணிக்கையில் பெருகச் செய்துள்ளார். லோத்து ஆபிரகாமின் சாட்சியை மேகம் போன்று மறைக்கிறவனாய் இருந்தான். லோத்து கெதலாகோமேருக்கும், தனது பாவ சுபாவத்திற்கும் சிறைக்கைதியாய் இருந்தான். ஆபிரகாம் யுத்தப்பயிற்சி பெற்றவராகவும், வேலையாட்களுக்கும் யுத்தப்பயிற்சி அளித்து இருந்தார். லோத்து ஆபிரகாமின் சகோதரனாய் எண்ணப்பட்டான், காரணம் ஆவிக்குரிய தொடர்பினிமித்தம்.

ஆபிரகாமின் செயல்பாடுகள்:

ஆபிரகாம் உடனடி செயல்பாட்டில் இறங்கினார் காரணம் தனது சகோதரன் இக்கட்டில் சிக்கியிருந்தான். அவர் தனது வேலைக்காரருக்கு யுத்தப்பயிற்சி அளித்து இருந்தார், அவரது வீட்டார் அனைவருக்கும் ஆயுதங்கள் இருந்தன. ஆபிரகாம் யுத்தத்திற்கு தயாரானார் மற்றும் அவரது பயிற்சி பெற்ற தனது மக்களுடன் தயாரானார், அவர்கள் தொடர்ச்சியான ராணுவப்பயிற்சி பெற்று இருந்தனர். அவர்கள் மிகவும் விரைவாக செயல்பட்டு யுத்தத்திற்கு தயாராயினர்.

அவர்கள் யுத்தம் செய்ய தமஸ்குவிற்கு வெளியே செல்லும் வழி வரைக்கும் ஏறக்குறைய 50 மைல் தூரம் தங்கள் ஆயுதங்களுடன் ஓட வேண்டியிருந்தது. ஆபிரகாமுக்கு அதிகபட்சம் 1000 காலாட்கள் யுத்தம் செய்ய இருந்தனர், இவர்கள் யுத்தம் செய்யப்போகிறவர்களின் எண்ணிக்கை இவர்களைக்காட்டிலும் 10 மடங்கு அதிகமானோராயும், அவர்கள் ஏற்கனவே இராட்சதர்களை வென்று திரும்பிக் கொண்டிருந்தவர்களாயும் இருந்தனர்.

விசுவாசத்தின் அடிப்படை மூலம், இராணுவ ஆயத்தமானது ஆபிரகாம் விசுவாச உதாரணத்தை பயன்படுத்தியது முறண்பாடாய் இருக்கவில்லை. ஆபிரகாம் தனது போர்ச் சேவகருடன் 50 மைல்கள் ஓடினார், அவரது சரீர ஆரோக்கியம் அவரது பயிற்சியின் அடிப்படையில், அவருக்கு 75 வயது நிரம்பியிருந்தும், களைப்பின்றி ஓடுவதற்கு பெலமுள்ளதாய் இருந்தது. ஆபிரகாமின் விசுவாசம் தனது ஆயுதங்களில் இருக்கவில்லை, மாறாக

தேவனில் இருந்தது, ஆனால் அவர் தனது பட்டயத்துடன் ஆமென் எனக்கூறினார். ஆபிரகாம் கர்த்தரின் வழிநடத்துதலின் கீழ் போரிட ஆயத்தமானார்.

க்ரோம்வெல் Cromwell கூட கிறிஸ்தவ யுத்தவீரனாய் இருந்து ஒரு நல்ல உதாரணமாய் திகழ்கின்றார் அவர் சொன்னார் "கர்த்தரில் நம்பிக்கைவையுங்கள் மற்றும் மாவு உலர்ந்ததாய் இருக்கட்டும்" "Trust in the Lord and keep your powder dry".

கர்த்தரும் மற்றும் இராணுவமும்:

அநேக சந்தர்ப்பங்களில் கர்த்தர் கிறிஸ்தவர்களுடன் இடைபடும்பொழுது, இராணுவ சம்பந்தமான காரியங்களுடன் இடைபடுகிறவராய் இருக்கிறார், சில உதாரணங்கள் கீழ் வருமாறு:-

Y}f; 22:36 mjw;F mth;: ,g;nghONjh gzg;igAk; rhkhd;igAk; cilatd; mitfis vLj;Jf;nfhs;sf;fltd;@ gl;lak; ,y;yhjtd; jd; t];jpuj;ij tpw;W xd;iwf; nfhs;sf;fltd;.

Y}f; 11:21 MAje;jhpj;j gythd; jd; mukidiaf; fhf;fpwNghJ> mtDila nghUs; gj;jpug;gl;bUf;Fk;.

Y}f; 3:14 Nghh;r;NrtfUk; mtid Nehf;fp: ehq;fs; vd;dnra;aNtz;Lk; vd;W Nfl;lhh;fs;. mjw;F mtd;: ePq;fs; xUtUf;Fk; ,Lf;fz;nra;ahkYk; ngha;aha;f; Fw;wQ;rhl;lhkYk;> cq;fs; rk;gsNk NghJnkd;Wk; ,Uq;fs; vd;whd;. நாம் தேவனுக்கு செய்ய வேண்டிய வேலைகளை அவருக்காக உத்தமமாய் செய்தல் வேண்டும். ஒரு பெரிய இராணுவம் தேவனுடைய வழிநடத்துதல் படி செயல்படுமானால் அது பெரிய மதிப்பிற்குரியதாய் இருக்கிறது.

மத்தேயு 25:41 - கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பரியந்தம் யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளும் இருந்து கொண்டே இருக்கும். நாம் சமநிலை கண்ணோட்டத்தில் எதிராளிகளின் கூட்டத்தை மற்றும் கிறிஸ்தவ வாழ்வில் இராணுவத்தை காணும்போது உறுதியுடன் இருக்க வேண்டும்.

vz;; 32:23 - cq;fs; ghtk; cq;fisj; njhlh;e;Jgpbf;Fk; vd;W epr;rakha; mwpAq;fs;. இது யுத்தத்தில் ஓடிப்போகிறவர்களைப் பற்றி ஒப்பிடப்படுகிறது. பாவம் என்பது இங்கு எதிராளியிடமிருந்து ஓடிக்கொண்டிருப்பதை குறிக்கிறது.

தீமை சக்திகளுக்கெதிராக விசுவாசியின் மனநிலை:

ஆபிரகாம் அந்த காலக்கட்டத்தில் ஜெபிக்கவில்லை. அவர் கேள்விப் பட்டார், யுத்தத்திற்கு ஆயத்தமானார், அவர் முன்னேறிச்சென்றார். ஆபிரகாமுக்கு என்ன செய்யவேண்டும், எப்படி முன்செல்லவேண்டும் என்பது மிகத் தெளிவாய் இருந்தது.

நெகேமியா 4ல் தங்களது ஜனங்களுக்காய் யுத்தம் செய்ய நெகேமியா ஜனங்களைப் பெற்று இருந்தார். [4:8]. விரோதிகள் வர இருக்கிறார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார், அவர்கள் தங்கள் கரங்களில் ஆயுதங்களை ஏந்திக்கொண்டு ஜெபித்தனர், மற்றும் அவர்களுக்கு எதிராய் காவல்களை ஏற்படுத்தினர். போர்ச்சேவகர்கள் கோட்டையின் மீது காவலுக்கு அமர்த்தப்பட்டனர்.

நெகேமியா எருசலேமில் இருந்தவர்களை கர்த்தரில் விசுவாசம் வைக்க உற்சாகப்படுத்தி அவர் அவரது குடும்பத்தினரை பாதுகாக்க சண்டையிடும்படி ஜனங்களை ஏற்படுத்தினார். எருசலேமின் அலங்கங்கள் மீது நெகேமியாவின் பட்டாளம் காவல் புறிந்தனர்.

அவர்களுக்குள் நல்ல பரிமாற்றங்கள் காணப்பட்டன. நெகேமியா சண்டையிட அவசியமில்லாதிருந்தது காரணம் அவர் அதற்கு ஆயத்தமாகவே இருந்தார்.

வசனம் 15-16ல் ஆபிரகாம் அவர்களுடன் இரவில் தாக்குதல் நடத்தினார். அவர்கள் தோற்கடிக்கப்பட்டு தமஸ்கு அருகாமை முறியடிக்கப்பட்டனர். அவர் லோத்துவை மீட்டுக்கொண்டார் மற்றும் மற்ற ஜனங்களையும் அவர்களது உடமைகளையும் மீட்டுக்கொண்டார். யுத்தமானது தாணில் உள்ள பெத்ஷானை சுற்றிலும் நடந்தது.

ஆயுதம் தாங்கிய இராணுவத்தில் செய்யக்கூடிய கடினமான காரியம் என்னவெனில், தாக்குதலுக்கு சரியான முறையில் வழிநடத்துதலாகும். எப்படியிருப்பினும் நீங்கள் மிகச் சிறப்பாய் ஒழுங்கு செய்து, சரியான நிலையில் இரவு தாக்குதலுக்கு பயிற்சி அளித்து எப்பொழுதும் யுத்தம் செய்வது சிறப்பானதாய் இருக்கும்.

ஆபிரகாம் அவர்களை முறியடிக்கத்தக்கதாய் 50 மைல் தூரம் ஓடினார். இராணுவத்தில் எதிராளிகளை கொலை செய்வது உங்களது பரிசுத்தத்தை இழக்காவண்ணம் எப்பொழுதும் இருக்கிறதாய் இருக்கிறது.

இதைப்போன்றே முக்கியமான தண்டனை அளிக்கும் போது அக்காரியங்கள் சரியான முறையில் நிர்வகித்தல் அவசியமாய் இருக்கிறது. அவர்கள் வீதிகளில் நடந்து செல்லலாம் மற்றும் சுவிஷேசம் அங்கு இடம் பெறலாம்.

மெல்கிசேதேக்கு:

அவர்கள் லோத்து மற்றும் அவனுக்குரிய சகல உடைமைகளையும் மீட்டுக்கொண்டனர். இதினிமித்த அங்கு அவர்களுக்கு ஒரு ஜெயங்கொண்டாடுதலாய் இருந்தது. சோதோமின் இராஜா ஆபிராகமிடத்தில் கடந்து அவருக்கு ஒரு பரீட்சை வைத்தார். எப்படியிருப்பினும் கர்த்தர் சாலேமின் இராஜாவாகிய மெல்கிசேதேக்கை

அனுப்பினார், அவர் ஆபிரகாமுக்கு அப்பம் மற்றும் திராட்சை இரசமும் கொண்டு வந்து உன்னதமான தேவனுடைய ஆசாரியனாய் விளங்கினார்.

அவர் சொன்னது, உன்னதமான தேவன் ஆபிரகாமை ஆசீர்வதித்து அவரது சத்துருக்களை அவர்கையில் விழப்பண்ணினார் என வாழ்த்தினார். ஜெயம் கர்த்தருடையது. ஆபிரகாம் எல்லாவற்றிலும் மெல்கிசேதேக்குக்கு தசமபாகம் கொடுத்தார். இது ஆபிரகாமை சோதோம் இராஜாவின் பரீட்சைக்கு தயாராக்கியது.

மெல்கிசேதேக்கு கிறிஸ்துவுக்கு ஒப்பனையாய் தோன்றினவர் மட்டுமல்லாது, அக்காலத்தில் சாலேமின் இராஜாவாகவும் ஆசாரியராகவும் உண்மையில் ஆழுகை புறிந்தார் என்பது சரித்திரத்தில் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. அவர் தேவ மனிதனாய் இருந்து சரியான வேளையில் ஆபிரகாமிற்கு ஆவிக்குரிய உணவை அளித்து ஆதரித்தார்/

நீங்கள் ஒரு பெரிய ஆவிக்குரிய யுத்தத்தில் ஜெயம் பெற்று இருக்கும்பொழுது, நீங்கள் தோல்விக்கு உரியவர்களாயும் இருக்கிறீர்கள் என்பது மறுக்கமுடியாது. நீங்கள் ஒரு பெரிய யுத்தத்தில் வெற்றி பெற்று இருக்கிறபொழுது, வைக்கோல் தடுக்கி தவறி விழுகிறவர்களாயும் இருக்கிறீர்கள். எப்பொழுதும் நாம் நினைவில் கொள்ள வேண்டியது, கர்த்தர்தாமே எப்பொழுதும் நம் மூலம் நமக்கு ஜெயத்தை அளிக்கிறவராய் இருக்கிறார். ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட உணவானது இயேசுக்கிறிஸ்துவின் சரீரத்தையும் அவரது இரத்தத்தையும் சித்தரிக்கிறதாய் இருக்கிறது. தேவன் இதைச் செய்த பொழுது தேவன் ஆபிரகாமுக்கு எதை செய்யப்போகிறார் என்பதையும் காட்டுகிறதாய் இருக்கிறது. ஆபிரகாம் ஆவிக்குரிய உண்மையில் தரித்து இருந்தார். அவர் அளித்த தசம பாகம் என்பது நன்றி காணிக்கையாய் இருந்தது.

இரு ஆசீர்வாதங்கள் - தேவன் எதைச் செய்து முடிக்கக்கூறுகிறாரோ அதை செய்து முடிக்கும்போது ஆசீர்வதிக்கப்படுகிறீர்கள், தேவனுக்கு அவசியமானதொன்றை செய்து முடிப்பதன் விளைவு உங்களது ஆசீரவாதமாய் இருக்கிறது. மற்ற விசுவாசியாலும் கூட நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டு நினைவு கூறப்படுகிறீர்கள், இதனிமித்தம் தேவன் அற்புதர் என அறிந்துகொள்ள முடிகிறதல்லவா?

ஆபிரகாமிற்கான பரீட்சை:

சோதோமின் இராஜா ஆபிரகாமை அணுகினார். கொள்ளையை நீர் எடுத்துக்கொள்ளும் ஜனங்களை மட்டும் எனக்குத்தாரும் எனக்கேட்டுக்கொண்டான். பண்டைய உலகில் ஜெயம்பெற்றவருக்கு மட்டுமே அனைத்தும் உரியதாகும். இங்கு ஆபிரகாமை ஜெயம் பெற்றவராய் இருக்கிறார். எல்லாமே நியாயப்படி ஆபிரகாமைச் சாரும். சோதோமின் இராஜா ஆபிரகாமுக்கு முன்பு ஒன்றுமில்லாதவனாய் இருக்கிறான், அவன் சோதோமின் இராஜா மட்டுமே அல்லாது ஆபிரகாமுக்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாதவன். சோதோமின் இராஜா

ஆபிரகாமின் கண்ணோட்டத்தை தேவனைவிட்டு திசைதிருப்ப முயற்சித்தான், கொள்ளையை மட்டும் ஆபிரகாமுக்கு தந்து வஞ்சிக்கிறவனாய் இருந்தான். இதன் மூலம் தேவனல்ல தான் மட்டுமே ஆபிரகாமை ஐசுவரியவனாய் மாற்றினேன் எனக்கூற முற்பட்டான்.

ஆபிரகாம் சோதோமின் இராஜாவுக்கு பிரதியுத்தரமாய், உண்மைத்தேவனை தொழுது கொண்டு, நான் தோற்றுப்போனவர்களிடம் எதையும் எடுத்துக்கொள்ளப்போவது இல்லை, நான் உனது ஆஸ்தியிலிருந்து பாதரட்சையின் வாரைகூட எடுத்துக்கொள்ளப்போவது இல்லை எனக்கூறி யாவற்றையும் ஒப்படைத்தார். ஆபிரகாம் அந்த அவிசுவாசியின் உடமைகளிலிருந்து ஒரு சல்லிக்காசைக்கூட தனக்காக எடுத்துக்கொள்ளவில்லை.

ஒரு விசுவாசி ஒரு அவிசுவாசியின் எந்த ஒருப்பொருளையும் எடுத்துக்கொள்ளக்கூடாது, ஒருவேளை ஏதாவது ஆவிக்குரிய விஷயம் உள்ளடங்கியிருந்தால் தவிர. ஏனெனில் சுயாதீன கிருபையின் இரட்சிப்பு விமர்சனத்துக்குரியதாய் இருக்கிறது. நாம் ஏதாகிலும் ஒன்றை அவிசுவாசியிடமிருந்து பெற்றுக்கொள்வோமானால், நமது சாட்சியை இழக்க நேரிடும், காரணம் அவர்கள் இவ்வாறு சிந்திக்க வழியுண்டாகும், மனிதனின் நற்கிரியைகள் மூலமாய் மட்டுமே தேவனின் அங்கீகாரத்தை பெறமுடியும் என்று. இவ்வரத்தை அவிசுவாசியானவன் தவறாய் வியாக்கியானம் செய்ய ஏதுவுண்டாகும் என்பது திண்ணம்.

உபதேசங்கள்:

இராணுவம்

1. பாதுகாப்பின் தேசிய உட்பொருள் இரு வகையாய் இருக்கிறது.

அ) உள்ளமைப்பு -- காவல்துறை மற்றும் நீதித்துறை

ஆ) வெளி அமைப்பு -- இராணுவம் ஸ்தாபிக்கப்படல் (நெகேமியா 4:14,15).

2. சமாதானத்திற்காக மனிதன் எடுக்கும் முயற்சிகளுக்குப் பதில், ஆயிர வருட ஆளுகை வரை யுத்தம் தொடர்ந்து நடக்கிறதாய் இருக்கிறது. (மத்தேயு 24:6; மாற்கு 13:7; லூக்கா 21:9). இதினிமித்தம் யுத்தம் என்பது சரித்திரத்தில் சகஜமான பகுதியாய் இருப்பதோடு மட்டுமல்லாது, (பிரசங்கி 3:8; எண்ணாகமம் 21:14) தேசிய சுதந்தரத்தையும் மற்றும் அரசாளுகையையும் பரமாரிப்பதற்கு மிகவும் அவசியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

3. யாத்திரகாமத்திற்கு பின்னர் யூதர்களின் சுதந்தரத்தில் ஏற்பட்ட அமைதியற்ற போராட்டத்தில், இயேசுக்கிறிஸ்து தாமே இராணுவத்தின் கர்த்தராய் "சேனைகளின் கர்த்தர்" என்ற தலைப்பில் யுத்தம் செய்ததைக் காண்கிறோம். (யோசுவா 5:13 - 6:2; ஏசாயா 1:24).

4. இராணுவம் சுதந்தரத்தை பாதுகக்கவும் செய்கிறது, சுதந்தரத்தை அளிக்கவும் செய்கிறது. எரேமியா 34:7 ல் யூத இராணுவம், கல்தேய இராணுவத்துடன் சண்டையிட்டு யூதர்களின் சுதந்தரத்தை அழிக்காத வண்ணம் பாதுக்காத்தது.

5. ஒரு தேசிய ஆழுகை, நேர்மை மற்றும் சுதந்திரம் போன்றவை அதன் இராணுவம் ஜெயம் கொள்வதைச் சார்ந்து இருக்கிறது. கல்தேயரின் இராணுவம் ஜெயம்கொண்டபோது, யூதர்கள் தங்களது சுதந்தரத்தை இழந்து போயினர். (எரேமியா 40:1).

6. ஒரு தேசம் சீரழிவிற்குட்படாது இருக்க தேவன் இராணுத்தை பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். யுத்தக்களத்தில் இராணுவமானது தோல்வியை தழுவுவதற்கான காரணங்கள், சுய அடக்கம், ஆவிக்குரிய ஊக்கமளிக்கும் சக்தி, உற்சாகப்படுத்தி ஊக்கமளித்தல், மற்றும் அதிகாரத்தை மதித்தல் போன்றவைகளை பயன்படுத்த தவறுவதன் விளைவாக சுதந்திரம் பெற்றுக்கொள்ளப்படுவது நிராகரிக்கப்படுகிறது. இராணுவத்தின் தோல்வியானது, குணாதிசங்களில் குறைவுபடுவது, மற்றும் நிலையற்றத் தன்மையுடன் செயல்படுவது போன்றவற்றை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

7. ஒரு தேசத்தின் வாழ்வில், தேசிய இராணுவப் பயிற்சி என்பது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது (எண்ணாகமம் 31:3-5; லூக்கா 14:31).

<u>பாடம் 4 -- அதிகாரம் 15</u>

முகவுரை:

ஆபிரகாம் தனக்காக ஒரு உன்னத நிலையை அமைத்துக்கொண்டிருந்த போதும், தன்னுடன் இருந்த இளைய விசுவாசிகளுக்கு அதைப்போன்ற நிலையை அமைத்துக்கொடுக்க தவறிவிட்டார். 14 ம் அதிகாரத்தின் இறுதிப்பகுதியில், லோத்து சோதோமுக்கு திரும்பிச் சென்றான், அவனுக்கு சோதோமைவிட்டு வெளியே தங்கவேண்டும் என்ற செய்தியைப்பெற்றிருந்தும் அவன் திரும்ப சோதோமுக்குள் சென்றான். மாம்சீகத்துக்குரிய விசுவாசிகள் அடிக்கடி தேவன் அவர்களிக்கும் பாடங்களை விட்டு வழிவிலகி தவறிப்போகிறவர்களாய் இருக்கிறார்கள்.

ஒரு சமயத்தில் உங்களுக்கு மாபெரிய வெற்றி கிடைத்து இருக்கும் அல்லது தேவனால் மிகவும் வல்லமையாய் பயன்படுத்தப்பட்டு இருப்பீர்கள், அந்த நேரமே நீங்கள் பரீட்சிக்கப்பட போகிறீர்கள். ஆபிரகாம் சோதோமின்

இராஜாவுக்கு அவனது ஜனங்களை திரும்ப அளித்தார், அவனோ கோபமனதுடன் காணப்பட்டான்.

எப்படியிருப்பினும் ஆபிரகாம் அதைக்குறித்து நிம்மதியுடன் காணப்பட்டார். 1 பேதுரு 5:6-7. நீங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாய் இருப்பீர்களேயானால் நீங்கள் உங்களுக்குரியவர்கள் அல்ல நீங்கள் கிறிஸ்துவுக்குரியவர்களாய் இருக்கிறீர்கள். உங்களை கவனித்துக்கொள்வது தேவனுடைய கடமையாய் இருக்கிறது. தேவன் ஆபிரகாமுக்கு உபதேசம் அளித்தார். ஆபிரகாம் தேவனில் விசுவாசம் வைத்து, அவர் சோதோமின் இராஜாவுக்கும், கெதலாகோமேருக்கும் தன்னை விலக்கி பாதுக்காக்க தேவனால் ஆகும் என நம்பினார்.

ஆபிரகாமின் பிரச்சனை:

எப்படியிருப்பினும் ஆபிரகாமுக்கு ஒரு பெலவீனம் இருந்தது, அது குடும்பத்தின் குறையாய் இருந்தது. அவர் தனது வாரிசாக தமஸ்கு ஊரானாகிய எலெயாசரை பரிந்துரை செய்தான். இதை அவர் தேவனிடம் குற்றம்சாட்டி தனக்குரிய வாரிசான ஒரு குமாரன் இல்லை என்பதினால் அவ்வாறு செய்தார். ஆபிரகாம் தனக்குப் பின்னர் தனது வாரிசு யார் என்பதைக்குறித்து மிகவும் கவலையுடனிருந்தார். கவலை ஒரு பாவமாய் இருக்கிறது. 1 யோவான் 4:18,19.

இதற்கு மறுமொழியாய் தேவன் சொன்னார், நட்சத்திரங்களைப் பார், நீ ஒரு குமாரனைப் பெறப்போகிறாய். அவர் கர்த்தரில் விசுவாசம் வைத்தார் அது அவருக்கு நீதியாக எண்ணப்பட்டது. நீங்கள் கவலைப்படும்பொழுது, மனதில் தடுமாற்றம் அல்லது சோர்வுறும்போது ஆபிரகாமைப் பின்பற்றி உங்கள் கவலைகளையெல்லாம் கர்த்தர் மீது வைத்துவிடுங்கள். உங்களது கவலைக்குரிய பதிலானது உங்களை வந்தடைய அநேக நாட்கள் எடுக்கலாம் ஆனால் தேவனை எதிர்பார்த்துக்கொண்டிருங்கள். நீங்கள் அவரை அறிய வேண்டும், அவர் உங்களை நேசிக்கிறார் மற்று அவரது குணாதிசயங்களை நினைவு கூறுங்கள். உங்களது பிரச்சனைக்கு குறிப்பிட்ட பதில் குறித்து நீங்கள் அறியாது இருக்கலாம், நீங்கள் அதன் அடிப்படை காரியங்களை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். இப்படிப்பட்ட பரீட்சை உங்களுக்கு நிகழும்போது அது நீங்கள் வளருவதற்கேதுவான அனுபவத்தை உங்களுக்கு அளிக்கும். உங்களுக்கு பிரச்சனைகள் இருக்குமானால் நம்புங்கள் - அமர்ந்திருங்கள்- விண்ணப்பியுங்கள்.

அநேக எண்ணிக்கையுள்ள நட்சத்திரங்களை தேவன் ஆபிரகாமுக்கு காண்பித்ததன் மூலம், தேவன் சொன்னதை செய்வதாய் நிரூபனம் செய்தார். ஆபிரகாமே, உனது பிரச்சனைக்கான தீர்வை நீயே தீர்த்துக்கொள்ளப்போகிறாயா அல்லது தேவன் அதைத் தீர்த்துவைக்க அவரது கரத்தில் கொடுக்க விரும்புகிறாயா? நீ தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கப் போகிறாய இல்லையா? தேவனுடைய வல்லமை உன்னை இதுவரை வழிநடத்தி வந்துள்ளது, இப்பொழுதும் அவர் உன்

மனவிருப்பத்தை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார். கவலை கொள்வது என்பது தேவனை நிந்திப்பதாய் இருக்கிறது. அவர் உன்னைக்குறித்து நினைவாய் இருக்கிறார், அவர் உனக்காய் சிலுவையில் மரித்தார். அவர் இப்பொழுது உன்னை கைவிட்டுவிடுவாரோ? கண்டிப்பாய் அவர் உன்னை கைவிடவே மாட்டார்! அவர் நீ பாவியாய் இருந்த பொழுது உன்னை நேசிப்பாரானால், தற்போது அவரது சிநேகிதனாய் இருக்கும் போது எவ்வளவாய் உன்னைக்குறித்து கரிசனை உள்ளவராய் இருக்கிறார் என்பது உணர்ந்து கொள்.

வசனம் 7ல் தேவன் ஆபிரகாமுக்கு சொன்னது என்னவென்றால், கல்தேய பட்டணமாகிய் ஊர் என்னுமிடத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்தவர் நானே என்றார். ஆபிரகாம் அதிசயித்த காரியம் என்னவெனில் தேவன் அவர் சொன்னதை நிறைவேற்றுவார். ஆபிரகாம் சொன்னார் எனக்கு ஒரு அடையாளத்தை தாரும் அப்பொழுது விசுவாசிப்பேன் என்றார். தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னார், கிடாரி, வெள்ளாடு, ஆட்டுக்கடா, காட்டுப்புறா, புறாக்குஞ்சு இவற்றை எடுத்துக்கொள் என்றார்.

இவைகள் அனைத்தும் பலிசெலுத்தும் மிருகங்களாய் லேவியராகமத்தில் காணப்படுகின்றன. பலிகள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் பலியானதை குறித்த்து பேசுகின்றன. இழந்து போகப்பட்ட ஐக்கியம் திரும்ப ஏற்படுத்தப்பட அவசியமாய் இருக்கிறது. தேவன் ஆபிரகாமிடம் உனது பாவங்களை அறிக்கையிடு என்றார்.
கிடாரி - பாவநிவாரண பலி - பாவங்களை அறிக்கை செய்தல்.
ஆட்டுக்கடா அல்லது வெள்ளாடு - கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் ஆற்றிய அரும்பணி. - ஒப்புரவாக்கப்படுதலும், குற்றம் சுமத்தப்படுதலும்.
காட்டுப்புறாவும் மற்றும் புறாக்குஞ்சுகளும் கிறிஸ்துவின் ஆளத்துவம், கிறிஸ்துவின் தெய்வீகம், மற்றும் கிறிஸ்துவின் மனுஷீகம் போன்றவற்றைக் குறித்துப் பேசுகின்றன. பறவைகள் துண்டிக்கப்பட வில்லை.

உடன்படிக்கையை ஏற்படுத்துதல்:

பண்டைய உலகில் மனிதர் உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டுமானால், ஆபிரகாமுக்கு கட்டளையிட்டபடியே எல்லாவற்றையும் செய்வர். அது உங்களது பாவங்களோடு சம்பந்தப் படு மானால், நாமிருவரும் சேர்ந்து உடன் படிக்கை செய்துகொள்ள வேண்டும். இது ஒரு சாதாரண பழக்கமாய் அந்நாட்களில் செய்துவந்தனர், அது என்னவென்றால் துண்டிக்கப்பட்ட மிருகங்களின் நடுவாய் கடந்து சென்று உடன்படிக்கையை ஏற்படுத்துதல். பலிபீடத்தில் செலுத்தப்படும் பலியானது பாதியாக துண்டிக்கப்பட்டு பலிபீடத்தில் நடுவில் வைக்கப்படும். ஆனால் துண்டிக்கப்பட்ட மேற்சொன்ன பலிமிருகங்கள் ஊடாக இருவரும் சேர்ந்து செல்வது உள்ளடங்கியது. இங்கே நாம் பார்க்கும்போது தேவன் மட்டுமே துண்டிக்கப்பட்ட மிருகங்கள் நடுவே புகைகிற சூளை மற்றும் அக்கினி ஜுவாலை தோற்றத்தில் கடந்து சென்றார். இது நிபந்தனைக்குட்படாத

உடன்படிக்கையாய் காணப்படுகிறது, ஒருவர் மட்டுமே கடந்து சென்ற தேவனது குணாதிசயத்தை இது காட்டுகிறதாய் இருக்கிறது.

இது ஒரு இரத்த உடன்படிக்கையின் அடையாளமாய் இருக்கிறது, இது கிறிஸ்துவின் இரத்தத்தைக்காட்டுகிறது. ஆபிரகாமே நீ என்னை நம்பலாம் காரணம் நானே இரட்சகராய் வரப்போகிற ஒருவராய் இருக்கிறேன். ஆபிரகாம் சொன்னபடியே எல்லாவற்றையும் செய்தார். இது பாவமன்னிப்பு மற்றும் தேவனோடு உள்ள உறவு குறித்து பேசினது. ஆபிரகாமுக்கு இருந்த பயம், கவலை, சந்தேகம் இவற்றிற்கு பதில் அளிக்கும் வகையில் கிறிஸ்துவின் ஆளத்துவம், மற்றும் அவரது வார்த்தை இருந்தது. ஏசாய 53, சங்கீதம் 22, யோவான் 19,20. ஆபிரகாம் இவைகளை பலி செலுத்திய போது அவரது சிந்தை இரட்சகரின் மீது இருக்கிறதாய் இருந்தது. நமது கண்களை நமது பிரச்சனைகளை பாராது, கர்த்தர் மீது பதித்தல் அவசியம்.

சாத்தானின் மறு தாக்குதல்:

வசனம் 11ல் பலிசெலுத்தப்பட்ட மிருகங்கள் மீது பறவைகள் வந்து இறங்கின அவைகளை ஆபிரகாம் துரத்தினார். பருந்துகள் தீமையாகப் பேசப்படுகின்றன. இப்பறவைகளை பலியின் மீது இறங்கவிடாது துறத்துவது, சாத்தானின் தாக்குதலிலிருந்து ஜெயத்தையும், அவனுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதையும் வருணிக்கிறதாய் இருக்கிறது. ஆபிரகாம் தனது முழுகவனத்தையும் செலுத்தப்பட்ட பலியின் மீது பதித்து இருந்தார்.

ஆபிரகாமுக்கு இப்பொழுது பயங்கர உணர்வுகள் உண்டாயின. மனோரீதியாக பாதிக்கப் பட்டவர்களுக்கு இது அடிக்கடி நிகழ்வதுண்டு. அது பயங்கரமான திகிழை அளிக்கும் இரவாய் இருந்தது. ஆபிரகாம் கவலை என்னும் பாவத்தை குறித்த இடைபாடு அவரது ஆத்துமாவின் ஆழத்தில் குடிகொண்டிருந்தது அது வெளியே கடந்து வர அவசியப்பட்டது. தேவன் அதோடு கூட இடைபடுகிறவராய் இருந்தார்.

கவலையை குணமாக்கும் தீர்க்கதரிசனம்:

தேவன் ஆபிரகாமுக்கு சொன்னது "உனது வித்தானது அந்நிய தேசத்திலே 400 ஆண்டுகள் அந்நியராய் இருப்பார்கள் என்பதை நீ நிச்சயமாய் அறியக்கடவாய் என்றார். மற்றும் தேவன், அவர்கள் நிமித்தம், அவர்கள் சேவித்த அந்த தேசத்தை நியாயந்தீர்ப்பேன் அவர்கள் வெகு பொருட்களுடன் அந்த தேசத்திலிருந்து திரும்பவருவார்கள் என்றார். அந்த காரிருள் திகிலில் ஆபிரகாமின் குடும்பத்திற்கு என்ன நிகழப்போகிறது என்பதை மட்டுமல்லாது எகிப்திற்கும் என்ன நிகழப்போகிறது என்பதை காண்பித்தார்.

ஆபிரகாம் திரும்பவும் சிந்திக்கத்தொடங்கினார், "தேவன் தனது வாக்குத்தத்தின் படி செய்வாரோ என சிந்தித்தார்" என்னவருகிறது என்பதை நான் காணும்போது அது எனக்கு கவலையை அளிக்கிறதாய் இருக்கிறது. தேவன் ஆபிரகாமுக்கு சொன்னது என்னவென்றால் "இதுவே

நிகழப்போகிறது, எனது வாக்குத்தத்தம் ஒரு போதும் நிறைவேறாமல் போவதில்லை" என்றார். எனது நோக்கங்கள் அனைத்தையும் நீண்டகால இடைவெளியில் செய்து நிறைவேற்றுவேன் என்று தேவன் கூறினார்.

இப்பாடத்தை நாம் கற்றுக்கொள்வது அவசியம். நீங்கள் ஒரு போதிக்கிறவராய் இருக்கும்பொழுது, மற்றவர்கள் எதன் வழியாய் செல்லவேண்டுமோ அதன் வழியாய் நீங்களும் செல்ல வேண்டியதாய் இருக்கிறது. யாக்கோபு நீங்கள் போதிக்கிறவர்கள் ஆக வேண்டுமென கேட்காதிருப்பீர்களாக என்கிறார்.

யாக்கோபும் ஆபிரகாமும் அடைந்த வேதனை மன அழுத்தத்தின் மூலம் எல்லாம் சந்தோஷத்திற்கென கணிக்கப்படுகிறது. நீங்கள் உங்களது பிரச்சனைகளையே நோக்கிக்கொண்டு இராது உங்களது இரட்சகரை நோக்கிக்கொண்டே இருத்தல் வேண்டும். இதன் மூலம் மறைக்கப்படாத பெரிய திட்டத்தைக் காண்கிறவர்களாயிருந்து உங்களது மன நிலையில் அமைதி பெருவீர்கள். தேவன் ஒவ்வொரு வாழ்க்கைக்கும் திட்டம் வகுத்துள்ளார்.

சிருஷ்டிகராகிய அவர் செய்யும் காரியங்கள் உடனுக்குடன் புறிந்துகொள்ள இயலாது இருப்பினும், தேவன் செய்ய இருக்கும் ஒவ்வொரு காரியங்களையும் உங்களுக்கு கூறப்போவது இல்லை, அவ்வாறு அவர் கூறினால் நீங்கள் கவலைப்பட துவங்கி விடுவீர்கள்.

"நிச்சயமாய் அறிந்து கொள்ள வேண்டியது" - ஆபிரகாமுக்கு சொன்ன வார்த்தையை குறித்து முற்றிலும் நிச்சயத்துடன் இருக்கவேண்டியது அவசியம், தேவனாகிய கர்த்தர் நான் சொன்னதை நான் நிறைவேற்றுவேன். உன் சந்ததியினர் எகிப்திற்கு செல்வார்கள், அங்கு அவர்கள் உபத்திரவப்படுத்தப்படுவார்கள், சிலர் அங்கேயே அடிமைகளாய் மாண்டுபோவார்கள், இது தேவனது வாக்குத்தத்தமாய் இருக்கிறது.

தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தமாக நல்ல வயதில் அவர் மரித்து தனது பிதாக்களுடன் சேர்க்கப்படுவார், நான்கு தலைமுறைவரை அவரது சந்ததியினர் எகிப்தில் அடிமைகளாய் இருந்து 4 ம் தலைமுறையில் அவர்கள் எகிப்திலிருந்து கடந்து வருவார்கள் காரணம் எமோரியரின் அக்கிரமம் இன்னும் நிறைவாகவில்லை. உங்களது மரணம் அல்லது நீங்கள் எப்படி மரிக்கப்போகிறீர்கள் என்பது, தேவனுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது. உங்களது வாழ்வும் சாவும் அவரது கரத்தில் இருக்கின்றன.

வாழ்வானாலும் சாவானாலும் அவருடன் நடவுங்கள். மரிக்கும் கிருபையிருப்பதால், மரிக்கும் போது நீங்கள் ஆறுதல்படுத்தப்படுவீர்கள். நமக்கும் இரட்சிக்கப்படும் கிருபையிருக்கிறது, வாழ்வின் கிருபையிருக்கிறது, கடந்துசெல்லும் கிருபை இருக்கிறது, மரிக்கும் கிருபை இருக்கிறது. நாம் அவருடன் நடக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

ஜனங்கள் மரிக்கும் போது அவர்களை கூர்ந்து கவனிப்பீர்களானால் மட்டுமே நீங்கள் ஒரு நல்ல போதகராய் இருக்க முடியும். தேவன் இப்படிப்பட்ட ஒரு அரிய சந்தர்ப்பத்தை உங்களுக்கு அளித்துள்ளதால் உங்களது வாழ்விலும் சாவிலும் அவரை நம்பிக்கையுடன் பின்பற்ற உங்களால் இயலும். நீங்கள் தேவனுடன் நடக்கும்போது, அவருடன் ஐக்கியம் கொள்கிறவர்களாய் அவரிடம் கடந்து செல்கிறவர்களாய் இருக்கிறீர்கள்.

நான்காவது தலைமுறையில் அவர்கள் திரும்ப வாக்குத்தத்த தேசத்திற்குள் வருவார்கள். சோதோமும் கொமாராவும் குறுகிய காலத்தில் அவர்களது அக்கிரமம் பூரணப்படுவதால் அழிக்கப்பட்டுபோவார்கள். மற்றும் எஞ்சியிருக்கும் கானானியர்கள் அக்காலத்தில்தானே முழுவதுமாய் அழிக்கப்பட்டுப் போவார்கள். சரித்திரத்தில் ஒரு தேசத்தை குறுகிப்போகச்செய்யும் போது தேவன் தாமே அவர்கள் அகற்றிவிடுகிறவராய் இருக்கிறார், இன்றைய அளவில் கானானியர்கள் ஒருவர் கூட இல்லை.

நான்கு தலைமுறைகளாக கானானியரை அகற்றுவதில் தேவன் எதிர்மறையாய் இருந்தார். நான்காவது தலைமுறையில் முற்றிலுமாய் சீரழிந்து போயினர். இதினிமித்தம் யோசுவாவிற்கு கீழான யூதர்களுக்கு எல்லா கானானியர்களையும் கொன்றுபோட வேண்டும் கூறப்பட்டது, காரணம் தேவன் பகைமைகொள்கிறவராகவும் மற்றும் கோபமுள்ளவராயும் இருந்தார், அவர்கள் அவர்களுக்குள் கொள்ளை நோய் போன்றி இருந்தமையால் அவர்கள் முற்றிலும் அழிக்கப்படவேண்டியவர்களாய் இருந்தனர்.

வசனம் 17 ல் அந்த நாளில்தானே கர்த்தர் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தார் எனக்கூறப்பட்டுள்ளது, அவ்வுடன்படிக்கை நிபந்தனையற்றதாயும், குறிப்பிட்ட நிலப்பகுதியை வாக்குத்தமாய் அருளப்படுகிறதாயுமாய் இருந்தது. துண்டிக்கப்பட்ட பலிமிருங்களின் நடுவே தேவன் மட்டும் நடந்துசென்றார். யாத்திரகாமம் புஸ்தகத்தில் புகைகிற சூளை மற்றும் அக்கினி ஜுவாலை இவ்விரண்டையும் காண்கிறோம். ஆபிரகாம் புகைச் சூளைக்குள் இருக்கப்போகிறாரா அல்லது வெளிச்சத்தில் இருக்கப்போகிறாரா? அவர் விசுவாசிக்கப்போகிறார அல்லது இல்லையா?

ஆபிரகாம் துண்டிக்கப்பட்ட பலிமிருகங்கள் நடுவே தேவனுடன் நடந்துசெல்லவில்லை. தேவன் அதனூடே தனியாக நடந்து சென்றார். இது நிபந்தனையற்ற உடன்படிக்கையைக் காட்டுகிறதாய் இருக்கிறது. தேவன் உடன்படிக்கைக்கு உத்திரவாதம் அளிக்கிறவராகவும், மற்றும் ஆபிரகாமை நிபந்தனையற்ற நிலையில் ஆசீர்வதிப்பதாயும் இருக்கிறார்.

தேவனுடைய நிபந்தனையற்ற ஆசீர்வாதத்தை நாம் பெற்று இருக்கிறபடியால், நாம் சதா காலங்களிலுமாய் அவருடன் வாழுகிறவர்களாய் இருக்கிறோம். ஒருவேலை இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை நீங்கள் பெறவில்லை என்றபோதிலும் நீங்கள்

சதாகாலமும் அவருடன் இருக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். நாம் அவரை மகிமைபடுத்த வேண்டும். நாம் நித்திய பலன்களை வாஞ்சிக்கிறவர்களாய் இருக்கிறோம், அவைகள் நமக்காய் அல்ல ஆனால் இன்னும் அதிகமான மகிமையை நமக்காய் மரித்தவருக்கு கொண்டு வருவதாய் இருப்பதாக.

ஆபிரகாமுக்கு கவலை மற்றும் சந்தேகம் இருந்தன ஆனால் அவைகளை தேவனுடைய வழியில் கையாண்டு மேற்கொண்டார். அவர் அறிக்கை செய்து தேவனை நம்பினார். அவர் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தார் மற்றும் கவலைக்கான ஆதாரத்தையும் மற்றும் அதற்கான பரிகாரத்தையும் கண்டு உணர்ந்து கொண்டார். தேவனுடைய வார்த்தையானது நம்பிக்கைக்குரியதாய் இருக்கிறது.

உபதேசங்கள்

கவலை

1. கவலையை மேற்கொள்ள பொதுவான வேத பகுதி (ஆதியாகமம்15).
2. விசுவாசிகள் கவலைப் படக்கூடாது என்பதற்கான வேத பகுதிகள்:(பிலிப்பியர் 4:6; சங்கீதம் 55:22; 1 பேதுரு5:7;
1 சாமுவேல் 17:47; யாத்திராகமம்14:13,14).
3. நாம் தேவனை பின்பற்றும் படி போதிக்கப்படுகிறோம் - தேவன் ஒருபோதும் கவலைப்படுகிறது இல்லை.
(எபேசியர்5:1). நாம் கவலைப்படும் போது தேவனை பின்பற்றுவது இல்லை.
4. கவலையின் வகைகள்:
a) வாழ்க்கைப் பிரச்சனைகளைக்குறித்த கவலை.
b) மரணம் மற்றும் மரிப்பதைக்குறித்த கவலை.
c) பாவத்தைக்குறித்த கவலை (குற்றமனசாட்சி)
5. கொடுக்கப்பட்டுள்ள உதாரணம் ஆபிரகாம்: ஆதியாகமம் 15 ம் அதிகாரம்.
6. கவலையை மேற்கொள்ள முதல் வழி: தேவனுடைய வாக்குத்தத்தங்கள்.
(வச1-7).
a) தேவன் ஆபிரகாமை கவலைப்படவேண்டாம் எனக்கூறினார் (வச 1)
b) "நான் உனக்கு கேடகமும் மகா பெரிய பலனாய் இருக்கிறேன்". என்றார்.
c) அவனுடைய வித்தாக குமாரனை தருவதாய் வாக்குத்தத்தம் (வச 4)
d) தேவனுடைய வாக்குத்தத்தங்கள் அனைத்தும் அவரது பூரணமான குணங்களை பிரதிபலிப்பவை.
e) தேவன் நட்சத்திரங்களைக் காட்டி பாடம் புகட்டினார் (வச 5)
f) தேவன் தமது கிருபை வரமான இரட்சிப்பை ஞாபகப்படுத்தினார் (வச 6).
g) தேவன் ஆபிரகாமுக்கு தமது கடந்த கால உண்மையை ஞாபகப்படுத்தினார் (வச 7)
h) ஆபிரகாமுக்கு இருந்த சவால்: கர்த்தரில் நம்பிக்கை வைப்பதா அல்லது கவலைப்பட்டு கலங்குவதா?
7. கவலையை மேற்கொள்ள இரண்டாம் வழி: (வச 8-12).

a) தேவன் ஆபிரகாமுக்கு ஐந்து விதமான மிருகங்களை பலியிட கட்டளை கொடுத்தார். (வச 9).

b) பலியிடப்பட்ட மிருகங்களாவன:

i) மூன்று வயது கிடாரி - பாவங்களை அறிக்கை செய்வதைக் பிரதிபலிக்கிறது.

ii) மூன்று வயது வெள்ளாடு - இரட்சிப்பு, ஒப்புரவாகுதலை பிரதிபலிக்கிறது.

iii) மூன்று வயது ஆட்டுக்கடா - இரட்சிப்பு, தயை அல்லது கருணை பெறுதல்.

iv) காட்டுப்புறா - கிறிஸ்துவின் தெய்வீகம்.

v) புறாக்குஞ்சு - கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த மனுஷீகம்.

c) கவலையை மேற்கொள்ள நடைமுறை செயல்பாடுகள்:

i) மூன்று வயது கிடாரி - நமது பாவங்களை அறிக்கை செய்யும் போது அவைகள் முற்றிலும் அழிக்கப்பட்டுப்போகும். கடந்த கால தோல்விகளுக்காய் கவலைப்பட வேண்டாம். கவலையைக் குறித்த வேதாகம போதனைகளை வாழ்விற்கு நடை முறை படுத்துவதற்கு முன்பு பாவங்களை அறிக்கை செய்வது மிகவும் அவசியம்.

ii) மூன்று வயது வெள்ளாடு - தேவன் கிறிஸ்துவின் மூலம் ஒப்புரவாக்குதலை அளித்து, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள தடைச்சுவரை தகர்த்துவிட்டார் - நாம் ஒப்புரவாக்கப்பட்டு விட்டோம் அதனால் கவலை வேண்டாம்.

iii) மூன்று வயது ஆட்டுக்கடா - தேவன் கிறிஸ்துவின் தியாக பலியினால் திருப்தியடைந்துள்ளார். இயேசுக்கிறிஸ்து தக்க சமயத்தில் நமது பிரச்சனைகள் அனைத்தையும் சரியாய் கையாண்டு வழி நடத்துவார் கவலை வேண்டாம்.

iv) காட்டுப்புறா - இயேசுக்கிறிஸ்து தேவனாய் இருக்கிறபடியால் அவர் எப்பொழுதும் உண்மையுள்ளவராய் இருக்கிறார். மற்றும் அவர் நம்மோடு இருக்கிறார் கவலை வேண்டாம்.

v) புறாக்குஞ்சு - உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் நமக்காய் பரிந்து பேசும் ஸ்தானத்தில் மிகவும் வலுவான ஸ்தலத்தில் வீற்றிருக்கிறபடியால் கவலை வேண்டாம்.

d)பறவைகள் அப்பலியின் மீது வந்து இறங்கின இது சாத்தான் நம்மைத்தாக்க வருவதை குறிக்கிறது, இது சந்தேக வடிவிலும், சோதனை வடிவிலும் வரலாம் கவலைப்படக்கூடாது.

e) ஆபிரகாம் அவைகளை துரத்தினான் - அவன் கவலைக்கு மறுப்பு தெரிவித்தான்.(வச 11)

f) நெருக்கத்தின் மத்தியில், ஆபிரகாம் தனது சந்ததியினரைக்குறித்து கவலை கொள்ளத்தொடங்கினான். (வச 12).

8. கவலையை மேற்கொள்ள மூன்றாவது வழி:

a) நமது எதிர்காலத்தில் விசுவாசிகளாகிய நாம் பெற்று இருப்பது.

i) உயிர்த்தெழுந்த சரீரம் (1 கொரிந்தியர் 15:51-54; 1 தெசலோனிக்கேயர்4:13-18).

ii) பரலோகில் வாசஸ்தலம் (யோவான்14:1-3).

iii) சுதந்திரம் (1 பேதுரு1:3-8).

iv) எங்கும் ஆசீர்வாதம் நெருக்கங்கள் இல்லை (வெளிப்படுத்தல் 21:4).
b)தேவன் ஆபிரகாமுக்கு ஐந்து தீர்க்கதரிசனங்களை ஆதியாகமம் 15 ம் அதிகாரத்தில் கொடுத்துள்ளார்.
i) இஸ்ரவேலர் எகிப்தியரை 400 ஆண்டுகள் சேவிப்பார்கள் (வச 13).
ii) தேவன் எகிப்தியரை 10 வாதைகளால் வாதிப்பார் (வச 14).
iii) இஸ்ரவேலர் மிகுந்த ஆஸ்தியுடன் எகிப்தைவிட்டு வெளியேறுவர் (வச 14).
iv) ஆபிரகாம் முதிர்ந்த வயதிலே மரணமடைவான் (வச15).
v) இஸ்ரவேலர் தேவன் வாக்குப்பண்ணின தேசத்திற்கு திரும்பவருவார்கள் (வச16).
c)இதினிமித்தம் ஆபிரகாம் தனது சந்ததிக்கு மகா உன்னதமான எதிர்காலம் உண்டு என நிச்சயித்துக்கொண்டன், அதை முத்திரையிடும்படியாக தேவன் அந்நாளில்தானே பாலஸ்தீன உடன்படிக்கையை தேவன் ஆபிரகாமுக்கு அருளினார்.
(வச 18 -21).
9. நம்மை ஆர்வமூட்டும் காரியம் வாக்குத்தத்தங்களின் எண்ணிக்கை ஐந்து, ஐந்து வகையான மிருகங்கள் பலி செலுத்தப்பட்டன, ஐந்து வகையான் தீர்க்கதரிசனம் அளிக்கப்பட்டது, கிருபையின் எண் ஐந்து, தேவன் எவ்வித தகுதியுமில்லாத மனிதனுக்கு காட்டும் பரிவு எத்துனை அதிகம் !

பிரதிபலன்களும் மற்றும் கிரீடங்களும்

பிரதிபலன்கள் மற்றும் கிரீடங்கள்

1. வேதாகமத்தில் பிரதிபலன்கள் மற்றும் இரட்சிப்பு இவை இரண்டும் மிகக்கவனமாக வேறுபிரித்துக் கூறப்பட்டுள்ளது. இரட்சிப்பு என்பது இலவசம், தேவனிடமிருந்து கிடைக்கும் ஈவு. பிரதிபலன் என்பது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் புகழ்ச்சிக்கேதுவாக ஆற்றப்படும் சேவையாய் இருக்கிறது.
2. இரட்சிப்பு - இழந்து போனோருக்கு அளிக்கப்படும் இலவச ஈவு. (எபேசியர்2:8-9, ரோமர்6:23, யோவான்4:10. நித்திய ஜீவன். (யோவான் 3:36, யோவான் 5:24, யோவான் 6:47).
3. பிரதிபலன் - இது கர்த்தருக்காக உண்மையுடன் உழைக்கும் இரட்சிக்கப்பட்டோருக்கு அளிக்கப்படுவது. (1 கொரிந்தியர் 9:24, 25, வெளிப்படுத்தல்22:12). - இது கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பில் பகிர்ந்தளிக்கப்படும். (1கொரிந்தியர் 3:11-15, 2கொரிந்தியர் 5:10, ரோமர்14:10).
4. கிரீடங்களான பிரதிபலன்கள்:-
a) மாசற்ற கிரீடம் - இச்சையடக்கத்தில் உண்மையுள்ளோருக்கு. (1கொரிந்தியர் 9:24-27).
b) மகிமையின் கிரீடம். - உபத்திரவங்களில் உண்மையுள்ளோருக்கு. (1 பேதுரு5:4).

c) ஜீவ கிரீடம் - பாடுகளின் கீழ் உண்மையுள்ளோருக்கு (யாக்கோபு1:12, வெளிப்படுத்தல்2:10).
d) நீதியின் கிரீடம் - சாட்சியில் உண்மையுள்ளோருக்கு. (2 தீமோத்தேயு 4:8).
e) மகிழ்ச்சியின் கிரீடம் - உண்மையாய் உழைத்தவர்களுக்கு (1 தெசலோனிக்கேயர்2:19, 20, பிலிப்பியர்4:1).

நான்கு தலைமுறை சாபம்

1. பொதுவான வேதபகுதி: (யாத்திராகமம் 20:4-6).

2. தேவனது வார்த்தையின்றி வாழும் விசுவாசி கர்த்தரை வெறுக்கும் நிலையில் இருக்கிறார், ஒருவிசுவாசியும் தேவனது வார்த்தையின்றி அவரை நேசிக்கிறேன் எனக்கூறுவது இயலாத காரியம்.

3. இருவகையான ஜனங்கள் தேவனை வெறுக்கிறவர்களாய் இருக்கின்றனர்:

a) அவிசுவாசிகள் - இரட்சிப்பின் போது தேவனது வார்த்தையை நிராகரித்தவர்கள்.
b) தேவன அவர்களை நேசித்த போதும், தேவனை புறக்கணித்து வாழும் விசுவாசிகள்.

4. வேதவசனங்களில் ஒவ்வொரு சந்ததியிலும், தேவனை நிராகரித்து வாழும்போது மட்டுமே, 3 அல்லது 4 தலைமுறைவரை சிட்சை தொடர்கிறதாய் இருக்கிறது. சிட்சையின் நோக்கம் அவிசுவாசியின் கவனம் கிறிஸ்து மீது பதிக்கப்படுவதற்காக ஆகும்.

a) முதல் சந்ததி - தேவனுக்கு எதிரான கலகம் எங்கு இருக்கிறதோ அங்கு அவர் சிட்சிக்கிறவராய் இருக்கிறார்.
b) இரண்டாம் சந்ததி - தேவன் மறுபடியும் சிட்சிக்கிறவராய் இருக்கிறார் அந்த சந்ததியில் தொடர்ந்து அவருக்கு எதிரான கலகம் இருக்குமானால்.
c) மூன்றாம் சந்ததி - தொடர்ந்து கலகம் செய்வார்களானால் அவர்களை மறுபடியும் தண்டிக்கிறவராய் இருக்கிறார்.
d) நான்காம் சந்ததி - இச்சந்ததியிலும் தொடர்ந்து தேவனுக்கு எதிரான கலகம் நீடிக்குமானால் மறுபடியும் தண்டனை அளிக்கிறார் ஆனால் நான்காவது தலைமுறைக்குப் பிறகும் இக்கலகம் தொடருமானால், அங்கு மாற்றம் இடம்பெறுகிறது காரணம் அவர்கள் தொடர்ந்து மனித வர்க்கத்தில் இருப்பது நிராகரிக்கப்படுகிறது.

4. இதில் ஏதாவதொரு சந்ததி கிறிஸ்துவை விசுவாசிக்குமேயானால், தேவனது சாபங்கள் ஆசீர்வாதங்களாய் மாற்றி அமைக்கப்படுகின்றன.

5. "அவர் ஆயிரந்தலைமுறை வரைக்கும் இரக்கத்தை காட்டுகிறவராய் இருக்கிறார்" -- யாத்திராகமம் 20:6.
ஒவ்வொரு சந்ததியிலும் தேவன் அவர்களது பெற்றோரின் பாவங்களை சந்திக்காதவராய் இருக்கிறார் ஒருவேலை அவர்கள் கலகத்திற்கு உடபடாதவர்களாய் இருப்பார்களேயானால். ஒவ்வொரு சந்ததியும் அவர்கள் செய்யும் பாவத்திற்கு அவர்கள் கடமைபட்டவர்களாய் இருக்கின்றனர்.

6. ஏரோது வம்சாவழியினரின் மாதிரி:

a) முதல் தலைமுறை - மகா ஏரோது (மத் 2). இவன் ஒரு அவிசுவாசியாய் இருந்தான் இவனுக்கு இயேசுக்கிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்தன, இவன் தனது மூன்று குமாரர்களையும் கொன்று போட்டான், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை பெத்லகேமில் வைத்து கொலை செய்ய முயற்சித்தான் இறுதியில் மிகவும் வருத்தத்திற்குரிய மரணத்தைத் தழுவினான். இவன் ஒரு இளைஞனாய் மாபெரும் விளையாட்டு வீரனாய் திகழ்ந்தான், மிகவும் பேரழகு கொண்ட ஆண்மகனாய் திகழ்ந்தான், மாபெரும் ஆளுநராய் இருந்தான். இவன் படிப்படியாய் தரம்தாழ்ந்து இறுதியில் துன்பத்துக்குரிய மரணத்தைத் தழுவினான்.

b) இரண்டாவது தலைமுறை - நரி என அழைக்கப்படும் ஏரோது (மத். 14). ஏரோது தனது சகோதரியின் மகளாகிய ஏரோதியாளை மணமுடித்தான். இருவருக்கு இரட்சிப்படைய அநேக தருணங்கள் இருந்தன. இவர்கள் இருவரும் யோவான் ஸ்நானகனையும் மற்றும் இயேசுக்கிறிஸ்துவையும் முகமுகமாய் சந்தித்தனர். இருவரும் தங்களுக்கு அறிவிக்கப்பட்ட சுவிஷேசத்தை புறக்கணித்தனர். ஸ்பெயின் தேசத்தில் இருவரும் சிறைவைக்கப்பட்டு பரிதாபத்துக்குரிய மரணத்தை தழுவினர்.

c) மூன்றாவது தலைமுறை - ஏரோது அகிரிப்பா 1 (அப்போஸ்தலர் 12) அகிரிப்பாவிற்கு சுவிஷேசம் அறிவிக்கப்பட்டும் அதை அகிரிப்பா நிராகரித்துவிட்டார். யாக்கோபை இரத்த சாட்சியாய் மரிக்கச்செய்ததற்கு இவனே காரணன் மற்றும் பேதுருவை காவலில் வைக்க இவனே கட்டளையிட்டான். இருப்பினும் பேதுரு தெய்வச்செயலால் அங்கிருந்து தப்பிச் சென்றார். அகிரிப்பா ஒரு அவிசுவாசியைப்போல மிகவும் வருத்தத்துடன் மரித்தார்.

d) நான்காவது தலைமுறை - ஏரோது அகிரிப்பா 2 (அப்போஸ்தலர் 24,25) அகிரிப்பாவும் அவனது இரண்டு சகோதரிகளும் நான்காம் தலைமுறையினரை இருக்கின்றனர். பவுலிடமிருந்து சுவிஷேசத்தை கேள்விப்பட்டு அதை மறுதலித்தனர். இவர்கள் அசாதாரண மரணத்தைத் தழுவினர். ஏரோதியரின் வம்சமானது கொஞ்ச கொஞ்சமாக மறையத் தொடங்கியது அவர்களது எஞ்சிய குடும்பத்தினரும் பாம்பேயில் Pompeii வைத்து வெசுவியஸ் கி.பி 78ல் வெடித்து சிதறிய போது மரித்தனர்.

<u>பாடம் 5 - அதிகாரம் 16.</u>

முன்னுரை:

ஆபிரகாம் மூன்று வாக்குத்தத்தங்களை பெற்று இருந்தார், ஒன்று தமஸ்கு ஊரானாகிய எலெயேசர் தனது வாரிசு அல்ல, இரண்டாவது சாராள் மூலம் தனக்கு வாரிசு உண்டாகும், மூன்றாவது அவர் நல்ல பூரணவயதில் மரிப்பார் மற்றும் மிகவும் செழிப்புள்ளவராகுவார்.

15ம் அதிகாரத்தின் கடைசியில் ஆபிரகாம் ஆவிக்குரிய உயர்ந்த நிலையில் இருக்கும் போது அவரது மனைவி சாராள் நிலையற்றவளாயும், மற்றும் வாக்குவாதம் செய்கிற விசுவாசியுமாய் இருந்தாள், இவள் லோத்தைப்போல மனுஷீக கண்ணோட்டத்தில் சிந்திக்கிறவளாய் இருந்தாள். இந்த அதிகாரத்தில் ஆபிரகாம் யாக்கோபில் கூறப்பட்டுள்ள இருமனம் பொருந்திய பெலவீனமான விசுவாசியாய் இராமல், தேவனுடைய வாக்குத்தத்தை தனது நம்பிக்கையாகவும் குறிக்கோளாகவும் கொண்டிருந்தார்.

ஆபிரகாம் வக்குத்தத்தைக் கண்டு, கண்டிப்பாய் குமாரனை பெறுவேன் என்று தேவனது குணாதியத்தால் உறுதி செய்துகொண்டார். சாராள் எப்படியிருப்பினும் இதற்கு உடனாளியாய் இருந்தாள். உங்களது கணவர் ஆவிக்குரியவராய் இருக்கும்போது, நீங்கள் ஒரு கிறிஸ்தவ மனைவியிருந்தால், உங்கள் புருஷனுக்கு ஆவிக்குரிய வழிநடத்துதலை அளிக்க அவசியமில்லை. ஆபிரகாம் இக்காலக்கட்டத்தில் சாராளின் சொற்பேச்சை கவனியாது இருந்திருக்க வேண்டும், ஆனால் அவரது பெலவீனம் அவளுக்கு இணங்கிவிட்டார்.

1 பேதுரு 3:1-2 ல் பேதுரு மனைவிமார் தங்கள் புருஷன்மாருடன் பிரச்சனைகளுடன் இருப்பதைக் குறித்து குறிப்பிடுகிறார். எப்பொழுதும் அவர்கள் தங்கள் புருஷன்மாருக்கு அடங்கிப்போவது எளிதாய் இருக்கிறது. அடங்கிப்போகும் நபர்கள் எப்பொழுதும் தங்கள் சொந்த நிலைக்குத் தக்கவாறு எடுத்துக்கொள்கிறார்கள் அல்லது நீங்கள் கூறும் எந்த ஒரு காரியத்தையும் அவர்கள் முழுமையாய் கவனிக்கமாட்டார்கள்.

வேலைக்காரப் பெண்:

ஆதியாகமம் 16:1-2ல் ஆபிரகாமின் குறுகிய கால எகிப்து விஜயம் குறித்து காண்கிறோம். பண்டைய உலகில், ஒருவரது மனைவிக்கு பிள்ளைப்பேறு

இல்லை எனில், அவள் தனது தாதிப்பெண்ணை தனது கணவருக்கு அளித்து, அவள் மூலம் பிள்ளைப் பெற்றெடுக்கப்படுமானால், அப்பிள்ளை அக்குடும்ப வாரிசாக கருதப்படும், இச்செயல் தேவனைப் பொருத்த மட்டில், அவர்களது வாரிசு விபச்சாரத்தின் மூலம் பெறப்பட்டது எனக்கருதப்படுகிறது.

பண்டைய உலகின் பழக்கவழக்கங்கள் தவறு, சாராள் ஆபிரகாமுக்கு அளித்த அறிவுரை தவறானது. திருமணத்தைக் குறித்து தேவனது சித்தம், ஆதியாகமத்தில் 2:24ல் காண்கிறோம், இதினிமித்தம் புருஷன் தன் தாயையும் தகப்பனையும் விட்டு தன் மனைவியுடன் இசைந்திருப்பான், இதன் பொருள் ஒரே மனைவியுடன் என்பதாகும்.

ஒன்று மேற்பட்ட மனைவிகளை விவாகம் செய்வது மற்றும் ஒழுங்கற்ற விவாகம் போன்றவை கலாச்சாரம் என்ன போதித்தாலும் அது தவறாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில் அநேக முற்பிதாக்கள் ஒன்றிற்கும் மேற்பட்ட மனைவிகளை உடையவர்களாய் இருந்தனர் இது எப்பொழுதும் இரு தரப்பினருக்கும் இடையே பிரச்சனைகளுக்கு மூலக்காரணமாய் இருந்து வந்தது. தேவனது வழியில் எதையும் செய்யாது இருக்கும் போது, அது பாவமாய் இருக்கிறது.

மோசமான அறிவுரை:

தேவனுடய இலக்கு தவறிவிட்டது, மனித இலக்கு அல்ல, இவ்வாறு சமுதாயத்தில் நீங்கள் ஒழுக்கசீலராய் இருக்கலாம் ஆனால் தேவனது பார்வையில் பாவம் செய்யும் கொடிய நபராய் இருக்கிறீர்கள்.

ஆபிரகாம் இப்பொழுது தேவனது வார்த்தைகளை விட்டு தனது கண்களை விலக்கி, ஆகார் மீது பதித்தார் மற்றும் அவர் விழுந்துபோனார் காரணம் தேவனது சத்தத்தை விட மனுஷருடைய சத்தத்திற்கு செவிசாய்த்துப்போனார். ஆபிரகாமின் வேலை தேவனுக்கு காத்திருக்க வேண்டியதாய் இருந்தது. ஏசாயா 30:18, ஏசாயா 40:31, சங்கீதம் 37:34, சங்கீதம் 37:7, 1 சாமுவேல் 17:47.

சாராள் தேவனை குற்றப்படுத்தும் முகாந்திரமாய், பிள்ளைப்பேறு அற்றவளாய் தேவன் எனக்கு செய்திருக்கிறார் என்றாள். இது உண்மையல்ல. திருமணத்தில் பிள்ளைபேறு இல்லையெனில், விசுவாசியானவன் அமர்ந்திருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் இதற்காய் கவலைப்பட்டு கலங்குதல் கூடாது. அவர்களது குடும்பப்பெயரானது நாம் மிகப்பெரிய ஆவிக்குரிய குடும்பத்தில் இருப்பதால் அங்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உங்களது குடும்பப் பெயர் இப்பூமியில் இருப்பதைவிட பரலோகில் உங்களது பெயர் இருப்பது குறித்து நீங்கள் கரிசனையுடையவர்களாய் இருத்தல் அவசியம். பிள்ளைகளில்லாது இருத்தல் கர்த்தருக்காய் காரியங்களை செய்யும்படியான தருணங்களை அளிக்கிறதாய் இருக்கிறது, பிள்ளைகள் இருப்பார்களேயானால் இது ஒருவேளை தடைபடலாம்.

உங்களுக்கு சரீரப்பிரகாரமான பிள்ளைகள் இல்லை எனில் அதைக் கர்த்தரது கரத்தில் விட்டுவிடுங்கள். பிள்ளைகள் ஒரு திருமணத்தை உருவாக்குகிறவர்கள் அல்லர் அவர்கள் ஒரு குடும்பத்தை உருவாக்குகிறவர்கள். நீங்கள் திருமணம் செய்துகொண்டிருப்பீர்களெனில், உங்களுக்கு சரீரப்பிரகாரமான பிள்ளைகள், ஆவிக்குரிய பிள்ளைகளை பெறுவரைக்கும் வேண்டாம்.

பெருமையும் மற்றும் மாம்சீகமும்:

ஆதியாகமம் 16:3-4ல் ஆகார் கருத்தரித்த பின்னர் சாராளை பார்க்கிறாள். இரு பெண்களும் நிலையற்ற மாம்சீகத்துக்குரிய விசுவாசிகள் அவர்கள் பொறாமைபடுகிறார்கள். மனோரீதியான பாவங்கள் இல்லாது முக்கோண ரீதியிலான பாலுறவை அமைத்துக்கொள்ள இயலாது. நீங்கள் அதை இச்சையுடன் துவங்கி, விபச்சாரத்திற்குள் நகர்ந்து, சில வேளைகலில் கொலையில் கூட முடிவடையலாம். Fatal Attraction என்ற சலனச்சித்திரம் இதைப்போன்ற கதை அமைப்பைக்கொண்டது. இப்படிப்பட்ட பாவங்களுக்குள் நீங்கள் செல்லும் போது, அழிவை அவைகள் கொண்டு வருகிறதாய் இருக்கிறது. ஆகாருக்குப் பிறந்த குழந்தை வாரிசாக சாத்தியமே இல்லை காரணம், ஒரு அடிமைக்கு பிறந்த குழந்தை வாக்குத்தத்தின் குழந்தயாக முடியாது, அக்குழந்தை அடிமையில்லாத ஒரு சுதந்திர நபரிடம் பிறக்கவேண்டும்.

வாக்குத்தத்தத்தின் குழந்தையானது தேவனது சித்தத்தின்படி பிறந்து, மனுஷீக இச்சையற்றதாய் இருக்கவேண்டும், பழைய பாவ சுபாவத்திலிருந்து [O.S.N.] உருவாக்கப்பட்ட எதையும் தேவன் உபயோகிக்க முடியாது. சங்கீதம் 66:18.

வசனம் 5-6ல் உங்கள் மனைவியின் அறிவுரையை ஏற்றுக்கொண்டு அது தவறு எனில் அதற்குரிய பொறுப்பு உங்களுடையதாகிறது. உங்கள் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்கு வெளியே கடந்து வந்து, நீங்கள் செயல்படும்போது, நீங்கள் எண்ணக்கூடும், நான் இதற்கு தகுதியுள்ளவனாய் இருக்கிறேன் என. ஆபிரகாம் இப்பொழுது சாராளிடம் கூறுகிறார், ஆகார் உன் கையில் இருக்கிறாள், உனது விருப்பப்படியே அவளுக்கு செய் என்றார். இப்போது சாராள் ஆகாரை அடிக்கத் துவங்குகிறாள். ஆகாருக்கு இக்கட்டான சூழல் உருவாயிற்று, அவள் ஒரு அடிமைப் பெண் சில மாத கர்ப்பினி, இருப்பினும் தன் நாச்சியாருக்கு பணிவிடை செய்ய தன்னை அற்பணித்துக்கொண்டிருந்தும் அவளால் தாக்குதலை சமாளிக்க முடிய வில்லை. இதினிமித்தம் ஆகார் வனாந்தரத்திற்கு ஓடிப்போகிறாள்.

யெஹோவாவின் தூதன்:

கிறிஸ்துவுக்கு ஒப்பனையாகக்கூறப்படும் யெஹோவாவின் தூதனாவர் ஆகாரை எகிப்திற்கு செல்லும், சூருக்கு போகிறவழியில், வனாந்தரத்தில் தண்ணீர் துறவண்டையிலே கண்டார். ஆகார் எகிப்திய பெண்ணாய்

இருந்தபடியால் இதன் மூலம் அவள் தனது வீட்டிற்குச் சென்றாள் என்பதை புறிந்துகொள்ள முடிகிறது. அவள் ஓடிப்பொனாள் ஆனால் அவளது ஓட்டம் எதையும் மெதுவாக்கவில்லை. அவர் ஆகாரை சாராளின் தாதிப்பெண்ணே என அழைத்தார். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தனது அவதார உருவிற்கு முன்னதாகவே ஆகாருக்கு சொன்னது, நீ திரும்ப உன் நாச்சியாரியடத்திற்கு சென்று அவளுக்கு கீழ் அடங்கி இரு என்றார். அக்காலத்தில் இதைப்போன்று ஒரு அடிமை ஓடிப்போகும் போது, அதற்கான தண்டனை மரணம் ஆகும்.

எப்படியிருப்பினும், இக்கட்டளைக்குப்பின்னர் கர்த்தரது வாக்குத்தத்தம் இருந்தது, கர்த்தரே அவளுக்கு பின்னாக இருந்தார். திரும்பச்செல் என்னை நம்பு என்றார். உண்மையுள்ளவளாய் இரு அவர் உன்னைப் பாதுகாப்பார். ஆகாருக்கு சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தில் அவளது சந்ததி பலத்தவர்களாயிருப்பர், மற்றும் உனது குமாரனை இஸ்மவேல் அழைப்பாய் காரணம் கர்த்தர் உன் அங்கலாய்ப்பை கேட்டருளினார். அவன் வனாந்தரத்தில் வளரும் துஷ்டமனிதனாய் இருப்பான்.

பாவத்தின் நீண்ட கால விளைவுகள்:

வசனம் 7-12ல் நீரூற்றண்டையில் ஆகார் தனது ஜெபத்திற்கு பதிலைப் பெற்றுக்கொண்டாள். கர்த்தர் அவளை கேட்டருளினார் காரணம் அவர் உன் விண்ணப்பத்தைக்கேட்டேன் என்றார். இஸ்மவேலின் சந்ததியினர் அரேபியரில் சிலராய் இருக்கிறார்கள் இன்றும் அவர்கள் ஈசாக்கின் சந்ததியினருடன் சண்டையிட்டுக்கொண்டே இருக்கின்றனர். இதினிமித்தம் ஆபிரகாமின் பாவம் சரித்திரத்தில் முக்கியம் வாய்ந்த பின்விளைவுகளை அளிக்கிறதாய் இருக்கிறது. தேவன் நமது பாவங்களை மன்னிக்கிறவராய் இருக்கிறார் ஆனால் அதன் விளைவுகள் சென்றுகொண்டே இருந்து எதிர்காலத்தில் மிகுந்த உபத்திரவத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. பாவம் என்பது பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான விபச்சாரமாய் இருக்கிறது மற்றும் கிறிஸ்துவின் இரத்தத்தை அவமதிப்பதாய் இருக்கிறது. தாவீது கூறும்பொழுது, "உம் ஒருவருக்கு விரோதமாய் நான் பாவம் செய்தேன்" என அறிக்கையிடுகிறவராய் இருக்கிறார்.

வசனங்கள் 13-14ல் ஆகார் தேவன் என்னைக்கண்டார் என உணர்ந்துகொண்டாள். சுமார் 500 ஆண்டுகளுக்குப்பின்னர் இதை எழுதும் போது, இவ்வனாந்திரங்களில் பயணம் செய்து இவ்விடங்களை குறிப்பாய் கண்டிருந்தார். ஆகார் திரும்ப சேர்த்துக்கொள்ளப்பட்டாள். ஆகார் கர்த்தரை இருக்கிறவராக கண்டுகொண்டாள். அவள் நீர் என்னைக் கேட்டருளி எனக்குப் பதில் அளித்தீர் எனக்கூறுகிறாள். அடிக்கடி நாம் தாழ்வான பகுதிக்கு செல்லவேண்டியவர்களாய் இருக்கிறோம், அங்கு நாம் தேவனை அறிகிறவராகவும், காண்கிறவராகவும் இருக்கிறார் என்பதை புறிந்து கொள்கிறவர்களாயிருக்கிறோம்.

ஆபிரகாம் தேவனை நம்புவற்கு கற்றுக்கொள்ளுதல்:

இஸ்மவேல் பிறந்தான். [வச 15-16] ஆகார் தனது அனுபவத்தையும் சாட்சியையும் ஆபிரகாமுக்கு சொல்ல வேண்டியதாய் இருந்தது. இஸ்மவேல் பிறந்த போது ஆபிரகாம் 86 வயதுள்ளவராய் இருந்தார். ஆபிரகாமை அடுத்து 99 வயதில் அவரை குழந்தை பெற்றெடுக்க திறன் இழந்தவராய் காண்கிறோம். 13 ஆண்டுகாலங்கள் அவரது வாழ்வில் இடைவெளிக்குப்பின்னர் ஆபிரகாம் தேவனில் நம்பிக்கை வைக்கும் பாடத்தைக் கற்றுக்கொண்டார்.

ஆபிரகாம் தனது போக்கில் ஒவ்வொரு காரியங்களையும் செய்து களைத்துவிட்டார் ஆனால் தேவன் கூறினார் எனது வழியில் ஒவ்வொரு காரியத்தையும் செய் என உறுதிப்படுத்தினார். தொண்ணூற்று ஒன்பது வயது நிரம்பிய ஆபிரகாம், பால் உறவில் செயல் திறணை இழந்த நிலையில் மறுபடியும் சோதிக்கப்படுவது இயலாதகாரியமாய் இருந்தது மற்றும் இயல்பாய் ஒரு குழந்தையை பெற்றெடுப்பது இயலாத ஒன்றாய் இருந்தது. நாம் மற்றவர்களின் தவறுகளிலிருந்து கற்றுக்கொண்டு தேவனது சித்தத்தை உடனடியாய் சரிசெய்து உறுதிபடுத்திக்கொள்ளல் வேண்டும். ஆபிரகாம் தனது குமாரனாகிய இஸ்மவேல் தற்போது வளர்ந்து வருவதை ஒரு அவிசுவாசியாக, மற்றும் பாலுறவிற்கு திறணற்றவராய் கவனித்துக்கொண்டும் தேவனை நம்புகிறவராய் இருந்தார்.

தேவனது வர்த்தையை நம்புங்கள், அவரது வார்த்தையை உறுதியாய் பற்றிக்கொள்ளுங்கள், தேவனது வார்த்தையின் மூலம் பரிசுத்தமாகுங்கள், கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள், ஒவ்வொரு சிந்தனையையும் கிறிஸ்துவிற்காக சிறைப்படுத்துங்கள், தேவனது வழியில் உங்களது பிரச்சனைகளுக்கு பரிகாரம் தேடுங்கள். ஒரு குறிக்கோளுடன வாழும்படியான வழியை தேர்ந்தெடுத்துக்கொள்ளுங்கள். தேவனை குற்றப்படுத்தாதிருங்கள். நீங்கள் உபதேசத்தை சிந்திப்பீர்களெனில் குறிக்கோளுடன் இருப்பீர்கள், மனிதக்கண்ணோட்டத்தில் காரியங்களை கண்ணோக்குவீர்களானால் நீங்கள் அதற்கு அடிபணிந்து போகிறவர்களாய் இருப்பீர்கள். இது வாழ்க்கைமுழுதும் கடந்து வருகிற யுத்தமாய் இருக்கிறது. உங்கள் பரம பிதாவை சார்ந்து இருக்கப்பழகுங்கள், அவர் உங்கள் திராணிக்கு மேலாய் சோதிக்கப்பட அனுமதிக்க மாட்டார். 1 கொரிந்தியர் 10:13. தேவன் எல்லாவற்றிற்கு பரிகாரத்தை வைத்து இருக்கிறார்.

உபதேசங்கள்

தேவன்: தேவனது குணாதிசயம்

1. தேவன் மூன்று நபர்களாய் இருந்தபொதிலும், அவர்கள் மூவரும் ஒரே தன்மையுடையவர்களும், அல்லது குணாதிசயங்களைக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.

a) ஏகாதிபதி:
பிதா (எபேசியர் 1:11 , cf ஏசாயா 40:8, மத்தேயு6:10,எபிரெயர் 10:7, 9).
குமாரன் (யோவான் 5:21, வெளிப்படுத்தல்19:16).
பரிசுத்த ஆவியானவர் (1 கொரிந்தியர் 12:11 , cf எபிரெயர் 2:4).

b) நீதியுள்ளவர்:
பிதா (யோவான் 17:25)
குமாரன் (லூக்கா 1:35, எபிரெயர் 7:26, 2 கொரிந்தியர் 5:21).
பரிசுத்த ஆவியானவர்

c) நியாதிபதி
பிதா (யோபு37:23, cf 8:3)
குமாரன் (அப்போஸ்தலர் 3:14, யோவான் 5:22, வெளிப்படுத்தல் 19:11).
பரிசுத்த ஆவியானவர் (நெகேமியா 9:20)

d)அன்புள்ளவர்:
பிதா (யோவான் 3:16)
குமாரன் (எபேசியர்5:25, 1யோவான் 3:16)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 16:7-11, 1கொரிந்தியர் 2:10)

e)நித்திய ஜீவன்:
பிதா (யோவான் 5:26)
குமாரன் (மீகா5:2, cfயோவான் 1:1-2, 1 யோவான் 5:11).
பரிசுத்த ஆவியானவர் (ஏசாயா 48:16)

f)எல்லாம் அறிந்தவர்:
பிதா (எபிரெயர் 4:13, cfமத்தேயு 11:27, 1 பேதுரு 1:2)
குமாரன் (யோவான் 18:4, cf மத்தேயு 9:4, யோவான் 2:25, 1கொரிந்தியர் 4:5)
பரிசுத்த ஆவியானவர் (ஏசாயா 1:2, cf 1 கொரிந்தியர்2:11).

g) எங்கும் இருப்பவர்:
பிதா (2 நாளாகமம் 2:6)
குமாரன் (மத்தேயு 8:20, cf எபேசியர்1:23)
பரிசுத்த ஆவியானவர் (சங்கீதம் 139:7)

h) சர்வ வல்லமையுள்ளவர்:
பிதா (மாற்கு 14:36, cf 1 பேதுரு 1:5)
குமாரன் (எபிரெயர்1:3, cf மத்தேயு 24:30, 2 கொரிந்தியர் 12:9, பிலிப்பியர்3:21)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14:16)

i) மாறாதவர்

பிதா (எபிரெயர் 6:17, சங்கீதம் 33:11)
குமாரன் (எபிரெயர் 13:8)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14:16)

j) சத்தியம்:
பிதா (யோவான்7:28, யோவான் 17:3)
குமாரன் (1 யோவான் 5:20, cf யோவான் 1:14, 14:6, வெளிப்படுத்தல்19:11)
பரிசுத்த ஆவியானவர் (1 யோவான் 5:6, cf யோவான் 14:17, 15:26, 16:13)

விவாகம்

1. மனிதன் மற்றும் தேவதூதர்கள் ஆளத்துவம் உடையவர்கள், ஆனால் மனிதன் மற்றும் மிருகங்கள் "nephesh" ஐப்பெற்று இருக்கின்றனர் மற்றும் அவர்கள் சரீர மரணம் அடைகிறவர்களாய் இருக்கிறார்கள். தேவதூதர்கள் மரிப்பதில்லைகாரணம் அவர்கள் ஆவிகளாய் இருக்கின்றனர்.

2. திருமணத்திற்கு ஆளத்துவம் மற்றும் வாழ்க்கை இவ்விரண்டும் அவசியமாய் இருக்கிறது. இதினிமித்தம் விவாகம் மனிதனுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாய் இருக்கிறது. தேவதூதர்களுக்கு விவாக வாழ்க்கை என்பது இல்லை.

3. விவாகம் குறித்த விளக்கம்: - விவாகம் மனித வர்க்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவை காட்டுகிறது, மற்றும் இது கிறிஸ்துவுக்கும் விசுவாசிக்கும் இடையே உள்ள இரட்சிப்பின் உறவுக்கு ஒப்பணையாய் இருக்கிறது.

4. தேவனின் போதனை:- "ePq;fs; gYfpg; ngUfp> g+kpia epug;gp> mijf; fPo;g;gLj;jp> rKj;jpuj;jpd; kr;rq;fisAk; Mfhaj;Jg; gwitfisAk;> g+kpapd;Nky; elkhLfpw rfy [Pt[e;Jf;fisAk; Mz;Lnfhs;Sq;fs;" என தேவன் மனிதனுக்கு கட்டளை கொடுத்தார். இது மனிதன் மிருக இராஜ்ஜியத்தை கீழ்ப்படுத்தி, அதை ஆண்டுகொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

5. தேவன் தனிப்பட்ட ஆளத்துவத்துடன் இருப்பாரேயானால், உறவைக்குறித்த தெய்வீக உதாரணங்கள் இருக்கமுடியாது. எப்படியிருப்பினும் தேவனுடைய ஆளத்துவத்தில் மூன்று ஆளத்துவம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்லது. அவர் நம் சொந்தமாய் இருக்கிறார், இதினிமித்தம் அவருடன் நாம் உறவு கொண்டாடமுடியும்.

6. விவாகம் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள உறவின் ஒப்பணையாய் இருக்கிறது.

a) கிருபை மற்றும் விசுவாச அமைப்பில், (எபேசியர்5:22), இவ்வசனத்தில் கீழ்ப்படிதல் என்பதன் பொருள், மாம்சீக சிந்தையினால் செய்ய இயலாத சூழலில், தேவனுடைய நியமத்திற்கு அற்பணிப்பது (ரோமர்8:7; 10:3).

b) நீங்கள் உங்களுக்கு கீழ்ப்படிதல் .சுயசித்தத்தின் செயலாய் இருக்கிறது.

c) திருமண உறவு குடும்பத்தில் குழப்பங்களை கொண்டுவருமானால், அது ஒருவருக்கொருவர் கீழ்ப்படியாமையின் விளைவாய் இருக்கிறது. (ரோமர்13:1,5).

7. கிருபை ஆணுக்கும் விசுவாசம் பெண்ணுக்கும் ஒப்பிடப்படுகிறது, இவ்வித அமைப்பு செயல் படாததன் விளைவு துன்பங்களும், வேதனைகளுமாம்.

8. கிருபையும் - ஆணும்:

a) ஆண் ஆரம்பித்து வைக்கிறவராய் இருக்கிறார்.

b) ஆண் தகவல்களை அளிக்கும்போது பெண் அதற்கு பிரதி உத்தரவு அளிக்கலாம் ஆனால், தனது சுயசித்தத்தை அதில் வற்புறுத்தக்கூடாது.

c) ஆண் தனது குணாதிசயங்களை பெண்ணுக்குக் காட்டவேண்டும்.

d) ஆண் கிருபையின் அமைப்பில், தனது பொறுமையைக் கையாள வேண்டும்.

9. விசுவாசமும் - பெண்ணும்:

a) பெண் பிரதி விளைவுகளை ஏற்படுத்துகிறவளாய் இருக்கிறாள்.

b) பெண்ணானவள் தனது சுயசித்தத்தின்படி தெரிவு செய்கிறவளாய் இருக்கிறாள்.

c) அவள் விசுவாசத்தைப் பயன்படுத்துகிறவளாய் இருக்கிறாள்.

d) பெண் வளர்ச்சியடைய கால அவகாசம் தேவையாய் இருக்கிறது.

10. மகிமை வெளிப்படுதல்:

a) மறுபிறப்பின் மூலம் மாறுதல் அடைந்த வாழ்வின் அமைப்பில், தேவனின் மகிமை ஆணின் வாழ்வில் காணப்படுகிறது.

b) ஆணின் மகிமை பெண்ணில் ஏற்படும் மாற்றங்களினால், காணப்படுகிறது.

11. மனம் ஒன்றுபட்ட வாழ்க்கை:

a) மனம் ஒருமித்த வாழ்வின் முக்கிய பகுதி, ஆவிக்குரிய இராஜ்ஜியத்தில், மனோரீதியான நிலையில் அநேக மக்களுடன் மனமொருமித்து இருக்கமுடியும் என்பதாய் இருக்கிறது.

b) ஆவிக்குரிய மனமொத்த நிலையை குறிக்கும் சொற்றொடர் "ஒரே மாமிசமாய் இருப்பார்கள்" எனக் குறிப்பிடப் படுகிறது, இது கிறிஸ்து மற்றும் சபை இணைக்கப்படுவதை சித்தரிக்கிறது.

12. சாத்தான் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே கருத்து வேறுபாடுகளை கொண்டுவர முயர்ச்சித்து, ஆதன் விளைவாக பிரச்சனைகளை ஏற்படுத்துகிறான். இது சமுதாயத்தில் ஏற்படும்பொழுது, ஒழுக்க சீர்கேட்டை அவை பிரதிபலிக்கிறது.

13. விவாகத்தின் முடிவிற்கு தகுதியான காரணங்கள்:-

a) இரு தம்பதிகளில் ஒருவர் மரித்தல்.

b) திருமணத்திற்குப்பின் தம்பதிகளில் இருவரில் ஒருவர் விசுவாசியானதினிமித்தம் அவிசுவாசியால் கைவிடப்படுதல். (1 கொரி 7:10-16).

c) தகுதியற்ற முறைகேடான திருமணம் புரிந்த தம்பதிகள் லேவியராகமம் 18 ல் கூறப்பட்டுள்ளபடி நெருங்கிய உறவில் திருமணம் செய்தவர்கள்.

d) விபச்சாரம் அல்லது வேசித்தனம் போன்ற காரணங்களால், ஒரே மாமிசம் என்கிற அடிப்படையிலிருந்து விலகி மற்ற மாமிசத்துடன் சம்பந்தப்படுவதால் அது அழிவை ஏற்படுத்துகிற காரணத்தால். (மத்தேயு5:32; 19:9).

யெகோவாவின் தூதனானவர்

1) யெகோவாவின் தூதர் யெகோவா என அறியப்படுகிறார். (ஆதியாகமம் 16;7-13, 22:11-18, 31:11-13, யாத்திராகமம் 13:21 ஒப் 14:19, நியாதிபதிகள் 6:11-23)
2) யெகோவாவின் தூதர் யெகோவாவிலிருந்து வேறுபட்டு காணப்படுகிறார். (ஆதியாகமம் 27:4, யாத்திராகமம் 23:20, 1 நாளாகமம் 21:15-18, சகரியா 1:12-13)
3) யெகோவாவின் தூதர் திரித்துவத்தில் ஒருநபராய் விளங்குகிறார்.
4) பிதாவாகிய தேவன், பரிசுத்தாவியானவர் இவர்களை மனிதன் முகமுகமாய் காணமுடியாது (யாத்திராகமம் 33:18-23; யோவான் 14:17)
5) இதினிமித்தம், யெகோவாவின் தூதர் திரித்துவத்தில் இரண்டாம் நபர்: மனிதனாக இப்பூமியில் வருமுன்னர் இருந்த ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து.
a) இயேசுக்கிறிஸ்து தன்னை யெகோவா தேவனுக்கு ஒப்பாக (நானே) என்கிற சொற்றொடரை பயன் படுத்துகிறார், (யோவான் 8:56)
b) ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து காணக்கூடிய நிலையில் மனிதனாய் தோன்றிய திரித்துவத்தில் ஒருவர். (யோவான் 1:18, 6:46, 1 1தீமோத்தேயு 6:15-16)
c) யெகோவாவின் தூதர் இயேசுக்கிறிஸ்து மனிதனாக இப்பூமியில் வந்த பின்னர் தோன்றினது இல்லை. (யோவான் 1:18, 6:46, 1தீமோத்தேயு 6:15-16 1 யோவான் 4:12)
d) யெகோவாவின் தூதர் மற்றும் இயேசுக்கிறிஸ்து இருவரையும் அனுப்பினவர் யெகோவா தேவன் (பிதாவாகிய தேவன்)
6. யெகோவாவின் தூதர் பழைய ஏற்பாட்டில் மட்டும் தோன்றினார்.
a) அவர் யாக்கோபுடன் போராடினார். (ஆதியாகமம் 32:24-30)
b) அவர் யாக்கோபை எல்லா தீமையினின்றும் மீட்டுகொண்டார். . (ஆதியாகமம் 48:16)
c) அவர் மோசேயுடன் எரிகிற முட்செடியிலிருந்து பேசினார் (யாத்திராகமம் 3:2)
d) அவர் இஸ்ரவேலரை சிவந்த சமுத்துரத்தண்டையில் பாதுகாத்தார். (யாத்திராகமம் 14:9)

e) அவர் இஸ்ரவேலரை வாக்குத்தத்த தேசத்திற்கு ஆயத்தப்படுத்தினார். (யாத்திராகமம் 23:20-23)
f) அவர் யோசுவாவுக்கு திரும்ப வாக்களித்தார் (யோசுவா 5:13-15)
g) அவர் கிதியோனுக்கு கட்டளை கொடுத்தார் (நியாதிபதிகள் 6:11-23)
h) அவர் எலியாவுக்கு ஊழியம் செய்தார் (1 இராஜாக்கள் 19:5-7)
i) அவர் சனகெரிப் ராஜாவிடமிருந்து எருசலேமை இரட்சித்தார். (ஏசாயா 37:36)
j) அவர் அக்கினி சூலையில் சாத்ராக், மேஷாக், ஆபேத் நேகோ, என்பவர்களை காப்பாற்றினார். (தானியேல் 3:25)

* மூல பாஷையில் "யெகோவாவின் தூதர்" என்ற சொல் கர்த்தருடைய தூதன், கர்த்தருடைய தூதனானவர் என தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

பாடம் 6 - அதிகாரம் 17-18

முகவுரை:

16 ம் அதிகாரத்தில் ஆபிரகாம் சாராள் இருவரின் தோல்விகளைக் கண்டோம். ரோமர் 4:17-22 ஒப்பிட்டுப்பார்க்கும் வேதபகுதியாய் இருக்கிறது. தேவன் நம்மை பார்க்கும்போது தற்போது இருக்கிற நிலையை அல்ல, நாம் இருக்கப்போகும் நிலையை காண்கிறவராய் இருக்கிறார். கிறிஸ்தவர்களாய் இருப்பவர்கள் இதையே முதலாவது உணர்ந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இங்கு ஆபிரகாம் அநேக தேசங்களுக்கு தகப்பனாகப் போகிறார் என்கிற நம்பிக்கைக்கு விரோதமாய் விசுவாசிக்கிறவராய் இருக்கிறார். ஆபிரகாம் முழுவதும் இணங்கிப்போகிறவராய் இருந்தார். இதுவே விசுவாசமாய் இருக்கிறது. ஆபிரகாம் முழு நிச்சயத்துடன் இருந்தார், தான் பாலுறவு சம்பந்தமான நிலையில் மரித்துப்போயிருந்தும், தேவன் தான் வாக்குப் பண்ணினதை நிறைவேற்றி முடிப்பார் என முழு நிச்சயத்துடன் இருந்தார். தேவனது நேரம் என்பது பூரணமானதாய் இருக்கிறது. ஆபிரகாம் காத்திருக்கக்கூடாமல் துரதிஷ்ட வசமாய் இஸ்மவேலை உருவாக்கிவிட்டார். 17ம் அதிகாரத்தில் அவர் பொறுமையுடன் காத்திருக்க கற்றுக்கொண்டார்.

வசனம் 1-2 ல் தேவன் தான் யாரென நினைவு கூறச் சொன்னார், நான் யாராய் இருக்கிறேன் என நினைவு கூறு என்றார். நான் வாக்குத்தத்தம் செய்கிறவராய் இருப்பேனென்றால் அதை நிறைவேற்றி முடிக்கிறவராய் இருக்கிறேன் என்றார். நான், எனது வாக்குத்தத்தை நிறைவேற்ற முடியும், எனக்கு முன்பாய் நடந்து கொண்டு உத்தமனாய் இரு என்றார். தேவன் ஆபிரகாமுடன் உடன்படிக்கை செய்தார் அது நிபந்தனையற்ற உடன்படிக்கையாய் இருந்தது என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இப்படிப்பட்ட உடன்படிக்கை உங்களை சார்ந்து இராது தேவனையே முற்றிலுமாய் சார்ந்து இருக்கிறது. "என்னுடன் நடந்து

கொண்டு உத்தமனாய் இரு". தேவன் எவ்வாறு நம்மை பூரணப்படுத்துகிறவராய் இருக்கிறார்? - பாடுகள் மூலம் 1 பேதுரு 1:5-7ல் பட்டியல் படி.

வசனம் 3-4 வரை ஆபிரகாம் முகம் குப்புற தரையில் விழுந்து தேவனுடன் பேசுகிறவராய் இருந்தார். ஆபிரகாம் தன் கரங்களை உயர்த்துவதற்குப் பதிலாக தன் முகத்தை தரையில் பதித்தவராய் தேவனுடன் பேசினார். அந்நிலையில் அவர் முழுவதும் பாதுகாப்பற்றவராய் இருந்தார். இங்கு இரண்டாம் முறையாக அவருக்கு அநேக தேசங்களுக்கு தகப்பனாவார் என்கிற வாக்குத்தத்தமானது திரும்ப அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

ஆபிராம் இப்பொழுது ஆபிரகாம் எனப் பெயர் மாற்றப்படுகிறது. 13 அமைதியான ஆண்டுகள் கழித்தே ஆபிரகாமுக்கு தனது பிரச்சனைகளுக்கான பரிகாரங்கள் அனைத்தும் தவறானது எனக் காண முடிந்தது, கிருபையின் தேவனானவர் அவர் உரைத்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவராய் இருந்தார். உன்னதமான பிதா என்ற பொருளுடைய ஆபிராம் என்ற பெயர் திரளானவர்களுக்குப் பிதா என்கிற பெயர் மாற்றத்துடன் மாறத்துவங்கியது. தேவன் அவருக்கு ஆபிரகாம் என்கிற பெயரை அளித்து அந்த பெயரின் உண்மைக்கேற்ப இருக்கும்படி செய்தார்.

ரோமர் 4 ம் அதிகாரத்தில் தேவன் இல்லாதவைகளை இருக்கிறவைகளைப் போல அழைக்கிறவராய் இருக்கிறார். இதினிமித்தமே தேவன் வாக்குத்தத்தம் செய்வாரானால் அவைகள் உறுதியானவைகள். தேவன் எல்லாவற்றையும் அறிகிறவராய் இருக்கிறார், அவருக்கு ஆரம்பமும் முடிவும் பிரதியட்சமாய் இருக்கின்றன. நீங்கள் இறையியல் கற்றுக்கொள்ளும் மாணவராய் இருக்கலாம் ஆனால் தேவனோ நீங்கள் எவ்வாறு இருக்கப்போகிறீர்கள் என்றும், அவர் இப்பொழுது செய்யப்போகிறதை காண்கிறவராய் இருக்கிறார்.

அவருடன் நடந்து கொண்டு உத்தமனாய் இருங்கள், அவர்தாமே உங்களை புடமிட்டு சுத்திகரிப்பாராக. இந்த அதிகாரத்தில் உள்ள "நான்" (என் சித்தம்) என்பவைகளை பரிசீலனை செய்து பாருங்கள். தேவன் ஆபிரகாமுக்கு சொல்வது என்னவென்றால் அவர் தேவனது கரத்தில் இருக்கிறார், அவர் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார். பவுல் சொல்கிறது போல நாமும் அதே போன்ற நிலையில் இருக்கிறோம் "நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரை காத்துக்கொள்ள வல்லவராய் இருக்கிறார்".

உடன்படிக்கையும் விருத்தசேதனமும்:

ஆபிரகாமின் உடன்படிக்கை திரும்ப ஆரம்பிக்கிறதாய் இருக்கிறது. வசனம் 8ல் தேவன் "உனது வித்து" என்கிறார் அவர்கள் இஸ்ரவேலர்கள் [ரோமர் 9:6 ஐ காண்க] எல்லா இஸ்ரவேலு இஸ்ரவேலரல்லர், அநேகம் ஜனங்கள் சரீரப்பிரகாரமாய் ஆபிரகாமின் வழிவந்தவர்களாய் இருந்தும்

அவர்கள் உண்மையான யூதர்கள் அல்லாது இருக்கிறார்கள். மூன்று வகையான யூதர்கள் இருக்கின்றனர் யூத இனம் இவர்கள் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு வழி வந்தவர்கள், மதம் சார்ந்த யூதர்கள் இவர்கள் யூதாயிசத்தை கைக்கொள்பவர்கள் [practice Judaism] திரும்ப உருவாக்கப்பட்ட யூதர்கள் இவர்களே தேவனது பார்வையில் உண்மையான யூதர்களாய் இருக்கின்றனர்.

வசனம் 9-14 ல் விருத்தசேதனம் ஆபிரகாமின் உடன்படிக்கையின் அடையாளமாய் இருக்கிறது. யாக்கோபில் குறிப்பிட்டது போல, ஆபிரகாம் தேவனை விசுவாசித்ததை உறுதிப் படுத்தும் வகையில் இது செயல்படுகிறதாய் இருக்கிறது.

யாக்கோபு கூறுமிடத்து, உங்கள் கிரியைகள் உங்களது விசுவாசத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. ஆபிரகாம் தனது விரிவாக்கப்பட்ட குடும்பத்தினர் அனைவருக்கும் விருத்த சேதனம் செய்கிறவராய் இருக்கிறார். விருத்த சேதனம் என்பது மயக்க மருந்தின்றி, வயது சென்ற காலத்தில் செய்வது, மிகவும் வேதனைக்குரிய ஒன்றாய் இருக்கிறது.

இக்கருத்தின் படி பார்க்கும்போது எட்டாவது நாளில் என்பது மிகவும் சிறந்த நாளாய் கருதப்படுகிறது மருத்துவக் கண்ணோட்டத்தின்படி, இந்த நாளில் விருத்த சேதனம் செய்வது எதிர்ப்பு சக்தியுடன் புண் விரைவில் குணமாகி அறுக்கப்பட்ட தோல் சரியாவதற்கு சரியான பருவம் என பரிந்துரை செய்கின்றனர். தேவன் இந்நாளை தெரிவு செய்யும் போது அவர் எல்லாம் அறிந்தவர் என்பது மட்டுமல்லாது அவர் சிருஷ்டிகராகவும் இருக்கிறார் என்பதைக்காட்டுகிறதாய் இருக்கிறது.

அநேகமாய் எல்லா புறஜாதிய தேசத்தினரும் விருத்த சேதனமற்றவர்களாய் இருக்கின்றனர். விருத்த சேதனம் வாக்குத்தத்தின் குமாரர்கள் என்றும், ஆபிரகாமின் உடன்படிக்கை அவர்களுடையது என்றும் காண்பிக்கிறதாய் இருக்கிறது. இன்றைய அளவில் ஒரு யூதன் தனது குமாரனுக்கு விருத்த சேதனம் எட்டாவது நாளில் செய்வானேயாகில் அவன் கல்லால் ஆன கருக்கான கத்தி மூலமே செய்கிறான். குழந்தை அலறும்போது அதன் தகப்பன் தனது ஜெபங்களை திரும்ப திரும்ப கூறி வாக்குத்தத்தங்களை தனது குமாரனுக்காக அடைகிறவனாயிருக்கிறான். விசுவாசத்தில் இருக்கும் ஒரு தகப்பன் இவ்வாறு கூறுகிறான் "தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன், அவர் நமக்கு நமது தேசத்தை அளிக்கிறவராய் இருக்கிறார் என விசுவாசிக்கிறேன், தேவன் நமக்கு ஒரு முடிவை வைத்து இருக்கிறார் என விசுவாசிக்கிறேன்". இது தற்போது ஒரு பாரம்பரியமாய் இருந்து வருகிறது.

ஒரு ஆண்குழந்தையின் நுனித்தோலை அகற்றுவது புறஜாதிய மதங்களிலிருந்து வேறுபடுத்தப் படுகிறதை காட்டுகிறதாய் இருக்கிறது. ஒவ்வொரு முறையும் ஒரு யூதன் தனது தோல் அகற்றப்பட்ட உறுப்பைக் காணும்போது, தான் தேவனுக்கென வேறுபிரிக்கபட்டவன், அவன் பாலுறவுக்காய் விருத்த சேதனமற்ற மக்களுடன் சேரமாட்டேன்

எனக்கூறுகிறவனாய் இருக்கிறான். இது விசுவாசிகளுக்கு, இன்றைய அளவில் உள்ள தண்ணீர் ஞான்ஸ்நானம் போன்ற சடங்கு அல்ல, இரட்சிப்பும் அல்ல ஆனால் இது விசுவாசத்தின் அடையாளமாய் இருக்கிறது. ஆபிரகாம் ஈசாக்கிக்கிற்கு விருத்த சேதனம் செய்தார் அவன் வாக்குத்தத்தத்தின் குமாரனாயிருப் பதற்காக.

நீங்கள் கிறிஸ்தவ யூதனாயிருக்கும் பொழுது, நீங்கள் ஆபிரகாமின் வாக்குத்தத்ததை சுதந்தரிக்கப்போவது இல்லை, நீங்கள் புதிய உடன்படிக்கையின் கீழ் இருக்கிறீர்கள், அந்த உடன்படிக்கை கிறிஸ்து இயேசுவின் கிருபையின் உடன்படிக்கையாய் இருக்கிறது. சபையில் யூதனென்றோ, புறஜாதியானென்றோ, அடிமையென்றோ, சுயாதீனனென்றோ இராது இருக்கிறது. விருத்த சேதனம் என்பது துறவரம் அல்லது மருத்துவ காரணங்களுக்காய் இன்றைய அளவில் இருந்து வருகிறது. கிறிஸ்துவில் உள்ள புது உடன்படிக்கையானது ஆபிரகாமின் உடன்படிக்கையை விட பெரிய உடன்படிக்கையாய் இருக்கிறது. ஆபிரகாமில் நீங்கள் பெற்று இருப்பதை விட கிறிஸ்துவில் நீங்கள் பெற்று இருப்பது பெரியதாய் இருக்கிறது.

ஆபிரகாமை பொருத்தமட்டில் இந்த சந்தர்ப்பத்தில் செத்துப்போன உறுப்பிலிருந்து உபயோகமற்ற நுனித்தோலை நறுக்கி எறிவதாய் இருந்தது. இதினிமித்தம் ரோமர் 4ல் அவர் விசுவாசத்தில் வல்லவர் என அழைக்கப்படுகிறார். அவர் இவ்வாறு கூறியிருக்கலாம் "நான் ஒவ்வொருவருக்கும் விருத்தசேதனம் செய்வேன், நானோ கிழவனாகி விட்டேன், விருத்த சேதனம் என்பது எனக்கு சம்பந்தமானதாய் தோன்றவில்லை" எனக்கூறியிருக்கலாம். ஆபிரகாம் அவரது மனைவி சாராளால் ஒரு குமாரனைப் பெறப்போகிறவராய் இருந்தார். தேவன் மரித்து போயிருந்த உறுப்புகளைத் திரும்ப உயிரடையச்செய்கிறவராயும், கர்ப்பம் தரிக்க இயலாத காலத்தில் சாராளின் கர்ப்பத்தை கர்ப்பம் தரிக்கச்செய்கிறவருமாய் இருக்கிறார்.
சாராயின் பெயரும் சாராள் என மாற்றப்பட இருக்கிறது, இப்பெயருக்கேற்றபடி அச்சூழலில் அவள் இராத போதும், அவளுக்கு இளவரசி என அர்த்தங்கொள்ளும் மறுபெயர் சூட்டப்பட்டது.

உண்மையுள்ள ஆபிரகாமிற்கான ஆசீர்வாதங்கள்:

வசனம் 16ல் ஆபிரகாம் மிகவும் நிச்சயமான வாக்குத்தத்தத்தைப் பெற்றுகொள்கிறவராய் இருக்கிறார் இதைக்குறித்து அவர் நகைக்கிறவராய் இருக்கிறார். சாராளாகிய உன் மனைவி கருத்தரிக்கப்போகிறாள் என்றார், ஆபிரகாமோ இஸ்மவேல்தான் தனது வாரிசு என இன்னும் தீர்மானத்துடன் இருந்தார். இந்த நகைப்பானது ஒரு நபர் மிகவும் நன்மையான ஒன்று கைகூடி வரப்போகிறது என்பதை கேள்விப்படும்போது நல்ல நகைப்பாய் இருந்திருக்கலாம்.
ஆபிரகாம் இஸ்மவேலை நேசித்தான் அவனுக்கு இப்பொழுது வயது பதிமூன்று. ஆபிரகாம் இஸ்மவேலை தேவன் ஆசீர்வதிக்கும்படி விரும்பினார். அவர்கள் அனைவரும் முதலில் ஆபிரகாமுடன்

விருத்தசேதனம் பெற்றவர்கள், இஸ்மவேல் அடுத்தபடியாக, அதன்பின்னர் ஆண்மக்கள் அனைவரும் விருத்த சேதனம் பெற்றனர்.

ஈசாக்கு என்பதன் பொருள் நகைப்பு மற்றும் ஆபிரகாம் அந்த பையன் நகைப்பு என அழைக்கப்படுவான் என்றார். தேவன் நித்திய உடன்படிக்கையை ஈசாக்கின் வித்துடன் செய்வதாய் வாக்குத்தத்தம் செய்கிறவராய் இருந்தார். இதுவே சரித்திரம் முழுமையும் யூத குலம் உண்டாயிருக்கும் என்பதற்கான உறுதியாய் இருந்தது. இஸ்மவேலைக் குறித்து தேவன் கரிசனையுள்ளவராய் இருந்து அவனை ஆசீர்வதித்தார், அந்நாளில் கூறப்பட்ட அனைத்தும் வரக்கூடியதாய் இருந்து இன்றைய அளவில் யாவும் நிறைவேறி வருகிறது, காரணம் அவைகள் உறுதியானவை. ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் புத்திரன், ஈசாக்கு ஒரு விசுவாசியாகப்போகிறவன். ஆகார் ஒரு விசுவாசியாய் இருந்தாள் ஆனால் அவள் குமாரனோ விசுவாசியல்ல.

மனித கண்ணோட்டத்திலிருந்து, ஈசாக்கைவிட இஸ்மவேல் நல்ல நபராய் இருந்தார். இதுமுற்றிலும் உண்மை ஏசாவைப் பொறுத்தவரையில், இவன் அவிசுவாசியாய் இருந்து யாக்கோபைவிட நல்ல மனிதனாய் திகழ்ந்தான். எப்படியிருப்பினும் ஒரு நபர் விசுவாசியோ அல்லது இல்லையோ என்பது நித்தியத்தில் எண்ணிப்பார்க்கப் படுகிறது.

இரு மாதங்கள் எதுவும் நிகழவில்லை ஈசாக்கு பிறப்பதற்கு பனிரெண்டு மாதங்களுக்கு முன்னர். ஆபிரகாம் மன அழுத்தத்துடன் இருக்கும் அந்நாட்களில் அவர் அவ்விரண்டு மாதங்களும் அவர் தொடர்ந்து தேவனது வார்த்தையை நம்பப்போகிறாரா? இங்கு விசுவாசத் தந்தை நமக்கிருக்கிறார், அவர் ஆபிரகாம், நமக்கு தைரியம் தந்து உற்சாகம் தருகிறவராய் இருக்கிறார்.

அதிகாரம் 18

கர்த்தர் கிறிஸ்துவுக்கு ஒப்பனையாக மத்தியான வேளையிலே ஆபிரகாமுக்கு இரு தூதர்கள் தரிசனமானார்கள். ஆபிரகாம் அவர்களுக்கு முன்னதாக தலைவணங்கி அவர்களை அங்கு இளைப்பாற வைத்து, அவர்களில் ஏதோ வித்தியாசத்தை அவர் கண்டபடியால், தனிப்பட்ட விதத்தில் அவர்களுக்கு சேவை செய்ய தலைப்பட்டார். ஆபிரகாம் சாராளிடம் சென்று ஒரு கன்றை சமைப்பதற்காக கொடுத்தார். அவர்தாமே அதைக் கொன்று சாப்பிட தயாராக்கினார். இது ஒரு பூரணமான கிழக்கத்திய உபசரிப்பை சித்தரிக்கிறதாய் இருக்கிறது. ஆபிரகாம் உபசரிப்பதில் சிறப்பானவர் இருந்தார்.

கிறிஸ்துவுக்கு ஒப்பானவர் வினவினார், உனது மனைவி சாராள் எங்கே?" சாராள் உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள் என்றார். இதை சாராள் கேட்ட பொழுது அவளுக்குள் நகைப்பு உண்டானது. எனது கணவருடன் மறுபடியும் பால் உறவுகொள்வேனோ? அது எவ்வாறு சாத்தியம் என எண்ணி மறுபடியும் நகைத்தாள். பால் உறவை ஆரோக்கியமான நிலையில்

கணவனும் மனைவியுமாக அனுபவித்தல் திருமண உறவில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

கர்த்தர் மறுபடியும் வினவினார், "சாராள் ஏன் நகைக்கிறாள்?". இதை சாராள் கேட்டபொழுது கூடாரத்திற்குள் பானை உடைகிற சப்தம் கேட்டது, அங்கு வந்திருக்கும் வழிபோக்கர் தனது மனதை அறிகிறவர்களாக இருக்கிறார்ளே என்கிற அதிர்ச்சியினால் கையில் உள்ள மண்பாத்திரம் தவறி கீழே விழுந்தது. கர்த்தருக்கு மிகவும் கடினமான காரியம் என்று ஏதேனும் உண்டோ? - இல்லை.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கும் போது அவரது சித்தம் செய்யும் போது கடினமான காரியம் என்று எதுவும் இருக்க முடியாது. அவருக்குள் இருப்போருக்கு, எல்லா காரியங்களிலும் பரிகாரம் என்பது இருக்கிறதாய் இருக்கிறது. கர்த்தர் அவர்கள் இருவரது பாலுறவு இயலாமையை திரும்ப புதுபித்தார். சாராள் கண்டிப்பாய் ஒருகுமாரனைப் பெறுவாள். சாராள் வெளியே வந்து தான் நகைக்கவில்லை என மறுதலித்தாள், கர்த்தர் மறு மொழியாக அவளது குமாரன் நகைப்பு - ஈசாக்கு என அழைக்கப்படுவான் என்றார்.

வசனம் 12ல் - எனது ஆண்டவருடன் எனக்கு இன்பம் உண்டாயிருக்குமோ? என சாராள் வினவினாள். சாராளுக்கு ஆபிரகாமோடு இருந்த உறவில் முழுமையாய் தன்னை ஆபிரகாமுக்கு தன்னை அற்பணித்து இருந்தாள். 1 பேதுரு 3. வேதாகமம் பெண்கள் கவனத்தி ஈர்த்துக்கொள்கிறவர்கள் என சுட்டிக்காட்டுகிறது, அவர்கள் தங்களது கணவன்மாரிடம் குறைகண்டுபிடிப்பார்கள் எனில் அவர்கள் பிரச்சனைக்குள்ளாகிறவர்களாய் இருக்கிறார்கள். சாராள் நோக்கத்தை நிறைவேற்றும் கருவியாய் இல்லை என்ற போதிலும் அவள் சரியான உறவைப் பெற்றவளாய் இருந்தாள். ஒவ்வொரு முறையும் அவள் ஈசாக்கை அழைக்கும்போது, அவள் எவ்வாறு தனக்குள் நகைத்துக் கொண்டாள் என்பது அவளது மனத்திரையில் வந்து செல்கிறதாய் இருந்தது, நீங்கள் தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை என்பதை நினைவுகூற வேண்டும்.

உபதேசம்

கிறிஸ்தவ வாழ்க்கை

1. தேவன் விசுவாசிகளுடன் திருப்தியோடு இருக்கிறார்
a) சரியான காரியங்களை கேட்பதன் மூலம் (1 இராஜாக்கள் 3:9, 10)
b) வேறு பிரிக்கப்பட்ட வாழ்க்கை வாழ்வதன் மூலம். (எபிரெயர் 13:20, 21)
c) அவரது சித்தத்தை செய்வதன் மூலம் (எபிரெயர் 13:20, 21)
d) அவருடன் ஐக்கியப்பட்டு அவரோடு நடப்பதன் மூலம்.(எபிரெயர்11:5, ஆதியாகமம் 5:24)

e) தேவனைத் துதிப்பதன் மூலம் (சங்கீதம் 69:30, 31)
f) தேவன் பலனளிப்பவர் என விசுவாசித்து அவரில் அமர்ந்து இருத்த்ல் மூலம் (எபிரெயர்11:6)

2. கிறிஸ்தவ வாழ்க்கை நடக்கையை உள்ளடக்கியது.
a) சத்தியத்தில் நடத்தல் (2 யோவான் 4)
b) விசுவாசத்தின் மூலம் ஞானமாய் நடத்தல் (2 கொரிந்தியர் 5:7, கொலோசெயர் 4:5)
c) ஆவியில் நடத்தல் (கலாத்தியர் 5:16, 25)
d) அன்பில் நடத்தல் (எபேசியர் 5:2)
e) புதிதாக்கப்பட்ட வாழ்க்கைக்கேற்ப நடத்தல் (ரோமர் 6:4)
f) அழைக்கப்பட்ட அழைப்புக்கு பாத்த்திரமாய் நடத்த்தல் (எபேசியர் 4:1)
g) கர்த்தருக்குப் பாத்திரமாய் நடத்தல் (கொலோசெயர் 1:10, 1தெசலோனிக்கேயர் 2:12)
h) சீராய் நடத்தல் (ரோமர் 13:13)
i) நற்கிரியைகளை செய்து நடத்தல். (எபேசியர்2:10)
j) வெளிச்சத்தில் நடத்தல் (எபேசியர் 5:8, 1 யோவான்1:7)
k) கிறிஸ்து இயேசுவுக்குள் நடத்தல் (கொலோசெயர் 2:6)
i) ஞானமுள்ளவர்களைப்போல கவனமாய் நடந்து கொள்ளுதல் (எபேசியர்5:15,16)
a) சமய சூழ்நிலைக்கேற்ப நடந்து கொள்ளுதல் (1 தெசலோனிக்கேயர் 4:1)

3. கிறிஸ்தவ வாழ்க்கை புகழ்ச்சிக்குரிய நன்நடத்தையை வளியுறுத்துகிறது:

அ) விசுவாசிகளுக்கு கிறிஸ்துவில் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. (கலாதியர் 5:1), ஆனால் நமது நடத்தை கீழ்கண்டவாறு இருக்கக்கூடாது.
i) பெலவீனருக்கு இடறலாய் இருக்கக்கூதாது. (1 கொரிந்தியர் 8:9);
ii) மாய்மாலம் செய்யக்கூடாது (1 பேதுரு 2:16);
iii) பக்தி விருத்தியை கெடுப்பனவற்றை செய்யக்கூடாது (1 கொரிந்தியர் 10:23);
iv) அடிமத்தனத்துக்கு வழிநடத்தும் பழக்க வழக்கங்களில் ஈடுபடக்கூடாது (1 கொரிந்தியர் 6:12);
v) சுயாதீனத்தை மாம்சத்திற்கு ஏதுவாய் அனுசரிக்கக்கூடாது. (கலாதியர் 5:13);
vi) தங்களது மனசாட்சியை எதிர்க்கக்கூடாது (ரோமர் 14:5).

ஆ)தேவனோடுள்ள நம்முடையத் தொடர்பு:
i) அவருடைய நாமத்தில் செய்தல் (1 தீமோத்தேயு 6:1)
ii) தேவனுக்கு என செய்தல் (கொலோசெயர் 3:23)
iii) அவரது நாம மகிமைக்கென செய்தல் (1கொரிந்தியர்10:31)
iv) அவருக்குப் பாத்திரமாய் இருத்தல் (1 தெசலோனிக்கேயர் 2:12; 2தெசலோனிக்கேயர்1:5)

இ) மற்றவர்களுடன் நமக்குள்ள தொடர்பு:

i) நல்ல முன் மாதிரியுடன் இருக்கவேண்டும். (ரோமர்14:7; 1 தீமோத்தேயு 4:12)

ii) நமது அழைப்புக்குப் பாத்திரமாய் நடந்து கொள்ளவேண்டும். (எபேசியர்4:1)

iii) யோக்கியமாய் நடந்து கொள்ளவேண்டும். (2 கொரிந்தியர் 8:21)

iv) பொல்லாங்காய் தோன்றுகிறவைகளை விட்டு விலகவேண்டும். (1 தெசலோனிக்கேயர்5:22)

v) பிறருக்கு உதவி செய்தல் வேண்டும். (ரோமர் 12:18; 15:2)

vi) தடுக்கிவிழ காரணமாய் இருக்கக்கூடாது (ரோமர்14:13)

vii) ஒருவரின் பெற்றோரை கனப்படுத்துதல் வேண்டும். (கொலோசெயர் 3:20)

viii)அரசாங்கத்தை கனப்படுத்துதல் வேண்டும். (தீத்து 3:1)

ix) அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படக்கூடாது (2கொரிந்தியர்6:14)

x) பிறரை நியாந்தீர்த்தல் கூடாது. (ரோமர் 14:10-13)

xi) நமது நடக்கையினாலே பிறர் தடுக்கிவிழச் செய்யக்கூடாது. (ரோமர் 14:15,21-23)

ஈ) நமது சுயத்தொடர்பு:

i) இச்சைக்கேதுவாய் இருக்கக்கூடாது, சுத்தமானதாய் இருக்கவேண்டும். (1தீமோத்தேயு 5:22; 1 பேதுரு 2:11)

ii) தீட்டுபடக்கூடாது (1 கொரிந்தியர்3:17; தீத்து 1:15)

iii) தன்னை குற்றவாளி என தீர்த்துக்கொள்ளக்கூடாது. (ரோமர்14:22)

iv) நல்ல கிரியைகளை செய்யவேண்டும். (தீத்து 3:8)

4. கிறிஸ்தவ வாழ்க்கை கடின உழைப்பை எதிர்பார்க்கிறது:

a) மற்றவர்களிடத்தில் அன்பு கூறுதல். (கலாத்தியர் 2:20, 2 கொரிந்தியர் 8:8). நம்மைவிட தாழ்வில் உள்ளவர்களுக்கு உதவிசெய்ய ஆர்வம் காட்டவேண்டும், விஷேசமாய் சுவிஷேசத்தை அவர்களுக் கொடுக்கவேண்டும்.

b) பரிசுத்தவான்களை (பிற விசுவாசிகளை) மிகக்கவனமாய் பார்த்துக்கொள்ள வேண்டும் (எபிரெயர் 6:11, 2கொரிந்தியர்7:12, 2 கொரிந்தியர்8:16,17, 2 தீமோத்தேயு 1:17)

c) தேவனின் அடிப்படை சித்தாந்தங்கள், மற்றும் அவரது வாக்குத்தத்தங்களின் மீது மிகவும் ஆர்வத்துடன் அவைகளை சார்ந்துகொள்வது அவசியம். உதாரணமாக யாத்திராகம சந்ததியைப்போல், வாக்குத்தங்களை சார்ந்து இருக்கக்கூடாது. (எபிரெயர் 4:11)

d) நமது அழைப்பை உறுதிப்படுத்துதல் - (2 பேதுரு 1:5, 2 பேதுரு1:10) நாம் கிறிஸ்துவுக்காக ஆர்வத்துடனும், வைராக்கியத்துடனும் சாட்சி பகற வேண்டும்.

e) சரீர ஒற்றுமை (எபேசியர்4:3)சரீர ஒற்றுமையை பேணிக்காப்பதில் வைராக்கியமாய் இருக்க வேண்டும்.

f) தேவனது அங்கீகாரத்தைப்பெற்று இருக்கவேண்டும். (2 தீமோத்தேயு 2:15).நீங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதைக் காட்டுவதில் ஆர்வம் காட்ட வேண்டும்.

g) கலங்கமற்ற வாழ்வைப் பெற்று இருக்க வேண்டும். (2 பேதுரு 3:14)தேவனுடன் நெருங்கி நடந்து தேவையற்ற சோதனைக்குரிய இடங்களில் நம்மை வெளிப்படுத்தாது இருக்கவேண்டும்.

5. கிறிஸ்தவ வாழ்வின் முக்கியத்துவங்கள்:

a) முதல் நபர் - இயேசுக்கிறிஸ்துவுக்கே நாம் எல்லாவற்றைக்கட்டிலும் அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கொலோசெயர்1:16-18

b) முதன்மையாய் பெற்று இருக்க வேண்டியது - தேவனுடைய இராஜ்ஜியம் இது மகாப்பெரிய வரமாய் இருக்கிறது. மத்தேயு 6:33

c) முதலாவது காணிக்கை - தன்னைத்தானே அற்பணிப்பது - 2கொரிந்தியர்8:5

d) முதலாவது மறுதளிப்பு - தன்னைத்தானே மறுதளித்துக்கொள்வது மத்தேயு 7:5

e) முதலாவது ஒழுங்கு - ஜெப ஒழுங்கு - 1தீமோத்தேயு2:1-4

f) முதல் கட்டளை - எல்லாவற்றையும் விட அதிகமாய் தேவனிடத்தில் அன்பு கூறுதால் மத்தேயு 22:37-38

g) முதல் மன்னிப்பு - தேவனுடன் நேரம் செலவளிப்பது கடினமாகக்கருதுதல் மத்தேயு 8:21-2

6. கிறிஸ்தவ வாழ்க்கை அநேக முதலீடுகளைக் கொண்டுள்ளது:

a) முதல் முதலீடு - இரட்சிப்பில் ஒரு விசுவாசி தனது ஜீவனை கர்த்தரிடம் அற்பணித்து அவரை நம்புவது (2 Timothy 1:12)

b) இரண்டாம் முதலீடு - கர்த்தர் தேவனது வார்த்தைகளை விசுவாசியுடன் முதலீடு செய்தல் - போதனைக்கும், படிப்பதற்கும். (2 Timothy 1:12)

c) மூன்றாம் முதலீடு - விசுவாசி தனது பயம், பிரச்சனைகள், மன அழுத்தங்கள் இவைகளை முதலீடு செய்கிறார் (1 Peter 4:19, 5:7, Psalm 55:22)

d) நான்காம் முதலீடு - விசுவாசி சுவிஷேசத்தை அவிசுவாசியுடன் முதலீடு செய்கிறார். (Romans 1:14)

குடும்பம்

1. தேவன் மனுக்குலத்தின் ஆரம்பத்தில் இப்பூமியில் குடும்பங்கள் மற்றும் திருமணம் இவைகளை தொடங்கி வைத்தார். (ஆதியாகமம்2:24).

2. திருமணம் ஒரே மனைவி மற்றும் ஒரே புருஷனையையுடையதாய் இருந்தது. (ஆதியாகமம்2:24). "ஒரேமாமிசம்" என பகுக்கப்பட்டு இருந்தனர். அவர்கள் தாய் தகப்பனை விட்டுப்பிரிந்து தங்கள்து சொந்த வீட்டை தாங்களே அமைத்துக்கொள்ள வேண்டும். (ஆதியாகமம் 2:24; எபேசியர்5:31; மத்தேயு 19:4-5).

3. விபச்சாரம் மற்றும் விவாகரத்து மிக கவனத்துக்குரிய காரியமாக கருதப்பட்டது, இவைகளை பத்து கட்டளைகள் உள்ளடக்கியுள்ளது. (யாதிராகமம் 20:14).

4. புருஷன் குடும்ப தலைவனாயிருக்கிறான். (ஆதியாகமம் 3:16).

a) தன் மனைவிக்காய் புருஷன் மரிக்கவும் சித்தமுள்ளவனாய் இருக்கவேண்டும். (எபேசியர்5:22-23).

b) வீட்டின் தேவைகளை அவன் சந்திக்கவேண்டும். (ஆதியாகமம்3:19; 1 தீமோத்தேயு5:8).

c) அவன் தனது பிள்ளைகளை தேவனுக்கு பயப்படும் விதத்தில் வளர்க்கவேண்டும். (எபேசியர்6:4உபாகமம்6:6,7).

d) தனது பிள்ளைகளை அவன் மனமடிவாக்கக்கூடாது. (கொலோசெயர்3:21).

5. மனைவிகள் தங்கள் புருஷருக்கு அடங்கி நடத்தல் வேண்டும். (ஆதியாகமம் 3:16; எபேசியர் 5:22,23. 1 பேதுரு3:1-6).

a) அவள் வீட்டில் கனப்படுத்தபடக்கூடியவளாய் இருக்கிறாள் (1பேதுரு 3:7).

b) அவள் தனது புருஷனக்குறித்து ஆழ்ந்த ஆசையுடையவளாய் இருக்கிறாள் (ஆதியாகமம்3:16).

6. பிள்ளைகள் தாய், தகப்பனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (எபேசியர்6:1-3; நீதிமொழிகள் 22:15; 23:13).

a) அவர்கள் பெற்றோரை கனப்படுத்தவேண்டும். (எபேசியர் 6:2; 1 தீமோத்தேயு 5:4; யோவான் 19:26).

b) அவர்கள் பெற்றோரை கனப்படுத்தும்போது அவர்கள் நீண்ட ஆயுளைப்பெறுவர். (யாத்திராகமம்20:12).

7. சாதாரண குடும்ப வாழ்க்கை மூன்று வழிகளில், பிதாவாகிய தேவனுக்கு, கிறிஸ்துவுடன் உள்ள உறவில், இணையாக உள்ளது.

a) ஒரே தலைமைத்துவத்தை அடிப்படையாய் கொண்டு இருக்கிறது. (1 கொரிந்தியர் 15:45-50).

i) ஏதேன் தோட்டத்தில் ஆதாமே முதலில் சிருஷ்டிக்கப்பட்டார், ஏவாள் ஆதாமின் விலா எலும்பிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட்டாள். அதாமிலிருந்து ஏவாள் எடுக்கப்பட்டாள். இரண்டாம் ஆதாம் இயேசுக்கிறிஸ்து, அவரிலிருந்து ஒரு ஆவிக்குரிய சந்ததி வரும்.

ii) நான் என் தகப்பனுடைய பிள்ளையாய் இருக்கிறேன் காரணம் அவரது சாயலை நான் அவரிடமிருந்து பெற்று இருக்கிறேன். இதற்கொப்பாக நாம் மறுபடியும் பிறக்கும்போது, நாம் தேவனின் சாயலைப்பெறுகிறோம்.

b)குடும்பம் ஒழுங்குக்கு கீழ்ப்பட்டுள்ளது - (எபிரெயர்12:3-15)

i) நீதிக்குரிய வழிகளில் உங்கள் பிள்ளைகள் வாழ கற்றுக்கொடுப்பது முக்கியம்.

ii) தேவனது சிட்சை அவரது சித்தத்தில் நடக்க நம்மை பயிற்றுவிக்கிறது. அது நமக்கு ஆசீர்வாதங்களை கொண்டுவருகிறது.

iii) பிள்ளைகள் தங்களது பெற்றோரிடமிருந்து ஞானத்தைக்கற்றுக் கொள்ளவேண்டும். .(யாதிராகமம்12:24-28உபாகமம்6:6-25, யோசுவா4:5-8). தேவன் ஞானமுள்ளவர.

c)ஒழுக்க ரீதியாகவும், சட்டரீதியாகவும் குடும்ப நடக்கை இருக்க பெற்றோர் பொறுப்பாளிகளாய் இருக்கின்றனர். நமது சாட்சியுள்ள வாழ்க்கை தேவனை பிரதிபளித்துக் காட்டுகிறது.

8. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எடுத்த கணக்கெடுப்பின்படி, குடும்ப அமைப்பு அத்தேசத்தில் பெலவீனப்பட்டு இருப்பதற்கு எட்டு காரணங்களை கூறுகின்றனர்.

a) உடலுறவு பழக்கத்தை அநேகருடன் வைத்துக்கொள்வது பெருகிவருகிறது.

b) குடும்பத்தலைவர் குடும்பத்தைப்பாதுகாப்பதற்கு பதில் அரசாங்கத்திடம் அதன் பாதுகாப்பு கருதி மாற்றுவது.

c) பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோரிடமிருந்து மாற்றுவது.

d) சுற்றுலாவிற்காக குடும்பமாய் வெளியே செல்லும்பொழுது தொலைக்காட்சிப்பெட்டியுடன் செல்லுதல்.

e) வீட்டில் தயாரிக்கவேண்டியவைகளை, தொழிற்சாலைக்கு மாற்றுதல்.

f) முதியோர்களை வீட்டில் வைத்து பராமரிப்பதற்குப் பதிலாக அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்தல்.

g) கைப்பக்குவத்தில் வீட்டில் தயாரிக்க வேண்டிய உணவு பதார்த்தங்களை சூப்பர் மார்க்கெட் சொசைட்டியில் வாங்கி உண்ணும் பழக்கம் எழும்பிவருகிறது.

h) மதசம்பந்தமான அறிவுரைகளை வீட்டிலிருந்து வெளியே மாற்றுதல்.

விருத்த சேதனம்

1. ஆபிரகாமின் உடன்படிக்கைக்குரிய அடையாளமாய் விருத்தசேதனமானது தேவனால் வடிவமைக்கக்ப்பட்டது. (ஆதியாகமம் 17:10-14).

2. விருத்தசேதனம் சரீரப்பிரகாரமான அறுவைசிகிச்சையாகவும், அதேசமயம் சடங்காச்சார மறைபொருள் கொண்டதாயும் இருக்கிறது. (ரோமர் 2:25).

3. ஒரு யூதனும், முதலில், விருத்த சேதனமின்றி பஸ்காவை ஆசரிப்பது அரியகாரியமாய் இருந்தது. (யாத்திராகமம் 12:48).

4. விருத்தசேதனம் ஆண்பிள்ளையை பிரதிஷ்டை செய்யப்படுவதை குறிக்கிறதாய் இருக்கிறது. இது குழந்தை பிறந்த எட்டாம் நாளில் செய்யப்படுகிறது. மருத்துவ விஞ்ஞானப்படி எட்டாவது நாளில் விருத்த சேதனம் செய்வது மிகவும் சிறந்தது எனக் கண்டுள்ளது. (லேவி. 12:2,3).

5. சபையுகத்தில் சடங்காச்சரமாய் அனுசரிக்கப்படும் விருத்த சேதனம் முக்கியத்துவம் பெறுவது இல்லை, இது போலி நிலை என பலவந்தமாய் கூறுகிறது. (1 கொரிந்தியர் 7:18,19; கலாத்தியர் 5:2,3; எபேசியர் 2:11).

6. கிரியை மூலம் இரட்சிப்பு எனச் சாதிப்பவர்களுக்கு விருத்த சேதனம் செய்வது என வாதிடுகிறவர்களாய் இருக்கிறார்கள். (அப்போஸ்தலர் 15:1,24; கலாத்தியர் 6:12,13).

7. விருத்த சேதனம் யூதர்களை இனம் வாரியாகவும், தேசீய நிலையிலும் பகுக்கிறதாய் இருக்கிறது. (கலாத்தியர் 2:8; கொலோசெயர் 4:11; தீத்து 1:10; எபேசியர் 2:11).

8. இஸ்ரவேலர் எகிப்தில் அடிமைகளாய் இருந்த காலத்தில், அவர்களது ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்ய தவறிவிட்டார்கள். (யாத்திராகமம் 4:24-26).

9. இது தொடர்ந்து அவர்களது வனாந்திர பிரயாணத்திலும் புறக்கணிக்கப்படுகிறதாய் இருந்தது. (யோசுவா 5:4,5).

10. மோசே தனது குமாரர்களுக்கு விருத்தசேதனம் செய்வதை புறக்கணித்து இருந்தார் (யாத்திராகமம் 4:24,25).

11. ஒரு யூதக்குழந்தைக்கு விருத்தசேதனம் செய்வது என்பது இன்றைய அளவில் உள்ள திருச்சபைகளில் ஒரு குழந்தையை பிரதிஷ்டை செய்வதற்கு ஒப்பாய் இருக்கிறது. முதிர்ந்தவர்களுக்கு செய்யப்படும் விருத்தசேதனம் (ஆதியாகமம் 17:24-27) சபையுகத்தில் விசுவாசிகளுக்கு அளிக்கப்படும் ஞானஸ்நானத்தை பகுப்பாய்வதற்கு ஒப்பனையாய் இருக்கிறது.

<u>பாடம் 7 - அதிகாரம் 18-19</u>

கானானியர்கள்

கானானியர் ஏன் அழிக்கப்பட்டனர்? கானானிய மதமானது மிகவும் கெட்டதாயும், பாலுறவை தவறான வழியில் பயன்படுத்தி அதை மதத்தின் வெளித்தோற்றத்தில் பிரகடனப்படுத்துவதாய் இருந்தது. இம்மதம் ஒரேநேரத்தில் பலருடன் பாலுறவுகொள்ளுதல், விபச்சாரம், ஓரினச்சேர்க்கை, மிருகங்களுடன் புணருதல், குழந்தைகளை பலிகொடுத்தல் போன்ற கொடூர பழக்க வழக்கங்களை செயல்படுத்தி வந்தது. பெலிஸ்தியர்களும் கூட இப்படியே இருந்தனர். பண்டைய சரித்திர ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு என்ன நேர்ந்தது எனக்கூறுகிறவர்களாய் இருக்கின்றனர்.

கிரேக்கர்களும் ரோமர்களும், தங்களது அறிவை தவறான வழியில் பயன்படுத்திவந்தனர், அவர்கள் இப்படிப்பட்டவர்கள் மீது தங்களது அருவப்பைக் காட்டினர். கானானியர்கள் உலோகத்தாலான விக்கிரகத்தின் கரங்கள் பழுக்க சூடேற்றப்பட்டநிலையில் தங்களது குழந்தைகளை அதன் மீது எறிவார்கள், இந்நிலையில் அக்குழந்தையின் மரண அலறல் கேட்கப்படும்போது அவர்கள் தளர்ந்துபோன பாலுணர்வு சார்ந்த புணர்ச்சியின் இன்பம் அதிகரிக்குமாம்.

நீங்கள் ஒருவேளை பாலுறவு ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடுபடுகிறவர்களாய் இருப்பீர்களானால், இப்படிப்பட்டகாரியங்கள் உங்களுக்கு முறைதவறி ஈடுபடும் பாலுறவுகள் மூலம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதாய் இருக்கும். இது அவர்கள் அழிக்கப்பட்டதன் ஒரு காரணமாய் இருக்கிறது.

சீர்திருத்தவாதிகள் கூறுவது பழைய ஏற்பாட்டின் தேவன் கோபப்படுகிற தேவனாகவும் புதிய ஏற்பாட்டின் தேவன் அன்பின் தேவனாகவும் இருக்கிறார் என்பர். ஒருவர் இப்படிப்பட்ட ஜனங்களின் கொடுமையான செயல்களை புறிந்துகொள்வார்கள் எனில் அவர்கள் தீமையில் மூழ்கி எழுகிறவர்களாய் இருந்தனர் என்பதையும், அவர்கள் எவ்விதத்திலும் எதற்கும் ஒத்துப்போகாதவர்கள் என்பதை புறிந்துகொள்கிறவர்களாய் இருப்பர். சோதோம் கொமோராவினரின் அட்டகாசமும் அவர்களது அறிவை தவறாய் பயன்படுத்தியவிதமும் கானானியரின் நான்கு தலைமுறைக்கு முன்பதாகவே ஆபிரகாம் வாழ்ந்த நாட்களில் அவர்களுக்கு முடிவைக் கொண்டுவந்தது.

ஆபிரகாம் வாழ்ந்த மம்ரே ஆசகேல் பகுதிகளில் கானானியர் இருந்த பொழுது ஆபிரகாமின் ஊழியத்தினிமித்தம் இவர்கள் மனமாறி இருந்தனர், இக்காலத்தில் இதினிமித்தம் இவர்களது ஒழுக்க சீர்கேடானது உன்னத நிலையை அடையாது இருந்தது. இது யூதர்கள் எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்த போது இவர்களது ஒழுக்கச் சீர்கேடு உன்னத நிலையை எட்டியது. யூதர்கள் எகிப்திலிருந்து திரும்ப வருகிறபோது இவர்களது ஒழுக்க சீர்கேடு மிகவும் சீர்கெட்டு உன்னத நிலையை எட்டியிருந்தது. இதினிமித்தமே வாக்குத்தத்த தேசத்தில் தேவன் யோசுவாவை நோக்கி, கானானியரின் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், மிருகங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் எல்லாவற்றையும் நிர்மூலமாக்கக் கட்டளை கொடுத்தார்.

சோதோமும் கொமோராவும் மற்றவர்களின் பாதுகாப்பிற்காக அழிக்கப்பட வேண்டியதாய் இருந்தது. இந்த அடிப்படை சித்தாந்தமானது யாத்திராகமம் 23:20-24ல் கூறப்பட்டுள்ளபடி மனித வர்க்கத்தின் சில பகுதிகள் மிகவும் தாழ்ந்த நிலைக்கு சென்று மற்றவர்களுக்கு அபாயகரமான நிலையில் இருந்து வந்தது. இப்படிப்பட்ட மக்கள் ஒருகாலகட்டத்தில் தேவனுக்கு, விரோதமாய் முழுவதுமாக கலகம் செய்கிறவர்களாய் காணப்பட்டனர். தேவன் எல்லாவற்றிற்கும் ஒரு வரையறையை வைத்துள்ளார், சாத்தான் இப்பிரபஞ்சத்தின் அதிபதியாய் இருந்து இவ்வுலகை தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்ய தூண்டிவிடுகிறவனாய் இருந்த போதிலும்

இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமானவர் எல்லாவற்றையும் தனது ஆதிக்கத்தில் வைத்துள்ளார். மிகப்பரந்த நிலையில் கலகம் இருந்த போதும் தேவன் எல்லாவற்றையும் தனது ஆதிக்கத்தில் வைத்து இருக்கிறார்.

லோத்தின் மன நிலை:

மதியீன நீதிமானாய் இருந்த லோத்துவிற்கு, அங்கு எல்லாமே தவறாய் நடந்துகொண்டு இருக்கிறது என அறிந்திருந்தும், அவன் அங்கேயே தங்கி இருந்தான். லோத்து அவர்களுடன் வசித்து வந்தான். அவனுக்கு அங்கு எவ்வித சாட்சியும் இல்லாதிருந்தது, அவன் ஒரு அபாயகரமான் இடத்தில் இருந்துவந்தான். விசுவாசிகளாகிய நீங்கள் குறிப்பிட்ட இடங்களை விட்டு விலகியிருத்தல் மிகவும் அவசியம். எந்த இடத்தில் உங்களது சாட்சிக்குரிய ஜீவியம் பாதிக்கப்படுகிறதாய் இருக்கிறதோ அவ்விடம் விட்டு வெளியேறுவது மிகவும் நல்லது.

லோத்து இன்னும் சோதோமின் வாசலில் வீற்றிருக்கிறவனாய் கண்டு, தூதர்கள் அவனை சந்தித்தனர். அவன் பட்டண கவுண்சிலராக அப்பட்டணத்தின் வாசலில் விவாதங்கள் பிரச்சனைகளை சரிசெய்கிறவனாய் இருந்தான். இங்கு நிகழ்ந்தது என்னவென்றால், விசுவாசியானவன் பட்டணத்திற்கு வெளியே சுவிஷேசம் அறிவித்து சோதோமியரால் வேறுபடுத்தப்பட்டவனாய் இருக்கிற நிலையை காட்டுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட ஜனங்களுக்கு சுவிஷேசம் அவசியமாய் இருந்தது சமுதாய செயல்பாடுகள் அல்ல.

அதிகாரம் 18:20-21ல் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஆபிரகாமுக்கு சொன்னார் அவர் சென்று சோதோமியரை பரீட்சித்து, அவர்கள் அழிவுக்கு ஆயத்தமாய் இருக்கிறார்களோ என்று பார்க்கப் போகிறேன், என்றார். அவ்வாறே பட்டணத்திற்குள் சென்று அங்கு அவர்களில் ஒரு நல்ல காரியம் கூட இல்லை எனக் கண்டு கொண்டார்.

இப்பொழுது ஆபிரகாம் கர்த்தருடன் பரிந்து பேசி பேரம் பேசும் நிகழ்ச்சியானது ஆரம்பித்தது. ஆபிரகாமுக்கு சில எண்ணிக்கைகளுக்கு அடுத்த எண்கள் அவரது மனதில் இருந்தது. லோத்துவுக்கு எத்துனை பிள்ளைகள் இருந்தனர், அவர்கள் அனைவருக்கும் திருமணமாகியிருந்தால் எத்துனை பேர் மொத்தம் இருப்பார்கள் என கணக்கிட்டு வைத்து இருந்தார். லோத்துவுடைய குடும்பத்தினர் ஏறத்தாள பத்து பேர் இருக்கலாம் எனக்கணக்கிட்டார். லோத்து சமுதாய செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்தான் இந்நிகழ்ச்சியானது அவன் தீமையுடன் ஐக்கியம் கொண்டாடினான் அத்தீமையானது அவனது குடும்பத்தையே அழிவுக்கு நேராய் வழிநடத்துகிறதாய் இருந்தது.

ஆபிரகாம் கர்த்தரிடம் 10 பேர் இருந்தால் என பேரம் பேசி அதோடு கூட நிறுத்திக்கொண்டார், காரணம் லோத்துவின் குடும்பத்தில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிக்கும் பத்துப்பேர் இருக்கக்கூடும் என்பது அவரது அனுமானம். எப்படியிருப்பினும் லோத்து சோதோமியருடன்

ஒத்துப்போகிறவனாய் இருந்தான் இதினிமித்தம் அவன் தனது குடும்பத்தை இழந்து போகிறவனாய் காணப்பட்டான். அநேக சீர்திருத்தவாதிகள் மெய்க் கிறிஸ்தவர்களாயிருந்து தவறான போதனைகள் நிமித்தம் குழம்பியிருக்கிறார்கள்.

இரட்சிப்பின் வழியை சுட்டிக்காட்டி பிரதாணக்கட்டளைபடி செயல்படுவதை தவிர்த்து, சமுதாய பணிசெய்து, மிக ஆர்வத்துடன் பிசாசுகளின் உலகை மிகவும் நல்ல இடமாக சீர்திருத்தி அங்கிருந்து நேரடியாய் நரகம் செல்ல எத்தனிக்கின்றனர்.

அவர்கள் செயல்படும் எல்லா ப்ராஜக்ட்களும் மதிப்பிற்குரியவைகளாய் இருக்கின்றன. எப்படியிருப்பினும் அவைகள் அனைத்தும் அரசாங்கம் சார்ந்ததாய் இருக்கின்றபடியால் அவர்கள் சுவிஷேசத்தை பிரசிங்கிக்க கூடாது இருக்கிறது, இதினிமித்தம் ஜனங்கள் கிறிஸ்தவம் என்றால் என்ன என்பதை அறியாது இருக்கிறார்கள். இதினிமித்தம் நீங்கள் சட்டவிரோதியான குற்றவாளி தேவனது வார்த்தையின் போதகராய் இருப்பது குறித்து சொல்கிறவர்களாய் இருக்கிறீர்கள். இதைப்போன்று அநேக உதாரணங்கள் உள்ளன.

லோத்து தனது குடும்பம் ஏன் விழுந்து போனது என அறியாது இருந்தான். அது நிகழ்ந்தமைக்குக் காரணம் அவன் தீமையோடு விளையாடி அதோடு ஒத்துப்போகிறவனாய் இருந்து தேவனது வார்த்தைக்கு விலகிச் செல்கிறவனாய் இருந்தான். ஒரு விசுவாசி தீமையோடு ஒத்துப்போவானேயானால் அவன் எல்லாவற்றையும் இழந்துபோகிறவனாகிறான். நீங்கள் ஒருபோதும் தேவனது மற்றும் சாத்தான் கேம்பில் ஒரே நேரத்தில் இருக்க முடியாது.

வசனம் 24-32ல் ஆபிரகாம் பேரம் பேசி 50 முதல் 10 நீதிமான்கள் சோதோமில் இருந்தால் எனக்கேட்டுக்கொண்டது லோத்தின் குடும்பத்தை மனதில் கொண்டாகும். ஆபிரகாம் பயன்படுத்திய அடிப்படைச் சித்தாந்தம் மத்தேயு 5:13ல் ஒரு விசுவாசி பூமிக்கு உப்பாய் இருக்கிறான் என்பதிலிருந்து உருவானதாய் இருக்கிறது.

உப்பு:

பண்டைய உலகில் உப்பு பாதுகாக்கப்பயன்படுகிறதாய் இருந்து வந்தது. ஒரு தேசத்தில் இருக்கும் விசுவாசி ஒரு தேசத்தை பாதுக்காக்கிறவனாய் இருக்கிறான். இதுவே ஆபிரகாம் சோதோமைக் குறித்து பேரம் பேசி தேவனிடம் கேட்டுக்கொண்டதன் பொருளாய் இருக்கிறது. ஒருவேளை 10 விசுவாசிகள் அங்கிருப்பார்கள் எனில் அப்பட்டணம் அழிவைக்காணாது தப்புவிக்கப்படும்.

எப்படியிருப்பினும் மத்தேயு 5ன் மறு பகுதி இவ்வாறு கூறுகிறது, உப்பு சாரமற்று போனால் அதன் உபயோகம் பயனற்றதாய் இருக்கிறது, அது வெளியே கொட்டப்படுவதற்கும் காலால் மிதிக்கப்படுவதுமே அதன்

பயனாய் இருக்கிறது எனக்கூறப்பட்டுள்ளது. பண்டைய உலகில் இது ஒரு தேசம் இராணுவ ஆழுகைக்கு கீழாக இருப்பதை பிரதிபலித்துக்காட்டுவதாய் இருக்கிறது. லோத்து விசுவாசியாய் இருந்து தனது இரட்சகரை இழந்துவிட்டார். அவனது குடும்பத்தினர் யாவரும் அவனது ஒத்துப்போகும் தன்மைக் கண்டு அவனது கர்த்தரை புறக்கணித்து விட்டனர். நாம் விசுவாசிகளாயிருந்து கொண்டு சாரமற்ற உப்பாய் இருக்கிறோமா என கேள்வி கேட்டுக்கொள்ள அவசியமாய் இருக்கிறது.

நமது சாட்சி:

உங்களது பிள்ளைகள் உங்களில் உள்ள விசுவாசத்தைக்கண்டு உங்களைக் கனப்படுத்துதல் வேண்டும், உங்கள் நடத்தை அக்கனத்திற்கு தகுதி வாய்ந்ததாய் இருத்தல் வேண்டும். உங்கள் வீட்டில் உங்களுக்குள்ள சாட்சி மிக முக்கியமானதாய் இருக்கிறது.

நீங்கள் தவறான காரியங்களை செய்துவிட்டு தேவனைக் குற்றப்படுத்தாதிருங்கள், உங்களை நீங்களே பாருங்கள். உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் நிற்கும் உறுதியான ஆதாரம் என்ன என்பதைக் காட்டுங்கள். அவர்கள் உங்களது இரட்சகரை கண்டு அவர் மீது அன்பு வைக்கட்டும். நீங்கள் மாய்மாலக்காரராய் இராதேயுங்கள், பிரச்சனைகளை நீங்கள் எதிர்கொள்ளும் போது அவர்கள் உங்களுடன் இருப்பதை விரும்ப வேண்டும்.

நீங்கள் அதிகமாய் சமுதாய செயல்பாடுகளில் உங்களை ஈடுபடுத்திக்கொண்டு, பலனற்றவர்களாகும்போது, அடிப்படை சித்தாந்தங்கள் என்னவென்பதை ஜனங்கள் இறுதியில் புறிந்து கொள்ளாமற் போவார்கள். நீங்கள் பிரயோஜனமற்ற பணியை செய்தீர்கள் என உங்கள் குடும்பத்தினருடன் உணர வேண்டியிருக்கும். போதகராய் இருக்கும் நீங்கள் லோத்துவைக் குறித்து பிரசிங்கித்து, அநேக நல்ல காரியங்களை உங்கள் சபையினர் புறிந்துகொள்ள வழிநடத்தலாம்.

லோத்துவும் தேவ தூதர்களும்:

வசனம் 19ல் தேவதூதர்கள் சோதோமுக்கு வந்தனர், அவர்கள் பட்டண வாசலின் கதவுகள் அடைக்கப்படப்போகிற மாலைப் பொழுதில் அங்கு வந்து சேர்ந்தனர். லோத்து அவர்களைக் கண்டு அன்று இரவு அவர்கள் தன்னுடைய குடும்பத்தில் தங்கும்படி கேட்டுக்கொண்டான், அவ்வாறு இராத்தங்கி அதிகாலையில் அவர்கள் தங்கள் வழியே செல்லலாம் எனக்கேட்டுக்கொண்டான். தேவதூதர்கள் சொன்னார்கள் "இல்லை வீதியில் இராத்தங்குவோம் என்றனர்".

லோத்து எப்படியோ அவர்களை தனது சொற்படி இணங்கவைத்து தனது வீட்டிற்கு வழிநடத்திச் சென்றான். எபிரேய நிரூபம் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், லோத்து அவர்களைக் கண்டபோது அவர்களது பாதத்தில் விழுந்து பணிந்துகொண்டு, அவர்களை சம்மதிக்கச் செய்தான் காரணம்

இரவில் அங்குள்ள வீதிகள் எவ்வாறு இருக்கும் என்பதை அவன் நன்கு அறிவான். காரணம் நிச்சயமாக அவர்கள் தீமை செய்பவர்கள் அல்லர் ஆனால் சோதோமியர் அவர்களுக்கு நிச்சயமாய் தீங்கு செய்வார்கள் என அறிந்து இருந்தான். லோத்து அவர்களை பத்திரமாய் வீட்டிற்குள் அழைத்து வந்து ஓரினச்சேர்க்கையினர் அவர்களை காணுமுன்னே வீட்டிற்குள் சேர்த்துக்கொள்ளத் தீவிரப்பட்டான். ஒரு விசுவாசி இப்படிப்பட்ட இடத்தில் வசிப்பார் என்றால் ஏதோ தவறு நடக்கிறது என்பது அதன் பொருளாகிறது.

எப்படியிருப்பினும் அவர்கள் நித்திரைக்கு செல்லு முன்னர் சோதோமின் மனிதர்கள் அவ்வீட்டை சூழ்ந்து கொண்டனர். அம்மக்கள் உன்னிடம் வந்த அந்த அந்நியருடன் நாங்கள் பாலுறவு கொள்ளவேண்டும் அவர்களை எங்களிடம் அனுப்பு என பிடிவாதமாய் வீட்டை நெருங்கினர். இங்கு ஒருதேசமே ஓரினச்சேர்க்கைக்காய் வயோதிபரும் இளைஞருமாய் கூடிக்கொண்டனர். இது திரள் கூட்டமாய் ஓரினச்சேர்க்கை பலாத்காரம் செய்ய கூடினவர்களாய் இருந்தார்கள். இது பலாத்காரத்தின் முடிவில் பலாத்காரப்படுத்தப்பட்டவர் மரித்துப் போவர்.

இப்படிப்பட்ட தேசத்தினர் மத்தியில் லோத்து வசித்து வந்தான். இப்படிப்பட்ட மக்களை மறுமலர்ச்சிக்கு நேராய் வழி நடத்துவது என்பது அசாத்தியமான காரியம். இப்படிப்பட்டவர்களுக்கு சுவிஷேசம் அறிவித்தல் வேண்டும், ஆனால் அவர்களுடன் உட்காரவோ, வசிக்கவோ கூடாது. இங்கு லோத்தின் பிரதிக்கிரியை அந்த இச்சை நிறைந்த மனிதருடன் மிக மென்மையாய் இருந்தது. அவன் மனித நன்மையினிமித்தம் தீமையை சந்திக்க தயாராய் இருந்தான். அவர்களுடன் நல்லத் தன்மையுடன் பேசி முயற்சி செய்யப்பார்த்தான் ஆனால் இரட்சிப்படையாத அம்மனிதரோ நல்ல தன்மையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அங்கு தேவைப்படும் ஊழியம் பரிசுத்த ஆவியானவரின் உணர்த்தப்படுகிற ஊழியமே அவசியமாய் இருந்தது. யோவான் 16:8-11.

வசனம் 8ல் லோத்து கூறுகிறான் அவனுக்கு புருஷனை அறியாத இரு கன்னிப்பெண்கள் இருக்கின்றனர் அவர்களைத் தருகிறேன், என்னிடம் வந்த மனிதருக்கு எதுவும் செய்யக்கூடாது எனவருந்தி கேட்டுக்கொண்டான். எவ்வாறு ஒரு தகப்பனாய் இருந்து கொண்டு உங்களது குமாரத்திகளை பாலியபலாத்காரம் செய்து கொன்றுபோட எவ்வாறு ஒத்துக்கொள்ள உங்களால் முடியும். ஒரு தகப்பனாய் இருந்து கொண்டு தன் உயிரைக்கொடுத்தாவது அவர்களுடன் போராடி தனது குமாரத்திகளை காப்பாற்றுவானேயானால் அவனது பெயருக்கு பெருமை உண்டாவதாய் இருக்கும்.

வசனம் 10ல் வெளியே இருந்த லோத்துவை வீட்டிற்குள் தேவதூதர்கள் இழுத்துகொண்டு, சோதோமின் மனிதருக்கு குருட்டாட்டம் பிடிக்கச் செய்தனர், அவர்களது குருட்டாட்டத்திலும் அவர்களிடத்தில் தங்களது வெறித்தனமான இச்சைகளை நிறைவேற்றிக்கொள்ள தொடந்து தேடுகிறவர்களாய் இருந்தனர். தேவதூதர்கள் லோத்துவிடம் அவனது குடும்பத்தைச் சார்ந்தவர்கள் அப்பட்டணத்தில் இன்னும் யாராவது

இருக்கிறார்களா என வினவினார்கள் காரணம் அப்பட்டணத்தின் மீது நடக்க இருக்கும் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கொள்ளும்படியாக அவ்வாறு கேட்டனர். லோத்தின் மற்ற குடும்ப அங்கத்தினர் அந்த எச்சரிப்பை அசட்டை செய்தனர்.

லோத்து தொடர்ந்து அவர்களுடன் ஒத்துப்போய் வாழ்ந்த வருடங்களின் நிமித்தம் விடாய்த்துப்போனான். அவன் தனது சித்தத்தை இழந்து தடுமாறினான், அவனுக்கு பைத்தியம் பிடிக்கத்தொடங்கியது. கர்த்தர் இரக்கமுள்ளவராய் இருந்து அவனையும், அவனது மனைவியையும், இரு குமாரத்திகளையும் சோதோமுக்கு வெளியே கொண்டுபோய் விட்டார்.

தேவன் மாம்சீக விசுவாசியை பாதுகாத்தல்:

லோத்துவை கர்த்தர் மலைக்கு ஓடிப்போக பணித்தார் ஆனால் அவனோ சிறியபட்டணமாகிய சோவாருக்கு செல்லக் கேட்டுக்கொண்டான். அதன் பெயர் "சிறியது" என்பதாகும். அவன் உயிர்தப்ப தனது ஜீவனுடன் சென்றானே அல்லாது மற்ற எல்லாவற்றையும் இழந்து போனவனானான். அவன் சோவாருக்குள் சென்றபோது சூரியன் உதயமாயிற்று. அவன் அங்கு பிரவேசித்த மாத்திரத்தில் அக்கினியும் கந்தகமும் வானத்திலிருந்து அப்பட்டணங்கள் மீது விழுந்து மிகவும் செழிப்பான சமவெளியாய் இருந்த பட்டணங்கள் சவக்கடலுக்குள் மூழ்கிப்போனது.

லோத்தின் மனைவி திரும்பி பார்க்கவில்லை, அவள் திரும்பி பார்த்து அங்கேயே இருந்துவிட்டாள் ஆகையால் இன்றும் அந்த சமவெளியிலே இருக்கிறவளாய் காணப்படுகிறாள். லோத்தும் அவனது இரு குமாரத்திகளும் பத்திரமாய் சோவாருக்கு வந்து சேர்ந்தனர். லோத்துவின் மனைவி சவக்கடலின் ஒரு பகுதியாய் மாறிவிட்டாள். இது தேவனது வார்த்தையை அறியாமல் இருப்பார்களேயானால் மற்றும் தனது உடமை அனைத்தோடும் அவள் செல்ல நினைத்தபடியால் இவ்வாறு ஆயிற்று. ஆபிரகாம் சோதோமை நோக்கிப்பார்த்த போது, அந்த சமவெளி முழுவது ஒரே புகைக்காடாய் மற்றும் அக்கினியாய் தோற்றமளித்தது.

லோத்து இரட்சிக்கப்பட்டதன் காரணம் தேவனது கிருபை மற்றும் ஆபிரகாமின் வேண்டுதலுக்குரிய மறுமொழியாய் இருந்தது. தேவன் ஆபிரகாமின் வாஞ்சையை நிறைவு செய்தார் ஆனால் அவரது விண்ணப்பத்தை புறக்கணித்தார். சோதோம் அழிக்கப்பட்டு லோத்து இரட்சிக்கப்பட்டான். தேவன் உங்களது ஜெபத்தை கனப்படுத்துகிறவராய் இருக்கிறார். கிறிஸ்தவர்களான நீங்கள் உப்புள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். தேவனுடன் நெருங்கியிருக்கப்பழகுங்கள், அப்பொழுது உங்களது ஜெபம் வல்லமையுள்ளதாய் இருக்கும். காலையில் நீங்கள் எழுந்து பார்க்கும்பொழுது உங்கள் ஜெபத்திற்கான மறுமொழி புகையாய் எழும்பும் அழிவைக் காண்கிறதாய் இருக்கும், தேவன் தனது நோக்கங்களுக்காய் செயல்படுகிறவராய் இருக்கிறார். எல்லா காரியங்களும் தேவனால் அவரது மகிமைக்காய் செய்துமுடிக்கப்படுகிறது.

நீங்கள் வளரும்போது தேவனது வாஞ்சகள் என்னவென்பதை கண்டுகொள்வீர்கள்.

லோத்து சோவாரில் அதிக நாட்கள் தங்கவில்லை. விரைவில் மூவரும் அவர்களுக்கு காண்பிக்கப்பட்ட மலைக்குச் சென்று அங்கு ஒரு குகையில் வாசம் செய்தனர். நீங்கள் துன்மார்க்கருடன் ஒத்துப்போவீர்களானால், துன்பங்கள் வரும்போது உங்களுக்கு பெலன் இராது. உங்கள் குடும்பத்தினருக்கும் அல்லது உடன்பணி புறிவோருக்கும் சுவிஷேசத்தை அளிக்க தவறியிருப்பீர்களானால்உங்கள் சூழலை மறுபரிசீலனை செய்துகொள்ளுங்கள். நீங்கள் ஒருவேளை தவறான ஸ்தானத்தில் இருக்கலாம். உங்கள் நேரத்தை வீணடிக்காதீர்கள்.

உபதேசங்கள்:

ஜெபம்

1. தேவன் கொடுக்கிறவர் என்பதை நாம் அறிந்து இருக்கலாம், ஆனால் நாம் அவருடன் சரியான தொடர்பு ஏற்படுத்திக்கொண்டால்தான் அவர் கொடுப்பதை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

a) ஜெபம் என்பது ஒரு விசுவாசி தேவனுடன் தொடர்பு கொள்ளும் வழிமுறையாய் இருக்கிறது.

b) பரிசுத்த வேதாகமம் தேவன் மனிதனுடன் தொடர்புகொள்ளும் வழியாய் இருக்கிறது.

2. ஜெபத்தில் அடங்கியுள்ள வாக்குத்தத்தங்கள்:

a) மத்தேயு 21:22 விசுவாசத்துடன் நாம் கேட்கவேண்டும்.

b) மத்தேயு 18:19 குழுவாய் ஜெபித்தலின் வல்லமை.

c) சங்கீதம் 116:1,2. தேவன் எப்பொழுதும் நமது ஜெபத்தை கேட்கிறவராய் இருக்கிறார்.

d) ஏசாயா 65:24 நாம் ஜெபிக்கும்பொழுது தேவன் பதில் அளிப்பவராய் இருக்கிறார்.

e) மத்தேயு 7:7 நாம் ஜெபிக்க கட்டளை பெற்று இருக்கிறோம்.

f) யோவான் 14:13-14 அவரது நாமத்தினால் நாம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம்.

g) பிலிப்பியர் 4:6 ஜெபம் நன்றி செலுத்துதலுடன் இருக்க வேண்டும்.

h) 1 தெசலோனிக்கேயர் 5:17 நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.

i) எபிரெயர் 4:16 நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டைக்கு வர முடியும்.

3. ஜெபம் நான்கு பகுப்பாய் பிரிக்கப்படுகிறது:

a) பாவங்களை அறிக்கை செய்தல் (1 யோவான்1:9).

b) நன்றி செலுத்துதல் (1 தெசலோனிக்கேயர் 5:18).

c) மற்றவர்களுக்காய் பரிந்து பேசுதல் (எபேசியர் 6:18).

d) ஒருவரின் சுயத்தேவைகளுக்காய் விண்ணப்பித்தல் (எபிரெயர் 4:16).

4. ஜெபத்தின் வல்லமை:

a) தனிப்பட்ட நிலையில் - எலியாவும் சர்வாங்க தகனபலியும். (1 இராஜாக்கள்18:36-39).

b) கூடி ஜெபித்த பொழுது - சிறைச்சாலையிலிருந்து பேதுரு விடுவிக்கப்படுதல். (அப்போஸ்தலர்12:1-18).

5. பதிலளிக்க இயலாத ஒரு ஜெபம், நமது கர்த்தர் சிலுவையில் ஜெபித்த ஜெபம். (சங்கீதம் 22:1-18).

6. ஜெபம் யாரை நோக்கி ஏறெடுக்கபட வேண்டும்?
a) நேரடியாய் பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும். - (மத்தேயு 6:5-9).
b) குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஏறெடுக்கப்பட வேண்டும். - (எபிரெயர் 7:25).
c) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் ஏறெடுக்கப்பட வேண்டும்.- (ரோமர் 8:26-27).
குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் நமக்காய் பரிந்து பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

7. ஜெபம், விண்ணப்பம் மற்றும் நமது வாஞ்சை என இரண்டாய் பிரிக்கலாம்.
a) விண்ணப்பம் - நீங்கள் எதைக்கேட்கிறீர்கள்? (உ.ம். ஒரு புதிய வாகனம்)
b) வாஞ்சை - விண்ணப்பத்திற்குப் பின் இருப்பது வாஞ்சையாகும் (உ.ம். மகிழ்ச்சி ஏனென்றால், நீங்கள் புதிய வாகத்தை பெற்று இருக்கிறீர்கள்)

8. ஜெபம் நான்கு விதங்களில் இணைந்து செல்லக்கூடும்.
a) பதிலளிக்கப்பட்ட விண்ணப்பம் - வாஞ்சைகள் பதிலளிக்கப்படாத நிலை சங்கீதம் 106:15 - யாத்திராகம சந்ததிக்கு காடைகள் அளிக்கப்பட்டது. 1 சாமுவேல் 8:5 - இஸ்ரவேலை ஆழும்படியான ராஜா கொடுக்கப்பட்டது.
b) விண்ண்ப்பங்கள் பதில் அளிக்கப்படவில்லை - வாஞ்சைகள் பதிலளிக்கப்பட்டன. ஆதியாகமம் 18:23 சோதோம் பாதுக்காக்கப்படுதல். 2 கொரிந்தியர் 12:7 - பவுலின் சரீரத்திலிருந்து முள் அகற்றப்பட ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பம்.
c) விண்ணப்பங்கள் பதிலளிக்கப்பட்டன - வாஞ்சைகளும் பதில் அளிக்கப்பட்டன. 1 இராஜாக்கள் 18:36-37 - எலியா பலிசெலுத்த அக்கினிக்காய் விண்ணப்பித்தல். லூக்கா 23:42 சிலுவையில் தொங்கின கள்ளனின் ஜெபம். இவ்வகை ஜெபமே பூரண ஜெபமாய் கருதப்படுகிறது.
d) விண்ணப்பங்கள் பதில் அளிக்கப்படவில்லை - வாஞ்சைகளும் பதிலளிக்கப்படவில்லை இவ்வறு பதில் இல்லாமைக்கு ஒன்பது முக்கியமான காரணங்கள் உண்டு.

9. பதில் அளிக்கப்படாத ஜெபத்திற்கான காரணங்கள்:
a) விசுவாசக்குறைவு. (மத்தேயு21:22).

b) சுய விருப்பங்களுக்காய் ஜெபித்தல் (யாக்கோபு4:3).
c) அறிக்கை செய்யப்படாத பாவங்கள் (சங்கீதம் 66:18).
d) மனதுருக்கமற்ற நிலை (நீதிமொழிகள்21:13).
e) பெருமை மற்றும் சுய நீதி (யோபு 35:12-13).
f) ஆவியானவரின் நிறைவு இல்லாமை (எபேசியர்6:18).
g) கீழ்ப்படியாமை (1 யோவான் 3:22).
h) தெய்வீக சித்தத்தில் இல்லாது இருப்பது (1 யோவான் 5:14).

பதிலற்ற ஜெபத்திற்கு பொதுவான காரணங்கள், ஏதோ ஒரு வகையில் பாவம் வாழ்வில் இருப்பதாகும், அறிந்த பாவங்களை 1 யோவான்1:9ன் படி, அறிக்கை செய்வதன் மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வு காண இயலும்

10. பரிந்து பேசும் ஜெபம்:

இப்படிப்பட்ட ஜெபம், ஜெபத்தின் நான்கு பகுப்பில் ஒன்றாய் விளங்குகிறது.
1. பாவங்களை அறிக்கை செய்தல்
2. நன்றிசெலுத்துதல் 3. பரிந்து பேசி ஜெபித்தல் 4. சுயத்தேவைகளுக்காய் ஜெபித்தல்.

a) பரிந்து பேசும் ஜெபத்தின் வல்லமை 1 இராஜக்கள்18:42-46ல் போதிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை சித்தாந்தத்தை யாக்கோபு 5:16-18ல் காண்கிறோம்.

b) ஜெபத்தில் மேற்கொள்ளும் வல்லமையை அப்போஸ்தலர் 12 ம் அதிகாரத்தில் காட்டப்பட்டுள்ளது.

c) அவிசுவசிக்காய் பரிந்து பேசும் ஜெபம் (ரோமர் 10:1).

d) அறிப்படாத விசுவாசிக்காய் பரிந்துபேசும் ஜெபம் (கொலோசெயர்1:3-11).

e) அறியப்பட்டுள்ள விசுவாசிக்காய் பரிந்துபேசும் ஜெபம் (எபேசியர்1:15-23).

11. உண்மையான கர்த்தரின் ஜெபம். யோவான் 17 ம் அதி.

a) உம்முடைய குமாரன் உம்மை மகிமைபடுத்தும்படி நீர் உம்முடைய குமாரனை மகிமைபபடுத்தும் (வச. 2 cfபிலிப்பியர் 2:9-11).

b) உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப் படுத்தும்.(வச. 5)

c) உலகம் மற்றும் தீமை இவைகளினின்று விசுவாசிகள் பாதுகாக்கப்பட.(வச.11, 15)

d) விசுவாசிகளின் பரிசுத்தத்திற்காக (வச. 17)

e) விசுவாசிகளின் ஆவிக்குரிய ஒற்றுமைக்காக (வச. 21)

f) உலகம் விசுவாசிக்கத்தக்கதாய் (வச. 21).

g) விசுவாசிகள் பரலோகில் அவருடனிருந்து அவரைக்காணவும், அவரது மகிமையை பகிர்ந்து கொள்ளவும் (வச. 24)

உப்பு

1. உப்பானது பாதுகாப்பளிப்பதாயும் நித்திய ஜீவனைக்குறித்து பேசுகிறதாயும் இருக்கிறது.

2. உப்பானது சுவை தரக்கூடியதாய் இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவனால் வடிவமைக்கப்பட்ட வாழ்வின் உயர்வைக்குறித்து இது பேசுகிறதாய் இருக்கிறது.

3. உப்பானது புளித்தமாவிற்கு எதிர்மறையாய் இருக்கிறது. புளித்தமா கறைப்படுத்துகிறது, உப்பு பாதுகாக்கிறதாய் இருக்கிறது.

4, விசுவாசி பூமியில் இருக்கும்பொழுது அவன் பூமிக்கு உப்பாய் இருக்கிறான் மத்தேயு 5:13. விசுவாசிகள் ஒரு தேசத்தில் வசிக்கும்பொழுது, அத்தேசத்திற்கு அவன் பாதுகாப்பளிப்பவனாய் இருக்கிறான், உப்பானது காணக்கூடாத பாதுகாப்பளிக்கும் ஒன்றாய் இருக்கிறது. ஜனங்கள் தேவனைவிட்டு விலகிச்செல்வார்களேயானால், தேசம் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

5. உடன்படிக்கையின் உப்பு - பண்டைய உலகில் இருவர் ஒருவருடன் ஒருவர் ஒப்பந்தம் செய்துகொள்ளும்போது இருதரப்பினரும் உப்பைத் தின்று பின்னர் ஒப்பந்தத்திற்கு முத்திரையிடுவர். உப்பைத் தின்பது இரட்சிப்பு பெற்றுக்கொள்வதை விவரிக்கிறதாய் இருக்கிறது.

6. பண்டைய உலகில் உங்கள் விருந்தினர் உங்களுடன் உப்பைத் தின்பார் எனில், அந்நபர் உங்களோடு இருக்கும் பரியந்தம் அவருக்கு பாதுகாப்பளிக்கிறதற்கு உத்திரவாதம் அளிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள்.

லோத்து - மாம்சீகம்

1. லோத்து ஆபிரகாமின் சகோதரனின் குமாரனாய், ஊர் என்னும் பட்டணத்தை விட்டு வெளியேறிய ஆபிரகாமுடன் புறப்பட்டு வந்தவன் (ஆதியாகமம் 11:31). அவனது பெயரின் பொருள் "இரகசியமாய் சுயத்தைத் தேடுகிறவன்" "secret self-seeking". அவன் தனது பெயருக்கு பொருந்து வகையில் வாழ்ந்தான்.

2. ஆபிரகாமும் லோத்தும் மிகவும் ஐசுவரியவான்களாகி, அவர்களது மிருக ஜீவன்களின் பெருக்கம் அவர்கள் ஒருமித்து வாசம் பண்ணக்கூடாத அளவுக்கு பெருகி, அவர்களது சம்பத்தை பூமி தாங்கக்கூடாததாய் இருந்தது. (ஆதியாகமம் 13:6) இதினிமித்தம் ஆபிரகாம் மற்றும் லோத்து இவர்களது மந்தைமேய்ப்பவர்களிடையே வாக்குவாதம் உண்டானது (ஆதியாகமம் 13:7). இதினிமித்தம் ஆபிரகாம் சமரசம் பண்ண முற்பட்டார்.(ஆதியாகமம் 13:8). இப்பொழுது ஆபிரகாம் லோத்துவுக்கு மேய்ச்சலுக்கு செழிப்பான இடத்தை தெரிந்துகொள்ள முதல் தருணத்தை அளித்தார். (ஆதியாகமம் 13:9).

லோத்து யோர்தான் சமவெளியை ஆய்வு செய்து, சோதோமுக்கு அருகான செழுமை நிறைந்த பச்சை புல்வெளியை தனக்காய் தெரிவு செய்தான். (ஆதியாகமம்13:11).

ஆபிரகாம் கர்த்தருடன் தான் இருக்க தெரிவு செய்துகொண்டார். லோத்து சுயநலவாதியாகவும் சுயத்தை மையமாய் கொண்டு வாழ தெரிந்து கொண்டமையால் இது அவனது வீழ்ச்சிக்கு காரணமாய் அமைந்தது. ஆபிரகாம் தேவனை சார்ந்துகொண்டு முன்செல்கிறவராய் இருந்தார்.

<u>அடிப்படைக் கோட்பாடு:</u> உங்களது வாழ்வை கர்த்தரது கையில் அற்பணித்து இருப்பீர்களானால் நீங்கள் ஒருபோதும் ஏமாந்து போகமாட்டீர்கள் அல்லது தவறிப் போகமாட்டீர்கள். நீங்கள் தேவனை தெரிவு செய்ய வைப்பீர்களானால், நீங்கள் ஒரு போதும் எதையும் இழந்து போகமாட்டீர்கள்.

3. லோத்து சோதோமில் நியாதிபதியாய் மாறினான். இது "அவன் ஒலிமுக வாசலில் அமர்ந்திருந்தான்" என்கிற சொற்றொடர் மூலம் அறிந்து கொள்ளமுடிகிறது. (ஆதியாகமம் 19-.1). அவன் அந்நாட்களில் பூமியிலேயே மிகவும் கீழ்த்தரமான நிலைக்குச் சென்றிருந்த பட்டணத்தை விட்டு வேறுபடுத்த இயலாதவனாய் வாழ்ந்துவந்தான்.

4. லோத்து மாம்சீகத்துக்குரிய விசுவாசியாய் இருந்ததற்கு பலவிதமான குணாதிசயங்கள் ஆதியாகமம் 19 ம் அதிகாரத்தில் காண்பிக்கப்படுகின்றன.

a) அவன் நித்தியத்தைக்காட்டிலும் நேரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கிறவனாய் இருந்தான். அவன் திரும்ப உருவாக்கப்படுதலை [regeneration] விட மறுமலர்ச்சிக்கு [reform] (social gospel). அதிக முக்கியத்துவம் அளிக்கிறவனாய் இருந்தான்.
இன்றைய அளவில் அநேக ஸ்தாபனங்கள் திரும்ப உருவாக்கப்படுதலை [regeneration] விட மறுமலர்ச்சி சார்ந்த [social gospel] பிரசங்கங்களையே அதிகமாய் பிரசிங்கிக்கின்றனர். ஒவ்வொரு முறையும் மனிதன் இவ்வித முயற்சிகளை மேற்கொள்ளும் போது அவன் விழுந்துபோகிறவனாய் இருக்கிறான் உ.ம். கம்யூனிஸம். மனிதன் இவைகளை தேவன் செய்ய அனுமதிக்கும் போது அங்கு உண்மையான எழுப்புதல் மற்றும் பெரிய அளவில் செழிப்பு உருவாகிறதாய் இருக்கிறது. தேவன் தனிப்பட்ட நபருக்கு இவ்வகையான அழுத்தத்தை தருகிறவராய் இருக்கிறார்.

b) ஐக்கியத்திற்கு வெளியே ஒரு விசுவாசி மகிழ்ச்சியற்ற வீட்டினரையும், மிகவும் ஏழ்மையான சமுதாய வாழ்வையும் உடையவனாய் இருக்கிறான். (13:2,3). தூதர்கள் அவனுடன் தங்க விரும்பவில்லை.

c) ஐக்கியத்திற்கு புறம்பே இருக்கும் விசுவாசி கடமை உணர்வை குறித்து அக்கரையற்றவனாய் இருக்கிறான். மிகவும் தாழ்ந்த நிலையில் கடமையை நிறைவேற்றுவது, தாழ்ந்த நிலையில் உள்ள கிறிஸ்தவத்தையும் அது ஸ்தாபிக்கப்பட்ட விதத்தையும் காட்டுகிறதாய் இருக்கிறது. (13:5-9). லோத்து

சோதோமின் மனுஷரை "சகோதரரே" என அழைக்கிறான். - அவர்கள் அவிசுவாசிகளாய் இருந்தும் இவனுக்கு அவர்கள் சகோதரர்களாய் இருந்தனர்.

<u>அடிப்படைக் கோட்பாடு:</u> விசுவாசிகள் ஐக்கியமின்றி இருப்பார்களேயானால் அவர்கள் அவிசுவாசிகளை பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

d) ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் ஒரு விசுவாசி, அவிசுவாசியுடன் சாட்சியின்றி இருக்கின்றனர். (13:14).

e) ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் விசுவாசி சிட்சிக்கப்படுகிறார் ஆனால் நியாயந்தீர்க்கப்படுவதில்லை. (13: 15-17, ரோமர் 8: 1, எபிரெயர் 12:6).

f) ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் விசுவாசி பயத்தினிமித்தமும், கவலையினிமித்தமும் மனோரீதியாக பாதிப்புக் குள்ளாகிறார். (13:18,19).

g) .ஐக்கியத்திற்கு வெளியே இருக்கும் விசுவாசிக்கு எவ்வகையான பாவமானாலும் அதை எதிர்க்கும் திறனை இழந்து விடுகிறார். (13:31-36). இப்படிப்பட்ட காரியங்கள் லோத்துவை குடித்து வெறித்து மற்றும் தனது சொந்த மகள்களுடன் பாலுறவு கொள்ளும்படியான பாவங்களை செய்ய வைத்தது.

<u>பாடம் 8 - அதிகாரம் 19,20</u>

முன்னுரை

இது ஆபிரகாம் லோத்து இவர்களிடையே முன்னும் பின்னுமாகச் செல்கிறதாய் இருக்கிறது. இந்த அதிகாரத்தின் இறுதியில் ஆபிரகாமுக்கு என்ன நிகழ்ந்தது என்பது லோத்துவுக்கு என்ன நிகழ்ந்தது என்பதற்குரிய தவறான வியாக்கியானமாய் இருக்கிறது.

நீண்ட காலமாய் மாம்சீக சிந்தையுடன் வாழ்ந்த லோத்து மற்றும் அவனது குமாரத்திகள் சிந்தை சிதறடிக்கப்பட்டது, அவர்கள் நிலையற்றத்தன்மையுடன் காணப்பட்டார்கள் அல்லது உபதேசத்தை விட்டு வழிவிலகி தேவனது வார்த்தைக்கு முக்கியத்துவம் அளிப்பதிலிருந்து தவறிப்போனார்கள். அவர்கள் முற்றிலுமாய் தேவனது வார்த்தையில் உள்ள விசுவாசத்திலிருந்து வழுவிப்போனார்கள்.

நரம்புத்தளர்ச்சியடைந்த ஒருவருக்கு [மனோரீதியல் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு] நீங்கள் போதக ஊழியம் செய்ய நேர்ந்தால், அவர்கள் தன்னையே மையமாய் கொண்டவர்களாய் இருப்பார்கள், ஒரே காரியம்

நீங்கள் செய்யலாம், தூதர்கள் லோத்துவிற்கு என்ன செய்தார்களோ அதையே இப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் செய்யலாம். அவர்கள் லோத்துவைப் பார்த்து அமைதியாய் இருக்கக்கூறினர், மற்றும் சிலகாரியங்களை செய்யும் படி பணித்தனர், இவனது காரியத்தில் அவனை சோதோமை விட்டு வெளியேறும்படி கூறினர்.

நீங்கள் மனோரீதியில் பாதிக்கப்பட்டவர்களுக்கு திரும்ப வாருங்கள் என்றுகூட சொல்லவேண்டும். நீங்கள் இவர்களுடன் காரணாகாரியங்களுடன் செயல்படுதல் கூடாத காரியம். லோத்து இந்நிலையில் அவனது கப்பல் மூழ்கிப்போன நிலையில் காணப்பட்டான், தேவதூதர்கள் அவனுக்கு ஒரு கட்டளை கொடுத்தனர். லோத்து செய்வதறியாது மற்றும் பயத்துடனும், திகிலுடனும் இருந்தான். இவன் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு தேவையான இரு அடிப்படை காரியங்களில் தவறியிருந்தான், ஒன்று பாவ அறிக்கை செய்தல், மற்றொன்று விசுவாசத்தில் ஒய்வுபெறுதல்.

சோதோம் கொமோராவின் மீது தேவனது நியாயத்தீர்ப்பு:

தேவதூதர்கள் லோத்துவிற்கு சோதோமை விட்டு சோவாருக்கு "சிறிய பட்டணத்திற்கு" செல்ல துரிதப்படுத்தினர், கிறிஸ்தவர்கள் கிருபையிலும், கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். நீங்கள் உங்கள் சிந்தையில் வளருதல் வேண்டும் ஆனால் சிறு குழந்தையைப் போல தேவனை நம்புதல் வேண்டும். தேவதூதர்கள் அவன் கேட்டுக்கொண்டபடி சிறியபட்டணமாகிய சோவாருக்குள் சென்று சேரும் வரை அழிவை தடுத்துக்கொண்டிருந்தனர். சவக் கடலாகிப்போன சோதோமின் மதிப்பு இப்பொழுது எங்கே போயிற்று?

லோத்தின் மனைவி நின்று பின்திரும்பிப் பார்த்து அங்கேயே நின்றுவிட்டாள் காரணம் அப்பட்டணத்தை அவள் வெகுவாய் நேசித்தாள். லோத்து இப்பட்டணத்தாரின் தீமைகளுடன் ஒத்துப்போய் வெகுகாலமாய் ஜீவித்து வந்தான், அவனது குடும்பம் அத்தீமைகளை தீமைகள் என அறியாது இருந்தது. அவனது இருகுமாரத்திகளும் இன்னும் கன்னிப்பெண்களாய் இருந்தும், அவர்களைப்பார்ப்பதற்கு புறஜாதிய பெண்களைப் போல இருந்தனர், அவர்களைக் குறித்து சிந்திக்கும் போது அவர்கள் அவிசுவகளைப் போல இருந்தனர்.

அவர்கள் தீமையினால் முற்றிலும் சூழப்பட்டிருந்தனர் மற்றும் லோத்து அந்த சூழலில் மிகவும் அவர்களுடன் எல்லாவிஷயங்களிலும் ஒத்துப்போய் இருந்தும், அந்நாட்கள் வரை இவனோடு இவனது குடும்பத்தினரோடு எவ்வித பாலுறவு ஒழுக்கக்கேடுபாடுகளை சோதோமியர் செய்யாது இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆபிரகாமும் லோத்துவும் இங்கே பெரிய முறண்பாடுள்ளவர்களாய் காணப்படுகின்றனர். நீங்கள் பயத்துடன் ஓடுவீர்களானால், நீங்கள் தேவனிடத்திற்கு ஓட மாட்டீர்கள் உங்களது பயம் தொடர்ந்து உங்களில் இருக்கும்.

சோதோம் கொமோராவின் முடிவு மிகவும் பயங்கரமானதாய் இருந்தது, அக்கினி, கந்தகக்கற்கள் மகா பெரிய சப்தம், இவைகளுடன் காணப்பட்டது. லோத்து மனந்திரும்பவில்லை மற்றும் தனது பாரத்தை கர்த்தர் மீது வைக்கவில்லை. கவலை ஒரு பாவமாய் இருக்கிறது. லோத்து தனது இரு குமாரத்திகள் தவிர எல்லாவற்றையும் இழந்து தவித்தார். கிறிஸ்துவுக்குள் வாழ்வது மற்றும் கிறிஸ்துவுடன் வாழ்வது மற்றும் கிறிஸ்துவுக்காய் வாழ்வது மிக மிக முக்கியமானதாய் இருக்கிறது

வசனம் 27 மற்றும் 28ல் ஆபிரகாம் காலையில் எழுந்து என்ன நிகழ்ந்துகொண்டு இருக்கிறது எனப்பார்த்தார் மற்றும் அவர் நம்பிக்கை இழந்தார். அவர் தேவன் தனது ஜெபத்திற்கு மறுமொழி கொடுக்கவில்லை என சிந்திக்கலானார்.

அவர் பார்த்த பொழுது அநேகமாயிர ஹெக்டேர் நிலப்பரப்பானது அழிந்துபோய் அக்கினியும் புகையும் சூலையிலிருந்து வெளிவருவது போல வெளிவந்து கொண்டு இருந்தன. ஆபிரகாம் சிந்திக்கத்தொடங்கினார் ஒருவரும் தப்பியிருக்க முடியாது. எப்படியிருப்பினும் லோத்து தப்பித்துக்கொண்டார். மோசே இத்தகவலை நமக்கு தந்திருக்கிறார் ஆனால் ஆபிரகாமுக்கு இச்சந்தர்ப்பத்தில் அது தெரியாது.

ஜெபம்:

ஜெபத்தில் நமக்கு விண்ணப்பங்கள் உண்டு மற்றும் விருப்பங்கள் உண்டு. ஆபிரகாமின் விண்ணப்பம் அப்பட்டணத்தில் 10 நீதிமான்களிருந்தால் அப்பட்டணத்தை அழிக்காமல் விட்டிருக்க வேண்டிக்கொண்டான், அவனது வாஞ்சை தனது சகோதரினின் குமாரனாகிய லோத்து மற்றும் அவனது குடும்பம் அப்பட்டணத்தில் பாதுகாக்கப்படவேண்டும் என்பதாய் இருந்தது. அவரது வாஞ்சைக்கு பதில் கிடைத்தது, ஆனால் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. லோத்துவின் மனைவி ஒரு விசுவாசியாய் இருந்தாள் அவள் இரட்சிப்படைய வேண்டியதாய் இருந்தது ஆனால் அவள் கீழ்ப்படிய மறுத்துவிட்டாள்.

விண்ணப்பம் மற்றும் வாஞ்சை குறித்த விஷயங்களில் மிக முக்கியமான காரியம் கிரகிக்க வேண்டியது என்னவெனில் நீங்கள் மிக நேர்மையாய் ஒரு காரியத்திற்காய் ஜெபிக்கும்போது, தேவனது பதில் "இல்லை" என்றும் அதே சமயம் "ஆம்" என்றும் இருக்கிறது அது உங்களது வாஞ்சைகளை உங்களுக்களிப்பதற்காக இருக்கிறது.

உதாரணமாக உங்கள் ஜெபம் உங்கள் சரீர வியாதியிலிருந்து குணமாகி தேவனை சேவிப்பதற்காய் இருக்கலாம். தேவன் உங்கள் வியாதியை குணமாக்காமல் இருக்கலாம், நீங்கள் அவ்வியாதியுடன் புதிய வழியில் அவரை சேவிப்பதற்காய் அவர் அவ்வாறு செய்திருக்கலாம். ஆபிரகாம் லோத்தைப்போலல்லாது இருக்க கற்றுக்கொண்டார்.

தகாத உறவு:

வசனம் 30ல் லோத்து சோவாரை விட்டு வெளியேறி தனது இருகுமாரத்திகளுடன் தேவதூதர்கள் சொன்ன மலையில் ஒரு கெபியில் சென்று தங்கினான். முதலில் அம்மலையில் சென்று தங்குவதற்குப் பயந்து அச்சிறிய பட்டணத்தில் சென்று குடியேறினான், ஆனால் தற்போது அச்சிறிய பட்டணமாகிய சோவாரில் தங்க பயந்து தேவ தூதர்கள் சொன்ன அம்மலைக்கே சென்று தங்கினான். இது எவ்வித பொருளையும் தருகிறதாய் இல்லை, இதைக்குறித்து எவ்வித உபதேசத்தையும் உருவாக்க உங்கள் மனதில் இடங்கொடாதேயுங்கள்.

இரு குமாரத்திகளும் ஒருவரோடு ஒருவர் சொல்லிக்கொண்டனர், நமது தகப்பன் வயது சென்றவர், நம்முடன் பாலுறவு கொள்ள ஒருவரும் இல்லை, நமது தகப்பனுக்கு மதுவைக் குடிக்ககொடுப்போம் பின்னர் அவருடன் பாலுறவு கொள்வோம் என்று கூறிக்கொண்டனர். இவ்விரு குமாரத்திகளும் விசுவாசிகளாய் இருந்தனர். அவர்கள் தகாத உறவு கொள்ள திட்டமிட்டு தங்கள் தகப்பன் குடிபோதையில் அவனுடன் சயனித்தனர், அவர்கள் கருத்தரித்து பிள்ளகள் பிறக்கும்போது அவர்களது மனதில் உள்ள ஆவிக்குரிய பெயர்களை சூட்டும்படி திட்டமிட்டனர்.

இப்படிப்பட்ட தகாத உறவை குறித்து தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது? இச்செயல்கள் தீமை மற்றும் பாவம் எனக்கூறுகிறதாய் இருக்கிறது. இதில் இன்னொருகாரியம் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, லோத்து மனோரீதியாய் நிலையற்றவனாய் இருந்த போதும், அவனுக்கு மதுபானத்தைக் கொடுத்து அவனுடன் பாலுறவு கொண்டனர். மற்றும் அவனது பெலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு, இப்படிப்பட்ட உறவு தகாத உறவு எனக்கருதும் லோத்தின் எண்ணங்களை மேற்கொள்வதற்கு அவனுக்கு மதுபானத்தை அளித்து, அவனது பெலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டனர்.

வேதாகமம் ஒரு கிளாஸ் பீர் அல்லது சிறிது வைன் உங்களது உணவுடன் அருந்துவதைக்குறித்து தவறாய் கூறுவது இல்லை, மதுவானது உங்களை ஆழுகை செய்யும்போது, நீங்கள் பிரச்சனைக்குள்ளாகிறீர்கள். இங்கு லோத்து குடித்து வெறித்து இருந்தபடியால் அவனது குமாரத்திகள் தகாத உறவு கொள்ள வைத்தது, இல்லையெனில் இப்படிப்பட்ட தகாத செயல்களுக்கு அங்கு இடமே இருந்திருக்காது.

அநேக ஜனங்கள் பாலுறவு சம்பந்தமான பாவங்களால் சோதிக்கப்படுகின்றனர், இது எப்பொழுதும் கவர்ச்சிகரமாய் தோன்றுகிறது. இப்படிப்பட்ட செயல்களால் நீங்கள் சோதிக்கப்படுவதுண்டானால், தேவனது வார்த்தையை நினைவு கூர்ந்து அவைகளுக்கு எதிர்த்து நில்லுங்கள்.

தேவனுக்கு இவ்விஷயத்தில் கணக்கு ஒப்புவிப்பவர்களாய் இருங்கள், இல்லையேல் இந்த பெண்பிள்ளைகள் சிந்தித்ததைப் போலச் சிந்தித்து

செயல்பட துவங்கிவிடுவீர்கள். உங்களைச் சூழ தீமைசெய்யும் ஜனங்கள் இருக்கிறபடியால், நீங்களும் அவர்களது சிந்தனையை எடுத்துக்கொள்ள வாய்ப்புகள் உண்டு. அநேக ஜனங்கள் மிகவும் பாதுகாக்கப்பட்ட வாழ்க்கை செய்துகொண்டு இருக்கிறார்கள் அவர்களுக்கு உண்மையான உலகில் என்ன நடந்துகொண்டு இருக்கிறது என்பதை அறியாது இருக்கிறார்கள்.

நீங்கள் உலகில் இருக்கும் போது உங்களுக்கு கர்த்தருடன் மிக நெருங்கி நடக்க வேண்டிய வர்களாய் இருக்கிறீர்கள் காரணம் தீமை செய்யும் ஜனங்களுடன் ஜீவிப்பதால் இப்படிப்பட்ட செய்கைகள் மிகவும் வல்லமையுடைதும் மற்றும் வஞ்சகத்தால் நிறைந்ததுமாய் இருக்கிறது, அவர்களுடன் நீண்டகாலம் வாழ்ந்து கொண்டிருப்பதால் உங்கள் உணர்வுகளைத் தூண்டி அத்தீமைகளுக்கு அல்லது தவறான செயல்களுக்கு அவர்கள் தண்ணீர் ஊற்றி உங்களில் வளரச் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

நாம் லோத்துவிடமிருந்து இவ்வரிய பாடங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும், மற்றும் அவனது இரு குமாரத்திகளிடமிருந்தும் கற்றுக்கொள்ள வேண்டும் அவர்கள் இவ்வாறு கூறினார்கள், "எல்லோரும் மரித்துவிட்டனர், நாம் மூவரும் மட்டுமே உயிரோடு காக்கப்பட்டிருக்கிறோம், நமது குடும்பப் பெயரை எடுத்துச் செல்வதற்கு நமக்கு பிள்ளைகள் வேண்டும்" என்றனர்.

லோத்துவின் பின்சந்ததியினர்:

பண்டைய உலகில் குடும்பப் பெயரை தொடர்ந்து எடுத்துச் செல்வது முக்கியமானதாய் இருந்து வந்தது. குடும்பத்தில் நெருங்கிய உறவினருடன் உடலுறவு கொள்வது (incest) எகிப்திய பார்வோன்களின் உதாரணமாய் இருக்கிறது, அவர்கள் சொந்த சகோதரிகளை திருமணம் செய்துகொண்டு இப்படிப்பட்ட தகாத உறவு மூலம் தங்களது சந்ததியினரைப் பெற்று எடுப்பர். ஒரு போதகராய் இருந்து கொண்டு இதைக்குறித்து இவ்வுலகில் வேலைசெய்யும் உங்களது ஜனங்களுக்கு எச்சரித்து புத்தி சொல்ல கடமைப் பட்டுள்ளீர்கள். அவர்கள் இவ்வுலகில் மிகவும் கடின வேலைகளைச் செய்து களைத்துத் தவித்து போயிருக்கிறார்கள் அவர்களது எதிர்ப்புத் திறண் மிகவும் கீழான நிலைக்கு சென்று இருக்கிறது.

பெண்பிள்ளைகள் தங்களது தகப்பனுடன் தகாத உறவின் மூலம் பெற்றெடுத்த பிள்ளைகளுக்கு மோவாப் என்றும் "என் தகப்பனுடைய" என்பது இதன் பொருள் இவன் மோவாபியருக்குத் தகப்பன். மற்றொருத்தி குமாரனுக்கு பென்னம்மி என்று பெயரிட்டாள் இவது பெயரின் பொருள் "என் ஜனங்களின் குமாரன்" என்பதாகும் இவன் அமோரியர்களின் தகப்பனாய் இருக்கிறான். மோவாபியர்கள் ஜனங்களை விக்கிரக ஆராதணைக்கு வழிநடத்தினர், அமோரியர்கள் மிக்கொடிய தீமைக்கு ஜனங்களை வழிநடத்த காரணரானார்கள், இத்தீமைகள் யாத்திராகமப் புஸ்தகத்தில் காண்பிக்கப் பட்டுள்ளன.

இவ்வதிகாரத்தோடு லோத்தைக் குறித்து கேள்விப்படுவது கடைசியாய் இருக்கிறது. மற்ற நபர்களைக் குறித்து வேதாகமம் குறிப்பிடுகிற வேளையில் லோத்தின் மரணம் குறித்து எவ்விதக் குறிப்பும் இவ்வதிகாரத்தில் காணப்படாதது குறிப்பிடத்தக்கது. ஏன் இப்படியிருக்க வேண்டும்? 19ம் அதிகாரத்தின் இறுதியில், தேவனைப் பொறுத்தமட்டில் லோத்து மரித்துப் போய் விட்டான்.

நாம் கவனமாய் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியது என்னவென்றால், நமது மாம்சீக நடவடிக்கைகள், மற்றும் நமது பாவ சம்பந்தமான சரித்திரப் பக்கங்களை ஒதுக்கிவைப்பது கூடாது. லோத்து மரிப்பதற்கு முன்பதாய் தெய்வீக சிட்சைகள் அதிக அளவில் அவனது வாழ்வில் நிகழ்ந்தது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

அபிமேலேக்கு:

வசனம் 20ல் ஆபிரகாம் விழுந்து போனதைக் காண்கிறோம், அவர் நம்பிக்கை இழந்தவராய், இறுதியில் தான் ஒருவர் மட்டுமே இருப்பதாய் உணர்ந்தார். அவர் தனது விசுவாச நண்பர்களை விட்டு அதாவது எபிரோனை "ஐக்கியம்" விட்டு புறஜாதியாரான பெலிஸ்தியரிடம் சென்றார்.

அவர் காதேஸ் "விபச்சாரம்" வழியாய் சென்று சூருக்கு "குப்பையை கிளறுதல்" வந்து, பெலிஸ்திய பட்டணமான கேராருக்கு "துக்கப்படுத்துதல் மற்றும் உடைத்து எறிதல்" வந்து சேர்ந்தார். கேராரூரின் அரசன் அபிமேலேக்கு "இராஜாக்களின் தந்தை" இது அவர்களுக்கு உரிய பெயர் அல்ல அவர்களது தலைப்பாக இருக்கிறது.

அதிகாரம் 20ல் ஆபிரகாம் சாராளைக்குறித்து மீண்டும் அவள் தனது சகோதரி என்கிற பொய்யை இங்கு கூறுகிறவராய் இருக்கிறார். இதைப் போன்றே அவர் எகிப்தின் பார்வோனிடமும் கூறினார்.

லோத்து ஐக்கியத்திற்குள் கடந்து வராதபடியால் அவன் ஐக்கியத்திற்கு புறம்பாக்கப்பட்டான், ஆபிரகாமும் அதையே இங்கு செய்கிறவராய் இருக்கிறார். ஆபிரகாமுக்கு இப்படிப்பட்ட மோசமான ஜனங்களுடன் சேர்ந்து வாழ்வதற்கும், தனது மனைவியின் கௌரவத்தை பாதுகாக்காமல் பொய்கூறுவதற்கும் எவ்வித விதிவிலக்கும் அவருக்கு அளிக்கப்படவில்லை. அவர் அங்கு ஒரு சுவிஷேசகராய் மட்டும் பட்டணத்திற்கு வெளியே தங்கி அவர்களுக்கு தேவன் ஒருவரைத் தவர விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது எனக் கூறுகிறவராய் இருந்தார். அபிமெலேக்கு மிகவும் கீழ்த்தரமானவனாய் இருந்து தான் விரும்புவதை எடுத்துக்கொள்கிறவனாய் இருந்தான்.

எப்படியிருப்பினும் அபிமெலேக்கு தேவனைக்குரித்த கரிசனையும் மற்றும் அவரை புறிந்துகொள்ளும் தன்மையுடனும் இருந்தான். அடிக்கடி நீங்கள் மிகவும் கீழ்த்தரமான ஜனங்களிடம் கண்டுகொள்வது என்னவெனில் அவர்கள் சுவிஷேசத்திற்கு மிகவும் வரவேற்பு அளிக்கிறவர்களாய்

இருக்கிறார்கள் காரணம் அவர்கள் பாவத்திற்கு கீழாய் இருக்கிறோம் என்கிற உணர்வுடன் காணப்படுகிறார்கள். நமது கடமை விதை விதைப்பது மட்டுமே விளைவுகளைக் குறித்து கவலை கொள்ள வேண்டாம்.

வசனம் 6 - 10 வரையில் உள்ள வேதபகுதியில் தேவன் அபிமெலேக்கை எச்சரிக்கிறதை படம்பிடித்து காட்டப்படுகிறது மற்றும் ஆபிரகாமின் வஞ்சனைக் காரியங்களும் வெளிக்குக் கொண்டுவரப்படுகிறது. அபிமெலேக்கு பாலுறவு விஷயங்களில் கட்டுப்பாடற்றவன், பெண்களைக் காணும்போது அவர்களை பாலுறவு உபகரணங்களாய் காண்பவன். எப்படியிருப்பினும், அவனுக்கு எது சரி எது தவறு என்பது குறித்த மிகஉறுதியானக் கருத்து இருந்தது. ஒழுக்க நெறித் தவறி வாழும் ஜனங்கள் சுவிஷேசத்திற்கு விதிவிலக்கானவர்கள் அல்லர்.

இந்த இடத்தில் அபிமெலேக்கு ஆபிரகாமைவிட அதிக உத்தமத்துடன் / நேர்மையுடன் நடந்துகொள்வதைப் பார்க்கிறோம். எல்லாப்பாவங்களும் தேவனுக்கு விரோதமானவை. தேவன் அபிமெலேக்கிடம், சாராளை அவளது புருஷனிடம் சேர்த்துவிடு, இல்லையென்றால் நீ உன் ஜனத்தாரை விட்டு அகற்றப்படுவாய் என்றார். இது ஆபிரகாமுக்கு இந்த மனிதனுக்கு சுவிஷேசத்தை அளிப்பதற்கு ஒரு தருணத்தை அளிப்பதாய் இருந்தது. பெரிய தீமையை அகற்றுவதற்கு தேவன் ஆபிரகாமின் சார்பில் இடைபட வேண்டியதாய் இருந்தது.

அபிமெலேக்கு தனது ஜனங்களிடம் என்ன நிகழ்ந்தது என்பதை கூறினான் அவர்கள் மிகவும் பயந்தனர். நீங்கள் ஒழுக்கக்கேடுகளி்லில் அவர்களது தேவைக்கு அதிகமாகவே ஈடுப்பட்டு சலைத்துப்போனவர்களை நீங்கள் சந்திக்கும்போது, அவர்கள் உண்மையாய் இருக்கும் ஒருவரை எதிர்பார்த்து காத்துக்கொண்டு இருக்கிறார்கள் என்பதை அவர்களிடம் கண்டுகொள்ள வேண்டிய வர்களாய் இருக்கிறீர்கள். அபிமெலேக்கு ஆபிரகாமைப்பார்த்து என்னைவிட்டு அகன்று போய்விடு என்றுகூறியது மிகக்கடினமான ஒன்றாய் இருக்கிறது.

ஆபிரகாம் தனது பாவத்துடன் இடைபடுதல்:

ஆபிரகாம் தனது பாவத்துடன் இடைபட்டு அவைகளை அறிக்கை செய்கிறார். நாம், நமது பாவம் நம்மைக் கண்டுபிடிக்கும் என்பதை உணருதல் வேண்டும். 13ம் வசனத்தில் ஆபிரகாம் பாவத்திற்கான காரணம் தான் என்பதை அவர் எடுத்துக்கொள்வதாக காண்கிறோம். அபிமெலேக்கு பொருட்களுடன் சாராளையும் திரும்ப ஆபிரகாமிடத்திற்கு அனுப்பினான். அவன் ஆபிரகாமைப் பார்த்து அவள் முக்காடிட்டுக் கொள்ளுதல் வேண்டும் எனக்கூறினான். ஏன்? அவளது முதிர்ந்த வயதிலும் மற்றவர்களை கவர்ந்து கொள்ளக்கூடியவளாய் இருந்தாள்.

அவள் அபிமெலேக்கால் கடிந்து கொள்ளப்பட்டாள், காரணம் அவள் தன்னில்தானே பாவம் செய்தவளாய் இருந்தாள். இப்பொழுது அவள் ஆபிரகாமை தன் ஆண்டவனாய் காண்கிறாள் அவளது பார்வை

அவனுக்காக மட்டுமாய் இருந்தது. 1 பேதுரு 3 உடன் இதைத் தொடர்பு படுத்திப்பாருங்கள். சாபத்திலிருந்து ஆசீர்வாதம் வந்தது. ஆபிரகாம் தனது பயம் என்னும் பாவத்துடன் இடைபடுகிறவராய் இருந்தார், சாராள் தனது கவர்ச்சிக்கும் பாவத்துடன் ஈடுபட்டாள், மற்றும் ஆபிரகாமை கனப்படுத்த துவங்கினாள்.

ஆதியாகமம் 21:1ல் அவள் அவர்களது பாவத்துடன் இடைபட்ட பின்னர் அவள் ஈசாக்கைப் பெற்றாள். அபிமெலேக்கு தேவனது வார்த்தையினாலும் மற்றும் ஆபிரகாமாலும் தொடப்பட்டான். அடிப்படை கோட்பாட்டின்படி, நாம் ஒத்துப்போகிறவர்களாய் இருத்தல் கூடாது. உங்களுக்கும் கர்த்தருக்கும் இடையே எந்த ஒரு முறண்பாடின்றி காத்துக்கொள்ளுங்கள் ஒருவேளை பாவம் செய்வீர்களானால் அவருடன் ஐக்கியம் கொள்ள எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் ஒப்புரவாகிவிடுங்கள்.

உபதேசம்:

தேவதூதர்கள்:

1. தேவதூதர்கள் இரண்டு வகையினராய் இருக்கின்றனர்.
அ) தெரிந்து கொள்ளப்பட்ட தூதர்கள் (1 தீமோத்தேயு 5:21) இவர்கள் தேவனுடன் இருக்க தெரிந்துகொள்ளப்பட்டவரிகள்.
ஆ) விழுந்து போன தேவதூதர்கள்: தேவனுக்கு விரோதமாய் கலகம் பண்ணி சாத்தானை பின்பற்றினவர்கள்
i) சிறைப்பட்டவர்கள் (யூதா 6, 2பேதுரு 2:4) நோவா கால ஜலப்பிரளயம் முதல் அவர்கள் பூமியில் காணக்கூடிய வகையில் பூமியில் செயல் பட்டு வருகின்றனர்.
ii) பிசாசுகள், தற்பொழுது பூமியில் செயல்பட்டு வருகின்றனர். (1 கொரிந்தியர் 10:20,21; மாற்கு 5:1-20)

2. தேவதூதர்களில் அநேக வகுப்பார் இருக்கின்றனர்.
a) கேருபீன்கள் (உயர்ந்த வகுப்பைச் சார்ந்தவர்கள்) - (ஆதியாகமம் 3:24; யாத்திராகமம் 25:19-20) கேருபீன்கள் ஆரம்பத்தில் தெய்வீக பரிசுத்தத்தை எதிர்த்தவர்கள். லூசிபர் (சாத்தான்) கேருபாய் இருந்தவன் (எசேக்கியல் 28:14)
b) சேராபீன்கள்: (ஏசாயா 6:2)"சேராப்' என்பதன் பொருள் 'எரிகிகின்ற ஒன்\று".
c) துரைத்தனங்கள், அதிகாரங்கள் - மனித அதிகாரத்துடன் ஒப்பிடலாம், ஆனால் வழக்கப்படி அவைகள் விழுந்துபோன தேவதூதர்களை குறிப்பது ஆகும். (எபேசியர் 3:10, 6:12, கொலோசெயர் 1:16) அவர்கள் மனித வர்க்கத்தின் ஒரு பகுதியை அடக்கியாள்கிறார்கள், அவர்களால்

மனுக்குலத்தின் தொனி, மற்றும் சிந்தனைகளை அடக்கியாள முடியும். (மாற்கு 5:1-20)

d) ஊழியம் செய்யும் தேவதூதர்கள்:

i) காப்பாற்றும் தேவதூதர்கள் (எபிரெயர் 1:14) இவர்கள் விசுவாசிகளுக்கு பாதுகாப்பளிக்கின்றனர், பணிவிடை செய்கின்றனர்.

ii) தண்ணீர்களின் தூதன்: (வெளி 16:5) தண்ணீர் சிறையைப்போல பயன்படுத்தப் படுகிறது. அபைஸ் (கிரேக்க மொழி) கீழேயுள்ள தண்ணீர் சிறையைக்குறிக்கிறது.

iii) பாதாளகுழியின் தூதன்: (வெளி 9:1,11) அபைஸ் என்றழைக்கப்படும் பாதாளக்குழியில் விஷேசித்த பொறுப்பு வகிக்கும் தூதன்.

iv) அக்கினியின் தூதன்: (வெளி 14:18)

v) நியாயத்தீர்ப்பின் தூதர்கள்: (வெளி 8:2, அதிகாரங்கள் 15,16) - எக்காளங்கள், கோபக்கலசங்கள்.

vi) காவல் செய்யும் தூதர்கள்: (தானியேல் 4;13)

3. தூதர்களின் தோற்றம்:

a) தூதர்கள் மனிததோற்றத்தில் தோன்றமுடியும். (ஆதியாகமம் 18;1-2, எபிரெயர் 13:2)

b) தூதர்கள் பல விதத்தில் சித்தரிக்கப்படுகின்றனர். செட்டைகளுடன், அநேகக்கண்களுடன், அநேக முகங்களுடன் சித்தரிக்கப்படுகின்றனர். (ஏசாயா 6:2, எசேக்கியேல் 1) மற்றும் அடிக்கடி பிரகாசமுள்ள ஒளியுடன் தோன்றுகிறவர்கள் (மத்தேயு 28:2-3)

c) தேவனுடைய கரத்திலிருந்து வந்தவைகளில் லூசிபர் (சாத்தான்) மிகவும் அழகுவாய்ந்த ஜீவியாய் இருக்கிறான் (எசேக்கியேல் 28:12-17)

d) தூதர்கள் சிரிய செட்டைகளுடன் காணப்படும் கொழுத்த சிவந்த மேனியுடையவர்கள் அல்ல. அல்லது சிவந்த நிற தோலும், கொம்பும், கூரிய வாலும் உடைய ஜீவிகளும் அல்ல.

4. பெயரிடப்பட்ட தூதர்கள்:

a) லூசிபர், அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி, தேவனுடைய சிங்காசனம் முழுவதையும் மூடுகிற கேருப் (ஏசாயா 14:12), இப்பொழுது அவன் பெயர் சாத்தான், குற்றம்சாட்டுகிறவன் / புகழ் இழந்தவர் (வெளி 12:10)

b) காபிரியேல் - செய்தி அறிவிக்கும் தூதன்(தானியேல் 8:16, 9:21, லூக்கா 1:19, 26)

c) மிகாவேல் - யுத்தம் செய்யும் தூதன் (வெளி 12:7, யூதா 9) இஸ்ரவேலை பாதுகாக்கும் தூதன். (தானியேல் 10:21, 12:1)

5. தூதர்களும் கிறிஸ்துவின் அவதாரமும்:

a) அவரது பிறப்பில் - (லூக்கா 2:9-15)

b) அவரது சோதனையில் - (மத்தேயு 4:11)

c) அவரது உயிர்த்தெழுதலில் - (மத்தேயு 28:2)

d) அவரது பரமேறுதலில் - (அப்போஸ்தலர் 1:10)

e) அவரது இரண்டாம் வருகையில் - (மத்தேயு 13;37-39, 24:31, 25:31, 2 தெசலோனிக்கேயர் 1:7)

6. தூதர்களும் மனிதரும்:
a) சிருஷ்டிப்பின் போது தேவதூதர்கள் கவனித்தார்கள். (யோபு 38:7)
b) மோசேயிடம் தேவன் நியாயப்பிரமாணங்களை கொடுக்கும்போது தேவதூதர்கள் அங்கு இருந்தனர் (கலாத்தியர் 3:19, அப்போஸ்தலர் 7:53)
c) தூதர்கள் இப்பொழுது நம்மை கவனித்து வருகின்றனர் (1 கொரிந்தியர் 4:9, எபேசியர் 3:10, 1 தீமோத்தேயு 5:21, 1 பேதுரு 1:12)
d) தெரிந்து கொள்ளப்பட்ட தூதர்கள் ஒருவர் இரட்சிப்படையும் போது களிகூறுகின்றனர். (லூக்கா 15:7-10).

7. அநேக சந்தர்ப்பங்களில் வெளிப்பாடுகள் தேவனிடமிருந்து, தேவ தூதர்கள் மூலம் பெறப்பட்டன:

a) மோசேயின் நியாயப்பிரமாணம் - யாத்திராகமம் 3:2 , ஆதியாகமம் 3:19, அப்பொஸ்தலர் 7:53, எபிரெயர் 2:2.
b) தானியேலுக்கு தீர்க்கதரிசன் அறிவிப்பு - தானியேல் 7:16, 8:16-26, 9:20-27, 10:1-12:13.
c) சகரியாவுக்கு தீர்க்கதரிசன் அறிவிப்பு - சகரியா 1:9, 2:3, 4:1,5, 5:5, 6:4,5.
d) யோவான் ஸ்நானகனின் பிறப்பு அவன் தகப்பனாகிய சகரியாவிற்கு அறிக்கப்படுதல் - லூக்கா 1:11-20.
e) மரியாளுக்கு இயேசுவின் பிறப்பு குறித்து அறிவித்தல் - லூக்கா 1:26-38, யோசேப்பிற்கு - மத்தேயு 1:20-21.

மதுபானம் அருந்துதல்

1. மதுபானம் அருந்துதல் வேதவாக்கியங்களின் படி ஏற்றுக்கொள்ளப்படுகிறதாய் இருக்கிறது. உதாரணமாய் மருத்துவ காரணங்களுக்காய் மற்றும் உணவுடன் அருந்தும் பழக்கவழக்கப் படியேயும் இது ஏற்றுக் கொள்ளப்படுகிறதாய் இருக்கிறது. (1 தீமோத்தேயு 5:23, யோவான் 2:1-11).

2. குடிக்கு அடிமைப்படுதல் எப்பொழுதும் தவிர்க்கப்படுதல் வேண்டும் எனவும், அது பாவமும் மதியீனமுமாய் இருக்கிறது என வேதம் அறிவுறுத்துகிறதாய் இருக்கிறது. (நீதிமொழிகள் 20:1, 23:20, ஏசாயா 5:11-22, 28:7-8, ரோமர் 13:13, 1 கொரிந்தியர் 5:11).

3. மது அருந்துவது தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் தவிர்த்தல் வேண்டும் என வேதம் அறிவுரை கூறுகிறது:

a) இராஜாக்கள் (ஆளுநர்கள், அரசாங்கத் தலைவர்கள்) (நீதிமொழிகள் 31:4-5).

b) போதகர்கள் (1 தீமோத்தேயு 3:3, தீத்து 1:7).
c) மூப்பர்கள் (1 தீமோத்தேயு 3:8).

4. மதுபானம் அருந்தியதால் சில நபர்களுக்கு அசம்பாவிதங்கள் நிகழ்ந்துள்ளன.

a) நோவா (ஆதி. 9:21)
b) நாபால் (1 சாமு. 25:36-37)
c) எப்ராயீம் (ஏசா. 28:1)
d) லோத்து (ஆதி. 19:32-36).

5. மதுபானம் அருந்துதல் தேசத்தில் அழிவை ஏற்படுத்துகிற அமைப்பின் ஒருபகுதியாக இருக்கிறது, பொருளாதாரத்தை பெருக்கி, இராணுவ தோல்வியை ஏற்படுத்துகிறது, தேசத்தின் அழிவை வழி வகுக்கிறதாய் இருக்கிறது. (யோவேல் 1:4-6, ஏசாயா 28, எரேமியா 13:12-17).

6. அதிகமான மதுபானம் அருந்துவதால் உண்டாகும் கேடான விளைவுகள்.

a) முன்னே உந்தித் தள்ளுகிறது, தூஷிக்க வைக்கிறது மற்றும் பொறுப்பில்லாத தன்மையை உருவாக்குகிறது.
b) மூளை நரம்புகளை பாதித்து, வியாதியை உண்டாக்குகிறது.
c) கட்டுப்பாடற்ற செய்கைகளை பிறப்பிக்கிறது, அதன் விளைவாக குழப்பங்கள், வேண்டாதவிருப்பங்கள், பயங்கரவாதம் மற்றும் தவறான நம்பிக்கைகள் இதன் விளைவாய் இருக்கின்றன.

7. விசுவாசிகள் கண்டிப்பாய் மதுபானம் அருந்துவதை தவிர்த்தல் வேண்டும் அது மற்றவர்களை (பெலவீனமான விசுவாசி அல்லது அவிசுவாசி) இடறுவதற்கு வழி நடத்தும், அல்லது இது ஊழியத்திற்கு தடைக்கல்லாய் அமையும்.

<u>பாடம் 9 -- அதிகாரங்கள் 19,20</u>

ஈசாக்கின் விருத்தசேதனம்:

இச்சந்தர்ப்பத்தில் ஆபிரகாமுக்கு வயது நூறு சாராளுக்கு தொன்னூறு. எப்படியிருப்பினும் தேவன் ஒரு வாக்குத்தத்ததை மறக்கிறவர் அல்லர். தேவன் சாராளை சந்தித்த போது அவளது நகைப்பின் படியே காரியங்கள் நிகழ்ந்தன. அவர்கள் அக்குழந்தை ஈசாக்கு என பெயரிட்டு அழைத்தனர்.

மோசே இதை அடிக்கோடிட்டு காட்டுகிறவராய் இருக்கிறார், தேவன் எதையாகிலும் சொன்னால், அது அர்த்தமுள்ளதாயும், கண்டிப்பாய் அதை நிறைவேற்றுகிறவராயும் இருக்கிறார், நீங்கள் அவ்வாக்குத்தத்தத்தை பெற்றுக்கொள்கிறவர்களாயும் இருக்கிறீர்கள். குறிக்கப்பட்ட காலத்திலே எனக்கூறப்படுவது, தேவனின் நேரமாய் இருக்கிறது. தேவனின் நேரம் என்பது முற்றிலும் பூரணமானதாய் இருக்கிறது.

ஆபிரகாமின் வயது முதிர்ந்த காலத்தில் பாலுறவு கொள்ள இயலாதகாலத்தில் தேவன் செய்த அற்புதம் மூலம் அவருக்கு சாராள் மூலமும் அவள் மரித்த பின்னர் கேத்தூராளின் மூலமும் சந்ததிகள் பெருகினர். தேவன் குணமாக்குவார் எனில் அவரது சுகம் முழுமையானது மற்றும் பூரணமானது.

ஆதியாகமம் 21:4ல் ஆபிரகாம் ஈசாக்குப் பிறந்த எட்டாவது நாளில், தேவன் அவருக்கு கட்டளையிட்டபிறகாரம் அவனுக்கு விருத்த சேதனம் செய்தார். இந்த வகையில் அவர் தேவனது வார்த்தைக்கு முழுவதுமாய் கீழ்ப்படிந்தார். இதுவே இஸ்ரவேலில் உடன்படிக்கையின் அடையாளமாய் இன்றைய அளவில் இருந்துவருகிறது, இது பிள்ளைகளை பிரதிஷ்டை செய்வதாய் இருக்கிறது.

கிறிஸ்தவ குடும்பத்தில் கர்த்தரை அறிகிற அறிவில் வளர்த்துவிட அவர்கள் தங்களைத்தாங்களே பிரதிஷ்டை செய்து கொள்கிறார்கள். ஆபிரகாம் ஈசாக்கை வாக்குத்தத்தத்தின் குமாரனாக வளர்க்க முற்பட்டார். பெற்றோர்களாகிய நாம் நமது பிள்ளைகளை கிறிஸ்தவ பண்பாட்டில் வளர உற்சாகப்படுத்த கடமைப் பட்டுள்ளோம், எல்லாவற்றிற்கும் மேலாக தனிப்பட்ட நபரின் தீர்மானம் அவர்கள் கர்த்தருக்காக வாழ்கிறார்களா அல்லது அவருக்கு விரோதமாய் வாழ்கிறார்களா என்பது, நாம் நமது பிள்ளைகளுக்கு முன்பதாக முன்மாதிரியாய் வாழவேண்டியது அவசியம்.

நியாயப்பிரமாணமும் கிருபையும்:

வசனம் 6ல் சாராள் தேவன் என்னை நகைக்கப்பண்ணினார் எனக்கூறினாள். இது ஒரு வெளியரங்கரமான சிரிப்பாய் இருந்தது, மறைவானதாய் அல்ல. குழந்தையை தனது மடியில் ஏந்தி அதைக் காண்பது அவரது சுத்தக் கிருபையாய் இருந்தது.

தீமை எப்பொழுதும் இருக்கிறதாய் இருக்கிறது, அது எப்பொழுதும் சந்தோஷத்தை துக்கப்படுத்துவதாய் உள்ளது. பரீட்சையானது ஆகாரின் மகளாகிய இஸ்மவேல் மூலம் உருவானது, ஈசாக்கு பால் மறந்த நாளிலே பாரம்பரிய அனுசாரப்படி, பெரிய விருந்து கொண்டாடப்படும், அக்குழந்தையானது பால்மறந்து கடினமான ஆகாரம் உட்கொள்ளத் துவங்குகிறது. இந்த சமயத்தின் சந்தோஷமானது ஆபிரகாமின் பாவமானது அவரை வேட்டையாடத் தொடங்கி விட்டது. இஸ்மவேல் இளைஞனாய் இருந்தான் அவன் ஈசாக்கைப் பரிகசித்தான்.

சாராள் ஆபிரகாமிடம், ஈசாக்கை வளர்க்கவேண்டுமானால், அடிமைப் பெண்ணாகிய ஆகாரையும், அவளது குமாரனாகிய இஸ்மவேலையும் அனுப்பிவிடும்படி கேட்டுக்கொண்டாள். ஆபிரகாம் வருத்தத்திற்குள்ளானார் காரணம் அவர் இஸ்மவேலை அதிகம் நேசித்தார். தேவன் ஆபிரகாமுக்குச் சொன்னார், சாராளின் சொற்படி கேள், இதைக்குறித்து கவலைக் கொள்ளாதே வாக்குத்தத்தத்தின் குமாரன் ஈசாக்கு என்றார்.

ஆவிக்குரிய சமவெளியில் அடிமைத்தனத்தின் குமாரன் மற்று சுதந்தரவாளியான குமாரன் இருவருக்குமிடையே உள்ள வித்தியாசத்தை இந்நேரத்தில் வேறுபடுத்தி அறிய வேண்டியதின் அவசியம் ஏற்பட்டுள்ளது. இஸ்மவேல் சாராளது அவிசுவாசத்தின் விளைவு, மற்றும் ஆபிரகாமின் இச்சையின் விளைவு, இது மனுஷீகக்கிரியைகளின் விளைவாய் இருக்கிறது. இஸ்மவேல் மற்றும் ஈசாக்கு இருவரும் நியாயப்பிரமாணம் மற்றும் கிருபை இவ்விரண்டையும் சித்தரிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

பவுல் கலாத்தியர் 4:21-29 ல் இன்றைய அளவில் ஆகாரும் இஸ்மவேலும் யூதர்களின் கிரியைகள் மூலம் இரட்சிப்பு எனவும், சாராளும் ஈசாக்கும் கிருபையை பிரதிபலிக்கின்றனர் எனவும் கூறுகிறார். இங்கு பவுல் நாம் ஆவிக்குரிய சம்பந்தத்தில் ஆபிரகாமுக்கு விசுவாசிகளாயிருக்கிறோம் மற்றும் ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் வாரிசாய் இருக்கிறார் எனக்கூறுகிறார்.

பவுல் கிரியை மூலம் இரட்சிப்பு என்கிற யூதர்கள் உங்களை உபத்திரவப்படுத்துகிறார்களா அதைக்குறித்து ஆச்சரியப்பட வேண்டாம், இதைப்போன்றே இஸ்மவேலும் ஈசாக்கை உபத்திரவப்படுத்தினானே என்கிறார். நம்மை விடுதலையாக்கின சுதந்தரத்தில் உறுதியாய் நிற்போமாக. பவுல் இந்த சூழலை சுதந்தரவாளி அடிமையுடன் கூட உறவுகொள்ள முடியாது என்பதை காண்பிக்கிறவராய் இருக்கிறார்.

ஆபிரகாமுக்கு ஆகாரையும் அவளது குமாரனாகிய இஸ்மவேலயும் அனுப்பிவிட விருப்பமில்லை, ஆனால் ஆவிக்குரிய நிலையில் கிரியை மூலம் இரட்சிப்பிற்கும் மற்றும் கிருபைக்கும் சம்பந்தமில்லாது இருக்கிறது. தேவனது நிலையிலிருந்தே நாம் பின்பற்ற வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் எந்தக்காரியத்தோடும் ஒத்துப்போகாது வாக்குத்தத்தத்தின் குமாரனே வாரிசாய் இருக்கிறான் என்பதில் உறுதியாய் இருக்கக்கடவோம்.

நீங்கள் ஒரு போதகராய் இருப்பீர்களானால் உங்களது சபையினரை கிரியை மூலம் இரட்சிப்பு மற்றும் விசுவாசத்துரோகம் இவைகளிலிருந்து சபையை பாதுகாத்து வழிநடத்தி, சத்தியத்தை மட்டும் அவர்களுக்கு போதித்தல் அவசியம்.

இஸ்மவேல்:

வசனங்கள் 12-13 ல் தேவன் இஸ்மவேலை ஒரு பெரிய தேசமாய் உருவாக்கப்போகிறேன், அவனோடுள்ள உறவுகள் மூலம் அவன் ஆசீவாதமாய் இருப்பான். இது இன்றைய அளவில், மலைப்பிரங்கத்தில் விசுவாசிகள் பூமிக்கு உப்பாயிருக்கிறார்கள் என இயேசு சொன்னது ஒத்துப்போகிறதாய் இருக்கிறது. உப்பு பாதுகாக்கிறதாய் இருக்கிறது, மணத்தையும் ருசியையும் கொடுக்கிறதாய் இருக்கிறது. நம்முடன் ஜனங்கள் உறவுகொள்வதன் மூலம் ஆசீர்வதிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். இஸ்மவேல் ஒரு அவிசுவாசியாய் மரிக்கவிருக்கிறான் ஆனால் இப்படிப்பட்ட ஆசீர்வாதத்தினால் அவனது வாழ்வில் ஆசீர்வாதங்களை அடைகிறவனாய் இருக்கிறான்.

நீங்கள் விசுவாசியாயிருந்து முதிர்ச்சி அடையும்போது, உங்கள் சிநேகிதர்கள், உடன்பணிபுறிபவர்கள், மற்றும் உங்களது குடும்பம் ஆசீர்வாதத்தை அடைகிறதாய் இருக்கும். ஆபிரகாம் இப்பொழுது ஆகாருக்கு வெகுமதிகளை அளித்து அனுப்பி விடுகிறார், அவளும் இஸ்மவேலும் பெயர்செபாவின் வனாந்திரத்திலே அலைந்து திரியத் தொடங்குகிறார்கள்.

ஒரு அவிசுவாசிக்கு அவனோடு சம்மந்தப்பட்டவர்கள் மற்றும் ஆசீர்வாதங்கள் பெருகிறபடியால் நாம் அவிசுவாசியை தேவன் நேசிக்கிறார் எனக்கூறமுடியாது என்பது குறிப்பிடத்தக்கது. அவர் அவர்களுக்கும் இரட்சிப்பை அருளினார் அவர்கள் அதை தள்ளிவிட்டு, சிலுவைக்கு பகைஞராகவும், தேவனுக்கு விரோதிகளாகவும் இருந்துவருகின்றனர். தேவன் தனது அன்பினால் ஒருவரை இரட்சிக்கமுடியாது அவரது கிருபையினால் மட்டுமே ஒருவரை இரட்சிக்கிறார். தேவன் இஸ்மவேலை தொடர்ந்து ஆசீர்வதித்துக்கொண்டிருக்கும் போது, அவன் தொடந்து இன்னும் தேவனை புறக்கணித்துக்கொண்டே வருகிறான்.

ரோமர் 9:13 மல்கியாவிற்கும் அதற்கு அப்பாற்பட்ட நிலையிலும் செல்லுகிறதாய் இருக்கிறது. ஏசாவை வெறுத்து யாக்கோபை சிநேகித்தேன். தேவன் தமது அன்பினிமித்தம் எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட வேண்டும் ஆற்றலை அளித்து இருக்கிறார் ஆனால் அதற்கு மனிதர் செவிசாய்க்கவில்லையானால் அவர்கள் தேவனது ஆக்கினைத்தீர்ப்பிற்கு கீழ் இருக்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

ஆபிரகாம் இந்த காலக்கட்டத்தில் கோடீஸ்வரராக இருந்தார். அவருக்கு குமாரனாய் பிறந்த மகனுக்கு அவர் என்ன கொடுத்தார் ஒரு அப்பத்துண்டும், ஒரு கூஜா தண்ணீர் மட்டுமே, இது அவர்கள் ஒரு தண்ணீர் துறவைக் கண்டுபிடிக்கும் வரைக்கும் போதுமானதாய் இருந்தது. இது ஒரு கலாச்சார பாரம்பரியமாய் இருக்கிறது.

ஒரு மறுமனையாட்டியும் அவளது பிள்ளையும் வீட்டைவிட்டு வெளியே அனுப்பும்போது, அவர்களுக்கு அளிக்கப்பட்ட பதார்த்தங்கள் அடுத்த தண்ணீர் துறவைக் காணும் மட்டும் போதுமானதாய் இருந்தது.

ஐசுவரியம் மிகுந்த அநேகர் எண்ணுவது, அவர்களது பிள்ளைகளுக்கு ஏராளமான பணத்தை கொடுத்துவிட்டால் அவர்கள் நல்ல, ஆரோக்கியமான, மகிழ்ச்சி ததும்பும் வாழ்க்கை வாழ்வார்கள் என எண்ணுகிறார்கள்.

அது அவர்கள் எண்ணுவது போல நடைபெறுவது இல்லை காரணம் அவர்களது பழைய பாவசுபாவத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள். ஆபிரகாம் ஒரு கருத்தைப்பெற்று இருந்தார் இவர்கள் இருவருக்கும் தேவன் வாக்குத்தத்தத்தை அளித்து இருந்தார் அவ்வாக்குத்தத்தத்தை அவர்கள் நம்பிச் செல்லவேண்டியதாய் இருந்தது. ஆபிரகாம் இஸ்மவேலை ஒரு அவிசுவாசியாய் கண்டார், அவனுக்கு ஒன்றும் கொடாத நிலையில், அந்த அழுத்தமானது தேவனை நோக்கி பார்க்கச்செய்கிறதாய் இருக்கும் என்பது அவரது அனுமானம்.

அவர்கள் வழிக்குத்தேவையான அப்பத்தையும், துருத்தியில் தண்ணீரையும் மட்டும் பெற்றுக்கொண்டு வீட்டைவிட்டு வெளியேறியது அக்காலத்திய பாரம்பரியமாய் இருந்தது, இது அவர்கள் சென்று சேரும் இடத்தில் அகதிகளாய் இருந்து அவர்கள் தங்கள் பிழைப்பிற்காய் வேலை செய்து பிழைக்க வேண்டியிருந்தது. இதை வசனம் 15 மற்றும் 17ல் காண்கிறோம்.

சிறிது தூரம் சென்றவுடன் இஸ்மவேல் சரீர களைப்பால் நிலைகுலைந்து விழுந்தான், அவனது தாயார் அவனை இழுத்துச் சென்று ஒரு புதரின் கீழ் போட்டுவிட்டு, சற்று அப்பால் போய் தனது குமாரன் மரிப்பதை அவள் காணவிரும்பாதவளாய் அவள் புலம்ப துவங்குகிறாள்.

மறுபடியும் கர்த்தரின் தூதனானவர் அவளுக்கு தரிசனமாகி, கண்களை ஏறெடுத்துப் பார்க்க கேட்டுக்கொள்ளப்பட்டாள், காரணம் அவன் ஒரு பெரிய ஜாதியாகப்போகிறான் என்றார். அவள் தன் கண்களை ஏறெடுத்துப்பார்த்த போது அங்கே ஒரு தண்ணீர் துறவைக் கண்டாள். அதை அவள் காணாத பட்சத்தில் அத்துறவிற்கு 50 மீட்டர் இப்புறத்திலே அவர்கள் மாண்டு போயிருக்க நேரிட்டிருக்கும்.

ஜனங்கள் தங்களது கண்களை ஏறெடுத்துப்பார்க்க தவறுவதால் இரட்சிப்படைவதற்கு பதிலாய் மாண்டு போகிறவர்களாய் இருக்கிறார்கள். இது நல்ல உதாரணமாய் ஒரு அவிசுவாசி கிறிஸ்துவுக்கு வெளியே மரிப்பதை காட்டுகிறதாய் இருக்கிறது. முழு சிருஷ்டியும் தேவன் இருக்கிறார் என்றும் அவர் அன்புள்ளம் கொண்டவர் என்றும் பறைசாற்றுகிறதாய் இருக்கிறது.

விசுவாசிகள் வாக்குத்தத்தத்தங்களும், தேவனைக்குறித்த உபதேசங்களும் இருக்கும்போது அவர்கள் முற்றிலும் அதை அறியாதவர்களாய் குளறுபாட்டில் தவிக்கிறவர்களாய் இருக்கின்றனர். அவைகள் எளிதில் அடைந்து கொள்ளக்கூடியனவாய் இருக்கிறது. அவர்கள் வேதாகமத்தை வாசிப்பது கிடையாது, அதை அவர்கள் விசுவாசிப்பதோ அல்லது

வாழ்விற்கு பயன்படுத்திக்கொள்வதோ கிடையாது. ஒரு நபர் வல்லமையான காரிங்கள் நிகழுவதையோ, ஒரு அற்புதம் நிகழுவதையோ கண்டு விசுவாசிப்பது கிடையாது. அங்கு அவர்கள் கண்ட தண்ணீர் துறவானது ஒரு பெரிய அற்புதம் இருப்பினும் இஸ்மவேல் ஒரு அவிசுவாசியாய் மரித்தான்.

லாசரு ஐசுவரியவான் சம்பவத்தில் ஆபிரகாம் ஐசுவரியவானுக்குக் கூறுகிறார், மரித்தோரிலிருந்து ஒருவன் உயிரோடு எழும்பிச் சென்றாலும், அவர்கள் தேவனுடைய வார்த்தையை விசுவாசியாத பட்சத்தில் அவர்கள் விசுவாசிக்கப் போவதில்லை என உறுதியாய்க் கூறினார். ஒரு வியாதிப்பட்ட அவிசுவாசி குணமாகும்படி, உங்களை ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளும்போது, அவர்களுக்கு கூறவேண்டியது, உங்களது மனம் மாறுதலுக்காய் ஜெபிக்கிறேன் அது அவர்களது எதிர்கால வாழ்வில் தேவனது மகிமையை பிரதிபலிப்பதாய் இருக்கும்.

வசனம் 20-21 ல் இஸ்மவேல் ஒரு வேட்டைக்காரனாகவும் பலத்த மனிதனாகவுமாய் மாறுகிறான். ஆகார் அவனை எகிப்திற்கு அழைத்துச் சென்று அங்கு அவள் ஒரு அவிசுவாசியை மணந்து கொண்டு, அவிசுவாசிகளின் குடும்பத்தை உருவாக்குகிறவளாகிறாள். இஸ்மவேலும் அவனது சந்ததியினரும் இந்நாள்வரை இஸ்ரவேலரை உபத்திரவிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

அபிமெலேக்கும் தண்ணீர் துறவும்:

அடுத்த பகுதியில் ஆபிரகாமுக்கும் அபிமெலேக்கிற்கும் ஒரு தண்ணீர் துறவைக்குறித்து விவாதாம் உண்டானதை பார்க்கிறோம். அவர்கள் சில காலம் ஒருமித்து வாழ்ந்தனர். அபிமெலேக்கு ஆபிரகாம் கையிட்டுச் செய்த எல்லாக்காரியங்களிலும் தேவன் அவரோடிருந்ததைக் கண்டிருந்தான்.

அபிமெலேக்கு ஆபிரகாமை வலிமை பொருந்தினவராய் கண்டான், அவரோடுள்ள ஆசீர்வாதங்களை கண்டு அவன் ஆனந்திக்கிறவனாய் இருந்தான், அவன் எவ்விதத்திலும் ஆபிரகாமுக்கு இராணுவ பயமுறுத்துதலை அளிக்காது இருந்தான். கிறிஸ்தவர்களான நாம் சத்தியத்திற்கான நமது நிலையை அறிந்துகொள்ளுதல் வேண்டும், கோழைத்தனமாய் இருத்தலை தவிர்த்தல் வேண்டும்.

இப்படிப்பட்ட காரியங்களில் ஜனங்கள் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை விசுவாசியாமற் போனாலும் அவர்கள் உங்களைக் குறித்து வியப்பில் மூழ்கிப்போக வேண்டும். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பலவீன குணாதிசயமுடையவராய் இருக்கவில்லை மற்றும் எந்த ஒரு காரியத்திலும் அவர் ஒத்துப்போகவுமில்லை. அவர்கள் அவரை பிடிக்கச்சென்றபோது, 1000 க்கும் அதிகமான இராணுவ வீரர்களுடன் சென்றனர்.

ஆபிரகாமின் இராணுவம் மிகவும் வலிமையுள்ளதாய் இருந்தது, ஒழுக்க ரீதியிலும், சரீர ரீதியிலும் வலிமை மிக்கவராய் இருந்தனர். அவர்

தேவனுடன் நடக்கும் போது பாவத்துடன் புறமுதுகு காட்டி நடந்தார். எபிரெயர் 4:2 ல் நாம் தேவனை விசுவாசிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம் மற்றும் விசுவாசத்துடன் கலந்து வாழ வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆபிரகாம் தனது துறவுகளில் ஒன்று தனது ஆதிக்கத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது என்றார், அபிமெலேக்கோ அதை சரிசெய்து கொள்ளலாம் என்றான். அந்த துறவு பெயர்செபா என அழைக்கப்பட்டது.

இதனை நினைவுகொண்டாடும் உடன்படிக்கையாக அவர்கள் வச. 33-34 ல் மரங்களை அங்கு நட்டனர், ஆபிரகாம் அநேக ஆண்டுகள் பெலிஸ்தியரின் தேசத்தில் வசித்தார். ஆபிரகாம் ஏன் உயர்ந்தவராய் விளங்கிவருகிறார் காரணம் அவர் கர்த்தருடன் நடந்தார் மற்றும் தேவனது வார்த்தையின் வெளிச்சத்தில் நடந்தார்.

உபதேசங்கள்:

கிறிஸ்தவ வாழ்க்கை [இதற்கு முன்னுள்ள பாடத்தில் காண்க]

கிரியைகள் மூலம் இரட்சிப்பு (LEGALISM)

1. தேவனுடைய நியாயப்பிரமாணத்தின் சில பகுதிகள், விசுவாசி அதை மீறாதபடிக்கு அவரின் பெலத்துக்குரிய பகுதியாய் இருக்கிறது.

2. இரு நபர்கள் மனிதஇயல்பின்படி, ஒரேபகுதியில் அவர்கள் பலத்தையோ அல்லது பெலவீனத்தையோ பெற்று இருக்கமுடியாது.

3.நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியை மீறுவதே ஒருநபரை பாவியாகத்தீர்க்கிறது என்பது நியாயப்பிரமாணத்தின் மற்றொரு பகுதியாகும் - எல்லோரும் பாவம்செய்து தேவமகிமை அற்றவர்களானோம். (ரோமர்3:23).

4. சுயகிரியைகளின் மூலம் இரட்சிக்கப்படுவதும், சுயநீதியும், எல்லாபாவங்களும், பாவத்தன்மையிலிருந்தே வருகிறது என்பதை முற்றிலும் மறந்து செயல்படுகிறது.

5. ஒவ்வொருவரும் பாவசுபாவத்தைப் பெற்று இருக்கின்றனர். நியாயப்பிரமாணத்தை மீறுவது அவைகள் நிலைத்து இருக்கின்றபடியால் மீறுகின்றனர்.

6. சுயகிரியைகளின் மூலம் இரட்சிப்பை அடைவோர், தாங்கள் கைக்கொள்ளும் கட்டளைகளை முக்கியப் படுத்துகின்றனர். உண்மையுள்ள நபர்களோ, தாங்கள் நிறைவேற்றத் தவறும் கட்டளைகளை உணர்கின்றனர்.

7. உபதேசமானது, சுயக்கிரியைகளின் மூலம் இரட்சிப்பையும், சுயநீதியையும் கிருபையின் அடிப்படையில் நீங்கலாக்குகிறது.

8. சுயக்கிரியையின் மூலம் இரட்சிப்பு, பெலவீனரை குறுகிய வட்டத்திற்குள் கொண்டு வருகிறது அல்லது பாவத்தனமையின் மீது பாவத்தைசுமத்தி, பலவீனத்தையும், இன்னொருவரை காரணம் காட்டி பாவத்தை சுமத்துவதும் வலியுறுத்தப்படுகிறது.

9. ஒருவர் தனது சொந்த பெலத்தில் தவறும் போது, சுயக்கிரியை மூலம் இரட்சிப்பை வலிறுத்துவோர், அவர்களை ஆக்கிணைக்குட்படுத்துகின்றனர். அவர்கள் எல்லோரும் பாவம்செய்து பாவத்திற்குகீழாக இருக்கிறோம் என உணராதிருக்கிறார்கள்.

10. சிலவேளைகளில் சுயக்கிரியைகளின் மூலம் இரட்சிப்பு எனவாதிடுவோர், 1 யோவான் 1:8, மற்றும் 1 யோவான் 1:10 இவ்விரண்டு வசனங்கள் அடிப்படையில் மிகஆணித்தரமாய் அவைகள் நிறைவேறுதல் குறித்து கூறுகின்றனர்.

11. ஒருவர் ஒரு முறை பாவம் செய்யும்போதுமட்டுமே குற்றமனசாட்சியுடன் இருக்க முடியும், ஆயிரமுரை அதை செய்யும் போது அவ்வாறு இருக்க முடியாது. (யாக்கோபு2:10).

துறவுகள் / கிண்றுகள்

1. ஆதியாகமத்தில் துறவுகள் / கிணறுகள் எனக்குறிப்பிடப்படுவது முக்கிய பெயர்களை பெற்று இருக்கிறது, அவைகள் முக்கியமான நிகழ்ச்சிகளுடன் சம்பந்தப்பட்டுள்ளதாய் இருக்கிறது.

2. "பீர்-லகாய்-ரோயீ" இதன் பொருள் ஜீவிக்கிறவரின் துறவு அவர் என்னைக் காண்கிறவராய் இருக்கிறார் (ஆதி. 16:14, 24:62, 25:11).

3. "பெயர்-செபா" இதன் பொருள் உடன்படிக்கையின் துறவு (ஆதி. 21:25-33, 22:19).

4. "ஏசேக்கு" என்பதன் பொருள் வாக்குவாதம். (ஆதி. 26:20).

5. "சித்னா" இதன் பொருள் வெறுக்கப்பட்டது என்பதாகும் . (ஆதி. 26:21).

6. "ரெகோபோத்" இதன் பொருள் விரிவாக்கப்படுதல். (ஆதி. 26:22).

பாடம் 10 -- ஈசாக்கும் மோரியா மலையும்

முகவுரை:

புதிய ஏற்பாட்டில் எபிரெயர் 11:17-19 மற்றும் யாக்கோபு 2 ஆகிய வேதபகுதிகள் இத்தலைப்போடு சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசிக்கு தேவன் ஒரு திட்டத்தை வைத்துள்ளார். அவரோடு நாம் ஐக்கியப்படும்போது, அவைகளை நமக்கு நன்மைபயக்கும் வகையிலும், அவரது நாமம் மகிமைப்படும் வகையிலும் அவர் செயல்படுத்துகிறவராய் இருக்கிறார். இதற்கு ஆபிரகாம் பெரிய முன்மாதிரியிருக்கிறார், மற்றும் அவருடன் உள்ள ஐக்கியத்தில் நிலைத்து இருக்க மிகுந்த தைரியத்தை

எடுத்துக்கொண்டார். தேவனுக்கே கணக்கு ஒப்புவிப்பவராய் காணப்பட்டார். ஆபிரகாம் தேவனுக்கு மிக அருகாமையில் ஜீவிக்க கற்றுக்கொண்டார்.

உங்களுக்கு ஆவிக்குரிய பரீட்சைகள் இருக்குமானால், அவைகளை தேவன் பயன்படுத்தி, கிறிஸ்தவ வாழ்வில் முன்னேற வகை செய்கிறார். நாம் அதைரியப்பட்டு போய்விடக்கூடாது. பரீட்சை கிறிஸ்தவர்களுக்கு ஒரு தருணமாய் அளிக்கப்பட்டு விசுவாசத்தில் நடக்க அனுகூலங்களை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. நாம் விசுவாசத்தில் நடக்கப் பழக வேண்டும்.

இந்த அதிகாரத்தில் ஈசாக்கை பலி செலுத்தும் மிகப்பெரிய பரீட்சை, சிலுவையை நமக்கு படம் பிடித்துக் காட்டுகிறதாய் இருக்கிறது. இது கிறிஸ்து பலியாக்கப்படப்போகிற தீர்க்கதரிசன வரைபடமாய் இருக்கிறது. இங்கு நியாயப்பிரமாணது வரக்கூடிய காரியங்களுக்கு நிழலாய் இருக்கிறது.

வசனம் 1-2 ல் வேதாகமத்தில் கொடுத்துள்ள படி தேவன் ஆபிரகாமை சோதிக்கவில்லை, ஆனால் தேவன் ஆபிரகாமை பரீட்சித்து, ஆபிரகாம் என்ன செய்யவிருக்கிறார் என தேவன் காணவிரும்பினார். பரீட்சை என்கிற பதம் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் கிரேக்கப்பதம் - Testing -*peirazo* Gk, பெய்ரஜோ, எபிரெயப்பதம் *nasah* Heb - நஸாஹ் = இதன் பொருள் = செயல்படுத்தி முயற்சிப்பது அல்லது நிரூபிப்பது என்பதாகும். ஒரு நல்ல உதாரணம் சடங்காச்சார பட்டயத்தில் தொடு குறி உண்டாக அதை இரண்டாய் மடித்து பின்பு அதை உடைந்து போகாமல் நேராக்குவது.

தேவன் நம்மை பரீட்சிக்கும்போது நாம் உடைந்து போகாது இருக்க கவனமாய் இருக்கிறார் 1 கொரி. 10:13. இங்கு ஆபிரகாமுக்கு ஒரு தருணம் அளிக்கப்படுகிறதைக் காண்கிறோம், அது அவரது விசுவாசத்திற்கான பரீட்சை. வளர்ச்சி என்பது இப்படிப்பட்ட பரீட்சைகளை சந்திக்கும் போது மட்டுமே.

நீங்கள் இத்தொடர்பயிற்சியில் கற்றுக்கொள்ளும் ஒவ்வொரு காரியங்களும் பரீட்சை பார்க்கப்படும். உங்கள் வாழ்வில் பரீட்சையை எதிர் நோக்குங்கள். நீங்கள் தேவனால் ஏற்றுக் கொள்ளப் படும்படி கற்றுக்கொள்ளுங்கள், தேவனுடைய பணியாளாய், தேவனது வசனத்தை வெட்கப்படாது பகுத்து போதிக்கிறவர்களாயிருங்கள்.

நாம் எப்பொழுதும் விசுவாசத்துடன் தேவனது வார்த்தை கலக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும் - எபிரெயர் 4:2. இப்பரீட்சையானது தேவனது பூரணமான சமயத்தில் நிகழ்கிறதாய் இருக்கிறது. ஆபிரகாம் மோரியா என்னும் மலைக்குச் செல்ல வேண்டும், அங்குள்ள மலைகள் ஒன்றில் தனது குமாரனாகிய ஈசாக்கை பலியிட வேண்டும்.

மோரியா என்பதன் பொருள் "கர்த்தர் காணும்படியான, காரணமாய் இருத்தல் வேண்டும்" இம்மலையானது கொல்கொதா மலை என என்று பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது, இது கபாலஸ்தலம் என அழைக்கப்படுகிற இடம். ஆபிரகாம் இதை அறியாது இருந்தார், 2000 ஆண்டுகளுக்கு முன்னரே, தனது ஒரேபேரான குமாரனை பலி கொடுக்க கொல்கொதாவிற்கு அழைத்துச் சென்றதை ஆபிரகாம் முற்றிலும் அறியாதிருந்தார். இவ்வாறு செலுத்தப்படும் பலியானது, தேவன் தமது ஒரேபேரான குமாரனை சர்வலோகத்தின் பாவத்திற்காய் சிலுவையில் மரிக்கச்செய்வதற்கு இணையாக இருக்கிறதாய் இருந்தது.

வசனம் 3-5 ல் விசுவாசம் ஒரு மனிதனின் வாழ்வில் என்ன செய்கிறது என்பதை இங்கு காண்கிறோம். இங்கு ஒரு முதிர்ந்த விசுவாசியைக் காண்கிறோம். மோரியா மலைப் பிரயாணம் மூன்று நாட்கள் பிரயாணமாய் இருந்தது, இம்மூன்று நாட்களும் ஆபிரகாமுக்கு எவ்விதத்திலும் நிலகுலையச்செய்யும் சம்பவங்களோ, அல்லது உணர்ச்சிவசப்பட்டு அசைக்கப்படுவதோ இல்லாதிருந்தது, அவர் தனது குமாரனை பலி செலுத்தி கொலை செய்யும் நோக்கத்துடன் தேவனுக்கு தன்னைக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுத்து செல்கிறவராய் இருந்தார்.

இம்மனிதனின் அமைதியான தோற்றம் அவரது முகத்தில் காணப்பட்டது, தனது கழுதைகளை சேனம் கட்டினார், பிரயாணத்திற்கு தயாரானார், மரங்களை வெட்டிப்பிளந்து தேவன் தனக்கு சொன்னபடியே எல்லாவற்றையும் தயாராய் எடுத்துக்கொண்டார். உங்களுக்கு தேவனது அழைப்பு இருக்குமானால் எல்லாவற்றையும் முற்றிலுமாய் தயார் செய்து கொள்வது மிக முக்கியமானதாய் இருக்கிறது.

இப்பொழுது நீங்கள் கற்றுக்கொண்டு வரும் இத்தொடர் பயிற்சிக்குப் பின்னர், நீங்கள் தேவனால் ஊழியத்திற்கு அழைக்கப்பட்டு இருப்பீர்களானால், அல்லது போதிக்கும் ஊழியம் செய்வீர் களானால், நீங்கள் தொடர்ந்து இத்தொடர்பயிற்சிக்கான செயல்பாடுகளை நிறைவேற்றும்படி முயலுங்கள். ஆபிரகாம் கவலைப்பட்டதாய் தெரிய வில்லை, தேவன் எல்லாத்தேவைகளையும் பார்த்துக்கொள்வார் தானும் தனது குமாரனும் திரும்பி வருவோம் என்ற நிச்சயத்துடன் மலை ஏறினார்.

அம்மலையின் கொடுமுடிக்கு ஆபிரகாம் தனது குமாரானாகிய ஈசாக்குடன் ஏறிச் சென்று அவ்வாலிபனின் தொண்டையை அறுத்து பலியிடப்போகிறார். அவ்வாறு ஈசாக்குடன் ஏறிச்செல்லும்போது, ஈசாக்கு விறகுக்கட்டைகளை சுமந்து கொண்டு சென்றான். ஆபிரகாமின் விசுவாசம் மிகவும் வலிமையுள்ளதாய் இருந்தது, நான் கர்த்தர் சொன்னபடியே ஈசாக்கைப் பலிசெலுத்தினாலும், என் தேவன் ஈசாக்கை உயிரோடு எழும்பச்செய்வார் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை அவருக்குள் இருந்தது. அதைக் குறித்த எவ்வித சந்தேகமும் இல்லாதிருந்தது. இப்படிப்பட்ட செயல்களை இந்நாட்களில் செய்யும்படி பணிக்கப்படவில்லை. இது ஒரு முறைமட்டுமே உபதேசத்தை நிரூபனம் செய்ய நிகழ்ந்ததாய் இருக்கிறது.

இந்தப்பிரகாரமே யோனாவும் மூன்று பகல், மூன்று இரவு, பெரிய மீனின் வயிற்றில் இருந்தார், இது நமது கர்த்தரின் மரணம் மற்றும் உயிர்த்தெழுதலைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

ஆபிரகாம் இப்பொழுது தீயையும் மற்றும் கத்தியையும் மற்றும் விறகுகளை ஈசாக்கின் மீது வைத்துக்கொண்டு மலைமேல் ஏறினார் [வச. 6-10]. ஈசாக்கு பலிக்கான ஆடு இல்லை என்பதை அறிந்து ஆபிரகாமிடம் வினவ, ஆபிரகாம் உறுதியாய் கூறினார் தேவன் பலிக்கான ஆட்டைத்தருவார் என்றார். தேவன் தனது சொந்த ஆட்டுக்குட்டியாகிய இயேசுக்கிறிஸ்துவை அளிக்கிறவராய் இருந்தார்.

ஆபிரகாம் பலிபீடத்தைக் கட்டினார், ஈசாக்கை கட்டி அடுக்கிய கட்டைகளின் மீது வைத்தார் பின்னர் கத்தியை ஓங்கி பிள்ளையாண்டானை கொல்லும்படி ஆயத்தமானார், ஈசாக்கு நல்ல திடகாத்திரமான வாலிபனாய் இருந்தபடியால் அவன் விரும்பியிருந்தால் அவனது தகப்பன் ஆபிரகாமை எதிர்த்து தான் தப்பித்துக்கொண்டு இருக்கலாம். ஈசாக்கு தனது தகப்பனுக்கு தன்னை அற்பணித்து கொண்டான் காரணம் அவன் தனது தகப்பனில் நம்பிக்கை வைத்திருந்தான்.

வசனம் 11-12ல் ஆபிரகாம் தனது கத்தியை தயாராக வைத்திருந்தார். கர்த்தரின் தூதனானவர், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, முன் அவதார வடிவில் ஆபிரகாமுடன் பேசி அவரது குமாரனை கொல்ல வேண்டாம் எனக்கூறினார். ஆபிரகாம் தேவனை வெளிப்படையாக நம்பியதை இங்கு நிரூபணம் செய்கிறவராய் இருந்தார்.

இங்கு ஆபிரகாமோடு பேசுகிறவர் 2000 ஆண்டுகளுக்குப் பின்னர் இதே இடத்தில் ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, உங்களது மற்றும் எனது பாவங்களுக்காய் சிலுவைக்குச் சென்று மரிக்கப் போகிறவராய் இருக்கிறார். நமது இரட்சிப்பிற்காக பூரணமான, ஒரே பேரான தேவக் குமாரனை பிதாவாகிய தேவன் அளிக்கவிருக்கிறார்.

கர்த்தரின் இந்த பூரணமான கொடுகை இப்பொழுது புதரில் சிக்கிக்கொண்டிருந்த செம்மறி ஆட்டின் உருவில் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்டது. [வச. 13] செம்மறியாடு தனது குமாரனின் ஸ்தானத்தில் அப்பலிபீடத்தில் பலியிடப்பட்டது. ஈசாக்கின் ஸ்தானத்தில் செம்மறியாடு மரித்தது, நம் எல்லாரின் ஸ்தானத்தில் கிறிஸ்து மரித்தார்.

மனிதன் மரிக்க வேண்டியவனாய் இருக்கிறான், ஆனால் தேவன் அவனுக்கு பதிலாய் மரிக்கும் ஒரு பலியை கொடுக்கிறவராய் இருக்கிறார். ஆபிரகாம் அநேக காரியங்களை இந்தக் கொடுகை மூலம் காண்கிறவராய் இருக்கிறார். அவர் தேவனது கொடுகை ஒரு போதும் தவறிப்போவது இல்லை, தேவனது கொடுகையானது பாவத்திலிருந்து சுத்திகரிப்பதாயும் ஒரு இரட்சகராகவு இருக்கிறது.

இச்சம்பவம் நிகழ்ந்த அந்த மலையானது யெஹோவா யீரே என மறுபெயர் சூட்டப்பட்டது. இதன் பொருள் தேவன் அருளுவார் என்பதாகும். இந்த அற்புதமான பெயர் அம்மலைக்கு அளிக்கப்பட்டது. அம்மலை கொல்கொதா மலையாய் இருக்கிறது இம்மலையில் தேவன் மனிதனது எல்லா பிரச்சனைகளுக்கும் தீர்வை உண்டாக்கியிருக்கிறார்.

எபிரெயர் 11:17-19 ல் இப்பகுதிக்குரிய உபதேசப் பிண்ணனியத்தை நாம் பெற்று இருக்கிறோம். இது ஆபிரகாம், தேவன் எதை வாக்களித்தாரோ அதை அருளுகிறவராய் இருக்கிறார் என்றும் ஒரு வேளை ஈசாக்கு பலியிடப்பட்டு மரித்துப்போன நிலையிலும் அவனை உயிரோடு எழுப்ப தேவனால் ஆகும் என முழு நிச்சயத்துடன் காணப்பட்டார்.

இங்குதான் உங்களது விசுவாசம் உங்களை எடுத்துச் செல்கிறதாய் இருக்கிறது, தேவனுடைய வார்த்தை அதிக உண்மையுள்ளதாய் உங்களது பரீட்சையைக்காட்டிலும் இருக்கிறது. உங்களது சூழ்நிலை எவ்வளவு அஞ்சத்தக்கதாய் இருப்பினும் நீங்கள் தேவனது வார்த்தையை சொந்தம் பாராட்டுகிறவர்களாயிருப்பீர்கள். நீங்கள் தேவனுடைய கரத்தில் விட்டுவிடுகிறவர்களாய் இருப்பீர்கள். மலைமீது ஈசாக்குடன் ஏறிச்செல்லும் போது ஆபிரகாம் தேவனது கரத்தில் இருந்தார். அவர் தனது உறையிலிருந்து கத்தியை எடுத்து உயர்த்தும் போது அவர் தேவனது கரத்தில் இருந்தார், அவர் தேவனது சத்தத்தை கேட்டு சுற்றுமுற்றிலும் பார்த்தபோது அவர் தேவனது கரத்தில் இருந்தார்.

நாம் எப்பொழுதும் தேவனுடைய வார்த்தையின் மூலமே காணவேண்டும், ஒவ்வொரு காரியத்தையும் தெய்வீக கண்ணோட்டத்தில் காணவேண்டும். ஆபிரகாம் கர்த்தரை தனது தேவைகள் சந்திக்கப்பட்டதற்காய் துதித்தான் மற்றும் ஈசாக்கு பதிலாகும் உபதேச அனுபவத்தைப் பெற்றுக்கொண்டான்.

நாம் சிறிய காரியத்தில் கூட தேவனை நம்பும் பழக்கத்தை கட்டியெழுப்புதல் வேண்டும், பெரிய காரியங்கள் வரும்போது தானாகவே தேவன் மேல் நம்பிக்கை வைக்க உறுதியுடன் காணப்படுவோம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவனை நம்ப வேண்டும், ஒவ்வொரு நாளும் தேவனுடைய வார்த்தையை தியானித்தல் வேண்டும், இதுவே நமது கிறிஸ்தவ வாழ்வில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் காணப்படுகிறது. 1 தீமோத்தேயு 4:15, யாக்கோபு 1:19.

இப்பாடப்பகுதியிலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள்:-

[அ] கர்த்தரில் நீங்கள் வளரும் போது, நீங்கள் பரீட்சிக்கப்படுவீர்கள்.

[ஆ] கர்த்தர் உங்கள் வாழ்வில் முதன்மையாகவும், பிரதாணமாகவும் இருத்தல் வேண்டும்.

[இ] கர்த்தரில் ஓய்ந்து இருக்கும் விசுவாசியைத் தவிற, மற்ற விசுவாசி தேவனது ஆசீர்வாதத்தை அறிந்து கொள்ள இயலாது.

[ஈ] வேறெந்த காரியத்தையும் விட தேவனது வார்த்தை அதிக உண்மையுள்ளதாய் இருக்கிறது.

[உ] தேவன் உண்மையுள்ளவராகவே இருக்கிறார்.

[ஊ] தேவன் நமக்கு பதிலாக ஒருவரை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவத்தில் வைத்து இருக்கிறார்.

[எ] உங்களது சிறப்பான காணிக்கையை தேவனுக்கு அற்பணிப்பதிலிருந்து தவறி விடாதிருங்கள்.

யாக்கோபு 2:17-21 ல் யாக்கோபு விசுவாசம் கிரியை இரண்டையும் நமக்கு சீர்தூக்கி காண்பிக்கிறவராய் இருக்கிறார். ஐக்கியத்தில் நடந்துகொள்ளும் ஒரு விசுவாசியின் வாழ்வில் மட்டுமே விசுவாசத்தையும் கிரியையும் இணையாகக் கண்டுகொள்ளமுடியும். இங்கு நாம் ஆபிரகாம் நீண்ட நாட்களாய் தேவனுடன் நடந்துகொண்டதன் விளைவை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். ஆபிரகாம் ஆமென் என சொல்லியிருக்க முடியாது என நான் விசுவாசிக்கிறேன், தேவனே அதை சொல்லியிருக்க வேண்டும், ஆபிரகாம் தேவனுக்கு கீழ்ப்படிந்து மலையை நோக்கி தனது வீர பயணத்தை மேற்கொண்டார் மற்றும் இறுதிவரை கீழ்ப்படிய தயாரானார்.

உங்கள் கிரியைகள் எல்லா மனிதருக்கும் நீங்கள் நீதிமானாக்கப்பட்டீர்கள் என்பதைக் காண்பிக்கிறதாய் இருக்க வேண்டும். விசுவாசம் அது உண்மை விசுவாசமாய் இருக்கும்போது அது தனியே நின்று வாழ்வில் கிரியைகளை நடப்பித்து விசுவாசத்தை நிரூபணம் செய்கிறதாய் இருக்கிறது. கிரியை இல்லாத விசுவாசம் செத்தத்தாயும் அல்லது பயனற்றதாயும் இருக்கிறது. நீங்கள் தேவனது வார்த்தையை உங்கள் வாழ்க்கைக்கு சொந்தமாக்கிக் கொள்ளும்போது, ஆவியின் கனியை உங்கள் வாழ்வில் பெறுகிறவர்களாய் இருப்பீர்கள்.

வாக்குத்தத்தங்கள்

ஆட்டுக்குட்டி

ஆட்டுகுட்டி என்ற இத்தலைப்பு வேதத்தின் நடுநாயகமாய் விளங்கும் இயேசுக்கிறிஸ்துவை வேத எழுத்தாளர்கள், அவரது குணநலன்கள், கிரியை மற்றும் மகிமைப் படுதல் வரை, அதாவது ஆட்டுக்குட்டி முதல் ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமான இயேசுவின் படிப்படியான வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றனர்.

1. ஆதியாகமம் 4:3-5a

a) ஆபேல் தனது மந்தையிலிருந்து ஒரு ஆட்டுக்குட்டியை கொண்டு வந்தான்.

b) திருப்திபடுத்துதல் வலியுறுத்தப்படுகிறது - மூடுதல்

c) ஆட்டுக்குட்டி பாவநிவாரண பலியாய் இருந்தது.

2. ஆதியாகமம் 22:7-14.

a) ஆபிரகாமுக்கு ஒரு ஆட்டுக்கடா அளிக்கப்பட்டது.

b) பதிலாகுதல் வலியுறுத்தப்படுகிறது.

c) ஆட்டுக்குட்டி ஒரு நபரின் காணிக்கையாய் இருக்கிறது.

3. யாத்திராகமம் 12:3-7

a) ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும்.

b) பாதுகாப்பு வலியுறுத்தப்படுகிறது.

c) ஆட்டுக்குட்டி ஒரு குடும்பத்திற்கான காணிக்கையாய் இருந்தது.

4. லேவியராகமம் 1:10-13, 16:15.

a) பழுதற்ற ஆட்டுக்குட்டி.

b) ஆட்டுக்குட்டியின் தன்மை வலியுறுத்தப்பதுகிறது.

c) ஆட்டுக்குட்டி இஸ்ரவேல் தேசத்திற்கான காணிக்கையாய் இருந்தது.

5. ஏசாயா 53:4-8

a) ஆட்டுக்குட்டிக்குப்பதிலாக ஒரு நபர் அளிக்கப்படுவதை காட்டுகிறது.

b) ஈடுசெய்தல் வலியுறுத்தப்படுகிறது.

c) ஆட்டுக்குட்டி தெரிந்துகொள்ளப் பட்டவர்களுக்கான காணிக்கையாக இருந்தது.

6. யோவான் 1:29.

a) அந்த் ஆட்டுக்குட்டி இயேசுவாய் இருந்ததைக் காட்டுகிறது.

b) தனிப்பட்டவரது இரட்சிப்பு வலியுறுத்தப்படுகிறது.

c) ஆட்டுக்குட்டி முழு உலகத்திற்கான காணிக்கையாய் இருந்தது.

7. அப்போஸ்தலர் 8:30-37.

a) இயேசுவே கிறிஸ்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியா எனக்காட்டுகிறது.

b) தனிப்பட்டவரது இரட்சிப்பு வலியுறுத்தப்படுகிறது.

c) யாரெல்லாம் விசுவாசிக்கிறார்களோ அவர்களுக்குரிய காணிக்கையாய் இருந்தது.

8. 1 பேதுரு 1:18-21.

a) ஆட்டுக்குட்டியின் உயிர்த்தெழுதலைக் காட்டுகிறது.

b) மீட்பு வலியுறுத்தப்படுகிறது.
c) ஆட்டுக்குட்டி எல்லா சந்ததிக்கும் உரிய பலியாய் இருந்தது.

9. வெளிப்படுத்தல் 5:6-10.
a) ஆட்டுக்குட்டியின் மகிமைப்படுதலைக் காட்டுகிறது.
b) ஆட்டுக்குட்டியின் அரசாங்கம் (ஆழுகை) வலியுறுத்தப்படுகிறது.
c) (அண்டசராசரத்தின்) சர்வலோகத்தின் ஆட்டுக்குட்டி.

10. வெளிப்படுத்தல் 22:1-5.
a) நித்திய நித்தியமாய் ஆட்டுக்குட்டியின் அரசாளுகையை காட்டுகிறது.
b) ஆட்டுக்குட்டியின் நித்திய மகிமை வலியுறுத்தப்படுகிறது.
c) எல்லா நித்தியத்திற்குமுரிய ஆட்டுக்குட்டி.

தயை அல்லது கருணை பெறுதல்

1. ஆசரிப்பு கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப்பெட்டியின் மீது உள்ள கிருபாசனமே தேவனுடைய தயை அல்லது கருணை பெறும் இடமாய் இருந்தது.

2. உடன்படிக்கைப்பெட்டியின் வெளிச்சத்தில், கிருபாசனத்தைப்பற்றிய அறிவை நாம் பெற்றுக்கொள்ளலாம். (யாத்திராகமம் 25:10-22, 37:1-9).

3. உடன்படிக்கைப் பெட்டி (45" * 27" * 27") சித்தீம் மரத்தினால் செய்யப்பட்டு, (கிறிஸ்துவின் மனுஷீகம்) அது பொன் தகட்டால் (கிறிஸ்துவின் தெய்வீகம்) மூடப்பட்டிருந்தது.

4. உடன்படிக்கைப் பெட்டியில், பொற்பாத்திரத்தில் மன்னா, கற்பலகை, ஆரோனின் துளிர்த்தகோல், இவைகள் வைக்கப்பட்டிருந்தன. (எபிரெயர் 9:4). கற்பலகை தேவனின் பூரணத்தன்மைக்கு விரோதமான மனிதனின் செயல்பாட்டைக் குறிக்கிறது, துளிர்ர்த கோல் தேவன் அதிகாரத்தை நியமிக்கும்பொழுது, அதற்கு விரோதமான கலகத்தை இது காட்டுகிறது, பொற்கலசத்தில் வைக்கப்பட்ட மன்னா தெய்வீக அன்பளிப்பை புறக்கணித்தைக் காட்டுகிறது.

5. உடன்படிக்கைப்பெட்டி, நமது பாவங்களை தனது சரீரத்தில் சுமந்து மரத்தில் தொங்கின கிறிஸ்துவை சித்தரிக்கிறது. . (2 கொரிந்தியர்5:21).

6. கிருபாசனம் என்பது பொன்தகட்டால் செய்யப்பட்டு, அதன் மீது ஒன்றையொன்று நோக்கிக்கொண்டு இருக்குமாறு இரு கேருபீன்களை உடன்படிக்கைப்பெட்டியின் இரு விளிம்பில் வைத்து அங்கு தேவனுடைய பரிசுத்தம் விளங்கச்செய்யும் இடமாய் இருந்தது. (எபிரெயர் 9:5).

7. வருடத்தில் ஒருமுறை பிராயச்சித்த நாளில் பிரதான ஆசாரியன் கையில் இரத்தம் நிறைந்த பாத்திரத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருமுறை பிரவேசிப்பான். (முதல் முறை தனது பாவங்களுக்காகவும், மறுமுறை ஜனங்களின் பாவங்களுக்காகவும் பிரவேசிப்பான்) (எபிரெயர் 9:7). கிருபாசனத்தின் மீது அந்த இரத்தத்தைத் தெளிப்பான். தேவனின் நீதியும் அவரது நியாயமும் திருப்தி செய்யப்படும்.

8. தேவனுடைய தயை மற்றும் கருணையைப் பெறுவதினிமித்தம் அல்லது அவரது பரிசுத்த தன்மையை திருப்தி படுத்துவதால், அவர் விசுவாசியினிடத்தில் அன்பு கூற தடையின்றி விளங்குகிறார்.

9. கிருபாசனம், இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவத்தை வலியுறுத்துவதுடன், அவர் நமது மகா பிரதான ஆசாரியராய் இருக்கிறார் என்பதையும் பிரதிபலிக்கிறது.

10. எபிரெயர் 9:5 ல் கூறப்பட்டுள்ள "கிருபாசனம்" என்ற பதத்தின் பொருள் தயை அல்லது கருணைபெறுதல் என்கிற அர்த்தத்தை உடையது. (கிரேக்கச்சொல் - ஹிலாஸ்டெரியன் hilasterion) ரோமர் 3:25 ல் இப்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

11. தயை அல்லது கருணை பெறுதல், என்ற பதம் மெய்யாய், தேவனுடைய அன்பை, எல்லா விசுவாசிகளும் அவரது தகுதிக்கு அப்பாற்பட்ட நிலையில், பெறுவதை குறிக்கிறது.(1 யோவான்4:10).

12. தயை அல்லது கருணை பெறுவது, கிறிஸ்துவின் ஆளத்துவத்தை சம்பந்தப்படுத்தும் சொல் மற்றும் தேவனது தன்மையினால் மூடிமறைக்கும் சொல்லாய் பயன்படுத்தப்படுகிறது. (ரோமர் 3:25).

ஈசாக்கு - கிறிஸ்துவுக்கு ஒப்பனையாய் இருக்கிறார்

1. வேதபகுதி - ஆதியாகமம் 17:19 - 35:29

2. வாழ்க்கைச் சரிதை:

ஈசாக்கு என்ற பெயரின் அர்த்தம் நகைப்பு, இவர் ஆபிரகாம் சாராளின் குமாரனாய் இருந்தார். இவர் நீண்ட காலம் வாக்குத்தத்தத்திற்காய் காத்திருந்து, வாக்குத்தத்தத்தின் குமாரனாய் பிறந்தவர், இவரது நேரடி சந்ததியிலிருந்து இயேசுக் கிறிஸ்து வருகிறவராய் இருக்கிறார். 100 வயது சென்ற ஆபிரகாமுக்கு பாலுறவு கொள்ளும் வலிமையை இழந்துவிட்டார், இருப்பினும் தேவனுடைய அற்புத செயலின் படி, கேராரூரில் சுமார் 1900 கி.மு வில் ஈசாக்கு அற்புதப்பாலகனாய் பிறந்தார். இவரது வாலிபப்பருவம் நெருங்கும் சமயத்தில் இவரை பலி செலுத்த இவரது தகப்பனாரால் வழி

நடத்தப்பட்டு, தெய்வீக கொடுகையின் படி புதரில் சிக்கியிருந்த செம்மறி ஆடு இவருக்குப் பதிலாக பலியிடப்பட்டு இவர் உயிர் தப்பினார். இவருக்கு 40 வயது நிரம்பிய போது, ஆபிரகாமின் பெயரிடப்படாத வேலைக்காரன் மூலம் ரெபேக்காள் கொண்டுவரப்பட்டு, ஈசாக்குக்கு மனையாளாக அருளப்பட்டது. இவ்வாறு ஒழுங்கு செய்யப்பட்ட திருமணம் இனிதே நிறைவுற்று ஈசாக்கும் ரெபேக்காளும் அன்பு செலுத்தும் தம்பதிகளாய் தங்களது இல்லறத்தை நல்லறமாய் துவங்கினர். (ஆதியாகமம் 26:8). ஈசாக்கிற்கும் இவரது அண்ணன் இஸ்மவேலுக்கும் பிணக்கங்கள் இருந்த போதிலும், ஆபிரகாமை அடக்கம் செய்யும் போது இருவரும் சேர்ந்து அடக்கம் செய்தது குறிப்பிடத்தக்கது. (ஆதியாகமம் 25:9). ஈசாக்கின் 60 தாவது வயதில் இரட்டையரான யாக்கோபும் ஏசாவும் பிறந்தனர். ஈசாக்கு ஆடுமாடுகள் நிரம்பியவராக மிகவும் செல்வ செழிப்புள்ள சீமானாய் இருந்தார். அவரது வீட்டார் மிகவும் பெருகி அத்தேசத்தில் பொறாமை கொள்ளும் அளவுக்கு இருந்தது. தனது நாடோடி தகப்பனைப் போலல்லாது, ஈசாக்கு கேராரூரிலும் பெயர்செபாவிலுமாய் தங்கி தாபரித்தார். ஈசாக்கு பூரண விருத்தாப்பியராய் 180 ஆண்டுகள் வாழ்ந்து தனது மூன்று முற்பிதாக்களிலும் அதிக வயதுடையவராய் வாழ்ந்து மரித்தார். அவரது குமாரராகிய யாக்கோபும் ஏசாவும் இவரை நல்லடக்கம் செய்தனர். (ஆதியாகமம் 35:29).

3. மதிப்பீடு செய்தல்:

a) ஈசாக்கு வாக்குத்தத்தத்தின் வித்தாய் இருக்கிறார். (ஆதியாகமம் 17:16).
b) ஈசாக்கின் பிறப்பு ஒரு அற்புதமாய் இருந்தது, சரீரப்பிரகாரமாய் கருத்தரிக்க இயலாத நிலையில் இவர் பிறப்பு அற்புதமாய் இருந்தது (ஆதியாகமம் 17:17-19).
c) ஆபிரகாம் தனது குமாரனாகிய ஈசாக்கை பலிசெலுத்தக் கேட்டுக்கொள்ளப்பட்டார் (ஆதியாகமம் 22:1,2). மோரியா மலையில் பலி செலுத்தக் கேட்டுக்கொள்ளப் பட்டது.
d) ஈசாக்கு மரணபரியந்தம் தனது தகப்பனுக்கு கீழ்ப்படிகிறவராய் இருந்தார் (ஆதி. 22:5-12).
e) ஒரு செம்மறி ஆடு ஈசாக்கிற்கு பதிலாய் பலியிடப்பட்டது (ஆதி. 22:13).
f) ஈசாக்கின் கீழ்ப்படிதலுக்குப் பின்னர் அவரது தாயாய் சாராள் மரித்துப்போனாள் (ஆதி. 23:1).
g) ஆபிரகாம் தனது வயோதிப வேலைக்காரனை தனது குமாரனுக்கு மணப்பெண் தேட அனுப்பினார் (ஆதி. 24). மணப்பெண் அயல் தேசத்திலிருந்தும் வேலைக்காரனுக்கு இணங்கினாள்.
h) ரெபேக்காள் ஈசாக்கை மணம் முடிப்பதற்கு முன்னர் பொன்னும் வெள்ளியுமுடையவளாய் இருந்தாள் (ஆதி. 24:53).
i) ஈசாக்கு வெளியே சென்று ரெபேக்காளை தனது தாயாரின் கூடாரத்திற்குள் அழைத்துக்கொண்டு வந்தார். (ஆதி. 24:63-67).
j) ஈசாக்கின் திருமணத்திற்குப் பின்னர் ஆபிரகாம் மற்றொரு மனையாளை தனக்காய் தெரிந்துகொண்டார். (ஆதி. 25:1).

k) ஆபிரகாம் தனக்குண்டானவைகள் அனைத்தையும் ஈசாக்கிற்கு கொடுத்தார் (ஆதி. 25:5).
l) தேவனது உடன்படிக்கை ஈசாக்கினிடத்தில் உறுதி செய்யப்பட்டது. (ஆதி. 26:3-5).

3. அடிப்படைக் கோட்பாடு:

a) இயேசுக்கிறிஸ்து வாக்குத்தத்தத்தின் வித்தாய் இருக்கிறார் (கலாத்தியர் 3:16).
b) இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பு அற்புதமாய் இருந்தது, அவர் பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பம் தரிக்கப்பட்டு, கன்னிமரியாளின் வயிற்றில் பிறந்தார். (மத்தேயு 1:18-25).
c) தேவன் தமது ஒரே பேரான குமாரனை தந்தருளினார். (யோவான் 3:16; ரோமர் 8:32). இயேசு மோரியா மலையின் மீது மரித்தார்.
d) இயேசு மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராய் இருந்தார். (பிலிப்பியர் 2:5-8).
e) கிறிஸ்துவின் மரணம் நமக்கு பதிலாக இருந்தது (2 கொரிந்தியர் 5:21).
f) கிறிஸ்துவின் மரணத்திற்குப் பின்னர் இஸ்ரவேல் ஒதுக்கி வைக்கப்பட்டது, செம்மறியாட்டுச் சம்பவத்திற்குப் பின்னர் சாராள் மரித்துப்போனாள்.
g) பரிசுத்த ஆவியானவர் சபையைத் தேடும்படி அனுப்பப்பட்டார். அது பிசாசின் உலகில் இருந்த போதும் சபை அவருக்கு இணங்கி செல்கிறதாய் இருக்கிறது (எபேசியர் 6:12).
h) மணவாளனாகிய கிறிஸ்துவுடன் சபையானது மணம் முடிக்கும் முன்னர், சபையானது பொன், வெள்ளி, விலையுயர்ந்த கற்களை உடையதாய் இருக்கிறது (1 கொரி 3:12-15).
i) கிறிஸ்து சபையை மத்திய வானில் சந்திக்க இருக்கிறார் (1 தெசலோனிக்கேயர் 4:13-18), சபையை தனது பிதாவின் வீட்டிற்குள் அழைத்துச் செல்வார் (யோவான் 14:1-3).
j) சபை எடுத்துக்கொள்ளப்பட்டு இத்திருமணத்திற்குப் பின்னர், தேவனால் பயன்படுத்தப்படும் மற்றொரு காலம் இஸ்ரவேலுக்கு ஆரம்பமாக இருக்கிறது. (தானியேல் 12:1).
k) தேவன் எல்லாவற்றையும் கிறிஸ்துவின் கரத்தில் கொடுத்து இருக்கிறார் (எபே. 1:22; எபி.1:2).
l) இயேசுக்கிறிஸ்துவின் ஆவிக்குரிய பிள்ளைகள் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாய் இருக்கிறார்கள் (ரோமர் 9:8).

Lesson 1-10
Lesson 11-20

பாடம் 11 -- ஈசாக்கின் மனைவி

முகவுரை:

சாராள் மரணமடைந்தாள். ஆபிரகாம் இப்பொழுது தனது வாக்குத்தத்த புதல்வனாகிய ஈசாக்கிற்கு மணப்பெண் தேடும் காரியத்தில் தலைப்பட்டார். இப்பொழுது ஆபிராகாம் விருத்தாப்பியராய் வயது சென்ற நிலையில் காணப்படுகிறார். இவர் தேவனின் ஆசீர்வாதத்தைப் பெற்று ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் முதிர்ச்சியுற்ற விசுவாசியாய் ஆனந்தித்து வந்தார்.

ஆபிரகாம் தனது பிரதாண வேலைக்காரனை நோக்கி பண்டைய காலத்து வழக்கத்தின் படி தொடையின் கீழ் கையை வைத்து சத்தியம் செய்துகொடுக்கக் கூறினார். இச்சத்தியத்தின் முகாந்திரம் தனது வாக்குத்தத்தத்தின் குமாரனாகிய ஈக்கிற்கு கானானிய பெண்களிலிருந்து மணப்பெண்களைத் தேடக்கூடாது என்பதாகும் - 2 கொரிந்தியர் 6:1418. குடும்பத்தின் எதிர்காலம் இதைச் சார்ந்தே காணப்பட்டது.

இந்த வேலைக்காரன் பெயரிடப்படாதவனாய் இருந்தான். நாம் என்ன செய்கிறோமோ அதினால் நாம் அறியப்படுகிறோம்.

ஈசாக்கிற்கான மணவாட்டி:

இந்த வேலைக்காரன் பிரதாண உக்கிராணக்காரனாய் இருந்தான். இம்மனிதனிடம் ஆபிரகாம் ஈசாக்கை கல்வி பயிலவும், மற்றும் அவனுக்கு மணப்பெண் தேடும் பொருப்பையும் ஒப்படைந்து இருந்தார். இது குறித்து யாத்திராகமம் 29, ஏசாயா 52, எரேமியா 31 ஆகிய வேதபகுதியில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. ஒரு அவிசுவாசியும் ஒரு விசுவாசியை மணப்பதில்லை. இவ்வாறு செய்வோமானால் ஆரம்பித்திலிருந்தே ஆவிக்குரிய வாழ்க்கையானது அவிசுவாசிகளுடன் ஒத்துப்போகிறதாய் ஆகிவிடும். இப்படிப்பட்ட திருமணங்கள் சரித்திரத்தில் அநேக சந்தர்ப்பங்களில் அழிவையே கொண்டு வந்துள்ளது.

வேலைக்காரன் ஆபிரகாமின் இனத்தவரிடத்திற்கு சென்று பெண்தேடுவதாய் சத்தியம் பண்ணிக்கொடுத்ததன்படியே சேமின் வம்சத்தாரிடம் செல்கிறேன் என்றான், காமின் வமிசத்தினரிடம் செல்வதை தவிர்த்தான். ஆதியாகமம் 9:2327 கானான் சபிக்கப்பட்டவனாய் இருந்தான். நோவா குடித்து வெறித்து மானமங்கமாய் கிடக்கையில் காம் பார்த்துக்கொண்டிருந்து, கானான் ஓரினச் சேர்க்கையால் தூஷிக்கப்பட்டு சபிக்கப்பட்டான். சேமும் யாப்பேத்தும் தனது தகப்பனது நிர்வானத்தை மூடினர். கானானியர்கள் ஓரினச் சேர்க்கையினால் அறியப்பட்டவர்கள்.

கானான் சபிக்கப்பட்டவனாய் இருந்தான். கானியர்கள் முற்றிலுமாய் அழிக்கப்பட்டனர். அவர்கள் ஓரினச் சேர்க்கை மூலம் பெயர்பெற்றவர்களாயிருந்து சமுதாயத்திலிருந்து அகற்றப்பட்டவர்களாய் இருக்கின்றனர். மோசே ஆதியாகமம் 9 ல் பயன்படுத்தியுள்ள சொற்கள், அக்காட்சியை திரை போட்டு மூடுகிறதாய் இருக்கிறது, இதில் மறைவாய்

உள்ள செயல்கள் ஓரினச்சேர்க்கைக் குறிய செயல்களாய் இருந்தபடியால், நோவாவை மிகக்கொடிய சாபத்தை கானான் மீது அமர்த்தச் செய்தது.

அநேக ஆண்டுகள் கழித்து, ஆபிரகாம் ஈசாக்கிற்கு கானானிய இனத்திலிருந்து பெண்கொள்ள வேண்டாம் என உறுதியாய் கேட்டுக்கொண்டார், அவர்களில் சிலர் இரட்சிக்கப்பட்டு இருந்தும் இதை மிகவும் உறுதி செய்து கொண்டார். வாக்குத்தத்தமானது சேமின் வம்சாவழியிலிருந்து வருகிறதாய் இருந்தது.

ஆபிரகாம் நமக்கு ஒரு உதாரணமாய் இருந்து, நோவாவிடம் கற்றுக்கொண்ட உபதேசத்தை, வாக்குத்தத்தத்துடன் இணைத்து, அவர் இவ்விணைப்பின் அடிப்படையில் ஒருமுடிவுக்கு வந்தவராய் இருந்தார். இதன் ஒரு சில அடிப்படை கோட்பாடுகள் ஏதேன் தோட்டம் வரை செல்கிறதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட உதாரணங்கள் ஒரு விசுவாசி தீர்மானங்களை எடுக்கத் தலைப்படும் போது, கடைபிடிக்க வேண்டியவைகளாய் இருக்கின்றன. நமது தீர்மானங்கள் ஒவ்வொன்றும் தேவனுடைய வார்த்தையைச் சார்ந்து இருத்தல் அவசியம். நீங்கள் எடுத்த தீர்மானத்தைக் குறித்து தேவனது வார்த்தை ஏதாகிலு கட்டளையிடுமானால், அதைக்குறித்து உறுதி செய்து கொண்டு நிறைவேற்றப் பிரயாசப்படுங்கள்.

இது சம்பந்தமாய் 2 கொரிந்தியர் 6 ம் அதிகாரம் கட்டளைக்குரிய ஒரு நல்ல உதாரணமாய் எல்லா விசுவாசிகளுக்கும் உரியதாய் இருக்கிறது.

வேலைக்காரன் - பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்பாய் இருக்கிறான்:

ஆதியாகமத்தில் 24:5-6 ல் வேலைக்காரன் ஆபிரகாமை வினவினான், அப்பெண் என்னுடன் வர சம்மதிக்கவில்லையானால் நான் என்ன செய்வது? என்றான். நான் உமது குமாரனை அழைத்துச் சென்று அப்பெண்ணை சந்திக்க வைக்கட்டுமா? என்றான். ஆபிரகாம் மறுமொழியாக அவன் தனது குமாரனை தேவன் அழைத்துவந்த இந்த தேசத்திலிருந்து ஈசாக்கை அங்கு அழைத்துக்கொண்டு செல்லக்கூடாது என உறுதியாய் பணித்தார்.

இங்கு ஆபிரகாம் மறுபடியும் வேலைக்காரனுக்கு உபதேச அடிப்படை கோட்பாடுகளை பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். அந்தப் பெண் வர மறுப்பு தெரிவிப்பாள் எனில் அவள் என் குமாரனுக்கு தகுதியானவள் அல்ல. தேவனது கரம் இந்த விஷயத்தில் இருக்கிறது, மற்றும் தேவனுடைய தூதனானவர் உன்னை வழிநடத்துவார். இப்படிப்பட்ட காரியங்களை தீர விசாரித்த பின்னர், வேலைக்காரன் தனது கரத்தை ஆபிரகாமின் தொடையின் கீழ் வைத்து சத்திய பிரமாணம் செய்து கொடுத்தான். அவன் 10 ஒட்டங்களையும், சிலவேலைக்கார்களையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு பிரயாணத்தை ஆரம்பித்தான். அந்த வேலைக்காரன் ஆபிரகாமின் சகோதரன் நாகோரின் பட்டணமாகிய மெசப்பத்தோமியாவிற்கு சென்றான்.

வசனம் 7-14 ல் வேலைக்காரன் தனக்கூறப்பட்ட எல்லாவற்றின் படியே நடக்க கவனமானான். அவன் தனது விசுவாம் முழுமையும் தேவன் மீது வைத்திருந்தான், அவன் தனது வழிகளிலெல்லாம் கிருபையினால் வழிநடத்தப்பட்டவனாய் இருக்கிறான். அவன் கூறியது எல்லாம் எனக்காய் எதையும் செய்ய வேண்டாம் என் எஜமானருக்காய் செய்யுங்கள் என்றான். இது ஒரு பூரணமான வரைபடமாய், தன் எஜமானை மகிமைப்படுத்த விரும்பும் ஒரு விசுவசிக்கு இருக்கிறதாய் இருக்கிறது.

ஒரு பெண்ணிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது பழக்க வழக்கத்தில் இருந்துவந்த காரியமாய் இருக்கிறது, இது சீகார் என்னும் சமாரியா பட்டணத்தில் சமாரியப் பெண்ணிடம் கர்த்தர் குடிக்கத் தண்ணீர் கேட்டதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. அவ்வேலைக்காரனுக்கு அப்பெண் அளித்த மரியாதை ஒரு அடிமைக்கு அளிக்கும் மரியாதை போன்று இராதிருந்தது. அப்பெண் ஒருவேளை மறுதலித்து இருக்கலாம்.

வேலைக்காரன் கர்த்தரிடம் ஈசாக்கிற்கு பொருத்தமான பெண்ணைக் காட்டுமாறு கேட்டுக்கொண்டான். பத்து ஒட்டகங்களுக்கு சுமார் 500 லிட்டர் தண்ணீரை கிணற்றிலிருந்து இறைப்பது கடினமான காரியம். இந்தப் பெண் மற்றவர்களைக்குறித்து கரிசனை உள்ளவளாய் இருந்தாள். இது ஒரு பூரணமான பரீட்சையாய் இருந்து அவளது குணாதிசயத்தை புறிந்துகொள்ள உதவியாய் இருந்தது. இவ்வேலைக்காரன் அப்பெண்ணின் அழகையோ அல்லது கல்வி மற்றும் அந்தஸ்தையோ பார்க்கவில்லை. இருப்பினும் தேவன் இவைகள் அனைத்தையும் ரெபேக்காளில் போனஸ் பிளஸ்ஸாக கூட்டிக்கொடுத்தார்.

ஒருவர் ஒருவருடன் உறவு கொள்வதற்கு முன்னர் நெருங்கிப்பேசி அவர்களது குணாதிசயங்களை கண்டுகொள்வார்கள். இப்படி செய்வது தவறிழைப்பதிலிருந்து பாதுகாக்கும்.

எதிர்கால மணவாட்டி:

ரெபேக்காள் இப்பொழுது வேலைக்காரனுக்கும் அவனது ஒட்டகங்களுக்கும் ஒரு வேலைக்காரியைப் போல செயல்பட்டது பாராட்டுவதற்குரியதாய் இருந்தது.

வசனம் 22-28 வேலைக்காரன் அநேகம் ஆயிரம் டாலர்கள் பெறுமான ஆபரணங்களை அவளுக்கு அளித்து அவள் யாருடைய குமாரத்தி என வினவினான். மற்றும் அவன் உனது தந்தையின் வீட்டில் இராத்தங்குவதற்கு விடுதி ஏதேனும் உண்டா எனவும் வினவினான். இதை அவன் கேட்டதற்கு காரணம் பண்டைய உலகில் சத்திரமானது விபச்சார விடுதியை விட சற்று பெரியதாய் இருக்கும், காரணம் மதிப்பிற்குரிய பயணிகளுக்கு அங்கு அங்கு அகலமான படுக்கை கொடுக்கப்படும்.

அவள் தன்னை இனங்கண்டுகொண்டவளாய் வேலைக்காரன் அங்கு தங்க அனுமதி அளித்து ஒத்துக்கொண்டாள். அவள் குடும்பத்தின் தீர்மானத்திற்கான பொறுப்பை எடுத்துக்கொண்டவளாக, அக்குடும்பத்தில் அவளுக்குண்டான பொறுப்பை காண்பித்தாள். அவள் முதிர்ச்சியுள்ளவளாயும், மிகவும் நிலையான தன்மையுள்ளவளும், கலங்கமற்றவளாயும் இருந்தாள். வேலைக்காரன் இப்பொழுது காரியம் கூடிவந்ததினிமித்தம், தலைவணங்கி தேவனை தொழுதுகொணடான். ரெபேக்காள் இப்பொழுது வீட்டிற்கு கடந்து சென்று வீட்டார் அனைவரிடமும் நடந்த யாவற்றையும் சொன்னாள்.

அவளுடைய சகோதரன் லாபான் ஒரு விசுவாசியாய் இருந்தான் ஆனால் அவன் ஒரு சரியான நபர் அல்ல. அவன் வெளியே ஓடி தனது சகோதரி கூறிய அந்நபரை காணத்துடித்தான். வேலைக்காரனைக் கண்டு அவன் ஒரு நல்ல வரவேற்பை அளித்தான். அவன் அவ்வேலைக்காரன் கர்த்தரால் நடத்தப்பட்டு வந்துள்ளான் என்பதை புறிந்துகொண்டான். லாபான் அவனுக்கு உணவு பரிமாறினான், வேலைக்காரனோ, தான் வந்த வேலை முடிவடையும் வரை எதையும் புசிக்கமாட்டேன் என்றான். இவனது முக்கியத்துவம் மிகவும் சரிதானே, நாமும் இப்படியே இருக்கிறோமா? அநேகர் சமுதாய வாழ்வில் மூழ்கிப்போய் விடுகிறவர்களாய் இருக்கிறார்கள். உங்கள் நேரத்தை சரியாய் பயன்படுத்தக் கற்றுக்கொள்ளுங்கள். ஐக்கியத்திற்கு முன், ஆவிக்குரிய உணவை முதலில் பெற்றுக்கொள்ளுங்கள்.

வசனம் 34-48 வரை வேலைக்காரன் முழுமையாய் நடந்த சம்பவங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் கூறினான், இது அவர்கள் எடுக்கும் தீர்மானத்திற்காக இவ்வாறு சொன்னான். சபையில் நீங்கள் எல்லா உண்மைகளையும் தெளிவுறக் கூற வேண்டும் இதினிமித்தம் ஜனங்கள் சரியான தீர்மானம் எடுக்க பேருதவியாய் இருக்கும்.

கீழ்க்கண்ட வசனங்களில் வேலைக்காரன் பதிலை வினவினான், அவன் ரெபேக்காளை ஈசாக்கின் எதிர்கால மணவாட்டியாய் தன்னுடன் அழைத்துச் செல்லும் விருப்பத்தைத் தெரிவித்தான். அக்குடும்பத்தினருக்கு கர்த்தரின் கரம் இதில் இருப்பது மிகவும் தெளிவாய் புறிந்து கொள்ள முடிந்தது. இதினிமித்தம் சம்மதம் தெரிவிப்பதை தவிற அவர்களுக்கு ஒன்றும் சொல்ல முடியாது இருந்தது. அவர்கள் தங்கள் வழியில் தங்கள் இஷ்டப்படி ஒன்றும் சொல்ல இடம் இல்லாது இருந்தது.

நீங்கள் தேவனது சித்தத்திற்கு எதிராய் இருப்பீர்களானால் தேவனது சிட்சைக்கு உள்ளாக நேரிடும். இந்த வேத பகுதியில் லாபான் ரெபேக்காள் சில நாட்கள் தங்களுடன் தங்கியிருக்கட்டும் எனக்கேட்டுக்கொண்டான். வேலைக்காரன் சொன்னான் நான் எப்படியிருப்பினும் இப்பொழுது நான் போயாக வேண்டும் என்றான், அவர்கள் ரெபேக்காளை அழைத்து அவள் விருப்பத்தைக் கேட்டபொழுது அவள் போகிறேன் என்றாள்.

அப்பொழுது வசனம் 60 ல் ரெபேக்காளுக்கு பெரிய ஆசீர்வாதங்கள் அளிக்கப்பட்டு, அவளது வேலைக்காரிகளுடன் ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு அவர்களுடன் பயணமானாள். ஹாய் ரோய் என்னுமிடத்திலிருந்து ஈசாக்கு தியானம் செய்ய மாலைப்பொழுதில் செல்லும் போது தன் கண்களை ஏறெடுத்து ரெபேக்காள் வருகிறதைக் கண்டான், அவன் அவளை முதன்முதல் கண்டதுமே காதலில் விழுந்தான். இவர்கள் ஒருவருக்காய் ஒருவர் நியமிக்கப்பட்டவர்கள். கர்த்தர் உங்களுக்காய் ஒரு நபரை வைத்து இருப்பார் எனில் அந்நபருக்காய் நீங்கள் காத்திருத்தல் வேண்டும்.

சபையில் நீங்கள் அதிக நேரம் செலவளித்து சபை மக்களுக்கு உறவு மற்றும் திருமணம் குறித்து போதித்தல் மிகவும் அவசியம். விசுவாசியாகிய நீங்கள் மனத்தெளிவுள்ளவர்களாய் இருத்தல் அவசியம். நீங்கள் கர்த்தருக்கென உங்களை அற்பணித்து இருக்கிறீர்கள், ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஒழுங்கிற்கே அல்லது சபைக்கோ அல்ல.

உபதேசம்:

வேலைக்காரனின் மாதிரி

1. [ஆதியாகமம் 24 ல்] திருமணமாகாத வேலைக்காரன் மாதிரி வேலைக்காரனைச் சித்தரிக்கிற வனாய் இருக்கிறான், மற்றும் பரிசுத்த ஆவியானவருக்கு மாதியாயும் திகழ்கின்றான்.

2. மாதிரியுள்ள வேலைக்காரன் தனது எஜமானை முந்திக்கொள்ளமாட்டான் [வச 2-9] நாம் தேவனுக்காய் காத்திருத்தல் அவசியம், நமக்கு குறிக்கப்பட்ட நேரத்திற்கு முன்பதாய் ஓடுதலை தவிர்க்க வேண்டும்.

3. மாதிரியுள்ள வேலைக்காரன் எங்கு அனுப்பப்படுகிறானோ அங்கு மட்டும் செல்கிறவனாய் இருக்கிறான் [வச 4,10] நாம் பூகோள ரீதியில் தேவன் எங்கு நியமித்து இருக்கிறாரோ அங்கேயே இருக்க வேண்டும்.

4. மாதிரியுள்ள வேலைக்காரன் சொல்லாத எந்த ஒரு காரியத்திலும் தலைபோட மாட்டான். தேவன் ஒவ்வொரு விசுவாசிக்கும் செய்யும்படியான பிரத்தியேகமான பணியை நியமித்துள்ளார். நமக்கு நியமிக்கப்பட்ட பகுதியில் கவனம் செலுத்த வேண்டுமேயல்லாது, வழிவிலகி செல்லுதலை தவிர்த்தல் வேண்டும்.

5. மாதிரியுள்ள வேலைக்காரன் நன்றியுள்ளவனும் ஜெபிக்கிறவனுமாய் இருக்கிறான். நமக்குரிய வல்லமை எங்கிருந்து வருகிறது என்பதை எப்பொழுதும் உணர்ந்துகொள்ளுதல் அவசியம், மற்றும் நாம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் மற்றும் செழிப்பை அடையும் போது பெருமை கொள்ளுதலை தவிர்த்தல் வேண்டும்.

6. மாதிரியுள்ள வேலைக்காரன் முன்னேறிச் செல்லுவதில் கவனமாய் இருக்கிறான் [வச 17-18, 21]. சுவிஷேசம் அறிவிப்பதில் நாம் கவனமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும் [ரோமர். 1:14-16].

7. மாதிரியுள்ள வேலைக்காரன் தனக்காக பேசாமல் தனது எஜமானனுக்காய் பேசுகிறவனாய் இருக்கிறான். நாம் யார் என்னவாய் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, கிறிஸ்து யார் என்னவாய் இருக்கிறார் என்பதே எல்லாவற்றிலும் மிக முக்கியமானதாய் இருக்கிறது. [வச. 22, 34-36].

8. மாதிரியுள்ள வேலைக்காரன் உண்மையான காரியங்களை அளிக்கிறவனாய் இருந்து, தெளிவான தீர்மானங்களை எடுக்கிறவனாய் இருக்கிறான். [வச 49]. நாம் சுவிஷேசத்தையும் மற்றும் மற்ற உபதேசங்களையும் தெளிவுடன் அளித்து அதன் விளைவுகள் என்ன என்பதை கண்ணோக்குகிறவர்களாய் இருத்த வேண்டும்.

<u>பாடம் 12 -- அதிகாரம் 25</u>

முகவுரை:

மரிக்கும் கிருபையைக் குறித்து பொதுவான கருத்து இருக்கிறது. மரிக்கும் கிருபையானது தேவனது கிருபையால் நிரூபணம் செய்யப்படுகிறது. அது நமது மரணத்தின் மூலம் நிரூபணம் செய்யப்படுகிறது. நீங்கள் தேவனுடன் ஐக்கியத்தில் நடந்துகொண்டு இருப்பீர்களானால், இவ்வுலக வாழ்க்கையை விட்டு கடந்து செல்லும் போது கனப்படுத்தக்கூடிய வழியில் கடந்து செல்கிறவர்களாய் இருப்போம்.

ஆபிரகாம் ஈசாக்கிற்காய் வைக்கப்பட்டிருந்த வாக்குத்தத்தத்தை கண்டபின்னர் அவர் மரிக்கிறவராய் இருந்தார். தேவனது வாக்குத்தத்தம் பாதுகாப்பானது காரணம் அவைகள் தேவனது குணாதிசயத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆபிரகாமுக்கு 40 ஆண்டுகாலங்கள் மறுபடியும் கொடுக்கப்பட்டது. அவர் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவராய் அற்புதமான வழியில் கேத்தூராள் "தூபத்தின் புகை" என்ற இன்னொரு பெண்ணை தேவன் அவருக்கு கொடுத்தார். இவளது பெயருக்கேற்ப இவளது வாழ்க்கையானது அழகிய நறுமணமாய்த் திகழ்ந்தது. இவளது வாழ்க்கையானது ஒநேசிமுவின் வாழ்வைப்போன்று மற்றொருவரின் வாழ்வுக்கு முன்னேற்றத்தை அளிப்பதாய் இருந்தது.

நோவாவின் உடன்படிக்கையும் மற்றும் ஆபிரகாமின் மனைவிமார்களும்:

ஆபிரகாம் கேத்தூராளுடன் முழுமையான உறவுடனும், அநேக குமாரர்களுடனும் வாழ்க்கை செய்தார். இவ்வாறு வாழ்ந்ததன் மூலம் அவர்

அநேக தேசங்களுக்கு தகப்பன் என்கிற பொதுக்கருத்தை நிறைவேற்றுகிறவராய் இருந்தார். இவரது மனைவியாகிய ஆகார் காமின் சந்ததி, சாராள் சேமின் சந்ததி, கேத்தூராள் யாப்பேத்தின் சந்ததி இவ்வாறு நோவாவின் மூன்று குமாரரின் சந்ததியிலிருந்து மூன்று மனைவிமார்களைப் பெற்று வாழ்ந்தார்.

ஆதியாகமம் 9:25-27 ல் உள்ள நோவாவின் உடன்படிக்கையானது ஆபிரகாமின் மனைவிமார்களாகிய காமின் சந்ததியாகிய ஆகார், சேமின் சந்ததியாகிய சாராளின் அடிமைப்பெண்ணாய் இருந்தாள், யாப்பேத்தின் சந்ததியான கேத்தூராள் சேமின் கூடாரங்களில் ஆசீர்வதிக்கப்பட்டவளாய் அநேகக் குமாரருடன் வாழ்ந்தாள், இதில் ஆபிரகாமின் சந்ததியான காமுக்கும், சேமுக்கும் முறண்பாடு இருப்பது குறிப்பிடத்தக்கது.

மெய்யான ஆசீர்வாதம் எப்படியிருப்பினும் சேமின் மூலமாகவும் ஈசாக்கின் மூலமாகவும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் வம்சாவழி அமைகிறதில் இருக்கிறது. நமது ஆர்வத்தைத் தூண்டுகிற மற்றொரு காரியம் மேற்கத்திய நாடுகளின் சரித்திரத்தைக் கண்ணோக்கும் போது அவர்கள் விசுவாசத்தில் பெரிய தேசங்களாய் விளங்குகின்றனர். மேற்கத்திய நாடுகள் தற்போது சரிவடையத் துவங்கியுள்ளன காரணம் அவர்கள் விசுவாசத்தில் சரிவடைய துவங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விணைப்பில் சம்பந்தப்பட்ட சேபா தேசத்தின் ராஜாத்தி 1000 ஆண்டுகளுக்குப்பின்னர் சாலமோனை சந்தித்தது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

ஆபிரகாம் 5 ம் வசனத்தில் தனக்குண்டானவற்றையெல்லாம் ஈசாக்கிற்குக் கொடுத்தார். கேத்தூராளின் பிள்ளைகளுக்கும் அவர்கள் வாழ்வதற்குரிய வெகுமதிகளைக் கொடுத்தார். அவர்களை தன்னைவிட்ட அனுப்பிவிட்டார், அவர்கள் வாக்குத்தத்தத்தின் குமாரனை பார்த்துக்கொண்டதைப் போல பார்த்துக்கொள்ளப்படவில்லை.

மறுமணமும் தர்மஸ்தாபனமும்:

1 தீமோத்தேயு 5:11-16 ல் மறுமணம் குறித்த பிரச்சனை குறிப்பிடப்பட்டுள்ளது. சபையில் தருமபணத்தை யார் பெற்றுக்கொள்ள வேண்டும்? ஒரே மனிதனுக்கு மனைவியாய் இருந்து கனியுள்ள வாழ்க்கை செய்த 60 வயதுக்கு மேற்பட்ட விதவையிடம் இத்தருமபணத்தை ஒப்படைக்கலாம். அவள் நற்சாட்சியில்லாதாவளாய் இருப்பாளேயானல், இந்தகாரியத்தில் உதவி செய்ய தகுதியற்றவளாகிறாள். கர்த்தரை பின்பற்றாதவர்கள் இருப்பார்களேயானல், இக்குழுவில் சென்று உதவியை நாடவும் அவள் கர்த்தரை பின்பற்றவும் அறிவுரை அளிக்கப்படுகிறாள். இளம் விதவைகளிடமிருந்து எதுவும் எதிர்பார்க்கப்படுவதில்லை, அவர்கள் மறுமணம் செய்துகொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

சபையால் ஆதரிக்கப்படும் ஒரு விதவை சபைக்காய் இரவும் பகலும் ஜெபிக்கவும், நற்கிரியைகளைச் செய்யவும் எதிர்பார்க்கப்படுகிறாள். இதை அவளுக்கு செய்யமன மில்லை யானால் அவள் எவ்வித

உதவிப்பணமும் பெற்றுக்கொள்ளக்கூடாது. கர்த்தரிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொள்வீர்களானால், நீங்கள் கர்த்தருக்கென கணிசமான நேரத்தை கர்த்தருடைய சேவை செய்வதற்கு என அற்பணித்தல் வேண்டும்.

பவுல் இளம் விதவைகள் மறுமணம் செய்துகொள்ள கூறுகிறார் வச 14. பவுல் என்ன சொல்கிறார் என்றால், உங்களது வாழ்க்கைத் துணை மரிக்கும் போது, தேவன் உங்களுக்கென மற்றொரு வாழ்க்கைத்துணையை வைத்துள்ளார், அவ்வாழ்கைத் துணையை அவர் அருளுகிறவராய் இருக்கிரார். குறைந்த பட்சம் ஓராண்டு காலம் துக்கப்படவும் புலம்பவும் மறுமணத்திற்கு முன்னர் கால அவகாசம் ஒதுக்கப்படுகிறது. இக்காலத்தை முறையாய் பயன்படுத்தி கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை அறிகிற அறிவிலும் மற்றும் அவரிடத்தில் அன்புகூறுவதிலும் செலவிட வேண்டும், மற்றும் அவர் மறுமணத்திற்கான ஒரு நபரை தருகின்ற வரையில் பொறுமையுடன் காத்திருக்கவும்.

வயோதிப பருவமும் ஆபிரகாமின் மரணமும்:

ஆதியாகமம் 25:7 ல் ஆபிரகாம் தனது 175 வது வயதில் பூரணவயதுள்ளவராய் தனது மரித்துப்போன தனது விசுவாசப்பிதாக்களிடம் சேர்க்கப்பட்டார் எனக்கூறுகிறது. வயோதிப பருவம் எதையும் மறைத்துவைக்க உங்களை விடுவதில்லை. வாலிப பருவத்தில் அநேக காரியங்களை உங்களால் செய்திருக்க முடியும் ஆனால் வயது முதிர்ந்த காலத்தில் உங்களுக்குள் என்ன இருக்கிறதோ அதை மட்டுமே பெற்று இருக்கிறவர்களாய் இருக்கிறீர்கள்.

வயோதிப காலத்தில் பாவத்தை சரியாய் கையாள வில்லையானால், கசப்பின் வேர் உங்களுக்கு அதிகமான பிரச்சனைகளுக்கு காரணமாகி விடும். நீங்கள் வயது சென்றகாலத்தில் யாரவது ஒருவரை ஒருநாளில் சார்ந்து இருக்க வேண்டியதாய் இருக்கிறது. அவர்களிடம் உங்களது உள்ளான வாழ்க்கையை கூற அவசியமாய் இருக்கிறது. வயது சென்றவருடன் அநேகர் ஒத்துப்போக இயலாதவர்களாய் இருக்கிறார்கள், மற்றவர்கள் அவர்களை மிகவும் மரியாதையுடன் நடத்துகிறார்கள்.

நீங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை நேர்மையுடனும் உண்மையுடனும் சேவிக்க இருப்பீர்களானால், நீங்கள் உங்களது வயோதிப பருவத்தைக் குறித்து சிந்திக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. ஆபிரகாம் காரியங்களை குவித்து வைக்கவில்லை அவர் பிரச்சனைகளை அறிந்து தனது பாவங்களை அறிக்கை செய்தார். என் இருதயத்தில் அக்கிரம சிந்தை இருக்குமேயானால் தேவன் எனக்குச் செவிகொடார். நீங்கள் பாவத்தை அறிக்கை செய்து உங்களது சிந்தனை மற்றும் உங்கள் செயல்களை சீர்தூக்கிப்பார்த்தல் அவசியம். கடைசி நாட்களில் வயோதிபரது சிந்தனை அவர்களை அழிக்கிறதாய் இருக்கும்.

ஒரு குழந்தையாய் இருக்கும்போது கர்த்தரை புறக்கணித்தல் சாத்தியமாய் இருக்கும், முதிர் வயதாகும் போகும்போதோ வாழ்வின் இறுதிப் பருவம்

மனந்திரும்புதலுக்குரிய கடைசி சந்தர்ப்பமாய் இருக்கிறது. வயோதிப காலத்தில் நினைவு கூற வேண்டியது, நீங்கள் மரணத்திற்கு பின்னர் கர்த்தருடன் நித்தியத்தில் இருக்கப்போகிறீர்களா அல்லது அக்கினிக்கடலில் பங்கடையப்போகிறீர்களா என்பதை சிந்திக்க வேண்டியது அவசியம். வயோதிபர் மத்தியில் ஊழியம் செய்வது ஒரு பெரிய ஊழியமாய் இருக்கிறது. சபையின் ஊழியராகிய நீங்கள் உங்களது ஊழியத்தில் வயோதிபருக்கான சுவிஷேச ஊழியம் மிகவும் அவசியமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட மக்களுடன் நேரடியாக சிறிய பேச்சுக் கொடுத்து அவர்களது மன நிலையை புறிந்து கொண்டு அவர்களை சத்தியத்திற்குள் வழிநடத்துவது அவசியமாய் இருக்கிறது.

ஆபிரகாம் தேவனுடன் நடந்து வருகிறபடியால், தேவனது ஆசீர்வாதம் அவரது மரணத்தில் இருந்தது. ஒரு விசுவாசி தேவனுடன் நடப்பார் என்றால், அவர்கள் மரிக்கும் போது அவர்கள் ஆயுசின் வருடங்கள் பூரணமாய் இருக்கும். பவுல் சொன்னார் அவர் நல்ல போராட்டத்தை போராடினேன் ஓட்டத்தை முடித்தேன் நித்தியத்திற்கு தான் ஆயத்தமாய் இருக்கிறேன் என்றார்,

ஆபிரகாமின் மரணத்தைக்குறித்த புதிய ஏற்பாட்டுக் கண்ணோட்டம் எபிரெயர் 11:13-16 ல் கொடுக்கப்பட்டுள்ளது. வச. 16 ல் அவர் ஒரு புதிய தேசத்தை வாஞ்சித்தார் எனக்காண்கிறோம். ஆபிரகாம் பூமியில் இருக்கும் போதே, தனது நித்தியத்தை கண்டு அதை மீது தனது கவனத்தை வைத்தார்.

வாழ்க்கையை நித்தியத்தின் கண்ணோட்டத்தில் காண்பீர்களானால், உங்களது வாழ்க்கையானது ஓரிடத்தில் சேருவதை நீங்கள் காணமுடியும். நாம் நித்தியத்திற்குச் செல்கிறோம் என்பதை அறியும் போது, நாம் ஒரு பெரிய நம்பிக்கை பெறுகிறோம், மற்றும் நமது வாழ்வைக் குறித்த சரியான கண்ணோட்டத்தைப் பெறுகிறோம். இதினிமித்தம் நாம் கர்த்தருக்கு உண்மையாய் வேலை செய்கிறவர்களாயிருக்கிறோம். நீங்கள் பவுலுடன் இணைந்து பாட முடியும், பவுலைப்போன்றே களிகூற உங்களால் முடியும். நீங்கள் உங்களுடன் இதைக்குறித்து பேசமுடியாது ஆனால் பரிசுத்த ஆவியானவர் உங்களை வழி நடத்திச் செல்கிறவராய் இருக்கிறார். வாழ்வில் உங்களது மரணத்திற்கான அஸ்திபாரத்தை இடுகிறவர்களாய் இருக்கிறீர்கள். சாக்ரடீஸ் கூறுகிறார் மரணத்தை தழுவும் வரைக்கும் ஒருவரும் மகிழ்சியாய் இருந்ததில்லை, இது கிரேக்க தத்துவத்தை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது, வயோதிப வயதில் உங்களது உண்மையான சுயம் தன்னைக் காண்பிக்கிறதாய் இருக்கும்.

நாம் ஒவ்வொரு நாளையும் கிருபையின் நாளாய் தீர்மானித்து, உண்மையின் வெளிச்சத்தில், நமது வாழ்வை சீர்தூக்கிப்பார்த்து பூமியில் நமது நாட்கள் முடிந்து போகிறதாய் இருக்கிறது என உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். புதிய ஆண்டில் தயாரிக்கப்படும் கௌரவிக்கும் பட்டியலில் தங்களது பெயரைக்கண்டு ஒருவரைக் குறித்து ஜனங்கள் எண்ணுவதைப்பார்க்கிலும், கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பின்

சிங்காசனத்திற்கு முன் கௌரவிக்கப்படுவது அதிக மேன்மையுள்ளதாய் இருக்கும்.

மரணமானது முதிர்ச்சியடைந்த விசுவாசிக்கு நேர்மறை நிகழ்வாய் காணப்படுகிறது, காரணம் அவர்கள் எங்கு செல்கிறோம் என்பதை அறிந்து உணர்ந்தவர்களாய் இருக்கிறார்கள். 2 கொரி. 5:8, மரணத்தைக் குறித்து பயம் இல்லை காரணம் பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளுகிறதாய் இருக்கிறது.

நாம் பெற்று இருக்கும் அன்பும் நம்பிக்கையும் நம்மை கிறிஸ்துவின் அருகில் சேர்க்கிறதாய் இருக்கிறது. நீங்கள் மூன்றாண்டு காலம் மட்டுமே ஜீவிக்கப்போகிறீர்கள் கூறினால், உங்கள் வாழ்வின் காரியங்களை மாற்றிக்கொள்வீர்களா? நீங்கள் மரித்த பின்னர் சமாதானத்தில் தரித்திருக்க முடியாது ஒன்று நீங்கள் கர்த்தருடன் இருப்பீர்கள் அல்லது அக்கினிக்கடலுக்காய் காத்து இருப்பீர்கள்.

வாழ்க்கை என்பது ஒரு கப்பலை அளித்தது போன்று இருக்கிறது, அது மரணத்தில் நித்தியம் என்கிற கடலில் இறக்கிவிடப்பட்டதை போன்று இருக்கிறது. உதாரணமாய் பவுலின் கப்பல் உபதேசத்தால் நிறைந்து இருந்தது. வாழ்க்கைப் புயலில் சில மழைத்தூறலுடன் இன்னும் படகானது துறைமுகத்தில் கட்டப்பட்டுள்ளதாகவே இருக்கிறது. மிகவும் சிலக்கிறிஸ்தவர்கள் வேதத்தைக் கற்ற போது, சிலர் அதை விசுவாசிக்கிறவர்களாயும், அதிலும் சிலர் அவற்றை தங்களது வாழ்விற்கு எடுத்துக்கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். நீங்கள் ஒவ்வொரு நாளும் உங்களது கடைசி நாள் எனக் காண்பீர்களானால் நீங்கள் சரியான கண்ணோட்டத்தை பெற்று இருப்பீர்கள். யோவான் 10:10, 6:63.

ஆபிரகாம் சாராளுடன் அடக்கம் செய்யப்பட்டார், இதினிமித்தம் அவர்கள் உயிர்த்தெழுதலில் சேர்ந்து உயிரோடு எழுந்து இருப்பர். ஈசாக்கு ஹாய் ரோயில் வசித்து வந்தார் இஸ்மவேல் இன்னும் மனிதனின் காட்டுக் கழுதையாய் இருந்தார். எப்படியிருப்பினும் இந்த அதிகாரத்தின் இறுதியில் ஈசாக்கின் மனைவி ரெபேக்காளுக்கு பிள்ளையில்லாதிருந்தது ஆனால் அவள் அதை தேவனது கரத்தில் விட்டு விட்டு இருந்தாள் 1 பேதுரு 5:7 ல் கூறப்பட்டுள்ளபடி.

உபதேசங்கள்:

மரணம்

1. மரணம் என்பதன் பொருள் "வேறுபிரிக்கப்படுதல்"

2. மரணத்தின் வகைகள்:
சரீர மரணம் - சரீரத்திலிருந்து ஆத்துமா பிரிக்கப்படுதல் (ஆதியாகமம் 35:18).
ஆவிக்குரிய மரணம் - தேவனிடமிருந்து பிரிக்கப்படுதல், தேவனுடன் எவ்விதத் தொடர்புமின்றி இருத்தல் (எபேசியர் 2:1,12, ஆதியாகமம்2:17,3:8)

இரண்டாம் மரணம் - இது வெள்ளை சிங்காசன நியாத்தீர்ப்புக்கு பின்னர் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு அவிசுவாசிகள் சதாகாலமும் தண்டிக்கப்படுவதாகும். (வெளிப்படுத்தல் 20:12-15, 21:8)
மனநிலை மரணம் (Positional death) - கிறிஸ்தவர்கள் இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தில் இனங்கண்டு கொள்ளப்படுகின்றனர் (பாவத்திலிருந்து வேறுபட்டு வாழ்தல்) மற்றும் அவரது உயிர்த்தெழுதலிலும் இனங்கண்டு கொள்ளப்படுகின்றனர் (நீதிக்குட்பட்டு வாழ்தல்) ரோமர் 6:3-14 கொலோசெயர் 2:12-14
பாலியல் மரணம் (Sexual death) இனப்பெருக்கம் செய்ய இயலாமை (ரோமர் 4:17-21எபிரெயர்11:11-12)
செயல்பாட்டு மரணம் (Operational death) கிரியை இல்லாத விசுவாசம் செயலற்றது (செத்தது) (யாக்கோபு 2:26)
தற்காலிக மரணம் - மாமிச சிந்தையுள்ள விசுவாசிகள் தேவனுடன் ஐக்கியமற்று இருப்பார்கள் (ரோமர் 8:6-8,13, எபேசியர் 5:14, 1 தீமோத்தேயு 5:6, யாக்கோபு1:15, வெளிப்படுத்தல் 3:1)

3. மரணத்திற்கான காரணங்கள்:
கிரியைகள் நிறைவு பெற்றுவிட்டது (யோவான் 19:30 cfலூக்கா23:46, 2 தீமோத்தேயு 4:7)
தேவனின் மகிமைக்காக - இரத்தசாட்சியாய் மரித்தல் (யோவான் 21:19, அப்போஸ்தலர் 7:55-60)
மரணத்திற்கு ஏதுவான பாவம் - தேவனுக்கு விரோதமாய் இருதயத்தைக் கடினப்படுத்தி ஒழுங்கற்று வாழும் விசுவாசிகள் (1 யோவான்5:16)
தற்கொலை - உங்களது சித்தம், உங்கள் வாழ்விற்குரிய தேவசித்தத்தை மேற்கொள்ளுதல் (1 சாமுவேல் 31:4, மத்தேயு 27:5)
தன்னிகரற்ற கிறிஸ்துவின் மரணம் - தனது சொந்த ஆவியை பிதாவினிடத்தில் ஒப்படைத்தல். (லூக்கா 23:46)

CHARITY: BIBLICAL CHARITY

அற நிலையம் அல்லது தர்ம ஸ்தாபனம்

1. தேவன் எப்பொழுதும் தேவை நிறைந்த ஏழைகள், பலவீனர், ஒடுக்கப்பட்டோர் போன்றோரைக்குறித்து அக்கறை உள்ளவராக இருக்கிறார். யாத்திராகமம் 22:21-27, உபாகமம் 15:11, 24:14 , 15.

2. அநாதைகள், விதவைகள் இவர்கள் மீது ஆரம்பத்திலிருந்தே தேவன் விஷேச கவனம் செலுத்தி வருகிறார். உபாகமம்10:18எசேக்கியேல் 22:7.

3. தேவன் ஏழைகளை குறிப்பிட்டு, அவர்களது சரீர மற்றும் ஆவிக்குரிய தேவைகளை சந்திக்கிறார். மத்தேயு11:28-30,லூக்கா 4:18, 6:20.

4. விழுந்து போன உலகில் ஏழைகளாய் இருக்கும் ஜனங்கள் இருக்கின்றனர் என தேவன் இனங்கண்டுகொள்கிறார். மத்தேயு26:11, மாற்கு 14:7.

5. அநேக ஆதி சபையினர் தங்களது உலக சொத்துக்களை விற்று, தேவையுள்ள மற்ற கிறிஸ்தவர்களுக்கு கொடுத்து வந்தனர் அப்போ 4:32-37.

6. சபை ஏழைகளுக்கு அநுதினமும் சபை மூப்பர்கள் மூலம் அவர்களது அன்றாடத் தேவகளை சந்தித்து வந்தனர். ரோமர் 15:26, கலாத்தியர்2:10, யாக்கோபு 2:2 -7.

7. ஜனங்கள் வேலை செய்கிறவர்களாயிருந்து அவர்கள் ஏழைகளாய் இருந்தார்களானால், அவர்களிடமிருந்து சபை ஒன்றையும் எதிர்பார்ப்பது இல்லை 1தெசலோனிக்கேயர் 2:9-12, 2தெசலோனிக்கேயர்3:7-12.

8. ஓர் விதவைக்கு சபையிலிருந்து தான தர்மம் அவசியப்பட்டால் அவளுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் குறித்து 1 தீமோத்தேயு 5 ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

விதவைக்கு பிள்ளைகளோ, பேரப்பிள்ள்கள் இருப்பார்களெனில், அப்படிப்பட்ட விதவைக்கு, சபையிலிருந்து தான தர்மம் வழங்கப்பட மாட்டாது. அவளது உறவினர் அவர்கள் சொந்த குடும்பத்தை பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டும். வச. 4

ஓர் விதவை கர்த்தரது வேலையில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக்கொண்டு ஜெபிப்பாள் என்றால் அவள் உதவிக்கு தகுதியுள்ளவள் வச. 5

அவள் சுகபோகமாய் வாழ்ந்து, ஒரு பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளதிருப்பாள் எனில், அவளுக்கு ஒரு உதவியும் சபையிலிருந்து செய்யப்படமாட்டாது. வச. 8.

அவள் 60 வயதுக்கு மேற்பட்டவளாய் இருக்கவேண்டும். குற்றம் சாட்டப்படாதவளாயும், ஒரே புருஷனுடன் வாழ்ந்தவளாய் இருக்க வேண்டும். வச.9.

தேவனின் வாக்குத்தத்தங்கள்

1. தேவனின் கண்ணோட்டத்திலிருந்து:
ஒரு நபர் உங்களுக்கு வாக்குப்பண்ணும் போது, அந்நபரின் வலிமையான குணாதிசயத்தைப் பொறுத்து அவரது வாக்குத்தத்தமானது செய்யப்படுகிறது. தேவனுடைய குணாதிசயம் பூரணமானது இதினிமித்தம் அவரது வாக்குத்தத்தங்களை முற்றிலும் சார்ந்து இருக்கலாம்.

அ] மாறாதவர் - இது ஒரு வேதாகம வாக்குத்தத்தம், பவுலுக்கு பொருந்தியது போலவே 21 ம் நூற்றாண்டில் வாழ்பவருக்கும் இது பொருந்தும்.

ஆ] சகல ஞானமுள்ளவர் / எல்லாம் அறிந்தவர் - தேவன் நமது பிரச்சனைகள் எல்லாவற்றையும் அறிந்து இருக்கிறார், ஆகையால் எப்பொழுதும் ஒரு வாக்குத்தத்தமோ அல்லது ஒரு உபதேசத்தையோ நமது நெருக்கடியான சூழலில் அளிக்கிறவராய் இருக்கிறார்.

இ] அன்புள்ளவர் - தேவன் தமது பிள்ளைகளின் தேவைகளை அருளுகிறவராய் இருக்கிறார்.

ஈ] சத்தியமுள்ளவர் - எல்லா வாக்குத்தத்தங்களும் முற்றிலும் உண்மையானது.

2. மனிதனுடைய கண்ணோட்டத்திலிருந்து:

அ] வாக்குத்தத்தங்களை நாம் அறிய வேண்டும்.

ஆ] நாம் வாக்குத்தத்தங்களை விசுவாசிக்க வேண்டும்.

இ] தேவனில் நம்பிக்கை வைப்பதை நாம் விரும்ப வேண்டும்.

3. பூமியின் மீதுள்ள கிறிஸ்தவர்களுக்கு ஏறத்தாள 7000 வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன.

4. கிறிஸ்தவ வாழ்க்கையில் பலதரப்பட்ட நிலைகளில் பொருத்தமான வாக்குத்தத்தங்கள்:

அ] முதல் நிலை - இரட்சிப்பு (யோவான் 3:16; அப்போஸ்தலர் 16:31).

ஆ] இரண்டாம் நிலை - பூமியில் மீதுள்ள கிறிஸ்தவனுக்கு (1 யோவான் 1:9; ரோமர் 8:28; 1 பேதுரு 5:7).

இ] மூன்றாம் நிலை - பரலோகில் உள்ள விசுவாசிகளுக்கு (1 பேதுரு 1:3-5; வெளி. 21:4).

5. பூமியில் உள்ளக் கிறிஸ்தவர்களுக்குரிய வாக்குத்தத்தத்தை - எவ்வாறு செயல்பட வைப்பது?

அ] நாம் கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசியாய் இருத்தல் வேண்டும்.

ஆ] ஒவ்வொரு வாக்குத்தத்தத்தையும் அது என்ன சொல்கிறதோ அதன் அர்த்தத்தின்படியே எடுத்துக்கொள்ளுதல் வேண்டும்.

இ] நீங்கள் அறிந்த எல்லாப் பாவங்களையும் 1 யோவான் 1:9 ல் உள்ள வாக்குத்தத்ததப் பயன்படுத்தி அறிக்கை செய்யுங்கள்.

ஈ] ஒரு வாக்குத்தத்தமானது எதையாவது செய்யக் கேட்டுக்கொள்ளுமானால் அதை மறுப்பின்றி செய்யுங்கள் (உ.ம் ஜெபிப்பது, விசுவாசிப்பது, அறிக்கைசெய்வது etc.).

உ] பதிலுக்காய் காத்திருங்கள், கர்த்தர் தமது நேரத்தில் அதற்கான பதிலை அளிப்பார்.

ஊ] ஒரு வாக்குத்தத்த நோட்டுப் புஸ்தகத்தை வைத்துக்கொள்ளுங்கள், வாக்குத்தத்தத்தைக் கற்றுக்கொள்ளுங்கள்.

6. தேவனது வாக்குத்தத்தங்களுக்கான பொதுவான வேதபகுதி (எபிரெயர் 3:7 - 4:11).

அ] யாத்திராகமச் சந்ததியினர் தாங்கள் கண்டுகொண்ட பூகோள ரீதியான இடங்கள் கிறிஸ்தவனின் வாழ்வின் நிலைகளை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது.

எகிப்து - அவிசுவாசம்

செங்கடலை கடத்தல் - விசுவாசத்தினால் இரட்சிப்பு (i.e. எகிபதை விட்டு வெளியேறுதல்)

வனாந்திரம் - மாம்சீகத்திற்குரிய வாழ்க்கை மற்றும் முதிர்ச்சி பெறாத கிறிஸ்தவ வாழ்க்கை, சில வாக்குத்தத்தங்களை மட்டுமே

உரிமைபாராட்டிக்கொண்டு தொடர்ச்சியாய் விழுந்து போகும் அனுபவத்தில் வாழ்தல்.
யோர்தானைக் கடத்தல் - தேவனது தயவை முழுவதுமாய் விசுவாசத்தினால் உணர்தல்.
வாக்குத்தத்த தேசம் - முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவன் தேவனில் இளைப்பாறும் இடம் இங்கு விழுந்துபோதல் என்பது எப்பொழுதாவது ஒருமுறை சம்பவிக்கும்.

ஆ] எபிரெய நிருபக்காரன் 3:7,19 ஆகிய வசனங்களில் எருசலேமில் உள்ள யூதர்களை ஊக்கப்படுத்தி, நம்மைப் பார்த்து அதே வலையில் யாத்திராகமச் சந்ததியினரைப் போன்று நாம் சிக்கிக்கொள்ளாது இருக்க கூறுகிறார்.

இ] பூமியின் மீதுள்ள கிறிஸ்தவர்களுக்கு எபிரெயர் 4 ம் அதிகாரத்தின் படி கேள்விகளும் பதில்களும்:

வசனம் 1 : வாக்குத்தத்தத்தை நாம் சுதந்தரிக்காதபட்சத்தில் என்ன நிகழும்? - நாம் சமாதனத்தை இழந்து தவிப்போம்.

வசனம் 2: இவ்வசனம் தேவனது குணாதிசயங்களில் எந்த குணாதிசயத்தை மேற்கோள் காட்டுகிறது? - மாறாதவர்.
வாக்குத்தத்தங்களை எவ்வாறு செயல்படுத்தலாம்? - அதை விசுவாசத்துடன் கலப்பதன் மூலம்.

வசனம் 3: எது முதலில் வந்தது, மனிதனா அல்லது வாக்குத்தத்தமா? - வாக்குத்தத்தம், தேவன் சர்வ ஞானி.

வசனம் 4: ஏன் தேவன் ஓய்ந்திருந்தார்? - காரணம் அவர் மனிதனுக்கு தேவையான அனைத்தையும் அவனுக்கு அளித்திருந்தபடியினால்.

வசனம் 5 & 6: இப்பகுதியில் யாராவது பின்பற்றியிருக்கிறார்களா? - ஆம், சிலரால் முடியும்.

வசனம் 7: எல்லா வாக்குத்தத்தங்களும் இன்றும் கிடைக்கக்கூடியனவா? - ஆம்.
நாம் என்ன செய்ய வேண்டும்? - தேவன் அளிப்பதைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
நாம் என்ன செய்யாதிருக்க வேண்டும்? - இருதயத்தைக் கடினப்படுத்தாதிருக்க வேண்டும்.

வசனம் 8: இயேசு என சில மொழிபெயர்ப்புகளில் இருப்பது உணமையில் யோசுவாவைக் குறிக்கிறது.

வசனம் 9: யாருக்கு வாக்குத்தத்தங்கள் கிடைக்கின்றனவாய் இருக்கின்றன? - விசுவாசிகளுக்கு மட்டும்.

வசனம் 10; ஒரு கிறிஸ்தவர்களான நாம் தெரிந்துகொள்ள வேண்டியது என்ன? மனிதக்கிரியைகள் அல்லது தேவனது கிரியைகள் மற்றும் அவரது கொடுகைகள்.

வசனம் 11: நாம் சிக்கிக்கொள்ளும் பெரிய வலை என்ன? - அவிசுவாசம். நாம் தேவனது வாக்குத்தத்தை மிகவும் உறுதியுடன் செயல்படுத்துதல் வேண்டும்.

7. பெரிய வாக்குத்தத்தங்கள்:

கீழ்க்கண்ட வாக்குத்தத்தங்களை சமயத்திற்கேற்றவாறு பயன்படுத்தக்கற்றுக்கொள்ளுங்கள்:

கடினமான சூழ்நிலைகளில் (ரோமர் 8:28).
பாவம் செய்த பொழுது (1 யோவான் 1:9).
கவலைப்படும்பொழுது (1 பேதுரு 5:7).
நீங்கள் தவறிழைக்கும் போது (1 தெசலோ. 5:18).
ஜெபம் (மத்தேயு 7:7).
தனிமையில் (எபிரெயர் 13:5).
சந்தேகிக்கும் பொழுது (பிலிப்பியர் 4:13).
வேதாகமம் (எபிரெயர் 4:12).
தூக்கமற்ற வேளைகளில் (சங்கீதம் 4:8).
மகிழ்ச்சியற்ற வேளைகளில் (சங்கீதம் 147:3).
பழிவாங்கும்படி சோதிக்கப்படுகையில் (ரோமர் 12:17,19).
அபாயகரமான வேளைகளில் (சங்கீதம் 23:4).

வயோதிபர்

1. cd;idg; ngw;w jfg;gDf;Fr; nrtpnfhL;@ cd; jha; taJnrd;wtshFk;NghJ mtis mrl;il gz;zhNj. (நீதிமொழிகள் 23:22).

2. இராணுவம், தீமையான படையெடுப்பின் போது, முதியோரைப் பாதுகாத்தல் வேண்டும். (உபாகமம் 28:50, 2 36:17).

3. சில வயோதிபர் எனக்கு எல்லாம் தெரியும் எனக்கு ஒருவரும் போதிக்க அவசியமில்லை என்பர் (பிரசங்கி 4:13 –15).

4. வயோதிபருக்கு பாதுகாப்பு அவசியமாய் இருக்கிறது (யோவான் 21:18).

5. இவர்கள் வியாதிக்கு அபாயகரமானவர்கள் (1 இராஜாக்கள் 15:23).

6. இவர்கள் தங்களது சொந்த பயத்தினால் பாதிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள் (சங்கீதம் 71:9).

7. இவர்கள் கீழ்ப்படியாதவர்களாய் இருப்பார்களென்றால், இவர்கள் மிகவும் பயங்கரவாதத்தை உணருகிறவர்களாய் இருப்பார்கள் (சங்கீதம் 6:7, 32:3).

8. கர்த்தருக்குள் இவர்களது ஞானத்தை நாம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் (நீதிமொழிகள் 22:6, சங்கீதம் 71:17, 18).

9. வயோதிப காலங்களில் மிகுந்த பாதுகாப்பு மற்றும் ஆசீர்வாதங்களை பெற்று இருப்பர் (சங்கீதம் 37:25, நீதிமொழிகள் 17:6, நீதிமொழிகள் 20:29).

10. கர்த்தருடன் இவர்கள் மரிக்கும் கிருபையை அடைந்து இருப்பர் (யோபு 42:17, 1 நாளாகமம் 23:1, 29:28, ஏசாயா 46:4).

11. ஆயிர வருட அரசாட்சியில் வயோதிபர் ஆசீர்வதிக்கப்பட்டவராய் இருப்பர் (ஏசாயா 65:20, யோவேல் 2:28, சகரியா 8: 4).

12. சபையில் கர்த்தரது சேவையில் வயோதிபர் உபயோகமுள்ளவர்களாய் இருக்கின்றனர் (தீத்து. 2:2-3).

<u>பாடம் 13 -- யாக்கோபு</u>

முன்னுரை:

ஈசாக்கு வயது சென்று விருத்தாப்பியனான், அவன் தான் மரிக்கப்போவதாய் எண்ணினான். அவன் தனது குமாரரை அழைத்து அவர்களை ஆசீர்வதிக்க விரும்பினான். இது வாய்மொழியாய் வழங்கும் ஆவிக்குரிய சுதந்தரமாய் இருக்கிறது. இங்கு குமாரர்கள் தங்கள் பிதாக்கள் மற்றும் முற்பிதாக்கள் பாவத்தை திரும்ப திரும்பச் செய்து, ஜனங்கள் தவறான நோக்கத்துடன் தவறுகளை இழைத்து தவறான வழியில் சென்றுகொண்டிருந்தனர்.

தேவன் இவைகளை கவனித்தும் ஆழுகிறவராய் இருந்தார் மற்றும் யாக்கோபை ஆசீர்வதிக்கிறவராகவும் இருந்தார், இவன் வேதாகமத்தில் மிகவும் கேவலமான குணாதிசயத்தைப்பெற்றவனாய் இருந்தான். தேவன் இதைச் செய்தபோது, கண்டிப்பாய் இது நமக்கு ஒரு எச்சரிப்பாய் இருந்து, தேவன் இவனை குறிப்பிடத்தகுந்த வகையில் சிட்சித்து அவன் உபயோகிக்கப்படும் இடத்திற்கு கொண்டுவருகிறவராய் இருக்கிறார். நீங்கள் அவருடைய குமாரனாய் இருந்து, பாவத்துடனோ அல்லது கவனக்குறைவாகவோ இருப்பீர்களானால், நீங்கள் கண்டிப்பாக சிட்சைக்குள்ளாகிறீர்கள். இவனது வாழ்வில், திருமணங்களில் பெரிய

அளவில் சிட்சையைப் பெற்றுக்கொண்டான். இவனது பாவம் பெருமை என்கிற பாவமாய் இருந்தது.

ஆதியாகமம் 27:46 - 28:5 வரையுள்ள வேத பகுதியில் ரெபேக்காளும் ஈசாக்கும், ஆவிக்குரிய நிலையிலிருந்து சரிவடையத் தொடங்கினர், ரெபேக்காள் தனது குமாரனாகிய ஏசா கானானிய குமாரத்திகளை திருமணம் செய்து கொண்டது அவளுக்கு மிகவும் விசனமாய் இருந்தது. ஈசாக்கு தனது ஆசீர்வாதத்தில் அவனுக்கு சொன்னான், புறஜாதியப் பெண்களை மணமுடிக்கக்கூடாது என்று. இந்த ஆசீர்வாதம் வசனங்கள் 4 மற்றும் 5 ல் ஆபிரகாமுக்குள்ள ஆசீர்வாதத்தில் திரும்ப திரும்ப அழுத்தம் திருத்தமாக கூறப்பட்டுள்ளது.

ஏசா:

வசனம் 6 ல் ஏசா செயல்பட்டு, தனது சகோதரனாகிய யாக்கோபு வசனம் 5 ல் சிரியாவில் உள்ள தனது தாயின் உறவு முறையில் பெண்கொள்ள ஈசாக்கினால் கேட்டுக்கொள்ளப்பட்டபடியே, தானும் தனது வாழ்வில் உயர்வான காரியங்களைச் செய்ய ஏசா முயன்றான். இதினிமித்தம் ஏசா, எனது சகோதரன் யாக்கோபு தனது தாயின் வழியில் பெண்கொள்ளப்போவதால், தான் தனது தாத்தா ஆபிரகாமின் மகன் இஸ்மவேல் [சித்தப்பா] குடும்பத்தில் திருமணம் செய்துகொள்ளும்படி சிந்திக்கலானான்.

ஏசா நல்ல நிலையில் இருக்க முயற்சி செய்தான். எப்படியிருப்பினும் ஈசாக்கு யாக்கோபை ஆரானில் உள்ள ஒரு விசுவாசியை மணமுடிக்க கேட்டுக்கொண்டான். இது சரீரப்பிரகாரமான உறவு அல்ல காரியம், இது ஆவிக்குரியதாய் இருக்கிறது. இன்றைய அளவில் ஏறாளமான ஜனங்கள் சபையில் சரியான காரியங்களை செய்வதாய் எண்ணிக்கொண்டு தவறான காரியங்களை செய்து வருகிறார்கள். நீங்கள் கர்த்தருக்காய் ஏதாவது ஆவிக்குரிய காரியங்களை செய்ய விரும்பும்போது, அவர்கள் உங்களை உயர்வாய் பார்க்க விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் அவிசுவாசிகளாய் இருந்து ஆவிக்குரிய பகுப்பாய்வற்றவர்களாய் இருக்கிறார்கள். இங்கு சித்தப்பா மகளை திருமணம் முடிப்பதல்ல காரியம், திருமணம் முடிக்கும் நபர் தன்னைப்போன்ற ஆவிக்குரிய பிண்ணனியம் உள்ளவராய் இருக்கவேண்டும் என்பதே இங்கு முக்கியப்படுத்தப்படுகிறது.

யாக்கோபின் ஏணி:

வசனம் 11-22 ல் யாக்கோபு வனாந்திரமான இடத்தில் வடக்கே தலைவைத்து ஒரு கல்லை தனக்கு தலைஅணையாக வைத்துக்கொண்டு உறங்கும் போது ஒரு சொப்பனம் கண்டான். அவன் யாக்கோபின் ஏணியைக் குறித்த சொப்பனம் கண்டு, அதில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஏணியின் உச்சியில் நிற்பதாகவும் தூதர்கள் ஏறுகிறதும் இறங்குகிறதுமாய் இருக்கிறதை தனது சொப்பனத்தில் பார்த்தான்.

இதிலிருந்து அநேக அடிப்படை கோட்பாடுகள் கடந்து வருகிறதாய் இருக்கிறது. பூமியில் தேவனால் கைவிடப்பட்ட இடம் என்று ஒன்றுமில்லை, வனாந்திரமான இடத்தில் கல்லை தலையணையாக வைத்துக்கொண்டு உறங்கினாலும் தேவன் அங்கும் இருக்கிறவராய் இருக்கிறார். தேவன் உன்னில் ஆர்வம் உள்ளவராய் இருக்கிறார், நீ அவருக்குரிய நபர், அவர் உனக்குரியவர், அவர் எங்கும் வியாபித்து இருக்கிறார். தேவன் மனிதனுடன் தொடர்பு கொள்ளக்கூடியவராகவும் இருக்கிறார், மனித சூழல்களில் அவர் நேரிடையாகவும், மறைவாயும் செயல்படுகிறவராய் இருக்கிறார். ஒரு விசுவாசியும் ஒருபோதும் தனிமையில் கைவிடப் பட்டதே இல்லை.

யாக்கோபு அநேகக்காரியங்களை கற்றுக்கொள்கிறவானாய் இருந்தான். முதிர்ச்சியடையாத விசுவாசி இதைக்குறித்து ஆச்சரியப்படக் கூடும். யாக்கோபு இதை சற்றும் எதிர்பார்க்கவிலலை, நாமும் கூட. தேவன் தன்னை யாக்கோபுக்கு வெளிப்படுத்தினார், ஆபிரகாமுக்கு தான் அளித்த வாக்குத்தங்களை இவனுக்கு திரும்ப கூறுகிறவராய் இருக்கிறார். யாக்கோபு, ஆபிரகாமுக்கு அளித்த ஆசீர்வாதங்களின்படி தேவனுடன் உறவுகொள்ள தலைப்படுகிறவனாய் இருக்கிறான். நாமும் கூட தேவனது ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு, தேவனது திட்டங்களுக்குள் கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தினால் நுழைகிறவர்களாய் இருக்கிறோம்.

பெத்தேல்:

யாக்கோபு தேவனை இந்த இடத்தில் கண்டவனாய், தான் உபயோகித்த கல்லை பலிபீடமாக்கினான். இந்த இடத்தை பெத்தேல் என அழைத்தான், அதன் பொருள் தேவனுடைய வீடு என்பதாகும். யாக்கோபு ஒரு இளம் விசுவாசியாய் இருந்தான் மற்று அவன் அதிகமாய் செயல்படுகிறவனாய் இருந்து இந்த முழு உலகமும் தேவனது வீடு என்பதை புறிந்து கொள்ளாது இருந்தான். அதோடு கூட தேவனது குணாதிசயத்தின் அடிப்படையில் வாக்குத்தத்தங்களைப் பெற்றுக்கொண்டு, தேவன் தனது வாக்குத்தத்தங்கள் உண்மையில் நிறைவேற்றுவரானால் யாக்கோபு, பொருத்தனை செய்து தேவனுக்கு தசம பாகம் கொடுக்க வாக்களிக்கிறான். யாக்கோபு என்னை உயிரோடு காத்து என்னைத் திரும்ப என் குடும்பத்திற்கு கொண்டுவருவீரானால் நீர் என் தேவனாய் இருப்பீர் என்றான். எந்த அளவுக்கு சிறுபிள்ளைத்தனமாய் இருக்கிறது இவரது விசுவாசம் எனப்பாருங்கள்.

இதைப்போன்றே இன்றைய அளவில் சபையிலும் இதைப்போன்றே அநேக ஜனங்கள் பொருத்தனைகளை செய்கிறவர்களாய் இருக்கிறார்கள். இவ்வாறு தேவனுடன் ஒப்பந்த பேரம் பேசலாம் என நினைக்கின்றனர். கிருபையினால் தேவன் உங்களை ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறார் காரணம் நீங்கள் யார் என்று தேவன் அறிவார், ஆனால் கிறிஸ்து இயேசுவில் உங்கள் ஸ்தானத்தை உணர்ந்து தேவன் உங்களுக்கு யாராய் இருக்கிறார் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுதல் மிகவும் அவசியம். கிருபையினால் ஆசீவாதத்தை அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிற நீங்கள், உங்களது செய்கைகளின் நிமித்தம் அவரிடமிருந்து நியாயத்தீர்ப்பு

மட்டுமே உங்களுக்களிப்படும் என எண்ணுகிறீர்களா? அல்லது கர்த்தாவே நாங்கள் உமது சேவகராய் இருந்து உம்மை அதிகம் அதிகமாய் அறிய விரும்புகிறோம் என்று சொல்கிறவர்களாய் இருக்கிறோமா? இவ்வாறு நாம் நினைப்பதினால், கிருபையை குறித்தும், நமது ஸ்தானத்தைக் குறித்து போதிப்பதும், மிகவும் அவசியமாய் இருக்கிறது, சிலுவையைப் பற்றிக்கொண்டு இதைப்போன்ற வெட்கத்துக்குரிய கிறிஸ்தவ வாழ்வை நம்மைவிட்டகற்ற வேண்டும்.

லேயாளும் ராகேலும்:

அதிகாரம் 29:1-14 ல் யாக்கோபு ஆரானுக்குச் சமீபமாய் வந்து அங்கே ஒரு கிணற்றைக் கண்டான். யாக்கோபு ராகேலின் மனதில் பதிய விரும்பினான். எப்படியிருப்பினும் லாபான் அவனுக்கு பொருத்தமான ஜோடியை அமைத்துக்கொடுத்தான். லேயாள் குச்சப்பார்வையுள்ளவளாய் இருந்தாள், அவளது இளைய சகோதரி ராகேலோ மிகவும் அழகுள்ளவளாய் இருந்தாள். யாக்கோபு கர்த்தருடன் எப்படியோ சமாளிக்க விரும்பினான், கர்த்தர் அவனுக்கு சிட்சை அளித்து, அவன் ஆவிக்குரிய பாடங்களை கற்றுக்கொடுத்தார்.

கர்த்தர் பலவகையான மக்களை தனது மக்களுக்கு பயிற்சி அளிக்கப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். நீங்கள் இரத்தக்கிரயம் கொடுத்து வாங்கப்பட்ட பாவி, மற்றும் தேவன் இப்பூமியின் கடைசி பரியந்தம் சென்று உங்களுக்கு போதனை அளித்து, காரியங்களை நீங்கள் சரியாய் நடப்பிக்க, பாவத்தினால் உங்களுக்கு மரணமே நேரிட்டாலும் உங்களை சிட்சித்து சரிசெய்வதில் கவனமாய் இருக்கிறார்.

யாக்கோபு ராகேலுக்காய் ஏழு ஆண்டுகள் வேலைசெய்தும், லாபான் தந்திரமாய் நல்ல போஜனம் அளித்து லேயாளையும் அவளது தாதிப்பெண்ணையும் அவனுக்கு கொடுத்தான். லாபானின் மறுமொழி இவ்விடத்து வழக்கப்படி, மூத்தவள் இருக்க இளையவளை கொடுப்பது தவறு என்பதின் பேரில் ராகேலுக்காய் மறுபடியும் ஏழு ஆண்டுகள் கடினமாய் உழைத்தான். இவைகள் அனைத்தின் மத்தியிலும் தேவன் யாக்கோபை கிருபையாய் பார்த்துக் கொண்டார்.

எப்படியிருப்பினும் யாக்கோபு தனது வாழ்க்கை முழுமையும் நொண்டி நொண்டி நடக்கவேண்டியதாய் இருந்தது, காரணம் அவனுக்கு நிரந்தர ஞாபகார்த்தமாய் இப்படிப்பட்ட காரியம் அவசியமாய் இருந்தது, அவரது கிருபையினால் மட்டும் தான் நிலைநிற்கிறான் தனது கிரியைகளினால் அல்ல என்பதை அவன் தெளிவாய் உணர்ந்து கொள்ள வேண்டும் என்பது தேவனின் நோக்கமாய் இருந்தது. இது பெருமைக்கு எதிரான எச்சரிப்பாய் இருக்கிறது. போதகராய் இருக்கும் நீங்கள் உங்கள் விசுவாசத்தை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் பாக்கியத்தையும் கனத்தையுமேயன்றி, உங்களால் கர்த்தருக்காய் பெரிய காரியங்களை செய்ய இயலாது.

அநேகர் சபையில் இங்கும் அங்குமாய் ஓடி, முடிவாய் கர்த்தாவே எங்களது திட்டங்களை ஆசீவதியும் என்கின்றனர். வேதாகமத்தில் மூலமாய் நீங்கள் கண்டுகொள்ளும் சில உண்மைகள் என்னவென்றால், அநேக மக்கள் சரியான காரியத்தை, தவறான வழியில் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள், தேவன் சொல்கிறார் நிறுத்து என்கிறார். சபை என்பது உங்களுடையது அல்ல அது கர்த்தருடையதாய் இருக்கிறது. சபையில் உள்ள மக்களுக்கு வெறும் உரம் மட்டும் போட்டு வளர்க்க முற்படாதிருங்கள், தேவனது வார்த்தையை அவர்களுக்கு கருத்தாய் போதியுங்கள், நீங்கள் அவ்வாறு செய்யத்தவறும் போது முடிவில் லாபான் உங்கள் கமிட்டி அங்கத்தினராய் வீற்றிருப்பார். யாக்கோபு இப்படிப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளை கற்றுக்கொண்ட பின்னர் இஸ்ரவேலாய் மாற இருக்கிறார்.

குழப்பம் மிகுந்த திருமண வாழ்க்கை:

யாக்கோபு ஒரு மனைவியை மற்றவளைக்காட்டிலும் அதிகமாய் நேசித்தான், பின்னர் லேயாளை தெரிவு செய்தான் மற்றும் அன்பு / வெறுப்பு உறவுடன் இரு பெண்களுடன் வாழ்க்கை தொடந்தது. யாக்கோபுக்கு குழப்பம் மிகுந்த திருமண வாழ்க்கையாய் அமைந்தது. லேயாளுக்கு அநேகம் பிள்ளைகள் உண்டான போது, ராகேளுக்கு ஒரு பிள்ளை கூட இல்லாதிருந்தது, ஆகையால் தன் சகோதரி லேயாளை ராகேல் வெறுக்க ஆரம்பித்தாள். இதற்குள் லேயாளுக்கு நான்கு குமாரர்கள் பிறந்து விட்டனர் யாக்கோபு லேயாளிடம் அன்பு வைக்க கற்றுக்கொண்டான். ராகேலுக்கோ பொறாமையும் கோபமும் ஒன்றோடு ஒன்று கலந்தது. 30 ம் அதிகாரத்தில் இது மிகவும் விசுவரூபம் கொண்டது. ராகேல் எனக்கு குழந்தையில்லையேல் நான் மரிக்கப் போகிறேன் என்று கூறி தனது வேலைக்காரியை யாக்கோபுக்கு மனைவியாய் கொடுத்தாள். இது ஆபிராம், சாராய், மற்றும் ஆகார் இவர்களது செயல்பாடுகள் திரும்ப உருவாகிறதாய் இருந்தது. யாக்கோபு ராகேலின் மீது கோபமாகி, அவன், நான் தேவனா? உனக்குப் பிள்ளைகொடுக்க என்றான்.

ஊழியக்காரராகிய நீங்கள் பிள்ளையில்லாத தம்பதிகளுக்கு ஆலோசனை கொடுக்கும் போது, அவர்கள் தேவனது சிட்சையைப் பெறவில்லை, அநேக வகைகளில் பிள்ளகளில்லாத நிலையில் தேவனுக்கு அவர்கள் மற்றவர்களால் செய்ய முடியாத காரியங்களை சிறப்பாய் செய்யமுடியும் என ஆலோசனை கொடுக்கவும். அவர்கள் திருமணமாகியிருக்கிறபடியால் அவர்கள் குடும்பமாய் இருக்கிறார்கள். அவர்களுக்கு சவால் கொடுத்து தேவனை விசுவாசிக்கவும் அவரது வார்த்தையை விசுவாசிக்கவும் கூறவேண்டும். உங்களுக்கு ஏதாகிலும் தேவன் அளிக்க விரும்புவீர்களானால், அவர் அதை அளிக்காது இருக்கும்போது அதற்கு ஏதாகிலும் சரியான காரணம் இருக்க வேண்டும், நீங்கள் தொடர்ந்து ரோமர் 8:28 ம் வசனத்தை உங்களுக்கென உரிமை பாராட்டி தொடர்ந்து ஜெபித்தல் வேண்டும்.

ராகேலின் வேலைக்காரப் பெண் தாணைப் பெற்றாள், இவனை பெற்றதினிமித்தம் ராகேல் தன் சகோதரியை மேற்கொண்டேன் என்பதாய் எண்ணினாள். இதற்கு அடுத்தபடியாக நப்தலி பிறந்தான் இதன் பொருள் போராட்டம், லேயாளுடன் போராடி மேற்கொண்டேன் என்பது இதன் பொருளாகிறது. லேயாள் இப்பொழுது காத் என்பவனை பெற்றெடுத்தாள் இதன் பொருள் பட்டாளம். எனது பட்டாளம் ஏறாளமாகிறது என தொடர்ந்து பிறந்த ஆசேரின் பொருள் மகிழ்ச்சி என்பதாகும். யக்கோபு படுக்கை மாற்றி படுக்கையாக அலைந்தார். அவன் நியாயந்தீர்க்கப் பட்டுக் கொண்டிருந்தான், பாலுறவில் மன்னாதி மன்னனாய் திகழ்ந்தபோதும் உள்ளத்தின் ஆழத்தில் சமாதானம் என்பது இல்லாதிருந்தது, அவனுக்கு உண்மையான அன்பு கிடைக்கவில்லை, அவனது குடும்பம் ஒரு யுத்தக்களமாய் காட்சியளித்தது.

ஒரு விசுவாசியாய் இருந்து எல்லாவற்றையும் மீறி பாவஞ்செய்ய தீர்மானம் எடுக்கையில், தேவன் அதில் விட்டுவிட்டு, அதை நிறைவேற்றித் தீரும் வரை காத்திருந்து, எல்லாம் முடிந்தது என நீங்கள் ஓய்ந்து மயங்கும்வரை பொறுமையுடன் இருக்கிறார். இதன் உதாரணம் யாத்திராக சந்ததி தினமும் மன்னாவை தின்று இறைச்சிக்காய் போராடினர். அவர்களுக்கு தேவைக்கு அதிகமாகவே இறைச்சி அருளப்பட்டு, அவைகள் அழுகி நாற்றமெடுத்து அவர்கள் வியாதிப்படும் அளவிற்கு அருளப்பட்டது. யாக்கோபு இந்த அதிகாரத்தில் செய்யும் செயல்கள் அனைத்தும் 100% தவறு. பலருடன் பாலுறவுகொள்ளுதல் அல்லது பலதார விவாகம் இவற்றை இங்கு ஆதரிப்பதாய் இல்லை. பலருடன் பாலுறவு கொண்ட ஒரு நபருடன் பேசுவீர்களானால் அவர்கள் தங்களில் உள்ள வெறுமையையும், அழிக்கப்பட்டுப்போனதையும், இவ்வித செயல்பாடுகளில் எவ்வித திருப்தியும் இல்லை என்பதை கூறுகிறவர்களாய் இருப்பார்கள். அதிகமான பாலுறவில் ஈடுபட்டவர்களைக் குறித்து பொறாமை கொள்ளாதீர்கள். யாக்கோபின் மீது நியாயத்தீர்ப்பானது எப்பொழுதும் இருக்கிறதாய் இருந்தது.

உபதேசங்கள்:

தேவன்: தேவனின் குணாதிசயம் இதற்கு முன்னுள்ள பாடத்தில் உள்ளதை காண்க:

ஒப்புமைகள்: யாக்கோபு இஸ்ரவேலுக்கு ஒப்பிடப்படுகிறார்.

ஆபிரகாமுக்கு உடன்படிக்கையை உறுதி செய்த பெத்தேலுக்கு ("தேவனுடைய வீடு") யாக்கோபு வந்த பின்னர் (ஆதி. 28),
அவன் அநேக வருடங்களை ஆரானில் (வறட்சியான இடம்) கழித்தான். (ஆதியாகமம் 29).
1. யாக்கோபு ஆரானில் இருந்தது இஸ்ரவேல் தேசத்திற்கு ஒரு பகுப்பாய்வாய் மாறியது.
2. அவன் ஆசீர்வாத தேசத்திற்கு வெளியே இருந்தான். (ஆதியாகமம்26:3). சபை யுகத்தில் இஸ்ரவேல் சிதறடிக்கப்பட்டிருக்கும்.

3. அவனுக்கு அங்கே பலிபீடம் இல்லாதிருந்தது (ஓசியா 3:4,5).தேவாலயம் கி பி 70 ல் ரோமர்களால் அழிக்கப்பட்டது.
4. அங்கே அவன் கெட்ட பெயரை சம்பாதிக்க நேரிட்டது. (ஆதியாகமம்31:1; ரோமர் 2:17-24).யூதர்கள் அடிக்கடி புறஜாதியாரால் உபத்திரவப்படுத்தப்பட்டனர்.
5. அவன் தேவனது பராமரிப்புக்கு கீழாக இருந்தான் (ஆதியாகமம்28:13,14; ரோமர் 11:1,25-30).தேவன் இன்னும் இஸ்ரவேலரைக்குறித்து ஒரு நோக்கம் உள்ளவராய் இருக்கிறார்.
6. எல்லாவற்றிற்கும் மேலாக அவன் திரும்ப கொண்டுவரப்பட்டான். (ஆதியாகமம்31:3; 35:1-4;எசேக்கியேல் 37:21-23). கிறிஸ்து விசுவாசிக்கும் இஸ்ரவேலரை தனது இரண்டாம் வருகையில் திரும்ப கூட்டிச் சேர்த்து தனது ஆயிர வருட அரசாட்சியில் தன்னுடன் வைத்துக்கொள்வார்.

யாக்கோபு -- முற்பிதா

1. வேதபகுதி - ஆதியாகமம் 25:21 - 50:13; எபிரெயர் 11:21.

2. வாழ்க்கைச் சரிதை

யாக்கோபு என்கிற பெயரை இவன் இரண்டாவது பிறந்தபோதே பெற்றுக்கொண்டான், இவன் முதலில் வெளிவந்த தனது சகோதரன் ஏசாவின் குதிங்காலை பற்றிக்கொண்டே வெளிப்பட்டான். யாக்கோபு என்பதன் பொருள் "பிடித்துக் / பற்றிக் கொண்டவன்" அல்லது "ஏமாற்றுக்காரன்". முதல் குமாரன் குடும்பத்தின் ஆழுகைத்திறனைப் பெறுகிறவனாய் இருக்கிறான். அவன் குடும்பத்தின் ஆசாரியனாய் இருந்து பிறப்புரிமையின்படி அவன் இருமடங்கு ஆசீர்வாதத்திற்கு பாதிரனாய் இருக்கிறான். சிவப்பான கூளுக்காய் ஏசா தனது சேஷ்டபுத்திர பாகத்தை / பிறப்புரிமையை யாக்கோபிற்கு விற்றுப்போட்டான். நினிவேக்கு தென்கிழக்குப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட நுஜி கற்பலகையின் மூலம் சேஷ்ட புத்திரபாகம் / பிறப்புரிமை விற்கப்படுவது உறுதிபடுத்தப் பட்டுள்ளது. திரும்ப பெறமுடியாத ஆசீர்வாதங்களால் ஈசாக்கு யாக்கோபை ஆசீர்வதித்தான் (ஆதி. 27:35f.). இவ்வாறு யாக்கோபு கானானை சுதந்தரிக்கும் சுதந்தரவாளியானான்.(ரோமர் 9:10-13). ஏசா ஏதோம் மலைத் தேசத்தைப் பெற்றுக்கொண்டான். ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் யாக்கோபு பெத்தேலுக்கு ஓடிப்போனான் அங்கு அவனது தாத்தா ஆபிரகாம் ஒரு பலிபீடத்தை கட்டிவைத்திருந்தார் (ஆதியாகமம் 12:8). இந்த ஸ்தலத்தில் அவன் யாக்கோபின் ஏணி சொப்பனத்தைப் பெற்றுக்கொண்டான். அங்கிருந்து அவன் வட கிழக்காய் பயணம் செய்து ஆரானுக்கு வந்து சேர்ந்து எலெயேசர் ரெபேக்காளை சந்தித்த அதே கிணற்றண்டையிலே இவன் ராகேலை கண்டுகொண்டான் (ஆதியாகமம் 24:11). யாக்கோபு லாபானை 20 ஆண்டுகள் சேவித்தான், ஏழு ஆண்டுகள் லேயாளுக்காய், ஏழு ஆண்டுகள் ராகேலுக்காய், ஆறு ஆண்டுகள் ஆட்டு மந்தைக்காய். அங்கிருந்த காலத்தில் பதினோறு குமாரர்களையும் ஒரு குமாரத்தியையும் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டான். அவன் மிகவும் செழிப்படைந்து அவனது மாமனார் ஆடுகளுக்கு மயிர் கத்தரிக்கச்சென்ற போது தனக்குண்டான எல்லாவற்றையும் சேர்த்துக்கொண்டு ஆரானை விட்டு வெளியேறினான். (ஆதியாகமம் 31:22f.). லாபான் அவர்களை பின்தொடர்ந்து அவர்களை கிலெயாத்தில் வந்து கண்டுகொண்டான் அங்கு

அவர்கள் ஒரு கற்குவியலை அவர்கள் இடையே ஏற்படுத்திக்கொண்டனர். அங்கிருந்து அவன் மகனாயீமுக்கு வந்து அங்கிருந்து தனது பணியாட்களை ஏசாவிடத்தில் அனுப்பி அவனது மனநிலை அறிந்து வரும்படி செய்தான். (ஆதி 32:1f.). யாப்போக்கு என்கிற நதிக்கு அக்கரை படுமுன்னர், ஒரு "மனிதனுடன்" மல்யுத்தம் செய்து அவன் நிரந்தரமாய் இடுப்பில் காயம் உண்டாகும் வரை போராடினான். அவனது பெயர் இங்கு யாக்கோபு என்பதிலிருந்து இஸ்ரவேல் என மாற்றப்பட்டது. இந்த இடமே யாக்கோபின் மனமாற்றத்திற்குரிய இடமாய் இருந்தது. (ஆதி. 32:24-30, cf. ஆதி. 28:20,21; ஓசியா 12:4). யாக்கோபு இப்பொழுது சீகேமில் ஒரு இடத்தை கிரயம் கொடுத்து வாங்கினான். ஈசாக்கின் மரணத்திற்குப் பின்னர் யாக்கோபு எபிரோனில் தங்கி தாபரித்தான். (ஆதி. 35:28,29). முற்பிதாவாகிய யாக்கோபு ஆதியாகமத்தில் உள்ள மூன்று பெரிய தீர்க்கதரிசனங்களில் ஒன்றை அளித்தவராய் இருக்கிறார் -- அது 12 கோத்திரத்தாரைக் குறித்த தீர்க்கதரிசனம். (ஆதி. 49). இது அவனது மரணத்திற்கு முன் அதாவது அவனது 130 வது வயதில் கொடுக்கப்பட்டது. யாக்கோபு எபிரோனுக்கு அருகான மக்பேலா என்னும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டார். (ஆதி. 50:13).

3. மதிப்பீடு:

யாக்கோபு தயையின் குழந்தையாய் கருதப்படுகிறார் (மல்கியா 1:2; ரோமர் 9:10-13).

இவர் தெய்வீக வாக்குத்தத்தத்தின் வாரிசு ஆக வருணிக்கப்படுகிறார். (எபிரெயர் 11:9).

யாக்கோபு ஆசீர்வாதத்தின் மனிதனாய் இருக்கிறார். (எபிரெயர் 11:20,21).

இவர் ஆபிரகாம், ஈசாக்குடன் இணைக்கப்படுகிறார். (2 இராஜாக்கள் 13:23; மாற்கு 12:26,27).

இஸ்ரவேல் யாக்கோபின் வீடு என அழைக்கப்படுகிறது. (ஏசாயா 8:17; மீகா 2:7).

இஸ்ரவேல் யாக்கோபின் குமாரர்கள் என அழைக்கப்படுகிறது. (1இராஜாக்கள் 18:31; மல்கியா 3:6).

இஸ்ரவேல் என்பது யாக்கோபின் வித்து என அழைக்கப்படுகிறது. (ஏசாயா 45:19; எரேமியா 33:26).

இஸ்ரவேல் யாக்கோபின் சமுதாயம் என அழைக்கப்படுகிறது (உபாகமம் 33:4).

இஸ்ரவேல் யாக்கோபு என அழைக்கப்படுகிறது. (ஓசியா 10:11).

தேவன் யாக்கோபின் வாழ்க்கையைக் குறித்த திட்டத்தைப் பெற்று இருந்தார், அவரது தேசமாகிய இஸ்ரவேலிலே யாக்கோபு பெரிய காரியத்தை அமைக்குமாறு.

யாக்கோபு "தேவனுடைய வீடாகிய" பெத்தேலிலிருந்து, "வறண்டு போன இடமாகிய" ஆரானுக்குச் சென்றார்.

அவர் பெத்தேலில் ஒரே ஒரு இரவும் ஆரானில் 20 ஆண்டு காலத்தை செலவழித்தார்.

அவர் முழுமையாக தேவனது திட்டத்திற்குள், நீண்ட மற்றும் கடினமான போராட்டத்திற்குப் பின்னர் பிரவேசித்தார்.
ஏமாற்றுக்காரனாகிய யாக்கோபு இஸ்ரவேலின் இளவரசனாய் மாறினார்.

4. அடிப்படைக் கோட்பாடுகள்:

தேவனது முன்னறிவின் படியே ஒரு விசுவாசியின் பிறப்பிற்கு முன்பதாகவே தேவன் அந்நபரில் அன்பு கூறுகிறகிறவராய் இருக்கிறார். (ரோமர் 9:10-13).
இருந்த போதிலும் தேவன் ஒரு விசுவாசியின் சுய சித்தத்துடன் போராடுவது இல்லை. (வெளிப்படுத்தல் 3:20).
நாம் கிறிஸ்துவில் புதிய சிருஷ்டியாய் இருக்கிறோம் (2 கொரிந்தியர் 5:17).
ஒரு குடும்பத்தில் பட்சபாதம் பொறாமைக்கு காரணமாகிறது (1 சாமுவேல் 1:5,6).
தேவன் நமது பெலவீன குணாதிசயத்தை, அவரது மகிமைக்கேதுவாய் பிடிவாத குணமாக்குகிறவராய் இருக்கிறார் (2 கொரிந்தியர் 12:10).
மனிதனின் திட்டத்தைவிட தேவனின் திட்டம் என்பது எப்பொழுதும் உயர்வாகவே இருக்கிறது. (யோபு. 42:2-6).

<u>பாடம் 14 -- அதிகாரம் 35</u>

முகவுரை:

இங்கு நமக்கு தோற்றுப்போன நபர் ஒருவர் இருக்கிறார். ஈசாக்கு யாக்கோபையும் ஏசாவையும் தங்களைத் தாங்களே உருவாக்கிக் கொள்ள அனுப்பி விட்ட போது, யாக்கோபு தனது பிள்ளைகளுக்கு நல்லத் தகப்பனாய் இருக்கத் தவறிவிட்டான். குடும்பத்தில் அவனது ஆதிக்கம் சரியில்லாத காரணத்தால் அது பெரிய பிரச்சனைக்கு வழிவகுத்தது.

யாக்கோபு

31 ம் அதிகாரத்தில் யாக்கோபு மிகவும் தந்திரமாய் ஆடுகளைத் தெரிந்துகொண்டு சட்டப்பூர்வமாய் செல்வந்தன் ஆகும் விஷயத்தில் செயல்பட்டான். யாக்கோபுக்கு இப்படிப்பட்ட கீழ்த்தரமான குணாதிசயம் பெற்றவனாய் இருந்தும், அவன் தேவனால் பார்த்துக்கொள்ளப்பட்டு விசுவாசத்தின் மூலம் கிருபையினால் இரட்சிக்கப்பட்டவனாய் இருந்தான்.

32 மற்றும் 33 ம் அதிகாரத்தில் அவன் ஏசாவை சந்தித்த போது, அவிசுவாசியான தனது சகோதரன் இவனைக்காட்டிலும் மிகச்சிறப்பான குணாதிசயத்தைப் பெற்றவனாய் இருந்தான். எப்படியிருப்பினும்

யாக்கோபு 32:9-12 ல் ஒரு சிறப்பான ஜெபத்தை ஏறெடுப்பதைப் பார்க்கிறோம், இந்த இடத்தில் இவன் கர்த்தரிடம் மரணபயத்தினிமித்தம் திரும்பவருகிறவனாய் காண்கிறோம்.

ஆதியாகமம் 34.

34ம் அதிகாரத்தில் முற்பிதாக்களின் சரித்திரத்தில் மிகவும் அசிங்கம் நிறைந்த பகுதியாய் இருக்கிறது. யாக்கோபு பலதார விவாகம் செய்தவன் மட்டுமல்லாது, பலருடன் பால் உறவு கொள்கிறவனாய் இருந்தான். ஒரு தகப்பனின் பாவம் அவனது பிள்ளகளிடம் திரும்ப வந்து அவர்களையும் வேட்டையாடுகிறதாய் இருக்கிறது.

அவனது குமாரத்தி தீனாள், பெண்களுடன் சென்ற போது சீகேமின் இளவரசனால் கற்பளிக்கப்படுகிறாள். எபிரேய கண்ணோட்டத்தில் அவள் பலாத்காரம் செய்யப்பட்டதைக் காட்டிலும் கற்பளிக்கப்பட்டது என்பது தெளிவாய் இருந்தது. யாக்கோபின் குமாரர் நியாப்பிரமாணத்தை தங்கள் கைகளில் எடுத்துக்கொண்டு சீகேமியர்களிடத்தில் கொடுமையாய் பழிவாங்கியது கொடுமையான செயலாய் கருதப்படுகிறது. யாக்கோபுக்கு அவர்கள் மேல் எவ்வித கட்டுப்பாடும் இல்லாதிருந்தது, இப்பயங்கரவாத செயல்பாடுகள் அவன் எந்த அளவுக்கு தன் நிலையிலிருந்து வழுவிப்போனான் என்பதை தெளிவு படுத்துவதாக இருக்கிறது.

ஆதியாகமம் 35.

வசனம் 1 ல் தேவன் கூறுகிறார், பெத்தேலுக்கு திருமபி வந்து அங்கு அவருடன் வாசம்பண்ண சொல்கிறார். இந்த இடத்தில் அவன் யாக்கோபின் ஏணியைக்குறித்த தரிசனத்தை கண்டவனாய் இருந்தான். யாக்கோபு ஒரு திருப்புமுணைக் கிறிஸ்தவனாய், அவர்கள் வாழ்வில் ஒரு திருப்புமுணை ஏற்படும் வரை, அவன் புறஜாதியாரைப் போல வாழ்ந்து வந்தான். சிலக் கிறிஸ்தவர்களுக்கு அவர்களது வாழ்வில் தேவனது முகத்தை தேடுவதற்கு முன்பு, ஒரு பூகம்பத்தை பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். தேவன் அவனை ஒரு பலிபீடம் கட்ட உத்திரவிடுகிறார். 2 கொரிந்தியர் 13:5 - உங்களை நீங்களே சோதித்தரியுங்கள், 1 யோவான் 1:9, எபிரெயர் 12:2.

குடும்பத்தில் உள்ள வெற்றிடமானது தவறான மதத்தால் நிரப்பப்பட்டு இருப்பதை யாக்கோபு கண்டு இது குறித்து ஏதாவது செய்ய திட்டமிட்டார். தனது குடும்பத்தினருக்கு அந்நிய தெய்வங்களை அகற்றி, மற்றும் வஸ்திரங்களை சுத்திகரிக்குமாறு யாக்கோபு கட்டளை கொடுத்தான். பெற்றோர்கள் தெய்துவத்தைப் பற்றிய விஷயத்தில் மாதிரியை அமைக்கத் தவரும் போது, பிள்ளைகள் ஜனங்களிடமிருந்து தெய்வத்துவத்தை எடுத்துக்கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். யாக்கோபிடத்தில் அவர்களது தெய்வ சொரூபங்களையும் காதணிகளையும் கொடுத்தனர். காதணிகள் புறஜாதிய தெய்வங்களை ஆராதிப்பதில் சம்பந்தப்பட்டதாய்

இருந்தது. அவர்கள் தங்களது வஸ்திரங்களை மாற்றிக்கொண்டனர், அவர்களுக்குள் எழுப்புதல் உண்டானது [வச. 4]
தேவனது அதிகாரத்தின் கீழ் ஒரு விசுவாசி அவர்களது பாவத்துடன் ஈடுபடும்போது அங்கே எழுப்புதல் உண்டாகிறது. தேவனது ஆசீர்வாதம் யாக்கோபின் மீது ஒரு புதுப்பெயரினால், காணப்பட்டது, இஸ்ரவேல் என்பதன் பொருள் "தேவனின் இளவரசன்" அல்லது "தேவன் ஆழுவார்" என்பதாகும். தேவன் நாம் எவ்வாறு பரிசுத்த ஆவியானவரின் கீழ் இருக்கிறோம் என்பதைக் காண்கிறவராக இருக்கிறார். அவர் நம்மை கிருபையினால் பராமறிக்கிறவராய் இருக்கிறார், இதற்காக நாம் அவருக்கு மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

வசனம் 11-13 ல் தேவன் யாக்கோபுக்கு கூறும் போது, அவன் ஆபிரகாமின் உண்மைச் சந்ததியாய் இருக்கிறான் என்று கூறினார், மற்றும் ஆபிரகாமுக்கு அருளப்பட்ட வாக்குத்தங்களை சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார். இதிலிருந்து வேதாகமம் இவனை இஸ்ரவேல் அல்லது யாக்கோபு என அழைக்கிறதாய் இருக்கிறது. தேவன் இவனை அழைத்த போது இவன் தனது பழைய பாவ சுபாவத்தின் ஆதிக்கத்திற்குள் இருந்தான், இவன் பரிசுத்த ஆவியானவரின் ஆதிக்கத்திற்குள் வந்தபின்னர் இவன் இஸ்ரவேல் என அழைக்கப்பட்டவனாய் இருக்கிறான். நமது வாழ்வில் நம்முடன் இருக்கும் பாவத்துடன் இடைபடும் விஷயத்தில் தெரிந்துகொள்ளுதல் என்பது நம்முடையதாய் இருக்கிறது.

யாக்கோபின் பெலவீனம் வசனம் 21-22 ல் காணப்படுகிறது, அவன் தனது குடும்பத்திற்கு அதிகமான சலுகை காட்டுகிறவனாய் இருந்தான் குறிப்பாக யோசேப்பிற்கு அதிக சலுகையை காட்டினான். யாக்கோபின் மறுமனையாட்டியாகிய பிள்காளுடன் ரூபன் பாலுறவு கொண்டான். இவன் தனது தகப்பனை பின்பற்றுகிறவனான். இதைக் குறித்து யாக்கோபு ஒன்றும் செய்ய வில்லை அவன் பெலவீனனாய் இருந்தான். எப்படியிருப்பினும் கர்த்தர் உங்களது பெலவீனத்தை மேற்கொள்ள உங்கள் இருதய விருப்பத்தின்படி செய்கிறவராய் இருக்கிறார். உங்கள் ஜனங்களை பாவத்தை மேற்கொள்வதற்கு நீங்கள் உற்சாகப்படுத்த வேண்டும். யாக்கோபு துக்கத்தினால் பாதிப்புக்குள்ளானான், மட்டுமல்லாது இன்னும் சில அனுபவங்களும் இப்பாதிப்பிற்கு காரணமாய் இருந்தன, யோசேப்பின் இழப்பு இவனை அதிகமாய் பாதித்தத்தாய் இருந்தது.

யோசேப்பும் அவனது சகோதரர்களின் பொறாமையும்:

யோசேப்பும் பலவருண அங்கியும். இது ஒரு பலவருணங்கள் உள்ள அங்கியல்ல, இது வண்ண முழுக்கை அங்கியாய் இருந்தது. பண்டைய உலகில் அலமாறி என்பது இந்தது இல்லை, அவர்களுக்கு ஒரு ஜோடி ஆடைமட்டுமே இருந்தது, அதை அவர்கள் பின்புறம் அழுக்கு பிடித்து கிழிந்து போகும் வரை பயன்படுத்தி வந்தனர். இது ஏற்படுமுன்னர் புது ஜோடி உடைக்காய் சேமித்து வைப்பர். ஒரு ஜோடி வஸ்திரம் அளிப்பது, முக்கியமாய் வருணம் தீட்டப்பட்ட ஆடை அளிப்பது மிகுந்த மதிப்பிற்குரியதாய் இருந்தது. இன்றைய அளவில் அரேபிய உலகில் ஒரு

நபரின் அந்தஸ்து, அவர் அணியும் வஸ்திரத்திலிருந்து தெரியவருகிறதாய் இருக்கிறது மற்றும் அவர் எந்த கோத்திரத்தார் என்பதும் அதன் மூலம் அறியப்படுகிறதாய் இருக்கிறது.

யோசேப்பின் அங்கியைக் குறித்துள்ள முக்கியமான காரியம் என்னவெனில் அந்த அங்கியானது முழுக்கையுள்ளதாய் இருந்தது. இன்றைய அளவில் பல்கலைகலகங்களில் இளநிலைப் பட்டதாரி பட்டம் பெறும்போது, அவர்களுக்கு குறுகிய கையுள்ள அங்கியும் தொப்பியும் அளிக்கப்படுகிறது. முதுநிலைப் பட்டம் பெறுபவருக்கு நீண்ட கையுள்ள அங்கி அளிக்கப்படுகிறது, இளநிலைப் பட்டத்திற்கு கீழான நிலையில் உள்ள பட்டம் பெறுவோருக்கு கையில்லாத அங்கி அளிக்கப்படுகிறது. யாக்கோபு யோசேப்புக்கு நீண்ட கையுள்ள அங்கி அளித்ததன் நோக்கம் அவனது மூத்த சகோதரர்கள் மீதுள்ள பொறுப்பானது யோசேப்பின் வசம் அளிக்கப்பட்டது, இதினிமித்தமாகவே அவனது சகோதரர்கள் பொறாமைகொள்ள, கசப்புணர்வுடன் செயல்பட, அவனை வெறுக்க, மற்றும் இவன் மேல் பொறாமை கொள்ள காரணமாகியது.

யாக்கோபு இக்காரியத்தை யோசேப்புக்கு சரியான காரியம் என உணர்ந்து செய்தான், காரணம் யோசேப்பு மட்டுமே ஆவிக்குரிய குணாதிசயத்துடன் காணப்பட்டான், ஆனால் இது பட்சபாதமாய் கருதப்பட்டு, அவனது மூத்த குமாரர்கள் யோசேப்பிடம் மிருகத்தனமான செயல்களை பிரயோகிக்க நேர்ந்தது. பட்சபாதம் காட்டுதல் என்பது குடும்பத்தில் மரணவிளைவுகளை கொண்டுவருகிறதாய் இருக்கிறது. உங்கள் குடும்பத்தில் உள்ள எல்லா பிள்ளைகளும் உங்கள் மனம் கவர்ந்தவர்களாய் இருத்தல் மிகவும் அவசியம். யோசேப்பு குடும்பத்தில் தலைவராய் இருக்கும்போது, இப்பதவி கொடுக்கப்பட்டது உண்மையான நிலையில் அவனால் குடும்பத்தை வழிநடத்துதல் என்பது கூடாத காரியமாய் இருக்கிறது.

யோசேப்புக்கு உண்டான சொப்பனப்படி அவனது தகப்பன் மற்றும் அவனது சகோதரர்கள் அனைவருக்கும் மேலாக இவன் உயர்த்தப்படுவது குறித்து கேள்விப்பட்டது அவர்களுக்கு இஷ்டமில்லாததாய் இருந்தது. யோசேப்பின் பார்வையில் தேவனுடைய வார்த்தையை அவர்களுடன் பகிர்ந்து கொண்டது மிகவும் சரியாகவேத் தோன்றியது, ஆனால் அதன் விளைவானது எல்லாத்தீர்மானத்திற்கும் அப்பாற்பட்டதாய் இருந்தது. யோசேப்பு தனது சொப்பனத்தை கூறியபோது எல்லோரும் அவன் மீது கோபம் கொண்டனர். பொறாமை அவனது சகோதரர்களை ஆட்டிப்படைக்கிறதாய் இருந்தது. பொறாமை ஒருமனிதனை, குடும்பத்தை, சபையை மிகவிரைவாய் அளிக்கிறதாய் இருக்கிறது. ஒருவனின் இருதயம் எப்படி நினைக்கிறதோ, அவனும் அப்படியே இருக்கிறான் - நீதிமொழிகள் 23:7 - தீமை என்பது மனதில் ஆரம்பிக்கிறதாய் இருக்கிறது.

யோசேப்பின் சகோதரர்கள் மந்தையை மேய்க்கும்படி வெளியே சென்றிருந்த போது, அவர்களை நலம் விசாரித்து வர இவன் அனுப்பப்பட்டான். யோசேப்பு தன் சகோதர்கள் எங்கு இருக்க வேண்டுமோ

அங்கு சென்று அவர்களைத் தேடினான், அவர்கள் அங்கு இராது தோத்தானுக்குச் சென்று இருந்தனர், இந்த இடமானது இரு கிணறுகள் உள்ளதாயும், பெரிய இடமாயும், கடின உழைப்பிற்கு அவசியமின்றியும், பொழுதுபோக்கிற்கு சிறப்பான இடமாயும் இருந்தது. அவனது சகோதரர்கள் வேலை மற்றும் அவர்களது கடமைதவறி ஓடிக்கொண்டிருந்தனர்.

யோசேப்பு தூரத்தில் வரும்போதே, அவனது சகோதரர்கள் அவனது நீண்ட அங்கியை வைத்து அவனை இனங்கண்டு கொண்டனர். சொப்பனக்காரன் வருகிறான் என்று சொல்லிக்கொண்டு அவனை கொலை செய்ய திட்டமிட்டனர். பொறாமை மற்றும் வெறுப்பு எப்பொழுதும் வெளியே வருகிறதாய் இருக்கிறது. வேசிக்கள்ளனாகிய ரூபன் ஒரு விசுவாசியாய் இருந்தான், தன் சகோதரர்கள் செய்வது தீமை என்பதை அறிந்திருந்தான், அவன் அவர்களுக்கு பிள்ளையாண்டானை கொலை செய்ய வேண்டாம், அவனை இந்த குழியில் போட்டுவிடலாம் என என ஆலோசனை அளித்தான்.

ரூபன் அதைரியம் கொண்டவனாய் இருந்தமையால் அவர்கள் செய்வது தீமை என்பதை அவர்களுக்குச் சுட்டிக்காட்ட அஞ்சினான். அவன் தனது பாவத்துடன் ஒத்துப்போகிறவனாய் இருந்தான். ரூபன் தனது சகோதரர்களால் மாய்மாலக்காரன் என அழைக்கப்பட்டான். இந்த உதாரணத்தின் மூலம் அநேகப்பாடங்கள் விசுவாசிகளுக்கு தங்களது வாழ்வில் இதைப்போன்று நிகழாதிருக்க எச்சரிப்பை பெறுகிறவர்களாய் இருக்கிறார்கள். ரூபனுக்கு நல்ல எண்ணம் இருந்தது ஆனால் இக்குணாதிசயத்தின்படி பின்பற்றுவது சரியாய் தோன்றுவதாய் இல்லை.

யோசேப்பின் அங்கியானது உடனடியாக அகற்றப்பட்டது, அங்கிருந்த தண்ணீரற்ற கிணற்றில் அவன் தூக்கி எறியப்பட்டான். இந்த ஆழமான தண்ணீரற்ற கிணற்றில் தூக்கி எறிந்தவர்கள் இவன் மீது கோபங்கொண்ட சகோதர்களாயிருந்தனர். இவ்வாறு செய்தபோது அவனது எலும்புகள் ஒன்றும் முறியா வண்ணம் தேவன் அவனுக்கு அற்புதம் செய்து காத்துக்கொண்டார்.

நீங்கள் தீமையினால் மேற்கொள்ளப்படும் நபராய் இருப்பீர்களானால் கர்த்தரது பாதுகாப்பை எப்பொழுதும் எதிர்பாக்கிறவர்களாய் இருப்பீர்கள். தேவன் உங்களை எப்பொழுதும் காத்துக்கொள்கிறவராய் இருக்கிறார். யோசேப்பின் சகோதரர்கள் மதிய உணவு அருந்திக் கொண்டிருக்கும் போது, எகிப்துக்குச் சென்று கொண்டிருந்த இஸ்மவேலர்கள் அவ்வழியாய் கடந்து சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது யூதா தனது சகோதரிடம் பேசி தங்களது சகோகரானாகிய யோசேப்பைக் கொலை செய்ய வேண்டாம் அவனை இந்த இஸ்மவேலரிடம் விற்றுவிடலாம் எனக்கூறினான். எப்படி தங்களது தலைஅறிவை மோசமான வழியில் பயன்படுத்தினர் பாருங்கள். அவர்கள் அவனை 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டனர்.

இஸ்மவேலர்கள் இவர்களது சகோதரர்களாய் இருந்தனர் மற்றும் காட்டுமிராண்டித்தனமான அவிசுவாசிகளாய் இருந்தனர், ஆனால்

விசுவாசிகளாகிய ரூபன் மற்றும் யூதா இவர்களது செயல்கள் மிகவும் கெட்டதாகவும், தேவனுக்குப் புறம்பானதுமாய் இருக்கின்றன. ரூபன் யோசேப்பு சென்றுவிட்டதை கண்ட பொழுது, ஒரு ஆடு அடிக்கப்பட்டு அதன் இரத்தம் யோசேப்பின் வஸ்திரத்தில் தோய்க்கப்பட்டது. அவர்கள் அவ்வஸ்திரத்தை யாக்கோபிடம் கொண்டுவந்து அவனிடம் யோசேப்பு மரித்துவிட்டான் என்ற செய்தியை அறிவித்தனர். இது யாக்கோபிற்கு அதிர்ச்சி தரும் செய்தியாகவும் துக்கத்தினால் அவர்களது தகப்பனை கொலை செய்கிற அனுபவமாயும் இருந்தது. எப்படியிருப்பினும் யாக்கோபு தனது சொந்த பாவத்திற்காய் துன்பம் அனுபவிக்கிறவாய் இருக்கிறார்.

மீதியானியர் யோசேப்பை போத்திபார் என்னும் ராஜாங்க காவலர்களுக்கு அதிகாரியான வனிடத்தில் விற்றுப்போட்டனர். யோசேப்பு ரோமர் 8:28 ஐ கற்றுக்கொள்ள இருக்கிறான். நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மூலம் நடந்து கொண்டிருக்கும்போதே நீங்கள் பரீட்சை பார்க்கப்பட்டுக்கொண்டு இருக்கிறீர்கள் என்கிற விஷயத்தை நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். இதை சரிவர கற்றுக்கொள்ளுமுன்னர் யோசேப்பு சிறைச்சாலைக்கு செல்லவேண்டியதாய் இருக்கிறது.

தேவன் நம்பிக்கைக்குப் பாத்திரராய் இருக்கிறார் மற்றும் நமது வாழ்க்கையை ஆண்டு நடத்துகிறவராய் இருக்கிறார். உங்கள் வாழ்வில் என்னநடந்தாலும், கடந்த கால நித்தியத்தில் தேவன் அதைக்குறித்து அறிந்துள்ளார், அவர் அவற்றைக்குறித்த திட்டத்துடன் உள்ளார் அதன் படியே அவர் கிரியை செய்யப்போகிறார். நமது கடமை அவருடன் நடந்து, அவரைக் கனம் பண்ண வேண்டும். நீங்கள் குழியில் போடப்பட்டு இருப்பீர்களானால், சிலுவையில் உங்களுக்காய் மரித்த மனிதனின் கரத்தில் உங்களது கரங்களை கொடுங்கள், அவர் உங்கள் வாழ்க்கையை ஆண்டு நடத்துகிறவராய் இருக்கிறார். கர்த்தரிடம் இவ்வாறு சொல்லுங்கள், "நீங்கள் என்னை இக்குழியிலிருந்து தூக்கிவிட ஆயத்தமாய் இருப்பீரானால், அது உங்களைப்பொறுத்தது" நீங்கள் யாரைப்போன்று இருக்க விரும்புகிறீர்கள் யோசேப்பைப் போன்றா அல்லது யாக்கோபைப் போன்றா? நீங்கள் உங்களது இச்சையின் படியே உங்கள் பழைய பாவ சுபாவத்தின் படியே வாழ விரும்புகிறீர்களா? அல்லது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையின் படி கலாத்தியர் 5:18-23 ன் படியா?

உபதேசங்கள்:

யோசேப்பு -- தேவனின் திட்டம்

1. வேதபகுதி ஆதியாகமம் 30:24 - 50:26.

2. வாழ்க்கைச் சரிதை:

யோசேப்பு யாக்கோபின் பதினோராவது குமாரன்: இவன் ராகேளுக்குப் பிறந்த முதல் குமாரன் (ஆதியாகமம் 30:24, 35:24). இவன் யாக்கோபுக்கு மிகவும் பிடித்தமான மகன் (ஆதியாகமம் 37:3, cf. 33:2,7). யோசேப்பு உதவாக்கரைப் பையனாய் எகிப்திய அடிமைத்தனத்திற்கு, அவனது பொறாமை கொண்ட சகோதரர்களால் விற்றுப்போடப் பட்டவன். இவனுக்கு முப்பது வயது ஆகும் போது (ஆதி. 41:46), சிறைச்சாலையில் மற்றக் கைதிகளுக்கு வேலைக்காரனாய் தனது காலத்தைக் கழித்தான், பின்னர் எகிப்தை ஆளும்படியான, இரண்டாம் நிலை ஆளுநராய் உயர்த்தப்பட்டான். ஞானமுள்ள திட்டத்தினாலே பெரிய பஞ்சத்தின் சவுக்கடியிலிருந்து திருப்பி, எகிப்து, கானான், மற்றும் தனது சொந்த குடும்பம் யாவரையும் பட்டினிக்கும் மரணத்திற்கும் விலக்கி இரட்சிக்க ஏதுவுண்டாயிற்று. பின்னர் தனது சகோதரருடன் ஒப்புரவாகி, அதைத் தொடர்ந்து கோசேன் என்னும் வளப்பமான புல்வெளியில், எகிப்தின் வட கிழக்குப்பகுதியில் அவர்கள் அனைவரும் குடியேறச்செய்தான். யாக்கோபை கானானில் அடக்கம் செய்த பின்னர், யோசேப்பு அவர்களுக்கு தனது எலும்புகளை கானானுக்கு எடுத்துச்செல்லுமாறு கட்டளை கொடுத்து, யூதர்கள் எகிப்தைவிட்டு வெளியேறிபோது இதற்கு கீழ்ப்படிந்தனர் (மோசேயின் கீழ்). யோசேப்பு தனது 110 வது வயதில் மரித்தான். (ஆதியாகமம் 50:26).

3. மதிப்பீடு:

யாக்கோபு யோசேப்பிற்கு பல வருண அங்கியை கொடுத்தான் (ஆதி. 37:3) இதன் முகாந்திரம் அவன் தனது மூத்த சகோதரர்களை ஆழும்படிக்கு ஆகும்.

யோசேப்பு தனது எதிர்கால உயர்வை குறித்து சொன்ன சொப்பனம் எவ்வித முன்னேற்றத்தையும் கொடுப்பதாய் இல்லை. (ஆதியாகமம் 37:5-11).

அவனது சகோதர்கள் அவனை அவன் பதவியிலிருந்து விலக்க சதி ஆலோசனை செய்து ஆழமான தண்ணீரற்ற குழியில் தூக்கி எறிந்தனர். (ஆதியாகமம் 37:18-24).

அவனை இஸ்மவேலர்கள் அல்லது மீதியானியரிடத்தில் விற்றுப்போட்டார்கள் (ஆதியாகமம் 37:28; cf. நியாதிபதிகள் 8:22-28).

யோசேப்பை போத்திபாரிடத்தில் விற்றுப்போட்டார்கள், அவன் எகிப்தில் காவல் துறை உயர் அதிகாரியாய் இருந்தான். (ஆதியாகமம் 37:36). அநேக சேமின் வம்சத்தைச் சார்ந்த இளைஞர் எகிப்தில் அடிமைகளாய் இருந்தனர். பாபரைஸ் புரூக்ளின், எகிப்திய வீடுகளில் 79 வேலைக்காரர்கள் கி.மு. 1740 ல் இருந்தனர் என்றும் அவர்களில் 45 பேர் சேமின் வம்சத்தினர் என்றும் ஒரு தகவலை அளிக்கிறது.

போத்திபார் யோசேப்பை தனது வீட்டில் நிர்வாகத் தலைவராய் நியமித்தான். (ஆதியாகமம் 39:4-6).

போத்திப்பாரின் மனைவி மிகவும் ஏமாந்து போய், யோசேப்பிற்கு விரோதமாய் தவறான குற்றச் சாட்டுக்களை பிணைக்கலானாள். (ஆதியாகமம் 39:7-20).

யோசேப்பின் நிர்வாகத்திறமையானது குறுகிய காலத்தில் அறிந்து கொள்ளப்பட்டு போத்திபாரால் சிறையில் தள்ளப்பட்டான்,

இருப்பினும் சிறைச்சாலையில் கூட அவனது நிர்வாகத்திறமை அறியப்பட்டு அவனை சிறையில் நிர்வாகியாய் பதவி அமர்த்தினர். (ஆதியாகமம் 39:21-23).
யோசேப்பு, எகிப்தின் அரசனுக்கு விரோதமாய் செயல் பட்ட இரு அதிகாரிகளை விசாரிக்கும் பணியில் சிறைச்சாலையில் இருந்த போது, இவர்கள் கண்ட சொப்பனங்களை விவரித்து அதன் அர்த்தத்தைச் சொன்னான். (Genesis 40:1-13, 16-22).
யோசேப்பு பானபாத்திரக்காரன் ஞாபக சிந்தனையை சார்ந்து இருந்தான், இவன் அதிர்ச்சி காரணமாய் ஞாபக மறதியால் பாதிக்கப்பட்டவனாய் இருந்தான் (ஆதியாகமம் 40:14-15, 23).
இரு ஆண்டுகளுக்குப் பின்னர் பார்வோன் தொடர்ச்சியாக சொப்பனங்களைக் கண்டு கலங்கிக் கொண்டு இருந்த போது, யோசேப்பு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டு, சொப்பனத்திற்கு வியாக்கியானம் அளிக்கும்படி அரசனிடம் கொண்டுபோகப்பட்டான். வியாக்கியானம் பார்வோனால் புறிந்து கொள்ளப்பட்டு, யோசேப்பிற்கு எகிப்தில் ஆளுகைப் பதவி கிடைத்தது. (Genesis 41:1-45).

4. அடிப்படை கோட்பாடுகள்:

யோசேப்பிற்கு தேவன் செய்தது போல, தேவன் எதிர்கால ஊழியத்திற்கென தருணங்களை அளிக்கிறவராய் இருக்கிறார், இத்தருணங்கள் அநேகப்பகுதிகளில் நிர்வாகத்திறமையை பயன்படுத்த ஏதுவுண்டாக்குகிறதாய் இருந்தது. (அப்போஸ்தலர் 7:22).
தேவனது நேரம் என்பது பூரணமானதாய் இருக்கிறது: தேவன் இந்த விசுவாசியாகிய யோசேப்பை ஒட்டகப் பயணத்தின் மூலம் சரியான நேரத்தில் எகிப்து வந்தடையச்செய்தார்.
மனிதரின் பகைமை தேவனின் எதிர்கால மகிமைக்காய் பயன்படுத்தப்பட்டது (ரோமர் 9:17).
சொப்பனங்கள் சட்டரீதியாக தேவனிடமிருந்து பெறும் வழிகாட்டியாக இருக்கிறது. (உ.ம். தானியேல் மற்றும் எசேக்கியேல்)
ஆழுகை செய்ய வேண்டுமானால் நீங்கள் வேலைக்காரனாய் இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். (யோவான் 13:16,17).
நீங்கள் மனிதனுடைய ஞானத்தையோ அல்லது திறமையையோ சார்ந்து இருக்கக்கூடாது, அவைகள் உங்களை கடினமான ஸ்தானத்திற்கு உங்களை திரும்ப எடுத்துச் செல்லும், நீங்கள் தேவனது கொடுகையைச் சார்ந்து அமர்ந்திருத்தல் அவசியம். (எரேமியா 17:5; சங்கீதம். 146:3).
நீங்கள் ஆயத்தமுள்ளவர்களாய் இருப்பீர்களானால், தேவன் ஞானம் மற்றும் புறிந்துகொள்ளும் திரண் போன்றவற்றை உங்களது இக்கட்டான சூழலில் அருளுகிறவராய் இருக்கிறார். (லூக்கா 12:11,12).
வாழ்க்கை என்பது சூரியஒளியாலும் மற்றும் நிழல்களாலும் ஆனது. (யோபு 1:21).

தேவன் கீழ்ப்படிகிற மற்றும் பயிற்சி பெற்ற, தனிநபர்களை உபயோக்கிக்கிறவராய் இருக்கிறார். (1 சாமுவேல் 3:9; 15:22).

பாடம் 15 -- யோசேப்பும் ரோமர் 8:28 ம்:

ரோமர் 8:28

எல்லாக்காரியங்களும் நன்மைக்கேதுவாகவே நடைபெறுகின்றன -- ரோமர் 8:28. ரோமர் 8:28 ஐ முழுமையாய் வாசிப்பது மிகவும் அவசியம். அவிசுவாசிக்கும் நிரந்தர மாம்சீக கிறிஸ்தவர்களுக்கும் எல்லாக்காரியங்களும் நன்மைக்காக நடைபெறுவதில்லை.

ரோமர் 8:28ன் அடிப்படைக் கோட்பாடு:

[அ] ஒரு விசுவாசிக்கு நடைபெறும் ஒவ்வொரு காரியமும் நன்மையாகவே இருக்க அவசியமில்லை, சில காரியங்கள் தீமைகளாயும் இருக்கின்றன. யோசேப்பிற்கு அடிபட்டதும், தழும்புகள் உண்டாக அவனை கிணற்றில் எறிந்ததும் நன்மையாக இருக்க வில்லை. அவன் ஒரு அடிமையாக விற்கப்பட்டது அவனுக்கு நன்மையான காரியமாய் இருக்கவில்லை, போத்திபாரின் மனைவி அவனுக்கு விரோதமாய் பொய்க்குற்றம் சாட்டியது நன்மையான காரியமாய் இருக்கவில்லை, அல்லது அவன் ஒரு காமுகன் என்ற குற்றத்தை சாட்டி அநேக ஆண்டுகள் மத்திய சிறைச்சாலையில் அநேக ஆண்டுகாலங்கள் அவதிபட்டது நன்மையான காரியமாய் இல்லை இல்லவே இல்லை.

[ஆ] எல்லாக்காரியங்களும் நனமையாய் நடைபெற வேண்டுமானால், அவர்கள் தேவனது திட்டத்திற்குள் காலடி எடுத்து வைக்க வேண்டும். நீங்கள் உங்கள் வாழ்விற்கான பிதாவின் சித்தத்தில் இருத்தல் அவசியம். நீங்கள் தவறான சூழலில் இருப்பீர்களானால் இவ்வசனத்தை பற்றிக்கொள்வதை விட யோவான் 1:9 ஐ பிடித்துகொள்ளுங்கள்.

[இ] இந்த வசனம் தேவனது சித்தத்திற்கு புறம்பே இருக்கும் விசுவாசிக்கும் பொருந்தாது அல்லது தேவனிடம் அன்பு பாராட்டாத அவிசுவாசிக்கும் பொருந்தாது.

[உ] நீங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் விசுவாசியாய் இருப்பீர்களானால், ஒவ்வொரு சூழலிலும் தேவனது கரம் உங்கள் வாழ்வில் இருக்கிறது.

[ஊ] உங்களுக்கு மகிழ்ச்சி தராத உங்கள் மேல் உள்ள காரியம் என்னவென்றால், ஐக்கியத்தில் நிலைத்திருங்கள் என்பது, உங்களுக்காய் இருக்கும் தேவனது சித்தத்தில் நிலைத்திருங்கள். பிலி. 4:4, 1 பேதுரு 5:6,7,

இவ்வசனங்களை நீங்கள் மிகவும் நெருக்கப்படும் சூழல்களில் உங்களுக்கு சொந்தமாய் உரித்தாக்கிக்கொள்ளுங்கள்.

ஆதியாகமம் 39:

இவ்வதிகாரத்தின் ஆரம்ப வசனத்தில் யோசேப்போடு இருந்த ஆவியின் கனியை, அவிசுவாசியாகிய போத்திபார் கண்ட போது, யோசேப்பிற்கு பதவி உயர்வு அளித்தான். யோசேப்பு மிகவும் சௌந்தரியமுள்ள வாலிபனாய் இருந்தான். போத்திபாரின் வீட்டுடமைகள் யோசேப்பின் உறவால் ஆசீர்வாதம் பெற்றன. யோசேப்பு சூழ்நிலைகளினால் குற்றவாளியாக்கபடுவதல்ல, அவன் எல்லா வழிகளிலும் கர்த்தரது கரத்தில் இருக்கிறவனாய் இருந்தான்.

யோசேப்பு தேவன் எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார் என்பதை அறியத்தொடங்கினான். உங்களது சூழ்நிலைகள் நீங்கள் சொந்தமாய் உருவாக்கிக் கொண்டவைகள் அல்ல என்பதை நீங்கள் உணரும்போது, உங்கள் கரத்தை கர்த்தரின் கரத்தில் அற்பணித்துவிட்டு அவரில் சார்ந்து இருக்கப் பழகுங்கள். பரிசுத்தாவியானவரின் கனி உங்கள் வாழ்வில் சமாதானம், சந்தோஷம், நீடிய பொறுமை, காத்திருத்தல் போன்றவைகளாகும். கிறிஸ்தவ வாழ்வில் அதிர்ஷ்டம் என்பது கிடையாது, தேவனது சித்தமும் நமது கீழ்ப்படிதலும் இருக்கின்றன, மற்றும் தேவனது சிட்சையும், உங்களது பாவமும் இருக்கின்றன. தேவனது வழிநடத்துதல், தேவனது வல்லமையை மேற்பார்வை செய்தல், அவரது பராக்கிரமும் போன்றவை இருக்கின்றன. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவனது சித்தம் அல்லது உங்கள் மதிகெட்ட செயல்களாய் இருக்கின்றன. யோசேப்பு கர்த்தரை நம்பினது அவனது உயர்வுக்கு காரணமாய் அமைந்தது.

போத்திபார் எகிப்திய அரண்மனையில் உயர் காவல் அதிகாரியாய் பணியாற்றினான், அத்தேசத்தின் அவனது அந்தஸ்து ஒரு உயர் இராணுவ வீரனாய் இருந்தது. அவனது வீட்டின் முழுமைக்கும் யோசேப்பு மேற்பார்வையாளனாய் நியமிக்கப்பட்டிருந்தான், எப்படியிருப்பினும், யோசேப்பிற்கு போத்திபார் மனைவியினால் பிரச்சனை இருந்துகொண்டே இருந்தது.

ஒரு பெண்ணினால் ஒருவனை பிரபலமில்லாமல் ஆக்குவது மிகவும் பயங்கரத்திற்குரியதாய் இருக்கிறது. ஒரு பெண் ஒரு மனிதனிடம் உறவு கொள்ளும் போது, அம்மனிதன் அப்பெண்ணை கீழான நிலைக்கு கொண்டு செல்ல எத்தனிப்பானேயானால், அப்பகையினால் அவள் அவனை கொலை செய்யும்படி தனது வார்த்தையினால், அல்லது நடக்கையினால் அல்லது சரீரப்பிரகாரமாய் கூட துணிந்து விடுவாள். ஒரு பெண்ணின் உணர்வுகள் மனிதனை விட ஆழமானதாய் இருக்கும் படி அவள் உருவாக்கப்பட்டுள்ளாள். ஒரு பெண்ணோடு இணங்கி வாழ்க்கை செய்தால் அவள் தேவனின் மிகச் சிறப்பான சிருஷ்டியாகி விடுகிறாள், அவள் விசுவரூபத்தைக் காட்ட ஆரம்பித்து விட்டாள் என்றால் அவளைப் போன்ற பயங்கரவாதி உலகில் எவரும் இருக்க முடியாது.

போத்திபாரின் மனைவி யோசேப்பின் மீது கண்போட்டுவிட்டாள், இது தங்களது புருஷன்மாரால் கைவிடப்பட்ட நிலையில் உள்ள அவலப்பெண்களால் நேரிடும் இழிச்செயலாய் இருக்கிறது. என்பது சதவீதம் பெண்கள் தங்களது திருமண வாழ்வில் புருஷரால் புறக்கணிக்கப்பட்ட வாழ்க்கை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். இதினிமித்தம் தேவஊழியர்களுக்கு இப்பெண்கள் சோதனையின் ஆதாரமாய் மாறிவிடுகிறார்கள். பெண்கள் தங்கள் மீது கவனம் செலுத்தும் நபர்களுக்காய் காத்து இருக்கின்றனர், அவர்களுக்கு பாலுறவு தாக்கம் அதிகரிக்கையில் அல்லது அவர்களது வாழ்வில் இச்செயல்களில் இன்னும் ஊக்கம் அவசியப்படும்போது அவர்கள் அபாயக்கருவிகளாய் மாறிவிடுகின்றனர். அநேக தேவ ஊழியர் இப்பிரச்சனையில் வீழ்ந்து போகிறவர்களாய் இருக்கின்றனர்.

உங்கள் மீது கண்போட்டு உங்களுடன் பாலுறவு கொள்ள முயற்சி செய்யும் சூழலில் நீங்கள் செல்ல நேரிடும் போது, மிகவும் கவனத்துடன் உஷார் நிலையில் உங்களுடன் சாட்சி சொல்ல ஒருவரை உடன் கூட்டிச் செல்வது மிகவும் அவசியம். யோசேப்பு செய்ததைப் போல இச்சூழலில் நீங்களும் செய்யக்கூடாது. நீங்கள் அவ்விடத்தை விட்டு ஓடுதல் தவிர்க்கப்படல் வேண்டும். ஒரு கிறிஸ்தவ பெண் உங்கள் மீது கண்போட்டு இதைப்போன்ற காரியங்களை நடப்பிக்க விரும்பினால் அகாப்பே அன்பினால் அவள் மீதுள்ள அன்பினால் மற்றும் கரிசனையினால் அவளுக்கு உதவி செய்யலாம். அவளுக்கு இவ்வகை செயல்கள் பாவம் என்பதை உணர்த்தி, அவளை நல்வழிப் படுத்தி நற்சூழலுக்கு கொண்டுவருதல் மிகவும் அவசியம்.

இதைப்போன்ற காரியங்களில் உங்களுக்கு பகுத்து அறியும் ஆற்றல் அவசியம், மற்றும் மிகவும் நம்பிக்கைக்குரிய ஒருவரை அழைத்து, மிகக்கவனமாய் இதை போன்று காரியங்களில் ஆலோசனை கொடுத்து நற்சூழலுக்குள் கொண்டுவருவது அவசியம். இதைக் குறித்து நீங்கள் ஆலோசனை கொடுக்கும் போது உங்கள் வேதாகமத்தை திறந்த நிலையில் வைத்துகொண்டு உறவை சீர்ப்படுத்தும் வகையில் வேத ஆலோசனை அளித்து அச்சூழலை சமாளித்து சகஜநிலைக்கு கொண்டுவருதல் வேண்டும். இதைப்போன்று சூழ்நிலைகள் வரும்போது யோசேப்பைப்போன்று பயத்தினால் அலறி அடித்துக்கொண்டு ஓடும் கிறிஸ்தவர்கள் அநேகராய் இருக்கின்றனர்.

யோசேப்பு போத்திபாரின் மனைவியிடம் பேசித் தீர்த்துக் கொள்ள முயன்றான், ஆனால் பாலுறவு சம்பந்தமாய் வெந்துகொண்டு இருப்பவர்களிடம் எவ்வகையான பேச்சும் எடுபடாது. அவன் இங்கு கூறும்போது, போத்திபாருக்கு விரோதமாய் பாவச்செயல்களை என்று கூறிய பொழுது அவளில் சிறிது சல சலப்பை ஏற்படுத்தியது என்ற போதிலும், யோசேப்பின் ஒழுக்கக்கட்டுப்பாடு அதிகமாகவும், அவளது ஒழுக்கக்கட்டுப்பாடு மிகவும் கீழ்த்தரமானதாயும் இருந்தது. இதைப்போன்ற சூழலில் நீங்கள் ஓரிடத்தை சந்திக்கும் இடமாய்

தெரிந்துகொண்டு, தேவனுடைய வார்த்தையை ஞானமாய் பகிர்ந்துகொள்ளுதல் அவசியம். ஒவ்வொரு நாளும் அவள் யோசேப்பின் மீது கண்போட்டு வந்தாள். இப்படிப்பட்ட நபர் கண்போடுவாள் எனில் உங்களோடு ஒரு நபர் எப்பொழுதும் இருத்தல் அவசியம் அல்லது இப்படி பட்ட காரியங்களுக்கு விலகியிருந்து உங்களைக் காத்துக்கொள்ளுதல் அவசியம்.

ஒரு நாளில் யோசேப்பு மட்டும் வீட்டில் தனித்து இருக்கும் போது, அவள் அவனை சயனிக்க வற்புறுத்தும் போது அதை யோசேப்பு மறுத்தான். அவன் தனது புட்டா பட்டியுடன் தனது வஸ்திரத்தை அவள் கையில் விட்டு விட்டு வெளியே ஓடிவிட்டான். யோசேப்பிற்கு இது போன்ற அனுபவம் புதியதாய் இருந்தது, அவளிடம் இந்த விஷயத்தில் எப்படி நடந்துகொள்வது என அறியாதிருந்தான். போத்திபார் தனது மனைவி கூறிய வாக்குமூலத்தை நம்பினானே ஒழிய யோசேப்பின் சொல் எதுவும் அங்கு எடுபட வில்லை. இது யோசேப்பை உள் காவலறையில் தள்ளியது. அநியாயம் என்பது மிகப் பயங்கரமான ஒன்றாய் அதோடு ஒத்துப்போகமுடியாத நிலையில் இருக்கிறது, நீங்கள் சொல்வதை ஒருவரும் கவனியாத போது அது தனது முழுத் தாக்கத்தையும் உங்கள் மீது திணிக்கிறதாய் இருக்கிறது.

வசனம் 21 ல் கர்த்தர் யோசேப்போடே இருந்தார் எனக்கூறுகிறது, விரைவிலேயே அவனுக்கு இரக்கமும் தயவும் கிடைக்கச் செய்து சிறைச்சாலைக்கு அவன் அதிகாரியாய் மாறும்படி செய்தது. 39 ம் அதிகாரத்தின் இறுதியில் அவன் குழியில் இருப்பதும் இங்கு சிறையில் வாடித்தவிப்பதற்கு பெரிய மாற்றம் ஒன்றும் இல்லாதிருந்தது ஆனால் தேவன் இன்னும் யோசேப்போடே இருந்தார். நான் சிறைச்சாலையில் இருக்கிறேன் இங்கு நான் கனிகொடுக்கிறவனாய் இருப்பேன் ஏனெனில் நான் தேவனது கரத்தில் இருக்கிறேன் என்பதை உணர்ந்தவனாய் இருந்தான். 1 கொரி. 6:20, 7:23 - தேவன் ஒரு போதும் தாழ்ந்து போக விடவே மாட்டார். அவ்வாறு உன்னைத் தாழ்ந்து போகவிடுவார் என்றால், அது அவரை தன்னைத் தானே தாழ்த்திக்கொள்வதாய் இருக்கிறது.

எகிப்திய ஊழியக்காரரின் கனவுகள்:

41 ம் அதிகாரத்தில் பார்வோனின் இரு ஊழியராகிய பானபாத்திரகாரனும், சுயம்பாகியும் அவர்கள் செய்த குற்றங்களின் நிமித்தம் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்த பானபாத்திரக்காரனும், சுயம்பாகியும் பார்வோனின் வலது பக்கத்தில் நின்று பணிவிடை செய்கிறவர்களாய் இருந்தனர், இவர்கள் வெளியுறவு அமைச்சாராகவும், உள்துறை அமைச்சராகவும் பார்வோனுக்கு பணியாற்றுகிறவர்களாய் இருந்தனர்.

வசனம் 5-8 ல் இவ்விரு ஊழியரும் வெவ்வேறு சொப்பனங்களைக் கண்டனர், அவர்கள் இரட்சிக்கப்படாதவர்களானபடியால், அவர்களது சொப்பனங்களால் கலங்கிக் கொண்டிருந்தனர். வசனம் 8 ல் கர்த்தரின் ஆதாரத்தின் படி, அவர்களது சொப்பனங்களுக்கு அர்த்தம் சொன்னான். அவ்வர்த்தப்படியே இருவரும் விடுதலையாக்கப்பட்டு பானபாத்திரக்காரன்

தனது நிலையில் மறுபடியும் உயர்த்தப்பட்டான், உள்துறை அமைச்சரோ மூன்று தினங்களில் தூக்கிலிடப்பட்டான். தன்னை நினைவுகூற பானபாத்திரக்காரனிடம் கூறியது யோசேப்பு செய்த தவறாய் இருந்தது, தன்னை நினைவு கூர்ந்து தான் நிரபராதி என்று கூறியது, மற்றும் தான் சிறைச்சாலையிலிருந்து விடுதலையாகி செல்ல மனதுள்ளவனாய் அவ்வாறு சொன்னான்.

இதன் விளைவாக கர்த்தர் தன்னை விசுவாசியாத யோசேப்பின் சிறைவாசத்தை மூன்று ஆண்டுகள் கூட்டினார். தேவன் தன்னை மட்டும் விசுவாசிக்க கூறியிருந்தார். தேவனுடைய நேரத்தில் யோசேப்பு விடுதலையாகி செல்லவிருந்தான். அவன் ஒரு அவிசுவாசியிடம் தயைக் கேட்க அவசியம் இல்லாது இருந்தது. தேவனது நேரத்தில் அவர் உங்களை உயர்த்துகிறவராய் இருக்கிறார். 1 பேதுரு 5:6. மிகவும் கடினமான பாடம் என்னவெனில், உங்களைத் தாங்களே தேவனது கரத்தில் விட்டுக்கொடுப்பது.

அவர் என்ன செய்ய உங்களுக்கு அளித்துள்ளாரோ அதில் அவருக்கு உண்மையாய் இருங்கள், அதன் விளைவை அவர் உங்களுக்கு அருளுகிறவராய் இருக்கிறார். கிறிஸ்தவனைப் போல அரசியல் விளையாட்டு விளையாடாது இருங்கள். வேளை வருகிறதற்கு முன்னே முன்கூட்டியே மனிதனுக்கு ஆவிக்குரிய தயை செய்வது, தேவனது சித்தமாய் இல்லாதிருந்தது. உங்களது வேலை ஆடுகளுக்கு நல்ல மேய்சல் அளித்து, தேவனுடைய வார்த்தையில் அன்பு கூறுகிறவர்களுடன் சிநேகத்தை வளர்த்துக் கொள்வது மட்டுமாய் இருத்தல் வேண்டும். தேவனை மட்டுமே நம்புதல் வேண்டும், மனிதனை அல்ல. 2 கொரி. 12:9,10 ; 1 பேதுரு 5:7, சங். 55:22; 1 சாமுவேல் 17:37. நீங்கள் யோசேப்பு மற்றும் பவுலுடன் விசுவாசத்தில் வாழப்போகிறீர்களா அல்லது மாமிசத்தில் வாழப்போகிறீர்களா, நீங்கள் சிறைக்கைதியாய் இருக்கிறீர்களோ அல்லது வெளியில் இருக்கிறீர்களோ சிந்தையில்லை, எங்கு இருந்தாலும் ஆவிக்குரிய கனி கொடுக்கிறவர்களாய் இருத்தல் அவசியம். யோசேப்பு எதையும் இழக்கவில்லை ஆனால் மூன்று ஆண்டுகாலங்கள் நீண்டன. கர்த்தர் எல்லாவற்றையும் சிறப்பாய் செய்கிறவராய் இருக்கிறார். ஆவியில் நடந்துகொள்ளுங்கள் மாமிசத்தில் நடக்காதிருங்கள்.

உபதேசங்கள்:

ஒப்புமைகள்: யோசேப்பு கிறிஸ்துவுக்கு ஒப்பணையாய் இருக்கிறார்

யோசேப்பு	கிறிஸ்து
1. மந்தை மேய்க்கிறவன் (ஆதி. 37:2)	நல்ல மேய்ப்பர் (யோவான் 10:11,14).

2. அவனுடைய தகப்பனால் நேசிக்கப்பட்டவன் (ஆதி.37:3)	இவர் என் நேசக்குமாரன் (மத்தேயு3:17).
3. தனது சகோதரால் வெறுக்கப்பட்டவன் (ஆதி. 37:4, 5)	காரணமின்றி பகைக்கப்பட்டவர் (யோவான்15:25).
4. விசுவாசிக்கவில்லை (ஆதி. 37:5)	சொந்த சகோதரர் கூட விசுவாசிக்கவில்லை (யோவா. 7:5).
5. வித்தியாசமானவன் (ஆதி. 37:7, 9)	எல்லாவற்றிலும் இவரே முதல்வர் (கொலோசெயர் 1:18).
6. பகைக்கப்பட்டான் (ஆதி. 37:11)	பகைக்கப்படுவதற்காக ஒப்புக்கொடுக்கப்பட்டார் (மாற்.15:10).
7. சகோதரரிடத்துக்கு அனுப்பப்பட்டான் (ஆதி. 37-13)	நான் என் நேசக்குமாரனை அனுப்புவேன் (லூக்கா 20:13).
8. அவன் சீகேமுக்கு வந்தான் ஆதி. 37-13)	அவர் சீகாருக்கு (அல்லது சீகேம்) வந்தார் (யோ.4:4-5).
9. என் சகோதரர்களை தேடுகிறேன் (ஆதி. 37:16)	தேடவும் இரட்சிக்கவும் அவர் வந்தார் (லூக்கா 19:10).
10. அவனுக்கு விரோதமாய் திட்டம் வகுத்தனர்(ஆதி. 37:18)	அவருக்கு விரோதமாய் ஆலோசனை பண்ணினர் (மத்தேயு27:1, யோவான்11:53).
11. வஸ்திரங்களை உரிந்தனர் (ஆதி. 37-.23)	அவரது வஸ்திரங்களை உரிந்துகொண்டனர் (மத்தேயு27:28)
12. குழியில் போட்டனர் (ஆதி. 37:24).	பயங்கரமான குழி (சங்கீதம்40:2, 69:2, 14,15)
13. அவர்கள் உட்கார்ந்தனர் (ஆதி. 37:25)	உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தனர். (மத்தேயு27:36).
14. 20 வெள்ளிக்காசுக்கு விற்றனர் (ஆதி. 37:28)	30 வெள்ளிக் காசுக்காக காட்டி கொடுக்கப்பட்டார் (மத்தேயு26:15, 27:9, யாத்திராகமம்21:32).
15. எகிப்துக்கு கொண்டு செல்லப்படுதல் (ஆதி. 37-36)	எகிப்திலிருந்து கொண்டு வரப்படல் (மத்தேயு2:14, 15)

16. கர்த்தர் யோசேப்புடனிருந்தார் (ஆதி. 39:2, 21, 23) பிதா என்னுடனிருக்கிறார் (யோவான்16:32).

17. எல்லாம் அவனது கரத்தில் ஒப்படைக்கப்பட்டது (ஆதி39:3) எல்லாம் அவருடைய கரத்தில் கையளிக்கப்பட்டுள்ளது (யோவான் 3:35)

18. யோசேப்பினிமித்தம் ஆசீர்வாதம் (ஆதி 39:5) கிறிஸ்துவினிமித்தம் ஆசீர்வாதம் (எபேசியர்1:3, 4:32).

19. உயர்ந்த மனிதன் (ஆதி 39:6) எல்லாவற்றிலும் விரும்பப்படத்தக்கவர் (உன்னத. 5:16)

20. அவனது கால்களை தொழுவில் மாட்டினர்(சங்105:18, 19) அவரது கைகளையும் கால்களையும் உருவக்குத்தினார்கள் (சங்கீதம்22:16).

21. இரு அதிகாரிகள் யோசேப்புடன் சிறைச்சாலையில் இருந்தனர் (ஆதியாகமம் 40:2-3) இருகள்வர்கள் அவருடன் சிலுவையில் அறையப்பட்டனர். (லூக்கா23:32).

22. அவன் அவர்களுக்கு பணிவிடை செய்தான் (ஆதி. 40:4) அவர் அவர்களுக்கு ஊழியம் செய்தார் (லூக்கா 22:27).

23. என்னை நினைத்துக்கொள்ளுங்கள் .(ஆதி.40:14) என்னை நினைவு கூறும்படி செய்யுங்கள் (1 கொரி. 11:24)

24. தேவனுடைய ஆவியைப் பெற்ற மனுஷன் (ஆதி.41:38) பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டார் (அப்போஸ்தலர் 10:38).

25. எனவீட்டின் மீது அதிகாரி (ஆதி.41:40) குமாரனாக அவரது சொந்த வீட்டில் அதிகாரி (எபி3:6).

26. முழங்கால் முடங்கும் (ஆதி.41:43) எல்லா முழங்கால்களும் முடங்கும் (பிலிப்பியர் 2:10)

27. 30 வயதுள்ளவன் (ஆதி. 41:46,எண்ணா 4:3) முப்பது வயது நிரம்பிய போது (லூக்கா 3:23)

28. பூமி எங்கும் கொடிய பஞ்சம் (ஆதி. 41:56, 57) தேசத்தில் கொடியப் பஞ்சம் உண்டானது (லூக்கா 15:14)

29. எல்லா தேசங்களும் தானியம் கொள்ள வந்தன (ஆதி41:57) பூமி கடைசிபரியந்தம் என் இரட்சிப்பு (ஏசாயா49:6)

30. அவன் அவர்களை அறிந்தான் (ஆதி.42:7, 8) எல்லா மனிதர்களையும் அவர் அறிந்திருந்தார்(யோ.2:24, 25).

31. அவர்கள் அவனை அறியவில்லை (ஆதி.42:8)	தங்கள் சொந்தமானவர்கள் அவரை ஏற்றுக்கொள்ள் வில்லை (யோவான்1:10-11).
32. அவனுடைய இரத்தப்பலி கேட்கப்படுகிறது(ஆதி 42:22)	இரத்தப்பலி எங்கள் தலைமீதும் எங்கள் பிள்ளைகள் தலை இருக்கக்கடவது (மத்தேயு 27:25)
33. யோசேப்பு அழுதான் (ஆதி 42:24)	பட்டணத்திற்காய் இயேசு கண்ணீர் விட்டழுதார் (லூக்.19:41).

யோசேப்பும் ரோமர் 8:28 ம்

பொதுவான வேதபகுதி: (ஆதியாகமம் 37)

"md;wpAk;> mtUila jPh;khdj;jpd;gb miof;fg;gl;lth;fsha;j;Njtdplj;jpy; md;G$Ufpwth;fSf;Fr; rfyKk; ed;ikf;F VJthf elf;fpwnjd;W mwpe;jpUf;fpNwhk;." (Nuhk 8:28)

யோசேப்பு தனது தகப்பனால் தயைப் பெற்றுக்கொண்டது கெட்டதாய் இருந்தது, - ஆனால் தலைமைத்துவ பயிற்சி அளித்தது நன்மையாக செயல்பட்டது. (வச. 3,4).

இது நன்றாய் இருந்தது, யோசேப்புக்கு தேவனின் வார்த்தையைக் கட்டியது, அது நன்மைக்கேதுவாய் செயல்பட்டு அவனுக்கு அது நிறைவேறும் போது நிச்சயத்தை அளிப்பதாய் இருந்தது. (வச. 5-11).

அவனது சகோதரர்கள் அவனை வெறுத்தது கெட்ட செயலாய் இருந்தது ஆனால் அவனை விற்றுப்போட்டிரா விட்டால், எதிர்காலத்தில் தனது சகோதரருக்கு உதவி செய்யும் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட ஏதுவிருந்திருக்காது, இச்செயல் நன்மைக் கேதுவாய் செயல்பட்டது. (வச 20).

சமயத்தில் செய்த ஒட்டகச்சவாரி நல்லதாய் இருந்தது, அது நன்மைக்கேதுவாய் நடந்ததாய் இருந்தது. அது சற்று தாமதமாகவோ அல்லது முன்னதாகவோ நடந்து இருக்குமேயானால், யோசேப்பு அக்குழியிலே மாண்டு இருக்க நேரிட்டிருக்கும். (வச. 25-27).

அவன் 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப்போடப் பட்டது கெட்டதாய் இருக்கிறது ஆனாலும் அதுவும் நன்மைக்கேதுவாய் நடைபெற்றது (வச 28).

அவன் போத்திபாரின் வீட்டாருக்கு விற்று போடப்பட்டது நன்மையாயும் தீமையாயுமாய் இருக்கிறது, ஆனாலும் அதுவும்

நன்மைக்கேதுவாகவே இருந்தது. அவன் அடிமையாய் இருந்தது கெட்டதாய் இருந்தது, மற்றும் போத்திபார் நிர்வாகப்பயிற்சி அவனுக்களித்தது நன்மையாய் இருந்தது. (வச 36).

பாடம் 16 -- யோசேப்பும் பார்வோனின் சொப்பனமும்

முகவுரை:

நீங்கள் ஆதியாகமத்தை முழுமையாய் பார்க்கும்பொழுது, தேவன் யோசேப்பிற்கு பயிற்சிகொடுத்த காலம் 12-13 ஆண்டுகாலமாகும், அவன் அடிமையாக விற்கப்பட்டது அவனது 17 வது வயதில் ஆகும், அவன் எகிப்தின் ஆளுநர் ஆனது அவனது 30 வது வயதில். இதிலிருந்து அவன் போத்திபாரின் வீட்டில் ஒன்பது ஆண்டுகளும், மீதமுள்ள ஆண்டுகளை சிறையில் மனிதன் மீது நம்பிக்கை வைக்காது, தேவன் நம்பிக்கை வைக்கும் காரியங்களை கற்றுவந்தான். இவன் சிறைச்சாலையில் இருந்த காலம் பார்வோனின் அதிகாரிகள் சிறைக்கு வருமுன் இரு ஆண்டுகள் வந்து சென்ற பின் இரு ஆண்டுகள் ஆகும்.

தேவன் யோசேப்பிற்காய் ஒரு திட்டம் வைத்திருந்தார், நாம் பழைய ஏற்பாட்டிலிருந்து வாக்குத்தத்தங்களை பெறுகிறவர்களாய் இருக்கிறோம், அது தேவன் நம்மைவிட்டு விலகுவதும் இல்லை நம்மைக் கைவிடுவதும் இல்லை 1 இராஜாக்கள் 8:57, யோசுவா 1:5 தேவன் யோசேப்பிற்காக காத்திருந்தார், அவன் காரியங்களை கற்றுக்கொள்கிறவனாய் இருந்தான். அவன் பானபாத்திரக்கார்னிடம் தன்னை நினைவு கூறும்படி கேட்டுக்கொண்டிருந்தான், ஆனால் அவனோ அதிர்ச்சிக்குட்பட்டு எல்லாவற்றையும் மறந்து போய் விட்டபடியால், அவனைச் சார்ந்து இருக்க முடியவில்லை எனக் காட்டுகிறதாய் இருக்கிறது. யோசேப்பு தேவன் தனது நேரத்தில் எல்லாவற்றையும் சரியாய் செய்து முடிப்பவர் என்பதை கற்றுக்கொண்டான். அவன் இரு ஆண்டுகள் அதிகமாய் சிறையில் இருக்க வேண்டியிருந்தது.

பார்வோனின் சொப்பனங்கள்:

தேவன் இப்பொழுது பார்வோனுக்கு இரு சொப்பனங்களை கொடுத்தார், ஏழு கொழுத்த பசுக்களை ஏழு அவலட்சணமான பசுக்கள் விழுங்கின சொப்பனத்தையும், ஏழு ஆண்டுகள் செழுமையான விளைச்சலை ஏழு வறட்சியான ஆண்டுகள் விழுங்கிப்போட்ட சொப்பனத்தையும் கண்டு அவன் கலங்கிக் கொண்டிருந்தான். இது தேவனின் செயல்களை பகிர்ந்துகொள்வதற்கு ஒரு சந்தர்ப்பமாய் அமையப்போகிறது. அடிப்படை கோட்பாடு என்னவெனில் தேவன் இவ்வுலகில் செய்யும் காரியத்தைக்குறித்து இருக்கிறது. நாம் தேவனது திட்டத்தில் பங்கெடுக்கலாமா? அநேக விசுவாசிகள் அவர்கள் வாழ்வில் உள்ள

தேவனது ஆசீர்வாதங்களை அறியாதிருக்கிறார்கள் காரணம், அவர்கள் கர்த்தருடன் பங்கேற்காது இருப்பதன் குறையாய் இருக்கிறது, இதன் காரணம் அவர்கள் தங்களது திட்டங்கள் மூலம் தேவன் என்ன செய்துகொண்டு இருக்கிறார் என்பதை கண்டுகொள்வதில் மிகவும் முனைப்புடன் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றனர்.

இந்த சொப்பனங்கள் யோசேப்பின் வாழ்க்கையை தலைகீழாய் மாற்றப்போகிறது. பார்வோன் தனது சொப்பனமானது ஏதோ அர்த்தமுள்ளதாய் இருக்கிறது என புறிந்துகொண்டான். விடியற்காலமான போது தனது ஞானிகளை அழைத்தான். இவர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட மறைபொருள்களை வெளிப்படுத்துபவர்கள். இப்படிபட்டவர்கள் புறிந்துகொள்ள கடினமான காரியங்களை வியாக்கியானம் செய்வதில் திறமை மிக்கவர்கள். ஆனால் இந்த விஷயத்தில் ஒருவராலும் பார்வோன் கண்ட சொப்பனங்களை புறிந்து கொண்டு அதற்கு அர்த்தம் கூற இயலாதவர்களாய் தடுமாறினர்.

சாதானின் வெளிப்படையான காரியங்கள்:

வசனம் 8 ல் சாத்தான் அற்புத அடையாளங்களைச் செய்வது அவனது தொழில், எகிப்தில் அவனது மந்திரவாதிகள் மற்றும் அவனது ஞானிகள் இருந்தனர். சங்கீதம் 96:5 .தேசங்களில் உள்ள தேவர்கள் அனைவரும் பிசாசுகள், அவர்களுக்கு வல்லமையுண்டு அந்த வல்லமை சாத்தானிடமிருந்து வருகிறதாய் இருக்கிறது. குணமாக்குதலும், ஆகாயத்தில் மிதத்தலும், தீர்க்கதரிசனங்களும், மற்றும் சாத்தானின் அந்நிய பாஷகளை பேசுதலும் இருக்கின்றன. சாத்தான் மிகவும் உண்மையான அடையாளங்கள் மற்றும் வல்லமையை அளிக்கிறவனாய் இருக்கிறான்.

ஈரானில் உள்ள சஃபி மிஸ்டிக்ஸ், வூடு மக்கள் பேசும் பாஷைகள். இப்படிப்பட்ட செயல்களுடன் குணமாக்குதலையும் சாத்தானைச் சார்ந்தவர்கள் உலகமுழுவதிலும் செயல்படுத்தி வருகிறார்கள். அடையாளங்களும் அதிசயங்களும் தேவனுடையவைகள். ஹெய்டன் மெல்சோப் இவர் சீனாவில் மிஷனரியாய் பணியாற்றுகிறவர், இவரது அறிக்கையின் படி. ஒரு கூட்டம் புத்த துறவிகள் ஒரு வட்டத்தில் உட்கார்ந்து தியானம் செய்து ஜெபித்துக்கொண்டிருந்தனர், திடீரென வட்டத்தில் அமர்ந்திருந்த துறவிகள் தரையிலிருந்து ஒரு மீட்டர் உயரத்திற்கு அந்தரத்தில் உயர்த்தப்பட்டு பின்னர் ஒரு வட்டமிட்டு அவர்கள் இருந்த இடத்தில் திரும்ப வந்து அமர்ந்தனர் எனக்கூறுகிறார். ஆகாயத்தில் மிதத்தல் மற்றும் இதைச் செயல்படுத்தும் வல்லமை உண்மை ஆனால் அது சாத்தானுக்குரியது.

இது ஆவியின் கனியாய் இருக்கிறது ஆனால் சிக்கலானது, வரங்கள் அல்ல ஏனென்றால் வரங்கள் போலியான நிலையில் சாத்தான்

பயன்படுத்தமுடியும். மரபுகள் தேவனுடைய வல்லமையை பெற்று இருக்கின்றன ஆனால் அவைகள் வரையறைக்குட்பட்டதாய் இருக்கிறது. சாத்தான் பிரச்சனைகளை மனுக்குலத்திற்கு அளிக்கிறான், அதன் பின்னர் அதை உண்மையான முறையில் தீர்த்துவைக்க ஒரு நபருக்கு திறமையை அளிக்கிறான். இது ஒரு உண்மையான அற்புதம் ஆனால் தவறான பகுதியிலிருந்து செயல்படுகிறதாய் இருக்கிறது, இதன் நம்பகத் தன்மை சாத்தானின் மனிதனுக்குச் செல்லுகிறது.

நாம் தூதர்களின் முறண்பாடுகளுடன் மற்றும் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறோம். நாம் ஜெயங்கொள்ளும் பகுதியில் இருக்கிறோம் ஆனால் மற்ற பகுதியில் வல்லமையைப் பெற்று இருக்கிறது, நாம் அதை மறந்து போகக்கூடாது.

2 தெசலோனிகேயர் 2:9 ல் இப்படிப்பட்ட காரியங்கள் மகா உபத்திரவக்காலத்திலே நிகழும். சுவிஷேசத்தை மறுதளித்த ஜனங்கள் இதை ஏற்றுக்கொள்வார்கள் காரணம் அவர்கள் எதைக் காண்கிறார்களோ அதைப்பொறுத்ததாய் இருக்கிறது. இக்காலத்தில் தேவன் தீமைக்கு அதன் போக்கில் போகும் படியான சிறிது காலத்தை அளித்திருக்கிறார், முடிவில் தேவன் சகலத்தையும் தனது ஆதிக்கத்திற்குள் கொண்டுவருவார். தீமைக்கு எதிராய் உங்களுக்குரிய வல்லமையில் எதிர்படும்போது, உங்களுக்கு ஒரு நிச்சயம், அதாவது நீங்கள் தேவனது கரத்தில் இருக்கிறோம் என்பதை மறந்துவிடக்கூடாது. இந்த உலகத்தில் இருப்பவனிலும் உங்களோடிருப்பவர் பெரியவர். இப்படிப்பட்ட காலத்தில் இதுவே அறிந்துக்கொள்ளக்கூடிய மற்றும் உரிமைபாராட்டக்கூடிய உபதேசமாய் இருக்கிறது. தேவன் விசுவாசிகள் அனைவரைச் சுற்றிலும் அக்கினி மதிலாய் இருக்கிறார். சாத்தான் ஒரு தோற்கடிக்கப்பட்ட சத்துரு. தீமையின் வல்லமையானது பெரிதும் காணக்கூடியதுமான சூழலில், நீங்கள் தேவனுடைய பாதுகாப்பை உரிமைபாராட்டுதல் அவசியம்,

பார்வோனின் சொப்பனத்தை வியாக்கியானம் செய்தல்:

இரு ஆண்டுகள் அதிர்ச்சியினிமித்தம் எல்லாவற்றையும் மறந்து விட்டிருந்த பிரதாண சுயம்பாகி, திடீரென்று தான் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு இருந்தது அவன் நினைவுக்கு வந்தது. அவன் பார்வோனுக்கு எதை அறிய வேண்டுமோ அதை அவனுக்கு அளித்தான்.

அநேகக்கிறிஸ்தவர்கள் நீண்டகாலத்தை எடுத்துக்கொண்டு, ஜனங்கள் உண்மையான கேள்வி எதுவோ அதை மறந்து போகும் அளவுக்கு மறந்து போயிருப்பர். உங்களிடம் பதில் இருக்குமானால் அதனுடன் சிறிது புறம்பான பொருட்களையும் சேர்த்து எவ்வளவு சீக்கிரம் அளிக்க முடியுமே அளிக்க பிரயாசப்படுங்கள். உண்மைகளை அவர்களுக்கு கொடுங்கள், மற்றும் சவாலாக இதுவே அது எனவும், அவரில் விசுவாசம் வையுங்கள் என ஆணித்தரமாய் கூறுங்கள். சாட்சியாய் இருத்தல் என்பது உங்களைக்குறித்து ஜனங்களிடம் கூறிக்கொண்டு திரிவது அல்ல.

கிறிஸ்துவைக் குறித்து ஜனங்களிடம் கூறுவது, அவரே ஜனங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு கொண்டுவருகிறவர்.

யோசேப்பு விடுதலையாக்கப்படுதல்:

வசனம் 14 ல் பார்வோன் யோசேப்பை சிறைக்கிடங்கிலிருந்து அழைத்து வரச்சொன்னான், யோசேப்பு தன்னைச் சுத்திகரித்துக்கொண்டு, தலைச்சவரம் செய்துகொண்டு, தன் வஸ்திரங்களை கழுவி சுத்திகரித்துக்கொண்டு பார்வோனுக்கு முன்னிலையில் வந்தான். யோசேப்பு நன்னடத்தையுள்ளவனாய் இருந்தான், நான்கு நீண்ட ஆண்டுகாலங்கள் சிறையில் இருந்தான், சுகாதாரமற்ற நிலையிலிருந்த தன்னை சுத்திகரித்துகொண்டு பார்வோன் முன்னிலையில் செல்லுகிறதைப் பார்க்கிறோம். அநேகக் கிறிஸ்தவர்கள் ஆயத்தமற்ற நிலையில் தங்களது சூழ்நிலைக்குள் சென்றுவிடுகிறவர்களாய் இருக்கிறார்கள், இதினிமித்தம் அவர்களது சாட்சி பகருவது ஜெயமின்றி போய்விடுகிறது. அவசரப் பட வேண்டாம், ஜனங்களுடன் நீங்கள் கர்த்தரைக்குறித்துப் பேசும்போது, நீங்கள் மிகச் சிறப்பான நிலையில் காணப்படுவது மிகவும் அவசியம். நீங்கள் இராஜாதி இராஜாவின் அறிவிப்பாளானாய் நிற்கிறீர்கள் என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். கர்த்தரது பணியானது அவசரம் அல்லது பயத்தினால் செய்யப்படுவதாய் இருத்தல் கூடாது, மாறாக சிந்தனையுடன் செய்யப்படுவது அவசியம்.

வசனம் 15 ல் பார்வோன் யோசேப்பிற்கு ஒரு வலையை விரிக்கும்படி இருக்கிறான், அவன் பார்வோனுக்கு அளித்த தகவலுக்காய் யோசேப்பு விரும்பும் எதையும் கொடுக்க மனதுள்ளவனாய் இருந்தான். இச்சூழல் யோசேப்பிற்கு ஒரு சோதனையாயும் பாவமாயும் இருந்தது, காரணம் சொப்பனத்திற்குரிய வியாக்கியானம் யோசேப்பிடமிருந்து வராது அது தேவனிடமிந்து வந்ததாய் இருந்தது. யோசேப்பு அதை மிகத்தெளிவாக்கி நான் அல்ல தேவனே பார்வோனுக்கு மங்களகரமான பதிலை அளிக்கிறவராய் இருக்கிறார் என்றான்.

யோசேப்பு பார்வோனுக்கு சொப்பனத்துக்குரிய அர்த்தத்தை சொல்லத்தொடங்கினான், இரு சொப்பனங்களும் ஒரே அர்த்தத்தை கொண்ட்தாய் இருக்கிறது. யோசேப்பு பார்வோனுக்கு அவன் கண்ட சொப்பனங்கள் தேவனிடமிருந்து, தீர்க்கதரிசன தன்மை கொண்டதாய் அவனுக்கு தோன்றியுள்ளது. மற்றும் யோசேப்பு, சொப்பனம் இரு முறை தோன்றியதன் காரணம் நடக்கவிருக்கும் பஞ்சமானது நிச்சயமாய் நடக்கும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை என்பதை வலியுறுத்த தோன்றியுள்ளது என்றான்.[வச. 30]. வேதாகமத்தில் ஒரு உபதேசமோ அல்லது ஒரு அடிப்படைக்கோட்பாடோ ஒரு முறை கூறப்பட்டால், நாம் அதை எடுத்துக்கொள்ள வேண்டும் அதையே இரு முறை அல்லது மும்முறை கூறப்பட்டால் அது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

பார்வோன் இப்பொழுது யோசேப்பிடம் வினவினான் செய்யப்பட வேண்டியது என்ன என்றான். அதற்கு யோசேப்பு, ஞானமும், விவேகமும்,

கவனமுமுள்ள ஒருவனை விசாரிப்புக் காரனாய் ஏற்படுத்துவது நலமாய் இருக்கும் என பதில் அளித்தான். நன்கு விளையும் காலத்தில் சாவியான வருஷத்துக்கு அவசியமான ஒரு பங்கை எடுத்து சேமித்து வைப்பது அவசியம் என யோசேப்பு பதில் அளித்தான். இப்பணியைச் செய்வதற்கு வெளிப்படையான தேர்வு யோசேப்பு என உணர்ந்தும் இக்காரியத்தை கர்த்தரின் கரத்தில் விட்டு விட்டான். யோசேப்பு பார்வோனை தெரிவு செய்யக்கோரி அவனது கையில் விட்டு விட்டான், அவன் பார்வோனையும் கர்த்தரது கரத்தில் அளித்துவிட்டான். இச்சூழலில் அவன் மறுபடியும் சிறைச் சாலைக்கு செல்லும்படியான நிலை இருந்தது. உங்களை நீங்களே பரிந்துரை செய்யாதிருங்கள், கர்த்தர் உங்களை உயர்த்தட்டும். இத்தொடர்ப் பயிற்சியின் இறுதியில் உங்களது பாரத்தை கர்த்தர் மீது வைத்துவிடுங்கள். கர்த்தர் தாமே உங்களை உயர்த்தி உங்களது தேவைகள் வாஞ்சைகள் அனைத்தையும் அருளுகிறவராய் இருக்கிறார்.

வசனம் 41 ல் எகிப்து முழுமைக்கும் யோசேப்பு பிரதம மந்திரியாகிறதை காண்கிறோம், யோசேப்பு காலையில் சிறைக்கைதியாயும் மாலையில் பார்வோனுக்கு அடுத்தபடியாய் அந்த இராஜ்ஜியத்தில் யோசேப்பு உயர்த்தப்பட்டதையும் காண்கிறோம். பார்வோன் ஓய்வெடுத்துக்கொண்டு தனக்கு பிரமிடு கட்டுவதில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு யோசேப்பிடம் எல்லாவற்றையும் ஒப்படைத்துவிட்டான். பார்வோன் தனது மோதிரத்தை கழற்றி யோசேப்பிடம் கொடுத்தான், இது காசோலை போன்றது, மற்றும் அலுவலக தங்க செயினை அவன் கழுத்தில் அணுவித்து, அவனுக்கு ஒரு ரதத்தையும் கொடுத்தான்.

யோசேப்பு இரதத்தில் எகிப்தின் தெருக்கள் வழியாய் எடுத்துச் செல்லப்பட்டான், அவனது அந்தஸ்தினிமித்தம் எகிப்தின் பிரஜைகள் ஒவ்வொருவரும் தெண்டணிட்டு பணிந்து கொண்டனர். யோசேப்பிற்கு மிகவும் சௌந்தரியமுள்ள பெண் மனைவியாய் கொடுக்கப்பட்டாள், இவளுக்கு மனாசே, எப்ராயீம் என இரு குமாரர் பிறந்தனர். யோசேப்பிற்கு எகிப்திய பெயரும் சூட்டப்பட்டது, அதன் பொருள் அத்தேசத்தின் இரட்சகர் அல்லது இரகசியங்களைச் சொல்லும் நபர் என்பதாகும். 30 வயதில் அவன் அத்தேசத்தின் தலைவரானான், 13 ஆண்டுகால பயிற்சிக்குப்பின்னர் இந்நிலைக்கு உயர்த்தப்பட்டான். மிகச் சிலரே இரட்சிக்கப்பட்டு ஓரிரு ஆண்டுகளில் தேவனுக்கென மகத்தான சேவை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். இதற்கு பயிற்சி மிகவும் அவசியம். யோசேப்பைப் போல கற்றுக்கொள்ள மனதாய் இருப்பீர்கள் என்றால், கர்த்தர் உங்களையும் உபயோகிக்க முடியும்.

வசனம் 50-53 ல் இரு குமாரர்களும் இஸ்ரவேலரின் சுதந்தரத்தில் இரண்டரை கோத்திர வீதத்தைப் பெற்றனர் இது இரண்டு மடங்கு ஆசீர்வாதத்தை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. மனாசே என்பதன் பொருள் "மறக்கச் செய்தல்". யோசேப்பு தனக்கு செய்யப்பட்ட எல்லா அநியாயங்களையும் மன்னித்து மறந்து விட்டான். யோசேப்பு முக்கியம் வாய்ந்தவனாய் இருந்தான். யோசேப்பின் முதலாவது செயல் போத்திபாரின் வீட்டை முற்றுகையிட்டு அவனுக்கு பொல்லாப்பு

செய்யவோ, அல்லது பாலஸ்தீனத்துக்கு தனது படைகளை அனுப்பி யுத்தத்தைப் பிரகடனம் செய்வதோ அல்லாது இருந்தது. அவன் தனக்குள் எவ்வித வைராக்கியத்தையும் வைத்துக்கொள்ளவில்லை, கடந்த கசப்புணர்வுகளை எல்லாம் மறந்துவிட்டு, தேவனை சேவிக்கிறவனாய் இருந்தான் அது தனது நிகழ்காலத்தில் தனது தயாளத்துக்கு ஒரு அடையாளமாய் இருந்தது பிலிப்பியர் 3:13-14 - நாம் கடந்த கசப்புணர்வுகளை மறந்து, எதிர்காலத்தை நோக்கி, தேவனுடன் உங்களது பிரச்சனைகளை சரிசெய்துகொண்டு அவருடன் உத்தமமாய் நடந்து கொள்ளுங்கள்.

எப்ராயீம் என்பதன் பொருள் "ஆசீர்வாதம் அல்லது உற்பத்தி" ஆகும். தேவனுடைய ஆசீர்வாதம் யோசேப்பின் மீது இருந்தது மற்றும் யோசேப்பைப் போல கர்த்தரை நம்பும் ஒவ்வொரு விசுவாசியின் மீதும் இருக்கிறது. உபதேசத்தை கைக்கொண்டால் ஆசீர்வாதம் எப்பொழுதும் உங்களுடையதாகவே இருக்கிறது, மற்றும் தேவனது வல்லமையை உங்களுக்கே சொந்தமாய் உரிமைபாராட்டுவதை தவிர்த்து பிறருக்காய் உரிமைபாராட்ட பயப்பட அவசியமே இல்லை. தேவனை அழைக்காமல் பலாத்காரமாய் அவர் உங்களுக்குள்ளே வருகிறவர் அல்லர், ஆனால் அவர் உங்களது பிரச்சனைகளை தீர்த்துவைக்க அவர் அங்கேயே இருக்கிறார். ஆவியின் கனி என்பது சிக்கலான ஒரு காரியமாய் இருக்கிறது. பவுல் ஒரு கோடீஸ்வரர் அல்லர் ஆனால் தேவன் அவருடன் இருந்தார். உங்கள் சபையினருக்கு அவர்கள் எப்படி தேவனுடன் நடக்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதைக் குறித்து சவால் விடுங்கள். அவர்கள் யோசேப்பைப் போன்று இருக்கப்போகிறார்களா அல்லது போத்திப்பாரின் மனைவியைப் போன்று இருக்கப்போகிறார்களா?

உபதேசம்:

தேவனின் திட்டம்

1. கடந்த கால நித்தியத்தில், தேவன் ஒவ்வொரு விசுவாசிக்காக ஒரு திட்ட,ம் வகுத்திருந்தார், மானிட சரித்திரத்தில் ஒவ்வொரு நிகழ்வும், தீர்மானமும் அத்தீர்மானத்தை காரிய ரூபப்படுத்துகிறது.

2. தேவனது திட்டம் இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவதை மையமாய் கொண்டு செயல்படுகிறது. (1 யோவான் 3:23, எபேசியர் 1:4-6).

3. தேவனுடைய திட்டத்திற்குள் பிரவேசிப்பது கிருபையின் அடிப்படையில் இருக்கிறது. (எபேசியர்2:8, 9) தேவனின் ஏகாதிபதித்துவமும், மனிதனின் சுயசித்தமும் சிலுவையில் சந்திக்கிறதாய் இருக்கிறது. தேவன் முழுமையாக்கப்பட்ட இரட்சிப்பை கொண்டு வருகிறார், மனிதன் தனது விசுவாசத்தை கொண்டுவருகிறான்.

4. தேவனின் திட்டம் எல்லா நிகழ்வுகள் மற்றும் செயல்களை உள்ளடக்கி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. (1 பேதுரு1:2).

5. அவரது திட்டத்தின் கீழ், தேவன் சில காரியங்களை செய்ய நேரடியாய் கட்டளை கொடுக்கிறார், சிலவற்றை நிறுவணங்கள், இஸ்ரவேல், மற்று சபை மூலம் செய்கிறார்.

6. தேவன் மனிதரின் சுயசித்தத்தில் எவ்விதத்திலும் குறுக்கிடாத படி, அவர் தமது பூரணமான திட்டத்தை வகுத்துள்ளர், அத்திட்டத்தில் காரணங்களும் விளைவுகளும் உள்ளடங்கியுள்ளது. மட்டுமல்லாது தேவைகள் சந்திக்கப்படல், பாதுகாக்கப்படுதல், மற்றும் செயல்பாடுகள் போன்றவைகளும் அடங்கியுள்ளன.

7. தேவனது திட்டத்தில் அநேக செயல்பாடுகள் இருக்கின்றன. அவைகள் அனைத்தும் பூரணமான, நித்தியமான, மாறாத ஒரு முழுமையான திட்டத்தை நிறைவேற்றுகின்றன.

8. தேவனுடைய திட்டம் மனித சுதந்தரத்துடன் முறண்பாடற்ற நிலையில் இருக்கிறது, அது மனித சுயசித்தத்தை எல்லைக்குட்படுத்துவதோ, அல்லது பலவந்தம் செய்வதோ கிடையாது. தேவன் காரணப்படுத்துவதற்கும் அவர் அனுமதிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்துதல் அவசியம். தேவன் சிலுவையைக் காரணப்படுத்தினார் ஆனால் பாவத்தை அநுமதித்தார். தேவன் பாவத்துக்கு காரணருமல்ல, அதை ஆதரிப்பவரும் அல்ல.

9. அவருடைய திட்டம் மனிதன் சுயசித்தத்தைப்பெற்று இருப்பதை வருணிக்கிறது. தேவன் மனுக்குலத்தில், பாவத்தை பாராமுகமாய் இருந்ததில்லை. மனிதனின் ஆரம்பம், பூரணமான சூழலிலும், அறியாமையிலுமிருந்து துவங்கியது. மனிதன் பாவம் செய்தபோது சுயமாய் தனது சுயசித்தத்தின்படியே அதை செய்தான். ஆயிரவருட பூரணமான சூழலிலும் மனிதனால் பாவம் செய்ய இயலும், அவன் பாவம் செய்வான்.

10. தேவனுடைய திட்டம் சார்ந்த, தெய்வீக திட்டங்களுக்கும், மற்றும் பூமியில் மனிதன் நடந்துகொள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட தெய்வீக பிரமாணங்களுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தெய்வீக பிரமாணங்கள் தகுந்த நேரத்தில் நிகழும், தெய்வீகத் திட்டங்கள் நித்தியத்தில் நிகழும்.

11. தேவனது திட்டங்கள் அவரது அறிவிலிருந்து வந்தவைகளாகும். அவர் அவைகளை கடந்தகால நித்தியத்தில் நிச்சயமானவைகள் என கண்டுணர்ந்திருந்தார். தேவனது முன்னறிவு ஒரு காரியத்தை நிச்சயப்படுத்துவது இல்லை, ஆனால் கடந்த கால நித்தியத்தில் அக்காரியங்கள் நிச்சயம் என முன்னறியப்பட்டிருந்தது.

12. முன்னறிதலுக்கும், முன் தீர்மானித்தலுக்கும் வித்தியாசமுண்டு. முன் தீர்மானித்தல் நிச்சயமானவைகளை ஸ்தாபிக்கிறது ஆனால் ஸ்தாபிக்கப்பட்ட நிச்சயமானவைகளுக்காக அது அளிக்கப்படுவது இல்லை. இதைத் திட்டமே அளிக்கிறதாய் இருக்கிறது. (ரோமர்8:29, அப்போஸ்தலர்2:23, 1 பேதுரு 1:2).

13. இதினிமித்தம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முன்னறியப்பட்டிருக்கிறார்கள், முன்னறியப் பட்ட வர்கள் தெரிந்துகொள்ளப் பட்டவர்களாய் இருக்கிறார்கள். தேவன் கடந்தகால நித்தியத்தில் தனிப்பட்ட நபரின் சுயசித்தத்தினால் உண்டாகும், வாழ்க்கையின் ஒவ்வொரு தனிப்பட்டப் பிரச்சனையின் போது, அவர்கள் எவ்வழி செல்வர் என தேவன் அறிந்திருந்தார். தேவன் மனித சித்தத்தில் தலையிட்டு அதை வற்புறுத்துவது இல்லை, கொடுக்கப்பட்ட காலத்தில் ஒவ்வொரு சுயசித்தத்தின் வழியையும் அவர் நன்கு அறிவார். சுயசித்தம் தீர்மானிக்க தேவன் பலனளிக்கிறவராய் இருக்கிறார்.

14. தேவன் தனது சுபாவத்தில் முறண்படாதவராகையால், விசுவாசிக்கு மிக சிறப்பானவற்றை திட்டமிட்டுள்ளார். தேவன் பூரணர், அவரது திட்டம் மற்றும் அவரளிப்பவகளும் அதனிமித்தம் பூரணமானவைகள்.

15. சிலுவை கடந்தகால நித்தியத்தில் திட்டமிடப்பட்டு இருந்தது, அனால் கிறிஸ்துவின் மனுஷீக சுயசித்தம் சிலுவைக்கு செல்ல, கெத்சமனேயில் தீர்மானம் எடுக்க வேண்டியதாய் இருந்தது. (மத்தேயு26:39-42). தேவன் இரட்சிப்பை சிலுவை மூலம் அளிக்கிறார் மற்றும் அது சுயசித்தத்தின் அடிப்படையில் எடுக்கும் தீர்மானத்தினால் ஒருவர் ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதுமாயிருக்கிறது.

16. எவ்விதத் திட்டமும் தன்னில்தானே மனித சுதந்தரத்தை எதிர்ப்பது இல்லை, மனித சுயசித்தத்தின் மூலம் ஒன்றை தெரிவு செய்துவிட்டபொழுது, தேவனது திட்டம் மனித சுதந்தரத்தை வரையறுக்கிறது. அதே நேரத்தில் தேவனிடத்தில் அன்பு கூறவும், அவரை பாராட்டவும் சுதந்திரம் அளிக்கப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ தேவன் வழிமுறைகளை விதித்து இருக்கிறார்.

<u>பாடம் 17 -- யோசேப்பும் அவனது சகோதரர்களும்</u>

முகவுரை

ஆதியாகம் 42 ம் அதிகாரத்தில், யாக்கோபு, ரூபன் மற்றும் யோசேப்பு இவர்களைப் பற்றிய சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவர்கள் நாம் எப்படிப்பட்டவர்களாய் இருக்கவேண்டும், மற்றும் நாம் எப்படிப்பட்டவர்களாய் இருத்தல் கூடாது என்பது குறித்த மாதிரியை நமக்கு போதிக்கிறதாய் இருக்கிறது. தேசமெங்கும் பஞ்சம் கொடியதாய் இருந்தது,

யாக்கோபும் அவனது குடும்பமும் பஞ்சத்தால் வாடத்தொடங்கினர், காரணம் பஞ்சத்தின் ஏழு ஆண்டுகள் ஆரம்பமாயின. இந்த அதிகாரம் ஐக்கியத்திற்கு புறம்பே இருந்துகொண்டு ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு அமர்ந்து இருக்கும் குடும்பத்தினருடன் ஆரம்பமாகிறது. இந்த ஜனங்கள் முற்றிலும் ஆவிக்குரிய ஆதாரங்கள் குன்றிப்போய் அந்த சூழலை எப்படி சமாளிப்பது என தவித்துக்கொண்டிருந்தனர். இவர்கள் யோசேப்பு அவர்களை விட்டு கடந்து சென்ற சுமார் 20 நீண்ட ஆண்டுகாலங்கள் பின்மாற்றத்தில் ஜீவிக்கிறவர்களாய் காணப்பட்டனர். 20 ஆண்டுகாலமாய் இந்த சகோதரர்கள் தங்கள் பாவத்தைக் குறித்த அக்கரையின்றி செயல்பட்டுவந்தனர். அவர்கள் தங்களது தகப்பனுக்கு யோசேப்பு என்ன நிகழ்ந்தது என்ற உண்மையை மறைத்து ஜீவித்து வந்தனர். பென்யமீன் மட்டும் யாக்கோபுடன் இருந்தான், மற்ற யாரையும் யாக்கோபு நம்பாது இருந்தான். இப்படிப்பட்ட அவல நிலை ஒரு நல்ல கிறிஸ்தவ குடும்பத்தை படம்பித்து காட்டுவது நல்லதாய் படவில்லை. யாக்கோபு யோசேப்புக்கு காட்டிய பட்சபாதத்தைவிட அதிகமாய் பென்யமீனுக்கு காட்டி வந்தான்.

எகிப்திற்கு சென்ற சகோதரர்கள்:

சகோதரர்கள் எகிப்துக்கு வந்து ஆளுநர் யோசேப்பின் முன் தலைவணங்கி நின்றனர், இது அநேக ஆண்டுகளுக்கு முன் யோசேப்பு கண்ட சொப்பனத்தின் நிறைவேறுதலாய் இருந்தது. இதற்கு முன் அவனது சகோதரர்கள் நாங்கள் யோசேப்பிற்கு தலைவணங்க மாட்டோம் என்றவர்களுக்கு, தேவன் சொன்னார் அது சொப்பனத்தின்படியே ஆகும் என்றார். அந்த தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாய் இது இருந்தது.

யோசேப்பு தன்னை யார் என்று அவர்கள் அறிந்து கொள்ளா வண்ணம், அவர்களுடன் மிகவும் கடினமாய் பேசினான். அவர்களை வேவுகார்கள் என்று குற்றம்சாட்டினான். யோசேப்பு தேவனது நடத்துதலின் பேரில் அவர்களுக்கு நெருக்கத்தை உண்டாக்கி எப்படியாவது அவர்கள் தங்களது பாவத்தை இனங்கண்டு கொள்ளச் செய்தான். அவன் தனது சகோதரன் பென்யமீனைக் குறித்து மிகுந்த கரிசனையுள்ளவனாய் இருந்தான். காரணம் தனக்கு செய்த அதே கொடுமையை தனது சகோதரன் பென்யமீனுக்கும் செய்யக்கூடும் என்ற அனுமானம் அவனுக்கிருந்தது. பாலஸ்தீனத்தின் இடுக்கமான காலத்தினிமித்தம் அவர்கள் எகிப்தின் மீது தாக்குதலை நடத்த வந்திருக்கிறார்கள் என குற்றம் சாட்டினான். அவர்கள் அனைத்தையும் மறுத்தனர், நாங்கள் எல்லோரும் ஒரு தகப்பன் பிள்ளைகள் ஒருவன் எங்கள் தகப்பனுடன் இருக்கிறான், மற்றொருவன் எங்களுடன் இல்லை என்றனர்.

இங்குதான் நீங்கள் பாவத்தின் பிடியில் இருக்கிறீர்கள், நீங்கள் பொய் சொல்லுகிறீர்கள் என்றான். யோசேப்பு அவர்களது பாவத்தின் விளைவை சந்திக்கும்படி அவர்களை அதிகமாய் நெருக்கினான். உங்கள் பாவத்தை நீங்கள் மறக்குமுன்னர் பிலிப்பியர் 3:13, அது உங்களுடன் வந்து உங்களை

வேட்டையாடுமுன்னர் அதை மறைத்து மறந்து விடாதபடி அதோடு கூட இடைபட்டு, அதற்குரிய பரிகாரத்தை செய்து முடிக்க வேண்டும்.

உங்கள் பிரச்சனைகளை மூட்டைக் கட்டி அதைப் பத்திரப்படுத்த வேண்டாம், அவ்வாறு செய்யும் போது அவைகள் முடிவில் உங்களுக்கு மனோநிலையைப் பாதித்து அல்லது மற்ற புற்று நோய் போன்ற வியாதிகளில் மூழ்கடித்துவிடும். அவர்கள் பாவம், பொய், வஞ்சகம் இவற்றை விதைத்தனர், அதன் அறுவடையை சில ஆண்டுகளுக்குப் பின்னர் அறுவடை செய்கின்றனர். கர்த்தர் அவர்கள் எகிப்திற்கு கொண்டுவந்து அவர்கள் பாவத்தின் விளைவுகளை சந்திக்க வைத்தார், இது அவர்களோடு பாவத்தோடு இடைபடுவதாய் இருக்கிறது, மற்றபடி அவர்களை ஆசீர்வதிப்பது அவரது பிரியமாய் இருந்தது.

யோசேப்பு தான், பென்யமீனை காணாது உங்களை நம்பப்போவது இல்லை என உறுதியாய் கூறிவிட்டான். அவன் இவ்வாறு கூறினான் நான் ஒருவனை மட்டும் உங்கள் வீட்டிற்கு அனுப்பப்போகிறேன் பென்யமீன் இங்குவரும்வரை அனைவரும் இங்கிருங்கள் என்றான். அவர்கள் அனைவரையும் மூன்று நாளளவும் சிறையில் வைத்தான், தான் எவ்வாறு சிறைவாசத்தை அனுபவித்தேன் என்பதை அவர்களும் அறிந்து கொள்ளுமுகாந்திரமாய் அவ்வாறு செய்தான். இந்த சகோதரர்களுக்கு இருந்த பிரச்சனை என்னவென்றால் அவர்கள் தெய்வ பயமின்றி இருந்தனர். இவர்கள் விசுவாசிகளாய் இருந்தும் தேவனை அவர்களது எண்ணங்களுக்கு வெளியே விட்டிருந்தனர். யோசேப்பு அவர்களிடம் இவ்வாறு சொன்னான், தான் தேவனை விசுவாசிக்கிறவன் ஆகையால் உங்களுக்கு ஒரே ஒரு தருணம் தருகிறேன் என்றான். இது நமக்கு ஒரு சவாலாய் இருக்கிறது.

யோசேப்பு சொன்னது, இங்கே வந்திருக்கிற உங்களில் ஒருவன் மட்டும் இங்கே பிணைக் கைதி யாய் இங்கிருக்கட்டும் மற்றவர்கள் பாலஸ்தீனத்திற்கு தானியத்தை எடுத்துச் சென்று பென்யமீனைக் கொண்டு வாருங்கள் என்றான். இவ்வாறு அவர்களை சுயப்பரிசோதனைக் குட்படுத்தியது மிகவும் பலனளிக்கக்கூடியதாய் இருந்தது, காரணம் அவர்கள் யோசேப்பிற்கு செய்த யாவையும் நினைவுக்கு கொண்டுவந்து அதன் காரணாகாரியமாய்தான் இப்படிப்பட்ட விளைவு தங்களுக்கு நேரிடுகிறது என்பதை அவர்கள் புறிந்துகொள்ளவைத்தது. இப்படிப்பட்ட சூழல் பாலஸ்தீன மேய்ப்பர்களாகிய இவர்களை அநேக ஆண்டுகளுக்கு முன்னர் யோசேப்பை ஆழ்குழியில் தூக்கி எரிந்த அதைப்போன்ற ஒரு இக்கட்டை இவர்களுக்கு ஏற்படுத்தியது.

அவர்கள் மதிய உணவு அருந்திக்கொண்டு இருந்தபோது குழியில் கதறிக்கொண்டிருந்த யோசேப்பின் கெஞ்சும் குறலை அவர்கள் நினைவுகூறச்செய்தது. அச்சூழலில் அவர்கள் கடின இருதயமுள்ளவர்களாய் இருந்தனர், கொடுமையுள்ளவரும், அநியாயக்காரருமாய் இருந்தனர். நாம் தவறிழைத்துவிட்டு, ஒன்றும் அறியாதவர்கள் போல் நடித்தோமானால், என்ன பலன் நமக்கு கிடைத்தாலும் நாம் அதற்கு பாத்திரர் என எண்ணிக்கொண்டிருப்போம்.

ரூபன் இங்கு தனது வாயைத்திறந்து பேச ஆரம்பிக்கிறான் இதைக்குறித்து நான் அப்பொழுதே சொன்னேன் என்றான். அந்த சூழலில் அவனுக்கு பாவத்தை எதிர்க்கும் திராணீயின்றி இருந்தான் அதினிமித்தம் அப்பாவத்திற்கான குற்றமனசாட்சியை அவர் இழைத்தப்பாவச்செயல் இப்பொழுது அவர்களிடம் வெளிக்கொண்டுவருகிறதாய் இருக்கிறது. நன்மை இன்னதென அறிவதற்கு பாவம் என்பதை செய்யாதிருக்க வேண்டும். நீங்கள் ஏதாவது தவறு கண்டு, அதை நீங்கள் எதிர்க்காவிட்டால் நீங்கள் பாவம் செய்கிறவர்களாய் இருப்பீர்கள்.

யோசேப்பின் கிருபை:

யோசேப்பு அவர்கள் பேசுவது எல்லாவற்றையும் புறிந்து கொண்டான், அவன் அவர்களுடன் மொழிபெயர்ப்பாளரைக் கொண்டு பேசினான். ஏழு ஆண்டுகள் உனதமான பதவியிலிருந்த போதும் அவன் இன்னும் தன்னைத் தாழ்த்தி தேவனை நம்புகிறவனாய் இருந்தான், அவன் இன்னும் தனது சகோதரர்களை சிநேகிக்கிறவனாய் இருந்தான். அவன் அழுதான். அவன் கிருபையைச் சார்ந்தவனாய் இருந்தான். அவன் சிமியோனுக்கு இரும்பு விலங்குகளிட்டு சிறையில் அடைக்க உத்திரவிட்டான். அங்குள்ள வேலைக் காரருக்கு அவர்களது சாக்குகளை தானியத்தால் நிரப்பி அவர்கள் தானியம் கொள்ளும் கிரயப் பணத்தை அவர்கள் சாக்குகளில் போட உத்திரவிட்டான். அவன் அவர்களுக்கு வழியில் அவசியமானவற்றை கொடுத்து அவர்களை வழி அனுப்பி வைத்தான். அவர்கள் தங்கள் தேசத்திற்கு திரும்பச் செல்லும் வழியில் அவர்களில் ஒருவன் தனது சாக்கை அவிழ்த்த போது தானியம் கொள்ளக் கொடுத்த பணமானது அவனது சாக்கில் இருக்கக்கண்டு அதிர்ச்சியுற்றான். இது அவர்களது கரிசனைக்கு காரணமானது. என்ன இது தேவன் இதை செய்திருக்கக்கூடும் என அவர்கள் கூறினர்.

பிரச்சனைகளுக்குள்ளாகும் விசுவாசிகளின் பொதுவான அறிக்கையாய் இருக்கிறது. பல ஆண்டுகள் தொடர்ந்து செய்து வந்த பாவங்கள் மற்றும் கீழ்ப்படியாமை இம்மனிதரை இப்பொழுது கவலை கொள்ள வைத்தது. யோசேப்பு தனது செய்கைகளால் இதன் காரணங்களை அவர்களாக கண்டுகொள்ளச்செய்தான். அவர்கள் கண்டுகொண்டனரா?

அவர்கள் பார்வோனின் சிப்பாய்கள், அவர்கள் பணத்தை திருடிக்கொண்டு செல்கிறார்கள் என எண்ணிக் கொண்டிருந்தனர். யோசேப்பு அவர்களுடன் இடைபட்டது, தேவன் தவறு செய்து கொண்டிருக்கும் விசுவாசிகளுடன் ஈடுபடுவதைப் போன்று இருந்தது, அவன் அவர்களை ஒழுங்குபடுத்துகிறவனாய் இருந்தான். - எபிரெயர் 12:5-13. யோசேப்பு தொடர்ந்து அவனது செய்கைகளால் அவர்களுக்கு நெருக்கத்தை ஏற்படுத்தி, அவர்கள் தங்களது பாவங்களை அறிக்கை செய்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வகை செய்தான்.

வசனம் 29-35 ல் யாக்கோபிற்கு திரும்பும் வழியில் நிகழ்ந்த அனைத்தையும் கூறினர். இப்பொழுது ஒவ்வொருவரும் கரிசனையுள்ளவர்களானார்கள்.

இப்படிப்பட்ட நெருக்கங்களில் ஒரு விசுவாசி என்ன செய்யவேண்டும்? நமது பாவங்களை அறிக்கை செய்து நமது பாரங்கள் அனைத்தையும் கர்த்தர் மீது வைத்துவிட வேண்டும். இப்பொழுது யாக்கோபின் எதிர் விளைவுகள், தனது குமாரர்கள் சிமியோனை எகிப்தில் விட்டு வந்ததும், பென்யமீனை எகிப்திற்கு அழைத்துச் செல்வதும் அவனை மிகவும் துக்கத்தில் ஆழ்த்தியது, அது அவனுக்கு சாவைக் கண்டது போல் இருந்தது. அவன் தனது பரிதாபத்தை யாரிடம் சொல்லி ஆற்றிக்கொள்ளமுடியும் தன்னைத்தானே நொந்துகொண்டான்.

பாவத்தைக்குறித்த பிரசங்கம் ஜனங்களின் பாவத்தை உணர்த்தும், மற்றும் அது அவர்களை அந்நேரத்தில் உங்களால் வழிநடத்தப்படுவதை எண்ணும்படி செய்யும். யாக்கோபு தவறிப்போனராய் இருக்கிறார் காரணம் அவர் தேவனைவிட்டு புறம்பே இருந்தார், மற்றும் அவர் தேவனுக்கு புறம்பே நிலைத்து இருந்தார். நீங்கள் தேவனுக்கு புறம்பே இருப்பீர்களானால், நீங்கள் பெலவீனராய் இருப்பீர்கள். ரூபன் இருதயம் உள்ளவனாய் இருந்தான் ஆனால் மூளையற்றவனாய் செயல்பட்டான், அவன் யாக்கோபிற்கு இரு குமாரர்களை பலி கொடுக்க வேண்டும் இல்லையேல் சிமியோனையும் பென்யமீனையும் அழைத்து வருவது கடினம் என்றான். ரூபனின் இரு குமாரர்களுக்குப் பதிலாய் சிமியோனும், பென்யமீனும் கொல்லப்படுவார்கள் எனில் அதனால் யாக்கோபுக்கு என்ன பலன் அது அவனை திருப்திபடுத்துமா? இது யாக்கோபுக்கு முட்டாள்தனமான வாக்குறுதியாய் இருந்தது.

ஏன் இவ்வாறு சம்பவிக்கிறது, காரணம் ஐக்கியத்திற்கு புறம்பே உள்ள ஜனங்களால் இதை யூகிக்க முடியவில்லை. நீங்கள் ஆவியில் நடந்துகொள்ளாதிருக்கிறீர்கள், நீங்கள் ஒரு அவிசுவாசியைப் போல நடந்து கொண்டு வருகிறீர்கள். யாக்கோபால் என்ன செய்ய இயலும், அவனால் ஒன்றும் செய்ய இயலாதவனாய் இருந்தான். யாக்கோபு தன் குமாரரை எதையும் செய்யக் கூறாது அவர்கள் அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டு எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியத்தைப் புசித்துக்கொண்டு அமர்ந்திருக்கின்றனர் இதோடு இந்த அதிகாரம் நிறைவு பெறுகிறது.

43 ம் அதிகாரத்தின் துவக்கத்தில் எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியம் அனைத்தும் செலவழிந்து போய்விட்டது. யாக்கோபு இப்பொழுது எகிப்துக்கு சென்று சிறிது ஆகாரம் வாங்கி வாருங்கள் என்றான். அவர்கள் 60 பெரியவர்களுக்கு ஆகாரம் அளிக்க வேண்டும் அது சிறிய ஆகாரத்தைவிட சற்று அதிகமாகவே அவசியப்பட்டது. இந்த வாய்மொழியால் யாக்கோபு சிமியோனை எழுதிக்கொடுக்கத் தீர்மானித்துவிட்டார், ஆனால் பெஞ்சமீனை இழக்கத் தயாராக இல்லை. யோசேப்பு மறுபக்கத்தில் தேவனை நம்பிக்கையாய் கொண்டு, மனம் தளராது, அவரை மட்டும் சார்ந்து இருக்க கற்றுக்கொண்டு வந்தான். யோசேப்பு சிமியோனுடன் எகிப்தில் மனம் தளராது இருக்கமுடிந்தது, அங்கு மனோரீதியான பாவம் ஏதுமில்லாது இருந்தது. ஜனங்களாகிய நாம் பாவத்தை தேவன் காண்பது போல காணாதிருக்கிறோம், நாம் அதை சிறிய

காரியமாய் காண்கிறோம், அதைப் பழக்கத்தில் செயல்படுத்தும் போது, தேவன் அதோடு ஈடுபட்டு அதை சரிசெய்ய விரும்புகிறார். அவர்கள் இவ்வாறு எண்ணிக்கொண்டனர் தாங்கள் திரும்ப எகிப்திற்கு செல்லும் இப்பொழுது யோசேப்பு முன் நடந்த அனைத்தையும் மறந்து விட்டிருப்பான், எப்படியோ தந்திரமாய் சென்று போதுமான அளவு தானியத்தை வாங்கிக்கொண்டு திரும்பிவிடலாம் என எண்ணினர், ஆனால் பஞ்சமானது இன்னும் ஏழு ஆண்டுகளுக்கு நீடிக்குமே இப்படிப்பட்ட நெருக்கம் இப்பொழுது யாக்கோபின் மீது சுமர ஆரம்பித்தது.

உபதேசங்கள்:

கிருபை

1. சிலுவையின் அடிப்படையில் தேவன் மனிதனுக்கு சுதந்தரமாய் எல்லாவற்றையும் செய்வது கிருபையாய் இருக்கிறது. இதினிமித்தம் கிருபை என்பது தகுதியற்ற நபருக்கு தேவனிடமிருந்து கிடைக்கும் தயையாய்/பரிசாய் இருக்கிறது.

2. கிருபை தேவனுடைய பண்பைச் சார்ந்ததாய் இருக்கிறது, இதினிமித்தம் கிருபை தேவன் யார் மற்றும் அவர் எப்படிப்பட்டவர் என்பதைச் சார்ந்து இருக்கிறது. தேவன் தனது குணாதிசயங்களில் உண்மையாய் இருந்துகொண்டு மனிதனுக்கு செய்யும் தயை கிருபையாய், இருக்கிறது.

3. விசுவாசி நியாயப்பிரமாணத்தின்படி நடப்பதற்கும் / கிரியை மூலம் இரட்சிப்பிற்கும், கிருபைக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளவேண்டும். நியாயப்பிரமாணத்தின் படியுள்ள / கிரியை மூலம் இரட்சிப்படையும் மனிதனின் கிரியை, தேவனின் திட்டத்திற்கு இடையூறாக இருக்கிறது.

4. இரட்ச்சிப்படைந்த நபரின் வாழ்வில் தேவன் செய்யும் மிகப்பெரிய காரியம் அந்நபரை மிகத்துள்ளியமாய் தனது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைப் போன்று உருவாக்குவது ஆகும். இது மூன்று வகையான சுத்திகரிப்பு மூலம் நிறைவேற்றப் படுகிறது.

> அந்தஸ்து ரீதியாக பரிசுத்தம்மாக்கப்படல்: இரட்சிப்பில் ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகின்றனர். (எபிரெயர்1:2). இயேசுக்கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்தபடியால் அவர் எல்லா தேவ தூதர்களைக்காட்டிலும், தனது மனுஷீக அந்தஸ்தில் உயர்ந்தவராய் விளங்குகிறார். நாம் இரட்சிக்கப்படும்போது, கிறிஸ்துவுடன் இணைப்பில் பிரவேசிப்பதால், நாம் நமது அந்தஸ்தில் தேவதூதர்களைவிட உயர்ந்தவர்களாய் இருக்கிறோம். நமது

அந்தஸ்து ரீதியாக கிறிஸ்துவுடன் பிதாவின் வலது பாரிசத்தில் உட்காருகிறோம்.
அனுபவ ரீதியாக பரிசுத்தமாக்கப்படுதல்: இது பூமியில் வாழும் காலத்தில் பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படுத்தும் சுத்திகரிப்பு ஆகும். இக்காலத்தில் தேவனின் பண்புகளை நம்மில் ஏற்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம். பொன், வெள்ளி, விலையுயர்ந்த கற்கள் இவைகளைப்போல உருவாக்கப்படுகிறோம். (1 கொரிந்தியர்3:12-15)
எல்லாவற்றிற்கும் மேலான ரீதியில் பரிசுத்தமாக்கப்படுதல்: விசுவாசி உயிர்த்தெழுந்த சரீரத்தை பெற்றுக்கொள்ளும்போது, பாவத்தன்மை மற்றும் மனித நற்கிரியகளை இழக்கிறான். இக்காலக்கட்டத்தில் சரீரப்பிரகாரமாய் மனிதன் தேவதூதர்களை விட உயந்தவனாகிறான். இந்த பூரண அந்தஸ்தில் அவன் நித்திய காலமாய் இருப்பான்.

5. எல்லா விசுவாசிகளும் கிருபயை குறைந்த பட்சம் ஒருமுறையாவது ருசிபார்த்து இருக்கவேண்டும். (1 பேதுரு2:3). இது இரட்சிப்பின் போது விசுவாசிகள் குறைந்த பட்சம் 34 அந்தஸ்துகளை அவர்கள் சம்பாதிக்காத நிலையில் அல்லது அதற்கு எவ்வளவேனும் தகுதியற்ற நிலையில் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். (எபேசியர் 2:8, 9) கிருபையைக்குறித்து குழப்பமுறுவது கிறிஸ்தவ வாழ்க்கையில் மகாப்பெரிய அபாயத்திற்கு வழி நடத்தும். (கலாத்தியர்5:4 எபிரெயர்12:15).

6. கிருபயைக்குறித்த தெய்வீக மனப்பான்மை ஏசாயா 30:18,19 ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேவன் தொடர்ந்து, விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை கொடுக்க காத்து இருக்கிறார்.

7. இரட்சிப்பில் உள்ள கிருபை அநேக வழிகளில் வெளிக்காட்டப்படுகிறது. இது எப்பொழுதும் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிப்பதாகவே இருக்கிறது. (சங்கீதம் 103:8-12, ரோமர்3:23-4, ரோமர் 4:4, 5:20, எபேசியர்2:8, 9).

8. கிருபையை வெளிக்காட்ட கிறிஸ்தவ வாழ்க்கையில் அநேக வழிகள் உண்டு.
ஜெபம் (எபிரெயர்4:16)
உபத்திரவங்கள் / துன்பங்கள் (2 கொரிந்தியர்12:9, 10).
வளர்ச்சி (2 பேதுரு3:18).
நிலையானத்தன்மை (1 பேதுரு 5:12).
வாழ்க்கை முறை (எபிரெயர் 12:28, 2 கொரிந்தியர் 1:12).
தெய்வீக நன்மையின் உற்பத்தி (1 கொரிந்தியர்15:10, 2 கொரிந்தியர் 6:1).

9. கொடுப்பது கிருபையின் சரியான மனநிலையாய் இருக்கிறது. (2 கொரிந்தியர் 8 & 9).

10. கிறிஸ்தவ வாழ்வில் உபத்திரவங்களை கையாள கிருபை மட்டுமே ஒரே வழியாக இருக்கிறது. (2 கொரிந்தியர்12:7-10)நெருக்கப்படுகிற

காலங்களிலிலும், விரோதிக்கப்படுகிற காலங்களிலும் கிருபையின் மூலம் தேவன் ஒரு விசுவாசியை ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறார். (1 பேதுரு1:6,7).

11. கிருபையின் விளைவுகள்:

தேவன் பூரணராய் இருக்கிறார். அவரது திட்டம் பூரணமாய் இருக்கிறது.

பூரணமான திட்டம் பூரணமான தேவனிடமிருந்து மட்டுமே கடந்து வரமுடியும்.

தேவனுடைய திட்டத்தில் மனிதன் எதையாகிலும் செயதால், அவரது திட்டம் ஒருபோதும் பூரணமாய் இருக்கமுடியாது.

ஒருதிட்டத்தில் பெலவீன இணைப்பு இருக்குமேயானால் அத்திட்டம் பலமாய் இருக்க வாய்ப்பில்லை. இதினிமித்தம் கிருபை மனிதத் தகுதி மற்றும் மனிதத் திறமைகளை புறக்கணிக்கிறது.

நியாயப்பிரமாணத்தை அநுசரித்தல், மனிதக்கிரியைகள் போன்றவை கிருபைக்கு எதிரிகளாய் விளங்குகின்றன.

இதினிமித்தம் மனிதனின் நீதிக்கிரியைகள் தேவனது திட்டத்தில் இடம்பெறவில்லை. (ஏசாயா64:6).

பாவம்

1. பாவத்தின் பொருள் தேவ மகிமையிலிருந்து விழுந்து போதல் (ஒரு அம்பு எவ்வாறு இலக்கு தவறி விழுகிறதோ அவ்வண்ணம் விழுந்து போதல்). (ரோமர் 3:23).

2. இதினிமித்தம், தேவனுடைய நீதி மற்றும் பரிசுத்தம் இவற்றை சந்திக்க இயலாத எதுவும் பாவமாயிருக்கிறது.

3. மனுக்குலம் தனது சொந்த பலத்தினால் தேவனுடைய நீதியை அடைய முடியாது என தெளிவாய் பார்க்கிறோம்.
(ரோமர் 3:9-10).

4. ஆதாமின் பாவம்.

A) ஆதாமிலிருந்து பாவம் உலகில் பிரவேசித்தது.. (ஆதியாகமம் 3:1-5, ரோமர் 5:12).

B) பாவத்திற்குரிய சம்பளம் மரணம் (ரோமர் 6:23).

C) ஆவிக்குரிய மரணம் - தேவனுடைய உறவிலிருந்து பிரிக்கப்படுதல் (ஆதியாகமம் 3:8).

D) சரீர மரணம் - சரீரத்திலிருந்து ஆத்துமா பிரிக்கப்படுதல் (ஆதியாகமம் 3:19, 5:5).

E) நித்திய மரணம் - அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு தேவனிடமிருந்து பிரிக்கப்படுதல் (வெளி 20:13-14).

F) ஆதாம் ஸ்திரீயின் தலையாய் இருப்பதினிமித்தம், பாவத்திற்கு உத்திரவாதி ஆதாமே (ரோமர் 5:12).

G) பாவத்திற்குரிய தண்டனை எல்லா ஜனங்களின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது, மற்றும் காணக்கூடிய வகையில் ஆணாய் பிறக்கும் நபரின் மூலம் அது கடந்து செல்கிறது.

H) ஏனெனில், கிறிஸ்து கன்னிகையிடத்தில் பிறந்தார், அவர் ஆதாமிடமிருந்து பாவ சுபாவத்தை சுதந்தரிக்கவில்லை.

I) பாவமில்லாத மனிதனாக, தன்னைத்தானே பாவத்திற்கு பலியாகி, தண்டனை செலுத்துவதற்கு தகுதியுள்ளவரானார். (மரணம் - ஆவிக்குரிய மற்றும் சரீர மரணம்).

J) கிறிஸ்து பாவத்திற்கான தண்டனை கிரயத்தை செலுத்தி தீர்த்துவிட்டபடியால், அவரை நம்புவோர் ஒருபோது ஆக்கினைக்குட்பட மாட்டார்கள். (ரோமர் 5:19, 8:1).

5. எல்லா சிருஷ்டியும் பாவத்தின் விளைவால் அழிவுக்குட்பட்டதாய் இருக்கிறது (ஆதியாகமம் 3:16-19, ரோமர் 8:20-22).

6. மூன்று வகையான பாவங்கள்:
ஆதாமின் பாவம் எல்லா மனுக்குலத்தின் மீதும் சுமத்தப்பட்டுள்ளது.
இதன் விளைவால், நாமனைவரும் பாவத்தன்மையை சுதந்தரித்துள்ளோம்.
இதன் விளைவால் நாம் அனைவரும் தனிப்பட்ட நிலையில் பாவங்களை செய்து வருகிறோம்.

7. மூன்று வகைகளில் பாவம் தனில்தானே வெளிப்படுகிறதாய் இருக்கிறது.

a) செயல்களில் வெளிப்படும் பாவம்.
உதாரணம் கொலை, விபச்சாரம், திருட்டு போன்றவை.

b)நாவு மூலம் வெளிப்படும் பாவம்.
உதாரணங்கள்: பொய் கூறுதல், வீண்பழிசுமத்துதல், கோள்சொல்லுதல், தூஷித்தல் போன்றவை.
நீதிமொழிகள் 6:16-19 ல் உள்ள கொடிய ஏழு பாவங்களில் மூன்று பாவங்கள் நாவினால் செய்யும் பாவங்கள்.
பாவம் செய்கிற நாவை தேவன் அறுத்துப்போடுவார் (சங்கீதம் 12:3).
வாய் மொழிகளால் நிந்தித்து துன்பப்படுத்தப்படும் விசுவாசிகளை தேவன் பாதுகாத்து ஆசீர்வதிக்கிறார். (மத்தேயு 5:11-12).
குழப்பமுண்டாக்குகிறவர்கள் எப்பொழுதும் நாவின் பாவங்களாலேயே அதைச்செய்கிறார்கள். (சங்கீதம் 52:2).

c) சிந்தனையினால் செய்யும் பாவங்கள்:
உதாரணங்கள் - பெருமை, இச்சித்தல், பொறாமை, கசப்புணர்வு, அன்பற்ற தன்மை போன்றவை.

8. பாவத்திடமிருந்து திரும்பிப்பெறுவன:

A) ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது தேவனோடுள்ள அவரது ஐக்கியம் பாதிக்கப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுகிறார், உங்கள் வாழ்வை ஒருபோது வழிநடத்த இயலாதவராகிவிடுகிறார்.

B) தெரிந்த பாவங்களை அறிக்கை செய்தல் வேண்டும். (1 யோவான் 1:9, சங்கீதம் 66:18). இப்படிப்பட்ட பாவங்களை அறிக்கையிடுவதன் மூலம் தேவன் மன்னித்து, சுத்திகரிக்கிறார் மற்றும் அறியாப்பாவங்களையும் மன்னித்து அகற்றிவிடுகிறார்.

C) செய்யத்தூண்டும் உங்கள் எண்ணங்களை பரிசீலிக்க வேண்டும். - இது முழுமையான அற்பணிப்பை உள்ளடக்கியுள்ளது. (ரோமர் 12:1-2, 2 கொரிந்தியர் 13:5).

D) அறிக்கைசெய்த பாவத்தைவிட்டு விலகியிருங்கள். குற்ற மனசாட்சியுடன் கட்டப் படாதிருங்கள் - இது மற்றொரு பாவமாய் இருக்கிறது. (பிலிப்பியர் 3:13-14, சங்கீத,ம் 103:10-12).

E) உங்கள் நடைமுறை ஆவிக்குரிய வாழ்வை திரும்ப துவங்குங்கள். நீங்கள் சோதிக்கப்படும் பகுதிகளை விட்டு விலகியிருங்கள். (எபிரெயர் 12:12-13).

G) தேவனுடன் ஒப்புரவான பின்னர் மற்றவர்களுடனும் ஒப்புரவாகுங்கள். (யாக்கோபு 5:16).

H) தேவன் நம்மை மன்னிக்கிறது போல, மனுஷீக நிலையில் நாம் பிறரை மன்னிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறோம். (எபேசியர் 4:32).

9. இயேசு சீஷர்களின் பாதங்களை கழுவினார். யோவான் 13:10.

1) சரீரம் சுத்தமாய் இருக்கிறது - நாம் ஒருமுறை நித்தியமாய் எல்லாவற்றிற்காகவும் சிலுவையில் மன்னிக்கப்பட்டு விட்டோம். (எபிரெயர் 10:1-12).

2) பாதங்கள் தொடர்ந்து கழுவப்படவேண்டும் - நாம் நமது பாவங்களை பிதாவிடம் அறிக்கை செய்து ஐக்கியத்தை புதுப்பித்துக் கொள்ளவேண்டும். (1 யோவான் 1:9).

10. சாத்தான் தொடர்ந்து நமது பாவங்கள் நிமித்தம் நம்மை தேவனுக்கு முன்பாக குற்றம் சாட்டிக்கொண்டே இருக்கிறான். (வெளிப்படுத்தல் 12:10). எப்படியிருப்பினும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பிதாவின் முன்னிலையில் நமது சார்பில் வழக்கறிஞராகவும் / பரிந்துபேசுகிறவராகவும் பரலோகில் இருக்கிறார். (1 யொவான் 2:1). அவர் நமக்காய் பரிந்து பேசி பாவத்துக்குரிய தண்டனை முழுமையாய் கொடுத்து தீர்க்கப்பட்டாயிற்று என்கிறார்.

11. பாவத்துக்குரிய பெயர்கள்:

A) அவிசுவாசம் - சத்தியத்தை மறுதலிப்பது. (யோவான் 16:9,எபிரெயர் 3:12).

B) சட்டவிரோதம் - வாழ்வுக்குரிய சட்டங்களை மறுதலித்து வாழ்தல். (1 திமோத்தேயு 1:9).

C) அக்கிரமம் - தீமையான செயல்கள். (அப்போஸ்தலர் 8:22, 23).

D) மீறி நடத்தல் (Trespass)- தேவனுடைய அதிகாரத்தை மீறி நடத்தல். (எபேசியர் 2:1).

E) கீழ்ப்படியாமை - கீழ்ப்படிய மறுப்பது. (எபிரெயர் 2:2).

F) மீறுதல் (Transgression) - பிரமாணத்தை புறக்கணித்து நடத்தல். (லூக்கா 15:29, கலாத்தியர் 3:19).

12. மரணத்துக்கேதுவான பாவம் விசுவாசியின் சரீர மரணமாயிருக்கிறது, இது வழக்கமாய் அறிக்கை செய்யாத பாவம் அல்லது தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்தலால் நேரிடுகிறது. (1 யோவான் 5:16, 17, 1 கொரிந்தியர் 11:31, 32)

உதாரணங்கள்:

1) கொரிந்தியரின் தவறு - (1 கொரிந்தியர் 5).
2) கொரிந்தியர்கள் கர்த்தரின் மேஜைக்கு வழக்கமாய் தகுதியற்ற நிலையில் வருவார்கள். (1 கொரிந்தியர் 11:27-32).
3) மோசே (உபாகமம் 32:48-52).
4) ஆகான் (யோசுவா 7:16-26).
5) அனனியாவும் சப்பீராளும் (அப்போஸ்தலர் 5:1 -11).

13. மன்னிக்க இயலாத ஒரே பாவம் - மன்னிப்பே இல்லாத பாவம் - இயேசுக் கிறிஸ்துவைப் புறக்கணிப்பதே.

A) பரிசுத்த ஆவியானவர், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தேவனென்றும் இரட்சகரென்றும் வெளிப்படுத்தும் ஊழியத்தை

புறக்கணிப்பதை அடிப்படையாய் கொண்டு இருக்கிறது. ஆதியாகமம் 6:3, யோவான் 16:7-11, எபிரெயர் 10:29.

B) மன்னிக்க இயலாத பாவங்களுக்கு ஒத்த பாவங்கள்: அறிந்து செய்யும் பாவம் - எபிரெயர் 10:26-31,பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷனம் - மத்தேயு 12:31,பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நிற்றல் - அப்போஸ்தலர் 7:51, கிருபையின் ஆவியானவரை நிந்திப்பது - எபிரெயர் 10:29.

14. முதலாவது பதிவு செய்யப்பட்ட பாவம் சாத்தானுடையதாய் இருக்கிறது - பெருமை (ஏசாயா 14:12-14).

15. தேவன் பாவத்திற்கோ, சோதனைக்கோ காரணர் அல்ல. பாவத்தை சிருஷ்டிப்பது தேவனுடைய தன்மையை பூரணமற்றதாக்குகிறது, ஏனென்றால் அவரது தெய்வீக குணாதிசயம் அப்படிப்பட்டதாய் இருக்கிறது. (யாக்கோபு 1:13).

16. சோதனை இவ்வுலகம், மாமிசம் (மனிதனில் உள்ள பாவத்தன்மை), அல்லது சாத்தானிடமிருந்து வருகிறதாய் இருக்கிறது. பாவம் செய்ய தூண்டப்படும்போது, மனிதன் அதை செய்வதும் செய்யாமலிருப்பதும் அவனது தெரிந்துகொள்ளுதலை பொறுத்தது, பாவம் மனிதனின் சொந்த சுயசித்தத்தின் விளைவாய் இருக்கிறது. (யாக்கோபு 1:14).

<u>பாடம் 18 -- அதிகாரம் 43,44.</u>

முகவுரை:

யாக்கோபு இங்கு சுயத்துடனும், விசுவாசியாய் இருந்தும் ஐக்கியத்திற்கு புறம்பானவராகவும் இருக்கிறார், அவரது பட்சபாதம் மற்றவர்களை பாதிக்கிறதாய் இருந்தது. நீங்கள் மனோரீதியான பாவங்களை சரிசெய்யாத பட்சத்தில் அது பிறரை பாதிப்பிற்குள்ளாய் நடத்தும். பொறாமையும் கசப்பும் மக்களை மென்று தின்றுவிடும். யாக்கோபு எகிப்திலிருந்து கொண்டுவந்த தானியம் அனைத்தையும் சாப்பிட்டு முடிக்கும் வரை காத்திருந்தான். எகிப்திற்கு சென்று தானியம் கொண்டு வர ஒரு மாத காலம் எடுக்கிறதாய் இருந்தது. இக்காலத்தில் அவர்கள் பட்டினியால் வாட வேண்டியவர்களாய் இருந்தனர். பாவமானது உங்கள் பிரச்சனைக்குண்டான தீர்வை விரைவில் எடுக்க விடாமல் தடைசெய்கிறதாய் இருக்கிறது.

பென்யமீன் எகிப்திற்கு கொண்டு செல்லப்படுவதைக்குறித்த வாக்குவாதங்கள்:

யூதா யாக்கோபிடம் சொன்னான், பென்யமீனை தங்களுடன் எகிப்திற்கு அனுப்பாத பட்சத்தில் அவர்களில் ஒருவரும் தங்கள் முகத்தை அங்கு காட்டமுடியாது என உறுதியாய் கூறினான். அவன் இங்கு இஸ்ரவேல் என அழைக்கப்படுகிறான், அவன் உண்மையில் இஸ்ரவேலாக செயல்படவில்லை. அவர்கள் அனைவரும் சகோதரர்கள் ஆனாலும் அவர்கள் சகோதரர்களைப் போல ஒருவருக்கொருவர் இருக்கவில்லை.

உங்களுக்கு ஒரு இளைய சகோதரன் இருக்கிறான் என்று உங்களை யார் கூறக்கோரியது? இது பரிதாபத்துக்குரிய கேள்வியாய் பெரியமனிதன் கேட்கிறதாய் இருந்தது. யூதா சொன்னான், அந்த மனிதனுக்கு நாங்கள் உண்மையை சொல்லியே ஆக வேண்டியதாய் இருந்தது. யூதா இஸ்ரவேலிடம் கெஞ்சிக் கேட்டான் பிள்ளையாண்டானை என்னுடன் அனுப்பும். யூதா அவனது சந்ததியில் தாவீதும் மற்றும் கர்த்தராகிய இயேசுவும் தோன்ற இருக்கிறார்கள் அவன் சூழ்நிலைகளை தெளிவாய்க் கண்டு என்ன செயல்கள் நடக்கும் என்பதையும் தெளிவாய் அறிந்திருந்தான். இந்த மனிதனுடன் நாங்கள் எதார்த்த சித்தராய் நடந்து கொள்ளவேண்டும். அவ்வாறு செல்லாது இருந்தால் நாமெல்லாரும் சாகப்போகிறோம் என்பது உறுதி என்றான், பின்னும் அவன் பென்யமீனுக்கு நான் உத்திரவாதம் அளிக்கிறேன் என்றான். இது ரூபன் சொன்னதைவிட யாக்கோபுக்கு அர்த்தமுள்ளதாய் தோன்றிற்று.

அவர்கள் காலம் தாழ்த்தாதே இருந்திருப்பார்களேயானால், இவ்வளவு நேரத்திற்கு எகிப்திற்குச் சென்று தானியம் கொண்டு திரும்பியிருக்கலாம் என்றனர். விசுவாசிகளாகிய நீங்கள் அநேக பிடிவாதமுள்ள கிறிஸ்தவர்களிடம் நேர்மையாய் நடந்துகொள்ள அவசியமாய் இருக்கிறது.

நீங்கள் இப்படிப்பட்டோருக்கு, படிப்படியாய் காரியங்களை எடுத்துச் சொல்லி அவர்களது சூழ்நிலைகளை புறியும்படி செய்தல் வேண்டும். இது ஒரு நல்ல உதாரணமான ஆலோசனையாய் இருக்கிறது, அவர்கள் காணவிரும்பாத காரியத்தை ஜனங்கள் காணும்படி செய்து அவர்களை வற்புறுத்துதல் இறுதியில் அவர்களை இணக்கத்திற்கு கொண்டுவருகிறதாய் இருக்கிறது. யூதாவின் கடிந்து கொள்ளுதல், யாக்கோபின் பாவத்தை படம்பிடித்துக்காட்டி அவனை அதிலிருந்து வெளியே கொண்டுவருகிறதாய் இருந்தது. இந்த சூழலில் கடந்த 20 ஆண்டுகாலத்தில் அவனை ஜெபத்திற்கு வழிநடத்தியது.

வசனம் 11 ல் இப்படியாய் இருக்குமென்றால் செய்யும் என யூதா கூறினான். அவர்களுக்கு அப்பத்திற்கு கொஞ்ச தானியமட்டுமே இருந்தது. யாக்கோபு அவனது குமாரர்களை திரும்ப எகிப்திற்கு அனுப்பினான், அவர்கள் முன்னமே கொண்டுவந்த பணமுடிப்பையும் மற்றும் இந்தப் பயணத்தில் தாராளமாய் தானியம் கொள்ளும்படிக்கு வேண்டிய பணத்தையும் கொடுத்தனுப் பினான்.

பட்சபாதம்:

வசனம் 12 ல் பட்சபாதம் என்கிற பிரச்சனை யோசேப்பிற்குப் பதிலாய் பென்யமீனின் இன்னும் இருந்துவந்ததை நாம் காண்கிறோம். இந்த வேதபகுதி தான் சிமியோனுக்காகவும் வருந்துகிறதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இப்பகுதியில் அவன் தனது பிள்ளைகளுக்காய் வருந்துகிறதை அறிக்கை செய்வதை காண்கிறோம். கிறிஸ்தவ வாழ்க்கையில் அபாயகரமானது என்று எதுவும் இல்லை. எப்படியிருப்பினும் யாக்கோபு இவ்வழிக்கு இதற்கு முன் இருந்ததைவிட முன்னேற்றம் காணப்பட்டபடியால் இணங்கினான். நீங்கள் நீண்ட காலம் ஐக்கியத்திலிருந்து விலகி ஜீவிப்போருக்கு ஆலோசனை கூறத்தலைப்படும் போது, அவர்கள் உடனடி முதிர்ச்சிக்குள் வருவார்கள் என்பதை எதிர்பார்க்க வேண்டாம். நாம் தேவனுடன் உறவுகொள்ளும் போது நமது முதிர்ச்சியின் அளவை தக்கவைத்துக்கொள்ளுதல் அவசியம். நாம் தேவனை நம்பும் விஷயத்தில் முழுமையான விசுவாசத்துடன் செயல்படுதல் வேண்டும். தேவன் எல்லா நேரங்களிலும் யாக்கோபு அறியாத நிலையில் அவருடன் இருந்த ஐக்கியத்தில் இல்லாதிருந்த போதிலும் அவனுக்கு தனது இரக்கத்தை அளித்துக் கொண்டே வந்தார்.

எகிப்தில் உள்ள குமாரரர்கள்:

வசனம் 15 ல் அவர்கள் எகிப்தை சென்றடைந்தவுடன், யோசேப்பு தனது வேலைக்காரர்களை அவர்கள் அனைவரையும் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்து கொடுக்கக் கட்டளை கொடுத்தான். அவர்கள் அனைவரும் யோசேப்பின் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர், அவர்கள் அனைவரும் பீதியால் நிறைந்து காணப்பட்டனர். அவர்கள் இதற்கு முன் அவர்கள் சாக்குகளில் இருந்த பணத்தைக் குறித்து யோசேப்பு விசாரித்து தங்கள் தெண்டம்பிடித்து தங்களது கழுதைகளை எடுத்துக்கொள்ளப்போகிறான் என அச்சத்துடன் காணப்பட்டனர். அவர்கள் இவ்வாறு குற்ற உணர்வுடன் சரியான காரியத்தை தவறான வழியில் சிந்திக்க தலைப்பட்டனர். அவர்கள் இன்னும் தங்களது பாவத்தை உண்மையாக தேவனிடம் அறிக்கை செய்யாதவர்களாய் இன்னும் அச்சத்தால் நடுங்கி திகைத்துக் கொண்டு இருந்தனர்.

அவர்கள் பணத்தைக் குறித்த விஷயத்தில் மிகவும் நேர்மையுடன் நடந்து கொள்ள வேண்டும் என எண்ணிக் கொண்டிருந்தனர். அவர்கள் யோசேப்பின் உக்கிராணக்காரனிடம் தாங்கள் இதற்கு முன் தானியம் கொள்ளவந்த போது கொண்டு வந்த பணத்தை பத்திரமாய் திரும்ப கொண்டுவந்திருக்கிறோம் எனக்கூறினர். இது அந்த உக்கிராணக்காரனை மனம் மாறுதலுக்கு ஏதுவாய் வழிநடத்துகிறதாய் இருந்தது. வேலைக்காரரில் ஒருவன் சிமியோனை அவர்களிடம் கொண்டி வந்து விட்டான், அவர்கள் பாதங்கள் கழுவப்பட்டது, அவர்களது மிருக ஜீவன்கள் பராமறிக்கப்பட்டது. அங்கு யோசேப்பு வந்ததும் அவர்கள் அனைவரும் தங்களது வெகுமதிகளுடன் அவர்கள் தரைமட்டும் குணிந்து வணங்கினர் இது யோசேப்பு கண்ட சொப்பனத்தை உறுதி செய்கிறதாய் இருந்தது. யோசேப்பு யாக்கோபை குறித்து விசாரித்தான், அவன் பென்யமீனைக் கண்டான் அவன் தனது இளைய சகோதரனை ஆசீர்வதித்தான் அவன்

அவனை அறிந்துகொள்ளவில்லை. அவன் தனது வேலைக்காரர்களை பந்தியை ஆயத்தப்படுத்தக் கட்டளையிட்டான். யோசேப்பு தனது சகோதரர்களை கடந்த இரு மாதங்களாய் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளும்படி அவர்களை சோதிக்கத் தொடங்கினான். அவர்களை அவர்கள் வயதின்படியே பந்தி அமரச் செய்தான்.

சகோதரர்கள் சோதிக்கப்பட்டனர்:

புதிய ஏற்பாட்டு காலத்தில் விருந்தின் போது, எஜமானானவன் ஜங்களை உயர்வான இடங்களிலும் தாழ்வான இடங்களிலும் உட்கார வழி நடத்துவதுண்டு. இந்த விருந்தில் எஜமானன் கனத்திற்குரிய இடத்தை அவர்களுக்காக ஒதுக்கிறவனாய் இருக்கிறான். இது அந்த ஸ்தாபனத்தில் உங்களுக்குரிய ஸ்தானத்தை அறிவிக்கிறதாய் இருக்கிறது, என்பது முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. யோசேப்பு அவர்களுடன் பந்தி அமர்ந்து உணவருந்தவில்லை, அவன் அவர்கள் முன் உணவுப்பொட்டலங்களை வைத்தான், அதில் பென்யமீனுக்கு ஐந்து மடங்கு பெரிதான உணவு பொட்டலம் மற்ற சகோதர்களை விட அதிகமாய் பரிமாறப்பட்டது.

இந்த குடும்பத்தில் யோசேப்பைக் குழியில் போட்டுவிடக் காரணமாய் இருந்தது என்ன? பொறாமை. யோசேப்பு மற்ற சகோதரர்கள் பென்யமீன் மீது பொறாமை கொள்கிறார்களா என சோதித்துப் பார்த்தான். இதைக்காணும் போது அவர்களை அவன் சகோதரர்கள் என அனைத்துக்கொள்ளவா அல்லது இன்னும் அவர்கள் இருதயத்தில் கொலைகாரர்களாக இருக்கிறார்கள் என்பதை சுட்டிக்காட்டவா? இது தேவன் அவர்களுடன் ஈடுபட்டு, அவர்களது பகை உணர்வு, பொறமை, வெறுப்புணர்வை இவைகளிலிருந்து அவர்களை வெளியே கொண்டுவருவதாய் இருந்தது. அவர்களுக்கு வைக்கப்பட்ட பரீட்சையில் தேர்ச்சிப் பெற்றுவிட்டனர். அவர்கள் புசித்து குடித்து தங்களுக்குள் சந்தோஷமாய் இருந்தனர், ஒருவரும் பென்யமீனுக்கு ஐந்து மடங்கு அதிகம் கிடைத்ததைக் குறித்த கரிசனையை வெளிப்படுத்தாது இருந்தனர்.

அவர்கள் பொறாமைக்கு பரிகாரத்தைக் கண்டனர் ஆனால் அநீதிக்கு பரிகாரம்? 44 ம் அதிகாரத்தில் யோசேப்பின் செயல்கள் வேண்டுமென்றே முறைகேடு செய்வதாய் இருந்தது. அவர்கள் தானியம் கொண்டு செல்லும்போது, பணமுடிப்பை மட்டும் அவர்கள் சாக்கில் போடாது, அவன் தனது சொந்த வெள்ளியிலான பானபாத்திரத்தை பென்யமீனுடைய சாக்கில் போட்டு கட்டும்படி தனது வேலைக் காரருக்குக் கட்டளை கொடுத்தான். அவர்கள் ஒரிரு கிலோமீட்டர் தூரம் சென்றிருக்கக்கூடும், யோசேப்பின் வேலைக்காரரர் பின் தொடர்ந்து சென்று அவர்களிடம் என்ன காரியம் செய்தீர்கள், என் எஜமானருடன் உணவருந்திவிட்டு அவருக்கே துரோகம் செய்கிறீர்களோ என்று கேட்டான்.

அவர்கள் மறுப்பு தெரிவித்து, அவர்கள் எதைக் குறித்தும் குற்றமில்லாதவர்கள் எனக்கூறி, இது முற்றிலும் உண்மை என்றனர்.

அவர்கள் தொடந்து அப்படிப்பட்ட வெள்ளிப்பாத்திரம் யாருடைய சாக்கில் அகப்படுகிறதோ அவன் கொலை செய்யப்படவும், மற்ற நாங்கள் அனைவரும் உங்கள் எஜமானருக்கு அடிமைகளாய் இருப்போம் என்றனர். அந்த வெள்ளி பானபாத்திரம் பென்யமீனது சாக்கில் கண்டு எடுக்கப்பட்டது, இதைக் கண்ட மாத்திரத்தில் அனைவரும் தங்கள் வஸ்திரத்தைக் கிழித்துக் கொண்டனர், இது அவர்கள் மகாத் துயரம் அடைந்தனர் என்பதை அடையாளமாய் காட்டுகிறதாய் இருந்தது. அவர்கள் இது யாரோ ஒருவர் இதற்கு பின்னணியில் இருக்கிறார் என்பதை புறிந்து கொண்டனர், ஏதோ தவறு நடக்கிறது என்றும் புறிந்து கொண்டனர், அவர்கள் சகோதரனாகிய பென்யமீன் மரிப்பதையும் அதனால் உண்டாகிற பெரிய வருத்தத்தையும் சகிக்க மாட்டாதவர்களாய் இருந்தனர்.

யூதா முன் சென்று, யோசேப்பிற்கு முன் தலைக்குப்புற சாஷ்டாங்கமாய் விழுந்தான். யோசேப்பு அவர்களது மனநிலையை புறிந்து கொண்டான், அவன் தனது கடந்த கால சொப்பனத்தில் தான் யார் என்பதையும் புறிந்து கொண்டான். எகிப்தில் அவன் சொப்பனக் குறி சொல்லுபவன் என அறியப்பட்டிருந்தான். அவன் இறுமாப்பாய் இருந்து விட வில்லை அவன் அந்த ஜனங்களை அவர்களது சொந்த பாவத்தை அறிக்கை செய்து, எல்லாவற்றையும் குறித்து நேர்மையடைய இப்படிப்பட்ட செயல்களால் வற்புறுத்துகிறவனாய் இருந்தான். யூதா அவர்கள் எவ்விதக்குற்றமு இழைக்கவில்லை, அவர்கள் எதற்கோ பலவந்தம் செய்யப்படுகிறார்கள் என அறிந்து இருந்தான். அவன் கடமை உணர்வுடன் செயல்பட்டான், அவன் மன்னித்துக் கொள்ளுங்கள் ஐயா என்பதை சார்ந்து கொள்ளவில்லை. தங்களுக்கு நேரிட்ட அநியாயத்தை கையாளுவதற்கு அதை கர்த்தருடைய கரத்தில் கொடுத்து சரி செய்யக் கற்றுக்கொண்டான்.

யோசேப்பு தொடர்ந்து அவர்களை வற்புறுத்தி யாருடை சாக்கில் எனது வெள்ளி பானபாத்திரம் காணப்பட்டதோ அவன் எனக்கு நிரந்தர வேலைக்காரனாய் இருக்கக்கடவன் என்றான். நீங்கள் உங்கள் தகப்பனிடத்திற்குச் செல்லலாம் என கட்டளையிட்டான். அவ்வாறு அவர்கள் சென்று இருப்பார்கள் எனில் பென்யமீனைக் குறித்து அவர்களுக்கு கொஞ்சம் கூட அக்கரை இல்லை என்றாகிவிடும்.

தன்னை பதிலாக வைக்கக்கோறி யூதா:

வசனம் 22 முதற்கொண்டு யூதா ஒன்று விடாமால் எல்லாவற்றையும் தெளிவாய் கூறி, பென்யமீனை தங்களுடன் கொண்டு செல்லவில்லை என்றால் இஸ்ரவேல் தங்களது தகப்பன் மரித்துப்போய் விடுவார் என்றான். யோசேப்பு இப்பொழுது தனது தகப்பனது இருதயம் தனது மறைவைக் குறித்து எவ்வளவாய் வேதனைப் பட்டிருக்கும் என்பதை புறிந்து கொண்டான். அவர்கள் தங்களது சகோதரன் மற்றும் தங்களது தகப்பன் இருவரைக் குறித்த அக்கரை மிகுந்தவர்களாய் காணப்பட்டனர். அவர்கள் தங்களது தகப்பனை நேசித்தனர் அவர்கள் அவனை வருத்தப்படுத்தாது இருக்க வாஞ்சித்தனர். யோசேப்பை பொறுத்தமட்டில் இவர்கள் இரண்டாம்

தரமான குடும்பமாய் கருதப்பட்டனர், பென்யமீனைக்குறித்தோ அவன் கரிசனை உள்ளவனாய் காணப்பட்டான். அவர்கள் அவ்விதமாய் கருதப்பட்ட போதும் அவர்கள் இன்னும் அவர்கள் தகப்பன் மீதுள்ள மரியாதை கொஞ்சமும் குறையாது இருந்தது.

யூதா சொன்னான் தான் பிணைக்கைதியாய் பென்மீனுக்கு பதிலாக சேவகம் பண்ண ஒப்புக்கொடுக்கிறேன் என்றான். யூதா பென்யமீனுக்காய் பாடு அனுபவிக்க தயாரானன், அவனும் தனது தகப்பனும் உயிர் வாழ தனது வாழ்வை தியாகம் செய்ய ஒப்புக்கொடுத்தான், இது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் தியாகத்தை சித்தரிக்கும் பெரிய சித்திரமாய் இருக்கிறது. மாம்சீகத்துக்குரிய விசுவாசிகள் அவர்களது பாவத்துடன் இடைபடும் பொழுது அவர்களால் அதிலுருந்து மீள முடியும். யோசேப்பு இப்படிப்பட்ட வற்புறுத்துதல் மூலம் அவர்களை தேவனுடன் சரியான ஐக்கியத்தில் கொண்டு வரமுடிந்தது, மற்றும் அவர்கள் எண்ணிக்கொண்டிருந்த மரித்துப்போய் விட்ட சகோரனுடனும் ஒப்புரவாக ஒரு தருணம் அவர்களுக்கு கிடைக்கிறதாய் இருந்தது. தெளிந்த மனசாட்சியுடன் தேவனிடம் வாருங்கள், நீங்கள் எப்படிப்பட்டவர்களாய் இருக்கிறீர்களோ அப்படியே வாருங்கள். நமக்கு இந்த சகோதரர்களுக்கு கிடைத்த சமயம் போன்று நமக்கு கிடைக்கவில்லை, உங்களது கணக்கை குறுக்கிக்கொள்ளுங்கள். இப்பொழுது, அவர்கள் தேவனது நிலையிலிருந்து செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள், அவர்கள் தாங்கள் எண்ணிப்பார்க்க இயலாத நிலையில் அவர்கள் ஆசீர்வாதம் பெற இருக்கிறார்கள்.

உபதேசம்:
பொறாமை

1. பொறாமை என்பது மிகப்பலமான மனோரீதியான பாவமாய் இருக்கிறது. (நீதி. 27:3,4).

2. பொறாமை என்பது எல்லாப்பாவங்களை விட கொடூரமானது, இது ஒருநபரை மிருகமாக்கிப் பார்க்கிறது.

3. ஒரு விசுவாசியின் வாழ்விலிருந்து எல்லா சந்தோஷத்தையும் பொறாமை அகற்றிவிடுகிறது, இது ஒரு மனோரீதியான பாவமாய் இருக்கிறது, இதனால் உங்களது சொந்த வருத்தங்களையும், துன்பங்களையும் நீங்கள் குவித்துக் கொள்கிறவர்களாய் இருக்கிறீர்கள்.

4. சில மக்களால் மற்றவர்களின் முன்னேற்றம் அவர்களது வெற்றியைக் காணும்போது அது அவர்களை அவர்களுடன் இருக்க விடாது, பொறாமையின் விளைவானது சிநேகத்தின் அடிப்படையை அடியோடு அழித்துவிடுகிறதாய் இருக்கிறது.

5. பொறாமை என்பது மிகப்பெரிய பாவமாய் இருக்கிறது, லேவிய சட்டப்பிரகாரம் இதற்கு முழுமையான பலி செலுத்தும் முறைமையானது எண்ணாகமம் 5:11-31 வரையுள்ள வேதபகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. இது ஒரே பலிமுறையானது ஒரே பாவத்திற்கு என வடிவமைக்கப் பட்டுள்ளது.

6. பொறாமை என்பது திருமண அன்பை அழிப்பதற்கு அடிப்படையாய் இருக்கிறது. (உன்னதப்பாட்டு 8:6).

7. இந்த பொறாமை என்பது அன்பை அழிப்பதோடு நின்று விடாமல், ஆத்துமாவின் இயல்பான செயல்பாட்டையும் அழிப்பதாய் இருக்கிறது. (யோபு 5:2; நீதிமொழிகள் 14:30). இதன் மனோநிலை பாதிக்கப்பட்ட நிலை மற்றும் நரம்பியல் தாக்கம் போன்றவைகள் இதற்கு விளக்கம் அளிக்கக்கூடியனவாய் இருக்கின்றன.

8. பொறாமை பலிவாங்கும் எண்ணத்தை உருவாக்குகிறதாய் இருக்கிறது. (நீதிமொழிகள் 6:34).

9. யோசேப்பின் மீது அவனது சகோதரர்களுக்கு இருந்த பொறாமையானது அவனை அடிமையாக விற்றுப்போட வைத்தது. (அப். 7:9).

10. இதினிமித்தம் பொறாமை உண்மையான அல்லது தோற்றமளிக்கும் தவறுகளை செய்யவைத்து தேவனது கரங்களை விட்டு வழுவிச்செல்ல வகை செய்வதோடு, அழையாத விருந்தாளியாய் தெய்வீக நியாயத்தீர்ப்புக்கு அழைத்துச் செல்கிறது. . (உபாகமம் 32:35; ரோமர் 12:19).

11. பொறாமை இஸ்ரவேலை இரண்டாய் பிரித்தது (ஏசாயா 11:13 - யூதாவின் மீது எப்ராயீமிக்கு இருந்த பொறாமை).

12. பொறாமை மதத்தலைவர்களை இயேசுக்கிறிஸ்துவை சிலுவையில் அறைய வழிநடத்தியது. (மத்தேயு 27:18; மாற்கு 15:10).

13. பொறாமை வேதாகமச் சத்தியங்களை புறக்கணிக்கச் செய்கிறதாய் இருக்கிறது. (அப்போஸ்தலர் 13:45; 17:5).

14. விசுவாசத்துரோகமாகிய கள்ள உபதேசம் பொறாமையை உற்பத்தி செய்கிறது. (1 தீமோத்தேயு 6:3,4).

பாடம் 19 -- அதிகாரங்கள் 45 - 49.

முகவுரை:

ஆதியாகமம் 45 ல் யோசேப்பின் சகோதரர்கள் சோதிக்கப்பட்டு அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்களை கற்றுக்கொண்டோம் என்ற நிச்சயத்திற்கு வந்தனர். இது அவர்களது சொந்த பாவத்தை அறிந்துகொள்ளவும், மற்றும் உண்மை மனதுடனும், நேர்மையாகவும் தேவனுக்கு முன்பாய் தங்களை தாழ்த்துவதை உள்ளடக்கியிருந்தது. வசனம் 1 ல் யோசேப்பு தனது சகோதர்களைத் தவிற மற்ற அனைவரையும் வெளியே அனுப்பி விட்டான், காரணம் அவன் அவர்களுடன் பேசி தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்த மனதாய் இருந்தான். அவனது சகோதரர்களது மீது அவன் வைத்திருந்த பாசம் இப்பொழுது வெளிப்பட்டது. சில ஜனங்கள் அன்பு கூறமுடியாதவர்களை தூரத்திலிருக்கும்போது மட்டுமே அன்பு கூறமுடியும், ஆனால் இங்கு அவனது சகோதரர்கள் தங்களை தேவனுக்கு முன்பாகத் தாழ்த்தி அவரிடம் திரும்பிய பொழுது, யோசேப்பு அவர்களுக்கு தன்னை வெளிப்படுத்தலானான்.

ஒப்புரவாகுதலும் மன்னிப்பும்:

தன்னை அடிமையாக விற்றுப்போட்ட மனிதனை யோசேப்புக்கு இப்பொழுது காட்டமுடியும் அவன் இப்பொழுது எகிப்திற்கு வந்து தன்முன்னிலையில் நிற்கிறான். யோசேப்பு அவர்களைப் பார்த்து பயப்படாது இருங்கள் மற்றும் உங்கள் மீது சினந்து கொள்ளாதிருங்கள், தேவன் என்னை உங்களுக்கு முன்னதாய் என்னை இங்கு அனுப்பி, உங்கள் அனைவரின் வாழ்க்கையையும் பாதுகாக்கும்படி செய்திருக்கிறார். அவன் முன்னதாகவே தேவன் இங்கு என்னை அனுப்பி முற்பிதாக்களை பசிகொடுமையிலிருந்து பாதுகாத்து இரட்சிக்கும்படி செய்திருக்கிறார் என்றான். அவன் தேவன் தனக்கு என்னவெல்லாம் செய்தார் என்பதைக் குறித்த பெரிய சாட்சி பட்டியலை வைத்து இருந்தான். அவன் அவர்களது பாவங்களை குறைக்கவில்லை. இதுவே ஒப்புரவாகுதலாய் இருந்தது.

நீங்கள் ஒப்புரவாக கடந்து வரும்போது, உங்களது பாவங்களை ஒரு போதும் குறைவாக்க வேண்டாம், அது உங்களுக்கு பெரிய முறிவை உண்டாக்கியதற்கு காரணமாய் அமைந்திருந்தது. அதோடு கூட

நேர்மையான முறையில் ஈடுபடுங்கள். தேவனுக்கு இதில் ஒரு திட்டம் இருக்கிறது. ரோமர் 8:28.

யோசேப்பு அவர்களுக்கு ஒரு சிறிய உரை நிகழ்த்தியது இந்த வசனத்தின் முக்கியத்துவமாய் இருக்கிறது. இதே அடிப்படை கோட்பாடு நமக்கு சாபத்திலிருந்து தேவனது ஆசீவாதத்திற்குள் கொண்டு வர நமது வாழ்விலும் கொண்டுவர செயல்படுகிறதாய் இருக்கிறது. தேவன் தனது நோக்கத்தின் படியே கிரியை செய்துகொண்டு இருக்கிறார், நீங்கள் ஆசீவதிக்கப்படபோகிறீர்கள் இது யோசேப்பு சொல்வதாய் இருக்கிறது.

நீங்கள் சென்று விரைவாகத் தகப்பனை அழைத்துக் கொண்டு வாருங்கள், அனைவரும் கோசேன் என்கிற தேசத்தில் வாழவிருக்கிறீர்கள் அத்தேசம் யோசேப்பாகிய எனக்கு அருகில் உள்ள தேசமாயிருக்கிறபடியால் எனக்கும் நலம் உண்டாகும். பஞ்சம் தொடங்கி இரண்டு ஆண்டுகளே ஆகின்றன, இன்னும் ஐந்து ஆண்டுகளுக்கு பஞ்சம் நீடிக்கும். யோசேப்பு தனக்குத்தானே திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டே இருந்தான் காரணம் அவனது சகோதரர்கள் மிகுந்த அதிர்ச்சிக் குள்ளாகியிருந்தனர். அவர்கள் கடந்தகாலத்தில் சொன்ன அனைத்துப் பொய்களையும் சிந்தித்துக்கொண்டிருந்தனர். தங்கள் தகப்பனாகிய யாக்கோபு, யோசேப்பு மரித்துவிட்டதாய் எண்ணிக்கொண்டிருக்கிறாரே என சிந்திக்கலாயினர். பாவம் இன்னொரு பாவத்தைப் பிறப்பிக்கிறதாய் இருக்கிறது. இந்த சகோதர்கள் பொய்யிக்கு பின் இருபது ஆண்டுகாலங்கள் வாழ்ந்து இருக்கின்றனர். ஒட்டகப்பயணத்தில் செல்லும் சகோதரர்கள் தனது தகப்பனிடம் கானானுகுச் சென்று எப்படி நிகழ்ந்ததை எப்படியெல்லாம் சொல்லலாம் என அதிகமான சிந்தனையுடன் சென்றனர். யோசேப்பும் பென்யமீனும் சேர்ந்து அழுதனர், அவர்கள் மறுபடியும் சந்தோஷத்துடன் ஒன்று சேர்ந்தனர். இவைகளுக்குப் பின் யோசேப்பு அவர்கள் அனைவரும் மன்னிக்கப்பட்டு விட்டனர் என அறிய மனதாயிருந்தான். இதைப்போன்ற அமைப்பையே யாக்கோபு நிரூபத்தில் காண்கிறோம். நீங்கள் தவறிழைக்கும் போது உங்களது முதிர்ச்சியை மன்னிப்பின் மூலம் காட்டுங்கள். கலாத்தியர் 6 ல் கூறப்பட்டுள்ள படி, நீங்கள் முதிர்ந்த விசுவாசிகள் என்று எண்ணுவீர்களானால், உங்களது முதிர்ச்சியை பாவத்தில் சிக்குண்டு தவிக்கிறவர்களிடத்தில் காட்டி, அவர்களுக்கு உதவி செய்யுங்கள். ஒருவேளை அவர்கள் இதை தனிப்பட்டவிதத்தில் எடுத்துக்கொண்டாலும், நீங்கள் இதை தனிப்பட்ட காரியம் என எடுத்துக்கொள்ள வேண்டாம், நீங்கள் அமைதியாய் இருங்கள்.

யோசேப்பு இப்பொழுது கர்த்தரைக் குறித்து பேசுகிறான், அவன் தான் கர்த்தருடன் சரியான உறவுடன் இருந்தான். அநேகத் திருச்சபைகளில், விசுவாசிகள் கர்த்தருடன் சரியான உறவு இல்லாதவர்களாய் இருக்கின்றனர், கர்த்தரை குறித்துப் பேசும்போது மிகவும் வெட்கத்துக் குள்ளாகிறார்கள். நாம் தேவன் நமது வாழ்வில் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பது குறித்து மகிழ்ச்சியுடன் காணப்பட வேண்டும், இதைக்குறித்து மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதல் வேண்டும்.

சீர்திருத்த சபைகளில் ஊழியர்கள் மறுபடி பிறவாத விசுவாசிகளாய் இருப்பதினிமித்தம் சபை மரித்துப் போகிறதாய் இருக்கிறது.

பார்வோன் யோசேப்புக்கு குடும்பத்தினர் கிடைத்துவிட்டனர் என்று அறிந்த போது மகிழ்ச்சியுற்றான். அவன் அவர்களுக்கு மிகச்சிறப்பான தேசத்தை எகிப்தில் தருவதாய் வாக்களித்து உறுதி செய்தான். அவர்கள் இளவரசர்களாய் எகிப்தில் இருந்து வாசம் செய்யட்டும் என உறுதியாய் கூறினான். உனது குடும்பத்தினர் அனைத்தையும் கொண்டு வந்து இங்கு வாசம் செய்யட்டும், எதையாவது அவர்கள் விட்டு வர நேர்ந்தால் அவைகளையும் கொண்டுவர தான் ஏற்பாடு செய்வதாய் உறுதியளித்தான். இப்படிப்பட்ட வாக்குறுதிகளை அளித்து யோசேப்பின் குடும்பத்தினரை எகிப்து தேசத்துக்கு வரவேற்றான். அவர்கள் ஒட்டகங்களுடனும், சரக்குகளை ஏற்றிவர சரக்கு வண்டிகளுடனும், வழியில் அவர்களுக்கு தேவைப்படும் அனைத்து காரியங்களையும் கொடுத்தனுப்பினான்.

அவர்களுக்கு மாற்று வஸ்திரத்தை கொடுத்தான். பண்டைய நாட்களில் வஸ்திரங்கள் மிகுந்த விலையுள்ளதாயும் ஒரு வஸ்திரம் வாங்க அவர்கள் அநேக மாத சம்பளத்தை ஒதுக்க வேண்டியிருந்தது. பென்யமீனுக்கு ஐந்து மாற்று வஸ்திரங்களும் மற்றும் 300 வெள்ளிப்பணமும் கொடுக்கப்பட்டது. இது மற்ற சகோதரர்களுக்கு பென்யமீன் மீது பொறாமை படுகிறார்களா என்பது குறித்து சோதிக்கப்படுகிறதற்காய் இருந்தது. யோசேப்பு மிகத்திரளான சரக்குகளை அவர்களுடன் கானானுக்கு அனுப்பி வைத்தான், பத்துக்கழுதைகள் சுமக்கத்தக்க தானியத்தையும் உலர்ந்த இறைச்சியையும் கொடுத்தனுப்பினான். அவன் அவர்களுக்கு ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளக் கூடாது என சொல்லி அனுப்பினான். அவர்கள் ஒருவார பிரயாணத்திற்கு பின்னர் யாக்கோபிடம் திரும்பி வந்தனர். ஒருவரோடு ஒருவர் தர்க்கிக்கவோ, ஒருவர் மீது ஒருவர் பொறாமையோ கொள்ளக்கூடாது என சொல்லி அனுப்பினான்.

உங்கள் பாவத்தை அறிக்கை செய்வதன் மூலம் தேவனுடன் உறவுகொள்கிறவர்களாய் இருக்கிறீர்கள். 1 யோவான் 1:9. உங்கள் சகோதரருக்கு விரோதமாய் தவறிழைத்து இருப்பீர்களானால் அதை சரிசெய்து கொள்ளுங்கள். இந்த மனிதர்கள் இந்த ஏறாளமான பொருட்களுடன் தங்களது தகப்பனை சந்திக்க செல்கிறார்கள். பாவத்தை அறிக்கை செய்வது திரும்ப பாவத்தைச் செய்ய அனுமதிபத்திரம் போன்றதன்று. அவர்கள் வீடு வந்து சேர்ந்து, யோசேப்பு உயிரோடிருக்கிறான் என்று யாக்கோபிடம் கூறிய போது அவன் அதை நம்ப மறுத்தான். அவன் இதுவரை பொய்யை நம்பிவந்தான், அவர்கள் எல்லாவற்றையும் விவரமாய் சொன்ன போது நம்பிக்கை அவனுக்குள் வர ஆரம்பித்தது. இதினிமித்தம் தான் மரிக்கிறதற்கு முன்னர் யோசேப்பை எப்படியாகிலும் பார்த்துவிட வேண்டும் என ஆர்வம் கொண்டான். அவன் இன்னும் மன அழுத்தத்திற்குள்ளானான், அவ்வாறு மன அழுத்தத்திற்கு காரணம் அவன் அவைகளை தனக்குத் தானே வரவழைத்துக் கொண்டதாய் இருந்தது.

யாக்கோபு ஆவிக்குரிய நிலையில் திரும்ப உற்சாகம் பெறுதல்:

யாக்கோபு ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறியதைக் காட்டிலும் பின்னடைந்து தோல்வியுற்றதே அதிகமாய் இருக்கிறது, ஆனால் இப்போது அனைத்தும் அவனுக்கு திரும்ப கிடைத்தது. வசனம் 27ல் யாக்கோபு என அழைக்கப்பட்டவன், இதற்குப் பின் இஸ்ரவேல் என அழைக்கப்படுகிறான் இதன் பொருள் தேவனுடைய இளவரசன் என்பதாகும். அவன் தேவனுக்கு பலிகளை செலுத்தினான். இதற்கு முன் அவனது குமாரரை எகிப்திற்கு அனுப்ப தாமதித்துக் கொண்டு இருந்தான், இப்பொழுது ஐக்கியத்திற்கு திரும்பவந்த படியால், சரியான பாதையில் திரும்ப பயணத்தை துவங்க ஆயத்தமானான். நீங்கள் கர்த்தருடன் உள்ள ஐக்கியத்திற்கு புறம்பே இருந்த போது, உங்கள் வாழ்க்கை துயரம் நிறைந்ததாய் இருந்தது. எப்படியிருப்பினும் யாக்கோபின் அந்திய காலம் தனது பேரப்பிள்ளைகளுடன் மகிழ்ச்சி ததும்பும் ஆண்டுகளாய் கழிந்தது, தனது பிள்ளைகளுக்காய் துக்கம் கொண்டாடிய வருடங்கள் சென்று மறைந்தது. அவன் ஒரு முன்மாதிரியற்ற தகப்பனாய் இருந்தான், அதற்கான பிரதிபலன்களை அறுவடை செய்தான்.

தேவன் யாக்கோபிற்கு, அவன் மரிக்கும் போது, யோசேப்பு தனது கரத்தினால் அவனது கண்களை மூடுவான் என்றார், இது மூத்த குமாரனின் கடமையாய் கடமையாய் இருந்தது. இது தேவனது வழியில் யாக்கோபுக்கு கூறுவதாய் இருந்தது, இது அவனுக்கு மரண கிருபயாய் அளிக்கப்பட்டது. ஒரு வேளை உங்களது வாழ்வானது மகிழ்ச்சி தராத வாழ்வாய் இருந்திருக்கலாம் ஆனால் மரிக்கும்போது, உங்கள் மரணம் உங்களுக்கு மகிழ்ச்சி தருவதாய் அமையட்டும். கிறிஸ்துவுக்குள் மரிப்பது என்பதை நினைக்கும் போது அது மிகவும் அருமையான ஒன்றாய் இருக்கிறது.

பிள்ளைகள் முக்கியம் வாய்ந்த தேசங்களாய் உருவாதல்:

எழுபது பேர் எகிப்திற்குள் கடந்து சென்றனர். யாத்திராகமக் காலத்தில் இந்த ஜனங்கள் 30 இலட்சத்திற்கும் அதிகமான ஒரு தேசமாய் வளர்ந்தனர். யாக்கோபும் அவனது குடும்பமும் பார்வோனுக்கு அறிமுகம் செய்யப்பட்டனர். எகிப்தியர்களுக்கு மேய்ப்பர்களைக் கண்டால் பிடிக்காது, அவர்கள் மிகவும் சுத்தமானவர்கள், அவர்களுக்கு ஆடுகள் அல்லது செம்மறி ஆடுகள் இவற்றின் வாசனை பிடிக்காது. ஜனங்கள் ஆடுகள் செம்மறி ஆடுகள் இவற்றுடன் தங்களது நேரம் செலவிடும் போது அவர்கள் மீது ஆடுகளின் வாசனை வீசும். பார்வோன் யாக்கோபின் வயதை விசாரித்தான் யாக்கோபு தனக்கு 130 ஆண்டுகள் ஆனது என மறு உத்திரவு கொடுத்தான். ஆவிக்குரிய நிலையில் யாக்கோபு திரும்ப வாலவயதுக்குள்ளானவனாய் இருந்தான். ராம்சேஸ் என்றப் பட்டணத்திற்கு அருகாமையில் அவர்கள் தங்கி தாபரிக்க இடம் ஒதுக்கப்பட்டது. யோசேப்பு எகிப்தை தேசியமயமாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தான். பஞ்சத்தினால் யாராவது பாதிப்புக்குள்ளாகி தங்களிடம் பணம் இல்லை என வருவார்கள் எனில் அவர்களிடம் அவர்களது பெயரில் உள்ள நிலத்தை பார்வோனின் பெயருக்கு மாற்றி எழுதி வாங்கினான், இவ்விதமாய் எகிப்து பார்வோனின்

ஆதிக்கத்திற்குள் கடந்து வருகிறதாய் மாறியது. இது எதிர்காலத்தில் எகிப்திய பெருமைக்குரிய அஸ்திபாரத்தை அமைக்குமாறு செய்தது.

அநேக ஜனங்கள் கூறுவதுண்டு தேசியமயமாக்குதல் கெட்டதாய் இருக்கிறது என்று, இங்கு நாம் பிரசித்தி பெற்ற ஒரு விசுவாசி இதைச் செய்கிறதை நாம் பார்க்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் வேதத்தைப் புறக்கணிக்கும்படியான வியாபாரக்கருத்தை உருவாக்குகிற விஷத்தில் கவனமாய் இருத்தல் வேண்டும். இதன் மூலம் யோசேப்பு எகிப்தை பஞ்சத்தின் நடுவே, உலகிலேயே மிகச் செழிப்புள்ள நாடாக மாற்றினான்.

நல் அடக்கம்:

ஆதியாகமத்தின் இறுதிபாகத்தில் யாக்கோபின் மரணத்தை நாம் காண்கிறோம். 49 ம் அதிகாரத்தில் யாக்கோபு தன்னை அடக்கம் செய்யுமிடத்தை குறிப்பிடுகிறதை பார்க்கிறோம், மட்டுமல்லாது எதிர்கால கோத்திரங்களை குறித்த பெரிய தீர்க்கதரிசனத்தையும் கூறுவதைப் பார்க்கிறோம். நாம் ஒரு அதிகாரம் முழுமையும் தீர்க்கதரிசன காரியங்களை பார்க்கிறோம்.

நாம் இங்கு அடக்கம் செய்யப்படும் இடத்தின் முக்கியவத்துவத்தை காண்கிறவர்களாய் இருக்கிறோம். யாக்கோபு தனது தகப்பன் மற்றும் தனது தாத்தா இவர்களது கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டு உயிர்த்தெழுதலில் அவர்களுடன் காணப்பட விரும்பினார். நீங்கள் மர்த்தோரிலிருந்து உயிர்த்தெழும்போது, நீங்கள் உங்கள் குடும்பத்தினருடன் காணப்படுவீர்கள். பார்வோன் தனது சேனைகளை அனுப்பி சடலத்தை அடக்கம் செய்யுமாறு பணித்தான். யோசேப்பு தனது தகப்பனது கண்களை மூடினான், மற்றும் அவனது சரீரத்திற்கு சுகந்த வர்க்கமிட்டு 40 நாட்களளவும் முழு எகிப்தும் அவனுக்காய் துக்கம் கொண்டாடி புலம்பியது.

எகிப்தில் உள்ள ஒவ்வொருவரும் அவன் என்னவிசுவாசித்தான் என்பதைக்குறித்த நற்சாட்சியை அளிக்கிறவர்களாய் இருந்தனர். அவன் எகிப்தில் இராஜாக்கள் அடக்கம் செய்யப்படும் சமவெளியில் ராஜரீக அடக்கம் செய்யப்படிருக்கலாம் ஆனால் தான் வாக்குத்தத்த தேசமாகிய தனது முற்பிதாக்களின் தேசத்தில் அடக்கம் செய்யப்படுவதை விரும்பி உயிர்த்தெழுதலில் நம்பிக்கையுள்ளவனாய் இருந்தான். ஒவ்வொரு அடக்கமும் விசுவாசிக்கு உயிர்த்தெழுதல் உண்டென்கிற உண்மையை சாட்சி பகருவதாய் இருக்க வேண்டும்.

யாக்கோபின் மரணத்திற்கு பின் அவனது குமாரர்கள், யோசேப்பு தங்களுக்கு கடினமான நேரத்தை அளிப்பான் எனக்கருதி, அவனுக்கு யாக்கோபு மரிக்கு முன்னர் யோசேப்பு தங்களது மீறுதல்களை மனப்பூர்வமாய் மன்னித்தருளும்படி கேட்டுக்கொண்டார் எனக் கூறச்சொன்னார் என சொல்லியனுப்பினார்கள். இதைக் கேட்ட பொழுது யோசேப்பு அழுதான், அவனது சகோதரர்கள் மறுபடியும் அவனது அடிமை

என்று சொன்னது அவனுக்கு விசனமாய் இருந்தது, அவன் அவர்களுக்கு மறு மொழியாக அவன் அவர்களையும் அவர்களது குழந்தைகளையும் காப்பாற்றுவேன், தாங்குவேன் என்றான். ஜனங்கள் தொடர்ந்து மனஸ்தாபத்தை உங்கள் வாழ்வில் வாழ்வில் காட்டிக்கொண்டு இருப்பார்களானால் உங்கள் வாழ்வில் தொடர்ந்து அவர்களுக்கு கிருபைய காண்பியுங்கள்.

யோசேப்பின் மரணம்:

யோசேப்பு 110 ஆண்டுகள் வாழ்ந்து, அவனது குமாரர்களின் மூன்றாம் தலைமுறையை கண்டான். யோசேப்பு மரிக்கும்போது யூதர்களை நோக்கி, தேவன் உங்களை பாதுகாத்து இந்த தேசத்திலிருந்து வாக்குத்தத்த தேசத்திற்கு கொண்டு செல்வார். அவ்வாறு நீங்கள் செல்லும் போது என் எலும்புகளை உங்களுடன் எடுத்துச்செல்ல வேண்டும் எனக் கேட்டுக்கொண்டான். அவன் மரித்த பின்னர் அவனுக்கு சுகந்த வர்க்கமிட்டு ஒரு பெட்டியில் அவனை எகிப்தில் வைத்தார்கள்.

ஆதியாகமம் பூரணமான மனிதனுடன் ஏதேனில் ஆரம்பித்து, எகிப்தில் ஒரு பெட்டியில் வைக்கப்பட்ட ஒரு சடலத்துடன் முடிவடைகிறது, ஆனால் இந்த சவப்பெட்டி நம்பிக்கையின் பொருளாய் இருக்கிறது. இது யூதர்களுக்கு ஒரு வேதாகமமாய் மாறியது அநேக சந்ததிகளுக்குப் பின்னர் யூதர்கள் அந்த சவப்பெட்டிக்கு முன்னர் வரும்போது, தேவன் நம்மை எகிப்திற்குள் கொண்டுவந்தார், அவரே நம்மை இங்கிருந்து வாக்குத்தத்த தேசத்திற்கு திரும்ப கொண்டு செல்வார் என்றனர். அந்த சவப்பெட்டியானது தேவன் நம்மை சந்திப்பார் என்பதை பிரதிபலிக்கிறதாய் இருந்தது, நாம் இங்கே எகிப்தில் காலாகாலமாய் இருக்கப்போவதில்லை என்பதை சுட்டிக்காட்டுகிறதாய் இருந்தது. தேவன் நம்மை மிகக் கடினமான சூழலில் இருக்கும் போது மறந்து விடுகிறவர் அல்லர். அவருடன் ஐக்கியத்தில் நிலைத்து இருக்கும் போது, அவர் நாம் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு அவர் கொண்டு செல்ல விருப்பமுள்ளவராய் இருக்கிறார், மோசே எகிப்தை விட்டு சேனையை வழிநடத்திக்கொண்டு யோசேப்பின் எலும்புகளை சுமந்து கொண்டு செல்லும் போது, அது அவனுக்கு தேவன் எதையாகிலும் சொன்னால் அதற்கு பொருள் உண்டு என்பதை நினைவுபடுத்துகிறதாய் இருந்தது. யோசேப்பு தான் உயிர்த்தெழுவதற்கு கானானுக்குள் கொண்டு செல்லப்படுவேன் என்பதை விசுவாசித்தான். தேவன் எதைச் சொல்லுகிறாரோ அதை அவர் செய்வார்.

உபதேசங்கள்:

மன்னிப்பு

1. கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் மன்னிப்பு உண்டாயிருக்கிறது. (மத்தேயு26:28, வெளிப்படுத்தல்1 :5)

2. கிறிஸ்துவில் விசுவாசம் வைப்போர் அனைவருக்கும் தெய்வீக மன்னிப்பு உண்டாயிருக்கிறது. (அப்போஸ்தலர்10:43, அப்போஸ்தலர் 16:31).

3. கிறிஸ்துவினால் சிலுவையில் பாவத்திற்கான கிரயம் செலுத்தப்பட்டது. (எபிரெயர்9:22, 2 கொரிந்தியர்5:21).

4. விசுவாசி பாவம் செய்யும்போது அவர் தேவனுடன் கொள்ளும் உறவில் பிளவு ஏற்படுகிறது. தேவன் இப்படிப்பட்ட பாவங்களை அறிக்கைசெய்யும்போது அப்பாவங்களையும், அவர் வாழ்வில் மறைந்துள்ள அறியாதப் பாவங்களையும் மன்னித்து, கழுவி சுத்திகரிக்கிறார். (1 யோவான் 1: 9).

5. இயேசுக்கிறிஸ்து நமது கிருபாதாரபலியாய் இருக்கிறார். (1 யோவான் 2:1,2)

6. மனுஷீக நிலையில் மன்னிப்பது குறித்து, மற்றவர்களை நாம் மன்னிக்கும்போது தேவன் நம்மை மன்னித்ததைப்போல மன்னிக்கவேண்டும் என கூறப்பட்டுள்ளது. (எபேசியர்4:32). இது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படும் பொழுது மட்டுமே நிறைவேற்றபட முடியும். (எபேசியர்5:18, கலாத்தியர்5:22,23).

ஒப்புரவாகுதல்

1. ஒப்புரவாகுதல் தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள தடைச்சுவர் அகற்றப்படுதல் ஆகும் அல்லது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே சமாதானமாய் இருத்தல். மீட்பு என்பது பாவத்துடன் சம்பந்தப்பட்டது, கருணை அல்லது தயைபெறுதல் தேவனுடன் சம்பந்தப்பட்டது, ஒப்புரவாகுதல் மனிதனுடன் சம்பந்தப்பட்டது.. (2 கொரிந்தியர் 5:18எபேசியர் 2:16, கொலோசியர் 1:20, 21).

2. ஒப்புரவாகுதல் மற்றும் இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம்:

இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம், சிலுவையின் மீது கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியை மற்றும் ஒப்புரவாக்குதலின் அடிப்படையில் ஒப்புமை உள்ளதாய் இருக்கிறது.. (கொலோசெயர்1:20).

ஒப்புரவாக்குதலுடன் சிலுவைக் கிரியைகள் சம்பந்தப்பட்டுள்ளது. (எபேசியர் 2:16).

3. ஒப்புரவாகுதலும் மனுக்குலமும்: மனுக்குலம் தேவனுக்கு விரோதிகளாய் கருதப்படுகின்றனர், அவர்கள் தேவனுடன் ஒப்புரவாக வேண்டும். (ரோமர்5:10, கொலோசெயர் 1:2 1).

4. சமாதானம், ஒப்புரவாகுதலின் ஒப்புமையாய் இருக்கிறது. ஒப்புரவாக்குதல் மனிதனை தேவனுக்கு விரோதியாய் கண்டுகொள்கிறது, ஆனால் சிலுவையினால் இரட்சிக்கும் கிறிஸ்துவின் கிரியை தேவனுக்கும்

மனிதனுக்குமிடையே சமாதானத்தைக் கொடுக்கிறது. (எபேசியர்2:14 cf. 2:16 cf. கொலோசெயர் 1:20).

5. ஒப்புரவாகுதல், லேவியரின் பலி முறைகளில் விவரிக்கப்படுகிறது: லேவியராகமம் 3 ம் அதிகாரத்தின் சமாதான பலி கிறிஸ்து, தேவனுக்கும்; மனிதனுக்குமிடையே உள்ள தடைச்சுவரை அகற்றுவதை விவரிக்கிறது. (லேவிரராகமம்7:11-38, 8:15).

6. சபை யுகத்தி,ல் வாழும் விசுவாசிக்கு ஒப்புரவாகுதல் பொருந்தும் விதம்: கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் இப்பூமியில் அவரின் ஸ்தானாபதிகளாய் இருக்கிறார்கள். இதினிமித்தம் அவர் சரீரத்தின் அங்கங்கள் ஒவ்வொருவரும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.. (2 கொரிந்தியர் 5:18-20).

7. ஒப்புரவாக்குதலைக் குறித்த தீர்க்கதரிசனம். (ஏசாயா57:19).

8. ஒப்புரவாக்குதலின் வழிமுறைகள்: தடைக:ள் அகற்றப்படுவது:

வரையறையற்ற பிராயசித்தத்தின் மூலம் பாவம் அகற்றப்பட்டது. (2 கொரிந்தியர்5:14, 15, 18, 1 தீமோத்தேயு2:6, 4:10, தீத்து 2:11, எபிரெயர்2:9, 1 யோவான் 2:2).

பாவத்திற்கான தண்டனை, தண்டணைக் கிரயம் மூலம் அகற்றப்பட்டது (சங்கீதம்22:1-6, கொலோசெயர் 2:14).

சரீரப்பிரகாரமான பிறப்பினால் உண்டான பிரச்சனை மறுபடி பிறத்தல் மூலம் அகற்றப்பட்டது. . (யோவான் 3:1-18, தீத்து 3:5, 1 பேதுரு1:23).

நியாயப்பிரமாணத்தின் நீதி கிறிஸ்து குற்றம் சுமந்ததின் மூலம் அகற்றப்பட்டது (ரோமர் 3:22, 9:30, 10:10, 2 கொரிந்தியர் 5:21, பிலிப்பியர்3:9, எபிரெயர்10:14) மற்றும் நீதிக்குட்படுத்துதல் (ரோமர் 4:1-5, 4:25, 5:1, 8:29, 30, கலாத்தியர்2:16, தீத்து 3:7).

9. தேவனுடைய பூரண குணாதிசயங்களால் உண்டாகும் தடை தயை அல்லது கருணைப் பெறுவதன் மூலம் அகற்றப்பட்டது. (ரோமர் 3:22-26, 1 யோவான் 2:1, 2).

10. ஆதாமில் உண்டான பிரச்சனைகள் பரிசுத்தமாக்கப்படுவதினால் அகற்றப்பட்டது. (1 கொரிந்தியர் 15:22, 2கொரிந்தியர் 5:17, எபேசியர் 1:3-6).

இஸ்ரவேலின் கோத்திரங்களைக் குறித்த தீர்க்கதரிசனங்கள்

யாக்கோபு தனது வாழ்க்கையின் இறுதிகாலத்தில், தனது பனிரெண்டு குமாரர்களைக் குறித்த தீர்க்கதரிசன ஆசீர்வாதங்களை அளித்தான். இந்த

தீர்க்கதரிசன ஆசீர்வாதங்கள் ஆதியாகமம் 49 ல் கொடுக்கப்பட்டுள்ளன, இதன் காலம் சுமார் 1800 கி.மு. ஆகும்.

ரூபன் - ஆதியாகமம் 49:3,4.

1. யாக்கோபு ரூபனைத் தனது மேன்மையில் பிரதானமும், வல்லமையில் விஷேசமுமானவன் என அழைக்கிறான் (ஆதியாகமம் 29:31,32).

2. முதற்பலனாய் பிறந்தவன் தலைவனும், ஆசாரியனும் மற்றும் இருமடங்கு ஆசீவாதத்தை பெற்றுக்கொள்கிறவனுமாய் இருந்தான் (உபாகம் 21:17).

3. ரூபன் தனது தலைமைத்துவத்தை யூதாவிற்கும், தனது ஆசாரியத்துவத்தை லேவிக்கும், தனது இருமடங்கு ஆசீர்வாதத்தை யோசேப்பிற்கும் அளித்து விட்டான்.

4. இவன் தண்ணீரைப்போல தளம்பினவன் ஆனபடியால், இவன் அதிகாரத்துவத்தை அடைய முடியாது காரணம், ஆதியாகமம் 35:32ல் இவன் செய்த பாவம் ஆகும். ,];uNty; me;jj; Njrj;jpy; jq;fpf; FbapUf;Fk;NghJ> &gd; Ngha;> jd; jfg;gDila kWkidahl;bahfpa gpy;fhNshNl radpj;jhd;. mij ,];uNty; Nfs;tpg;gl;lhd;.

5. ரூபனின் குணாதிசயம் நிலையற்றதாய் இருந்தபடியால், அவனது சந்ததியினரும் அப்படியே இருந்தனர்.

6. தாத்தான், அபிராம் போன்றவர்கள் ரூபனின் சந்ததியாய் இருந்து மோசேயிக்கு விரோதமாய் கோராவுடன் சேர்ந்துகொண்டு கலகம் செய்தனர். (எண்ணாகமம் 16).

7. ரூபன் கோத்திரம் மூன்று கோத்திரங்களில் ஒன்றாயிருந்து யோர்தானுக்கு கிழக்கே தங்கள் சந்ததியினருக்கு தாபரிக்க இடம் வேண்டும் எனக்கேட்டு கொண்டவராய் இருக்கின்றனர். (எண்ணாகமம் 32).

8. இச்செயல்கள் ஏறத்தாள உள்நாட்டு யுத்தம் போன்ற விளைவை அளிக்கிறதாய் இருந்தது (யோசுவா 22).

9. ஒரு கோத்திரமாய் இருந்த ரூபனின் இருமனம் நியாதிபதிகள் 5 ன் குற்றமாய் விமர்சிக்கப்படுகிறது.

10. ரூபனியர்களின் எண்ணிக்கை எண்ணாகமம் 1:21 ல் 46,500 ஆக இருந்தது எண்ணாகமம் 26:7 ல் 43,730 ஆக குறைந்தது.

11. ரூபனுக்காய் மோசே ஜெபித்த ஆசீர்வாதத்தின் ஜெபம், அவர்கள் செழிக்கத்தக்கதாய் இருந்தது (உபாகமம் 33:6).

12. இருமனமுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை நிலையற்ற தன்மைக்கு காரணமாய் அமைகிறது. (யாக். 1:8).

சிமியோன் மற்றும் லேவி -- ஆதியாகமம் 49:5-7.

1. சிமியோன் என்னும் பதத்திற்குரிய எபிரெயச் சொல் 'கேட்டல்' அல்லது கேட்கப்படுதல்' (ஆதி. 29:33), லேவி என்பதன் பொருள் 'இணைக்கப்படுதல்' என்பதாகும் (ஆதி. 29:34).

2. இவ்விரு சகோதரர்களும் குறிப்பிடத்தக்க வகையில் கொடூரமானவர்கள்.

3. சிமியோனும் லேவியும் வஞ்சகத்தினிமித்தம் எண்ணிக்கையில் அதிகமான கானானியரை கொன்று குவித்தனர் ஆதி. 34.

4. யாக்கோபு தீர்க்கதரிசனமாய் உரைக்கையில், இவர்கள் இருவரும் இஸ்ரவேலில் இருந்து பிரிக்கப்பட்டு வாக்குத்தத்த தேசத்திற்கு புறம்பாக தனிப்பட்ட சுதந்தரத்தை பெறக்கடவர்கள் என்றான். யோசுவா 19:1-9 ல் அவர்களது சுதந்தர வீதம் அந்தப்பகுதியில் யூதாவிற்காக ஒதுக்கப்பட்டது.

5. இந்த பட்டணங்கள் இப்பொழுது நெகவ் என அறிப்படுகிறது, இப்பகுதி இன்றைய அளவில் வறண்டதும் மற்றும் தரிசு நிலங்களாகவும் காணப்படுகின்றன.

6. சிமியோனும் கூட எண்ணிக்கையில் குறைவுபட தொடங்கினான் எண்ணாகம 1:23ல் 59,300 எனவும் வானாந்திர பயண இறுதியில் இவனது எண்ணிக்கை 22,000 மாக குறைந்துக் காணப்படுகிறது எண்ணாகமம் 26:14.

7. எசேக்கியாவின் ஆழுகை காலத்தில் சிமியோனின் சந்ததியினர் ஏதோமுக்குள் குடிபெயர்ந்தனர் காரணம் அவர்கள் அமலேக்கியரை முறிடித்து வெற்றிபெற்று இருந்தனர். (1 நாளாக. 4:38-43).

8. யூதப்பாரம்பரிய கணக்கின் படி எல்லா ஏழ்மையான யூதர்கள் இந்த சந்ததியிலிருந்து வருகிறவர்களாய் இருந்தனர்.

9. எண்ணாகமம் 35:1-4 ல் கர்த்தர் கட்டளையிட்டு சொன்னது என்னவென்றால் தேசத்தை பங்கிட்டு அளிப்பதற்குப் பதிலாக பட்டணங்களை அவர்களுக்காய் கொடுக்க வேண்டும் என்றார். யோசுவா 21:4-7 ல் லேவியருக்கு 48 பட்டணங்கள் ஒதுக்கப்பட்டு எல்லாக் கோத்திரத்தாருக்குள்ளும் வாசம் பண்ணும்படி அவர்கள் பரவிச்செல்கிறவர்களாய் இருந்தனர்.

10. லேவியருக்கு கர்த்தரே அவர்கள் பங்கு வீதமும், சுதந்திரமுமாய் இருந்தனர். உபாகமம் 10:9.

11. இவர்கள் ஜனங்களால் ஆதரிக்கப்பட்டனர், இதினிமித்தம் இவர்கள் ஊழியத்திற்கென தங்களை அற்பணித்துக் கொண்டனர். (உபாகமம் 18:1-5).

12. மோசே லேவி கோத்திரத்தானாய் இருந்தான், ஆரோனும் லேவிகோத்திரத்தான், ஆரோனின் வம்சத்திலிருந்து லேவிய ஆசாரியர்கள் ஆசாரிய ஊழியம் செய்து வந்தனர். தேவன் அவர்களை உபாகமம் 33:8-11 ல் ஊரீம் தும்மீம் இவற்றை பயன்படுத்தும் தெய்வீக ஞானத்தினால் ஆசீர்வதித்தார்.

13. லேவியர்கள் நீதியினிமித்தம் வைராக்கியமுள்ளவர்களாய் இருந்தனர் (யாத்திராகமம் 32:28,29) மற்றும் இவர்கள் உடன்படிக்கைப் பெட்டியை சுமக்க ஆரம்பித்தனர் (உபாகமம் 10:8).

14. இன்றைய அளவில் கூட லேவியர்கள் மத சம்பந்தமான கூட்டங்களில் சிலாக்கியம் பெற்றவகளாய் இருக்கின்றனர்.

யூதா -- ஆதியாகமம் 49:8-12.

1. மற்றெல்லா கோத்திரங்களை விட இந்த கோத்திரத்திற்கு மட்டும் அதிகமான தீர்க்கதரிசன வார்த்தைகள் கூறப்பட்டுள்ளன.

2. யூதா என்பதன் பொருள் 'துதி' ஆகும் - (ஆதியாகமம் 29:35)

3. மோசேயும் யூதாவை ஆசீர்வதித்தார், யூதாவுக்கு தெய்வீகப்பாதுகாப்பை அருள கேட்டுக் கொண்டார்.

4. யூதாவின் தலைமைத்துவம் யோசேப்பை பாதுகாப்பதாய் இருந்தது (ஆதி. 37:26,27) இவன் குழுவாய் எகிப்து சென்ற போது, அவர்கள் சார்பில் இவனே பேசுகிறவனாய் இருந்தான். (ஆதி.44:14-34).

5. வனாந்திரத்தில் அணிவகுத்துச் செல்லும்போது யூதா கோத்திரமே முதலில் அணிவகுத்து சென்றது (எண்ணாகமம் 10:14).

6. வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்த போது இவர்களுக்கே தேசம் முதலில் பங்கிடப்பட்டது. (யோசுவா 15:1).

7. நாற்பது ஆண்டுகால வனாந்திர யாத்திரையின் இறுதிக்கட்டத்தில் எடுத்த ஜனத்தொகை அறிக்கையின் போது யூதா கோத்திரத்தின் எண்ணிக்கையே மிகப்பெரிய அளவில் இருந்தது.

8. யூதாவின் வெற்றிகொள்ளும் திறமை தாவீது இராஜாவில் காணப்பட்டது, இது இஸ்ரவேலில், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் வெற்றிக்கு அடுத்த நிலையில் இஸ்ரவேலின் வரலாறு காணாத அளவில் காணப்பட்டது.

9. சனகரிப் இஸ்ரவேலில் படையெடுத்து வந்த போது யூதா பாதுகாக்கப்பட்டது. இது இந்த கோத்திரத்தை குறித்த, மேசேயின் ஆசீர்வாதத்தை உறுதி செய்வதாய் இருந்தது.

10. இக்கோத்திரத்தின் இறுதி இராஜா, யூதா கோத்திரத்தின் பாலசிங்கமாகிய, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஆகும் (வெளி. 5:5).

11. கர்த்தரின் எதிர்பார்ப்பு ஒரு நாளில் இஸ்ரவேலின் இராஜாக்கள் இக்கோத்திரத்திலிருந்து தோன்றுவார்கள் என்பதாய் இருந்தது (உபாகமம் 17:14-20). இஸ்ரவேலில் முதல் அரசன் பென்யமீன் கோத்திரத்தானாகிய சவுல் ஆகும். (1 சாமுவேல் 9:1,2). அதன் பின்னர் யூதா கோத்திரத்தில் தாவீது இராஜரீக சந்ததியை தொடங்கி வைப்பவராய் இருந்தார், இந்த சந்ததியில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பிறந்தார். (மத்தேயு 1:6-17) and (லூக்கா 3:23-31).

12. சீலோவின் வருகையின் போது இதன் பொருள் 'இது யாருக்கு சொந்தம்' இது மேசியாவுக்குரிய பெயராய் இருக்கிறது, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இஸ்ரவேலின் மீது ஆழுகை செய்து தாவீதின் உடன்படிக்கையை உறுதிபடுத்துவார்.

13. சாலமோனுக்குப் பின் மற்ற 10 கோத்திரங்கள் யூதாவின் தலைமைத்துவத்திற்கு எதிராய் கலகம் செய்து பிரிந்து சென்ற போது, யூதா பென்யமீன் கோத்திரங்களின் ஒன்று சேர்ந்த ஆழுகை சில காலம் நீடித்தது, மற்ற 10 கோத்திரத்தாரும் அசீரியர்களின் படையெடுப்பால் கி.மு 712 ல் சிறைப்பட்டுப் போனார்கள்.

செபுலோன் - ஆதியாகமம் 49:13.

1. செபுலோன் என்பதன் பொருள் 'வாசம் செய்தல்'. இவன் லேயாளுடைய ஆறாவது குமாரன் - (ஆதியாகமம் 30:20).

2. செபுலோனைக் குறித்த யாக்கோபின் தீர்க்கதரிசனம் கப்பல் சம்பந்தமாய் இருந்தது, அக்கப்பல்கள் மூலம் வணிகம் செய்வதைப்பற்றியதாய் இருந்தது.

3. சமுத்திரம் என்ற வார்த்தைக்குப் பதிலாக எபிரெய பதத்தில் 'சமுத்திரங்கள்' என்ற வார்த்தை உபயோகப்படுத்தப்பட்டு இருப்பது நமது ஆர்வத்தைத் தூண்டுகிறதாய் இருக்கிறது. இது மத்தியத் தரைக்கடல் மற்றும் கலிலேயாக்கடல் போன்ற கடல்களை குறிப்பிடுகிறது.

4. உபாகமம் 33:18,19 ல் மோசே தீர்க்கதரிசனத்தை விரிவாக்கினார்.

5. செபுலோனுக்கு பங்கிடப்பட்ட இடமானது யோசுவா 19:10-16ல் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு பங்கிடப்பட்ட நிலப்பகுதி, யெஸ்ரயேலுக்கு மேற்கு எல்லைக்கு இறுதியில் இருந்தது, சீரியாவிலிருந்து எகிப்திற்குச் செல்லும் பெரும்பாதை இப்பகுதியில் அமைந்து இருந்தது. செபுலோனின் பெத்லகேம் என்னும் பட்டணம் இவர்களுக்காய் ஒதுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. (யோசுவா 19:!5).

6. இன்றைய அளவில் லெபனோனில் அமைந்துள்ள சீதோன் பட்டணமானது மிகப்பெரிய கானானிய பட்டணமாய் இருந்துவருகிறது. செபுலோன் கோத்திரத்திற்காய் ஒதுக்கப்பட்ட இடத்தில் ஆசேர் கோத்திரமானது சீதோனை தங்களுக்காய் வேறுபடுத்திக்கொண்டனர். (யோசுவா 19:24-31). அஸ்தரோத்துகள் கானானியரை அவர்களது கடற்கரைப் பகுதியிலிருந்து வெளியேற்ற முடியாது இருந்த்து. பிற்காலத்தில் செபுலோனியர்கள் இந்த சீதோன் பட்டணத்து எல்லைவரை நெருங்கிச் சென்று அதை ஆக்கிரமித்துக்கொண்டனர். இதனால் யாக்கோபின் தீர்க்கதரிசனம் நிறைவேறுகிறதாய் இருந்தது.

7. இந்த கோத்திரத்தில் குறிப்பிடத்தக்க நபர் ஏலோன் இவன் இஸ்ரவேலரை பத்து ஆண்டுகள் காலம் நியாயம் விசாரித்தான். (நியாதிபதிகள் 12:11,12).

8. செபுலோனியர்கள் வீரமிக்கவர்களாய் இருந்தனர் (1 நாளாகமம் 12:33) மற்றும் ரூபனியர்களைப் போல் அல்லாது இவர்கள் ஸ்திரமானவர்களாய் இருந்தனர்.

இசக்கார் - ஆதியாகமம் 49:14,15.

1. இசக்கார் லேயாளின் ஐந்தாவது குமாரன். இவனது பிறப்பின் போது லேயாள், தேவன் என் கூலியை எனக்கு அளித்தார் என்றாள். இசக்கார் என்றால் 'வாடகை அல்லது கூலி' எனப்பொருள்படும். (ஆதியாகமம் 30:17,18).

2. மோசேயின் ஆசீர்வாதத்தில் இசக்கார் 'உமது கூடாரத்தில்' எனக்கூறப்படுகிறார் (உபாகமம் 33:18). இது செபுலோனுக்கு சொல்லப்பட்டதற்கு எதிர் மறையாய் காணப்படுகிறது, இதேவசனத்தில் வெளியே செல் அல்லது வியாபாரத்துக்குச் செல் என்று கூறப்படுகிறது.

3. பண்டைய உலகில் கழுதை என அழைக்கப்படுவது வாகனத்தை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. கழுதை மேசியாவுடன் சம்பந்தப்பட்டதாயும் காணப்படுகிறது. (சகரியா 9:9).

4. இசக்காருக்கு கோத்திர பங்கீடு குறித்து யோசுவா 19:17-22 ல் கொடுக்கப்பட்டுள்ளது. யெஸ்ரயேல் பள்ளத்தாக்கில் வளப்பமுள்ள கிழக்குப் பகுதியானது ஒதுக்கப்பட்டது எனச் சுட்டிக்காட்டுகிறது. இந்த பள்ளத்தாக்கு - தாபோர் மற்றும் கில்போவா மலைகளுக்கு இடையிலான பள்ளத்தாக்காய் இருக்கிறது.

5. இவர்களில் ஒரு நபர் வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது அவரது பெயர் தோலா, இவன் இஸ்ரவேலை 23 ஆண்டுகள் நியாயம் விசாரித்தான். (நியாயாதிபதிகள் 10:1,2).

6. இசக்கார் யுத்தத்தில் வீர சாகசம் புரிபவர்களாய் இருந்தனர் (1 நாளாகமம் 7:1-5). அவர்கள் புத்தியுள்ளவர்களாய் இருந்தனர் (1 நாளாகமம் 12:32). இவர்கள் புத்தியுள்ளவர்களாய் இருந்தமையால் மற்றவர்களது பாரத்தை இவர்களால் சுமக்க முடிந்தது.

7. இசக்கார் கலாத்தியரில் உள்ள நபர்களுடன் ஒப்பிடப்படுகிறது கலாத்தியர் 6:2, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுமாக.

தாண் - ஆதியாகமம் 49"16-18.

1. தாண் என்பதன் பொருள் 'நியாத்தீர்ப்பு'. இப்பெயர் ராகேலால் கொடுக்கப்பட்டது, தனது வேலைக்காரியாகிய பில்காலை யாக்கோபுக்கு கொடுத்த போது அவள் யாக்கோபுக்கு பெற்றெடுத்த குமாரன் ஆகும் இவனது பிறப்பு குறித்த விவரம் ஆதியகமம் 30:5,6ல் கொடுக்கப்பட்டுள்ளது.

2. ராகேலினால் யாக்கோபுக்குக் கொடுக்கப்பட்ட வேலைக்காரி, அக்காலத்தின் பழக்கவழக்கமாய் இருந்தது என்பது ஹமுராபியின் சட்டம் உறுதிபடுத்துகிறதாய் இருக்கிறது.

3. இஸ்ரவேலில் தாணின் ஸ்தானம் மற்ற முற்பிதாக்களைப் போன்று முழு கோத்திரங்களாய் கருதப்பட்டது, வேலைக்காரிகளாகிய பில்காள், சில்பாள் இவர்களுக்கு பிறந்த பிள்ளைகளும் இவ்வாறே கருதப்படுகிறது. யாக்கோபு தாணைக்குறித்து கூறும்போது, மற்ற கோத்திரங்களைப்போல தாணும் இஸ்ரவேலில் அரசாளுவான் என்கிறான்.

4. தாண் கோத்திரத்தின் மிகப்பெரிய நியாதிபதி சிம்சோன் (நியாதிபதிகள் 13), இவன் தாண் வம்சத்தினரின் குணாதிசயத்தைப் போன்றே கீழ்ப்படியாமையைக் காட்டுகிறவனாய் இருக்கிறான்.

5. தாணுக்கு மத்தியத்தரைக்கடலின் தென் மேற்கு கரையோரப்பகுதியில் தேசம் பகுத்துக் கொடுக்கப்பட்டது (யோசுவா 19:40-48). இவர்கள் பெலிஸ்தியரால் நெருக்கப்படுகிற காலங்களில், சிம்சோன் தனது மிகப்பெரிய சக்தியை பயன்படுத்தி அவர்கள் படையெடுப்பிலிருந்து தாணைப் பாதுக்காக்க முடிந்தது.

6. தாண் வம்சத்தினர் வெளிப்படையாய் தங்களது காரியங்களை நிறைவேற்றிக்கொள்வதைப் பார்க்கிலும், தந்திரமாய் தங்களது காரியங்களை நிறைவேற்றிக்கொண்டனர்.

7. யாக்கோபின் தீர்க்கதரிசனத்தில் தாண் சாத்தானின் தாக்கங்களுக்கு உட்பட்டு நடப்பான் எனக்காட்டுகிறது. லாகீசை முற்றுகையிட்டது இதற்கு உதாரணமாய் இருக்கிறது (நியாதிபதிகள் 18:1-31). தாண் சந்ததியினர் 600 யுத்த வீரர்களைக் கூட்டிக்கொண்டு துரோகியான லேவியனையும் அவனோடு வார்ப்பிக்க விக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு, லாகீசுக்குச் சென்று அதை வென்று அதற்கி தாண் எனப் பெயர்சூட்டினர். அவர்கள் அந்த விக்கிரகத்தை அங்கு ஸ்தாபித்து அதை நமஸ்கரித்து வந்தனர்.

8. யெரோபெயாம், சாலமோனின் குமாரனாகிய ரெகோபெயாமுக்கு விரோதமாய் கலகம் செய்த போது, விக்கிரக ஆராதணையை ஊக்குவித்து ஜனங்கள் தென்தேசத்திற்குச் செல்வதை தவிர்த்தான். (1 இராஜாக்கள் 12:28-30). யெரோபெயாம் இரண்டு பொன் கன்றுக்குட்டிகளை வார்ப்பித்து, அவைகளில் ஒன்றை பெத்தேலிலும், மற்றொன்றை தாணிலும் வைத்தான். ஜனங்கள் தாணுக்குச் சென்று அப்பொன்கன்றுக்குட்டியை வணங்கி வந்தனர்.

9. 2 இராஜாக்கள் 10:29 ல் இஸ்ரவேலில் எழுப்புதல் உண்டான போதும், விக்கிரக ஆராதணை தாணில் நிலைகொண்டிருந்தது.

10. தாணுக்கு மட்டும் இறுதியாய் வாக்குத்தத்த தேசத்தில் தாபரிக்கும் ஸ்தலம் பங்கிடப்பட்டது (யோசுவா 19:40-49).

11. வெளிப்படுத்தல் 7 ம் அதிகாரத்தில், உபத்திரவக்காலத்தில் 1,44,000 சாட்சிகளின் பட்டியலில் தாண் இடம் பெறவில்லை மாறாக யோசேப்பும் மனாசேயும் இரு மடங்கு ஆசீர்வாதத்தை யோசேப்பின் சார்பில் பெற்றுக்கொண்டனர்.

12. எப்படியிருப்பினும் தாண் ஆயர வருட அரசாட்சியில் கோத்திர சுதந்திர வீதத்தை பெற்றுக்கொள்வான் (எசேக்கியேல் 48:1,2).

காத் - ஆதியாகமம் 49:19.

1. காத் என்பதன் பொருள் 'போர் வீரன்'. லேயாலின் வேலைக்காரி காத்தைப் பெற்றபோது, லேயாள் பட்டாளமாகிறது / ஏராளமாகிறது என இப்பெயரைச் சூட்டினாள். (ஆதி. 30:11).

2. மோசே உபாகமம் 33:20,21ல் காத்தை ஆசீர்வதித்தான்.

3. காத்திற்கும் ரூபனுக்கும் மற்றும் ஒரு பகுதி மனாசேயுக்கும் யோர்தானுக்கு கிழக்கில் சுதந்தர வீதம் கொடுக்கப்பட்டது (யோசுவா 13:24-

28). இவர்கள் அந்நிய ஜாதிகளால் முக்கியமாக அம்மோனியர் மற்றும் மோவாபியரால் ஒடுக்கப்பட்டனர்.

4. காத் வம்சத்தினர் போர்வீரர்கள் என்கிற பெயரைச் சம்பாதித்தனர் (1 நாளாகமம் 5:18-20; 12:8).

5. மோசேயின் ஆசீர்வாதத்தில், காத் சிங்கத்தைப் போல் தங்கியிருந்து, புயத்தையும் உச்சந்தலையையும் பீறிப்போடுவான் என ஆசீர்வதித்தார்.

6. காத்தியரில் மிகவும் பிரபலமான நியாதிபதி யவீரு, இவன் இஸ்ரவேலரை 20 ஆண்டுகள் நியாயம் விசாரித்தான். (நியாதிபதிகள் 10:3-5).

7. விடாமுயற்சியினால் காத் கடைசியாய் மேற்கொண்டதைக் காண்கிறோம்.

ஆசேர் - ஆதியாகமம் 49:20.

1. ஆசேர் என்பதன் பொருள் 'மகிழ்ச்சி' என்பதாகும். ஆசேர் காத்தின் முழுமையான சகோதரன். ஆசேர் லேயாளுக்குப் பிறந்த போது நான் மகிழ்ச்சியடைகிறேன், குமாரத்திகள் என்னைப் பாக்கியவதி என்பார்கள் என்றாள். (ஆதியாகமம் 30:13).

2. உபாகமம் 33:24,25ல் மோசே ஆசேரை ஆசீர்வதித்தான்.

3. ஆசேர் செழிப்பு நிறைந்த நிலத்தின் விளைவால் ஆனந்தித்தான், பண்டைய உலகிற்கு சுவையான பதார்த்தங்களை விநியோகம் செய்தான்.

4. ஆசேரின் சந்ததியில் பிரபலமானவள் அன்னாள், தீர்க்கதரிசினி, இவள் இயேசு பாலகனை தேவாலயத்தில் கண்டு வாழ்த்தினாள். லூக்கா 2:36-38.

5. ஆசேர் கோத்திரம் 10 கோத்திரங்களில் ஒன்றாயிருந்து கி.மு 712ல் சிதறடிக்கப்பட்டிருந்தும், கர்த்தரின் முதல் வரவின் போது எருசலேமில் பிரதிநிதியாய் காணப்பட்ட சிலாக்கியத்தைப் பெற்று இருந்தது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

6. ஆதியாகமம் 49:20ல் கொழுமை என்கிறபதம், எண்ணெய் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும், உபாகமம் 33:24ல் எண்ணெய் என்பதற்குரிய ஆசீர்வாதம் நிறைவுள்ளதாய் காணப்படுகிறது. இந்த ஆசீர்வாதம் ஆசேருக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் சில எண்ணெய் ஆய்வுகள் நடத்த அடிப்படையாய் இருந்தது.

7. ஆசேர் தன் சகோதரர்களுடன் நல் ஆசிகளைப் பகிர்ந்துகொள்கிறவனாய் இருந்தான். கிறிஸ்தவர்களாகிய நாமும் இராஜரீக உணவுபதார்த்தங்களை

தயாரித்து, அதாவது தெய்வீக நன்மைகளை மற்றவிசுவாசிகளுடன் பகிர்ந்து கொள்ள மனதுடையவர்களாய் இருத்தல் வேண்டும்ம். எண்ணெய் என்பது பரிசுத்த ஆவியானவரை வேதாகமம் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

நப்தலி - ஆதியாகமம் 49:21.

1. நப்தலி தாணின் முழு சகோதரனாய் இருக்கிறான். இவனது பெயரின் பொருள் 'போராட்டம்' என்பதாகும். ராகேல் இதை ஆதியாகமம் 30:8ல் குறிப்பிடுகிறாள்.

2. மோசே உபாகமம் 33:23ல் தனது ஆசீர்வாதத்தை இவனுக்கு கூறியுள்ளார்.

3. இதன் பிண்ணனியில் உள்ளது பெண் மான் ஆகும் (சங். 42:1, ஏசாயா 35:6).

4. மான்கள் விரைவாய் ஓடுவதும் மற்றும் சுறுசுறுப்பானதும் ஆகும். யாக்கோபிற்கு விரைவாய் யோசேப்பு இன்னும் உயிரோடிக்கிறான் என்கிற செய்தியை எடுத்துச் சென்றவன் ஆகும்.

5. பாராக் தொபோராள் இவர்களது பிரபலமான கதைகளை பார்க்கிறோம் இதில் பாராக், நப்தலி கோத்திரத்தைச் சார்ந்தவன் (நியாதிபதிகள் 4:6) இவனது கோத்திரம் வீரதீர செயல்களுக்காய் நியாதிபதிகள் 5 ல் உள்ள பாட்டில் தனித்தன்மை வாய்ந்ததாய் காணப்படுகிறது.

6. இயேசுக்கிறிஸ்து நப்தலியில் உள்ள கலிலேயாவில் தனது ஊழியத்தை துவங்கினார், மற்றும் தனது சீஷர்களை அந்தப்பிராந்தியங்களில் இருந்து சேவைக்கு அழைத்தார். (மத். 4:13-15). அவரது சீஷர்களில் அநேகர் இப்பிராந்தியத்திலிருந்து வந்தவர்களாய் இருந்தனர்.

7. யாக்கோபு தனது தீர்க்கதரிசனத்தில் "இன்பமான வசனங்களை இவன் வசனிப்பான்" என்றான். இது சுவிஷேசம் நப்தலியிருந்து அறிவிக்கப்பட்ட உண்மையை புலப்படுத்துகிறது.

8. சுவிஷேசத்தைக் கொண்டு வருதல் ஏசாயா 52:7 ல் அளிக்கப்பட்டுள்ளது.

9. இது ரோமர் 10:14,15 ல் பவுலால் திரும்ப எதிரொலிக்கப்பட்டது.

யோசேப்பு - ஆதியாகமம் 49:22-26.

1. யோசேப்பு, ராகேலுக்குப் பிறந்த முதல் குமாரன். இவளுக்காய் யாக்கோபு முழு மனதுடன் வேலைசெய்து, திருமணத்தின் போது லேயாள் மனைவியாகக் கொடுக்கப்பட்டாள்.

2. ஆதியாகமம் 30:1ல் ராகேல் கர்த்தரிடம் கெஞ்சி மன்றாடினாள், எனக்குப் பிள்ளைகளைத்தாரும் இல்லையேல் நான் சாகிறேன் என்றாள்.

3. யோசேப்பு என்பதன் பொருள் 'இன்னும் தருவார்' என்பதாகும், இது இன்னும் பிள்ளைகளைத் தருவார் என்பதற்கான வேண்டுதல் ஆகும். ராகேல் தன் மகனுக்கு யோசேப்பு என்று பெயர் சூட்டி, இன்னும் ஒரு குமாரனையும் தேவன் கூட்டித்தருவார் என்றாள். (ஆதி. 30:24).

4. மோசே யோசேப்பை ஆசீர்வதித்தார் உபாகமம் 33:13-17.

5. யாக்கோபும் மோசேயும் யோசேப்பு கனிகொடுப்பான் என வாக்குத்தத்தம் செய்தனர். இருமடங்கு ஆசீர்வாதம் / சேஷ்டபுத்திரபாகம் ரூபனுக்கு சேர வேண்டியது, இது யோசேப்புக்கு அளிக்கப்பட்டது, யோசேப்பின் குமாரர்களாகிய எப்ராயீம் மற்றும் மனாசே இவர்கள் இருவரையும் யாக்கோபு ஆசீர்வதித்து இஸ்ரவேலின் காணியாட்சிக்குள் இரு கோத்திரங்களாய் உட்படுத்தினான். ஆதியாகமம் 48:1-22.

6. யாக்கோபு, யோசேப்பு பல சோதனைகளைப் பெற்றான் எனக்காட்டுகிறார், இவற்றை யோசேப்பு தேவனது பெலனால் மேற்கொண்டான் எனக்கூறுகிறான். யோசேப்பு, "அன்றியும் அவரது தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டு, தேவனிடத்தில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மேக்கேதுவாய் நடக்கிறது" என்பதற்கு ஜீவனுள்ள சாட்சியாய் இருக்கிறான், (ரோமர் 8:28).

7. எண்ணாகமம் 1ன் ஜனத்தொகை கணக்கெடுப்பின் படி, யோசேப்பின் கோத்திரம் 79,900 ஆக இருந்தனர், வனாந்திர இறுதிப்பயணத்தின் போது இவர்களது கணக்கெடுப்பு 85,200 ஆக உயர்ந்தது, இது இஸ்ரவேலின் கோத்திரத்தாரில் மிகப்பெரிய எண்ணிக்கையாய் இருந்தது. (எண்ணாகமம் 26:34,37).

8. எப்ராயீம் வடக்கு இராஜ்ஜியத்தில் முக்கியமான பங்கு வகித்தவனாய் விளங்குகிறான், இவனது கோத்திரத்தாருக்குரிய முக்கியத்துவத்தை காட்டும் படிக்கு இவன் எப்ராயீம் என அறியப்பட்டான். இவன் மனாசேயிக்கு முன்னதாய் ஆசீர்வாதம் பெற்றவன் (ஆதியாகமம் 48:17-19). இது ஓசியா 12:1,2. ல் காட்டப்பட்டுள்ளது.

9. யோசேப்பு தனது உதாரணத்தை பற்றிய உண்மையை 1 பேதுரு 5:6ல் காண்கிறோம்.

பென்யமீன் - ஆதியாகமம் 49:27.

1. பென்யமீன் பிறப்பின் போது ராகேல் மரணமடைந்தாள். அவள் மரிக்கும் முன்னர் இவனுக்கு பெனானி எனப்பெயர் சூட்டினாள், இதன் பொருள் 'வேதனையின் குமாரன்' என்பதாகும். இருப்பினும் யாக்கோபு இவன் பனிரெண்டாவது குமாரனானபடியால் பென்யமீன் எனப்பெயர்

சூட்டினான் இதன் பொருள் 'எனது வலது கை புத்திரன்' என்பதாகும். (ஆதி. 35:18).

2. யோசேப்பின் மறைவுக்குப் பின்னர், வயது சென்ற யாக்கோபு பென்யமீனை தனது அன்புக்கு மையமாய் வைத்துக்கொண்டான், முதல் எகிப்து பயணத்தின் போது இவனை அவன் அனுப்பவில்லை. (ஆதி. 42:4).

3. மோசே பென்யமீனை ஆசீர்வதித்தார் உபாகமம் 33:12, ngd;akPidf;Fwpj;J: fh;j;jUf;Fg; gphpakhdtd;> mtNuhNl Rfkha;j; jq;fpapUg;ghd;@ mtid ve;ehSk; mth; fhg;ghw;wp> mtd; vy;iyf;Fs;Ns thrkhapUg;ghh; vd;whd;.

4. பென்யமீனுக்கு யூதா எப்ராயீம் இவர்களுக்கு நடுவாக சுதந்திர வீதம் அளிக்கப்பட்டது. இதில் சில முக்கியமான பட்டணங்கள் அடங்கியிருந்தது. எருசலேம் பட்டணம் இதில் உள்ளடங்கியிருந்தது (யோசுவா 19:28). அவன் அவரோடு சுகமாய் தங்கியிருப்பான் என்பதன் பொருள், தேவாலயம் எருசலேமில் கட்டப்பட்டது, அங்கு தேவனது சமூகம் வாசமாயிருந்து, இதை சம்பந்தப்படுத்தி கூறப்பட்டது.

5. பெஞ்சமின் சந்ததியினர் பீறுகிற ஓநாய் போன்றவர்கள், இதை அநேக சந்தர்ப்பங்களில் காண்கிறோம். அவைகளில் சில உதாரணங்கள்:

[அ] ஏகூத், இஸ்ரவேலின் இரண்டாம் நியாதிபதி, இவன் பென்யமீன் கோத்திரத்தான், இவன் எக்லோன் என்னும் மோவாபிய அரசனை மறைத்து வைத்திருந்த குத்துவாளால் படுகொலை செய்தான். இவ்வாறு இஸ்ரவேல் மக்களை 18 ஆண்டு காலங்கள் ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்து இரட்சித்தான். மற்றும் 80 ஆண்டுகள் சமாதானம் அறிமுகப்படுத்தப்பட்டது.

[ஆ] உள்நாட்டு யுத்தத்தின் போது பென்யமீன் நடுவிலிருந்து யுத்தம் செய்தான். இச்சம்பவத்தின் போது, குறிப்பாக இவர்கள் மிகவும் வன்முறையில் ஈடுபட்டனர். (நியாதிபதிகள் 19). இதன் விளைவாக மற்ற கோத்திரத்தினர் பென்யமீனுக்கு விரோதமாய் வந்து இவனுக்கு தண்டனை அளித்தனர். இரு தினங்களின் யுத்தத்தில் 40,000 பேர் மடிந்து விழுந்தனர் (நியாதிபதிகள் 20:21,25), இறுதியில் இவர் மேற்கொண்டு 600 பேராய் குறைந்தனர். (நியாதிபதிகள் 20:47).

[இ] சவுல் முதல் அரசன் இவன் பென்யமீன் கோத்திரத்தான். இவன் தனது சத்துருக்களுடன் யுத்தம் செய்த விதம் மிகவும் கொடூரமானது. சவுலின்

இராணுவத்தளபதி அப்னேர், ஆசகேலை கருணையின்றி படுகொலை செய்தான். இவன் இஸ்ரவேலை அரசாண்ட போது, சுற்றியுள்ள இராஜ்ஜியங்களில் இவனது ஆட்சிபலம் மற்றவர்களை பாதிக்கிறதாய் இருந்தது.

6. இந்த கோத்திரத்தின் வீரியம் பெரிய ஆசீர்வாதங்களுக்கு வாய்க்காலாய் அமைந்தது:

[அ] எஸ்தரும் மொர்தொகாயும் பெர்சிய அரசாங்கத்தினரிடமிருந்து யூதருக்கு மிகவும் தைரியமாய் இரட்சிப்பைக் கொண்டுவந்தனர். இது ஆதியாகமம் 49:27 ல் தீர்க்கதரிசனமாய் கூறப்பட்டுள்ளபடி, 'khiyapy; jhd; nfhs;isapl;lijg; gq;fpLthd;' நிறைவேறுகிறதாய் இருக்கிறது.

[ஆ] சவுலின் குமாரனாகிய யோனத்தான், இவனது வீரியம் கர்த்தரின் வழிக்கு தன்னை அற்பணித்துக்கொண்டதை காட்டுகிறது. இது தேவனது வாக்குத்தத்திற்கு இசைய செயல்படுகிறதாய் இருக்கிறது. (1 சாமுவேல் 14:6,12).

[இ] பவுல் சபைக்கு கொடுமை கொடுத்தவர், பென்யமீன் கோத்திரத்தானாய் இருந்தார். இவன் மனந்திரும்பியபோது இவரது வைராக்கியம் சுவிஷேச பிரபல்யத்தில் மாறிவிட்டது, மற்றும் தொடர்ந்துள்ள நெருக்கத்தின் மத்தியில் இவர் சுவிஷேசம் அறிவித்தார். சபைக்கு விரோதமாய் பீறுகிற ஓநாயான சவுல், பவுலாக மாறிய பின்னர் ஒரு வைராக்கியமுள்ள மிஷரியாய் செயல் பட்டார்.

<u>யாத்திராகமம்</u>

<u>பாடம் 20 -- அதிகாரம் 1</u>

முகவுரை:

யாத்திரகாமம் கிறிஸ்தவ வாழ்க்கையை சிறப்பாய் சித்தரிக்கிறதாய் இருக்கிறது. இது பாவ அடிமைத்தனத்திலிருந்து கிறிஸ்துவுக்குள் அடையும் சுதந்தரத்தை படம் பிடித்துக்காட்டுகிறதாய் இருக்கிறது. இது கிறிஸ்துவுக்குள் நமது நடக்கைக்கான பெரிய அளவில் உள்ளத் தொடர்பை எடுத்துக்காட்டுகிறதாய் இருக்கிறது. நாம் அனைவரும் வனாந்திர

அனுபவத்தைப் பெற்றவர்களாய் இருக்கிறோம். யாத்திராகமத்தின் அடிப்படை கோட்பாடுகளின் படி, உங்களது கிறிஸ்தவ வாழ்க்கையில் எப்படிப்பட்ட நெருக்கங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம். நீங்கள் கானான் தேசத்திற்குள் நுழைந்து இருப்பது ஓய்வு எடுக்க அல்ல யுத்தம் செய்வதற்காகும். ஆவிக்குரிய முதிர்ச்சி என்பது உட்கார்ந்து கொண்டு ஓய்வு எடுப்பது அல்ல. இது யுத்தம் சூடு பிடிக்கும் போது உங்களுக்கு மகிழ்ச்சியை கொண்டுவருவது ஆகும். அது இன்னும் வலுவடையும் போது அதில் மிகவும் மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.

காலேப்:

காலேப் தனக்கு 80 வயதாய் இருக்கும் போது வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசித்தார். இவர் யோசுவாவைப்பார்த்து கேட்டார், இராட்சதர்கள் வாழ்ந்த பகுதியை எனக்குத் தாரும் காரணம் நான் மரிப்பதற்கு முன் சில இராட்சதர்களை கொன்றுகுவித்து விட்டு நான் மரிக்க வேண்டும் எனக்கேட்டார். இவரது 80 வயதில் தனது பட்டயத்தை உருவிக்கொண்டு, தனது குடும்பத்துடன் மலைமீது ஏறி இராட்சதர்களை கொன்றார். நாம் ஆவிக்குரிய யுத்தத்தில் இருக்கிறோம், அழுத்தங்களும் நெருக்கங்களும் வரும் போது நாம் அதிகமாய் மகிழ்ச்சி கொள்ள வேண்டும். யோவான் 10:10. நான் அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அது பரிபூரணப்படவும் வந்தேன், இதுவே பரிபூரணமான வாழ்க்கை. நாற்பது ஆண்டுகால வனாந்திர வாழ்க்கையில், அவர்கள் கடந்து வந்த ஒவ்வொரு காரியத்திலும் அவர்கள் சந்தித்த ஒவ்வொரு பிரச்சனையிலும் ஒரு மார்க்கத்தை அவர்கள் கண்டு கொண்டனர்.

யாத்திராகமம் ஒரு வனாந்திர புஸ்தகம், இது முதலாவது தேவனது வல்லமையையும், அவரால் விடுவிக்க முடியும் என்பதைக்குறித்து பேசுகிறது. பவுலின் செய்தியானது கர்த்தரால் முடியும், அவர் உங்களது பாவத்துடன் இடைபட முடியும். அநேகம் விசுவாசிகள் எகிப்தை விட்டு வெளியே வந்தனர், ஆனால் எகிப்தோ அவர்களை விட்டு வெளியே வரவில்லை. அவர்களது பாவம் சிறு பொக்கிஷமாய் அவர்கள் இருதயத்திற்கு அருகில் வைத்துக்கொண்டனர். அவர்களது பழைய பாவ சுபாவம் பரிசுத்த ஆவியானவரைக்காட்டிலும் முன்னாக ஓடுகிறதாய் இருந்தது. யாத்திராகம சிந்தனையை விட்டு வெளியே வந்த அநேக மக்களுக்கு, கிறிஸ்தவம் கிரியை செய்கிறதாய் இல்லை. நீங்கள் சபையில் அநேக ஜனங்களை, கிறிஸ்தவம் கிரியை செய்வதில்லை என்று சிந்திக்கும் அநேக மக்களைக் காணக்கூடும். இவ்வாறு அறிகிறவர்களுக்கு அது உண்மையாய் இருக்கலாம், ஆனால் அது இன்றைய அளவில் கிரியை செய்யாது எனச் சிந்திக்க வேண்டாம். தேவன் ஜனங்களைப் பார்த்து சொல்கிறார், அவரிடத்தில் பதில் உண்டு, எனது வார்த்தைகளைக் கூர்ந்து பாருங்கள்.

யாத்திராகம காலத்தில் வேதாகமம்:

இக்காலத்தில் யாத்திராகமச் சந்ததியினருக்கு எழுதப்பட்ட நிலையில் எதுவும் இல்லை, ஆனால் அவர்களுக்கு தேவனது வாக்குத்தத்தங்கள், தேவன் கிரியை செய்கிறார் மற்றும் அவர் எதைச் சொன்னாரோ அது உண்மை எனக்காண உதவியாய் இருந்தன. இது முயற்சி செய்வது பரீட்சை பார்க்கப்படுவது போன்ற சூழலில் எவ்வாறு வளருவது என்பதை காட்டுகிறதாய் இருந்தது. இது ஆவிக்குரிய வளர்ச்சியை பற்றிய புஸ்தகமாய் இருக்கிறது. ரோமர் 6:17 "Kd;Nd ePq;fs; ghtj;jpw;F mbikfshapUe;Jk;> ,g;nghOJ cq;fSf;F xg;Gtpf;fg;gl;l cgNjr rl;lj;jpw;F ePq;fs; kdg;g+h;tkha;f; fPo;g;gbe;jjpdhNy NjtDf;F];Njhj;jpuk;." இவ்வசனம் யாத்திராகமத்தை நல்ல நிலையில் சித்தரிக்கும் சத்தியமாய் இருக்கிறது.

விசுவாசிகளாய் இருக்கும் போது உங்களை விடுவித்த விசுவாசம், அதன்பின்னர் நாளுக்கு நாள் உங்களை பாவத்திலிருந்து இரட்சிக்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 4:2 கர்த்தருடைய வசனம் சிலருக்கு பயனளிக்கவில்லை காரணம் அது விசுவாசத்துடன் கலக்கவில்லை என்கிற விவாதத்தை காண்கிறோம். யாத்திராகமச் சந்ததியினர் தோல்வியை தழுவும் சந்ததியினராய் இருந்தனர். மூன்று மில்லியன் ஜனங்கள் தோல்வியை தழுவினர் அவர்களில் இருவர் மட்டுமே அதாவது காலேப் மற்றும் யோசுவா இவர்கள் மட்டுமே விசுவாசத்தில் முன்னேறுகிறவர்களாய் இருந்தனர். இது கிறிஸ்தவ வாழ்வில் முறண்பாடாய் இருக்கிறது. நூறு பேரில் ஐந்து நபர் கர்த்தரை சேவிக்க முனைந்து நிறபார்கள் எனில் நீங்கள் நன்றி சொல்ல கடாளியாய் இருக்கிறீர்கள் காரணம் மோசேயைவிட நீங்கள் முன்னேற்றமான நிலையில் காணப்படுகிறீர்கள்.

யாத்திராகமச் சந்ததியினர் மிகவும் பாக்கியசலிகளாய் இருக்கின்றனர், மற்றும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் இருந்த அவரது ஊழியத்தைக் கண்ட ஜனங்களும், பாக்கியசாலிகளாய் இருக்கின்றனர் காரணம் தேவனது வல்லமையை இவர்கள் தனிப்பட்ட விதத்தில் கண்டவர்களாய் இருக்கின்றனர். யாத்திரகாமச் சந்ததியினருக்கு மோசே போதகராய் இருந்தார், இவர் பழைய ஏற்பாட்டில் மிகவும் பிரசித்தவற்றவராய் விளங்கினவர், இருப்பினும் இருவர் மட்டுமே முன்னேறுகிறவர்களாய் இருந்தனர். நீங்கள் சிந்திக்க தலைப்படுவீர்களெனில், உங்களுக்கு மிகவும் கடினமாய் தோன்றும், மோசே மற்றும் பவுல் இருவருமே கடினமான நேரங்களை சந்தித்துள்ளனர்.

இப்புஸ்தகத்தின் செய்தியானது கிருபையாய் இருக்கிறது. இந்த சந்ததி தோல்வியின் சந்ததியினராய் இருந்த போதிலும், தேவன் தனது ஆசீர்வாதங்களை நிறுத்திக்கொள்ளவில்லை, ஒவ்வொரு காலைப்பொழுதிலும் அவர்கள் தங்கள் கூடாரங்களுக்கு அருகில் மன்னா அருளப்படுவது ஓயவில்லை, அவர்கள் விசுவாசித்தாலும் இல்லாவிட்டாலும் அது தவறாது அருளப்பட்டது. தேவன் தனது கிரியைகளை தவறாது செயல்படுத்தி அதனால் நாம் அடையும் நன்மைகள் குறையாது, நமது

வளர்ச்சி நிறைவேற அருளுகிறவராய் இருக்கிறார். நீங்கள் தேவனுடைய கிருபையை புறிந்து கொள்ள ஆரம்பிக்கும் போது, நீங்கள் வளர ஆரம்பிக்கிறீர்கள். தேவன் மனிதனை சந்திக்கும் பெரிய சித்திரத்தை சீனாய் மலையில் நாம் பெற்றவர்களாய் இருக்கிறோம்.

லேவியராகமம் சீனாய் மலையில் வைத்து கூறப்பட்டது மற்றும் எண்ணாகமம், உபாகமம் இவ்விரு ஆகமங்களும் சீனாய் மலையை விட்டு கடந்து சென்றபோது போதிக்கப்பட்டது. எபிரெய நிரூபம் நியாயப்பிரமாணம் வருகிற காரியங்களுக்கு நிழலாய் இருக்கிறது என வருணிக்கிறது. லேவியராகமத்திலிருந்து கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிரியைகளை அதிகமாய் கற்றுக்கொள்ள இருக்கிறீர்கள், சுவிஷேசங்களைவிட இப்புஸ்தகத்திலே அதிகமாய் காணப்படுகிறது. புதிய ஏற்பாட்டிலிருந்து பழைய ஏற்பாட்டை ஒதுக்கித்தள்ள விழையாதிருங்கள். தீர்க்கதரிசிகள் அதிகமாய் எழுதினாலும், நமது நாட்களைக் காண அவர்கள் மிகவும் வாஞ்சையுள்ளவர்களாய் இருந்தனர். சிலுவையில் என்ன நடக்கப்போகிறது என்பதை அவர்கள் சுட்டிக்காட்டி, அதைக் காணும் பேராவல் கொண்டு இருந்தனர், அவர்கள் பின்பற்றாது தடைசெய்தது என்னவெனில் இரகசிய உபதேசம் ஆகும்.

விசுவாசத்தின் ஜீவன்:

எபிரெயர் 11:23-29 ல் மோசேயின் சாட்சிக்குரிய வாழ்க்கையை பின்திரும்பி பார்க்கிறவர்களாய் இருக்கிறோம், அவரது விசுவாசத்தையும் அவரது பெற்றோர்களின் விசுவாசத்தையும் பார்க்கிறோம். அவர்களது செயல்களினால் என்ன பின் விளைவுகள் பின் தொடரப்போகிறதோ என்பதைக்காட்டிலும், தேவனுடைய வார்த்தையின் வாக்குத்தத்தம் அவர்களுக்கு அதிக உண்மையானதாய் இருந்தது. அவர்களுக்கு குருட்டு விசுவாசம் இருக்கவில்லை, அவர்களில் இருளில் தடவிக்கொண்டு திரிய வில்லை. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவோடு உங்களது ஈடுபாடு ஏதோ இருளில் தடவிக்கொண்டு திரிகிற அனுபவமாய் இல்லை. நீங்கள் கர்த்தரில் நம்பிக்கை வைக்கும் போது, நீங்கள் அவரது வார்த்தையில் நம்பிக்கை வைக்கிறீர்கள். அவர் ஒளியாய் இருக்கிறார், அவரது வார்த்தை வெளிச்சம் தருகிறதாய் இருக்கிறது. அவர் எங்கு செல்லவேண்டும் என்ன செய்ய வேண்டும் எனக் காட்டுகிறவராய் இருக்கிறார்.

மோசேயின் பெற்றோர்கள் அவர்களது குமாரன், தேவன் பயன்படுத்தப்போகிற பாத்திரமாய் இருக்கிறான் என்பதை அறிந்தவர்களாய் அவனை பாதுகாத்து அவனை கர்த்தரது கரத்தில் அற்பணித்தனர். பார்வோனின் மகள் அவனை தனது தத்துப்புதல்வனாய் தனக்கு உடமையாக்கிக் கொண்டாள். இதில் நம்மை ஆர்வப்படுத்தக்கூடிய விஷயம் என்னவெனில் "பார்வோனின் குமாரத்தியின் சிறிய மகன்" ராஜரீக இளவரசன் மட்டுமல்லாது அடுத்த பார்வோனாகவும் ஏற்படுத்தப்பட இருந்தான். உண்மையில் அடுத்த வாரிசாய் இருந்தவன் பெயர் துட்மோஸ் II [Thutmos II.]

இப்பகுதியில் யூத வர்ணனையாளர்கள் மோசேயை சுட்டிக்காட்டுமிடத்து, அவனுக்கு ஆளும்படியான உரிமை மட்டுமல்லாது தனது ஜீவனிடத்தில் அன்பு கூறவும் அதனால் அவன் தேவனை சேவிக்கவும் வேண்டியதாய் இருந்தது என்கின்றனர். அவன் கொடுமையாய் வேலைவாங்கிய எகிப்தியனை கொன்று போட்ட பின்னர் ஓடிப்போக அவசியமில்லாது இருந்தது. அவன் அங்கேயே தங்கி இருந்திருக்கலாம். அவன் தேவனை விசுவாசத்தினால் தெரிந்து கொண்டான். யாத்திராகமம் மோசேயினால் எழுதப்பட்டது, அவன் தனது விசுவாசத்தை காட்டும் வண்ணமாய் இதை எழுதியிருக்க வேண்டும். மோசே மிகவும் தாழ்மையுள்ள மனிதனாய் இருந்தான். மோசே அரண்மனை வாழ்வை விட்ட பின்னர் துட்மோஸை தொடர்ந்து தனது பதவியை எடுத்துக்கொண்டிருக்கலாம்.

நாம் 3,500 ஆண்டுகளை பின் நோக்கிப் பார்க்கிறவர்களாய் இருக்கிறோம். இக்காலங்களில் எகிப்திய சரித்திரம் மிகவும் மறைவாய் செயல்பட்டதைப் பார்க்கிறோம் காரணம் அடுத்தை பார்வோன் துட்மோஸ் முந்தின பார்வோனை பதவிய் இழக்கச் செய்து அவன் தனது அரியணையைப்பிடித்தான், மற்றும் ஹேட்ஷிப்ஸட்டின் [Hatshepsut] நினைவில் இருந்த அவளது குமாரன் மோசேயை அகற்றினான்.

மோசே பண்டைய உலகில் மிக உன்னத பதவியை அடைகிறதற்குரிய வாய்ப்பை கிரகித்துக்கொண்டு அந்தத்தெரிவின்படியே சென்றிருக்கலாம் அல்லது தேவனது வழியில் சென்றிருக்கலாம். இது முக்கியமான அடிப்படை கோட்பாடாய் இருக்கிறது. எபிரெயர் 11:25 ல் இதை அவன் செய்தது, ஒரு காரணத்துடன் என்று குறிப்பிடுகிறது.

தெரிவு செய்தல்:

அரசியலின் ஒவ்வொருகாரியமும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரியதாய் இருக்கிறது. உங்களுக்கு இருக்கும் அரசியல் வல்லமையை பயன்படுத்தி உங்கள் தேசத்தை வேதாகம அடிப்படை அரசியல் அமைப்பாய் மாற்றுவதற்கும், அல்லது ஒரு சிறிய குக்கிரமாத்தின் சபையில் ஒரு ஊழியராய் பணியாற்றுவது இதற்கிடையே நீங்கள் எதை தெரிந்து கொள்வீர்கள்? தேவன் பெரும்பாலும் நீங்கள் குக்கிராம சபையில் இருப்பதைதான் விரும்புவார்.

எப்பொழுதும் நித்தியமான விஷயங்களில் ஈடுபடும் பொழுது, மிகச் சிறப்பான தற்காலிக விஷயங்களைவிட நித்தியமான விஷயங்கள் மிகவும் அதிக முக்கியம் வாய்ந்ததாய் இருக்கின்றன. நீங்கள் அரசியல் ரீதியில் எதைச் செய்தாலும், ஒருவேளை நீங்கள் மிகச்சிறப்பான சட்ட அமைப்பை ஏற்படுத்தினால் கூட ஜனங்கள் வெளிப்படையாய் உடைத்துப்போட்டு அல்லது மறைமுகமாய் அதை மீறுகிறவர்களாய் இருப்பார்கள். ஒரு தனிப்பட்ட நபர் மிகவும் கண்ணியமாய் இப்பூமியில் வாழ்க்கைச் செய்து பின்னர் அவரது அவிசுவாசத்தால் வழிநடத்தப்பட்ட கெட்ட வாழ்விற்கு சாய்ந்து போய் நரகத்திற்கு செல்லும் போது எது அவருக்கு உதவியாய்

இருக்கும்? நீங்கள் ஒரு சுவிஷேசகனாய் இருப்பீர்கள் என்றால் நித்திய ஆதாயத்தை அடையும் படி, அவர்களுக்கு செய்தி அளிப்பவராய் இருப்பீர்கள்.

ஒருவர் குடிக்கு அடிமைப்பட்டு இருக்கும் போது அவருடன் பேசி, அவர் தனது தவறை உணர்ந்து விட்டுவிடுவார் என்றால், நீங்கள் எதை அடைந்து கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சில காலத்திற்கு சீர்திருத்த தேசத்தை அடைந்து இருப்பீர்கள், ஆனால் அந்த ஜனங்கள் மரிக்கும் போது அவர்கள் நரகத்திற்குச் செல்வர். இந்த காரியத்தில் குடிக்கும் மனிதனைவிட, குடியாமல் இருக்கும் ஒரு மனிதன் நரகத்திற்கு செல்கிறான்.

மோசே ஒவ்வொரு காரியத்தையும் நித்திய கண்ணோட்டம் மூலம் காண்கிறவராய் இருந்தார். இதினிமித்தமே மோசே உலகப் பேரழகியை விட்டு வெளியேறினார். மோசே எது முக்கியம் மற்றும் எது நித்தியத்தில் நிலைத்து இருக்கப் போகிறது என்பதைக் கண்டார். எந்த ஒரு காரியமும் நித்தியம் வரை நிலைக்காத பட்சத்தில் அதற்காய் இப்பொழுது உங்கள் வாழ்க்கையையும் நேரத்தையும் கொடுப்பதில் பயனில்லை. நித்திய சம்பந்தமான காரியங்களில் என்ன செய்கிறீர்கள் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். மோசே இக்காரியத்தை தேவனது வார்த்தையை புறிந்து கொண்டதன் அடிப்படையில் செய்தார். இதுவே அவரது வாழ்விற்குரிய கொள்கையும் திட்டமுமாய் இருக்கிறது. ஒரு மனிதனுக்கு தேவனது திட்டத்தின் வெளிச்சத்தில் வாழ்வது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

தேவனுடைய ஊழியன்:

யாத்திராகமம் 1:27ல் மோசே எகிப்தை விட்டான். நீங்கள் சிறப்பான வாழ்க்கை, பணம், பிரதிபலன்கள், மரியாதை போன்றவற்றை தேவனது வார்த்தை போதிக்கும் போதனையாளராவதற்கு விட்டு விட்டிருக்கலாம், காரணம் மிக அரிதாய் தேவ மனிதர்கள் சரீரப் பிரகாரமான பிரதிபலன்களை தக்க சமயத்தில் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். எபேசியர் நிரூபத்தில் உன்னதங்களில் நாம் நமது ஆசீர்வாதங்களைப் பெற்று இருக்கிறோம் எனப்பார்க்கிறோம். மோசே நாற்பது ஆண்டுகள் வனாந்திரத்தில் தங்கியிருந்து, விசுவாசத்தினால் இதை சகித்துக்கொள்கிறவராய் இருந்தார். ஒரு வேளை நீங்கள் நாற்பது ஆண்டுகள் சீனாய் வனாந்திரத்தில் இருப்பீர்களானால், அது உங்களுக்கு பொறுமையை கற்றுக்கொடுப்பதாய் இருக்கும். பகலில் உஷ்ணம், இரவில் கொடுங்குளிர், இது மோசேயிக்கு சகிப்புத்தன்மையைக் கற்றுக்கொடுத்தது.

நீங்கள் தேவனது வார்த்தையின் ஊழியராய் இருப்பீர்களென்றால், நீங்கள் சகிப்புத் தன்மையைக் கற்றுக்கொண்டாக வேண்டும். நீங்கள் கர்த்தருக்குப் பணிசெய்வீர்கள் என்றால், எல்லாம் மகிழ்ச்சிகரமாய் இருக்கும் என எதிர்பார்க்காதிருங்கள், அதில் மிகவும் வேதனைக்குரிய காரியங்களும் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. மோசே பெரிய

மனிதனாய் இருந்தார், அவர் இவ்வாறு இருந்தமைக்கு காரணம் அவர் கிறிஸ்துவோடு கொண்டிருந்த ஐக்கியத்தின் அடிப்படையில் இருந்தது. அவர் காணக்கூடாதவரைக் காண்கிறவராய் இருந்தார.

இது எரிகிற அக்கினிப் புதரைக் குறித்து குறிப்பிடவில்லை. மோசே ஒவ்வொரு நாளும் தனது ஜெபத்தில் தேவனைக் கண்டார். மோசே கர்த்தரை அறிகிற அறிவினாலும், கர்த்தர் தனக்காய் வைத்திருக்கும் திட்டத்தை அறிகிறதினாலும், தனக்குரிய ஆறுதலைப் பெற்றுக்கொள்கிறவராய் இருந்தார். அவரது நாற்பது ஆண்டுகால வனாந்திர ஜீவியத்தில், தேவனது பணி செய்ய தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு இருந்தார். ஊழியத்திற்கென நீங்கள் கற்றுக்கொள்ளும் போது கடினமாய் மாவாட்டுவதைக் கண்டுகொள்வீர்கள், இந்த கடின சூழலிலே இருக்குமாறு உற்சாகப் படுத்தப் படுகிறாவர்களாய் இருக்கிறீர்கள். அவர் கர்த்தரை நம்புகிறவராகவே இருந்தார், கற்றுக்கொள்வது, அதைத் தனது வாழ்விற்கு பயன்படுத்துவதன் மூலம் உண்டாகும் உண்மை மகிழ்ச்சி மற்றும் சமாதானத்தை அடைகிறவராய் இருந்தார்.

தேவனுடைய சித்தத்தில்:

வசனம் 28 ல் மோசே இரத்தத்தை தெளித்தான், முதற்பலனை சங்காரம் செய்பவன் அவர்களையும் சங்காரம் செய்திருக்கூடும். இந்த சிந்தனையானது மரணத்தின் தூதன் சாத்தனாய் இருக்கலாம். தேவனுடைய வல்லமையில் மோசே பார்வோனுக்கு முன்னிலையில் நின்றார். அவர் பார்வோனிடம் எனது ஜனங்களை போகவிடு என்றார். பண்டைய உலகில் பார்வோனின் சமூகத்தில் நடந்து செல்லமுடியாது, தவழ்ந்து கொண்டே செல்லவேண்டும் அவ்வாறு செல்லாவிட்டால் கொலை செய்யப்படும். மோசே செய்ததைப் போல வேறொருவன் செய்திருந்தால் அவன் அந்த இடத்திலேயே கொலை செய்யப்பட்டிருப்பான். பார்வோனை யாரும் தலைநிமிர்ந்து பார்க்கக்கூடாது, காரணம் அவன் தேவ மனிதனாய் இருந்தான். பார்வோன் ஒரு தலையில் ஒரு கீரீடம் அணிந்து இருப்பான் அது அவனுக்காய் கடவுள் ஸ்தானத்திலிருந்து பேசும்.

மோசே பார்வோனுக்கு முன் ஜீவனோடிருந்தார், காரணம் அவர் தேவனுடைய மனிதனாய் சரியான இடத்தில் சரியான நேரத்தில் இருந்தார். நீங்கள் தேவனுடைய மனிதனாய் தேவனுடைய பணியை, தேவனது சித்தப்படி செய்வீர்களானால், நீங்கள் ஒருவராலும் வெல்லமுடியாதவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் கர்த்தர் விரும்பும் அந்த கடைசி மணித்துளி வரை ஜீவிப்பவர்களாய் இருப்பீர்கள், நீங்கள் அது வரை மரிப்பதில்லை. சாத்தான்கூட தேவனின் அனுமதியின்றி உங்களைத் தொடக்கூட முடியாது. தேவன், நீங்கள் செய்யவேண்டும் என விரும்புவார் என்றால், அதை செய்து முடியுங்கள் நீங்கள் ஆபத்தில் சிக்கிக்கொள்வீர்களா? இல்லை ஒருவேளை நீங்கள் இரத்த சாட்சியாய் மரிக்க வேண்டும் என்று தேவன் விருப்பப்பட்டால் ஒழிய ஒன்றும் உங்களை அசைக்கமுடியாது.

ரோமர் 28 ஐ நாம் பயன்படுத்தலாம், தேவனது அன்பை விட்டு நம்மை ஒன்றும் பிரிக்கமாட்டாது. பவுல் சொல்லக்கூடும், சாத்தான் தான் மரிக்கும் படி கல்லெறிந்து கொலை செய்தான், ஆனால் கர்த்தரோ தன்னை மரணத்திலிருந்து எழுப்பினார் என்று கூறுகிறவராய் இருக்கிறார், காரணம் அந்த சமயம் அவர் மரிக்கும் சமயமாய் இருக்கவில்லை. யாத்திராகமம் கிறிஸ்தவ வாழ்விற்கான பலத்தை / வல்லமையை அறிமுகப்படுத்துகிறதாய் இருக்கிறது. பவுலின் வாழ்வில் செயல்பட்ட அதே வல்லமை உங்கள் வாழ்விற்கும் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் உங்களில் இருப்பார் என்றால், பவுலால் செய்யப்பட்ட அனைத்து காரியங்களையும் நீங்களும் செய்கிறவர்களாய் இருப்பீர்கள். மோசே பெரியவராய் இருந்தார் காரணம் அவரது கண்கள் தன்னை நோக்காமல் கர்த்தரை மட்டும் நோக்குகிறதாய் இருந்தது. அவர் மிகவும் தாழ்மையுள்ள மனிதராய் இருந்தார்.

உபதேசங்கள்:

நடத்தை / சிந்தை ATTITUDE

1. ஒவ்வொரு விசுவாசியும் தெய்வீக மற்றும் மனுஷீக காரியங்களினிமித்தம், தன்னுள் முறண்பாடுகளை சந்திக்கிறவர்களாய் இருக்கிறார்கள். (ஏசாயா 55:7-9)

2. மனோ ரீதியான சிந்தை ஒருநபரின் வாழ்க்கை, மற்றும் அவரது குணநலன்களை தீர்மானிக்கிறது. நீங்கள் எப்படிப்பட்ட சிந்தை உடையவர்களாய் இருக்கிறீர்களோ, நீங்களும் அப்படிப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள். (நீதிமொழிகள் 23:7)

3. கிறிஸ்தவர்களாகிய நாம், கிறிஸ்துவின் சிந்தை உடையவர்களாய் இருக்க கட்டளை பெற்று இருக்கிறோம். (2 கொரிந்தியர் 10:4-5, ரோமர் 12:2, பிலிப்பியர் 2:5, 2 தீமோத்தேயு 1:7)

4. வேத அறிவு (கிறிஸ்துவின் சிந்தை, 1 கொரிந்தியர் 2:16) பரிசுத்தாவியானவரால் ஒரு விசுவாசியின் சிந்தையில் ஆண்டுகொள்ளப்பட்டு, தெய்வீக கருத்துக்கள் அளிக்கப்படுகிறது. (ரோமர் 12:2)

5. சரியான சிந்தை சந்தோஷத்தை உருவாக்குகிறது. (பிலிப்பியர் 2:2) நம்பிக்கையை உருவாக்குகிறது (2 கொரிந்தியர் 5:1, 6, 8) ஸ்திரத்தனமையை உருவக்குகிறது (ஏசாயா 26:3-4, பிலிப்பியர் 4:7, 2

தெசலோனிக்கேயர் 2:2) உண்மையாய் கொடுப்பதை உருவாக்குகிறது (2 கொரிந்தியர் 9:7) அன்பை உருவாக்குகிறது (1 கொரிந்தியர் 13;5)

6. மனுஷீக சிந்தை உலகப்பிரகாரமானது என அழைக்கப்படுகிறது. (ரோமர் 12:2, கொலோசியர் 3:2)

7. தீமை என்பது செய்வதை சார்ந்து அல்ல, சிந்திப்பதையே சார்ந்து இருக்கிறது. எதை சிந்திக்கிறோமோ அதையே செய்கிறோம். (மத்தேயு 9:4, கலாத்தியர் 6:3)

8. மனதில் உண்டாகும் துக்கம், ஆவியை முறிந்துபோகச்செய்யும் (நீதிமொழிகள் 15:13)

9. தெளிந்த சிந்தை இல்லையெனில், ஓர் விசுவாசியின் மனதில் முறண்பாடுகள் இருக்கும் (ஏசாயா 55:6-9, யாக்கோபு 1:7-8)

ஊழியக்காரர்கள்

1. ஒரு தேசத்தில் இவர்கள் அரசியல் தலைவர்களாய் உபயோகப்படுத்தப்பட்டனர் (ரோமர் 13:4).

2. இவர்கள் ஒரு ஸ்தல சபையின் போதகர்களாய் உபயோகப் படுத்தப்பட்டனர் (எபேசியர் 3:7; கொலோசெயர் 1:23,25; கொலோசெயர் 4:7; எபேசியர் 6:21; 1 தீமோத்தேயு 1:12).

3. எல்லா விசுவாசிகளுக்காகவும் உபயோகப்படுத்தப்பட்டனர் (2 கொரிந்தியர் 3:6; 4:1; 6:4).

4. இப்பதத்தின் ஆரம்பம் -- பாரம்பரிய கிரேக்க பாஷையில் இந்த வார்த்தையானது, கப்பலின் அடித்தட்டில் அமர்ந்து தண்டு வலிப்பவர்களைக் காட்டுகிறதாய் இருக்கிறது - இவர்கள் ஒரு வேலக்காரர் ஆகவோ அல்லது ஒரு அடிமையாகவோ இருக்கலாம்.

5. அடிப்படைக் கோட்பாடு -- ஊழியக்காரர் தன்னைக்காணும் போது ஒரு சேவகனாகவும் மற்றும் தனது மந்தைக்கு தலைவராகவும் காணப்பட வேண்டும்.

Lesson 21- 29

<u>பாடம் 21 -- மோசேயின் அழைப்பு</u>

முகவுரை:

தேவன் நம்பிக்கைக்கு உரியவராய் இருக்கிறார். மோசேயின் சரித்திரத்தையும் தேவனது குணாதிசயங்களையும் பார்க்கும் பொழுது இது விளங்குகிறதாய் இருக்கிறது. தேவனது குணாதிசயங்களை அறியத்தலைப்படும் போது, நமது ஸ்தானத்தையும், அவரோடுள்ள உறவில் எங்கு நிற்கிறோம் என்பதையும், அவரது உண்மையையும் நமக்கு போதிக்கிறவைகளாய் இருக்கின்றன. தேவனது குணாதிசயங்களை எந்த அளவுக்கு நீங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதைப்பொருத்தே உங்களது கிறிஸ்தவ வாழ்க்கையானது முன்னறிவிக்கப்படப் போகிறதாய் இருக்கிறது.

மோசே:

மோசே ஒரு பெரிய போர்வீரனாயும், பெரிய கட்டிடப் பணிகளை மேற்பார்வை செய்யும் பெரிய கட்டிடப் பொறியாளராய் இருந்தார். இஸ்ரவேலரின் மனப்பான்மையுடன் அவர் ஈடுபட்டது மிகவும் வருந்தப்படத்தக்கதாய் இருந்தது. அவர் திரும்பச் சென்று தனது சிங்காசனத்தை ஆக்கிரமிப்பதைக்காட்டிலும், மீதியானுக்குச் செல்வது குறித்து தீர்மானம் எடுத்தார். அவர் மீதியானுக்கு சென்ற காரணம், எகிப்தியர்கள் அக்காலத்திலே சீனாய், கானான் போன்ற தேசங்களது ஆதிக்கத்திற்கு கீழ் வைத்திருந்தனர். இங்கு அவர் ஏழு குமாரத்திகளுடைய மீதியானின் ஆசாரியனை சந்தித்தார். அக்குமாரத்திகள் தங்களது ஆடுகளுக்கு தண்ணீர் காட்ட முயன்று கொண்டு இருந்தனர். அரேபிய மேய்பர் குழு வந்து மீதியானின் ஆசாரியனுடைய ஏழு குமாரத்திகளையும் துரத்தி அடித்தனர். மோசே அந்த அரேபியர்களை துரத்தி விட்டு இவர்களது ஆடுகளுக்கு தண்ணீர் காட்டினார்.

வீரமிக்க மற்றும் கனப்படுத்தக்கூடிய இச்செயல், அந்த ஏழு குமாரத்திகளை உடைய எத்திரோவை, மோசேயிக்கு உணவளித்து பாதுகாக்க வைத்தது. மீதியானின் இந்த ஆசாரியன் உண்மையான தெய்வத்தை ஆராதிக்கிறவராய் இருந்தார். இந்த ஆசாரியன் மோசேயிக்கு உணவு தங்குமிடம் மாத்திரம் அளிக்காது தனது குமாரத்திகளில் ஒருத்தியான சிப்போராளை இவருக்கு மனைவியாய் கொடுத்தார். இவளது பெயரின் பொருள் "சிறு பறவை" இவள் வனாந்திர சிறு பறவை போன்று கிருபை மிக்கவளாய் இருந்தாள்.

இப்பகுதியில் உள்ள பறவைகள் மிகவும் அழகிய வண்ணங்களை உடையதாய் இருக்கும். நாற்பதாண்டுகள் திருமண வாழ்க்கைக்குப் பின்னர், அவளது ஆவிக்குரிய வாழ்க்கை பிரச்சனை மிகுந்தாயும் ஒரு கேள்விக்குறியுமாக மாறியது. அவளை மோசே, தேவனது பணிசெய்ய அழைக்கும் போது, அவள் வரமறுப்பு தெரிவித்துவிட்டாள்.

அவரது முதல் குழந்தையின் பெயர் கெர்சோம், இதன் பொருள் வழிபோக்கன், மோசே சொல்கிறது என்னவெனில், அவர்

அக்குழந்தையிடம் அன்பு பாராட்டினாலும், அக்குழந்தையை தனது மகனாய் புறிந்து கொண்டபோதும் இவர் அங்கு அந்நியனாகவே தங்கியிருந்தார். மோசே தான் மீதியானியரல்ல என்பதைக் கண்டு கொண்டார், தேவன் தன்னைக்கொண்டு எங்கேயோ, எதையோ செய்ய விரும்புகிறார் என்பதைக் கண்டு கொண்டார். மோசே தேவனது வார்த்தை மட்டும் அவரது திட்டம் போன்றவற்றை சிந்திக்கலானார். மோசே அந்த பரந்த வனாந்திரத்தில், தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டு, காத்திருக்க தொடங்கினார். வேதாகம வகுப்புகளில் நாம் என்ன செய்துகொண்டு இருக்கிறோம், நம்மை ஆயத்தப்படுத்துகிறோம் மற்றும் காத்து இருக்கிறோம். நாம் வனாந்தரத்தில் இருக்கிறோம். இது வறண்டதும் கடினமான பூமி. பரீட்சை வரலாம். தேவ தூதர்களின் முறண்பாடுகளினிமித்தம், சிலர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வரலாம்.

தேவன் தமது நேரத்தில் மோசேயுடன் பேசினார், தான் விரும்பும் காரியத்தைச் அவர் செய்ய வழிநடத்தினார். இந்த அடிப்படையில் நாம் உண்மையுடன் தொடர்பயிற்சியை நிறைவு செய்துகொண்டு அவர் வழிநடத்துதல் பிரகாரம், எதை செய்யும்படி விரும்புகிராரோ அதைச் செய்யும்படி தலையிடுகிறவர்களாய் இருக்கிறோம். பெரிய தீர்மானங்கள் ஒரு எடுக்கும்போது, உங்கள் கரத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பணியை அடைந்து இருக்கிறீர்கள். மோசே அங்கு காத்திருந்து, தனது சிந்தையில் ஆயத்தமாக கற்றுக்கொண்டார். நாற்பது ஆண்டுகாலங்கள் மீதியானின் வனாந்தரத்தில் தனது காலத்தை கழித்த பின்னர், அவர் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தில் நடத்த கற்றுக்கொண்டார். இந்தவிதமான கடினப்பயிற்சி மூலம் கர்த்தர் உங்களைப் பரீட்சைப்பார்த்து தகுதிபடுத்துகிறார்.

பார்வோனின் மரணம்:

யாத்திராகமம் 2:23-25 ல் எகிப்திய அரசன் மரணமடைந்தான். தங்களது அடிமைத்தனத்தினிமித்தம் இஸ்ரவேலர் தேவனை நோக்கி முறையிட்டனர். தேவன் இந்த ஜனங்களை நினைவு கூர்ந்தார். தேவன் தமது ஜனங்களை ஒரு போதும் மறக்கிறவர் இல்லை. 1 கொரி. 10:13 தேவன் திறாணிக்கு மேலாக சோதிக்கப்படுவதற்கு இடம்கொடாமல், அதற்கு தப்பிக்கொள்ளும் போக்கை அல்லது ஒரு தீர்வை உண்டாக்குகிறவராய் இருக்கிறார். தேவனது வாக்குத்தத்தத்தை ஏன் உரிமை பாராட்டுகிறீர்கள்? காரணம் தேவன் தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவராய் இருப்பதனால்.

தேவன் சொல்வாரானால், அதை அவர் கண்டிப்பாய் நிறைவேற்றுவார். நாம் செய்யும் ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் கர்த்தர் ஒரு வாக்குத்தத்தத்தை முன்னதாக அதற்கென ஏற்படுத்தி வைத்து இருக்கிறார். தேவன் அவ்வழியாய் அவர்கள் கடந்து செல்வார்கள் என்பதை அறிவார், அவர்களை வேதனையை உணர்ந்து அவர் பதில்செய்கிறவராய் இருக்கிறார். இப்படிப்படிப்பட்ட அடிப்படையின் அறிவை அடைந்து, உங்களது வாக்குத்தத்தத்தை உரிமைபாராட்டுங்கள், நீங்கள் கர்த்தரை

மனப்பூர்வமாய் நம்பலாம்.

மோசேயின் அழைப்பு:

மூன்றாம் அதிகாரத்தில், எரிகிற அக்கினிப் புதர் சம்பவத்தை காண்கிறோம். இங்கு மோசே சொல்கிறார் "இதோ அடியேன்" என்றார். தேவன் ஒரு பணிக்காக உங்களை அழைக்கும் போது, அவர் உங்களுக்கு ஏறாளமான உபதேச காரியங்களை அளித்து உங்களை மிஷனரிகளாக தலைமைத்துவத்திலும் மற்றும் போதிக்கும் ஊழியத்திலும் இருக்கச் செய்கிறார். மோசேக்கு தேவன் அளித்தது போல உபதேச காரியங்களை உங்களுக்கும் அளித்து, அவர் உருவாக்கி மற்றும் ஊக்கமளிக்கிறரவராய் இருக்கிறார். மோசே மிகவும் சாந்தகுணமுள்ள மனிதராய் இருந்தார், அவர் தான் ஒரு விஷேசித்தவர் என எண்ணவில்லை மற்றும் தான் சிறியவராய் இருக்கிறோம் என்ற உணர்வு கூட அவருக்கு இருக்கவில்லை. தேவன் சொல்வது நீங்கள் ஒன்றுமில்லை, ஆனால் என்னுடன் நீங்கள் இருப்பீர்களானால் எல்லாம் உடையவர்களாய் இருக்கப்போகிறீர்கள். கிறிஸ்துவுக்குள் நாம், கடந்த கால நித்தியத்தியத்திலிருந்து, எதிர்கால நித்தியம் வரைக்கும் அவரது திட்டத்தின் ஒரு பகுதியாய் இருக்கிறோம். தேவன் மோசேக்கு, எதைக்குறித்த கரிசனையும் உனக்கு வேண்டாம் எனச் சொன்னார். பின்னும் அவர் இந்த மலைக்கு, இந்த சீனாய் மலைக்கு திரும்ப நான் உன்னைக்கொண்டு வரும் வரைக்கும் பார்வோன் உன்னை கொலைசெய்வதில்லை என்றும் வாக்குப்பண்ணினார். இஸ்ரவேலரின் வனாந்திரப் பயணத்தில் ஒவ்வொரு கட்டத்திலும், ஒரு பரீட்சையின் வழியாய் கடந்து சென்றனர், அதிகமான தண்ணீர், செங்கடல், மிகக்குறைவான தண்ணீர், கசப்பான தண்ணீர் சுவை மிகுந்த தண்ணீராய் மாறிய அற்புதம், போன்ற பரீட்சைகள் அவர்களுக்கிருந்தது. எங்கு சென்றாலும் அவர்களுக்கு பரீட்சை, பரீட்சை, பரீட்சை. ஒவ்வொரு பரீட்சையிலு ஜனங்கள் முறையிட்டனர். மோசே எதை உரிமைபாராட்ட? மோசேயினால் உரிமை பாராட்ட இயலும், காரணம் யாத்திராகமம் 3:12.ல் உள்ள வாக்குத்தத்தம்.

வசனம் 13 ல் தேவனது நாமம் உட்பட், ஒரே கேள்விகளால் நிறைந்து காணப்படுகிறது. வசனம்
14 ல் தேவன் சொன்னார் 'இருக்கிறேன்' என்பவர் உன்னை அனுப்பினவராய் இருக்கிறேன் என்றார். நான் "இருக்கிறவராகவே இருக்கிறேன்", நான் எப்பொழுதும் தொடர்ந்து இப்படியே இருக்கிறேன் என்றார். எல்லாக் காலங்களிலும் நான் இருக்கிறவராக இருக்கிறேன். இப்படிப்பட்ட பெயரானது நமக்கும் தேவனுக்குமிடையே பெரிய வேறுபாட்டை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. நாம் ஒருவரும் "இருக்கிறவர்" என்கிற நாமத்தை இந்த அர்த்தத்தில் சொல்லமுடியாது, சிருஷ்டிகர் மட்டுமே இப்படிப்பட்ட நாமத்தை சொல்லமுடியும். நாம் இடம் மற்றும் காலத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கிறோம். தேவனோ இடம் அல்லது காலம் இவற்றிற்கு அப்பாற்பட்டவராய் இருக்கிறார்.

இந்த வசனம் கர்த்தரின் நித்தியத்தைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது,

இதைக்குறித்து ஆதியாகமம் 1, யோவான் 1, 1 யோவான் 1 ஆகிய வசனங்களிலும் காணலாம். எந்தக் காலத்திலும் மனிதன் தேவனைக் கண்டதில்லை, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து அவரை நமக்கு வெளிப்படுத்தும் படியாய் வந்தார். இந்த வசனம் அண்டசராசரத்தின் இரகசியத்தை encapsulate செய்வதாய் இருக்கிறது. [encapsulate = கூட்டடைவு]. தேவன் மட்டுமே தன்னைக்குறித்து அறிந்துகொள்ளும்படி செய்கிறவராய் இருக்கிறார், நாம் அதைக்குறித்து பேச இதற்கு மேல் முடியாது. அப்படி பேச வேண்டுமானால் அவரது விதிமுறைகளைக் கொண்டு பேச வேண்டும்.

முன்னதாக செய்யவேண்டிய பணி:

வசனம் 15-18 ல் மோசே, பார்வோனைச் சந்திக்கும் போது, என்ன சொல்ல வேண்டும் என்பதை குறித்து சிந்திக்கத் தொடங்கினார். தேவன் மோசேக்கு பின்பற்ற வேண்டிய எல்லா வழிமுறைகளையும் அளித்திருந்தார். நீங்கள் ஒரு போதிக்கிறவராய் இருப்பீர்கள் என்றால், உங்களுக்கு குறிப்பிட்ட போதனைகளைப் பெற்று இருக்க வேண்டும், அது உங்களுக்கு குறிப்பானதாய் இருத்தல் வேண்டும். எதைப்போதிக்க வேண்டும், எப்படி போதிக்க வேண்டும் என்பதை குறித்த, உங்கள் அழைப்பு ஒரு குறிப்பிட்ட நிலையில் இருக்கப்போகிறது. இத்தொடர் பயிற்சியில் பிரசங்கக்கலை [homiletics] என்றொரு பயிற்சி இல்லை, காரணம் தேவன் தாமே ஒரு பிரசங்கத்தை எப்படி அமைப்பது என்பதைக்குறித்துப் போதிப்பார். நீங்கள் செய்யவேண்டிய தெல்லாம். தேவனுடைய வசனத்தை கருத்தாய் படியுங்கள், அதிலிருக்கும் காரியங்களை குறிப்பிட்ட நிலையில் உங்களுக்கு போதிக்கிறவராய் இருக்கிறார்.

போதக நிருபங்களான தீமோத்தேயு மற்றும் தீத்து இவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள போதனைகள், நீங்கள் ஒரு போதகராய் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதை போதிக்கிறவைகளாய் இருக்கின்றன. முறையாய் வேதாகமத்தைப் பரிசீலிப்பதன் மூலம் தேவனது வழிகளை தெள்ளத் தெளிவாய் அடைய முடியும். தேவனது போதனைகளை அவரிடம் தெளிவாய் கேட்டு மோசே எழுதின தேவனது போதனைகளை நாம் பெற்று இருக்கிறோம். உங்களது வேலை தேவன் விரும்புகிற பிரகாரமாய் எதைக்கொடுக்க வேண்டுமோ அதைக்கொடுக்க வேண்டும், அதிகமாகவோ அல்லது குறைத்துவிடவோக் கூடாது. டாக்டர். மெக் கீ [Dr McGee's] அவர்களது இலட்சியம், "இம்முழு உலகையும் இம்முழு உலகத்திற்காய் கொடுத்தல் வேண்டும்". நீங்கள் என்ன செய்ய வேண்டும் என அறியாது இருப்பதன் காரணம் நீங்கள் கற்றுக்கொள்கிறவர்களாய் இல்லை, அல்லது இன்னும் போதுமான அளவு கற்றுக்கொள்ளவில்லை, அல்லது கேட்கும்படி உங்கள் செவியை சாய்க்கவில்லை. உங்கள் வாழ்க்கையில் இருக்கும் பாவத்தை அறிக்கை செய்யுங்கள், ஆவியில் நடந்து கொள்ளுங்கள் மற்றும் வேத வசனத்தின் படி நடந்துகொள்ளுங்கள், மற்றும் உங்களுக்கான தேவனது சித்தம் என்ன என்பதை கண்டுகொள்ளுங்கள்.

தேவனது குணாதிசயங்கள் என்பது எல்லா சூழல்களிலும் பொருந்தக்கூடிய

உபதேசமாய் இருக்கிறது. தேவனது குணாதிசயம் உங்களை நிரம்பி வழியச்செய்யுமென்றால், உங்கள் வாழ்வில் எதை நீங்கள் சந்தித்தாலும், அதை அறிந்து கொண்டு அதற்கான பதிலை தேவனது குணாதிசயத்தில் கண்டுகொள்ள முடியும். உங்கள் மனதில் தேவனுடைய குணாதிசயம் குறித்த வரைபடத்தை எப்பொழுதும் சுமந்து சென்று, அதை உங்கள் நினைவில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளுதல் வேண்டும். இதுவே உங்களது ஆவிக்குரிய வாழ்வில் உயிரோடிருக்க ஒரு அரிய பெட்டகமாய் இருக்கிறது.

உபதேசங்கள்:

இருக்கிறேன்

புதிய ஏற்பாட்டில் "இருக்கிறேன்" என்ற சொல் ஏழு முறை, இயேசுக்கிறிஸ்துவால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1. நானே ஜீவ அப்பமாய் இருக்கிறேன். (ஜீவ அப்பம் நானே) (யோவான்6:35). - மனுக்குலத்தின் பசிக்கு கர்த்தர் மட்டுமே பதில்/உணவு அளிக்க முடியும்.

2. நான் உலகிற்கு ஒளியாய் இருக்கிறேன். (யோவான் 8:12). - ஒரே மெய்யான ஒளி, கர்த்தரின் ஒளியின் மூலம் நாம் வாழ்வதற்கு கிடைக்கிறதாய் இருக்கிறது.

3. நானே ஆடுகளுக்கு வாசலாய் இருக்கிறேன். (யோவான் 10:7). - தேவனுடைய திட்டத்திற்குள் பிரவேசிக்க, இயேசுக்கிறிஸ்து ஒருவரே வழியாய் இருக்கிறார்.

4. நானே நல்ல மேய்ப்பனாய் இருக்கிறேன். (நானே நல்ல மேய்ப்பன்) (யோவான் 10:11). - மெய்யான பராமரிப்பு செய்ய, உண்மையுள்ள கர்த்தரால் மட்டுமே ஆகும்.

5. நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன். (யோவான் 14:6). - கிறிஸ்துவில் மட்டுமே ஜீவன் இருக்கிறது.

6. நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாய் இருக்கிறேன். (யோவான் 11:25). - நித்திய ஜீவன் இயேசுக்கிறிஸ்துவில் மட்டுமே இருக்கிறது. அவரை புறக்கணிப்பது அக்கினிக்கடலில் நித்தியமாய் பங்கடையச் செய்யும்.

7. நானே மெய்யான திராட்சைச் செடியாய் இருக்கிறேன். (யோவான் 15:5). - வாழ்க்கையின் மெய்ப் பலனை, கிறிஸ்துவுடன், மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மூலம் கொள்ளும் ஐக்கியத் தால் மட்டுமே கொடுக்க முடியும்.

தேவன்: தேவனது குணாதிசயங்கள் [மேலே உள்ள பாடங்களில் காண்க]

<u>பாடம் 22 -- பயமும் விசுவாசமும்</u>

முன்னுரை:

மோசே மிகப்பெரிய மனிதராய் இருந்தார் இருப்பினும் அவருக்கும் தோல்விகள் இருந்தன. மோசேயும் அவரது விசுவாசிகளும் ப்ளாஸ்டரில் வார்க்கப்பட்ட பரிசுத்தவான்கள் அல்லர், எல்லா வழிகள் மூலம் அவர் செல்லும் போது அப்படியே அசையாமல் நிலைத்திருப்பதற்கு மற்றும் எவ்வித தவறும் இழைக்காமல் இருப்பதற்கு.

நீங்கள் வசதியாய் அமர்ந்துகொண்டு இவ்வகையான ஜனங்கள் இருக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள். வேதாகமத்தில் ஜனங்கள் தவறிழைத்திருக்கிறார்கள் என்று பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால், நாம் தைரியப்படுகிறவர்களாய் இருக்கிறோம். நீங்கள் தேவனிடம் தோற்றுப்போவீர்களானால், அதோடு கூட உங்களை முடித்துவிடுகிறவர் அவரல்ல. நீங்கள் உங்கள் பாவங்களை அறிக்கை செய்தல் வேண்டும், பின்னர் அதை மறந்துவிட்டு தொடர்ந்து அவருக்கு கீழ்ப்படிந்து முன்னேறி செல்லுங்கள்.

உதாரணத்திற்கு தாவீது தேவனது சிநேகிதன் என அழைக்கப்பட்டார், அவர் மிக மோசமான பாவத்தைச் செய்தார். அவர் தனது பாவத்தை உணர்ந்தார், அதை அறிக்கை செய்தார், அதைத் தொடர்ந்து ஆசீர்வாதத்தின் இடத்திற்கு திரும்பினார், தேவன் நீங்கள் பூரணராய் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கவில்லை, நீங்கள் அவருக்கு கீழ்ப்படிகிறவர்களாய் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறார்.

பயம்:

யாத்திராகமம் 4:10ல் மோசே அழைக்கப்பட்டார். தேவன் அவருக்கு மூன்று அடையாளங்களை அளித்தார், கையிலுள்ள கோல் சர்ப்பமாய் மாறுவது, குஷ்டம்பிடித்த கை மற்றும் தண்ணீர் இரத்தமாய் மாறுதல். மோசே இப்பொழுது நான் மந்த நாவும் திக்குவாயுமுள்ளவன் என்கிறார். இவ்வாறு மோசே கூறியதற்கு காரணம் அவர் திகிலும் பயமும் ஆகும்.

2 தீமோத்தேயு 1:7 நமக்கு கூறுவது, தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல், அன்பும், பெலமும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியை கொடுத்து இருக்கிறார். ஒரு விசுவாசி தேவனுடன் ஐக்கியத்தில் இருக்கும் போது, மற்றும் தேவனிடத்தில் நிச்சயமுள்ளவராய் இருக்கும்போது, அவருக்கு பயம் என்பது இருப்பதில்லை.

பயம் என்பது விசுவாசக்குறைவினால் வருகிறதாய் இருக்கிறது அது கீழ்ப்படியாமையைக் காட்டுகிறது. இதினிமித்தம் பயம் பாவமாய் இருக்கிறது. தேவனுடைய கண்ணோட்டத்தில், தேவனது வார்த்தையை விசுவாசியாமல் இருப்பது, பாவங்களில் ஒன்றாய் இருக்கிறது. தேவன் எதையாகிலும் சொல்வார் எனில் அதைக் கண்டிப்பாய் செய்தே தீருவார். விசுவாசிகளாகிய உங்களுக்கு தேவன் ஒரு பணியை அளிப்பார் என்றால், அதை செய்து முடிப்பதற்குரிய பெலனையும், உபகரணங்களையும் கொடுப்பார். கிறிஸ்தவனாகிய இருக்கும் எனக்கு தேவன் என்ன செய்யும்படி பணித்தாரோ அதை செய்து முடிப்பது ஆகும், அதைக்குறித்து கவலைப்பட அவசியமில்லை. அவர் உங்களுக்கு ஒரு வேலையை தருகிறவராய் இருக்கிறார், அது எனது வேலையல்ல அது அவரது வேலை. அவ்வேலையை உங்களைக் கொண்டு செய்ய அவரே கடமைப் பட்டுள்ளார், அவர் அதற்கான பொருளாதாரம் போன்றவற்றை அளித்து, உங்களை உயிருடன் காப்பவர் அவரே.

மோசே தான் தகுதியற்றவர் என உணர்ந்தார்:

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் விசுவாசியாய் இருக்கும் நீங்கள், கர்த்தர் விரும்பும் வரை நீங்கள் மரிக்கப் போவதில்லை மற்றபடி எதற்காய் கவலை கொள்ள வேண்டும்? நமது வாழ்க்கை கர்த்தரின் கரங்களில் இருக்கிறது. மோசே சொல்கிறார் தான் மந்த நாவும் திக்குவாயுமுள்ளவர் என்று. தேவன் அவரை, தனது ஜனங்களிடம் பேசு என்கிறார். மோசேயினால் அப்பிரச்சனைய தீர்த்துவைக்க முடியும், அவ்வாறு தீர்த்து வைக்க முடியாமல் போனாலும், அவரது திக்குவாயினால் தேவன் மகிமைப்படப் போகிறார்.

மோசே எகிப்தில் இருக்கையில் அவரது பேச்சு மிகவும் தெளிவாய் இருந்தது, நாற்பது ஆண்டுகால வனாந்திர ஜீவியத்தில் அவரது பேச்சு அவ்வாறு மாறிவிட்டது. இங்கு மோசேயின் தவறு என்ன, அவரது நாவு திக்கித் திக்கி பேசுகிறது. கர்த்தர் மோசேக்கு சொன்னார், "மனிதனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்?". தேவனால் அப்பணியானது மோசேக்கு அளிக்கப்பட்டது. மோசேயினால் இப்பணியை செய்யமுடியாது எனத் தேவன் அறிந்திருப்பாரானால், அவர் அப்பணியை அவருக்கு அளித்து இருப்பாரோ? -- ஒருபோதும் அப்படி செய்து இருக்க மாட்டார்.

நாம் இந்த வழியில் சிந்திப்போமா? -- நாம் பயப்படுகிறவர்களாய் இருப்போம். இது மோசே தனது தோல்விகளை பதிவு செய்கிறார். தேவன் அவரிடம் போகச்சொன்னார், சமயம் வரும் போது அவரை பார்த்துக்கொள்வேன் என்றார். மோசே சொன்னார் கர்த்தாவே, வேறு யாரையாவது அனுப்பும் என்றார், என்னை அனுப்ப வேண்டாம் என்றார். மோசே அவ்வாறு விரும்பினதால் தேவன் சொன்னார், ஆரோன் உனது வாயாயிருந்து பேசுவான் அவன் அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளட்டும் என்றார். மோசே எதைச் சொல்லவேண்டுமோ அதை ஆரோன் ஜனங்களுக்கு, சொல்லுவான் என்றார்.

நீங்கள் விசுவாசக்குறைவுடன் இருப்பீர்களானால், தேவன் உங்களைத் தூக்கிலிடப்போவதில்லை, மாறாக உங்களுக்காய் அவர் காத்திருக்கிறவராய் இருக்கிறார். நீங்கள் அவரைச் சுற்றிவருகிறீர்களா அல்லது அவர் உங்களைச் சுற்றிவருகிறாரா. நீங்கள் அவருடன் செல்ல இருக்கிறீர்கள், அல்லது உங்களுக்கு தேவன் நியமித்த பணியைச் செய்யும் படி வேறொருவர் சென்று, ஆசீர்வாதங்களைப் பெறப்போகிறார்.

விசுவாசிகளில் அநேகர் அலமாறியில் அமர்ந்து கொண்டு விசுவாசத்தில் நடக்க மறுக்கிறார்கள். நீங்கள் யாருடன் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறீர்கள் என்பதை நினைவு கூறும் பட்சத்தில், மோசேயின் சாக்குப்போக்கு அர்த்தமுள்ளதாய் இருக்கிறத. கிருபையினால் நீங்கள் இரட்சிக்கப்பட்டீர்கள் மற்றும் கிருபையினால் நீங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கிறீர்கள். சேவை செய்வதற்கான வாசல் திறக்கப்படுமேயானால், பரிசுத்தாவியானவர் வாசம்பண்ணும் பெலத்தோடே கடந்து சென்று சேவை செய்யுங்கள்.

நீங்கள் கர்த்தரிடம் இவ்வாறு சொல்லக்கூடும், கர்த்தாவே நீர் இக்கதவை திறந்து இருக்கிறீர், நான் உமது பெலத்தால் இதற்குள் கடந்து செல்கிறேன் என்று. நான் அதற்குள் கடந்து செல்வது உம் விருப்பம் இல்லையேல் தயவு செய்து கதவை மூடிவிடும். ஒரு வேளை இப்பணியை உங்கள் பெலத்தால் செய்ய இயலவில்லை என்பதை உணருவீர்களானால், பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய பெலனுண்டு.

மோசே ஒரு கட்டத்தில் தோல்வியைத் தழுவினாலும் இப்பொழுது கீழ்ப்படியத் தயாராகிவிட்டார். நீங்கள் தவறும் போது தேவனது பணியை ஒன்றும் தடை செய்யமுடியாது, நீங்கள் பிரச்சனைகளை உணர்ந்துகொண்டு, முன்னேறி கடந்து செல்லுங்கள். உணர்ந்து கொள்ளுங்கள், அறிக்கை செய்யுங்கள், விசுவாசத்தில் முன்னேறுங்கள், கீழ்ப்படியுங்கள்.

நீங்கள் கற்றுக்கொண்டதை செயல்படுத்துதல்:

யாத்திராகமம் 6 ல் நீங்கள் கற்றுக்கொண்டதை செயல்படுத்தி, தேவனது நோக்கம் நிறைவேற, முன்செல்லுகிறவர்களாயிருங்கள். கர்த்தர் சொன்னது, தேவன்தாமே, இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே கொண்டுவர இருப்பது என்று. இது ஏதோ எகிப்தியர்கள் பெலவீனமானவர்கள் பின் வழியாய் தப்பித்து சென்றுவிடலாம் என்பதற்கு. அவர்கள் உங்களை வெளியே அனுப்புவதற்கு முன்னர், எப்படியாகிலும் உங்களைத் தோற்கடிக்க முயலுவர். மனிதக்கண்ணோட்டத்திலிருந்து இதைப்பார்க்கும் போது, மனுஷீகத்தில் இது இயலாத ஒன்றாகத்தான் இருக்கப்போகிறது, ஆனால் கர்த்தர் உரைப்பது என்னவெனில், நான் இதை செய்து முடிக்கப்போகிறேன் என்றார். தேவனால் மட்டுமே இதைச் செய்து நிறைவேற்றமுடியும்.

உங்களது மனுஷீக பெலவீன ஸ்தானத்திலிருந்து கொண்டு நீங்கள் முன்னேறுகிறவர்களா யிருங்கள், நான் கர்த்தராயிருக்கிறேன் என்கிறார் தேவன். நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் இருக்கிறோம், அவரே கர்த்தராய் இருக்கிறார். இவ்வகிலாண்டத்தின் வல்லமையானது கிறிஸ்துவுக்குள் உங்களது மையத்தில் இருக்கிறது.

நம்பிக்கை மற்றும் வல்லமையில் குறைவு பட்டு இருக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்கள், அவர் இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாய் இருக்கிறார், அவரால் தீர்த்துவைக்கமுடியாத பிரச்சனை என்று ஒன்றுமில்லை. அவரது திட்டத்தின் பிரகாரம் அவைகள் தீர்த்துவைக்கப்படும். நமது கடமை அவரது திட்டத்துடன் கீழ்ப்படிந்து முன்னேற வேண்டியது மட்டுமே.

தேவன் மோசேயிடம் கூறினார், நான் கர்த்தராய் இருக்கிறேன். பழைய ஏற்பாட்டில் தேவனுக்கென அநேகம் பெயர்கள் உண்டு. கர்த்தர் சொல்வது, தான் சுயமாய் இருக்கிற ஒருவராய் இருக்கிறார், கர்த்தர் சொல்வது ஒவ்வொன்றிற்கும் பின்னிலையில் தான் இருக்கிறேன் என்கிறார். இந்த அதிகாரத்தில் ஏலோஹிம் மற்றும் யெஹோவா என்கிற இரு எபிரெயச்சொற்களும் இடம் பெற்றுள்ளன.

தேவனது பெயர்களை மறுகண்ணோட்டம் செய்யும் போது, தேவனது குணாதிசயங்கள் குறித்த உபதேசங்களை மறுபடியும் காணவேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் நிலையற்றவர்களாய் இருந்தபோதிலும், தேவன் நிலையானவராய் இருக்கிறார். நாம் வல்லமையற்றவர்களாய் இருந்தபோதிலும், அவர் வல்லமை மிக்கவராய் இருக்கிறார். தேவன் சொல்வது, நான் சர்வ வல்லமையுள்ள தேவன் என அவர்கள் அறிந்து இருக்கிறார்கள், ஆனால் அவர்கள் நான் இருக்கிற ஒருவராய் இருக்கிறேன் என்பதை அறியாது இருக்கிறார்கள். தேவன் தனது மகிமைக்காய் திட்டமிட்டு செயல்படுகிறவராய் இருக்கிறார்.

கர்த்தர் தான் உண்மையுள்ளவர் எனக்கூறுகிறார், தான் எதைச் சொல்வேனோ அதைச் செய்வேன் என்கிறார். இந்த ஜனங்களுடன் வாக்குத்தத்தம் செய்தேன், நீங்கள் இந்த வாக்குத்தத்தம் நிறைவேற எனக்கு உதவிசெய்யப் போகிறீர்கள். நான் கிருபையும், இரக்கமும் அன்புள்ள தேவனாய் இருக்கிறேன். எமோரியரின் அக்கிரமம் நிறைவானபடியால் எனது ஜனங்களுக்கு கானான் தேசத்தை அருளும்படி இருக்கிறேன். இங்கு நான், மற்றும் நான் இருக்கிறவர் என்கிற சொற்றொடர்களை அதிகமாய் காண்கிறோம்.

அவர் இன்றே செயல்படுகிறவராய் இருக்கிறார். எபேசியர் 2 ல் நாம் கிறிஸ்துவின் சரீரத்தில் ஸ்தானத்தைப் பெற்று இருக்கிறோம் என்றும், நாம் தேவனது திட்டத்தில் இருக்கிறவர்களாய் இருக்கிறோம் என்று கூறப்பட்டு இருக்கிறது. தேவன் கூறுகிறார் நான் இருக்கிறவராய் இருக்கிறேன். நீங்கள் இதை விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் கிறிஸ்தவர்களாய் இருந்துகொண்டு விசுவாசிக்கிறீர்களோ இல்லையோ, அவரது வார்த்தைகளை தீவிரமாய்

உங்கள் வாழ்விற்குப் பயன்படுத்துங்கள். தேவன் தமது வார்த்தைகள் மூலம் ஒவ்வொரு நாளும் மகனே, மகளே, நான் சிலகாரியங்களை உன் வாழ்வில் செய்துகொண்டிருக்கிறேன், காரணம் நான் உனது பரலோகப் பிதாவாய் இருக்கிறேன் மற்றும் சர்வ வல்லமையுள்ள தேவனாய் இருக்கிறேன். என்னை விசுவாசித்து எனது வார்த்தைகளை உன்வாழ்விற்கென எடுத்துக்கொள்வாயா?

பார்வோனின் மனப்பான்மை:

பார்வோன் ஒரு புறஜாதியானாய் இருந்து, புறஜாதிய கடவுள்களை நம்புகிறவனாய் இருந்தான், அவன் தனது மூடநம்பிக்கைகளுக்கு தன்னை அற்பணித்துக்கொண்டு இருந்தான் காரணம் அவன் மோசேயை தேவனது வெளிப்பாடு என நினைக்கிறவனாய் இருந்தான். அவன் தேவனுக்குப் பயப்படாதவனாய் இருந்தான், ஆனால் மோசேக்கு அவர் என்ன செய்யப்போகிறாரோ எனப்பயந்து இருந்தான். மோசே பார்வோனுக்கு பலப்பரீட்சையாகவும், எகிப்தின் மீது நியாயத்தீர்ப்புமாய் இருந்தார். தேவன் இத்திட்டத்தில் இரு நோக்கங்களை உடையவராய் இருந்தார். முதலாவதாய் தனது ஜனங்களை வெளியே கொண்டுவருதல், மற்றொன்று எகிப்தை நியாயந்தீர்ப்பது.

எகிப்தை ஏன் அவர் நியாந்தீக்க் விரும்பினார்? நமக்குத் தெரியாது. ஆரம்பத்தில் பார்வோன் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியே செல்வதற்கு மறுப்பு தெரிவிப்பான். அங்கே ஒரு நோக்கமும் திட்டமும் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. தேவனுக்கு ஒரு திட்டம் உண்டு அது செயல்படப் போகிறது. எதிர்காலத்தில் நிகழப்போவது என்ன, எடுத்துக் கொள்ளப்படுவது, உபத்திரவகாலம், இரண்டாம் வருகை மற்றும் ஆயிர வருட அரசாட்சி போன்றவைகள் தேவனது திட்டத்தில் இடம் பெற்று, வந்து சம்பவிக்க இருக்கிறது.

ஒருவரும் உங்களுக்கு செவிகொடா வண்ணம் இருக்கும் ஒரு ஸ்தானத்திற்கு ஒருவேளை தேவன் உங்களை அனுப்பலாம். மோசே வனாந்திரத்தில் மூன்று மில்லியன் ஜனங்களுக்கு பிரசிங்கித்தார், இதில் இருவர் மட்டுமே அப்பிரசங்கத்தினால் தொடப்பட்டனர். மற்ற அனைவரும் அவர்களது அவிசுவாசத்தினால் வனாந்திரத்தில் மடிந்து போயினர். ஜனங்கள் உங்கள் பிரசங்கத்தை கேட்கிறார்களோ இல்லையோ நீங்கள் சத்தியத்தை பிரசிங்கியுங்கள். நீங்கள் ஊழியராய் இருப்பது கடினமானதுதான், நீங்கள் மோசே, பவுல், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இவர்களுடன் இணைந்து கொள்ளுங்கள். விளைவுகளைக் கண்டு மனமடிவாக வேண்டாம், உங்கள் வேலையை நீங்கள் செய்யுங்கள்.

நாம் கர்த்தருக்கு கடமை பட்டவர்களாய் இருக்கிறோம். மோசே உமது வேலையை நீர் செய்யும் விளைவை என் கையில் விட்டுவிடும். எப்படிப்பட்ட போதிக்கும் ஊழியம் செய்தாலும் அல்லது கர்த்தரின் சேவையில் எதைச் செய்தாலும் இந்த அடிப்படைக் கோட்பாட்டை நீங்கள்

நினைவில் கொள்ளுதல் அவசியம். கர்த்தருக்காய் நீங்கள் உங்களது வேலையை செய்யுங்கள். நீங்கள் தேவனுக்கென ஒரு மனதுடன் சேவை செய்ய அவர் விரும்புகிறவராய் இருக்கிறார். யாக்கோபு கூறுவதைப் போன்று இரு மனதுடன் சேவைசெய்தலை தவிருங்கள். நீங்கள் தேவனுடன் இருக்கும் போது, நீங்கள் பத்திரமாய் இருக்கிறவராய் இருக்கிறீர்கள்.

மோசே மூன்று மில்லியன் ஜனங்களுக்கு முன்பாய் நின்றார், அவர்கள் அடிக்கடி கூச்சலிட்டனர், அவரை கொலை செய்ய எத்தனித்தனர். போதிக்கிறவராய் இருக்கிற நீங்கள் அவர்களுக்காய் தனிப்பட்ட சூழலில் அழுது புலம்பலாம், ஆனாலும் தொடர்ந்து அவர்களுக்கு போதிக்கும் ஊழியத்தை நீங்கள் செய்தாக வேண்டும். அவர்கள் உங்களை கீழிறக்க விடாதிருங்கள் காரணம் அவர்கள் தேவனுடையவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் உங்களுக்குரியவர்கள் அல்லர். நீங்கள் இரும்பைப் போன்று கடினமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், அதே சமயம் ஒரு மேய்ப்பனைப் போல மிருதுவானவர்களாய் இருத்தல் வேண்டும், அம்மேய்ப்பன் தனது ஆடுகளை நேசிக்கிறவனாகவும், சிலவேளைகளில் அவ்வாடுகள் தங்களது சொந்த புத்தியின்படியே ஓடிச்சென்று செங்குத்தான பாறைகளின் மேல் சென்று, நீங்கள் அவைகளை தடை செய்தாலும் பொருட்படுத்தாது செல்கிறதாய் இருக்கிறது.

நீங்கள் ஜனங்களுக்காய் பொதுவான இடங்களில் அழக்கூடாது. விசுவாசமற்ற மேய்ப்பன் கடினமான சிட்சைக்கு உட்படுவான். பவுல் ரோமாபுரியில் சிறையில் வைக்கப்பட்டு இருந்த போது, தனது அந்தியகால ஊழியத்தின் போது ரோம சபையானது அவரை ஒதுக்கி தள்ளிவிட்டது. இது எந்த விதத்திலும் அவரை கீழான நிலைக்குத் தள்ளிவிட வில்லை, காரணம் அவர் தேவனுடன், பரிசுத்த ஆவியானவரின் பெலத்தில் ஐக்கியப்பட்டவராய் இருந்தார். பவுல் தனது மரணத்திற்கு தனிமையில் செல்லக்கூடியவராய் இருந்தார். சரீரப்பிரகாரமாய் அவர் தனிமைபடுத்தப்பட்டார், ஆனால் ஆவிக்குரிய நிலையில் அவர் கிறிஸ்துவுக்குள் இருந்தார், எக்காலத்திற்கும் அவர் அப்படியே இருக்கிறவராய் இருக்கிறார். மோசே நடப்பித்தது போல தேவனது திட்டத்தை நிறைவேற்ற கற்றுக்கொள்ளுங்கள், மற்றும் தேவனுடன் செயல்படுங்கள்.

உபதேசங்கள்:

ஸ்தானாபதித்துவம்:

1. ஓர் ஸ்தானதிபதி தன்னைத்தானே நியமித்துக்கொள்ள இயலாது, அவன் ஓர் தேசத்தை பிரதிபலிக்க அத்தேசத்தால் நியமிக்கப்படுகிறான், அத்தேசத்தின் அரசனை, மற்றும் அத்தேசத்தின் பிரஜையாக தன்னை

பிரதிபலிக்கிறான். நாம் ஸ்தானாதிபதித்துவத்திற்காக தேவனால் நியமிக்கப்படுகிறோம். (2 கொரிந்தியர் 5:20)

2. ஓர் ஸ்தானாதிபதி தனக்குத்தானே தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. நமது தேவைகள் அனைத்தும் தேவனால் சந்திக்கப்பட்டு, அவரால் நாம் பாதுகாக்கப்பட்டு வருகிறோம். (பிலிப்பியர் 4:19)

3. ஓர் ஸ்தானாதிபதி தன்னைத்தான் பிரதிபலிக்கிறவன் அல்ல. நாம் இப்பூமியில் தேவனை பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம். (மத்தேயு 28:19-20)

4. ஓர் ஸ்தானாதிபதி அனுப்பப்பட்டத்தேசத்திற்கு சொந்தமானவன் அல்ல. அனுபவப்பூர்வமாய் நாம் பூமியில் வாழ்ந்தபோதும் நாம் பரலோக பிரஜைகள். (பிலிப்பியர் 3:20, யோவான் 15:19)

5. ஒவ்வொரு ஸ்தானதிபதிக்கும் கட்டளைகள், எழுதப்பட்டுக் கொடுக்கப்படும். தேவன் நமக்கு தமது கட்டளைகள் அனைத்தையும் எழுதப்பட்ட வேதத்தில் கொடுத்துள்ளார். (1 தெசாலோனிக்கேயர் 4:1-2)

6. ஓர் ஸ்தானாதிபதி தனது சொந்ததேசத்தை பிரதிபலித்து வாழ்வதால், அவனுக்கு ஏற்படும் அவமானங்கள் அவனுக்கு சொந்தமானது அல்ல (மத்தேயு 5:11-12)

7. ஓர் ஸ்தானாதிபதி தான் நியமிக்கப்பட்டுள்ள தேசத்திலிருந்து, தனது சொந்த தேசத்திற்கு அழைக்கப்படுவார் என்றால் அது அவர் நியமிக்கப்பட்ட தேசத்துடன் யுத்தத்தை அறிவிப்பதற்கு சமமாய் இருக்கிறது. சபை மத்திய வானுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் இப்பூமியில் கொடிய யுத்தங்கள் நிகழ இருக்கின்றன. புத்தியுள்ள கன்னிகைகள் அனைவரும் மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவர். (1தெசலோனிக்கேயர் 4:13-17)

WORRY – CURE FOR WORRY **[See page 13 above]**

தேவனுக்குரிய தலைப்புகளும் மற்றும் நாமங்களும்

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் மத்தேயு 28:19,20. இவ்வித

தலைப்புக்கள் திரித்துவத்தில் ஒவ்வொருவரின் செயல்பாட்டினை வலியுறுத்துகின்றன.
a) பிதா - ஏகாதிபதித்துவ அதிகாரம் உடையவர், இரட்சிப்பின் திட்டத்தை பிரகடன படுத்தியவர்.
b) குமாரன் - கீழ்படிதலுள்ள குமாரன், பிதாவின் சித்தப்படி தன்னைத்தானே தியாக பலியாக பாவத்திற்காக ஒப்புக்கொடுத்தவர்.
c) பரிசுத்த ஆவியானவர் - மனுக்குலத்திற்கு குமாரனை வெளிப்படுத்தியவர், அதன்மூலம் அவருக்கு கனத்தையும், மகிமையையும் கொண்டு வருபவர்.

பழைய ஏற்பாட்டில் தேவனின் நாமங்கள்:

தேவன் தன்னையும் தனது குணங்களையும் தனது நாமங்கள் மூலம் வெளிப்படுத்துகிறார்.
1. எல் EL - பலத்த அரணானவர் (ஒருமை) - 2 சாமுவேல் 22:33.
2. எல் எலியோன் EL ELYON - உன்னதமான தேவன் - ஆதியாகமம் 14:18-22.
3. எல் ஓலாம் EL OLAM - சதாகாலமுமுள்ள தேவன் - ஆதியாகமம் 21:33.
4. எல் ஷடாய் EL SHADDAI - சர்வ வல்லமையுள்ள தேவன் - ஆதியாகமம் 17:1.
5. ஏலோஹிம் - ELOHIM - எல்லாம் வல்ல தேவன் (பன்மை) - ஆதியாகமம் 1:1.
6. யெஹோவா - JEHOVAH - சுயமாய் வியாபித்திருப்பவர் - இருக்கிறேன் என்றவர் யாத்திரகாமம் 3:14.
7. யெஹோவா ஏலோஹிம் JEHOVAH-ELOHIM - தேவனாகிய கர்த்தர் சிருஷ்டிகர் - ஆதியாகமம் 2:4.
8. யெஹோவா யீரே JEHOVAH-JIREH - யெஹோவா பார்த்துக்கொள்வார் - ஆதியாகமம் 22:13, 14.
9. யெஹோவா நிசி JEHOVAH -NISSI - யெஹோவா என் ஜெயக்கொடி - யாத்திராகமம்17:15.
10. யெஹோவா ரா JEHOVAH-RAAH - யெஹோவா என் மேய்ப்பர் - சங்கீதம் 23:1.
11. யெஹோவா ரஃப்பா JEHOVAH-RAPHA - குணமாக்கும் யெஹோவா - யாத்திராகமம்15:25, 26.
12. யெஹோவா சாபோத் JEHOVAH-SABOATH - சேனைகளின் கர்த்தர் - சங்கீதம் 46:7, 11.
13 யெஹோவா ஷாலோம் JEHOVAH-SHALOM - சமாதானத்தின் யெஹோவா - நியாதிபதிகள்6:24.
14. யெஹோவா ஷம்மா JEHOVAH-SHAMMAH - யெஹோவா அங்கு இருக்கிறார் - எசேக்கியேல்48:35.
15. யெஹோவா சிட்கெனு JEHOVAH TSID KENU-யெஹோவா எங்கள் நீதி - எரேமியா 33:16.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்குள்ள தலைப்புகள்:
1. கர்த்தர் - குரியோஸ் kurios - தேவனின் அதிகாரத்தை வலியுறுத்துகிறது. இது அவரது தெய்வீக தலைப்பு - இது அவரது தெய்வீகத்தை வலியுறுத்துகிறது.
2. இயேசு - யோசுவா Joshua - யெஹோவா இரட்சிக்கிறவர். இது அவரது

மனுஷீகப்பெயர் - இது அவரது மனுஷீகத்தை வலியுறுத்துகிறது.
3. கிறிஸ்து - மேசியா Messiah - தெரிந்துகொள்ளப்பட்டவர். இதுவே அவரது அழைப்பு - இது அவரது நோக்கத்தை வலியுறுத்துகிறது.
4."கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து' என்று அழைப்பது மிகவும் மரியாதைக்குரிய தலைப்பாய் இருக்கிறது.
5. தேவ குமாரன் - அவரது தெய்வீகத்தை வலியுறுத்தும் தலைப்பு. - யோவான்5:18, 10:33.
6. மனுஷ குமாரன் - அவரது மனுஷீகத்தை வலியுறுத்தும் தலைப்பு - இப்பதத்தை அவர் மத்தேயுவில் 30 தடவை, மாற்குவில் 15 தடவை, லூக்காவில் 25 தடவை, யோவானில் 12 தடவை தன்னை குறிப்பிடும் போது பயனபடுத்தியுள்ளார்.
7. தாவீதின் குமாரன் - அவர் தாவீதின் சிங்காசனத்தில், யூதர்களுக்கு ராஜாவாக என்றென்ன்றும் இருப்பார்.
8. பிந்தின ஆதாம் (1 கொரிந்தியர்15:45).
9. நீதிபரர் ADVOCATE(1 யோவான்2:1).
10. ஆமென் (வெளிப்படுத்தல்3:14).
11. தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியானவர் (வெளிப்படுத்தல்3:14).
12. கிளை (சகரியா3:8, 6:12).
13. பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம் (வெளிப்படுத்தல் 22:16).
14. மூலைக்கல் (1 பேதுரு 2:6).
15. இராஜாவாகிய தாவீது (எரேமியா30:9, ஓசியா 3:5).
16. வெளிச்சம் DAY SPRING(லூக்கா1:78).
17. விடுவிக்கிறவர் (ரோமர்11:26).
18. ஏலோஹிம் ஏசாயா40:3, 9:6,7, யோவான்20:28, தீத்து1:3, 2:13, ரோமர்15:6, எபேசியர்1:3, 5:5,20, 2 பேதுரு1:1,
1 யோவான்5:20,, ரோமர்9:5.
19. இம்மானுவேல் - தேவன் நம்மோடு இருக்கிறார். - (மத்தேயு1:23).
20. உண்மையும் சத்தியமும் உள்ளவர் - Revelation 19: 11.
21. ஆதியும் அந்தமுமானவர் (வெளிப்படுத்தல்1:8, 17).
22. மரித்தோரில் முதற்பிறந்தவர் (வெளிப்படுத்தல் 1:5).
23. பிரதான ஆசாரியர் (எபிரெயர்5:1,5).
24. தேவனுடைய பரிசுத்தர் (லூக்கா4:34, அப்போஸ்தலர் 3:14).
25. தேவனுடைய தற்சொரூபம் (2 கொரிந்தியர்4:4).
26. யெஹோவா - சகரியா12:10, எரேமியா23:5,6, சங்கீதம்68:18, எபேசியர்4:8-10, சங்கீதம் 102:12, எபிரெயர்1:10ff, வெளிப்படுத்தல் 1-22,மல்கியா3:1.
27. நீதிபரர் (அப்போஸ்தலர்3:14, 7:52).
28. இஸ்ரவேலின் இராஜா (யோவான் 1:49).
29. யூதரின் இராஜா (மத்தேயு2:2).
30. இராஜாதி ராஜா (வெளிப்படுத்தல் 17:14).
31. தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29, வெளிப்படுத்தல் 5:6).
32. மெய்யான ஒளி (யோவான் 1:8, 9).
33. யூதா கோத்திரத்து சிங்கம் (வெளிப்படுத்தல் 5:5).
34. கர்த்தர் (யோவான் 20:28).
35. கர்த்தாதி கர்த்தர் (வெளிப்படுத்தல் 17:14).
36. மகிமையின் கர்த்தர் (1 கொரிந்தியர் 2:8).

37. நமது நீதியாயிருக்கிற கர்த்தர் (எரேமியா23:6).
38. சிருஷ்டி கர்த்தரும் மற்றும் எல்லாவற்றையும் பாதுகாக்கிறவரும் (யோவான்1:3, கொலோசெயர்1:16).
39. மத்தியஸ்தர் (1 தீமோத்தேயு2:5, எபிரெயர்12:24).
40. மேசியா (யோவான் 1:41).
41. நசரேயர் (மத்தேயு 2:23).
42. (நமது) பஸ்கா (1 கொரிந்தியர்5:7).
43. ஜீவாதிபதி (அப்போஸ்தலர் 3:15).
44. சமாதானப்பிரபு (ஏசாயா9:6).
45. தீர்க்கதரிசி (உபாகமம் 18:18, லூக்கா 24:19).
46. மீட்பர் (யோபு 19:25).
47. தாவீதின் வேர் (வெளிப்படுத்தல்5:5, 22:16).
48. இஸ்ரவேலை ஆழுபவர் (மீகா5:2).
49. இரட்சகர் (லூக்கா 2:11, அப்போஸ்தலர்5:31).
50. மேய்ப்பர் (யோவான் 10:11, எபிரெயர் 13:20).
51. சமாதானக்கர்த்தர் SHILOH (ஆதியாகமம்49:10).
52. தேவ குமாரன் (மத்தேயு3:17, லூக்கா1:32).
53. ஒரே பேரான குமாரன் (யோவான்1:1 4, 18).
54. மனுஷ குமாரன் (மத்தேயு8:20, யோவான் 1:5 1).
55. தாவீதின் குமாரன் (மத்தேயு9:27, 21:9).
56. நட்சத்திரம் மற்றும் செங்கோல் (எண்ணாகமம்24:17).
57. வழி, சத்தியம், ஜீவன் (யோவான் 14:6).
58. உண்மையுள்ள சாட்சி (வெளிப்படுத்தல்1:5).
59. வார்த்தை (யோவான் 1:1, வெளிப்படுத்தல்19:13).

பாடம் 23 -- பஸ்கா

எகிப்தின் வாதைகள்:

யாத்திராகமம் 12 ல் கர்த்தரால் எகிப்திய தேவர்களுக்கு விரோதமான நியாயத்தீர்ப்புகளை பார்க்கிறோம்.

[அ] நைல் நதி என்பது, ஒசிரஸ் (Osirus) என்கிற கடவுளின் புணிதத்தன்மை வாய்ந்தது, இரத்தமாய் மாறியது -- அவர்கள் எதை ஆராதித்தார்களோ அது நாற்றமெடுக்க ஆரம்பித்தது. பிசாசுகள் புறஜாதியர்களின் தேவர்களின் பின்னிலையில் இருக்கிறதாய் இருக்கிறது.

[ஆ] ஹெக்கா (Heka) தவளை தேவதையை குறிப்பிடுவது ஆகும். -- அத்தேசத்தில் தவளைகள் பெருகின. எகிப்தியர்கள் தங்கள் மதக்கோட்பாட்டின் படி தவளைகளை கொலை செய்ய மாட்டார்கள், ஆகையால் தேவன் அவைகளை பெருகும்படி செய்தார்.

[இ] பேன்கள் -- எகிப்தியர்களின் புனித வண்டு -- கெப் (Geb) என்பது

இக்கடவுளின் பெயர், அவர்கள் சொறிந்து சொறிந்து இக்கடவுளை ஆராதித்தனர்.

[ஈ] ஈக்கள் மற்றும் பேன்கள் ரா (Ra) என்கிற கடவுளிடமிருந்து வருபவைகள், இவைகள் புறஜாதிய வழிபாட்டின் அசுத்தங்களைக் காட்டுகிறது.

[உ] அப்பிஸ் (Apis) என்பது அவர்களது எருதுக் கடவுள், இஸ்ரவேல் மக்கள் வனாந்திரத்தில் இதன் பிரதிபலிப்பாய் பொறகன்று குட்டியை உருவாக்கி தேவனுக்கு விசனமூட்டினர்.

[ஊ] எரிபந்தமான கொப்பளங்கள், எகிப்திய ஜனங்கள் மீதும் அவர்களது ஆசாரியர்கள் மீதும் உண்டாயின, இந்த ஆசாரியர்கள் வியாதியின்றி இருந்தால் மட்டுமே அவர்களது அலுவல்களில் ஈடுபட முடியும், இதன் மூலம் தேவன், அவர்கள் கடவுள்கள் என நம்பிக்கொண்டிருந்தது அனைத்தும் கடவுள்கள் அல்லர் என்பதை அவர்களுக்குக் காட்டினார்.

[எ] கல்மழை, ஒரு தேசத்தில் மழையின்றி இருக்கும்போது அவர்களுக்கு கல்மழை சொறியப்படும், இஸிஸ் (Isis) என்பது காற்றின் தேவதை ஆகும்.

[ஏ] வெட்டுக்கிளி என்பது பண்டைய உலகில், உலகப்பிரகாரமான சாபம் என அறியப்பட்டு வந்தது.

[ஐ] காரிருள் சூரியக் கடவுளான ரா (the sun god Ra.) வைத் தாக்கியது.

[ஒ] தலைச்சன்கள் அவர்களில் ஆசாரியர்கள் ஆகிறவர்கள், தேவன் அவர்கள் தவறு செய்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டி அவர்களுக்கு சத்தியம் அவசியம் என்பதை வலியுறுத்தினார்.

இப்படிப்பட்ட ஒன்பது வாதைகளுக்குப் பின்னர் மோசே பார்வோனை அணுகினார். பார்வோன் இன்னும் 2 மில்லியன் அடிமைகள் தனது தேசத்தில் அடிமைகளாய் வேலை செய்ய வேண்டும் எனச் சண்டையிடுவதற்கு ஆயத்தமாய் இருந்தான். தேவன் பார்வோனின் இருதயத்தில் அவன் எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்து முடிப்பதற்கு அவனை பலவந்தம் செய்தார். இது ஒரு தண்ணீரில் நனைத்த டவளை (துண்டை towel) முறுக்கேற்றுவதைப்போன்று இருக்கிறது, அதை முறுக்கேற்ற முறுக்கேற்ற அதில் உள்ள தண்ணீர் அனைத்தும் பிழியப்படும், இதைப்போன்றே பார்வோனின் உள்ளான மனநிலை, கர்த்தர் அளித்த அழுத்தத்தினால் பிழியப்பட்டது.

பஸ்கா நிகழ்வு இஸ்ரவேலின் தேசிய சரித்திரத்தில் ஒரு அடையாளத்தை ஆரம்பமாய் கொண்டு, பெந்தெகொஸ்தேயை சபையில் ஸ்தாபிக்க காரணமாயிற்று. இந்த இடத்தில் ஜனங்கள் தாங்கள் பலியிடப்பட்ட மிருகங்களின் இரத்தத்தினால் மூடப்பட்டனர் என விசுவாசித்தனர். 1 கொரி. 10:1-3 -- இங்கு இஸ்ரவேலர்கள் மோசேயுடன் இனங்கண்டு கொள்ளப்பட்டனர். இதுவே மோசேயின் ஞானஸ்நானம் என

அழைக்கப்படுகிறது.

இங்கு இரட்சிக்கப்பட்ட திரள் கூட்டம் ஜனங்களை பெற்று இருக்கிறோம். விசுவாசிகள் சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் இன்று இரவு விடுதலையாகப் போகிறார்கள். தேவன் இன்று இரவு சங்காரத்தூதனை அனுப்பி மரணத்தை வருவிப்பதன் மூலம், எல்லா இஸ்ரவேலர்களுக்கும் தேவன் ஒரு மார்க்கத்தை அளிக்க உள்ளார்.

மனவெழுச்சியின் வாரம்:

யாத்திராகமம் 12:3 ல் ஒவ்வொரு வீட்டாரும் நிசான் மாதம் பத்தாம் தேதியில் ஒரு பழுதற்ற ஆட்டுக்குட்டியை தங்களுக்காய் எடுத்துக் கொள்ள வேண்டும். அது வெள்ளாட்டிலிருந்தாவது அல்லது செம்மறி ஆட்டிலிருந்து, எவ்வித ஊணமுமின்றி, ஆண் ஆட்டுக்குட்டியாய் இருக்க வேண்டும். அதை அம்மாதம் பதினான்காம் தேதி வரை பாதுகாத்து அதில் ஏதாகிலும் பழுதுண்டா எனப் பார்த்து, அதில் பழுதில்லை என நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து எருசலேமிற்குள் பத்தாம் தேதியில் கடந்து வந்தார். அவர் சிலுவையில் அறையப்பட்டது பதினான்காம் தேதியாய் இருந்தது. இக்காலக் கட்டத்தில் யூதர்கள் அவரைப் பார்த்து, பரீட்சை செய்து, அவரில் ஏதேனும் பழுதுண்டோ என சோதித்தறிந்தனர். "சாயங்காலத்தில்" என்னும் வார்த்தைகள் சாயங்காலகளுக்கு இடைப்பட்ட காலத்தைக் குறிக்கும் சொல்லாய் பயன்படுத்தப் பட்டது.

யூதர்களின் நாள் ஆரம்பம் மாலை 6 மணி துவங்கி மறு நாள் மாலை 6மணியுடன் முடிவடையும். அதாவது ஒரு சூரிய அஸ்தமணத்திலிருந்து மறு சூரிய அஸ்தமணம் வரைக்குமுள்ள இடைப்பட்ட காலம் ஒரு நாள் எனக் கணக்கிடப்படுகிறது. (வாழ்வின் துவக்கம் இருளில் துவங்குகிறது, இவ்வண்ட சராசரத்தின் துவக்கமும் இருளில் துவங்கி வெளிச்சத்திற்கு வந்தது). கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் சரீரப்பிரகாரமாய் ஆட்டுக்குட்டி கொலை செய்யப்பட்டு மரிக்கும் அதே நேரத்தில் தனது ஜீவனை விட்டார். மாலை 3 மணிக்கு. இதினிமித்தம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பஸ்கா ஆடுக்குட்டியாய், உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்த்த தேவ குட்டியாய் விளங்குகிறார்.

பஸ்கா ஆடுக்குட்டின் இரத்தம் வீட்டு நிலைக்கால், மற்றும் ஜன்னலின் சட்டத்தின் இரு பக்கங்களிலும் பூசப்பட்டது. இப்படிப்பட்ட காரியத்தை அவர்கள் இதற்கு முன் ஒருபோதும் செய்ததில்லை.

எகிப்தின் சீதோஷ்ண நிலையில் கதவின் நிலைக்கால்களில் இரத்தம் பூசப்படும் என்றால் அது ஈக்களை கவர்ந்திழுக்கக்கூடியதாய் இருந்தது. இது அவ்வாறு செய்வது அவ்வளவு புத்திசாலித்தனமாய் இல்லாத போதும், தேவன் இவ்வாறு சொன்னார் கீழ்ப்படிவது அவர்கள் கடமையாய் இருந்தது. இந்த இரவில் இவர்கள் ஒரு விசுவாசிகளின் தேசமாகிறதற்கு முன்னுள்ள

இவர்களது தேசத்தை திரும்பிப் பாருங்கள். யாத்திராகம வழி மூலம் செல்வதற்கு அவர்கள் அநேக முறை தவறிப்போனதால், இருவர் மட்டுமே கானான் தேசத்திற்குள் நுழைந்தனர்.

அந்த பஸ்கா ஆட்டுக்குட்டியின் இறைச்சியை முழுவதுமாய் சாப்பிட்டு அதில் மீதி எதுவும் வைக்கக்கூடாது என்கிற கட்டளைக்கு அவர்கள் கீழ்ப்படிய வேண்டியதாய் இருந்தது. அதின் இறைச்சியை சுட வேண்டும் அதை வேகவைக்கக்கூடாது. அதன் முழுமையும் அதாவது அதன் குடல்களோடு அதை சுடவேண்டும். இதுக் கிறிஸ்துவோடுள்ள ஐக்கியத்தைக் குறித்து பேசுகிறதாய் இருக்கிறது. கர்த்தர் தனது ஆளத்துவத்தில் இருக்கும்போது ஐக்கியமுள்ளவராய் இருந்தார். அவர் தேவமனிதனாய் கல்வாரிக்குச் சென்றார். நீங்கள் அவரை முழுமையாய் நம்பி இரட்சிப்படைதல் வேண்டும்.

அவர்கள் பஸ்காவை புசிக்கும் போது பயணம் செல்ல ஆயத்தமுள்ளவர்களாய் பாதரட்சகளை தொடுத்துக் கொண்டு ஆடை அணிந்து கொண்டு, கையில் தடிபிடித்துகொண்டு பஸ்காவை புசித்தல் வேண்டும். ஒரு வேளை ஓட வேண்டுமென்றிருந்தால் அங்கியை மடித்து அரைக்கச்சையில் சொறுகிக்கொண்டு ஆயத்தமான நிலையில் இருத்தல் வேண்டும். பஸ்கா உணவானது சமுதாய உணவாய் இராமல், அது ஆவிக்குரிய உணவாய் இருந்தது. இந்த நாளில் எகிப்தியரின் தலைச்சன்கள் யாவும் அழிக்கப்பட்டது, இரத்தத்தினால் மூடப்படாத மனிதரானாலும், மிருகங்களானாலும் சங்கரிக்கப்பட்டது.

அவர்கள் புளிப்பில்லாத அப்பம் புசித்தல் வேண்டும், புளிப்பு தீமையின் அடையாளமாய் இருக்கிறது. பஸ்கா கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிரியை மற்றும் அவரது ஆளத்துவத்தைக் குறித்துப் பேசுகிறது. அவரும் அவரது கிரியைகளும் பூரணமானவைகளாய் இருக்கிறது. இதோடு கூட சேர்க்கப்படும் திராட்சை இரசமும் புளிப்பு சேர்க்கப்படாத இரசமாய் இருந்தது. இக்காலத்தில் புளிப்பை புறம்பாக்கும் காலமாய் இருக்கிறது. அழுகுதல் அல்லது தீமை இதற்குள் அனுமதிக்கப்படுவதில்லை என்கிற அடிப்படை கோட்பாட்டுடன் இது இருக்கிறது. இது மேசியாவை எதிர் நோக்கும் ஒரு விருந்தாய் ஆசரிக்கப்பட்டது. இது ஒரு முழுமையை சித்தரிக்கும் படமாய் இருக்கிறது.

எகிப்து:

அவர்கள் எகிப்தை விட்டு வெளியே வந்தனர். எகிப்து மதத்தின் அடையாளமாய் இருக்கிறது. இம்மதம் கடவுள் இல்லாத மதமாய், தவறான மதமாய் இருந்தது. எகிப்திய மதம் இஸ்ரவேலர்களை அப்பிஸ் (Apis), மற்றும் பொன்கன்றுகுட்டியை வணங்கும் வணக்கங்களினால் கவர்ந்து கொண்டனர். எகிப்திய சடங்குகளில் காணப்படும் அழகு மற்றும் வளமை போன்றவை இஸ்ரவேல் மக்களை கவர்ந்து கொண்ட விஷயங்கள் ஆகும். இஸ்ரவேலரை எகிப்திலிருந்து தேவன் வெளியே எடுத்துக்கொண்டு வந்திருந்தபோதும், அவர்களில் இருந்த எகிப்தை வெளியே எடுத்துப்

போடுவதற்கு நாற்பது ஆண்டுகள் பிடித்தது. இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியே வந்திருந்தும், இன்னும் அவர்களது பழக்கவழக்கங்கள், மற்றும் அவர்களது மதம் போன்றவற்றை அவர்கள் தழுவுகிறவர்களாகவே இருந்தனர். இந்த மதத்தின் பழக்கவழக்கங்கள் மற்றும் ஆராதனைகள் போன்றவைகள் முற்றிலும் தேவன்து சத்தியத்தின் பூரணத்திற்கும் பரிசுத்தத்திற்கும் புறம்பானவைகளாய் இருந்தது.

யாத்திராகமம் 12 ல் வரக்கூடிய பூரணத்திட்டத்திற்கு, பூரண விளக்கங்களின் அவசியத்தை கண்டுகொள்ள் விளக்கம் தரப்படுகிறதாய் இருக்கிறது. சாத்தானின் திட்டத்தில், எகிப்திய அமைப்பிலிருந்து, இஸ்ரவேலர்கள் சில அடிப்படைகளை கைக்கொள்ள வைத்து இருந்தான். இன்றைய விசுவாசிகளும் இதைப் போன்ற தவறுகளை யாத்திராகமச் சந்ததியினரைப் போன்றே செய்கிறவர்களாய் இருக்கிறார்கள். நாம் நமது வாழ்விலும் கடந்த கால புறஜாதிய பழக்கவழக்கங்களுக்குட்பட்டு, அவைகளை தொடர்ந்து வாழ்க்கையில் பயன்படுத்தி வருகிறோம். நாம் ஒருபோதும் ஒத்துப்போகக்கூடாத காரியங்களில் ஒத்துப் போகிறவர்களாய் காணப்படுகிறோம். எல்லோரும் செய்கிறார்கள் அதனால் பராவாயில்லை என்கிறோம். இது தவறாய் சித்தரிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

தேவனுடைய திட்டம் கிருபையின் மூலம் விசுவாசத்தைக் கொண்டு, பரிசுத்த ஜனமாய் இருக்க வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்துகிறதாய் இருக்கிறது. மற்ற எவ்வழியும் ஏற்றுக்கொள்ளப்படுகிறதாய் இல்லை.

பஸ்காவிற்கும் இரட்சிப்பிற்கும் இடையே உள்ள ஒற்றுமைகள்:

[அ] பாவத்தின் சம்பளம் மரணம் - ரோமர் 6:23 - இங்கு நியாயத்தீப்பானது சித்தரிக்கப்படுகிறது. பஸ்கா இரவில் எகிப்து தேசத்தில் அந்த இரவு நியாயத்தீர்ப்பின் இரவாய் இருந்தது.

[ஆ] தேவன் பதிலீடான பலியை விசுவாசித்தவர்கள் மட்டுமே இரட்சிக்கப்பட முடிந்தது. இதை மட்டுமே ஜனங்கள் விசுவாசிக்கும் படி கட்டளைப் பெற்றனர், விசுவாசத்தின் மூலம் கிருபையைக் கொண்டு இரட்சிக்கப்பட்டனர். எபேசியர் 2:8,9.

[இ] பஸ்காவில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தமானது, உண்மையான பஸ்காவாகிய இயேசுக்கிறிஸ்துவை குறித்து பேசுகிறதாய் இருக்கிறது. யோவான் 1:29 எபிரெயர் 9:13,14, 28.

[ஈ] 1 கொரிந்தியர் 10 ல் பவுல் எகிப்தை விட்டு வெளியேறியவர்கள் விசுவாசிகளாய் இருந்தனர், அவர்கள் சங்கார தூதனால் அழிவைக் காணாது இருந்தனர், இது விசுவாசிக்கும் அவிசுவாசிக்குமுள்ள வேறுபாட்டைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது. யாத்திராகமம் 12:29.

[உ] எகிப்தில் அவர்களது தலைச்சன்கள் அனைத்தும் மரித்தமையால்

கூக்குரல் கூடிக்கொண்டே சென்றது. எகிப்தியரைச் சுற்றிலும் மிகவும் அதிகமான எண்ணிக்கையில் பிணங்கள் கூடிக்கொண்டே சென்றது. பண்டைய உலகில் மரித்தவர்களுக்காய் கூக்குரலிட்டு ஒப்பாறி வைப்பார்கள்.

மரண தூதன்:

நைல் நதியின் நூறு கிலோமீட்டர் தூரத்திற்கு ஒரே கூக்குரல் சத்தமாய் இருந்தது. அவர்கள் அனைவருக்கும் அவர்கள் நியாயந்தீர்க்கப்படுகிறார்கள் என்கிற செய்தி வேகமாய் பரவியது. பார்வோனின் மனைவி மரித்துப்போன பார்வோனின் குமாரனுக்காய் கூக்குரலிட்டாள். எகிப்து தேசத்தில் தலைச்சன்கள் அனைவரும் ஆசாரியர்கள் ஆக வேண்டியவர்கள். அந்த இரவில் ஆசாரியர்கள் ஆக வேண்டிய அனைத்து தலைச்சன் யாவரும் கொலை செய்யப்பட்டனர்.

அந்த இரவில் தானே பார்வோன் மோசேயையும், ஆரோனையும் அழைத்து, எகிப்தைவிட்டு உங்கள் தேவனுக்கு ஆராதிக்கச் செல்லுங்கள் என்றான். உங்கள் ஆடு மாடுகள், மற்றும் உங்களுக்குரியவைகள் அணைத்தையும் எடுத்துக் கொண்டு செல்லுங்கள், இவ்வாறு நடைபெறுவதை நிறுத்துங்கள் என்றான். யூதர் ஆறு மணி தொடங்கி நடு இராத்திரி வரை வயிறு நிறைய சாப்பிட்டு பிரயாணத்திற்கு ஆயத்தமாய் இருந்தார்கள். நானூறு ஆண்டுகள் கூலியின்றி இஸ்ரவேவர்கள் எகிப்தியருக்கு சேவகம் செய்தவர்களாய் இருந்தனர். பஸ்காவின் போது அவர்களது நானூறு ஆண்டு கால சம்பளத்தை திரும்ப பெற்றுக்கொண்டனர். அவர்கள் எகிபதை விட்டு மிகுந்த ஐசுவரியத்துடன் விடுதலை பெற்ற ஜனங்களாய் வெளியேறினர்.

ஏறத்தாள 20,00,000 ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறினர். ஒரு முழு தேசம் வெளியேறுவது சரித்திரத்தில் முக்கியம் வாய்ந்ததாய் இருந்தது.

யோசுவாவில் நமக்கு பதினோறு சந்ததியினர் அடிமைத் தனத்தில் இருந்தனர் எனப்பார்க்கிறோம். அவர்கள் ஆபிரகாமின் உடன்படிக்கையின் பிரகாரம் 430 ஆண்டுகளுக்கு பின்னர் வெளியேறினர். யாத்திராகமம் 12:48ல் உடன் படிக்கையின் படி அவர்கள் எல்லோரும் விருத்தசேதனம் பண்ணப்பட்டவர்களாய் இருந்தனர். இதுவே அவர்கள் இரட்சிக்கப்பட்டு இருந்தனர் என்பதற்கு அடியாளமாய் இருந்தது.

யாத்திராகமச் சந்ததியினர் பரீட்சிக்கப்படுதல்:

எகிப்திலிருந்து இஸ்ரவேலுக்கு கால்நடைப்பயணமாய் சென்றால் ஒரு வாரத்தில் சென்று அடையலாம். பண்டைய உலகில் முக்கிய சாலை கடலைத் தொடர்ந்து காணப்பட்டது. இது இலகுவான வழி ஆனால் தேவன் ஒரு திட்டம் வைத்திருந்தார். ஒரு காரியமும் திடீரென நிகழ்வது இல்லை. தேவன் இந்த ஜனங்களைக் குறித்து அறிந்து இருந்தார் மற்றும் அவர் அவர்களுக்கு எண்ணிறந்த பரீட்சைகளை அளிக்க இருந்தார். அவர் அவர்களுக்கு வாக்குத்தத்தத்தை விரைவாய் சென்றடையும் வழியை

அளிப்பதாய் இல்லை. உங்களை வனாந்தரத்தில் அவர் அழைத்துச் செல்வார் என்றால் அதைக்குறித்து முறையிடாதிருங்கள். அவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாய் இருந்தும், செல்ல, செல்ல தோல்வியைத் தழுவினார்கள்.

அவர்கள் நம்பி முன்செல்ல அவசியமாய் இருந்தது. 1 கொரி. 10:13 - அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு தீர்வு இருந்தது, அவர்களுக்கு எப்பொழுதும் ஒரு பதில் இருந்து கொண்டே இருந்தது. நாம் அவர்களது தோல்வியை திரும்பசெய்யாது இருத்தல் அவசியம் எபிரெயர் 4 ல் கூறப்பட்டுள்ள படி.

ஆதியாகமம் 50:24-26 ல் மோசே யோசேப்பின் எலும்புகளை எடுத்துக்கொண்டார் அது இஸ்ரவேலருக்கு கொடி போன்று இருந்தது. அவர்கள் யோசேப்பின் சவப்பெட்டியை விசுவாசத்துடன் பின்சென்றனர். யோசேப்பின் விசுவாசம் ஜெயம் பெற்றது. நாம் தோல்வி அடையும் போது, சிலுவையை நோக்கிப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் அவருடன் நடப்பதை நிறுத்திவிட்டோம், அவரை நம்ப மறுத்துவிட்டோம். தேவன் அவர்களுக்கு பிரதியட்சமாய் காணப்பட்டார், பகலில் மேகஸ்தம்பமாகவும், இரவில் அக்கினி ஸ்தம்பமாகவும் இருந்தார். நமக்கு இன்றைய அளவில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நம்முடன் இருக்கிறார்.

உபதேசங்கள்:

திருவிருந்து: கர்த்தரின் இராப்போஜனம்

1.மூன்று இராப்போஜனத்துக்கு மனிதர் அழைக்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்:-

a) சுவிஷேச இராப்போஜனம் (லூக்கா 14:15-24)
b) ஆட்டுக்குட்டியனவரின் கலியாண விருந்து (இராப்போஜனம்) (வெளிப்படுத்தல். 19:7-9)
c) கர்த்தரின் இராப்போஜனம் (1 கொரிந்தியர் 11:23-29)

2. சுவிஷேச இராப்போஜனத்தை ஏற்றுக்கொண்டவர்கள், ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திலும் காணப்படுவர், பூமியிலிருக்கும் காலம் வரைக்கும் கர்த்தரின் இராப்போஜனத்திலும் பங்கு பெறுவர்.

3’ கர்த்தரின் இராப்போஜனத்தில், விசுவாசி தியானிக்க வேண்டியவை:

a) சொந்த இரட்சக்ராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணம்
b) உயிர்த்தெழுந்த இயேசுக்கிறிஸ்து தனக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுவதை,
c) கர்த்தர் தமது சபைக்காக மீண்டும் வருவார் மற்றும் பூமியில் தனது ஆழுகையை ஸ்தாபிப்பார்.

4. கர்த்தரின் இராப்போஜனம் பஸ்காவிலிருந்து தோன்றியது. (யாத்திராகமம் 12:1-11, 1 கொரிந்தியர் 11:23-32). கிறிஸ்துவாகிய பஸ்கா நமக்காய் பலியிடப்பட்டிருக்கிறார். (1கொரிந்தியர். 5:7)

5. அப்பம், அவரது சரீரம் நமது பாவங்களுக்காக சிலுவையில் நொறுக்கப்பட்டதை பிரதிபலிக்கிறது. (1கொரிந்தியர்11:24). திராட்சை ரசம், அவரது இரத்தத்தை பிரதிபளிக்கிறது மற்றும் நமது இரட்சிப்புக்கு உத்திரவாதமாய் இருக்கிறது. இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு இல்லை. (1 கொரிந்தியர். 11:25)

6. சத்துருக்களுக்கு முன்பாக கர்த்தர், விசுவாசிகளுக்கு தமது பந்தியை ஆயத்தப்படுத்துகிறார். (சங்கீதம் 23:5).

7. விசுவாசி ஐக்கியத்தில் இருந்துகொண்டு, கர்த்தரின் இராப்போஜனத்தைக்குறித்து உள்ள அர்த்தத்தை நிதானித்து அறிய வேண்டும். (1 கொரிந்தியர்.11:29).சுயமாய் நீதிகரித்தல் மூலம் இது செய்து முடிக்கப்படுகிறது. (1 கொரிந்தியர். 11:31, 1 யோவான் 1:9)

8. தேவனோடு ஐக்கியமில்லாது கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுப்பது வியாதி அல்லது மரணத்தில் கொணடுபோய்விடலாம். (1 கொரிந்தியர். 11:30)

ஞானஸ்நானம்

1. பேச்சு வழக்கில் இருந்த கிரேக்கமொழியில் "ஞான்ஸ்நானம்" என்ற சொல் வழக்கச்சொல்லாக இருந்து வந்தது. (350 கி.மு)
    a) ஆங்கில மொழியில் இப்பதம், 'பாப்டிஜோ' என்ற கிரேக்கச்சொல்லில் இருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டது, இதன் மூல மொழியின் அர்த்தம், அடையாளம் கண்டுகொள்ளுதல். இச்சொல்லை கிரேக்க கவிஞர்கள், நாடக எழுத்தாளர்கள், சரித்திர வல்லுநர்கள் தங்களது காவியங்களில் பயன்படுத்தினர். பொதுவாக சரித்திர வல்லுனர்கள் இப்பதத்தினை, ஓர் பொருள் இரண்டாம் பொருளுடன் சேர்ந்து தனது இயல்பான தன்மை, குணங்கள் மாற்றப்படுவதை வருணிக்க இப்பதத்தை பயன்படுத்தினர்.
    b) உதாரணமாக சென்பன் (கி.மு நான்காம் நூற்றாண்டு) என்பவர், ஸ்பார்ட்டன் யுத்த வீரர்கள், யுத்தத்திற்குச் செல்லுமுன்னார், தங்களது ஈட்டியை பன்றியின் இரத்தத்தில் தோய்த்து எடுத்துச்செல்வார்களாம், இதன் பொருள் தங்களது ஈட்டி, வேட்டையாட பயன்பட்டதிலிருந்து,

யுத்தித்திற்கு பயன்படப்போகிற தன்மை படைத்ததாய் மாறிவிட்டது என்பதைக்காட்ட, இப்படி செய்வார்கள் எனக்கூறுகிறார்.

c) யூரிப்பெடஸ் (கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு) இச்சொல்லை கடலில் மூழ்கும் கப்பலை விவரிக்கப் பயன்படுத்துகிறார். கப்பல் மூழ்க, மூழ்க அதன் தன்மை, குணங்கள் மாறுகின்றன. இப்பொழுது கப்பலை அடையாளம் கண்டுகொள்வோமென்றால், அது மிதக்கும் தன்மை மாறி, உடைந்துபோய் மூழ்கும் தன்மையை பெற்றுள்ளது. மூழ்குதல் என்ற பதம் ஞானஸ்நானம் ("baptised") என்கிற சொல்லாக பயன்படுத்தினர்.

2. பேச்சு வழக்கு கிரேக்க மொழியில் இதன் பொருள்:

a) வினைச்சொல்: "பாப்டோ" தண்ணீரில் முழுகச்செய் (லூக்கா 13:26, லூக்கா 16:24)

b) வினைச்சொல்: "பாப்டிஜோ" தண்ணீரில் முழுகச்செய், தண்ணீரில் மூழ்கு, கழுவி சுத்தம் செய்,

c) பெயர்ச்சொல்: "பாப்டிஸ்மாஸ்" பாத்திரங்களை கழுவுதல், (மாற்கு 7:4) ஞானஸ்நானத்தின் உபதேசம் (எபிரெயர் 6:2)

d) பெயர்ச்சொல்: "பாப்டிஸ்மா" ஞானஸ்நான சடங்கு (மத்தேயு 3:7, 21:25) ஆவிக்குரிய ஞானஸ்நானம் (ரோமர் 6:4) இரத்தசாட்சியின் ஒப்புமை (மாற்கு 10:38, லூக்கா 12:50)

e) பெயர்ச்சொல்: பாப்டிஸ்டஸ்: யோவான் ஸ்நானகனைப்போல, ஞானஸ்நானம் கொடுப்பவர் (மத்தேயு 3:1, 11:11, மாற்கு 6:25)

3. *மெய்யான ஞானஸ்நானங்கள்*: உண்மையான நிலையில் அடையாளம் கண்டுகொள்ளப்படுதல் - மெய்யான ஒன்றுடன், ஒரு நபர் அடையாளம் கண்டுகொள்ளப்படுதல். இவைகள் உலர்ந்த ஞானஸ்நானம். இப்படிப்பட்ட ஞானஸ்நானத்திற்கு தண்ணீர் அவசியமற்றது. நான்கு மெய்யான ஞானஸ்நானங்கள் இருக்கின்றன.

அ] மோசேயின் ஞானஸ்நானம்: இது செங்கடலில் இஸ்ரவேல் மக்களின், இரட்டிப்பான நிலையில், அடையாளம் கண்டுகொள்ளப்படுதலை குறிக்கிறது.

அ) மோசேயுடன் - இது மோசேயின் விசுவாசத்தில், தலமைத்துவத்தில், விடுதலையில் இஸ்ரவேல் ஜனங்கள் அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றனர். "மோசேக்குள்ளாக" ஜெயமடைந்தனர். (1 கொரிந்தியர் 10:2)

ஆ) மேகங்களுடன் - இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுடன் (மேகத்துடன்) அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றனர். அவர் இஸ்ரவேல் ஜனங்களை செங்கடலின் நடுவே உலர்ந்த தரை வழியே நடக்கப்பண்ணி, அவர்களைப் பின்தொடர்ந்த அவர்களது சத்துருக்களை செங்கடலில் அழித்துப்போட்டார். அவர்கள் "தேவனுக்குள்ளாக" ஜெயமடைந்தனர்.

ஆ] அக்கினியின் ஞான்ஸ்நானம்: அவிசுவாசிகள் அணைவரும், நியாயத்தீர்ப்பில் அடையாளம்

கண்டுகொள்ளப்படுகின்றனர்.(மத்தேயு 3:11, 13:24 - 30, 2 தெசலோனிக்கேயர் 1:7-9)

இ] ஞானஸ்நானத்தின் பாத்திரம்: சபை யுகத்தில் வாழும் விசுவாசிகள், இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை மரணத்திற்குப்பின் உள்ள ஜெயத்தில் (வெற்றியில்) அடையாளம் கண்டுகொள்ளப்படுகின்றனர். இயேசுக்கிறிஸ்து நமது பாவங்களில் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார். (மத்தேயு 26:39, 2 கொரிந்தியர் 5:21)

ஈ] பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்: சபை யுகத்தில் விசுவாசிகள் கிறிஸ்துவின் சரீரத்தில் நுழைவதை இது காட்டுகிறது, இதினிமித்தம் கிறிஸ்துவில் சகலமும் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறது. (1 கொரிந்தியர் 12:13, ரோமர் 6, எபேசியர் 1:3)

4. *ஞானஸ்நானங்களின் சடங்கு:* இது தண்ணீருடன் சம்பந்தப்பட்டது. இது கீழ்க்கண்ட காரியங்களை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது

அ) இயேசுக்கிறிஸ்துவின் ஞானஸ்நானம்: தனித்தன்மை வாய்ந்தது (மத்தேயு 3:13-17) தண்ணீர் பிதாவின் திட்டத்தை பிரதிபலிக்கிறது. இயேசுக்கிறிஸ்து பிதாவின் சித்தமாகிய, சிலுவைக்கு செலவதை தன்னில்தானே அடையாளம் கண்டுகொள்கிறார்.

ஆ) யோவானின் ஞானஸ்நானம்: (மத்தேயு 3:1-11, யோவான் 1:25-33, அப்போஸ்தலர் 18:25). தண்ணீர் தேவ இராஜ்யத்தை பிரதிபலிக்கிறது. யோவான் மூலம் ஞானஸ்நானம் பெற்றவர்கள் இயேசுக்கிறிஸ்துவுடனும், அவரது இராஜ்யத்திலும் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார்கள்.

இ) விசுவாசிகளின் ஞானஸ்நானம்: (அப்போஸ்தலர் 2:38,41; 8:36-38; 9:18, 10;47-48; 16:33).

i) தண்ணீர் இயேசுக்கிறிஸ்துவின் கிரியையை பிரதிபலிக்கிறது.

ii) சபை யுக விசுவாசிகளுக்கு, ஞானஸ்நானம் என்பது, கிறிஸ்துவின் மரணம் (தண்ணீரில் முழுகுவது) கிறிஸ்துவின் அடக்கம் (தண்ணீருக்குள் இருப்பது) மற்றும் அவரது உயிர்த்தெழுதல், உயிர்த்து புதிய ஜீவனை உடையவர்களாதல், (தண்ணீரை விட்டு வெளிவருதல்) இது போன்றவைகளால் கிறிஸ்துவில் அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார்கள்.

ஈ) சபைக்காக இரு விதிமுறைகள் உள்ளன:

i) தண்ணீர் ஞானஸ்நானம் - ஒரே ஒரு முறை நிகழ்வது; இரட்சிப்பை பிரதிபலிக்கிறது.

ii) திரு விருந்து - திரும்பத் திரும்ப நடைபெறுவது; ஐக்கியத்தைப் பிரதிபலிக்கிறது.

பார்வோன் -- தேவனின் வல்லமை

1. வேதபகுதி -- யாத்திரகமம் 7:7 - 14:28.

2. சுயசரிதை:

பார்வோன் என்பது எகிப்திய இராஜாக்களின் தலைப்பாய் இருக்கிறது. இத்தலைப்பு சிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் இராஜா சூரியக்கடவுளாகிய [Ra.] ராவின் பிரதிநிதியாய் இருக்கிறான் என்பதைக் காட்டுகிறது. இங்கு நாம் காணும் பார்வோன், அவன் யாத்திராகமத்தின் பார்வோனாய் இருக்கிறான். இவனை இனங்காணுதல் அறியப்படாதாய் இருக்கிறது. அநேகர் இவன் ராமசேஸ் 11 ஆக இருக்க வேண்டும் என்கின்றனர், ஆனால் வேதாகமம் யாத்திராகச் சம்பவத்தை இவனது ஆழுகை காலமாகிய 1301 - 1234 கி.மு. வுக்கு முன்னுள்ளதாய் காண்பிக்கிறது. 1 இராஜக்கள் 6:1 ல் 1450 கி,மு வில் அமென்ஹொடெப் 2 Amenhotep II யாத்திராகமக்கால பார்வோன் எனச் சுட்டிக்காட்டுகிறது. அப்போஸ்தலர் 13:18-21 ல் இதன் காலம் 1530 கி.மு என்கிறது. யாத்திராகமக்கால பார்வோன் மூட நம்பிக்கை மிகுந்தவனும், நிலையற்றவனாய் இருந்தான் எனக்காண்கிறோம். அவன் மோசேயும் ஆரோனும் செய்த அதே அற்புத வாதைகளை அவனது மந்திரவாதிகளும் செய்யும்படி எதிர்பார்த்தான். செங்கடலில் அவனும் அவனது இராணுவமும் அழியுமட்டும் அவன் இஸ்ரவேலருக்கு தீங்கு செய்ய மனதாய் இருந்தான். உலகப் பிரசித்தி பெற்ற பார்வோன் முன்னிலையில், வனாந்திரத்தில் நாற்பது ஆண்டுகள் ஆடு மேய்த்த ஒரு மனிதனை தேவன் அனுப்பி வைத்தார். பத்து வாதைகள் பார்வோனுக்கு அதிகமான அழுத்தத்தை கொண்டுவருகிறதாய் இருந்தது. எப்படியிருப்பினும் பார்வோன் தேவனது வல்லமைக்கு எதிராய் கிரியை செய்கிறவனாய் இருந்தான், இவன் தொடர்ந்து இஸ்ரவேலரை பின்தொடர்ந்து சென்று தனது ஜீவனை இழந்தான்.

3. மதிப்பீடு செய்தல்:

a) யாத்திராகமம் 7:7-13. ல் மோசே மூலம் ஆரோனுக்கு கர்த்தர் அவனது கோலை சர்ப்பமாய் மாற்றும்படி கூறினார். பார்வோனும் தனது மந்திரவாதிகளும் அப்படியே செய்யும் படி பணித்தான். ஆரோனின் சர்ப்பமானது மந்திரவாதிகளின் சர்ப்பத்தை விழுங்கி போட்டது. பார்வோனின் இருதயம் கடினப்பட்டது. (வச 13).
b) யாத்திராகமம் 7:14-25. நைல் நதி விக்கிரக ஆராதணைக்குரியதாய் இருந்தது. அது ஜீவனை அளிக்கிறது என அதன் தண்ணீர் ஆராதணைக்குரியதாய் இருந்தது. முதல் வாதை இதன் தண்ணீர் இரத்தமாய் மாறியது ஆகும். தேவன் நைல் தேவதையை சிறுமைப் படுத்தினார். பார்வோனின் இருதயம் கடினப்பட்டது (வச 22).
c) யாத்திராகமம் 8:1-15. ஹெக்ட், [Hekt,] தவளை தலை கொண்ட தேவதை, வெளியே கொண்டுவரப்பட்டாள், நிலமானது திரளான தவளைகளால் நிரம்பும்படிக்கு ஆரோனும் எதிப்திய மந்திரவாதிகளும் செய்தனர். பார்வோனின் இருதயம் கடினப்பட்டது (வச 15).

d) யாத்திராகமம் 8:16-19. செப் [Seb,] என்னும் நிலத்தின் கடவுளுக்கு எதிராய் திருப்பப்பட்டது. மந்திரவாதிகளால் இவ்வற்புதத்தை செய்ய இயலாமல் போனது அவர்கள் இது தேவனுடைய கிரியை என்றனர் (வச 19). பார்வோனின் இருதயம் கடினப்பட்டது (வச 19).
e) யாத்திராகமம் 8:20-32. ஈக்கள் பழங்கால எகிப்தியர்களால் புனித வண்டாக கருதப்பட்டது, ஸ்கரபியஸ் க்கு [Scarabaeus] விரோதமாய் இப்புனித வண்டுகள் எகிப்தியர் மீது திரளாய் வந்தன. பார்வோன் சமரசமானான், பின்னும் அவன் தனது இருதயத்தைக் கடினப்படுத்தினான் (வச 32).
f) யாத்திராகமம் 9:1-7. எகிப்திய மிருக ஜீவன்கள் அனைத்தும் மரித்தது அபிஸ் க்கு [Apis,] நேராய் இருந்தது, இது எகிப்தியரின் புனித காளை ஆகும். இஸ்ரவேலரின் மிருக ஜீவன்கள் அனைத்தும் பாதுகாக்கப்பட்டன. பார்வோனின் இருதயம் கடினப்பட்டது. (வச 7).
g) யாத்திராகமம் 9:8-12. எரிபந்தமான கொப்புளங்களால் வாதிக்கப்பட்டது, ஆரோக்கிய தேவதை நெய்ட் க்கு [Neit,] விரோதமான நியாயத்தீர்ப்பாய் இருந்தது. கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார் (வச 12).
h) யாத்திராகமம் 9:13-35. அக்கினியும் கல்மழையும் ஷு [Shu,] என்கிற கடவுளுக்கு எதிரான நியாயத்தீர்ப்பாய் இருந்தது, இக்கடவுள் ஆகாயத்தின் கடவுளாய் எகிப்தியரால் கருதப்பட்டது. பார்வோனின் இருதயம் கடினப்பட்டது. (வச 35).
i) யாத்திராகமம் 10:1-20. எகிப்தியர்கள் செராப்பியாவை [Serapia,] வழிபட்டு வந்தனர். இது வெட்டுக்கிளிகளின் கடவுள். தேவன் வெட்டுக்கிளிகளின் வாதையை அனுப்பினார். கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார் (வச 1,20).
j) யாத்திராகமம் 10:21-29. ஒன்பதாவது வாதை, இயற்கைக்கு அப்பாற்பட்ட அந்தகாரம், இது ரா [Ra,] என்னும் சூரியக்கடவுளை செயல் இழக்கச் செய்ததைக் காட்டுகிறதாய் இருக்கிறது. கர்த்தர் பார்வோனின் இருதயத்தைக் கடினப்படுத்தினார். (வச 27).
k) யாத்திராகமம் 11:1 - 12:36. பார்வோனின் குமாரன் மனிதக் கடவுளின் பிரதிநிதியாகக் கருதப்பட்டான். முடிசூட்டப்படும் இளவரசன் மரித்த போது, பார்வோன் இஸ்ரவேல் ஜனங்களை போகவிட்டான்.

4. அடிப்படை கோட்பாடுகள்:

a) தேவன் தனக்கு முன்பாக மற்ற கடவுள்களைப் பொறுத்துக்கொள்ள மாட்டார் (யாத்திராகமம் 20:3).

b) வாதைகளின் ஆரம்பத்தில் பார்வோன் தனது இருதயத்தை கடினப்படுத்தினான், இறுதியில் தேவன் அவனது இருதயத்தைக் கடினப்படுத்தினார் (ரோமர் 9-17,18).

c) மனிதனின் எதிர்மறையான செயல்கள், ஆவிக்குரிய காரியங்களில் நிலைத்து இருக்குமேயானால், அதன் விளைவு ஒரு நபரை கிறிஸ்துவை விசுவாசிப்பதிலிருந்து வலுவிழக்கச்செய்கிறதாய் இருக்கிறது. (வெளி. 14:9-11; எபிரெயர் 4:1-3).

d) தேவன் அவிசுவாசிகளை தனது மகிமையைக் காட்டப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். (ரோமர். 9:17).

e) தேவனுடைய வல்லமையால் நிகழும் அற்புதங்களைப் போன்றே, சில அற்புதங்களை சாத்தனின் வல்லமையை பயன்படுத்தி ஜனங்கள் நடப்பிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். (2 தெசலோனிக்கேயர் 2:9).

f) ஒரு கிறிஸ்தவன் மற்றும் கிறிஸ்தவனல்லாதவனுக்குப் பின்னால் ஆவிக்குரிய முறண்பாடு இருக்கிறது. கிறிஸ்தவ நடக்கையினால் அவைகளை ஆவிக்குரிய ரீதியில் எதிர் கொண்டு கீழடங்கச் செய்ய வேண்டும். (எபேசியர் 6:12).

g) தேவனுக்கு எதிரான மனநிலையானது, தனிப்பட்ட ஒருவரையும் மற்றும் தேசிய நிலையிலும் அழிவுக்கு வழிநடத்துகிறதாய் இருக்கிறது. (ஏசாயா 57:21).

ஷெக்கினா மகிமை

1. ஷெக்கினா மகிமை என்பது தேவனுடைய மகிமையைக் காணக்கூடிய தேவப்பிரசன்னத்தால் வெளிப்படுத்துவதாய் இருக்கிறது. வழக்கமாய் இச்சொல் தேவமகிமையை குறிப்பிதுவதாய் இருக்கிறது.

2. இச்சொல் "ஷசான்" ("shachan") என்ற எபிரெயச்சொல்லில் இருந்து வந்தது.

3. வெளிச்சம், நெருப்பு, மேகம் போன்ற உருவிலோ அல்லது மூன்றும் கலந்த நிலையிலோ காணப்படும்.

4. ஷெக்கினா மகிமை கீழ்க்கண்டவற்றோடு இணைந்து காணப்படும், யெஹோவாவின் தூதர், பரிசுத்த ஆவியானவர், கேருபீன் மற்றும் அடர்ந்த காரிருள்.

5. ஷெக்கினா மகிமை பழைய ஏற்பாட்டில் காணப்பட்ட இடங்கள்:

a) ஏதேன் தோட்டம் [ஆதியாகமம் 3:8].

b) ஆபிரகாமின் உடன்படிக்கையின்போது [ஆதியாகமம்15:12-18].

c) எரிகிற முட்செடியில் [யாத்திராகமம் 3:1-5].

d) யாத்திராகமத்தில் [யாத்திராகமம்13:21,22].

e) சீனாய் மலையில் [யாத்திராகமம்19:16-20].

f) விஷேசித்த நிலையில் மோசேக்கு காணப்பட்டபோது [யாத்திராகமம்33:17-23].

g) ஆசரிப்பு கூடாரத்திலும், உடன்படிக்கை பெட்டியிலும் [யாத்திராகமம்29:42-46].

h) லேவியராகமத்தில் [லேவியராகமத்தில் 9:6-7, 22-24].

i) எண்ணாகமத்தில் [எண்ணாகமம் 13:30-14:45, 16:1-50, 20:6-13].

j) யோசுவா மற்றும் நியாதிபதிகள் காலத்தில் [1 சாமுவேல் 4:21-22].

k) சாலமோனின் தேவாலயத்தில் [1 இராஜாக்கள் 8:1-13, 2 நாளாகமம் 5:2-7:3].

l) ஷெக்கினா மகிமை புறப்படுதல் [எசேக்கியேல் 1:28, 3:12,23, 8:3-4, 9:3a, 10:4, 18-19, 11:22-23].

m) இரண்டாவது ஆலயத்தில் ஷெக்கினா மகிமை இல்லை ஆகாய் 2:3,9.

6. புதிய ஏற்பாட்டில் காணப்பட்ட ஷெக்கினா மகிமை.

a) மேய்ப்பர்களுக்கு லூக்கா 2:8-9.

b) கிறிஸ்துவின் பிறப்பில் வழிநடத்திய நட்சத்திரம். மத்தேயு 2:1-12.

c) புதிய அமைப்பில் வெளிப்பட்ட ஷெக்கினா மகிமை யோவான் 1:1-14.

d) மறுரூப மலையில் ஷெக்கினா மகிமை மத்தேயு 17:1-8, மாற்கு 9:2-8, லூக்கா 9:288-36, 2 பேதுரு 1:16-18.

e) அந்த மகிமையை பிரதிபலித்தல் 2 கொரிந்தியர் 3:12-18.

f) அப்போஸ்தலநடபடிகளில் ஷெக்கினா மகிமை. அப்போஸ்தலர் 2:1-3, 9:3-8, 22:6-11, 26:13-18.

g) வெளிப்படுத்தலில் ஷெக்கினா மகிமை. வெளிப்படுத்தல் 1:12-16,

h) உபத்திரவக்காலத்தில் ஷெக்கினா மகிமை. வெளிப்படுத்தல் 15:8.

i) இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் ஷெக்கினா மகிமை. மத்தேயு 16:27, 24:30, மாற்கு 13:26, லூக்கா 21:27.

j) ஆயிரவருட ஆழுகையில் ஷெக்கினா மகிமை. எசேக்கியேல் 43:1-7a, 44:1-2, சகரியா 2:4-5, ஏசாயா 36:1-2, 58:8-9a, 60:1-3.

k) நித்திய நிலையில் ஷெக்கினா மகிமை. வெளிப்படுத்தல் 21:1-3, 21:23-24.

<u>பாடம் 24 -- அதிகாரங்கள் 14-17.</u>

மனவெழுச்சிகள்:

எகிப்தை விட்டு இஸ்ரவேலர்கள் வெளியே வந்த போது, பார்வோனும் அவனது சேனைகளும் அழிக்கப்பட்டதைக் கண்டு அவர்களது மனவெழுச்சி உன்னத நிலையை அடைந்தது, அம்மனவெழுச்சியானது அவர்களுக்கு நிலையற்றதாய் இருந்தது. அவர்களது சுதந்திரத்தை கண்ணோக்குவதைத் தவிர்த்து, அவர்கள் தங்களைத் தவிர்க்கமுடியாத மரணத்திலிருந்து இரட்சித்த தேவனை துத்திக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. மனவெழுச்சியின் நிலையானது ஒரு நபரின் நிலையான தன்மையை பாதிக்கிறதாய் இருக்கிறது. மனவெழுச்சியினால் உந்தப்படும் ஜனங்கள் ஒரு போதும் யதார்த்தத்தைக் குறித்து சிந்திப்பது இல்லை. [Emotional people do not think about reality].

செயல்படுத்துவதற்கான அம்சங்கள்:

[அ] மனவெழுச்சி என்பது வேகமாய் ஆடும் ஊஞ்சலாட்டத்தைப் போன்றது, அது ஒரு கடைசியிலிருந்து மறு கடைசிவரை உல்லாசமாய் செல்லும், உதாரணமாய் அன்பிலிருந்து வெறுப்பிற்கும், பயத்திலிருந்து மகிழ்ச்சிக்கும் செல்வது. இதை உல்லாசமாய் மிக வேகமாய் சென்று நொறுங்கி அழியும் காரைப் போன்று இருக்கிறது.

[ஆ] ஒருவரில் மனவெழுச்சியானது ஆழுகை செய்யும் போது, அங்கு சிந்திப்பதற்கு இடமில்லாமல் போகிறது. அதன் விளைவு, ஒரு வரம் அளிக்கப்படும்பொழுது, அவ்வரத்தின் மீது அதிக நாட்டம் செலுத்தி, அதை அளித்தவரை புறக்கணிக்கும் போது, நீங்கள் பிரச்சனைக் குள்ளாகிறவர்களாகிறீர்கள். தேவன் ஜனங்களுக்கு சுதந்தரமாகிய வரத்தை அளித்தார், அவர்கள் மனவெழுச்சியின் உல்லாசத்தில் அவ்வரத்தை கொண்டாடி விழுந்து போகிறவர்களாய் இருந்தனர்.

[இ] இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்தை விட்டு வெளியேறிய போது தொடந்து ஒரு நெருக்கடிக் குள்ளாகிறவர்கள் ஆகின்றனர், பார்வோன் தனது சேனகளையெல்லாம் திரட்டிக்கொண்டு அவர்களை செங்கடலின் தீரத்தில் எட்டிப் பிடித்தான்.

[ஈ] மெய்யான மகிழ்ச்சி என்பது பொருட்கள் மீதோ அல்லது சூழல்களை சார்ந்தோ இருப்பதில்லை, அது உறவுகளைச் சார்ந்ததாய் இருக்கிறது, முதலாவது தேவன், பின்னர் உங்கள் வாழ்க்கைத் துணை, உங்கள் பிள்ளைகள், அதன் பின்னர் பரந்த சமுதாயம் போன்றவைகளைச் சார்ந்து இருக்கிறது.

நீங்கள் ஒரு விசுவாசியாய் இருப்பீர்களானால், உங்கள் வாழ்க்கையானது நிலையாய் இருக்க வேண்டியது உங்கள் நோக்கமாய் இருத்தல் வேண்டும். உங்கள் மனவெழுச்சிகள் உங்கள் ஆத்துமாவை பாராட்டுகிறவைகளாய் திகழ்கின்றன. ஒரு சில நேரங்களில் அதிகமாய் சிந்திக்க அவசியமற்ற நேரங்களில், இசைகளை கேட்டு ரசிப்பதும் மற்றும் மனவெழுச்சியினால் பொருட்களைப் பாராட்டிக்கொண்டு இருப்பதுமாய் இருப்பீர்கள் ஆனால் இவைகளை எப்பொழுதும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்ளுதல் அவசியம் காரணம் பரீட்சிக்கப்படும் போது, நீங்கள் அதற்குடபடவேண்டியவர்களும் மற்றும் அதனால் உண்டாகும் மனவெழுச்சிக்கு உட்பட வேண்டியவர்களுமாய் இருக்கிறீர்கள்.

இஸ்ரவேலருக்குரிய பரீட்சை:

யாத்திராகமம் 14:8 ல் கர்த்தர் அளித்துள்ள பிரதாண் உபதேசம் என்னவெனில், கர்த்தர் தாமே எல்லாவற்றையும் தனது மேலான கட்டுப்பாட்டிற்குள் வைத்துள்ளார் என்பதாகும். அவர்கள் கர்த்தரை விசுவாசித்தனர், இப்பொழுது பரீட்சிக்கப்படுகின்றனர். நீங்கள் ஒரு

உபதேசத்தை கற்றுக்கொள்வீர்களானால் நீங்கள் அதினிமித்தம் பரீட்சிக்கப்படுவீர்கள். சில வேளைகளில் நீங்கள் தேர்ச்சி பெறுவீர்கள், சில வேளைகளில் தேர்ச்சி பெறமாட்டீர்கள்.

எகிப்திய இராணுவம் இஸ்ரவேலரை கிட்டிச் சேருகையில் அவர்களது பிரதிக்கிரியை தேவனை நோக்கி "ஓ கர்தாவே, ஓ கர்த்தாவே" என்று கதறினர், மோசேயைப் பார்த்து பற்களைக் கடித்துக்கொண்டு அவர் மீது குற்றம் சுமத்தி, எங்களை கொல்லவா எகிப்தை விட்டு இங்கு கொண்டு வந்தீர் என முணு முணுத்தனர். இங்கு ஜனங்கள் இவ்வாறு பயப்பட்ட காரணம் அவர்களது மனவெழுச்சியாகும். அவர்கள் இட்ட கூக்குரல் அவர்களது விசுவாசக்குறைவு இதற்கு மாறாக அவர்கள் கர்த்தரை நோக்கி ஜெபித்து இருக்க வேண்டும். இதைப்போன்ற நெருக்கடியான சூழலில் ஜெபிப்பதற்கு கட்டுப்பாடும், சிந்தனையும் அவசியமாயிருக்கிறது. பயம் பாவமாயி ருக்கிறது, காரணம் இது தேவனது வார்த்தையை அல்லது அவரது குணாதிசயத்தை நம்பவிடாது தடைசெய்கிறது.

பயம் செயல் இழக்க வைக்கிறது. உங்களது வாழ்க்கையின் விபரங்களின் மீது உங்களது கவனத்தை வைக்கும் போது, உங்களது கண்ணோக்கம் தேவனை விட்டு அகலுகிறது, மற்றும் பரீட்சையின் போது அது உங்களைத் திகிழடையவும், பயப்படவும் வைக்கிறது. இதைப்போன்ற அமைப்பே அதிகமாய் கரிஸ்மாட்டிக் இயக்கங்களில் செயல்பட்டு வருகிறது. அவர்களுக்கு பொதுவாய் இருப்பது கர்த்தருக்குள் மகிழ்ச்சியல்ல அல்லது பரிசுத்த ஆவியானவரின் கனியல்ல, அது நன்கு பாடக்கூடிய கனியாகவோ, எவ்வித பிரச்சனையுமின்றி மனவெழுச்சியுடன் வாழ்கிற வாழ்க்கையாய் இருக்கிறது.

மன நிலை மருத்தவமனையில் இப்படிப்பட்ட கரிஸ்மாட்டிக் இயக்கத்தில் உள்ளவர்கள் அதிகமாய் காணப்படுகிறார்கள். இவர்களுக்கு நெருக்கடி வரும்போது, மனநிலை பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். நீங்கள் ஆவியில் நடந்து கொள்வீர்களானால், இப்படிப்பட்ட மனநிலை பாதிப்புக்கு உள்ளாக மாட்டீர்கள், மற்றும் எரேமியாவைப்போல நரம்பு தளர்ச்சியடைந்து விழுந்து போகமாட்டீர்கள். உங்களை பயமானது பிடித்துக்கொள்ளுமேயானால், நீங்கள் விழுந்து போகிறவர்களாய் இருப்பீர்கள். இரதங்களால் ஏற்பட்ட புழுதி ஆகாயத்தை நிரப்பிய பொழுது ஜனங்கள் வெகுவாய் பயப்பட்டார்கள். இச்சூழலில் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட்டு கலங்க வேண்டாம், தரித்து நின்று தேவன் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள் என்றார். மோசே சொன்னார் இன்று காணும் எகிப்தியரை நாளை நீங்கள் காணப்போவதில்லை என்றார்.

மோசே ஜனங்களுக்கு நான்கு கட்டளைகளை அளித்தார்:

[1] பயப்பட வேண்டாம். [2] தரித்து நில்லுங்கள், [3] பாருங்கள் [4] உங்கள் சமாதானத்தை காத்துக்கொள்ளுங்கள்.

இப்படிப்பட்ட ஆலோசனையையே விழுந்து போன ஒருவருக்கும், மற்றும்

தேவனது வார்த்தையை அறியாது இருந்து கீழ்ப்படியாது இருக்கும் நபருக்கு அளிக்க வேண்டியது. நெருக்கடி வரும் போது, நீங்கள் அழுது, புலம்பி, தேவனுக்கு எதிராய் பாட ஆரம்பிக்கிறீர்கள். எபிரெயர் 3 ல் இந்த அதிகாரத்தைக் குறித்த வியாக்கியானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தண்ணீரினால் பரீட்ச்சிக்கப்படுதல்:

வனாந்திரத்தில் மூன்று பரீட்சைகள் தண்ணீரால் உண்டானது, இதன் மூலம் தேவன் இஸ்ரவேலருக்கு சிலகாரியங்களை போதிக்க முயன்றார், அவர் அவர்களை எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்து வனாந்திரத்திலே அவர்களை வைத்து அவர்களை பரமாரிக்கும் வல்லமையை அவர்கள் அறிந்து கொள்ள மனதாய் இருந்தார். கர்த்தர் உங்களை இரட்சிக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார், அவர் உங்களை பாதுகாக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார், இவைகளை அவர் நமக்குச் செய்ய கடமைபட்டுள்ளார். 1 கொரி. 6:20, 1 பேதுரு 5:7 கர்த்தரின் போதனையின் வெளிச்சத்தில் இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளபடி செயல் படுவது நமது கடமையாய் இருக்கிறது. மத்தேயு 6:30,31.

அவர்களது பரீட்சைகள்:

[அ] செங்கடல் அங்கு அதிகமான தண்ணீர் இருந்தது.

[ஆ] மாரா - கசப்பான தண்ணீர் - அதிகாரம் 15.

[இ] ரெபிதீம் -- மிகவும் குறைவான தண்ணீர் - அதிகாரம் 17.

தேவன் உங்களை கைவிடப்போகிறாரா? இல்லை!. அவர் உங்களை நேசிக்கிறார், அவர் உங்களை காக்கப்போகிறார். நீங்கள் அவிசுவாசியாய் இருந்த போது அவர் உங்களுக்காய் மரித்திருக்க, விசுவாசியாய் இருக்கும் இப்பொழுது உங்களுக்கு அதிகம் செய்ய விருப்பமுள்ளவராய் இருக்கிறார். எகிப்தியரின் ஆதிக்கத்திலிருந்து தனது மகா வல்லமையினால் அவர் இஸ்ரவேலை இரட்சித்தார், இவ்வாறு செய்த அவர் திரும்ப எகிப்தியர் கையில் அவர்களை அவர் விடுவதில்லை. செங்கடலின் தீரத்தில் ஒருவராலும் தீர்த்து வைக்க இயலாத சூழ்நிலையை தேவன் தீர்த்துவைக்க இருக்கிறார். இதை ஒரு திரைப்படத்தைப் பார்ப்பது போல அவர்கள் தங்கள் கண்களால் கண்டு கொண்டு இருக்கிறார்கள், இவர்களும் அத்திரைப் படத்தில் பாகம் வகிக்கிறவர்களாய் இருக்கிறார்கள். அவர்கள் தேவனது வல்லமை நிகழ்கிறதை காண்கிறவர்களாய் இருந்தனர், இது நிகழும் போது அவர்களது பெரிய பிரச்சனைகள் அகளுகிறதைக் கண்டார்கள்.

எல்லா காரியங்களுக்குமான ஒரு நேரம்:

யாத்திராகமம் 14:15ல் கர்த்தர் மோசேயைப் பார்த்து சொன்னார் நீ என்னுடன் முறையிட வேண்டாம். ஜெபிப்பதற்கு ஒரு நேரம் உண்டு இப்பொழு முன்செல்லும் நேரம். உங்களை முன்னேறிச் செல்லுங்கள் என்ற

கட்டளை பிறந்த பின்னர், ஜெபித்துக்கொண்டு இருப்பது தேவனுடைய சித்தத்தில் இல்லை. இதினிமித்தம் எப்பொழுதும் ஜெபித்துக்கொண்டே தரித்து இருப்பது ஆவிக்குரிய காரியமாய் இல்லை. பேசிக்கொண்டிருப்பதற்கு ஒரு நேரம் உண்டு, சில காரியங்களை செய்வதற்கு ஒரு நேரம் உண்டு, இப்பொழுது கர்த்தர் சொல்கிறார் நீங்கள் செல்லுங்கள் சென்றுகொண்டே இருங்கள்.

உங்களுக்கு கிறிஸ்துவுக்குள்ளான சகோதரன் அல்லது சகோதரி தேவையில் இருப்பதைக் கண்டு யாக்கோபில் கூறப்பட்டுள்ளபடி அவர்களுக்காய் ஜெபித்துக் கொண்டு இருப்பீர்களானால், மற்றும் அவர்களது தேவையை சந்தியாது இருப்பீர்களானால் நீங்கள் மாய்மாலம் செய்கிறவர்களாய் இருக்கிறீர்கள். இதை நீங்கள் சரியாய் செய்யும் போது, அவிசுவாசிக்கு சாட்சிபகர ஏதுவுண்டாக்கும், மற்றும் கிறிஸ்துவைச் சுட்டிக்காட்ட ஏதுவுண்டாக்கும். ஒரு நபர் அவிசுவாசியாய் சபையில் இருந்து தேவையுடன் இருப்பார் என்றால் அவர்களுக்கு பொருளாதார ரீதியில் உதவி செய்ய அவசியமில்லை என்பதாய் கூறுகிறது.

மோசே என்ன செய்ய வேண்டுமென ஜனங்களுக்குச் சொன்னார், மற்றும் கர்த்தரை உயர்த்துவதும், தேவனை மகிமையடையச் செய்வதுமாய் இருந்து தேவன் கிரியை செய்ய இது ஏதுவுண்டாக்கியது. நாம் இந்த மாதிரியை பின்பற்றுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். தேவன் கிரியை நடப்பித்து மகிமை பெற்றுக்கொள்ளவும், நாம் பயனடைதலுமாய் இருத்தல் வேண்டும். கிறிஸ்தவப் பணிகளை அளவீடு செய்யும் போது, அதனால் வருகிற மகிமையை அடைவது தேவனா அல்லது மனிதனா அல்லது ஒரு சபையா அல்லது ஒரு ஸ்தாபனமா? தேவன் மகிமையைப் பெற்றுக்கொள்வார் என்றால் அது தேவனது செயலாய் இருக்கிறது. ஒரு தனிப்பட்ட நபர் அதைப் பெற்றுக்கொள்ளும் போது அது சரியில்லாததாய் இருக்கிறது.

வசனம் 31ல் ஜனங்கள் தேவன் செய்த மகத்தான காரியத்தைக் கண்டு விசுவாசித்தனர், தேவனது சேவகனான மோசேயையும் விசுவாசித்தனர். இது கேட்பதற்கு சிறப்பாய் விளங்குகிறது, ஒரு மனவெழுச்சியின் ஊஞ்சலில் இருந்து மறு மனவெழுச்சியின் ஊஞ்சலுக்குச் செல்லும்போது என்ன நிகழ்கிறதாய் இருக்கிறது? இங்கு அவர்கள் தேவனுக்குப் பயப்படும் பயம் என்பது அது தெய்வீகப் பயமாய் இல்லை.

யாத்திராகமம் 15:23ல் ஜனங்கள் மாராவின் தண்ணீரை குடிக்கக்கூடாததாய் இருந்தது காரணம் அது கசப்பாய் இருந்தது, அவர்கள் மோசேயிடம் முறையிட்டனர். மோசே கர்த்தரை நோக்கிக் கூப்பிட அவர் மோசேயிக்கு ஒரு மரத்தைக் காட்டினார், அந்த மரத்தின் கிளைகளை வெட்டி அத்தண்ணீரில் போட அவர் கேட்டுக் கொள்ளப்பட்டார். அவ்வாறு செய்தபோது அத்தண்ணீர் மதுரமானது. உங்களால் பயப்படமுடியுமென்றால், ஏன் தேவனை நம்ப வேண்டும் என்பது அநேகரின் மன நிலையாய் இருக்கிறது. தேவன் ஒரு பரிகாரத்தை வைத்து இருக்கிறார் 1 கொரி. 10:13 ல் இதைப் பார்க்கிறோம், தேவனால் கசப்பை

மதுரமாக்க இயலும்.

அன்று வெட்டி கசப்பான தண்ணீரில் போடப்பட்ட மரம், இன்றைய அளவில் நமது வாழ்வில் அம்மரம் சிலுவை மரமாய் இருக்கிறது. நமது வாழ்விலும் கசப்பான சூழ்நிலைக்குள் கடந்து செல்கிறவர்களாய் இருக்கிறோம், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் தியாக பலியைக் காணும் போது, நமது கசப்பு மதுரமாய் மாறுகிறதாய் இருக்கிறது. நமது வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு கடினமான சூழலும், சிலுவையை சார்ந்து அதை நாம் புறிந்து கொள்ளும் போது மாறுகிறதாய் இருக்கிறது. நீங்கள் சிலுவை நோக்கிப் பார்க்கப்போகிறீர்களா அல்லது உங்களது சூழ்நிலைகளை நோக்கி பார்த்துக் கொண்டே இருக்கப் போகிறீர்களா? சிலுவை காரியங்களை இனிமையுள்ளதாய் மாற்றும்.

யாத்திராகமம் 15:26ல் பெந்தெகொஸ்தேயைக் குறித்த காரியங்கள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது. இது யாத்திராகமச் சந்ததியினர் எகிப்தியருக்கு வந்த வியாதிகளில் ஒன்றும் அவர்களை சேதப்படுத்துவதில்லை என்பதோடு குறிப்பிட்ட நிலையில் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. இது அவர்களுக்கு குறிப்பிட்ட காரியமாய் இருந்தது, ஆனால் இதன் அடிப்படைக் கோட்பாடு இன்றும் நிலைத்து இருக்கிறதாயும், நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிகிறவர்களாய் இருப்பீர்களானால் அவர் உங்களை ஆசீர்வதிப்பவராய் இருக்கிறார். இது அற்புதகரமாய் உபாகமம் 8:4 ல் நிறைவேறியுள்ளது. அவர்களது பாத இரட்சைகள் நாற்பது ஆண்டுகாலமாய் தேயவும் இல்லை, அவர்கள் வஸ்திரம் பழமையாய் போகவுமில்லை, அவர்களது கால்கள் வீங்கவோ, அவர்கள் எவ்வித தோல்வியாதியால் பாதிக்கப்படவோ இல்லை. அவர்கள் நாற்பது நீண்ட வருடங்களை வனாந்திரத்தில்ல் அலைந்து திறிவதில் செலவழித்தனர். நாம் நமது உதவியின் ஆதாரம் எங்கிருந்து வருகிறது என்பதை நினைவுகூறுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

யாத்திராகமம் 17 ல் அவர்கல் ரெபிதீமுக்கு சென்றார்கள் அங்கு தண்ணீர் இல்லாது இருந்தது. அவர்கள் மறுபடியும் முறையிடத் தொடங்கினார்கள். அங்கு தண்ணீர் ஒரு பொருட்டாக இல்லை, இந்த ஜனங்கள் அவர்களது அவிசுவாசத்தால் தேவனை பரீட்சைப் பார்க்கத் தொடங்கினார்கள், அவர்கள் தங்களுக்குத் தாங்களே தெய்வீக சிட்சையை வருவித்துக்கொள்கிறவர்களாய் இருந்தனர். கர்த்தர் நமக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையளவில் தருணங்களை அளிக்கிறவராய் இருக்கிறார். நாம் தொடர்ந்து மறுப்பு தெரிவித்து வருவோமெனில் தேவன் நம்மை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். தேவன் பதில் அளிக்கிறவராய் இருக்கிறவராய் இருக்கிறார்.

ஜனங்கள் திரும்பி பார்த்து தேவன் செய்த கிரியைகளை நினைவுகூர்ந்து, அங்கு தேவன் தங்களுக்கு தேவையான தண்ணீரை வைத்து இருக்கிறார் எனக் காத்திருந்து அதற்காய் விசுவாசிக்க வேண்டியதாய் இருந்தது. கற்பாறையில் இருந்த தண்ணீர் புதிய ஏற்பாட்டில் அந்த பாறை கிறிஸ்துவே எனக்கூறுகிறதாய் இருக்கிறது. தேவன் இப்பொழுது மோசேக்கு சொன்னது

என்னவெனில், இந்த ஜனங்களுக்கு முன்பாய் நில் என்றார், இந்த ஜனங்கள் மோசேயையும், இஸ்ரவேலின் மூப்பர்களையும், மோசேயின் அலுவலர்களையும் கல்லெறியும்படி விரும்பினார்கள். மோசேக்கு தேவன் அக்கற்பாறையை அடி அப்பொழுது தண்ணீர் புறப்பட்டு வரும் என்றார். மோசே அவ்வாறே செய்து அவர்கள் அனைவரும் குடித்தனர்.

கிறிஸ்து நமக்காய் அடிக்கப்பட்டவராய் இருக்கிறார், அங்கே ஜீவன் இருக்கிறதாய் இருக்கிறது, அந்த ஜீவன் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவாய் இருக்கிறது. யோவான் 3:36, 10:10. அவர்களுக்கும் அங்கிருந்த ஒவ்வொருவருக்கும் போதுமான தண்ணீர் அங்கிருந்தது. தேவன் எப்பொழுதும் தமது கிருபையின் ஐசுவரியத்தின் படியே நம்மை ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறார்.

மோசே இந்த இடத்திற்கு மேரிபா எனப்பெயரிட்டார், காரணம் ஜனங்கள் முறுமுறுத்ததினால் இப்பெயர் வரக்காரணமாயிற்று. எபிரெயர் 4:1-2 ன் படி நாம் நமது விசுவாசத்தையும் வாக்குத்தத்தத்தையும் கலப்பதில் நிச்சயமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், இல்லையெனில் நாமும் யாத்திராகமச் சந்ததியினரைப் போல தெய்வீக சிட்சைக்கு உள்ளாகிறவர்களாயிருப்போம். கர்த்தரது வார்த்தையில் விசுவாசக் குறைவு இருக்குமானால் அது பாவமாய் இருந்து கர்த்தர் அதை நியாயம் விசாரிக்கிறவராய் இருக்கிறார்.

உபதேசங்கள்:

கன்மலை

1. கிறிஸ்து இரட்சிப்பின் கன்மலையாய் இருக்கிறார். (யாத்திராகமம்17:1-7, 1 கொரிந்தியர் 10:4).

2. கிறிஸ்து நியாத்தீர்ப்பின் கன்மலையாய் இருக்கிறார்.. (ஏசாயா8:1 4, 1 பேதுரு2:8).

3. கிறிஸ்து நித்திய கன்மலையாய் இருக்கிறார். (ஏசாயா26:3, 4)ck;ik cWjpaha;g; gw;wpf; nfhz;l kdijAilatd; ck;ikNa ek;gpapUf;fpwgbahy;> ePh; mtidg; g+uz rkhjhdj;Jld; fhj;Jf;nfhs;tPh;.fh;j;jiu vd;nwd;iwf;Fk; ek;Gq;fs;@ fh;j;juhfpa NaNfhth epj;jpa fd;kiyahapUf;fpwhh;.

4. கிறிஸ்து அஸ்திபாரக் கன்மலையாய் இருக்கிறார்.. (ஏசாயா28:16, சங்கீதம்118:22).

5. கிறிஸ்து சபையின் அஸ்திபாரக் கன்மலையாய் இருக்கிறார். (மத்தேயு16:16, 18, 1 கொரிந்தியர்3:11,எபேசியர்2:20-22).

6. கிறிஸ்து கையால் பெயர்த்தெடுக்கப்படாத கல்லாய் தகர்க்கும்

கன்மலையாய் இருக்கிறார். (தானியேல்2:35).

தேவனின் வாக்குத்தத்தங்கள் [மேலே உள்ள பாடங்களில் காண்க]

கிணறுகள் [மேலே உள்ள பாடங்களில் காண்க]

<u>பாடம் 25 -- அதிகாரம் 19-20:</u>

முகவுரை:

வேகாமத்தில் 633 கட்டளைகள் இருக்கின்றன. பத்துக் கட்டளைகள் விசுவாசிகளுக்கான தேவனது கொள்கைகளின் சுருக்கமாய் இருக்கிறது. 633 கட்டளைகளில் ஒன்றை மீறினாலும், எல்லாவற்றையும் மீறினதற்கு சமமாகிறது. இது நீங்கள் திருடிவிட்டால் நியாயப்பிரமாணத்திறுகு குற்றவாளியாகிறீர்கள், இதற்கு நீங்கள் கொலை செய்ய வேண்டும் என்கிற அவசியமில்லை. நியாப்பிரமாணத்தில் ஒன்றை நீங்கள் மீறினாலும், நீங்கள் முழுமையான நியாயப்பிரமாணத்தை மீறுகிறவர்களாகிறீர்கள். நியாயப்பிரமாணங்களின் அமைப்பு தேவனது தரத்தை காட்டுகிறதாய் இருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் நோக்கம் மனிதன் தான் பாவி என்றும், அவனுக்கு ஒரு இரட்சகர் அவசியம் என்பதையும் காட்டுகிறதாய் இருக்கிறது.

நியாயப்பிரமாணத்தில் உள்ள பிரிவுகள்:

நியாயப்பிரமாணத்தின் முதல் பிரிவு 633 கட்டளைகளாகும், இரண்டாவது பிரிவு சடங்குகள் மற்றும் பலிமுறைகள் இது இரட்சகரை காட்டுகிறதாய் இருக்கிறது. மூன்றாவது இஸ்ரவேலரின் பண்டிகைகள் மற்றும் பரிசுத்த நாட்கள் இது தேவனது தீர்க்கதரிசன நிகழ்வுகளைக் காட்டுகிறதாய் இருக்கிறது. கட்டளைகளின் கட்டுப்பாடு மற்றும் பலிகள் ஒரு நபரை பாவியாய் காட்டுகிறதாய் இருக்கிறது மட்டுமல்லாது அந்தப் பிரச்சனைக்குறிய தீர்வையும் அளிக்கிறதாய் இருக்கிறது.

ஒரு கட்டளையை மீறுகிற நபர், பலி செலுத்த வேண்டியவராகிறார். இப்படிப்பட்ட பலியை ஒருவர் இன்றைய அளவில் செய்வார் என்றால் அது தெய்வ நிந்தனையாய் கருதப்படுகிறது காரணம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நமது பாவங்களுக்காய் ஒரேதரம் எல்லாருக்காகவும் மரித்துவிட்டார்.

நியாயப்பிரமாணமானது முழு உட்க்கருத்தைக் கொண்டதாய் இருந்தது.

அதிலிருந்து ஒன்றைமட்டும் எடுத்து தெரிந்துகொண்டு அதாவது சனிக்கிழமை ஓய்வுநாளை மட்டும் எடுத்துக்கொண்டு, மற்ற 632 பிரமாணங்களை மறந்து விடமுடியாது. நாம் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் ஜீவ ஆவியானவரின் பிரமாணத்திற்குள் இருக்கிறோம். ரோமர் 8:1-4. மோசேயின் பிரமாணம் இன்றைய அளவில் நமக்கு நேரிடையாகப் பொருந்தாது, நாம் அதைக்காட்டிலும் பெரிய பிரமாணத்திற்கு கீழ் இருக்கிறோம், அது கிருபையின் பிரமாணமாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களைப் படிக்கும் போது, தேவனின் குணாதிசியங்களையும் அவரது கொள்கைகளையும் கற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்.

எபிரெயர் 10:1 ஐ படிக்கும் போது இவைகள் பெரிய காரியங்கள் வருவதற்கு நிழலாட்டமாய் இருக்கிறது எனக்காட்டுகிறதாய் இருக்கிறது. காணிக்கைகள் மனிதன் தேவனிடம் வரும் போது, கிருபையில் வரவேண்டும் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. யாத்திராகமம் 19 மற்றும் 20 ஐ தாண்டி செல்லும் போது, தேவனது குணாதிசயங்களுக்கு அருகில் வருகிறவர்களாய் இருக்கிறீர்கள். கர்த்தர் இப்பூமியில் வருகிறதற்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னர், லேவியராகமம் எழுதப்பட்டது, இது கிறிஸ்து சிலுவையில் என்ன செய்யப்போகிறார் என்ற பூரணமான செயலை சித்தரிக்கிறதாய் இருக்கிறது.

கர்த்தரில் விசுவாசம்:

யாத்திராகமம் 19ல் மோசே சீனாய் மலையை வந்தடைந்து, அவர் அந்த மலையின் உச்சிக்கு ஏறிச்சென்றார். வசனம் 1-6 ல் ஆர்வத்தை தூண்டக்கூடிய சில கருத்துக்களைப் பார்க்கிறோம். தேவன் சொன்னார், எகிப்தியருக்கு நான் செய்து முடித்தவற்றை நோக்கிப்பார். தேவன் கடந்தகாலத்தின் நிகழ்விலிருந்து துவங்கி, எதிர்காலத்தை பார்க்கிறவராய் இருக்கிறார். தேவன் ஒருபோதும் ஒரு குருட்டு விசுவாசத்திற்குள் அழைக்கவில்லை. இருளில் தடவித்திரிகிறதும், குருட்டு விசுவாசமும் வேதாகமத்தில் அந்நியமாய் இருக்கிறது. தேவன் எப்பொழுதும் தான் என்னசெய்தேன் என்பதை நோக்கிப்பார்க்க கூறுகிறவராய் இருக்கிறார், அதன் பின்னர் என்ன நடக்கப்போகிறது என ஜனங்களுக்கு கூறுகிறவராய் இருக்கிறார். கர்த்தர் சொல்வது என்னவென்றால் இப்படிப்பட்ட காரியங்களை என்னால் செய்யமுடியும் என்றால், அப்படிப்பட்ட காரியங்களையும் என்னால் செய்ய இயலும் என்பது இதன் பொருளாய் இருக்கிறது.

இதினிமித்தம் கிறிஸ்தவ வாழ்வில் தீர்க்கதரிசன ஆகமங்களைப் படிப்பது உபயோகமாய் இருக்கிறது, அது தேவனது உண்மையை காண்பிக்கிறதாயும், நமக்கு உறுதியையும் நிச்சயத்தையும், அளிக்கிறதாயும், தேவன் எதை வாக்குப்பண்ணினாரோ அவற்றை எதிர்காலத்தில் செய்து நிறைவேற்ற வல்லவர் என்பதையும் காட்டுகிறதாய் இருக்கிறது.

அநேக ஜனங்கள் தேவன் எதைச் செய்து இருக்கிறார் என்பதை முற்றிலும் அறியாதவர்களாய் இருக்கிறார்கள். நமது கடமையானது அவைகளை அவர்களுக்கு போதித்தல் அவசியமாய் இருக்கிறது காரணம், அவைகளைக் குறித்த நிச்சயத்தை பெற்றுக்கொள்ள இது ஏதுவுண்டாக்குகிறதாய் இருக்கிறது. நீங்கள் தேவனுடன் எந்த அளவுக்கு நீண்ட காலமாய் நடக்கிறீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் ஒரு பலமுள்ள கிறிஸ்தவராய் திகழமுடியும். கர்த்தர் சொன்னார், இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து விடுவித்து கொண்டுவந்தது அவர்களை அசாதாரணமானவர்களாய் மாற்றும் படியாக ஆகும். அவர்களை அவர் வனாந்திரத்தில் கொன்று போட விடுவிக்க வில்லை.

நாம் விடுவிக்கப்பட்டு இருக்கிறோம், மற்றும் இஸ்ரவேல் தேசத்தார் முன்னோடிகளாயிருந்து நமக்கு வெளிச்சம் காட்டுகிறவர்களாய் இருக்கிறார்கள். வசனம் 10 நமக்கு தேவனது பரிசுத்தம் குறித்த பாடத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. நாம் தேவ இராஜ்ஜியத்திற்கு ராஜரீக ஆசாரியக்கூட்டமாய் அழைக்கப்பட்டு இருக்கிறோம். இஸ்ரவேலர் ஆசாரிய இராஜ்ஜியமாய் அழைக்கப்பட்டனர். 1 பேதுரு 2:5,9. நாம் இஸ்ரவேலரை விட உயர்ந்த அந்தஸ்தில் இருக்கிறோம்.

தேவனோடுள்ள நமது உறவு:

பெந்தெகொஸ்தே இயக்கத்தில் உள்ள பழக்கவழக்கங்கள் பொதுவானதாய் இருக்கிறது. நாம் தேவனை அணுகும்போது, நாமறிந்த பழக்கவழக்கத்தின் படியல்லாது, பயபக்தியுடன் அணுகுதல் வேண்டும். இயேசு உங்களது சிருஷ்டிகரும் இரட்சகருமாய் இருக்கிறார் என்பதை நினைவு கூறுங்கள். அவரது பெயரின் தலைப்பு கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து. இயேசு என்னும் பெயர் அதிகமாய் உபயோகிக்கப்படுகிறது.

யாத்திராகமம் 19 ல் தேவன் சொன்னார் அவர் தேசத்தினரிடம் பேசும் முன்னர், அவர்கள் தங்களை மூன்று நாட்களுக்கு சுத்திகரித்துக் கொள்ள வேண்டும் என்றார். நாம் ஜெபிப்பதற்கு முன்னரும் மற்றும் வேதபாடம் எடுக்குமுன்னரும் நாம் நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும். சீனாய் மலையின் சம்பவம் தேவனுக்கும் மனதனுக்கும் இடையே உள்ள இடைவெளியை வலியுறுத்துகிறதாய் இருக்கிறது.

யோவான் 13:13 ல் கர்த்தரை அணுகும் வழிமுறையானது கொடுக்கப்பட்டுள்ளது. சீஷர்கள் வேதாகமத்தில் அவரை, இயேசு எனக்குறிப்பிடாமல் அவரைக் கர்த்தர் என்றும் அவர்களது போதகர் எனவும் குறிப்பிட்டார்கள். கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இதற்காய் அவர்களை பாராட்டுவதை பார்க்கிறோம். 21 ம் நூற்றாண்டின் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இது அரிய பாடமாய் இருக்கிறது, மூன்றாண்டுகள் அவருடன் இருந்தவர்கள் கர்த்தருக்கு அளித்த கனத்தை மரியாதையை நாமும் அவருக்களிக்க கற்றுக்கொள்ளுதல் அவசியம்.

யோவான் 15:12-14 ல் நாம் அவருக்கு கீழ்ப்படிவோமானால் அவரது சிநேகிதராய் இருக்கிறோம் என்று அவர் சொன்னார், அவர் நம்மை சிநேகிதர் என அழைக்கும் படியாக அவருக்கு கீழ்ப்படிவோமாக.

பத்துக் கற்பணைகள்:

யாத்திராகமம் 20 ல் பத்துக்கற்பணைகளுக்கு கடந்து செல்கிறோம், அவைகள் தேவனுடைய குணாதிசயங்களை காட்டுகிறதாய் இருக்கிறது. முதல் நான்கு கற்பணைகள் ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து கூறுகிறது, இறுதி ஆறு கற்பணைகள் மனிதபரிமாற்றங்களில் இருக்கவேண்டிய தேவனது கொள்கைகளை குறித்து கூறுகிறது. இதை மனித விடுதலையின் Magna Carta* என அழைக்கலாம். பத்துக்கற்பணைகளை குறித்து நீங்கள் அறியும் முன்னர், வசனம் 1 மற்றும் 2 ஐ வாசித்து அதன் பொருளை உணர்ந்துகொள்வது மிகவும் அவசியம். கர்த்தர் உங்களது இரட்சகராய் இருக்கிறார்.

வசனம் 3-4 ல் கர்த்தரை மனப்பூர்வமாய் ஆராதிப்பதை விட்டுவிட்டு, பொருட்களை உருவாக்கி அவைகளை ஆராதிப்பதோ, ஒரு இடத்தை அவைகளுக்காய் ஏற்படுத்துவது கூடாது. ஒவ்வொன்றின் சிருஷ்டிகராகிய தேவனை மறக்கச் செய்யும் எந்த ஒரு காரியத்தையும் உருவாக்க அனுமதித்தல் கூடாது. உங்களது அனுதின அலுவல்களில் தேவனை மறப்பது என்பது மிகவும் எளிதான ஒன்றாய் இருக்கிறது. நானே ஆராதணைக்குரியவர் என்று கர்த்தர் சொல்கிறார்.

நான்கு தலைமுறை சாபம் என்பது வசனம் 5-6 ல் நிரூபிக்கப்பட்டுள்ளது. தேவன் தன்னை பகைக்கிறவர்களையும், அவரை அறிவதை உதாசீனப் படுத்துகிறவர்களையும், கிறிஸ்துவின் இரத்தத்தை அசட்டை பண்ணுகிறவர்களையும் நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். அவர்கள் தகுந்த நேரத்தில் நியாயந்தீர்க்கப் படுவதை காணாத பட்சத்தில், அவர்கள் நித்தியத்திலும் இப்படியே இருப்பவர்களாய் இருப்பார்கள். தேவன் தன்னை நேசிப்பவர்களிடத்திலும் தனது கட்டளைகளை கைக்கொள்பவரிடத்திலும் இரக்கம் காட்டுகிறவராய் இருக்கிறார். இது யோவானில் மேற்கண்ட வேதபகுதியுடன் இணைக்கிறதாய் இருக்கிறது. தேவன் இரட்சிப்பை எல்லா மனிதருக்கும் அளிக்கிறவராய் இருக்கிறார் தொடர்ந்து அவர்கள் குடும்பமாய் நிராகரித்து வருவார்களானால் நான்காம் தலைமுறையில் அவர்களை முற்றிலும் பூமியிலிராதபடி அகற்றப்படுவார்கள். தேவன் எல்லா ஜனங்களையும் கணக்கொப்புவிக்க அழைக்கிறவராய் இருக்கிறார்.

வசனம் 7 கூறுகிறது கர்த்தரின் நாமத்தை வீணிலே வழங்கக்கூடாது என்று. நாம் தேவனது கொள்கையைப் பின்பற்ற வேண்டும். நாம் நமது செய்கைகளுக்குரிய கணக்கை ஒப்புவிக்க வேண்டும். தேவன் பாவங்களை மறக்கிறவர் அல்லர். அவர் அவைகளை மன்னிக்கிறவராய் இருக்கிறார்.

கணணி இப்பொழுது உங்கள் பண பரிமாற்றங்கள் அனைத்தையும் அதன் நினைவகத்தில் பதிவு செய்து வைக்கிறது இது மனிதரால்

உண்டாக்கப்பட்ட பொருள். அதைக்காட்டிலும் தேவன் தன் நினைவில் எவ்வளவு அதிகமாய் பதிந்து வைத்துக்கொள்ளமுடியும்? நியாயத்தீர்ப்புக்கு விதிவிலக்காக வேண்டுமானால் ஒரே வழி கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது ஆகும். பத்து கற்பனைகள் அவிசுவாசியை நொறுக்கப்போகும் கற்பாறை போன்று இருக்கிறது.

சாபத் [Sabbath] குறித்த கட்டளையானது வசனம் 8-10 ல் கொடுக்கப்பட்டுள்ளது. இதுவே இஸ்ரவேலர்கள் எல்லா வேலைகளையும் விட்டு அமர்ந்திருந்து, தேவன் தங்களுக்கு என்ன செய்துள்ளார் என்பதை சிந்திக்கும் சமயமாய் இருக்கிறது. இன்றைய அளவில் விசுவாசிக்கு, ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு சமயமும் சாபத் ஓய்வாய் இருக்கிறது. ஓய்வைப் பற்றியுள்ள ஒவ்வொரு கட்டளையும் புதிய ஏற்பாட்டில், சாபத்திற்கு [Sabbath] அப்பாற்பட்ட கட்டளையாய் இருக்கிறது. இஸ்ரவேலரைப் பொருத்த மட்டில் சாபத் என்பது ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்து தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டிய நாளாய் இருந்தது. இந்த நாளானது சரீரப்பிரகாரமாகவும், ஆவிக்குரிய பிரகாரமாகவும் தேவனைச் சார்ந்திருந்து அவரை நம்பும் நாளாய் இருந்தது.

சமுதாய கற்பணைகள்:

வசனம் 12 முதல் எவ்வாறு ஒரு சமுதாயம் செயல்பட வேண்டும் என்பதைக்குறித்த கற்பணைகள் குறித்து கூறப்பட்டுள்ளது. தீமை செய்கிறவர்களாயிருந்தாலும் உங்கள் பெற்றோரைக் கனம் பண்ணுங்கள். உங்களால் அவர்களுக்கு என்ன நன்மைகளை செய்ய இயலுமோ அதைச் செய்யுங்கள், அவர்களுக்காய் ஜெபியுங்கள்.

பழைய ஏற்பாட்டில் மொழிபெயர்ப்பாளர்கள், பத்து விதமான எபிரெயச் சொற்களை கொலை என்னும் பதத்திற்கு மொழி பெயர்த்திருக்கிறார்கள். வசனம் 13ல் இச்சொல்லானது தெளிவாக கொலை செய்வதைக்குறித்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. யாத்திராகமம் 21:14-17 வரையுள்ள வேதபகுதியில் இதைப்பற்றிய உண்மைக்கருத்துக்களை காண்கிறோம். கொலை செய்தவன் கொல்லப்படவேண்டும் அல்லது மரணதண்டனை அளிக்கப்படுதல் வேண்டும். தேவன் நிலையானவராய் இருக்கிறார்.

இந்த நிலையானது தீமை செய்யும் நபருக்கு மறு அப்பீல் இல்லை என்பதை உறுதிப் படுத்துகிறதாய் இருக்கிறது. நமது சமுதாயத்தில் குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுகிறது, ஒன்றுமறியா அப்பாவிகளுக்கு பாதுகாப்பற்று காணப்படுகிறது. தேவன் அப்பாவிகளின் பக்கத்தில் இருக்கிறார், குற்றம்புறிந்தவர்கள் பக்கத்தில் அல்ல.

இதற்கு அடுத்துள்ள வசனங்களில் விவாகம் குறித்து கனப்படுத்தப்படுவதை காண்கிறோம், பலருடன் பாலுறவு கொள்ளுவது தவிர்க்கப்படல் வேண்டும் என்பதையும் காண்கிறோம். தேவன் உங்களுக்கு அளித்த நபருடன் மட்டுமே பால் உறவு கொள்ளுதல் வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

வசனம் 15-17 ல் மற்றவர்களின் சொத்துக்களை மதித்தல் வேண்டும் எனக் கட்டளையிடப்பட்டுள்ளது [வச 15] சத்தியத்தை மதித்தல் வேண்டும் [வச 16], நீங்கள் பொறாமைபடுதல் மற்றும் பகைத்தல் கூடாது. [வச 17].

ஒரு தேசம் இப்படிப்பட்ட அடிப்படைக் கோட்பாடுகளால் கட்டப்படுமேயானால், அது சிறப்பான ஒன்றாய் விளங்கும். முதல் நான்கு கற்பணைகளைக்கொண்டு எந்த ஒரு தேசமும் தன்னைத்தானே கட்டிக்கொள்ள முடியாது, ஆனால் இறுதியாய் உள்ள ஆறு கற்பணைகளைக்கொண்டு அது தன்னைத்தான் கட்டி எழுப்பக்கூடும்.

உபதேசங்கள்:
மோசேயின் நியாயப்பிரமாணம்

1. பஞ்சாகமத்தில் மோசேயின் முழுமையான நியாயப்பிரமாணங்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

2. மோசேயின் நியாயப்பிரமாணம் மூன்று கால கட்டங்களில் கொடுக்கப்பட்டது.

a) முதல் காலகட்டம்: மோசே, தேவனிடமிருந்து பெற்ற கட்டளைகளை சீனாய் மலையில், ஜனங்களுக்கு நேரடியாய் பேசிச்சொன்னது (யாத்திராகமம்24:3-8).

i) தோல்வி அல்லது பலிசெலுத்துவதற்கு அப்பாற்பட்ட கட்டளைகள். (யாத்திரகாமம் 20:1-17).

ii) இஸ்ரவேல் தேசத்திற்குள்ளான உறவு. (யாத்திரகாமம் 21:1-23:13).

iii) மூன்று வருடாந்திர பண்டிககளை அநுசரிக்க கட்டளைகள் (யாத். 23:14-19)**.**

iv) கானானை சுதந்தரிக்கும்படி கொடுக்கப்பட்ட கட்டளைகள் (யாத். 23:20-33).

b) இரண்டாம் காலகட்டம்: தேவனிதமிருந்து கற்பலகைகளை பெற்றுக்கொள்ள மோசே அழைக்கப்பட்டபோது. (யாத்திரகாமம் 24:12-18).

i) இக்காலக்கட்டத்தில் மோசே ஆசாரியத்துவம், ஆசரிப்புக்கூடாரம் மற்றும் பலிகள் போன்றவற்றிற்கான கட்டளைகளைப் பெற்றுக்கொண்டார்.(யாத். 25-31).

ii) கற்பலகையைப் பெற்றுக்கொண்டு சீனாய் மலையிலிருந்து இறங்கிய மோசே, முதல் கற்பனையை ஜனங்கள் மீறி பொன் கன்றுகுட்டியை வார்ப்பித்ததனால், நியாயப்பிரமாணம் அடங்கிய கற்பலகையை உடைத்துப்போட்டார்.(யாத்.32:16-19).

c) மூன்றாம் காலகட்டத்தில்: இரண்டாவது முறையாக கற்பலகைகள் தேவனால், மோசேயிடம் அளிக்கப்பட்டது. (யாத்திரகாமம்34:1, 28-29).

3. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் மூன்று பகுதிகள்:

a) ஒழுக்கநெறி சார்ந்த சட்டங்கள், அல்லது கட்டளைகள், பத்துக்கற்பனை என்றும் அறியப்படுகிறது. (யாத்திரகாமம்20:1-17).

b) ஆவிக்குரிய சட்டங்கள் அல்லது சட்ட ஒழுங்கு. கிறிஸ்துவைக்குறித்த, இரட்சிப்பைக்குறித்த முழுமையான பாடங்கள் இதில் அடங்கியுள்ளன. (எபிரெயர் 10:1) மட்டுமல்ல இதில் ஆசரிப்புக்கூடாரம், பண்டிகைகள், பரிசுத்த நாட்கள், லேவிய காணிக்கைகள், ஆடைகள், மற்றும் லேவிய ஆசாரியத்துவம் போன்றவைகள் அடங்கியுள்ளன.

c) சமுதாய சட்டம் அல்லது நியாயத்தீர்ப்புகள்: உணவு வகைகள், கழிவு சுகாதாரம், தொற்றுநோய் பரவாது இருக்க விதிமுறைகள், மண்வளம் பாதுகாக்கப்படுதல், வரிமுறைகள், பட்டாளம், சேவைமுறைமை, திருமணம், விவாகரத்து போன்றவை இதில் அடங்கும். கைக்கொள்ளாதவர்களின் தண்டனைகளும் இதில் விவரிக்கப்பட்டுள்ளன.

4. மோசேயின் நியாயப்பிரமாணத்தை பெற்றுக்கொண்டவர்கள்:

a) இது இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது. (யாத்திரகாமம் 19:3; லேவியராகமம் 26:46; ரோமர் 3:19; 9:4).

b) புறஜாதியாருக்கு நியாயப்பிரமாணம் ஒருபோதும் கொடுக்கப்படவில்லை. (உபாகமம்4:8;ரோமர் 9:4).

5. நியாயப்பிரமாணத்தின் தற்போதைய நோக்கம்:

a) தெய்வீக நிலையில், அவிசுவாசி ஓர் பாவி என்றும், அவருக்கு ஒரு இரட்சகர் அவசியம் என்று சம்மதிக்க வைத்தல். (ரோமர்3:20,28; கலாத்தியர்3:23,24; 1 தீமோத்தேயு1:9,10).

b) இரட்சிப்பு மற்றும் அறிக்கை செய்தல் இவ்விரண்டிலும் தேவனது கிருபையை அறிவிப்பது.

c) ஒரு தேசம் தேவ ஆசீர்வாதத்தின் கீழ் இயங்க அளிக்கப்படுவதற்காக.

d) இதினிமித்தம் நியாயப்பிரமானம், இரட்சிப்பின் வழியல்ல, ஆனால், மானிட சுதந்திரம் மற்றும் தேவனுக்குக்கீழ் செழிப்புடன் வாழ வழி கூறுவது ஆகும். (கலாத்தியர்2:16).

6. நியாயப்பிரமாணம் சம்பந்தப்பட்டவகையில் சபை.

a) சபை விஷேசமாக நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டதல்ல (அப்போஸ்தலர்15:5-11; ரோமர்6:14; கலாத்தியர்2:19).

b) விசுவாசிகளுக்கு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார். (ரோமர் 10:4).

c) சபையுகத்தில் உள்ள விசுவாசிகள் உயர்ந்த ஆவிக்குரிய நியாயப்பிரமாணத்தின் கீழ் இருக்கின்றனர். (ரோமர் 8:2-4கலாத்தியர் 5:18,22,23; 1 கொரிந்தியர்13).

7. மோசேயின் நியாயப்பிரமாணத்தின் வரையறைகள்:

a) நீதிக்குட்படுத்த முடியாது (அப்போஸ்தலர்13:39; ரோமர்3:20,28; கலாத்தியர்2:16; பிலிப்பியர்3:9).

b) பரிசுத்த ஆவியானவரை அளிக்கமுடியாது (கலாத்தியர் 3:21).

c) நித்திய ஜீவனை கொடுக்க முடியாது. (கலாத்தியர் 3:2).

d) அற்புதங்களை அளிக்க முடியாது (கலாத்தியர் 3:5)

e) பாவத்தன்மையின் பிரச்சனைகளை தீர்த்து வைக்க முடியாது. (ரோமர் 8:7).

8. மோசேயின் நியாயப்பிரமாணம் உடன்படிக்கை புஸ்தகத்தின் வரைபடமாய் இருந்தது.. (யாத்திராகமம் 24:7-8; 34:27,28; உபாகமம்4:13-16,23,31; 8:18; 9:9,11,15).

a) இவ்வுடன்படிக்கைப் புஸ்தகம் எரேமியா 11 ம் அதிகாரத்தின் பொருளடக்கமாய் இருக்கிறது. ஆனால் எரேமியா 31:31-33 ல் கூறப்பட்டுள்ள புதிய உடன்படிக்கையுடன் குழப்பிக்கொள்ளக்கூடாது.

b) உடன்படிக்கையை மீறுவதன் தீர்க்கதரிசனம் (உபாகமம் 31:16-20; எரே.22:7-9).

c) தேசத்தின் ஒற்றுமையில்லாததன் விளைவு உடன்படிக்கை மீறுவது.

9. கிறிஸ்துவும் மோசேயின் நியாயப்பிரமாணமும்:

a) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் போதும், நியாயப்பிரமாணத்தின் கீழும் பிறந்தார். (கலாத்தியர்4:4).

b) நியாயப்பிரமாணத்தின் கீழ் பூரணமான வாழ்க்கை நடத்தி, பாவமற்றவராய் இருந்தார். (யோவான்8:46, 2 கொரிந்தியர் 5:21).

c) நியாயப்பிரமாணத்தை அவர் போதித்தார் (லூக்கா 10:25-37).

d) பழைய ஏற்பாட்டின் ஒப்புமைகள் யாவும் அவரது சிலுவைப்பாடுகளில் நிறைவேறின. (எபிரெயர்9:11-26)மற்றும் லேவியரின் காணிக்கைகளும் கூட அவரில் நிறைவேறியது.

e) அவர் நம்மை நியாயப்பிரமாணத்தின் எல்லாவித சாபங்களுக்கும் விலக்கி மீட்டுக்கொண்டார். (கலாத்தியர்3:13,14).

f) அவர் கிருபையின் உடன்படிக்கையை தியானித்தார். (எபிரெயர்8:6-13).

g) அவர் மூலமாய் கிறிஸ்துவின் பிரமாணத்தை நாம் பெற்று இருக்கிறோம். (யோவான் 13:34, கலாத்தியர் 6:2).

h) கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றினார். (மத்தேயு5:17).

i) அவர் இப்பூமியில் மனிதனாய் வாழ்ந்தகாலத்தில் பூரணமான வாழ்க்கைசெய்ய தேவையான ஒழுக்கநெறிகள் அனைத்தையும் நிறைவேற்றினார்.

ii) தமது மரணம், அடக்கம்செய்யப்படுதல், உயிர்த்தெழுதல், பரமேறுதல் மற்றும் பரலோகில் வீற்றிருத்தல் மூலம் பதிலாகுவதன் அடிப்படை காரியங்கள் அனைத்தையும் அவர் நிறைவேற்றினார்.

iii) சமுதாய சட்ட ஒழுங்கிற்கிணங்க, அறநெறிகள் அனைத்தையும் தவறாது நிறைவேற்றினார்.

நான்கு தலைமுறை சாபம் [மேலுள்ள பக்கங்களில் காண்க]

சாபத் (ஓய்வு நாள்) மற்றும் கர்த்தரின் நாள்

1. சாபத் (Sabbath) என்பதன் பொருள் ஓய்வு.

2. இரட்சிப்பு என்பது நித்திய இளைப்பாறுதலாய் (ஓய்வாய்) இருக்கிறது. (மத்தேயு 11:28) - நமது சொந்த கிரியைகளைத்தவிர்த்து, நமது இரட்சிப்பிற்காய் தேவனை முழுமையாய் நம்ப வேண்டும்.

3. வாக்குத்தத்தங்களில் நம்பிக்கை வைப்பது அநுதின இளைப்பாறுதலாய் (ஓய்வாய்) இருக்கிறது. (எபிரெயர் 3:11). - நமது அனைத்து தேவைகளையும் சந்திக்க நாம் தேவனில் நம்பிக்கை வைக்க வேண்டும்.

4. முதலாவது சாபத் (ஆதியாகமம்2:2, 3)ல் காணப்படுகிறது. தேவன் ஆறு நாளும் தனது சிருஷ்டிப்பின் கிரியைகளை முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்.

5. இஸ்ரவேலரின் சாபத்.. (யாத்திராகமம்20:8-11,உபாகமம்5:12-15).

a) பழைய ஏற்பாட்டில் இஸ்ரவேலர் ஏழாம் நாளில் எவ்வித வேலையும் செய்யாமல் ஓய்ந்திருக்க கட்டளை பெற்றனர். அவர்களது தேவைகள் அனைத்தையும் தேவன் சந்திப்பார் என, அவர் செய்து முடித்த கிரியைகளை நம்பி (சார்ந்து) ஓய்ந்து இருக்கவேண்டும்.

b) சாபத் (சனிக்கிழமை) பழைய சிருஷ்டிப்பு, மற்றும் பழைய உடன்படிக்கையின் நினைவு கூறும் நாளாக, சாபத் அநுசரிக்கப்பட்டது. (யாத்திராகமம்20:10-11, 31:12-17,எபிரெயர்4:4).

c) கிரியைகளை முக்கியப்படுத்துவோர் 'சாபத்' ஐ பலவிதமான தடைகள், அதிகமான வேதாகமகக் கட்டளைகள் மற்றும் இன்னும் சில கடமைகள் போன்றவற்றை புகுத்தி அதிக பாரமாக்கினர்.

d) மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் சாபத் வருடம் இருந்தது. இதன் படி ஒவ்வொரு ஏழாவது வருடமும் ஓய்ந்திருக்க வேண்டும். (யாத்திராகமம்23:10, 11).

e) சாபத் அநுசரனைகளை யூதர்கள் கைக்கொள்ளாத காரணத்தால் 70 ஆண்டு காலங்கள் பாபிலோன் அடிமைத்தனத்தில் இருக்க நேர்ந்தது. (லேவியராகமம்26:33-35, 2 நாளாகமம்36:20, 21, தானியேல் 9:2, எரேமியா25:11, 12, எரேமியா29:10).

6. கர்த்தரின் நாள்:

a) கர்த்தரின் நாள் (ஞாயிற்றுக்கிழமை) புதிய சிருஷ்டியின் ஞாபகார்த்த தினமாய் இருக்கிறது, மற்றும் கிறிஸ்துவுக்குள் சபையின் உயிர்த்தெழுந்த தினமாய் அநுசரிக்கப்படுகிறது. (2 கொரிந்தியர்5:17, கலாத்தியர்6:15,எபிரெயர்9:15, 10:20).

b) புதிய ஏற்பாட்டில் எல்லா நாட்களும் கர்த்தரின் நாட்களாய் இருக்கின்றன. (ரோமர் 12:1-2, எபேசியர் 4:1-3).

c) சபை யுகத்தில் விசுவாசிகளுக்காக ஒவ்வொரு சந்தர்ப்பமும் சாபத் ஆக இருக்கிறது. (எபிரெயர்4:1-3).

d) கர்த்தருடைய நாள் என்பது:

i) உயிர்த்தெழுந்த நாள். (மத்தேயு 28:1).

ii) சீஷர்கள் கூடின முதல் நாள் (யோவான்20:19).

iii) புதிய போதனைகளுக்கான நாள். (லூக்கா24:36-39).

iv) ஆதி சபை கூடிய நாள். (அப்போஸ்தலர் 20:6-7).

v) காணிக்கைகளை கொடுக்கும் நாள். (1 கொரிந்தியர்16:2).

vi) பரமேரிய நாள் (யோவான் 20:17).

vii) சபை துவங்கிய நாள் (பெந்தெகொஸ்தே நாள்) (அப்போஸ்தலர் 2).

7. ஒவ்வொரு சந்தர்ப்பமும் சாபத் என்பதைக்குறித்து பழைய ஏற்பாட்டில், நான்கு வேதபகுதிகள் விவரிக்கின்றன.

a) செங்களில் மோசே (யாத்திராகமம்14:10-14).

b) ஆபிரகாம் (ரோமர்4:17-21, ஆதியாகமம்22, எபிரெயர் 11:17-19).

c) யோசேப்பின் எழும்புகள் (எபிரெயர் 11:22).

d) காலேபும் இராட்சதர்களும் (எண்ணாகமம் 13,14, யோசுவா 14:6-14, 15:14, நியாதிபதிகள் 1:20).

__பாடம் 26 -- அதிகாரம் 20:__

பத்துக்கற்பணைகளின் செயல்பாடு:

சமுதாயத்தில் பத்து கற்பணைகளுக்கு விடுதலையின் அடிப்படை கோட்பாடுகளை நாம் பெற்று இருக்கிறோம். முதலாவது கற்பணை, இஸ்ரவேலர்கள் தேவனைக் கனப்படுத்தி தவறான மதத்தை தழுவாது இருப்பார்களேயானால் வலுப்பெறுகிறதாய் இருக்கிறது. சரித்திரத்தில் ஒரு தேசமானது வலுவாய் இருக்க தவறான காரியங்களை தனது தேசத்தில் அறிவிக்கப்படாது தவிர்க்கும் போது அது காரணமாய் இருந்தது எனப் பார்க்கிறோம்.

இரண்டாம் கற்பணை, சமுதாய நிலைகளின் செயல்பாடுகளில் தேவனை முதல் இடத்தில் வைத்தல் வேண்டும். தேவனை முதலிடத்தில் வைக்காமல், பணம், பதவி, அல்லது இச்சைகளை மனிதர் ஆராதிப்பார்களேயானால், அவர்கள் பிரச்சனைகளை தழுவுவது நிச்சயம். நீங்கள் குற்றங்கள் கண்டுபிடிக்கப்படுகையில் அழலாம், புலம்பலாம், ஒருவரது தனிப்பட்ட வாழ்வில் தேவன் முதல் இடம் பெறவில்லையானால் எந்த பிரச்சனைக்கும்

தீர்வு உண்டாகாது. உங்கள் சமுதாயத்தில் தேவனுக்கு முதல் இடம் இருக்குமேயானால், சமுதாயப் பிரச்சனைகளுக்கு அங்கு இடமிராது.

உங்கள் தேசத்திற்காக செய்யவேண்டிய பெரிய காரியம் என்னவெனில், தேவனது வார்த்தைகளைக் கைக்கொண்டு, அதனால் போஷிப்பை அடைந்து பிறருக்கும் அவைகளை பகிர்ந்து கொள்வது ஆகும். பெற்றோரைக் கனப்படுத்துதல் இதில் அடங்கும். ஓய்ந்திருக்கும் அல்லது ஆராதணை செய்யும் நாளை பிரத்தியேகப்படுத்துவதன் முக்கியத்துவம் கூட இங்கு காணப்படுகிறது. கம்யூனிசவாதிகள் வேதாகம அமைப்புகளை அழித்து அதை புறம்பாக்க முயன்றாலும் அது அவர்களால் கூடாமற் போயிற்று. அவர்கள் களைத்துத்தவித்து அவர்களது அனுபவ ரீதியாய், ஏழாவது நாள் ஓய்வு என்பது கைக்கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு தனிப்பட்ட நபரின் உரிமைகளை மதித்தல், திருமணத்தை கனப்படுத்துவதன் மூலம், தேசத்தில் உள்ள சமுதாயத்தின் நிலையான தன்மையை பெறுதல், பாலுறவை திருமண வாழ்வில் மட்டும் வைத்துக்கொள்ளுதல், மூலம் சமுதாயத்தை மேம்படுத்துதல், மற்றவர்களின் மறைவான வாழ்வு மற்றும் அவர்களது சொத்துக்களை மதிப்பது போன்றவைகள் பத்துக்கற்பணைகளில் அடங்குவதாய் இருக்கிறது, அல்லாமலும் சட்டத்திற்கான அடிப்படைகள், ஒழுக்க நெறிகள், வாழ்க்கை நெறிகள், போன்ற ஒவ்வொன்றும் சமுதாயத்தில், மனித வாழ்வுக்கு இன்றியமையாதவைகளாய் திகழ்கின்றன.

எப்படியிருப்பினும், மோசேயின் நியாயப்பிரமாணம் நமக்கு ஒரு போதும் பொருந்துவதாய் இல்லை, நாம் அதைக்காட்டிலும் உயர்வான நிலைக்கு கீழாய் இருக்கிறோம்.

இஸ்ரவேலில் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்படியாமைக்குரிய தண்டணைகள்:

முதலாம் கற்பணையை பொருத்த மட்டில், தேவனை ஆராதிக்க மனமற்றவர்கள் மரண தண்டனையினால் தண்டிக்கப்படுவர். யாத்திராகமம் 32:20 ff இரண்டாம் கற்பணைக்குரிய தண்டனையும், மரணதண்டனையாய் இருக்கிறது. பில்லிசூனியம், குறிசொல்லுதல், போதை வஸ்துகளை உபயோகித்தல் போன்றவைகளுக்கு இத்தகைய தண்டனை அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. யாத்திராகமம் 32, லேவியராகமம் 19,20.

தாயையும் தகப்பனையும் கனப்படுத்துதல். ஒரு வாலிபன் தனது பெற்றோரை சபித்தாலோ, பெற்றோரைத் தாக்கினாலோ, சோம்பலுள்ளவனாய் இருந்தாலோ, குடிகாரனாய் இருந்தாலோ, கீழ்படியாமல் மற்றும் கொள்ளயடிப்பவனாய் இருந்தாலோ அவர் மரண ஆக்கினைக்குப் பாத்திரனாய் இருக்கிறான். யாத்திராகமம் 21:15-17, உபாகமம் 21. இப்படிப்பட்டோரை தண்டியாமல் விட்டால் தொடர்ந்து இப்படிப்பட்ட தீமையில் நிலைகொண்டு இருப்பர். சிறுவர்கள் தங்கள்

கடமையை ஆற்றவில்லை என்றால் அது இஸ்ரவேலில் ஒரு பிரச்சனையாய் எடுத்துக்கொள்ளப்படவில்லை. இது ஒரு சில அரபு தேசங்களில் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன, அவர்களுக்கு சிறுவர்கள் குற்றப்பிரிவு பிரச்சனை என்பது இல்லை. மரணதண்டனைக்குரிய நபர் கல்லெறிந்து கொலை செய்யப்பட்ட பின்னர் அந்நபரது சரீரம் இழுத்துக்கொண்டுவரப்பட்டு, மரத்தில் தொங்கவிடப்பட்டு, அவன் சபிக்கப்பட்டவன் என்பதை இதன் மூலம் விளங்கப்பண்ணுவர்.

லேவியராகமம் 19:32ல் ஒரு அறையில் வயது முதிர்ந்தோர் செல்லும் போது, வாலிபர்கள் எழுந்து நின்று அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

அடிமைகளுக்கு கூட பாதுகாப்பும் மற்றும் உரிமைச்சட்டங்களும் உண்டு. பொருளாதாரப் பிரச்சனைகளால், அதாவது ஒருவரிடம் வாங்கின கடனை திரும்ப செலுத்த முடியாது இருக்கும் பட்சத்தில் அவர்கள் அடிமைத்தனத்திற்கு உட்படுவர். இப்படிப்பட்ட அடிமைத்தனம் ஏழு ஆண்டுகளுக்கு மேல் போகாது இதற்குள் மட்டுமே வகையறுக்கப்படுகிறது. இப்படி அடிமைப்படுத்தப்பட்ட நபர்களை அடிமை கொள்வோர், அவர்களுக்கு உணவளித்து, வஸ்திரங்கள் அளித்து, கல்வி மற்றும் அடைக்கலம் கொடுத்து பராமாறிக்க கடமைப் பட்டுள்ளனர். இது அடிமையானோர் தங்களை பராமறித்துக் கொள்ள இயலாத காரணத்தால் அவர்களை அடிமை கொள்வோர் இவைகளை செய்ய கடமை பட்டிருந்தனர். இன்றைய அளவில் அவர்கள் பட்டகடனை அவர்கள் வசம் விட்டுவிட்டு, அவர்கள் அவர்களைத் தாங்களே பார்த்துக்கொள்ளும்படி விட்டு, விட்டு அவர்களை அதிகமான குழப்பத்திற்குள் வாழ அனுமதிக்கிறார்கள். இஸ்ரவேலரின் சமுதாயத்தில் அடிமைத்தனம் என்பது ஒரு சமூக மறுவாழ்வுத்திட்டமாய் இருக்கிறது.

யாத்திராகமம் 21ல் கொலைசெய்தவன் கொலை செய்யப்படவேண்டும். அவன் மனுஷ கொலைபாதகனாய் இருப்பானேயானால், யாத்திராகமம் 21:13, அடைக்கலப் பட்டணங்கள் என பட்டணங்கள் ஏற்படுத்தப்பட்டு அங்கு அவன் சென்று அடைக்கலம் பெற ஏற்படுத்தப் பட்டிருந்தது. அப்படி ஓடி வந்தவனை அப்பட்டண மூப்பர்கள் விசாரித்து அவனை நிரபராதி எனக் கண்டால் அவனை கொலை செய்ய நினைப்பவர்கள் கையினின்று அவனை தப்புவித்து, அவ்வருடத்தின் பிரதாண ஆசாரியன் மரிக்கும் வரை அவனை அப்பட்டணத்தில் வாசம் பண்ண அனுமதிக்கக்கடவர்கள், ஆசாரியன் மரித்த பின்னர், அவன் அப்பட்டணத்திலிருந்து வெளியே செல்லலாம், அச்சமயம் அவனை கொலை செய்ய நினைப்பவர்கள் அவனை கொலை செய்ய அனுமதிக்கப்பட மாட்டர்கள்.

யாத்திராகமம் 21:22 ல் கருக்கலைப்பைக் குறித்த கண்ணோட்டத்தைப் பார்க்கிறோம். இருவர் சண்டையிட கருத்தரித்த பெண் அவர்களால் காயப்பட்டு, அக்குழந்தை முதிர்ச்சியடையாமல் பிறந்து, அக்குழந்தை உயிருடன் இருந்ததேயானால், அவளது புருஷன் நியமித்த அபராதத்தை காயப்படுத்தினவன் கொடுத்து தீர்க்கவேண்டும். ஒருவேளை அவனது

மனைவிக்கோ அல்லது குழந்தைக்கோ அசம்பாவிதம் சம்பவித்துண்டானால், அப்பிரச்சனைக்கு காரணமான நபர் அதேவிதத்தில் தண்டம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளான். இது தேவன் பிறவாத ஒரு சிசுவை குறித்து எவ்வாறு பார்க்கிறார் என்பதை தெளிவாய் சுட்டிக்காட்டுறதாய் இருக்கிறது. ஒரு சிசுவின் மரணம் ஒரு மனிதன் மரணத்திற்கு சமமாய் கருதப்படுகிறது. இது யோவான் ஸ்நானகன் கரு மற்றும் குழந்தை இயேசுவின் கரு குறித்த கிரேக்கப் பதம் ஒரே விதத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இது பிரெஹோஸ் [Brephos] என்கிற கிரேக்கப்பதம் இரு இடத்திலும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

லூக்கா 18:15 ல் சிறுபிள்ளகளுக்கு இதே வார்த்தையானது குறிப்பிடப்பட்டுள்ளது. வேதாகமமானது பிறக்க இருக்கும் குழந்தையானது மற்றும் பிறந்து வளரும் குழந்தை இவ்விரண்டும் ஒரே கண்ணோட்டத்தில் காணப்படுகிறது, இது மனித ஜீவனாய் இருக்கிறபடியால் இதற்கு சேதம் விளைவிப்பது தேவனுக்கு முன்பாக குற்றமாய் கருதப்படுகிறது, கருக்களைப்பு என்பது அனுமதிக்க முடியாத குற்றமாய் இருக்கிறது.

திருமணம்:

ஏழாவது கற்பனையானது, திருமணத்திற்குள் பாலுறவு கொள்வதை தவிர்த்து, ஒரு இளம் பெண்ணுடன் ஒருவன் பாலுறவு கொண்டால், யாத். 32:9 ff. அவளது தகப்பனுக்கு பரிசம் கொடுத்து அப்பெண்ணை மணந்து கொள்ள வேண்டும். தேவனது பார்வையில் பாலுறவு என்பது திருமணம் ஆன பின்பு வைத்துக்கொள்ள வேண்டும். திருமணத்திற்கு பின் பாலுறவின் செயல்பாடுகளில் இருவர் ஒருவர் ஆகின்றனர்.

விபச்சாரத்திற்கு இடமளித்து திருமணம் மீறுதலுக்குட்பட்டு விபசச்சாரத்திற்கு உட்பட நேரிட்டால் அவர்கள் கொலை செய்யப்படக்கடவர்கள். இதினிமித்தம் சுய நீதியை விளங்கப்பண்ண பரிசேயர்கள் யோவான் 8 ல் ஒரு விபச்சார ஸ்திரீயை கர்த்தரிடம் கொண்டு வந்தனர். கர்த்தர் நன்றாய் சொல்லியிருக்க வேண்டும், நான் இந்த ஸ்திரீயை மட்டும் காண்கிறேனே இவளுடன் விபச்சாரம் செய்தவன் எங்கே என எண்ணியிருக்க வேண்டும்?

மிருகங்களுடன் பாலுறவு கொள்ளுதல், ஓரினச் சேர்க்கை மற்றும் பலாத்கார பாலுறவு போன்றவை தண்டணைக்குரிய செயல்களாயும் அதற்கு மரணதண்டனையும் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. தேவன் பாலுறவு குறித்த சட்டத்தை மிகவும் கவனமாய் வடிவமைத்து அறியாமையுள்ளவர்களையும் பெண்களையும் பாதுகாக்கும் வண்ணமாய் இதில் உள்ள செயல்பாட்டை வடிவமைத்துள்ளார். இது ஒரு பெண்ணை பாலுறவுக்கு மட்டும் ஒரு காட்சிப் பொருளாய் வைத்துக்கொள்வது என்பது தவிர்க்கப்பட்டுள்ளது.

ஒரு சமுதாயம் தங்களில் உள்ள பெண்களை பாதுகாக்க தவறும்போது, சமுதாயத்தின் தரம் குறைந்து போகிறதாய் இருக்கிறது. மோசேயின்

நியாயப்பிரமாணத்தில் இரு நிலைகள் என்பது இல்லை. ஒரு பெண்ணின் மாத விலக்கு காலத்தில் பாலுறவு தடைசெய்யப்பட்டுள்ளது. யூதக்குலப்பெண்கள் இவ்வகையான காரியத்தை தங்கள் பழக்கவழக்கத்தில் கொண்டு ஒவ்வொரு மாதவிடாய் காலத்திலும் சுத்திகரிப்பு சடங்குகளை மேற்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். ஆலோசனைக்காய் அடிக்கடி வரும் பிரச்சனை என்னவெனில், சில மனிதர்கள் அவர்களது மனைவிமார்களின் தேவைகளில் இவர்கள் நடைமுறைக்கு ஒத்துவராதவர்களாய் இருக்கின்றனர்.

ஓரினப் பாலுறவு திருமணத்திற்கு விரோதமான, பாவமாயும் தீமையாயும் கருதப்படுகிறது. நாம் தீமை செய்யும் மக்களிடம் மிருதுவாய் நடந்துகொள்வதால், அப்பாவிகள் அதிகம் பாதிப்புக்குள்ளாகிறார்கள்.

சொத்துக் குறித்த சட்டம் தெளிவாக நியாயப்பிரமாணத்தில் அமைவு பெற்று இருக்கிறது. பண்டைய உலகில் திருடர்களை சிறைச்சாலையில் வைப்பது இல்லை. ஒரு திருடன் எதைத் திருடினானோ அதை திரும்ப ஒப்படைக்க வேண்டும், அவன் அதை வைத்து இருப்பானேயானால் இருமடங்கு கொடுத்து தீர்க்கவேண்டும், அதைவிற்று இருந்தால் ஐந்து மடங்கு திரும்ப கொடுக்க வேண்டும். நமது சமுதாயத்தில் சிறைச்சாலைக்கு செல்லும் நபருக்கு உணவளித்து, பொழுதுபோக்கிற்காக தொலைக்காட்சி பெட்டி கொடுத்து, அவர்களை சிறையில் பராமரிக்கும் செலவு [$50,000 = 50,000 பெருக்கல் 50 = 2,50,000] ஆகிறது இது நமது வரிப்பணத்திலிருந்து செலவு செய்யப்படுகிறது. இஸ்ரவேலில் சிறைச்சாலை என்பது கிடையாது. வீட்டை உடைத்து திருடச்செல்லும் திருடன் கொலை செய்யப்பட்டால் அது சட்டப்பூர்வமான கொலையாக கருதப்பட்டது.

யாத்திராகமம் 22ல் பணவிஷயத்தில் தன்னுடன் வாழும் மற்ற பிரஜைகளிடத்தில் வட்டி வாங்கக் கூடாது எனக்கூறப்பட்டுள்ளது. அடமானமாக ஒன்றைக் கொடுத்து கடன் வாங்கும் போது, கடனை செலுத்தி தீரும் போது அடமானமாய் கொடுக்கப்பட்ட பொருளை திரும்ப கொடுத்துவிடவேண்டும்.

ஒருவர் தங்களது மேல்வஸ்திரத்தை அடமானமாய் கொடுத்து கடன் வாங்கி இருப்பார்களேயானால், அவர்களது மேல் வஸ்திரத்தை அன்று இரவிற்குள் அதை திரும்ப கொடுத்துவிட வேண்டும். இதினிமித்தம் நியாயப்பிரமாணமானது பெலவீனரை மற்றும் மதிகேடரை கூட பாதுகாக்கும் அடிப்படையை கொண்டுள்ளதாய் இருக்கிறது.

பத்துக்கற்பணைகளை குறித்து புதிய ஏற்பாட்டில் திரும்ப கூறப்படாத கற்பணை எதுவெனில் சாபத் ஆகும். இதன் காரணம், சாபத் இதற்குப் பதிலாக வேறு ஒரு காரியம் அளிக்கப்பட்டுள்ளது. கொலோசெயர் 2 :16,17, எபிரெயர் 7:12,18, 10:1. மோசேயின் நியாயப்பிரமாண அமைப்பு அற்புதமானதும், செயல்படுத்தப்படக்கூடியதும், பொருத்தமானதுமாய் இருக்கிறது. இந்த அடிப்படை கோட்பாடுகளை நாம்

கடைபிடிப்போமானால், நாம் இதுவரை அடைந்திராத பாதுகாப்பை பெறுகிறவர்களாய் இருப்போம். இன்றைய அளவில் நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழ் இல்லாதவர்களாயிருக்கிறோம், ஆகையால் மோசேயின் நியாயப்பிரமாணத்தை திணிக்காது இருப்போமாக.

நமது வேலை ஜனங்கள் இரட்சிப்படையும் படி நாம் சுவிஷேச வேலையை செய்தல் வேண்டும். நீங்கள் நியாயப்பிரமாணத்தை உங்கள் சொந்தக் கரங்களில் எடுத்துக்கொள்ளக்கூடாது. பேதுரு, கர்த்தர் கைது செய்யப்படும்போது, மல்குஸ் என்னும் நபரின் காதை வெட்டி வீழ்த்தினான், இதினிமித்தம் அவன் கர்த்தரால் எச்சரிப்பைப் பெற்றான். நமது தேசம் தீமை நிறைந்த தேசமாய் இருக்கிறது, இது ஒரு கிறிஸ்தவ தேசமல்ல. நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் இருக்கிறோம், இதினிமித்தம் சிலரை இரட்சிப்பிற்குள் வழி நடத்துகிறவர்களாயிருக்கிறோம், தேசத்தை மாற்றி அமைத்தல் என்பது கூடாத காரியம். பெரிய அளவில் தேசத்தில் எழுப்புதல் உண்டாகி மாற்றங்கள் நடக்குமேயானால், அது ஒரு துணை விளைவாக கருதப்படும். மீன் குளத்தில் மீன் பிடிக்கவேண்டுமேயன்றி, அதை கழுவி சுத்திகரிக்க முயலுதல் கூடாது.

உபதேசங்கள்:

குடும்பம் [மேல் உள்ளப் பாடங்களில் காண்க]

விவாகம் [மேல் உள்ளப் பாடங்களில் காண்க]

தேசங்கள்

1. தேவன் தேசங்களுக்கு சரித்திர மற்றும் பூகோள எல்லைகளை அமைத்தார். அப்போஸ்தலர் 17:26, ஆதியாகமம் 10:25உபாகமம் 32:8.

2. எல்லா தேசங்களும் மற்றும் ஜனங்களும், நோவாவின் குமாரர்களாகிய காம், சேம், யாப்பேத் சந்ததியினர். (ஆதியாகமம் 9:19).

3. பாபேல் கோபுர தாறுமாறுக்குப்பின்னர் தேசங்கள் பிரிந்தன. (ஆதியாகமம்11:9).

4. இதினிமித்தம் சர்வ தேசக்கொள்கை, ஒருலகக் கொள்கை, தேவனுடய சித்தத்திற்கு விரோதமானது (cf ஆதியாகமம் 11:4,9) சாத்தான் போலியான உலக ஒருங்கிணைப்பிற்கு முயற்சி செய்கிறான்.

5. தேசங்கள் தேவனால் ஸ்தாபிக்கப்பட்டு சுதந்திரம் மற்றும் அவர்களது உரிமை பாதுகாக்கப்பட்டு வருகிறது, இதினிமித்தம் அவர்கள் தேவனை

சமாதானத்துடன் சேவிக்க ஏதுவுண்டாகிறது. (1 தீமோத்தேயு2:1-2).

6. சுயசித்தத்தின் முக்கியத்துவம் - ஒரு அரசாங்கம் ஜனங்களை, கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்ள அல்லது நிராகரிக்க செய்வதில் வலியுறுத்த முடியாது.

7. சுதந்திரங்கள் ஒரு தேசத்தில் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்.

a) தேசத்திற்கு புறம்பாக ராணுவத்தினால் பாதுகாக்கப்பட வேண்டும்.

b) தேசதிற்குள் காவற்படை மற்றும் கோர்ட் மூலம் பாதுகாக்கப்பட வேண்டும். (ரோமர்13:4) தூக்குதண்டனை என்பது, சட்டத்தினால் வலியுறுத்தப்படும் உள் அமைப்பு ஆகும். (ஆதியாகமம்9:6).

8. ஒரு தேசத்தில் விசுவாசிகளினால் ஆசீர்வாதமும் சாபமும் தீர்மானிக்கப்படுகிறது (உபாகமம்11:26-28, ஆதியாகமம்18:17-33, மத்தேயு5:13).

9. ஒரு தேசம் தீமையில் பலத்துக்கொள்ளுமானால் தேவன் அதை அளித்துப்போடுவார். உதாரணங்கள்:

a) அமோரியர்கள் (ஆதியாகமம்15:16, உபாகமம்7:2).

b) கல்தேயர்கள் (தானியேல் 5)

10. யூதர்கள் மற்ற தேசங்களுடன் பெண்கொடுத்து பெண்ணெடுக்கக்கூடாது, காரணம் அத்தேசத்தினரின் பழக்கவழக்கங்களால் அவர்கள் தீட்டுப்படக்கூடாது என தேவன் தடை விதித்திருந்தார். (உபாகமம் 7:1-3, எஸ்றா10:2,14).

a) அந்நியப்பெண்களுடன் சாலமோனுக்கு இருந்த இணைப்பு தீமையாய் இருந்தது (நெகேமியா13:23-27).

b) தன் ஜனத்தாரல்லாத மற்றவர்களிடம் ஆபிரகாம் தன் குமாரனாகிய ஈசாக்கிற்கு பெண்கொள்ள தடைவிதித்தான் (ஆதியாகமம்28:1).

c) ஏசா ஏத்தியரின் பெண்களை மணமுடித்தபடியால், அது ஈசாக்கிற்கும் ரெபேக்காளுக்கும் மனமடிவாய் இருந்தது. (ஆதியாகமம்26:34,35)

d) மோசே எத்தியோப்பிய பெண்ணை விவாகம் முடித்திருந்தபடியால் அது அவனது உடன்பிறப்புகளால் மனமடிவுக் குள்ளாக்கியது. (எண்ணாகமம்12:1).

11. அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தில் மூன்று விதமான பிளவுகளை இரட்சிப்பின் உதாரணங்களாக தோன்றுகின்றன:

அ] எத்தியோப்பியன் (காமின் வம்சத்தான்) இரட்சிப்படைந்தது (அப். 10:1-48).

ஆ] சவுல் (சேமின் வம்சத்தான்) இரட்சிப்படைந்தது (அப். 9:1-16)

இ] கொர்நேலியு (யாப்பேத்தின் வம்சத்தான்) இரட்சிப்படைந்தது (அப். 10:1-48)

<u>பாடம் 27 -- நியாயப்பிரமாணமும் காணிக்கைகளும்:</u>

நல்ல அரசாங்கத்தின் அடிப்படைக் கோட்பாடுகள்:

ஒரு பெரிய தேசத்தை கட்டி எழுப்புவதற்கு, ஐந்து பகுதிகளில் மரியாதை காக்கப்பட அவசியமாய் இருக்கிறது:- குற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களது எதிர்ப்பாளர்களுக்கு அளிக்கப்படும் தண்டணையினால் அவர்களை மதிப்பது முதலாவது பகுதி ஆகும், திருமணத்தில் மட்டும் பாலுறவுக்கு அளிக்கப்படும் மரியாதை இரண்டாவது பகுதி ஆகும், சொத்துக்களுக்கு அளிக்கப்படும் மரியாதை மூன்றாவது பகுதியாகும். தனி உரிமை மரியாதை நான்காவது ஆகும், பிறர் மீது அவதூறு மற்றும் வதந்திகளை உருவாக்காது இருத்தல் மூலம் மரியாதை செலுத்துதல் ஐந்தாவது ஆகும்.

நியாயப்பிரமாணமானது, கொள்ளைக்காரர்கள் மற்றும் கொலைகாரர்கள் போன்றோருக்கு மரணதண்டனை அளிப்பதால் பாதிப்புக்குள்ளானவர்கள் மீது பெரிதான அளவில் அழுத்தத்தை அளிப்பதாய் இருக்கிறது. பாதிக்கபடுவோரின் வாழ்க்கையை மதிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நீங்கள் எதிர்ப்பவர்களின் வாழ்வை மதிக்கத் தொடங்கும்போது, அறியாமை உள்ளவர்களின் வாழ்வை கீழ்ப்படுத்துகிறவர்களாய் இருப்பீர்கள்.

திருமணபந்தத்தில் உள்ள பாலுறவு கனப்படுத்தப்படுகிறது. பாலுறவு என்பது மனமகிழ்வை ஏற்படுத்துவதற்காய் ஏற்படுத்தப்பட்டது, இது ஒரு மனிதனுக்கும் அவனது மனைவிக்குமிடையே இனப்பெருக்கத்தை உண்டாக்க வேண்டும் என்ற அவசியத்தை ஏற்படுத்துவதாய் இல்லை. பாலுறவு என்பது பிள்ளைப்பேற்றிற்காக மட்டும் என்னும் கருத்தை மாற்றி அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். இது திருமண உறவினால் மட்டும் ஏற்படும் பால் உறவு ஆகும், இது பயமின்றி, குற்றமனசாட்சியின்றி, எவ்வித பிரதி விளைவுகள் ஏற்படுமோ என்கிற பயஉணர்வின்றி இருவரது ஒப்புதலின் பேரில் மனமுவந்து ஈடுபடும் செயலாகும். இது மனிதனது வீழ்ச்சிக்கும் முன்னும் பின்னும் உண்மையாய் இருந்தது என்பதை சங்கீதம், நீதிமொழிகள், உன்னதப்பாட்டு போன்ற புஸ்தகங்களில் காண்கிறோம். பாலுறவு என்பது ஒரு மனிதன் ஒரு பெண்ணிடமிருந்து இன்பத்தை எடுத்துக்கொள்வது என்பது ஆகாது.

வேதாகமத்தில் இருமனம் குறித்து எவ்வித பேச்சுக்கும் இடமின்றி காணப்படுகிறது. திருமணம் மற்றும் பாலுறவுக்கும் இடையே உண்டாகும் இணைப்பில், பிணக்கப்படுவது வலியுறுத்தப் படுகிறது.

சொத்து மற்றும் அந்தரங்கம் குறித்து கனப்படுத்தப்படுகிறது, அவதூறு மற்றும் வதந்தி போன்றவைகளில் இருந்து பாதுகாப்பும் அளிக்கப்படுகிறது. குடும்பத்தைக் குறித்த கனம், குற்றமற்றவர்களின் வாழ்வைக் குறித்த கனம், திருமணத்தை குறித்த கனம், தனிப்பட்டவர்களின் சொத்து மற்றும் அவர்களது அந்தரங்கம் போன்றவற்றைக் குறித்த கனம் ஒரு சமுதாயத்தின் அத்திய அவசியமான அடிப்படையாய் விளங்கி வருகிறது. இந்த ஐந்து அடிப்படைக் கருத்துக்களினால், நமக்கு அடிப்படை உரிமை என்பது அவசியமற்றதாகிவிடுகிறது. இதுவே ஒரு நீதிக்குரிய சமுதாய அமைப்பின் அடிப்படை காரியமாய் இருந்து, இந்த சாத்தானின் உலகில், ஒரு வேளை நீங்கள் ஒரு கிறிஸ்தவ தேசத்தாராய் இல்லாதிருந்தாலும் கூட, இதுவே உங்களது தேசத்தின் சமுதாய அடிப்படையாய் இருந்து வருகிறது. இந்த ஐந்து அடிப்படை கருத்துக்களும் அமைந்த ஒரு தேசமானது மிகவும் வலுப்பெற்ற தேசமாய் இருக்கிறது.

மோசேயின் நியாயப்பிரமாணம்:

மோசேயின் நியாயப்பிரமாணம் என்பது பத்து கட்டளைகளில் மட்டும் அல்ல, இது மோசே எழுதின ஐந்து ஆகமங்களிலும் காணப்படுகிற ஒன்றாய் இருக்கிறது. இவைகள் மொத்தம் 633 கட்டளைகள் இருக்கின்றன, இவைகள் அனைத்தும் மூன்று பிரிவுகளாய் பிரிக்கப்பட்டுள்ளன. முதலாவது பத்துக் கட்டளைகள். இரண்டாவது சடங்குகள் மற்றும் காணிக்கைகள், மூன்றாவது பரிசுத்த நாட்கள் மற்றும் சமூக நல கோட்பாடுகள்.

இக்கட்டளைகள் அனைத்தும் ஒரு நபர் ஒரு பாவியாய் இருக்கிறார் என்பதைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது. உங்களது முதிர்ச்சிக்குரிய நிலையில் பஞ்சாகமத்தை கற்றுக்கொள்ளும் போது, அது உங்களை, நீங்கள் ஒரு பாவி என்றும் உங்களுக்கு ஒரு இரட்சகர் அவசியமென்றும் தெளிவுற உணர்த்துகிறதாய் இருக்கிறது.

அவர்கள் இப்படிப்பட்ட உணர்வுக்கு வரும்போது, அவர்கள் ஒரு பலிமிருகத்தை கொண்டுவந்து, பொதுவாக ஒரு ஆட்டுக்குட்டியை பலி பீடத்தில் பலியாக மரிக்கும்படி அற்பணிப்பர். இது ஒரு பாவி மரிக்க வேண்டிய இடத்தில், பாவமற்ற பிராயசித்தமாய் ஒரு ஆட்டுக்குட்டி பலியாகி, அந்நபரது பாவத்தை நிவிர்த்தி செய்யும் ஒரு அடையாளமாய் சித்தரிக்கப்படுகிறது. இது ஒரு பாவி தான் செய்த பாவத்திற்காக இதைத் தவிர வேறொன்றையும் செய்ய இயலாதவனாய் இருக்கிறான் என்பதை இது நமக்கு காட்டுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பலிசெலுத்துவதன் மூலம், ஒரு பாவியின் ஸ்தானத்தில் ஒரு குற்றமற்ற மிருகம் மரித்து, அது தனது இரத்தத்தினால் ஒரு பாவியின் பாவத்தை மூடுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பலியை கொண்டுவருவது விசுவாசத்தையும், கீழ்ப்படிதலையும் வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது.

புதிய ஏற்பாடு:

புதிய ஏற்பாட்டில் அடிப்படை கோட்பாடுகளின் வழியில் எவ்வித மாற்றங்களும் கிடையாது, ஆனால் செயல்பாட்டில் மட்டுமே மாற்றங்கள் இருக்கின்றன. சில கூடுதலான கட்டளைகள் சேர்க்கப்பட்டு மொத்தம் 700 கட்டளைகளாய் இருக்கின்றன. மலைப்பிரசங்கத்தை இதில் எடுத்துக்கொள்ளக்கூடாது. சிலரது கூற்றுப்படி இதை எடுத்துக்கொண்டவர்கள், சீக்கிரத்தில் தங்களது தவறை உணரக்கூடியவர்களாய் இருக்கின்றனர்.

இங்கு உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியைக் காண்கிறோம். இன்றைய அளவில் நாம் ஒரு ஆட்டுக்குட்டியை எடுத்துக்கொண்டு அவசியமில்லை, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து அந்த தேவ ஆட்டுக்குட்டியாய் இருந்து, உலகின் பாவத்தையெல்லாம் எல்லாருக்காகவும் ஒருமுறை எடுத்து தீர்த்துவிட்டார். இது யுகங்களின் மாற்றமாய் இருக்கிறது. இன்றைய அளவில் கர்த்தருடைய மேஜையில் பங்கு பெற வரும்போது ஒரு ஆட்டுக்குட்டியை கொண்டு வந்து அதன் தொண்டையை அறுக்கிறவர்களாக இல்லை.

சிலுவையின் சமயந்தொடங்கி, பலிபீடத்திற்கு ஒரு ஆட்டுக்குட்டியை பலி செலுத்தக் கொண்டுவருவது தவறாய் கருதப்படுகிறது. அநேக யூதர்கள் இவ்விதச் செய்கை ஆதிச் சபையில் செய்து வந்து, கிறிஸ்துவின் மரணம் மட்டும் நமது பாவத்திற்கு போதாது, நாம் பலியும் செலுத்த வேண்டும் என்று தொடர்ந்து பலிசெலுத்திவந்த படியால், எபிரெயர் 6 ம் அதிகாரத்தில் இது குறித்து பேசப்பட்டு ஒரேதரம், எல்லாருக்காகவும் பலிசெலுத்தப்பட்டதை பேசப்பட்டு, அவர்களது அத்தகைய செயல்பாடுகள் ஒழுங்கிற்கு கொண்டுவரப்பட்டது. கர்த்தர் சொல்லும்போது முடிந்தது எனக்கூறினார், அது இத்தகைய செயல்பாட்டிற்கு ஒரு முடிவை கொண்டுவருகிறதாய் இருந்தது. இது பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் கிருபையினால், அவரில் வைக்கும் விசுவாத்தைக் கொண்டு இது நிகழ்வதாய் இருக்கிறது.

காணிக்கைகள் / பலிமுறைகள்:

பழைய ஏற்பாட்டில் கர்த்தருக்கு தங்களது விசுவாசத்தைக வெளிப்படுத்தும் முகாந்திரம், அவர்கள் காணிக்கைகள் மற்றும் பலிமிருகங்களை கொண்டுவருவதாய் இருந்தது, மற்றும் இவைகள் நியாயப்பிரமாணத்தைக் கற்றுக்கொள்ளும் வண்ணம் சமாதான பலி மற்றும் பாவநிவாரணபலிகள், குற்ற நிவாரணபலி மற்றும் போஜனபலி போன்ற இவைகள் ஏதோ ஒன்று வருவதை சுட்டிக் காட்டுவதாய் இருந்தது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில் அவர்கள் பஞ்சாகமத்தையும் பலிகளையும் குறித்துக் கற்றுக்கொள்கிறவர்களாய் இருந்தனர். 9 வயது நிரம்பிய ஒரு யூத சிறுவன், பஞ்சாகமத்தை முழுவது கற்றுக்கொண்டவனாய் இருக்கிறான். ஒவ்வொரு தனிப்பட்ட காரியமும் தேவலாயத்தில் கர்த்தரைக் குறித்து பேசப்பட்ட போது, ஒரு விசுவாசி, பலிகளையும் பண்டிகை நாட்களையும் நிறைவேற்றும் போது அவன் சிலுவையின் முன்பு வளருகிறவனாக இருக்கிறான். அவர்கள் உபதேசத்தைக் கற்றுக்கொள்கிறவர்களாயும்,

தேவன் அளிப்பதை பெற்றுக்கொள் கிறவர்களாயும், ஒவ்வொரு நாளும் பாவத்துடனும் மற்றும் தீர்க்கதரிசனத்துடனும் ஈடுபடுகிறவர்களாய் இருக்க அவசியப்பட்டது.

இன்றைய அளவில் நாம் பரிசுத்த ஆவியானவரின் நிறைவின் மூலம் தேவ வார்த்தையால் போஷிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். அவைகளை நமது வாழ்விற்கு பொருந்துமாறு அமைத்துக்கொண்டு ஆவிக்குரிய வாழ்வில் வளருகிறவர்களாய் இருக்கிறோம். சிலுவைக்கு முந்தின காலத்தில் வளர்ச்சியானது, அவர்கள் கண்ட காரியங்கள் மூலம் மறைமுகமாய் இருந்தது, இக்காலத்தில் சிலுவையானது அவர்களை வழிநடத்துவதாய் இருந்தது. சிலுவைக்கு முந்தின காலத்தில், ஆலய அமைப்புகள் கற்றுக்கொடுத்த வண்ணம் ஒரு ஆசாரியன் என்ன உடுத்திக்கொண்டு செயல்படுகிறான் என்பதை மட்டும் கண்டனர்.

இன்றைய நவீன காலத்தில் ஒரு தேவ ஊழியர் எதை உடுத்த வேண்டும் என்பதன் முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. அவர் வேதாகமத்திலிருந்து எதைப் போதிக்கிறார் என்பதே முக்கியமானதாய் கருதப்படுகிறது காரணம் அவர் தேவனது வார்த்தையை பகிர்ந்து கொடுக்கிறவராய் இருக்கிறார்.

நியாயப்பிரமாணமும் கிருபையும்:

கடந்த காலத்தில் எபிரெய நிருபத்தில் கூறப்பட்டது போல சுவற்றில் விழும் நிழலைப்போன்று காரியங்களைக் கண்டோம். இப்பொழுதோ அவற்றின் உண்மையானவற்றை காண்கிறவர்களாய் இருக்கிறோம். இதுவே இஸ்ரவேலரின் காலத்திற்கும் சபைக்கும் உள்ள வித்தியாசமாய் இருக்கிறது. நாம் கண்டு / தரிசித்து நடவாமல் விசுவாசத்து நடக்கிறவர்களாய் இருக்கிறோம். எல்லாவற்றிலும் கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு நடப்பதாய் இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு சிலுவை வெளிப்படுத்திய நமது விசுவாசம், இன்றைய அளவில் நமது விசுவாசத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. விசுவாசம் எப்பொழுதும் மாற்றமில்லாமல் ஒரேவிதமாகவே இருக்கிறது, நமது விசுவாசத்தின் குறிக்கோளும் ஒரே விதமாய் இருக்கிறது, தேவன் அளிக்கும் பலன்களும் ஒரேவிதமாகவே இருக்கின்றன.

சிலுவையிலிருந்து பெந்தெகொஸ்தேயானது உலகை மாற்றி அமைப்பதாய் இருந்தது. ரோமர் 8:1-4ல் பரிசுத்த ஆவியானவரின் ஆழுகைக்கு கீழ் இருப்பது அல்லது பழைய பாவ சுபாவத்தைப் பின்பற்றுவது குறித்து பவுல் சுட்டிக்காட்டுகிறவராய் இருக்கிறார். இதினிமித்தம் நாம் மோசேயின் பிரமாணத்திலிருந்து, கிறிஸ்து இயேசுவின் ஆவியின் பிரமாணத்திற்கு புதிய ஏற்பாட்டின் வழிமுறை மூலம் மாற்றமடைந்துள்ளோம். கலாத்தியரில் பவுல், பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின எல்லாம் புதியாயின என ஏன் விவாதிக்க வேண்டும்?

நியாயப்பிரமாணமானது கிறிஸ்துவண்டை வழிநடத்தும் உபாத்தியாயர்

போல் இருந்தது. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து வந்தபின்னர் அவர் பரிபூரணமாய் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றி முடித்த படியால், ஏதோ சில மேன்மையான காரிங்களை செய்ய முன்னேறி செல்ல வாய்ப்பை அளிக்கிறவராய் இருக்கிறார். ஒரு விசுவாசி ஆவியில் நடக்க உறுதிப்பாட்டுடன் இருக்கும் போது, அவர் எப்படியும் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்கிறவராய் இருக்கிறார். சுவிஷேசத்தின் ஊழியராய் இருக்கும் நீங்கள், சபையானது ஒரு ஸ்தாபன அமைப்பிலும் அல்லது அதன் நிகழ்ச்சிகள் அனைத்திலும், அச்சபையானது பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டில் இருப்பதை தெரிந்து கொள்வது உங்களது தலையாய கடமையாய் இருக்கிறது.

சபையை ஆழுகை செய்வது பரிசுத்த ஆவியானவரா அல்லது கிரியைகள் மூலம் உண்டாகும் இரட்சிப்பின் மூலமா [legalism].? சுவிஷேசத்தைப் பெற்றுக்கொண்ட அநேக ஜனங்கள் இங்கு தவறுகிறவர்களாய் இருக்கின்றனர் காரணம் விதிகள் மற்றும் ஒழுங்குமுறை பட்டியலிட்டு அதன் படி நடக்கும்படி வற்புறுத்தப்படுவதால். கிறிஸ்தவர்கள் மதுபானம் அருந்தாமல், புகைபிடிக்காமல், நடனமாடாமல் அல்லது சத்தியம் பண்ணாமல் இருந்தால் அவர்கள் மிகவும் சரியாய் இருக்கிறோம் என எண்ணிக் கொள்கிறார்கள். இதுவே கிறிஸ்தவம் குறைந்து போவதற்கு ஒரு காரணமாய் இருக்கிறது. நீங்கள் வேதாகமத்தை தெளிவாகவும் முழுவதுமாக கற்றுக்கொடுத்தல் வேண்டும். இங்குள்ள கேள்வியானது எப்பொழுதும் முதலாவது கிறிஸ்துவையே சந்திக்கிறவர்களாய் இருக்கிறோம், அவரை சந்திப்பதற்கு முன்னர் எதைச் செய்ய வேண்டும் என்பது முக்கியம் அல்ல. ஒரு ஊழியர் தனது கணிப்பில் உள்ள சட்டங்களை ஒழுங்குகளை கைக்கொண்டு ஒருவரை மாற்ற முயலுவதை விட, கர்த்தரே ஒரு நபரில் மாற்றங்களை கொண்டுவருதல் இயல்பான ஒன்றாய் திகழ்கிறது. தேவன் மனித முயற்சிகளால் ஒரு குறிப்பிட்ட திருப்பு முணைகளை ஏற்படுத்துவதில் ஆர்வமுள்ளவராய் இல்லை.

ஆவியில் நடப்பதைக் குறித்த ஆறு வேதபகுதிகள் இருக்கின்றன: ரோமர் 3:1031, 5:2022, 6:6,7,14, கலாத்தியர் 3:1327, 5:16, எபிரெயர் 3:1327, 5:16, எல்லா புஸ்தகங்களிலும் ஒரு வசனம் பொதுவானதாய் இருக்கிறது, "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்".

நீங்கள் கிறிஸ்தவர்களாய் இருக்கிறபடியால், அன்பின் பிரமாணத்தின் மூலம் உங்கள் சுதந்திரமானது வரையறைக்குட்படுத்தப்படப் போகிறதாய் இருக்கிறது. மதுபானம் அருந்துவது ஒரு உதாரணமாய் இருக்கிறது. இதோடு கூட விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்ட மாமிசத்தையும் கூட சேர்த்துக்கொள்ளலாம். நாம் இன்றைய அளவிலும் இஸ்லாமியர் மிருகங்களை கொலை செய்யும் போது அவைகளை அல்லா பெயரைச்சொல்லி கொல்லுகிறார்கள், சீனர்களின் உணவு விடுதிகளிலும் இதைப்போன்ற காரியங்கள் நடைபெறுகின்றன. 1 கொரிந்தியர் 8. பண்டைய உலகில் இறைச்சி கிடைக்கும் ஒரே இடம், புறஜாதியரின் ஆலயங்களில் மட்டுமே. புறஜாதியாரின் ஆலயத்தில் விக்கிரக வழிபாடு நடக்கும் ஒரு இடம் உண்டு, அங்குள்ள பின் அறைகளில், ஆண்கள்,

பெண்கள், மிருகங்களுடன் பாலுறவு பயிற்சிகள் நடைபெறும், அங்கு மிகச்சிறப்பான மதுபானக்கடை இருக்கும் அது அப்பட்டணத்திலே மிகச்சிறந்ததாய் விளங்கும். கொரிந்து பட்டணத்தில் அநேகம் ஜனங்கள் சைவ உணவருந்துகிறவர்களாய் இருந்தனர் மற்றவர்கள் மாமிசம் உண்கிறவர்களாய் இருந்தனர்.

இது சபையில் மார்க்கப்பேதங்களுக்கு காரணமாய் அமைந்தது, இது அந்நிய பாஷை பிரச்சனையை விட, இப்பிரச்சனை பெரிதாய் விளங்கியது அதிகாரங்கள் 12-14. சைவ உணவு குறித்த மார்க்கபேதங்கள் மாமிசம் உண்ணலாமா வேண்டாமா என்கிற பிரச்சனைகளை அளிக்கிறதாய் இருந்தது.

விசுவாசிகளின் நடத்தையில் குறிப்பிட்ட தராதரம் இருக்கின்றன. இது சிலசமயங்களில் முக்கியம் வாய்ந்ததாய் விளங்கி, சில காரியங்கள் சட்டப்பூர்வமாய் தவறான விஷயங்களுக்கு காரணமாய் அமைந்து விடலாம் என கருதப்படுகிறது. இவற்றைக்குறித்த உதாரணத்தைப் பேசும்போது அவை அரசியலாகி, சுவிஷேசம் அளிப்பதற்கு தடையாய் நிற்கும் பிரச்சனைகளாகிவிடுகிறது.

உச்சக்கட்ட பலியின் பிரமாணமானது கர்த்தரது வேலையை செய்வதில் முன்னேற்றம் காட்டும்படி, திருமணம் அல்லது பிள்ளைகளை பெற்றுக்கொள்ளுதல் இவற்றைத் தவிர்த்தல் தேவனது திட்டத்திற்கு இடையூறாக இருக்கும். கடந்த நூற்றாண்டுகளில் அநேக மிஷனரிமார்கள் இதை தங்கள் வாழ்வில் செய்து இருக்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்விற்கான நியாயப்பிரமாணம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறதாய் இருக்கிறது, இவைகள் மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் காட்டிலும், மேலானதாயும், அதற்குஅப்பாற்பட்டதாயும் இருக்கிறது.

உபதேசங்கள்:

ஆட்டுக்குட்டி [மேலே உள்ள பாடங்களில் காண்க]

புதிய ஏற்பாட்டின் பிரமாணங்கள்

1. நமக்குள்ள பிரமாணமே நாம் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு கீழானவர்கள் அல்ல.
கிறிஸ்து மோசேயின் நியாயப்பிரமாணத்துகு அவசியமான யாவற்றையும் நிறைவேற்றி தீர்த்துவிட்டார் (மத்தேயு5:17). பரிசுத்த ஆவியானவர் நம் மீது ஆதிக்கம் செலுத்துவார் என்றால் இயல்பாகவே நாம் நியாயப்பிரமாணத்தின் நீதியை நிறைவேற்றுகிறவர்களாய் இருக்கிறோம்.

2. விடுதலையின் பிரமாணம்:
பிரமாணம் ஒருவரைத், தன்னைத்தானே வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

வேதத்தின் படி சில காரியங்களை தனிப்பட்டவிதத்தில் பாதிக்காவண்ணம் செய்ய உரிமை உங்களுக்கு உண்டு. அது தேவனை விட்டு உங்களை வழிவிலகச்செயவதில்லை. (1 கொரிந்தியர்8:8).

3. அன்பின் பிரமாணம்:
இந்த பிரமாணம் மற்ற விசுவாசிகள் மீது அக்கறை கொள்ளச்செய்கிறது. பெலவீன சகோதரன் மீது அன்பு கூறும்போது, அவர்களை எதிர்க்கவோ, அவர்கள் நிமித்தம் இடறலடையக்கூடாது, உங்களுக்கு நலமாய் தோன்றும் காரியங்கள் அவர்களுக்கு இடறல் உண்டாக்குமானால் அவற்றை அவர்கள் நிமித்தம் தவிர்ப்பது அவசியம். நீங்கள் அவற்றை தவிர்ப்பது மற்ற விசுவாசிகளுக்கு தடைகல்லாய் இருக்கக்கூடாது என்பதற்காகவே செய்கிறீர்கள். (1 கொரிந்தியர்8:9).

4. செய்யத்தகுந்த பிரமாணம்:
இந்தப் பிரமாணம் அவிசுவாசிகளை பற்றியதாகும். கிறிஸ்துவின் உலகில் செய்யத்தகுந்தவற்றை உங்கள் வாழ்க்கை கூறும். கிறிஸ்தவர்களை நடத்துவதற்காக அவிசுவாசிகள் சில நிலைகளை அமைத்துள்ளனர்.இதினிமித்தம் சில காரியங்களுக்கு நீங்கள் விலகியிருக்க வேண்டும் அல்லது உண்மையான சிலகாரியங்களை செய்தாக வேண்டும். அவர்கள் தவறாய் செயல் படுகிறார்கள் என்பதற்காய் அல்ல கிறிஸ்து அவர்களது பாவங்களுக்காய் மரித்தார் என்பதை அவர்கள் தடையின்றி கண்டுகொள்ள அப்படி செய்தல் வேண்டும். (1 கொரிந்தியர்9: 20-23)

5. ஒப்புயர்வற்ற பலியின் பிரமாணம்:
இப்பிரமாணம் தேவனண்டை வழிநடத்துகிறதாய் இருக்கிறது. பூரணமாய் கர்த்தரை சேவிக்க, முற்றிலுமாய் சில காரியங்களை உண்மையாய் விட்டுவிடுவதாகும். மிஷனரிகள் இந்த பிரமாணத்தின் கீழ் அடிக்கடி செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் பழங்குடியினர் வாழும் நிலையில் அவர்களது பணித்தளத்தில் இருக்கின்றனர். இந்தப்பிரமாணம் ஆஸ்திரேலியா நிலைக்குப்பொருந்தி செயல்படுகிறதாய் இருக்கிறது. (மத்தேயு 3:1-6).

6. அடிப்படைக் கருத்து:
கிறிஸ்தவர்களாகிய நமக்கு சுதந்திரம் உண்டு, மற்றும் முழுமயான சுதந்திரம் மற்றவர்களை அடிமைத்தனத்திற்கு உள்ளாக்கலாம். நமக்குள்ள சுதந்திரத்தை மிகுந்த கவனத்துடன் பயன்படுத்தி, மற்றவர்கள் சுதந்திரத்தை பாதிக்கா வண்ணம் செயல்படுதல் முக்கியம். கிறிஸ்தவர்களாகிய நாம் பொறுப்புடன் செயல்படுதல் அவசியம். (எபேசியர்5:15).

கிறிஸ்தவ வாழ்க்கை [மேலுள்ள பாடங்களில் காண்க]

பாடம் 28 -- லேவியரின் பலிமுறைகள்:

பலிமுறைகள்: லேவிய பலிமுறைகளில் ஒருவர் மிகத்தெளிவுடன் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் மரணத்தைக் காணமுடியும். லேவிய பலிமுறை அமைப்பில் இருவகைகளாக பலிகள் வேறுபிரிக்கப்பட்டு, மொத்தத்தில் ஐந்து பிரிவுகளாய் விளங்கிவருகிறது. முதலாவதாய் சுகந்த வாசனையுள்ள பலிகளாய் பலிசெலுத்தப்பட்டு அது தேவனுக்கு "சுகந்த வாசனையுள்ளதாய்" அற்பணிக்கப்பட்டது, இது இரட்சிப்பைக்குறித்தும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் செய்த கிரியைகளை குறித்தும் பேசுகிறதாய் இருக்கிறது. முதலாவது அமைப்பில் கீழ்க்கண்டவைகள் அடங்கியுள்ளன:

[அ] தகனபலியானது பதிலாகுதல் என்பதை பிரதிபலிக்கிறதாய் இருந்து அது தேவனது நீதி நியாயங்களை திருப்திப்படுத்துகிறதாய் இருக்கிறது.

[ஆ] போஜன பலி இது கிறிஸ்துவின் கிரியைகளை குறித்துப் பேசி அவரது ஆளத்துவத்தை வலியுறுத்துகிறது.

[இ] சமாதான பலி இது ஒப்புரவாகுதலை வருணிக்கிறதாய் இருக்கிறது, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தேவனோடு உள்ள ஐக்கியத்தை ஏற்படுத்தும் கிரியை குறித்து பார்க்கிறதாய் இருக்கிறது.

மற்ற இரு அமைப்புகளில் "சுகந்த வாசனையற்ற" பலிகள் செலுத்தப் படுவதைக் காண்கிறோம் இவைகள் இரட்சிப்பிற்கு பின்னர் செய்த பாவத்திற்காய் செலுத்தப்படும் பலியை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது.

[அ] பாவ நிவாரண பலி இது தெரிந்து செய்யும் பாவத்திற்கான பலியாக வலியுறுத்தப் படுகிறது.

[ஆ] குற்றநிவாரண பலி அறியப்படாத பாவத்திற்காய் செலுத்தப்படும் பலி குறித்து கூறுகிறது. இது பாவ உணர்வினால் தவிக்கும் போது இவ்வகையான பலியானது செலுத்தப்படுகிறது, இது ஒருவர் செய்யும் இப்படிப்பட்ட பாவத்தினால், என்று சுட்டிக்காட்ட இயலததாய் இருக்கிறது.

மேற்கண்ட இரு அமைப்புகளும் 1 யோவான் 1:9 ஐ உள்ளடக்கியுள்ளது, நாம் அறிந்து செய்த பாவத்தை அறிக்கை செய்யும்போது, கர்த்தர் நம்மைக் கழுவி சுத்திகரித்து "எல்லா அநீதிகளுக்கும்" அல்லது அறியப்படாத பாவங்கள், இது குற்றநிவாரண பலிக்கு சமமாய் கருதப்படுகிறது.

கிறிஸ்தவ வளர்ச்சியின் போது, பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியை பிரகாசிக்கச் செய்கிறவராய் இருக்கிறார், மற்றும் பாவங்களை அறிக்கை செய்யத் தூண்டுவது அதிகரிப்பதினிமித்தம், குற்றநிவாரணப்பகுதியில் கொஞ்சப்பாவங்கள் மட்டுமே எஞ்சியிருக்கிறது. இந்தப்பகுதியில் நாம் வருகிற காரியங்களுக்குரிய நிழலாட்டத்தைக் காண்கிறவர்களாய்

இருக்கிறோம். இங்கு நாம் இரட்சிப்பையும், பரிசுத்தமாக்கப்படுதலையும் பெற்றுக்கொள்கிற வர்களாய் இருக்கிறோம்.

லேவியராகமம் 1:3 ff ல் இந்த பலியானது ஒருமுறை செலுத்தப்பட்டு பாவியாய் இருந்த நிலை உணரப்பட்டு ஒரு இரட்சகர் அதற்கு அவசியம் என வலியுறுத்துகிறது. இப்பலி மிருகமானது பழுதற்ற ஒரு ஆண் மிருகமாய் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட இளங்காளை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை குறித்து பேசுகிறதாய் இருக்கிறது, கர்த்தர் பூரணராய் இருக்கிறார்.

வசனம் 4ல் முழுமையான பதிலாகும் அடிப்படைக் கருத்தை பெற்றிருக்கிறோம். பலியை கொண்டு வரும் நபர், பதிலாகும் ஒன்றைக் கொண்டு வருகிறவராய் இருக்கிறார். பலியை படைப்பவர் தான் கொண்டு வந்த மிருகம், தான் வேதனை அனுபவிக்கும் இடத்தில் அது பதிலாகப்போகிறது என்பதை உணருகிறவராய் இருக்கிறார். இங்கு நாம் குற்றம் செய்த ஒருவருக்காய் குற்றமற்ற ஒரு மிருகம் பாடுபடும் அடிப்படைக் கோட்பாட்டை பெற்று இருக்கிறோம். அப்பலியின் இரத்தமானது பாவத்தின் விபரீதத்தை விவரிக்கிறதாய் இருக்கிறது. ஒரு மிருகத்தின் தொண்டையை அறுக்கும் போது அதன் இரத்தம் எல்லா இடங்களிலும் சிதறுவது விவரிக்கப்படுகிறது. இது அவ்வளவு சிறப்பான ஒன்று எனக்கூறுவதற்கில்லை.

ஜனங்கள் இதைச் செய்வதினிமித்தம் தேவன் ஒரு கொடூரர் ஆகமாட்டார். இது இப்படி செய்யப்படும் பொழுது, அச்சம் தருகிறதாயும், பயங்கரமானதாயும் இருக்கிறது, இது தேவன் பாவத்தைக் காணும் போது எவ்வாறு மோசமான நிலையில் காண்கிறார் என்பதை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. இது தேவன் மனிதனின் பாவத்தை போக்க செயல்படும் விதத்தை காட்டுவதோடு மட்டுமல்லாமல், தனது ஒரே பேரான குமாரனை தியாக பலியாய் கொடுக்கும்படியாய் போவதையும் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

பலி செலுத்துகிறவர் "தானகவே மனமுவந்து" பலிமிருகத்தைக் கொண்டு வருகிறவராய் இருக்கிறார், ஒருவரும் அவரை பலிசெலுத்தும்படி கட்டாயப்படுத்த வில்லை. இரட்சிக்கப்படும் படி ஒருவரும் கட்டாயப்படுத்தப் படுவது இல்லை, அவர்கள் தங்களது சுயசித்தத்தின் படியே வருகிறவர்களாய் இருக்கின்றனர். தகனபலிக்கான மிருகத்தைத் தங்களுக்காய் கொண்டுவருவது குறித்து ஒவ்வொரு நபரும் தாமாகவே தீர்மானிக்கின்றனர். இது ஆசரிப்பு கூடாரத்தின் வாசற்பகுதியில் நிகழும் நிகழ்வாய் இருக்கிறது, இது ஆசாரிப்பு கூடாரத்திற்குள் அல்ல காரணம் ஆசரிப்பு கூடாரத்திற்குள் நிகழும் நிகழ்ச்சிகள் ஐக்கியத்தை பிரதிபலிக்கும் இடமாய் இருக்கிறது. இது ஆசரிப்புகூடாரத்தின் கதவருகில் நிகழ்வதன் காரணம் இந்நபர் ஒரு அவிசுவாசியாய் இருக்கிறார். இதை இவ்வாறு கொண்டுவருவதன் மூலம், தங்களது தேவையை உணர்ந்து தேவனுக்குக் கீழ்ப்படியும் முகாந்திரமாய் இதைக்கொண்டு வருவதின் நிமித்தம், அவர்கள் தேவனுடன் ஐக்கியத்தில் நுழையும் பயனை

அடைகிறவர்களாயிருக்கிறார்கள். கிருபையினால் விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டீர்கள். இப்படிப்பட்ட பலிமுறைகளில், புதிய ஏற்பாடு பெரிதாய் காணப்போகிற அநேக காரியங்கள் இருக்கின்றன.

வசனம் 5 லிருந்து 9 வரை, அம்மிருகம் கொல்லப்பட்டு, தோலுரிக்கப்பட்டு துண்டு துண்டாக்கப்படுகிறது. மிருகத்தின் தோலுரிக்கப்படுதல், ஆதாமுக்கும் ஏவாளுக்கு தோலுடை தரிக்கப்படுதலை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது, அவர்கள் ஏதேனில் இருக்கும் போது, தங்களுக்காய் அத்தியிலைகளால் உடைகளை உண்டாக்கிக் கொண்டனர் இதற்குப் பதிலாக இத்தோலுடை அளிக்கப்பட்டது. நாம் தேவனுடைய நீதியினால் உடுத்திவிக்கப்படவேண்டும், நமது சொந்த அழுக்கான கந்தைகளினால் அல்ல. அதன் குடல்கள் தகனிக்கப்படுவதற்குமுன் கழுவப்பட வேண்டும். தகனிக்கப்படும் பலியிலிருந்து எழும்பும் புகையானது ஆகாய மண்டலத்தில்கலக்கும் போது, செலுத்தப்பட்ட பலியானது தேவனால் அங்கீகரிக்கப்பட்டதாய் இருக்கிறது.

ஜனங்களால் ஒரு இளங்காளையை பலிகொடுக்க இயலவில்லையானால், அவர்கள் ஒரு ஆட்டை பலிக்காய் கொண்டுவரலாம், புறா அல்லது புறாக்குஞ்சுகளைக்கூட இவ்வித பலிக்காய் கொண்டுவரலாம். இது சமுதாயத்தில் அவர்களது ஏழ்மைநிலைக்குத் தக்கவாறு கொண்டுவரப் பணிக்கப்பட்டது. புறாவோ புறாக்குஞ்சோ அது கழுத்தானது துண்டிக்கப்படும் ஆனால் அது இரண்டாய் துண்டிக்கப்படுவது கிடையாது.

இது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சரீரம் சிலுவையில் இடப்பெயர்வடைந்ததை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. அவர் ஆலயத்தை சுத்திகரிக்க தொடங்கின போது பலிக்காய் வைக்கப்பட்டிருந்த பறவைகளை பறக்க விட்டு அதைவிற்றவர்கள் மீது மிகவும் கடினமாய் நடந்துகொண்டது மிகவும் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது.

அதிகாரம் 2:

லேவியராகமம் 2 ல் நாம் கிறிஸ்துவையும், சிலுவையையும் காண்கிறோம். முதற் பலன்கள் தகனிக்கப்படுவதில்லை எனப்பார்க்கிறோம், காரணம் அவர்களது பாவங்களுக்கான கிரயம் செலுத்தப்பட்டுவிட்டது, இது உயிர்த்தெழுதலை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. சர்வாங்க தகனம் ஒரே முறை எல்லாருக்காகவும் தகனிக்கப்பட்டுவிட்டது.

உபசரிப்பின் நியாயப்பிரமாணத்திற்கு கீழாக, சத்துருவானவனும் நீங்களும் அவரது மேஜையில் உப்பைத் தின்றபடியால், நீங்கள் இருவரும் கூடாரத்தில் இருக்கும் பரியந்தம் எவ்வித சேதத்திற்கும் உள்ளாகதபடி பாதுகாக்கப் படுகிறவர்களாய் இருக்கிறீர்கள்.

பண்டைய உலகில் உப்பானது, பாதுகாக்கும் வஸ்துவாய் பயன்படுத்தப்பட்டு வந்தபடியால், மற்றும் இது ஒரு ஒப்பந்தத்தை முத்திரையிடும் வழியாய் இருந்தபடியாலும், இது நித்திய ஜீவனை இங்கு

காணச்செய்கிறதாய் இருக்கிறது. இது பலியை பாதுகாக்கும் வஸ்துவாய் இருக்கிறது, இது உங்களை பாவத்திலிருந்து பாதுகாக்கிறதாய் இருக்கிறது.

வசனம் 14-16ல் முதற்பலன்களின் போஜனபலிகளை காண்கிறோம், இது மறுபடியும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை சித்தரிக்கிறதாய் இருக்கிறது. அவர் அடிக்கப்பட்டார், நமக்காக அவர் தரையிலே உருட்டப்பட்டார். முதற்பலனான தானியத்திற்கு எவைகளெல்லாம் செய்யப்பட்டதோ அவை அனைத்தும் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவில் நிறைவேற்றப்பட்டது. பலியிடப்பட்டதை புசிப்பது என்பது, அப்பலியின் குறிப்பிட்ட நோக்கம் நிறவேறுவதைக் காட்டுகிற்தாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பலியானது யூதர்களின் மூன்று பண்டிகை காலங்களில் பலியிடப்பட்டு வந்தது, பஸ்கா, முதற்பலன்களின் காலத்தில், மற்றும் பிராயச்சித்த பலி செலுத்தப்படுங்காலங்களில் செலுத்தப்பட்டு வந்தது.

அதிகாரம் 3

அதிகாரம் 3 ல் சமாதாண பலி காணப்படுகிறது, இது ஒப்புரவாக்குதலை வருணிக்கிறது, தேவனுக்கும் மனிதனுக்குமிடையே உள்ள தடைச்சுவரை தகர்க்கிறதாய் இருக்கிறது. எபேசியர் 2:13-16. அவரே நமக்கு சமாதாணமாய் இருக்கிறார். அவர் நம்மை தேவனுடன் ஒப்புரவாக்குகிறவராய் இருக்கிறார். கொலோசெயர் 1:20.

பலிசெலுத்துபவர்கள் கொழுப்பையோ அல்லது இரத்தத்தையோ புசிக்கக்கூடாது. கொழுப்பானது ஒரு மிருகத்தின் சிறப்பான பகுதியாய் கருதப்பட்டது, இதினிமித்தம் அது தேவனுக்குரியதாய் செலுத்தப்பட்டது. இது ஒரு மிருகம் பெற்று இருக்கும் செழிப்பும் ஆசீர்வாதமும் இது பிரதிபலிக்கிறதாய் இருந்தது. ஒவ்வொரு சமயமும் யூதர்கள் கொழுப்பை மாமிசத்திலிருந்து வெட்டி எடுக்கும் போது அவர்கள் நன்றி சொல்கிறவர்களாய் இருப்பார்கள். இது ஒரு ஆரோக்கியமான பழக்கவழக்கமாய் கூட இருக்கிறது. இது ஒரு ஆரோக்கியத்தின் ஒழுங்கு முறை மட்டுமல்லாது, ஆவிக்குரிய ஒன்றாயும் விளங்கிவந்தது. நாம் வழக்கமாய் கர்த்தருக்கு நன்றி பலி செலுத்த கடமை பட்டுள்ளோம்.

அவர்கள் இரத்தத்தை புசியாதிருந்தனர், இரத்தப்பொறியல் செய்து சாப்பிடுவது அல்லது அதை பானம் பண்ணாதிருந்தனர். இரத்தம் பாவத்திற்குரிய பலியாக பேசப்பட்டது. இது விஷேசித்ததாய் இருந்தது. இரத்தம் தற்காலத்தில் கலாச்சார உயிரமைப்பு அடிப்படையில் உபயோகப்படுத்தப்பட்டு, ஆரோக்கிய கண்ணோட்டத்தில் அதை கண்டிப்பாய் புசித்தல் கூடாது என தடைசெய்யப் பட்டுள்ளது. யூதர்கள் புசிக்கும்போதும், ஆகாரப்பொருட்களை தயார் செய்யும்போதும் தொடர்ச்சியாய் உபதேசத்தைக் குறித்து ஞாபகப்படுத்தப்பட்டு வந்தனர். இவ்வித உபதேசம் குறித்து தெளிவு இல்லாத நிலையில் எதுவும் இல்லாதிருந்தது. கிறிஸ்தவராய் வாழும் நமக்கு தேவனது வார்த்தையானது வாழ்வதற்குரிய அமைப்பை தனிப்பட்டமுறையில் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இதில் ஒத்துப்போவது என்பதற்கிடமில்லை. தேவனது

வார்த்தையின் அடிப்படையில் நாம் ஒவ்வொரு காரியத்தையும் செய்கிறவர்களாய் இருக்கிறோம்.

பலிமுறைகளின் வகைகள்:

ஆணோ அல்லது பெண்ணோ பலிகொடுக்கிறவர்களாயிருந்தனர், செயல்பாட்டிற்கு உட்பட்டோ அல்லது செயல்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலையிலோ இது பிரதிநிதித்துவம் செய்கிறதாய் இருந்தது. கர்த்தர் செயல்பாட்டிற்கு உட்பட்டோ அல்லது செயல்பாட்டிற்கு அப்பாற்பட்டோ உள்ள கீழ்ப்படிதலை வரவேற்கிறவராய் இருக்கிறார்.

கிட்னி / குண்டிக்காய்கள், எபிரெய சிந்தனைப்படி உள்ளான பூரணத்தை பற்றி பேசுகிறதாய் இருக்கிறது, அடக்கும் ஆற்றல் ஆத்துமாவின் உணர்ச்சிவசப்படும் ஆசனமாய் இருக்கிறது. இது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவின் பூரணத்துவத்தையும், மற்றும் அவர் மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே சமாதாணம் செய்வதையும் வருணிக்கிறதாய் இருக்கிறது.

இவ்விதமாய் ஜனங்கள் காணக்கூடிய நிலையில் போதன பெற்றனர். யூதர்கள் ஆலயத்திற்குச் சென்றனர், மற்றும் ஆசரிப்பு கூடாரத்திற்கு சென்றனர், அங்கு உபதேசங்கள் அவர்களுக்கு முன்னர் செயலாற்றப்படுவதைக் கண்டனர். மறுமலர்ச்சியடைந்தவர்கள் பழைய காலத்து பலிமுறைகளை குறித்து பேசினர். உண்மையில் மிகவும் சுத்திகரிக்கப்பட்ட வாழ்வின் நாடகத்தை நடித்துக்காட்டுவதே இதன் நோக்கமாய் இருக்கிறது.

இதன் நோக்கங்கள் அநேக காரியங்களை காட்டுவதாகும், தேவனது குணாதிசயம், தேவன் அளிக்கும் காரியங்கள், மனிதனின் பாவத்தன்மை மற்றும் பாவத்தின் அகோரம் போன்றவைகளாகும். இப்படிப்பட்ட நாடகம் ஜனங்களின் மனதை சுடுகிறதாய் இருக்கிறது. தேவனது வழியில் நாம் காரியங்களை செய்யும்போது, நாம் இரட்சிப்படைய முடியும்.

விவரிக்க முடியாதது என்று வேதாகமத்தில் ஒன்றும் இல்லை. அறியாமை என்பது விசுவாசியின் மிகப்பெரிய குறைபாடாய் இருந்து வருகிறது. இன்றைய அளவில் நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்னவெனில், நமது கர்த்தர் சிலுவையின் மூலம் கடந்து சென்றதை தெளிவுடன் அறிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். எப்படியிருப்பினும் சிலுவைக்கு முன்னதாக இப்படிப்பட்ட காரியங்கள் விவரிக்கப்பட்டிருப்பதை அறிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

சோதனைக்கு எதிராய் எவ்வாறு நம்மை பெலப்படுத்திக்கொள்ளலாம்? சிலுவை மற்றும் நித்தியத்திற்கு நேராக இவற்றை நாம் ஒருமுகப்படுத்த முடியும். கிறிஸ்து சிலுவையில் எதைச் செய்தார், அவரை அவ்வாறு செய்ய வைத்தது என்ன? இதை அறிந்து கொண்டு அவர்கள் மறுபடியும்

செயல்படமுடியும், அவர்கள் மறுபடியும் பாவம் செய்வார்களெனில், அவர்கள் இன்னொரு ஆட்டுக்குட்டியைத் தெரிந்துக்கொண்டு அதைப்பலிகொடுக்க வேண்டியவர்களாய் இருந்தனர். இங்கு நாம் சிலுவையின் அருகில் செல்கிறவர்களாயும் அது என்ன அர்த்தத்தை தெளிவு படுத்துகிறது என்பதை அறிந்துகொள்ளக்கூடியவர்களாய் இருக்கிறோம்.

உபதேசங்கள்:

புளித்தமா

1. புளித்தமாவின் அடிப்படை: பிசைந்த மாவிலோ, அல்லது திரவ நிலையில் உள்ள ஒன்றிலோ அதை புளிக்க வைக்க பயன்படுத்தப்படும் மூலப்பொருள் ஆகும்.

2. வேதாகமத்தில் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள இடம்: ஆதியாகமம் 19:3 தேவதூதர்கள் சோதோம் கொமோராவை அழிக்க லோத்தின் வீட்டில் தங்கியபோது, லோத்து அவர்களுக்கு 'புளிப்பில்லா அப்பங்கள" உணவாய் பரிமாறினான்.

3. பண்டிகை ஆசரிப்பது சம்பந்தமாய் வேதாகமத்தில் முதலில் குறிப்பிடப்பட்டுள்ள இடம்: யாத்திராகமம் 12:8, 15-20.- பஸ்கா மற்றும் புளிப்பில்லா அப்பப்பண்டிகை.

   a) புளித்தமா விரும்பப்படாததும், தீமைக்கு அடையாளமாய் இருந்து வந்தது.

   b) புளிப்பில்லாத அப்பம் கிறிஸ்துவுக்கு அடையாளமாகவும், அவரது தீமையற்ற பூரணத்துவத்தை குறிக்கிறதாய் இருக்கிறது.

4. புளித்தமா மத்தேயு 13:33 ல் உபத்திரவ காலத்தின் போது, ஊடுருவிச்செல்லும், மதசம்பந்தமான விசுவாச துரோகத்தை பிரதிபலிக்கிறது.

5. சதுசேயரின் புளித்தமா மனிதக் கண்ணோட்டத்தின் பாவமாயும், பகுத்தறிவு வாதமாய் இருக்கிறது, சுவிஷேசத்தை புறக்கணிப்பது அதன் விளைவாய் இருக்கிறது. (மத்தேயு 16:6).

6. பரிசேயரின் புளித்தமா மதத்தின் மூலம், ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரான சாத்தானின் எதிர்தாக்குதலாய் இருக்கிறது, இவைகள் நற்கிரியைகள் மூலம் இரட்சிப்பு, மதச்சடங்குகளுக்குரிய முக்கியத்துவம் போன்றவற்றில் அடங்கும். (மாற்கு 8:15, லூக்கா12:1).

7. ஏரோதின் புளித்தமா உலகப்பிரகாரமான பாவமாய் இருக்கிறது. (ரோமர்12:2). மற்றும் பதவி மோகம் (மாற்கு8:15).

8. கொரிந்தியரின் புளித்தமா ஒழுக்கநெறி தவறுதலின் பாவங்கள் மற்றும் முறைகேடுகள். (1 கொரிந்தியர்5:6, 7,
1 கொரிந்தியர் 5:1,2).

9. கலாத்தியரின் புளித்தமா கிரியைகள் மூலம் இரட்சிப்பு, மற்றும் இரட்சிப்படைவதற்கு விருத்தசேதனமே என வற்புறுத்துதல். (கலாத்தியர்5:9).

உப்பு [மேல் உள்ள பாடங்களில் காண்க]

<u>பாடம் 29 -- பாவ அறிக்கை செய்தல்:</u>

முகவுரை:

பாவநிவாரண பலி சுகந்த வாசனைக்குரிய பலி அல்ல. ஒரு விசுவாசியின் வாழ்வில் பாவம் இருக்குமேயானால் அது தேவனை மகிழ்விப்பதாய் இல்லை. மனிதன் பாவம் செய்யும் போது அது தேவனுக்கு நறுமணமாய் இருப்பதில்லை. முதல் மூன்று அமைப்புகளில் காணப்படும் பலி முறைகள் தேவனுக்கு சுகந்த வாசனையாய் இருந்தது காரணம், அவைகள் இரட்சிப்பை உண்டாக்கும் பலிகளாய் இருந்தன அதனால் தேவன் திருப்தியடைகிறவராய் இருந்தார்.

அதிகாரம் 4:

லேவியராகமம் 4:1-4 ல் நான்கு காரியங்கள் அவசியப்படுகின்றன.

[அ] ஒரு நபர் தான் பாவம் செய்துவிட்டேன் என உணர வேண்டும்.

[ஆ] எது அவசியமோ அதை அவர்கள் செய்தாக வேண்டும், அவர்கள் தங்களது பாவத்தை குறித்து மிகக்கவனமாய் இருத்தல் வேண்டும். நாம் மிகவும் நன்றியுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும் காரணம், சிலுவைக்கு பின்னால் உள்ள காலத்தில் இருக்கிறபடியால், நாம் நமது பாவத்திற்காய் தேவாலயத்திற்குள் எவ்வித பலி மிருகங்களையும் எடுத்துச் சென்று பலிசெலுத்த அவசிய மற்றவர்களாயிருக்கிறோம்.

[இ] பாவம் ஒரு விசுவாசியை தேவனிமிருந்து பிரிக்கிறதாய் இருக்கிறது. ஏசாயா 59:2. பாவம் உங்கள் வாழ்வில் இருக்குமேயானால், கர்த்தர் உங்களுக்கு செவிகொடுக்க மாட்டார். சங்கீதம் 66:18. ஐக்கியத்தில் பிளவு உண்டாகும்.

[ஈ] இரட்சிப்பின் பலிகளைப்போன்றே நாமும் பலிசெலுத்தும் முறைமையைப் பெற்றிருக்கிறோம். அந்த ஒற்றுமை இரு இடங்களிலும்

கிறிஸ்துவின் இரத்தமாய் இருக்கிறது. இது ஒரேவிதமாய் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உங்களது இரட்சிப்பிற்காய் மரித்து, உங்கள் வாழ்நாளில் செய்த எல்லாப் பாவங்களுக்காகவும் இரத்தம் சிந்தி இருக்கிறார்.

இதே கிறிஸ்துவின் இரத்தத்தினால் 1 யோவான் 1:9 ஐ உரிமைபாரட்டி, யோவான் 3:16ன் படி கிறிஸ்தவர்களாகிய நீங்கள் கிறிஸ்துவை உங்கள் இரட்சகராக உரிமை பாராட்டுகிறவர்களாயும் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட பலிகள் எப்படியிருப்பினும், தனிப்பட்ட பலிகளாய் இருக்கின்றன, இது ஒருவிசுவாசியின் பாவ நிவாரண பலியாய் இருக்கிறது.

பெந்தெகொஸ்தே இயக்கமானது வலுவான அர்மீனிய வாசனை வீசுகிறதாய் இருந்து, ஒவ்வொரு முறையும் நாம் பாவஞ்செய்யும் போது, இரட்சிப்பை இழந்து, மறுபடியும் இரட்சிப்படைய வேண்டியவர்களாய் இருக்கிறோம் என்பதை விசுவாசிக்கிறது.

லேவிய பலிமுறைகளில் தகன பலியாக ஒரேமுறை இரட்சிப்பிற்காய் பலிசெலுத்திய பின்னர், குற்ற நிவாரண பலியை மீண்டும் மீண்டும் செலுத்துகிறவர்களாய் இருந்தனர். நீங்கள் ஒரு முறை இரட்சிக்கப்படுகிறீர்கள், ஆனால் உங்களது கிறிஸ்தவ வாழ்க்கையின் போது பாவம் செய்கிறவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் இளைய குமாரனைப்போன்று இருக்கிறீர்கள், அவன் பாவம் செய்த பின்னர் திரும்ப வீடுதிரும்பினான், அவன் அவனது ஸ்தானத்தில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட்டான். அவர்களது உறவானது முறிந்து போகவில்லை, அவர்களது ஐக்கியம் மட்டுமே பிளவு பட்டது. கிறிஸ்தவ சேவைகளில் நீங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டு, பின்னர் அதை இழந்து தவிப்பது என்பது அர்த்தமற்ற புத்தியீனமாய் இருக்கிறது. நீங்கள் அறியாத ஒரு பிரசங்கத்தை நீங்கள் தயார் செய்தல் கூடாது, அதாவது நீங்கள் பிரசங்கம் தயார் செய்யும் போது இரட்சிக்கப்பட்டீர்களா அல்லது அதை பிரசிங்கித்து முடிக்கும் ஞாயிறு ஆராதணையில் இரட்சிக்கப் படபோகிறீர்களா.

குற்றநிவாரணப் பலியின் போது, அதே கிறிஸ்துவின் இரத்தம் பாவநிவிர்த்தி செய்கிறது என்ற போதிலும் இது வித்தியாசமானதாய் இருக்கிறதாய் இருக்கிறது. அவர்கள் உறவை மறுபடியும் பெறவேண்டிய அவசியமில்லை, அவர்கள் அதை ஏற்கனவே பெற்று இருக்கிறார்கள், பிளவுபட்ட ஐக்கியம் மட்டுமே இங்கு சரிசெய்யப்படுகிறது.

வசனம் 5-7ல் காணப்படும் பலியானது முழுவதுமாய் வெளியே எடுத்துச் செல்லப்பட்டு அது முழுவதுமாய் தகனிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இங்கு சமாதான பலியுடன் உறவு என்பது இருக்கிறதாய் இருக்கிறது. இங்கு திரும்ப பெறப்படுவது சமாதானமாய் இருக்கிறது. பலிபீடத்தின் தகனிக்கப் பட்டது என்னவாயிருக்கிறது எல்லாக் கொழுப்பு. கொழுப்பானது ஐசுவரியம் மற்று அம்மிருகத்தின் சிறப்பான நன்மையாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில், நீங்கள் கொழுப்பை உண்பீர்களானால் மிருகத்தின் மிகச் "சிறப்பான" பகுதியை உண்கிறவர்களாய் இருப்பீர்கள்.

யூதர்களின் காலத்தில் கொழுப்பானது கர்த்தருக்கென சுகந்த வாசனையாய் தகனிக்கப்பட்டது. தகனபலியை தகனிக்குமிடத்து அது வெளியே பட்டணத்து புறம்பே தகனிக்கப்பட்டது, அது முழுவதுமாய் தகனிக்கப்பட்டது, அதன் சாணி முதற்கொண்டு தகனிக்கப்பட்டது.

இரட்சிப்பை பிரதிபலிக்கு சுகந்த வாசனைக்குரிய பலியாய் இல்லாது, இருந்தது பாவ நிவாரண பலி என்பது, அப்பலியில் ஒன்றும் புசிக்கப்படாது அது முற்றிலுமாய் தகனிக்கப்பட்டது காரணம் அது பாவநிவாரணத்திற்காய் பலியிடப்பட்டது. அது பாளயத்திற்கு புறம்பே இருந்தது. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவும் பட்டணத்தின் சுவர்களுக்கு வெளியே மரணமடைந்தார். இது கிறிஸ்துவின் மரணம் பட்டண சுவர்களுக்கு வெளியே இருந்தது என்பதை சுட்டிக்காட்டுகிறத்தய் இருந்தது.

மற்ற அதிகாரங்கள் பலவிதமான பலிமுறைகளுக்கான வழிமுறைகளை கற்றுக்கொடுப்பதாய் இருக்கிறது. அன்றைய சமுதாயத்தில் உள்ள பலதரப்பட்ட மக்களுக்கு, ஆட்டுக்குட்டி, வெள்ளாடு போன்றவைகள் பலி செலுத்தும்படி அளிக்கப்பட்டன.

லேவியராகமம் 5.

லேவியராகமம் 5ம் அதிகாரத்தில் குற்றநிவாரண பலி குறித்து பேசுகிறது, ஒரு நபர் சடங்கு சார்ந்த நிலையில் அசுத்தமாய் இருக்கும்போது, அல்லது அவர்கள் ஒரு குறிப்பிட்ட பாவம் பாவம் என உணராதிருக்கையில், அத்தகைய பாவம் 1 யோவான் 1:9 ன் படி அறியப்படாத பாவமாயி ருக்கையில், 4 ம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள பலிமுறையானது பலிசெலுத்தப்படுகிறதாய் இருக்கிறது, அத்தகைய பலி அறிந்து செய்த பாவத்திற்காய் செலுத்தப்படுகிறது, இத்தகைய பாவங்களை நாம் அறிக்கை செய்யவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இந்த அதிகாரத்தின் விளைவு தவறான காரியங்களை உள்ளடிக்கிக் கொண்டிருக்கலாம். உங்கள் வாழ்வில் அறிவிற்கு அப்பாற்பட்ட நிலையில், நீங்கள் தவறான காரியங்களில் பங்கேற்கிறவராய் இருப்பது இவ்வகையைச் சார்ந்ததாய் இருக்கிறது. நீங்கள் தீமையுடன் தொடர்புடையவர்களாய் இருக்கிறீர்கள் என உணருவீர்களானால், அத்தீமையை விட்டு வெளியே வர முற்படுங்கள் மற்றும் நீங்கள் உங்கள் வாழ்வில் உள்ள தீமை அகற்ற வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்.

விசுவாசியாய் இருக்கும் நீங்கள் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டிய அவசியம் இருக்கிறது, மற்றும் நீங்கள் எவற்றுடன் செயல்பட்டு வருகிறீர்கள் என்பதை பகுத்து அறியும் தன்மையும் அவசியமாய் இருக்கிறது. மரித்துப்போன அல்லது தீமையான காரியங்களை குத்திப்பார்த்துக் கொண்டு திரியக்கூடாது. குறிப்பிட்ட காரியங்களை குறித்து நீங்கள் மிகவும் கவனமாய் செயல்படுதல் அவசியம் என உணர்தல் வேண்டும். ஒரு வேளை நீங்கள் தவறான காரியத்துடன் செயல்படுகிறீர்கள் என உணர்ந்தால் அக்காரியங்களை அகற்றிவிடுதல் வேண்டும். பிசாசின்

உலகில் உங்களில் காணப்படும் தவறான செத்த கிரியைகள் இருக்குமானால், அவற்றை விலக்கிப்போடுதல் அவசியம்.

வசனம் 4 ல் ஜனங்கள் தீமையைக்குறித்து பேசுவதும், சிந்திப்பதும் கூறப்பட்டுள்ளது. நீதிமொழிகள் 6:16-19 ல் அதிகமான கொடிய பாவங்கள் சிந்தனையினால் அல்லது நாவினால் செய்யும் பாவங்களாய் இருக்கிறது எனக்காட்டப்படுகிறது. இவைகளை பகுத்தறிந்து உங்களைத்தானே தீமையினின்று அகற்றிக் கொள்ளுதல் வேண்டும். நீங்கள் தீமையை சிந்திப்பவர்கள், அவற்றை பேசுபவர்கள், அல்லது அவற்றை நடப்பிப்பவர்களுடன் தொடர்புடையவர்களாய் இருப்பீர்களானால், நீங்கள் தீமையில் சிக்கிக்கொள்கிறவர்களாயும், அதனால் பாதிக்கப்படுகிற வர்களாயும் இருப்பீர்கள். மற்றவர்கள் வாழ்வில் நீங்கள் பாவத்தை காணும் போது, அவைகளை அழுக்கடைந்ததாயும், நாற்றமெடுக்கும் பிணத்தைப் போல் காணுங்கள்.

வசனம் 5 ல் உங்கள் பாவத்தை அறிக்கை செய்வதன் அவசியத்தைக் குறித்துப் பார்க்கிறோம். இது தன்னையே சுட்டிக்காட்டுகிறதாகவும் மற்றும் தீவிரமானதாயும் இருக்கிறது. இது உங்களுத்தானே நீங்கள் அறிக்கை செய்து கொள்ளவேண்டும் எனக்கூறுகிறது. அதை தீவிரமாய் செய்தல் வேண்டும். உங்கள் வாழ்வில் நீங்கள் தீமையை எதிர்கொள்ள வேண்டும் அதை விட்டு ஓடக்கூடாது. ஒரு நபர் சிந்தனையுடன் நடந்துகொள்ள இது ஊக்கமளிப்பதாய் இருக்கிறது. அவைகள் சிலுவையை முன்னிட்டு, அவைகள் தனக்குத்தானே திவாலாகாதபடி, தொடர்ந்து காளைகளை பலிக்காக கொண்டுவருகின்றனவாய் இருக்கின்றன.

இதைத் தொடர்ந்த வசனத்தில் மந்தையில் பெண்மிருகத்தை பலிசெலுத்தக்கூறுவது கவனிக்கத்தக்கது. பெண் பதில் அளிக்கிறவளாய் இருக்கிறாள், இங்கு ஒரு விசுவாசி பாவத்திற்கு பதில் அளித்தல் வேண்டும். மந்தையில் பெண் இனம் மிகவும் விலையேறப்பட்டதாய் இருந்தது, பெண் இனமே எதிர்காலத்தில் மந்தைக்கு சந்ததிகளை உற்பத்தி செய்யும் திறனை சார்ந்து இருந்தது. ஒரு பெண் மிருகத்தை பலி செலுத்தும் போது மந்தையை பெருக்கும் சிலாக்கியம் இழக்கப்படுகிறது. இதை பகுப்பாய்வு செய்வதன் மூலம், நித்திய உற்பத்திக்கு பேரிழப்பை, பாவம் வாழ்வில் இடம்பெறும் போது உண்டாக்குகிறதாய் இருக்கிறது. அவர்கள் தங்களது வாழ்வில் எதையே வீணடித்துவிட்டதாக உணருகின்றனர்.

1 யோவான் அதிகாரம் 1:

1 யோவான் 1:5-10 இவ்வேதப் பகுதியின்படி, தேவனது தனித்தன்மையானது மாறாததாய் இருக்கிறது. அவரில் எவ்வளவேனும் இருள் இல்லை. பாவம் தேவனுக்கும் அவரது குணாதிசயத்திற்கும் எதிரிடையாக இருக்கிறது. நாம் அவருக்கு சுகந்த வாசனையற்ற பலியை அறிக்கை செய்வதன் மூலம் அற்பணிக்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் நமது பாவங்களை அறிக்கை செய்தல் வேண்டும், ஆனால் தேவனின் பார்வையில் ஏதோ அழுகி நாற்றமெடுக்கும் ஒன்றை அறிக்கை செய்கிறோம் என்பதை உணர

வேண்டும். வசனம் 6 ல் நீங்கள் யாருடன் சம்பந்தப்பட்டு இருக்கிறீர்கள் என்றும், வசனம் 7 ல் உங்கள் ஐக்கியம் தேவனுடன் இருக்கிறது எனக்காட்டுகிறதாய் இருக்கிறது. நாம் சரியான வழியில் நடக்க வேண்டியவர்களாயிருக்கிறோம், மரித்து கிடக்கும் சடலங்கள் வழியாக நடப்பதை தவிர்த்தல் வேண்டும். யூதனாயிருக்கும் நபர்கள் தாங்கள் இப்படிப்பட்ட வழியில் நடப்பதைக் குறித்து கவனமாய் இருப்பார்கள், நாமும் கூட ஆவியில் நடக்க கவனமுள்ளவர்களாய் இருத்தல் அவசியமாய் காணப்படுகிறது.

இரட்சிப்பிற்கு பின் பாவமற்றத்தன்மையுடன் இருத்தல்:

நம்மில் பாவம் இல்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாய் இருப்போம். சபை சரித்திரத்தில் கத்தோலிக்கர்களும், மற்றும் ஆர்த்தொடாக்ஸ் சபையினரும் அவர்களது விசுவாசத்தின்படி, இரட்சிப்பிற்கு பின்னர் பாவம் என்பதற்கு இடமே இல்லை, நீங்கள் இரட்சிப்பை அடைந்த பின்னர் பாவம் செய்வீர்கள் எனில் முடிவில்லா தண்டணைக்கு உள்ளாவீர்கள் என்கின்றனர். இது வேத அடிப்படையிலானது அல்ல. அவர்கள் எல்லா சமயங்களிலும் சபை கூடிவருதலில் கலந்து கொள்வர், ஆனால் அவர்கள் ஞானஸ்நானம் பெறுவது மரணம் நெருங்கும் போதாய் இருக்கிறது, காரணம் இந்த ஞானஸ்நானத்தின் மூலம் அவர்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்க்கை செய்கிறவர்களாய் எண்ணிக்கொள்கிறார்கள்.

இது ஆரம்ப சில நூற்றாண்டுகளில் சபை யுகத்தில், இக்கொள்கையானது மிகவும் பிரபலமாய் இருந்து வந்தது. இதை அவர்களால் எப்படி ஏற்றுக்கொள்ள முடிந்தது? அவர்கள் தேவனது வார்த்தையை முறையாய் போதிக்காது இருந்தனர். அவைகளை பிரசங்கத்திற்காய் மட்டும் எடுத்துக்கொண்டு, அவ்வேதபகுதியை மட்டும் பேசி அதன் பின்னணியப்பகுதி எதைக்குறித்து பேசுகிறது என்பதைக் குறித்து கவலையற்றிருந்தனர். மதத்தலைவர்கள் தங்களது அரசியல் செல்வாக்கினால் இதை அப்படியே கொண்டுசெல்கிறவர்களாய் இருந்தனர். தேவன் நமது பாவங்களை அறிக்கை செய்யும்போது, மன்னிக்கிறவராய் இருக்கிறார் மற்றும் அப்படிப்பட்ட பாவங்களை நாம் அறியாது இருக்கிறோம். 1 யோவான் 1:9 இருதரப்பட்ட பாவங்களையும் மூடுகிறதாய் இருக்கிறது, நீங்கள் வளரும்போது, பாவத்தைக்குறித்துள்ள வட்டாரத்தில் அதிகமாய் அறிந்துணர்வீர்கள்.

வெளிச்சமானது உங்கள் வாழ்வில் அதிக அதிகமாய் பிரகாசிக்க ஆரம்பிக்கும் போது, உங்கள் வாழ்வில் இருள் உள்ள மூலை, முடுக்குகள் தென்படுவதாய் இருக்கும். நீங்கள் கிறிஸ்தவர்களாய் வளரும் போது, நீங்கள் அதிக அதிகமான சிறிய பாவங்களைக் கண்டு, அவைகள் உங்களை வருத்தப்படுத்துகிறதாய் இருக்கும். நீங்கள் வளரும் போது பலதரப்பட்ட பாவங்களை உங்கள் கிறிஸ்தவ வாழ்வில் இணங்கண்டு கொண்டு அவைகளை அறிக்கை செய்கிறவர்களாய் இருப்பீர்கள்.

ஒரேவிதமான பாவத்தை தொடர்ந்து இருபது ஆண்டுகள் அறிக்கை செய்து கொண்டே இருப்பீர்களானால், நீங்கள் இன்னும் வளர்ச்சியடையாது இருக்கிறீகள் என்பதைக்காட்டுகிறதாய் இருக்கிறது. உங்களை எளிதாய் அடக்கியாளும் பாவத்தை, நீங்கள் ஆண்டு கொண்டு கீழடக்கப்போகிறீர்களா அல்லது அதை தொடர்ந்து செய்து அது உங்கள் மீது ஆளுகை செய்ய அதற்கு கீழ் இருக்கக்ப்போகிறீர்களா? உங்கள் ஆத்துமாவில் கர்த்தரது வெளிச்சம் அதிகமாய் பிரகாசிக்கும் போது, உங்களது குறைகள், குற்றங்கள் (பாவங்கள்) அதிகமாய்த் தோன்றி உங்களுக்குத் தென்படும், அவற்றை நீங்கள் அதிகமாய் அறிக்கை செய்யும் போது, மற்றும் அவகைகளை விட்டுவிடும்போது நீங்கள் அதிக அதிகமாய் கர்த்தருக்குள் வளர ஆரம்பிப்பீர்கள்.

வசனம் 10 ல் நீங்கள் அநேக மாதங்கள் பாவம் செய்யவில்லை எனக்கூறுவீர்களானால் நீங்கள் பொய்யராய் இருக்கிறீர்கள். நாம் கீழ்க்கண்டவாறு பரிசீலனை செய்ய வேண்டும்.

[அ] நம்மை நாமே சோதித்து அறிதல் வேண்டும் -- 1 கொரிந்தியர் 13:5; சங்கீதம் 4:4.

[ஆ] நீங்கள் எதைக்காண்கிறீர்களோ அதன்படி செயல்படுங்கள் -- யாக்கோபு 4:7-10.

[இ] அறிக்கை செய்யுங்கள் -- 1 யோவான் 1:9, லேவியராகமம் 5:5.

[ஈ] அறிக்கை செய்தவற்றை மறந்து விடுங்கள் -- பிலிப்பியர் 3:13,14, சங்கீதம் 103 :12,

[உ] பெலவீனப் பகுதிகளை அறிந்து உணருங்கள் - எபிரெயர் 12:15, இது தனிமைப் படுத்தும் பாவமாய் இருக்கிறது. இது உங்களை பெலவீனப்படுத்துமேயானால், அதற்கு விரோதமாய் ஒரு காவலாலியை ஏற்படுத்துங்கள்.

[ஊ] ஒப்புரவாகுங்கள் - நீங்கள் பாவம் செய்யும் போது, தேவனிடமிருந்தும் மற்றும் உடனிருக்கும் மனிதரிடமிருந்தும் ஐக்கியத்தை இழக்கிறவர்களாகிறீர்கள். உரிய பொருளை அதன் உரிமையாளரிடம் கொடுப்பது இதற்கு அவசியமாகிறது. யாக்கோபு 5:16, மத்தேயு 5:2324, லேவியராகமம் 6:25.

[எ] முன் சென்று வளர்ந்தோங்குங்கள் -- 2 பேதுரு 3:18 பெலவீன பகுதிகளை தவிர்த்து ஆவிக்குரிய ரீதியில் வளர்ச்சியடையுங்கள். மனிதனுக்கும் தேவனுக்கும் விரோதமான பாவங்களை அறிக்கை செய்து ஒப்புரவாகுவது எழுப்புதலை கொண்டுவருகிறதாய் இருக்கிறது. பழைய பழக்கவழக்கங்களை விட்டுவிடுங்கள், புதியதான நிலையில் தேவனது வார்த்தையை சார்ந்து இருக்க பழகுங்கள், தேவனது வார்த்தையின் படியே வாழுங்கள்.

மன்னிப்பு [மேலே உள்ள பாடங்களில் காண்க]

பலிமுறைகள்: லேவிய பலிமுறைகள் கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றன

1. லேவிய காணிக்கைகள் மற்றும் பலி முறைகள் இயேசுக்கிறிஸ்துவின் கிரியையை சித்தரிக்கின்றன (எபிரெயர்10:1).

2. லேவியராகமம் 1-6 அதிகாரங்களில் காணிக்கை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

a) சர்வாங்க தகனபலி - அதிகாரம் 1 - கிறிஸ்துவின் கிரியை.
b) போஜனபலி - அதிகாரம் 2 - கிறிஸ்துவின் ஆளத்துவம்.
c) சமாதான பலி - அதிகாரம் 3 - ஒப்புரவாக்குதல்.
d) பாவ நிவாரண பலி - அதிகாரம் 4 - அறியப்படாத பாவங்கள்.
e) குற்ற நிவாரண பலி - அதிகாரம் 5,6 வச.7 அறிந்து செய்த பாவங்கள்.

3. சர்வாங்க தகன பலிகள் (லேவியராகமம் 1).
பலி செலுத்துபவரின் பாவங்களுக்காக பழுதற்ற ஒரு மிருகம் கொலைசெய்யப்பட்டது. சிலுவை மீது நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்ததை இது பிரதிபலிக்கிறது.

a) செல்வந்தன் பலிசெலுத்த ஒரு பழுதற்ற காளையை தெரிவு செய்ய வேண்டும் வச 2-7

பழுதற்ற காளை = பூரண புருஷன் இயேசுக்கிறிஸ்து.
வெண்கல பலிபீடத்தில் பலியிடப்பட்டது = சிலுவையில் இயேசு மரித்தார்.
மனப்பூர்வமாய் பலி செலுத்தப்பட்டது = கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் சுய சித்தத்தின் அடிப்படையில் இருக்கிறது.
பாவி (பலி செலுத்துபவர்) பிராயசித்தத்திற்காக தன் கையை பலி செலுத்தப்பதும் மிருகத்தின் தலை மீது வைக்கவேண்டும் = சிலுவையில் தொங்கிய கிறிஸ்துவின் மீது சர்வ லோகத்தின் பாவங்கள் சுமத்தப்பட்டது. கிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களுக்காய் மரித்தார். (2 கொரிந்தியர் 5:21).
காளை கொலை செய்யப்பட வேண்டும் = கிறிஸ்து சிலுவையில் மரித்தார்.
காளையின் இரத்தம் பலிபீடத்தில் தெளிக்கப்பட வேண்டும் = இயேசுவின் இரத்தம் பாவங்களிலிருந்து முற்றிலும் கழுவி சுத்திகரிக்கிறது.
அடிக்கப்படும் மிருகம் உள்ளான நிலையில் பழுதற்றதாய் இருக்கவேண்டும் = இயேசு பூரணமானவராயும், உள்ளான மற்றும் புறம்பான நிலையில் பாவமற்றவராய் இருந்தார்.
அக்கினி முழுவதுமாய் தகனித்தது = மனித நன்மை அகற்றப்பட்டது (1 கொரிந்தியர் 3:12.15).
தலை தகனிக்கப்பட்டது = கிறிஸ்துவின் பூரண மனதை

காட்டுகிறது.
கொழுப்பு தகனிக்கப்பட்டது = வெளிப்பிரகாரமான கிறிஸ்துவின் பூரணத்தை இது காட்டுகிறது.
வெண்கல கடல் தொட்டியிலிருந்த தண்ணீரால் பலி மிருகத்தின் குடல்கள் கழுவப்பட்டது = இது பாவத்திலிருந்து கழுவப்படுவதை காட்டுகிறது (1 யோ.1:9).
கால்கள் கழுவப்பட்டன = பாவங்களிலிருந்து கழுவப்படுவது சேவை செய்வதற்கு அனுமதிப்பதைக் காட்டுகிறது.
காளை முற்றிலும் தகனிக்கப்பட்டது = இரட்சிப்பின் போது பாவப்பிரச்சனைக்கு தீர்வு உண்டானது, மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கையில், அது சிலுவையில் நிறைவேற்றப்பட்டது.

b)ஆட்டுக்கடா லேவி., 1:10-13. நடுத்தர வகுப்பினரால் செலுத்தப்படும் சர்வாங்க தகன பலி.

c)பறவைகள் லேவி., 1:14-17., ஏழைகளால் செலுத்தப்படும் சர்வாங்க தகன பலி.

4. போஜனபலிகள் - (லேவியராகமம் 2)

a) போஜன பலி = போஜன பலி இயேசுக் கிறிஸ்துவை காட்டுகிறது.
மெல்லிய மாவு = கிறிஸ்துவின் பூரணத்தை காட்டுகிறது.
எண்ணெய் = பரிசுத்த ஆவியானவர்.
தூபவர்க்கம் = பிதாவாகிய தேவனை திருப்திபடுத்துவது.
உப்பு = கெட்டுப்போகாமல் பாதுகாப்பது.
புளித்தமா (சேர்க்கப்படவில்லை) = பாவம்.
தேன் (சேர்க்கப்படவில்லை) = மனித நற்கிரியைகள்.
கைப்பிடி நிறைய எடுத்து தகனிக்கப்படவேண்டும். = இரட்சிப்பை தனிப்பட்ட விதத்தில் சொந்தமாக்கிக்கொள்ளுதல்.
பலிபீடத்தில் தகனிக்கப்படுதல் = சிலுவையில் கிறிஸ்து நியாயந்தீர்க்கப்படுதல்.
எண்ணெய் = இயேசு பரிசுத்த ஆவியினால் நிறைந்து இருந்தார்.
மீதியானதை ஆசாரியன் உண்ணவேண்டும் = வேத வசனத்தாலும் மற்றும் பரிசுத்த ஆவியானவராலும் ஆசாரியன் தாங்கப்படுவதை இது காட்டுகிறது.

b)அடுப்பில் பாகம் பண்ணப்பட்ட போஜன பலி.
புளிப்பில்லா அப்பம் = பாவமற்ற கிறிஸ்து.
நெருப்பு = தேவ நியாயம்
பலி = இயேசுக்கிறிஸ்துவின் மனுஷீகம்
அடுப்பு = சிலுவை
எண்ணெய் = அதிகாரம்பெற்ற கிறிஸ்து.
தூபவர்க்கம் = தேவனை திருப்திபடுத்துதல்

c) தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி.

எண்ணெயில் பிசைந்த மெல்லிய மாவு = கிறிஸ்துவின் பூரணத்தனமை.
புளிப்பில்லாத = பாவமற்ற அல்லது பாவத்தன்மையற்ற.
தூபவர்க்கமிடாத = உலகத்தின் பாவங்களை தேவன் நியாயந்தீர்க்காதவரையில், அவரது கருணையைப் பெறமுடியாது.
பாகம் பண்ணப்படுதல் = நொருக்கப்படுதல் - முழுவதும் அழிக்கப்படுதல் - கிறிஸ்துவின் சரீரம் நமது பாவங்களுக்காய் நொறுக்கப்பட்டது (ஏசாயா 53).

d)பொறிக்கும் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி.

இப்பலி பகுதி மூடப்பட்டதும், பகுதி திறக்கப்பட்டதுமாய் இருக்கிறது = காணப்படாத பகுதி - தேவனை நோக்கியும், தேவனை திருப்திபடுத்துவதாயும், காணப்படும் பகுதி - மனிதனை நோக்கியும், ஒப்புரவாக்குதலாயும் இருக்கிறது.

பலிசெலுத்துபவர் பலிபீடத்திற்கு எடுத்துச்செல்லும் ஆசாரியரிடம் தன் போஜன பலியை கொடுப்பர், அவற்றில் ஒரு பகுதியை ஞாபகார்த்தமாய் பலிபீடத்தில் தகனிப்பர். = இது கர்த்தருடைய மேஜையை ஒப்பிடுவதாய் இருக்கிறது.

அதில் மீதியை ஆசாரியர் புசிக்க வேண்டும் - கிறிஸ்துவை விசுவாசத்தில் ஏற்றுக்கொள்வதை காட்டுகிறது.

e)போஜனபலிக்கான விதிமுறைகள்:
புளித்தமா புறக்கணிக்கப்படுதல் = பாவம் அல்லது தீமை புறக்கணிக்கப்படுதல் வேண்டும்.
தேன் புறக்கணிக்கப்படுதல் = மனித நற்கிரியைகள் அல்லது மனித இனிமை புறக்கணிக்கப்படல் வேண்டும்.
உப்பால் சாரமாக்கப்படுதல் = தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உடன்பாட்டை காட்டுகிறது.

f) பஸ்கா ஆசரிக்கும் சமயத்தில் படைக்கப்படும் போஜனபலி.
பஸ்கா முழுவதும் அக்கினிக்கு உட்படும் = நியாயத்தீர்ப்பு = சிலுவை.
முதற்பலன் (அக்கினிக்கு உட்படாதது) = உயிர்த்தெழுதல்.
பிராயசித்த நாள் (அக்கினிக்கு உடபடுவது = நியாயத்தீர்ப்பு = சிலுவை.
g)ஞாபகார்த்த போஜனபலி.
பச்சையான கதிர்கள் = கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்
நெருப்பிலே வாட்டப்பட்ட = நியாயத்தீர்ப்பு.
எண்ணெய் வார்த்தல் = மேசியா நியமிக்கப்படுதல்.
தூபவர்க்கம் = தேவனை திருப்திபடுத்துதல்.

5. சமாதான பலி லேவியராகமம் 3 ம் அதிகாரம் ஒப்புரவாக்கப்படுதல்.
இப்பலி சர்வாங்க தகனபலிக்கு ஒத்தது. கடா (ஆண்) மற்றும் கடாறி (பெண்)

மிருகங்கள் பலி செலுத்தப்பட்டன.

6. பாவ நிவாரண பலி லேவி. 3 ம் அதி. ஒப்புரவாக்கப்படுதல்.
பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் மற்றும் பாவங்களை அறிக்கை செய்தல் 1 யோவான் 1:9 க்கு சமமாய் இருக்கிறது. (இது அறியாது செய்த எல்லா பாங்களிலிருந்து கழுவி, எல்லா அநீதிகளுக்கு விலக்கி காக்கிறது)

7. குற்ற நிவாரண பலி லேவி. 5:6-7 அறிந்து செய்த பாவங்கள்.
பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் மற்றும் பாவங்களை அறிக்கை செய்தல் 1 யோவான் 1:9 க்கு சமமாய் இருக்கிறது. (நாம் அறிக்கை செய்த / அறிந்து செய்த பாவங்கள் மன்னிக்கப்படுதல்).

Lesson 30- 43

<u>பாடங்கள் 30,31 -- ஆசாரியர்களும் ஆசரிப்புக்கூடாரமும்:</u>

முன்னுரை:

இது லேவியரின் அமைப்பு என அழைக்கப்படுவதன் காரணம், லேவி கோத்திரத்தின் பெயரை இதற்கு சூட்டப்பட்டுள்ளதாகும். இவர்களே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே நிற்கப் போகிறவர்கள்.

இவர்கள் எல்லா சடங்குகளையும் நிகழ்த்த வேண்டியவர்களாய் இருந்தனர், இவர்கள் ஒவ்வொரு விதத்திலும், பிழையற்றவர்களாய் இருக்க வேண்டியதாய் இருந்தது. அடிப்படைக் கோட்பாட்டின்படி லேவிய பலிமுறைகள் முழுமையாகவும், துள்ளியமாகவும் அற்பணிக்கப்பட வேண்டியதாய் இருந்தது.

யாத்திராகமத்தின் ஜனங்களில் அநேகர் எழுத படிக்க அறியாதிருந்தனர். கல்வி என்பது பண்டைய உலகில் ஒரு பிரச்சனையாய் இருந்து வந்தது. யூதர்கள் வாக்குத்தத்த தேசத்தை சுதந்தரித்து அதில் வாசம் பண்ண ஆரம்பித்த உடன், அவர்களது ஆண்மக்களுக்கு 14 வயது வரை எழுத படிக்க கற்றுக்கொடுத்தனர், இது அவர்களுக்கு அந்நாட்களில் மற்ற தேசத்தினரைவிட அதிக முன்னேற்றமான நிலையில் கல்வி அளிப்பதாய் இருந்தது. எப்படியிருப்பினும் அத்தேசத்தில் அதிகமானோர் கவனிப்பதன் மூலம் ஆசாரியர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைக் கற்றுக்கொள்கிறவர்களாய் இருந்தனர். லேவிய ஆசாரியர்களின் உடைகள், செயல்பாடுகள், ஆசரிப்பு கூடாரத்தில் அவர்களது பணி ஒவ்வொன்றும், தேவனது திட்டம் அல்லது அவரது நோக்கம் குறித்து பேசப்படுகிறதாய் இருந்தது.

லேவியராகமம் 8

வசனம் 6ல் லேவிய ஆசாரியர்கள் தங்களது ஆசாரிய வேலையை செய்யு முன்னர், ஜலத்தினால் அவர்கள் தங்களை கழுவி சுத்திகரித்துக்கொள்ள வேண்டும், இது தூய்மையை பிரதிபலிக்கிறது. எபேசியர் 5:26. கழுவுதல் என்பது தேவனது வல்லமையினால் கழுவப்படுதலைக் குறிக்கிறது. தண்ணீர் என்பது தேவனது வார்த்தைக்கு அடையாளமாய் இருக்கிறது. இவர்களுக்காக மோசே இப்படிப்பட்ட சுத்திகரிப்பை அவர்களுக்கு செய்கிறவராய் இருந்தார், அவர்கள் தங்களுக்கு தாங்களே செய்துகொள்ள இயலாதவர்களாய் இருந்தனர். மோசே பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையின் ஊழியராய் இருந்தார், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து புதிய ஏற்பாட்டு உடன்படிக்குரியவராய் இருக்கிறார். மோசே தனது ஆசாரியர்களை சுத்திகரிக்க வேண்டியவராய் இருந்தார், கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து தமது ஆசாரியர்களை சுத்திகரிக்க வேண்டியவராய் இருக்கிறார் நாம் அவரது அங்கத்தினராய் இருக்கிறோம்.

வசனம் 11 கூறுகிறது அவர்கள் மீது எண்ணெய் தெளிக்கப்பட்டது, ஆரோனை பரிசுத்தம் பண்ணும்படியாக மோசே அபிஷேக தைலமாகிய எண்ணெயை தலைமீது ஊற்றினார். மோசே ஆரோனின் குமாரரை கொண்டுவந்து அவர்களை உடுத்துவித்தார். எண்ணெய் பரிசுத்த ஆவியானவரைக் பிரதிபலிக்கிறது. மோசே ஆசரிப்பு கூடாரத்தில் பயன்படும் ஒவ்வொரு பொருட்களையும் பரிசுத்தப்படுத்தினார். எல்லா தட்டுமுட்டுகளும் போதனை அளிக்கும் உபகரணங்களாய் இருந்தன, பரிசுத்த ஆவியானவர் நமக்கு போதனைஅளிக்கிறவராய் இருக்கிறார். அவர்கள் மீது ஏழுமுறை தெளிக்கப்பட்டது, ஏழு என்ற எண் பூரணத்தைக் காட்டுகிறது. -- ஏசாயா 11:1,2.

பலிபீடமானது கர்த்தர் மரிக்கப்போகிற சிலுவையைக் குறித்துப் பேசுகிறது. இங்கு இரட்சிப்பின் பணியானது நிறைவு பெறுகிறதாய் இருந்தது. இங்குள்ள ஒவ்வொன்றும் முக்கியம் வாய்ந்ததாய் விளங்கின. ஆரோனின் குமாரரது பாதங்கள் கூட, அபிஷேகம் பண்ணப்பட்டது. முழு மனிதனும் சுத்திகரிக்கப்பட வேண்டியவனாய் இருக்கிறான், நீங்கள் ஆவியில் நடந்து கொள்ளவேண்டிய வர்களாய் இருக்கிறீர்கள், இது கர்த்தர் சீஷர்களின் பாதத்தைக் கழுவினதைப் போன்றே இருக்கிறது. அவர்களுக்கு ஆடை தரிப்பிக்கப்பட்டது, ஒரு விசுவாசி தேவனது நீதி என்னும் ஆவிக்குரிய ஆடையினால் தரிப்பிக்க வேண்டியவராய் இருக்கிறார், அவர் மனித நீதியினால் தரிப்பிக்கப்படக்கூடாது. ஏசாயா 64:6. உங்களுக்கு தேவனால் அளிக்கப்பட்ட காரியங்கள் மட்டுமே அவரால் ஏற்றுக்கொள்ளப் படத்தக்கதாய் இருக்கிறது. நமக்குள் கிரியை செய்யும் ஆவியானவரின் கிரியை மூலம் நமது பலியானது ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாய் இருக்கிறது.

லேவியராகமம் 9:

வசனம் 8ல் முதலாவது பலியாக, ஆசாரியனாய் இருக்கும் ஆரோன், தனக்காக பாவநிவாரண பலியை பலியிட வேண்டியதாய் இருந்தது.

முதலாவதாய் ஆரோன் தனது பாவத்திற்கான நிவாரணத்தை ஏறெடுத்த பின்னர், தேசத்திற்கான பாவத்திற்குரிய நிவாரணத்தை செலுத்துகிறவனாய் இருந்தான். தேவனது வார்த்தையின் ஊழியராகிய நீங்கள் இருப்பீர்களானால், நீங்கள் முதலாவது உங்கள் பாவத்தைக்குறித்து நீங்கள் செய்ய வேண்டியதை முதலாவது செய்தாக வேண்டும் இல்லையேல் நீங்கள் தெளிவாய் நடிக்கிறவர்களாய் இருப்பீர்கள் அல்லது ஒரு மாய்மாலக்காரனாய் இருப்பீர்கள்.

ஆரோன் இப்படிப்பட்ட பலிகளை எல்லாம் வசனம் 22 ல் செலுத்தி தீர்த்ததாய் பார்க்கிறோம். இது இரட்சிப்பைக் குறித்துப் பேசுகிறது, நீங்கள் தேவனுடன் நேரஸ்தராய் இருக்கிறீர்கள், மற்றும் ஜனங்களை ஆசீர்வதிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். ஆரோன் ஜனங்களை ஆசீர்வதிக்கிறவனாய் இருந்தான் காரணம் தேவன் இப்படிப்பட்ட பலிகளை ஏற்றுக்கொண்டவராய் இருந்தார். இப்படிப்பட்ட பலிகள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை குறித்துப் பேசுகிறதாய் இருக்கிறது மற்றும் ஜனங்களை ஆசீர்வதிக்கிறதாய் இருக்கிறது காரணம் அவர்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள்.

எண்ணாகமம் 6:24 ஆரோன் உபயோகித்த ஆசீர்வாதங்களை அளிக்கிறதாய் இருக்கிறது. இது எவ்வாறு சாத்தியமாய் இருக்கிறது. காரணம் நாம் தேவனுடன் அவரது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் உறவை பெற்றவர்களாய் இருக்கிறோம்.

புதிய ஏற்பாடு;

எபிரெயர் 8 ஆசாரியத்துவத்தை குறித்த ஒரு வியாக்கியானப் புஸ்தகமாய் இருக்கிறது. இங்கு லேவிய ஆசாரியத்துவமானது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுடன் ஒப்பிட்டு பேசப்படுகிறது. இது கர்த்தர் எதைச் செய்தாரோ அதைக்குறித்து மோசே செய்ததுடன் ஒப்பிட்டு அதன் வித்தியாசம் குறித்து கூறுகிறது. மோசே மலையில் காண்பிக்கப்பட்ட தரிசனப்படியே எல்லாவற்றையும் செய்தார், ஆனால் நமக்கோ கிறிஸ்துவில் அதிக மேன்மையான வழியில் யாவும் செயல்படுத்தப்பட்டு இருக்கிறது. இது சிறப்பான உடன்படிக்கையாகவும், சிறப்பான வாக்குத்தத்தமாகவும் இருக்கிறது. முதலாவது ஆசாரியத்துவம் நன்மையான காரியங்களை எதிர்பார்ப்பது குறித்து பேசப்படுகிறது, அது இப்படிப்பட்ட நற்காரியங்களுக்கு நிழலாய் இருந்தது. ஆசரிப்பு கூடாரமானது, கர்த்தர் எதைச் செய்ய இருக்கிறார் என்பதைக் காட்டுகிறதாய் இருந்தது, ஆசாரியத்தும் என்பது அதன் முற்றுப்பெற்ற காரியமாய் இருந்தது, இருப்பினும் அதன் பரிமாற்றம் நிகழ அது எதிர் நோக்கிக்கொண்டிருக்கும் நிலை இருந்தது.

பழைய ஏற்பாட்டு ஆசாரியருக்கு இஸ்ரவேலில் எவ்வித நிலமும் அளிக்கப்படாது இருந்தது. லேவி கோத்திரத்தாருக்கு எவ்வித நிலமும் இஸ்ரவேலில் பங்கிடப்படவில்லை மாறாக அவர்களுக்கென பட்டணங்கள் அளிக்கப்பட்டு அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்ற

பணி அவர்களிக்கப்பட்டது. அவர்களுக்களிக்கப்பட்ட வேலைக்காக பகுதி சம்பளமாய் மற்ற கோத்திரத்தாரிடமிருந்து அவர்களுக்கு உணவு அளிக்கப்பட்டது. அவர்கள் ஆசரிப்பு கூடாரத்தில் பலிகளை செலுத்தி ஊழியம் செய்தனர் இது வரக்கூடிய காரியங்களை சித்தரிக்கிறதாய் இருந்தது. இவர்கள் எவ்வித பொருளுடமைகளையும் பெற்றிருக்க வில்லை. அவர்களுக்கு அளிக்கப்பட்ட வேலையில் முழுக்கவனம் செலுத்துமாறு எதிர்பார்க்கப்பட்டனர், அவர்கள் கர்த்தருக்கு தாங்கள் செய்யும் வேலையைக் காட்டக்கூடியவர்களும், ஜனங்கள் நடுவே அவரது வேலயை செய்ய வேண்டியவர்களாய் இருந்தனர்.

நமது ஆசாரியத்துவம்:

நாம் விசுவாசிகளான ஆசாரியர்களாய் இருக்கிறோம், இந்த வாழ்க்கையைக் குறித்த காரியங்கள் மீது நாம் அதிகம் கவனம் வைக்கக்கூடாது. உங்களது வீடும், நிலமும் உங்களுக்கு அதிக முக்கியத்தை அளிக்கிறதாய் இருக்கக்கூடாது, கர்த்தர் விரும்பும் இடத்திற்கு நீங்கள் செல்ல ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம். ஆசாரியர்களின் வாழ்வில் ஒன்றுமில்லாத வெறுமையாய் இருந்தனர், அவர்கள் ஆசாரியர்களாய் இருந்து இரட்சிப்பையும் பரிசுத்தமாக்கப்படுதலையும் வருணிக்கிறவர்களாய் இருந்தனர்.

1 பேதுரு 2:4-10ல் நாம் ஆசாரியர்கள் என அழைக்கப்படுகிறோம், வசனம் 5 ல் நாம் பரிசுத்த ஆசாரியர்கள் என்றும், வசனம் 9 ல் இராஜரீக ஆசாரியர்கள் என்றும் அழைக்கப்படுகிறோம்.

நாம், லேவியின் குமாரராய் இருப்பதைத் தவிர்த்து, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம் தேவனுடைய குமாரராய் இருக்கிறோம். நாம் தேவனது சேவை செய்ய வேறுபிரிக்கப்பட்டு இருக்கிறோம். நாம் நமது வாழ்வை ஜீவ பலியாய் அற்பணித்து வாழ்கிறவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்து தம்மைத்தாமே நமக்காய் அற்பணித்தது போல, நாமும் நமது வாழ்வை அவருக்காய் அற்பணிக்க வேண்டும்.

ஆசாரியராய் இருக்கும் நீங்கள், உங்களையும், உங்களது நேரத்தையும், தாலந்துகளையும், துதிகளையும், நன்றிகளையும் பலியாக அற்பணித்தல் வேண்டும். பணத்தைக் கொடுக்க முடியவில்லையானால் உங்கள் நேரத்தைக் கொடுங்கள், உங்கள் முழுப்பெலனையும் அதற்காய் செலவு செய்யுங்கள். நாம் ஆசாரியர்களாய் இருப்பதினிமித்தம், நமது கடமை பலிகளை செலுத்துவது என்பதை நன்கு உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். நீங்கள் ஏதோ ஒருவாரத்தில் கிறிஸ்தவர்களாய் வாழ்கிறவர்கள் அல்ல, நீங்கள் ஒவ்வொரு நாளும் பலி செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். தேவன், நாம் அவருக்காய் எதையெல்லாம் விட்டுவிட்டோம் என்பதைக் குறித்து அவர் ஆர்வப்படுகிறவராய் இல்லை, மாறாக பலியில் பிரியம் கொள்ளும் தேவனாய் இருக்கிறார். நீங்கள் ஒரு அதிகாலை எழும்போது, ஒரு

குறிப்பிட்ட காரியங்களை ஒரு போதும் செயலாற்ற இயலாதவர்களாய் காணப்படுவீர்கள்.

ஆசை இச்சைகளை நீங்கள் எவ்வாறு கையாளுகிறவர்களாய் இருக்கிறீர்கள்? உங்கள் வாழ்வை ஜீவ பலியாய் தேவனுக்கென்று அற்பணியுங்கள். ஆவியில் நடவுங்கள். பேதுருவும் பவுல் சொல்கிறது போலவே கூறுகிறார். நீங்கள் இருளிலிருந்து வெளிச்சத்திற்கு கொண்டுவரப்பட்டு இருக்கிறீர்கள், வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் ஒரு ஆசாரியர் யார் என புறிந்து உணரும் போது, விட்டுவிடுவது ஒரு பொருட்டல்ல, அவருக்காய் செயல்படுவதே முக்கிய காரியமாய் விளங்குகிறது. கிரியைகள் மூலம் இரட்சிப்பு [legalist] என்போரும் துறவறம் [monastic] மூலம் இரட்சிப்பு என்போரும் தவறாய் கருதப்படுகின்றனர்.

பாவத்தை எவ்வாறு கையாளுகிறோம்? நீங்கள் பரிசுத்தமாய் இருப்பதைக் குறித்து மிகவும் கவனமுள்ளவர்களாய் இருக்கிறீர்கள், நீங்கள் நீதியை வரிசைப் படுத்தி, அதன் ஆக்கிரமிப்பில் வாழ நினைக்கிறீர்கள். நீங்கள் பாவத்திற்கு உட்படும் போது, திரும்ப இருளில் நடக்க ஆரம்பிக்கிறீர்கள், இதன் பரிகாரம் பாவத்தை சரிவர கையாண்டு, வெளிச்சத்திற்கு திரும்பு வேண்டும். இங்கேதான் மகிழ்ச்சி இருக்கிறது. தேவன் உங்களை அவிசுவாசிகளிடமிருந்து வேறு பிரித்து இருக்கிறார், நீங்கள் நல்லவர்களாகவோ அல்லது கெட்டவர்களாகவோ, உபயோகமுள்ளவர்களாகவோ அல்லது உபயோகமற்றவர்களாகவோ இருக்கப்போகிறீர்கள். நீங்கள் இரட்சிக்கப்பட்ட போது, உங்களுக்களிக்கப்பட்ட 34 காரியங்களில் இதுவும் ஒன்றாய் இருக்கிறது. தேவன் சொல்கிறார் நீங்கள் ஆசாரியரைப் போன்று இருக்கிறீர்கள். நீங்கள் உங்களது ஆசாரியத்துவத்தை அனுபவிக்கப்போகிறீர்களா அல்லது நீங்கள் ஒரு போதும் உங்களைத் தேடி வராத அழைப்பிற்காக காத்திருந்து உங்கள் நேரத்தை கழிக்கப்போகிறீர்களா? தேவனது வார்த்தையை எடுத்துக்கொள்ளுங்கள், அதனால் போஷிப்பை அடையுங்கள், உங்களைத் தீமையினின்று விடுவித்துக்கொள்ளுங்கள்.

உபதேசங்கள்

பரிசுத்த ஆவியானவர்: போதிப்பவர்

1. அவர் ஞானத்தின் ஆவியாய் இருக்கிறார். (ஏசாயா11:2, 40:13-14).

2. தேவனுடைய காரியங்களை அவர் வெளிப்படுத்துகிறார் (1 கொரிந்தியர் 10:13).

3. கிறிஸ்துவினுடைய காரியங்களை அவர் வெளிப்படுத்துகிறார் (யோவான் 16:14).

4. சகல சத்தியத்திற்குள்ளும் அவர் வழிநடத்துகிறார் (யோவான் 14:26, 16:13)

5. ஊழியர்கள் போதிக்க வல்லவர்களாக்குகிறார் (1 கொரிந்தியர் 12:8).

6. உபத்திரவப் படுத்துகிறவர்களுக்கு மறுமொழி கொடுக்க பரிசுத்தவான்களுக்கு போதிக்கிறார். (மாற்கு13:11, லூக்கா 12:12).

7. தெய்வீக வழிகளில் அவர் வழி நடத்துகிறார் (ஏசாயா30:21, எசேக்கியேல் 36:27).

8. கிறிஸ்துவின் வார்த்தைகளை நினைவுக்கு கொண்டு வருகிறார் (யோவான்14:26).

இரட்சிப்பின்போது கொடுக்கப்படும் வரங்கள்

இரட்சிப்பின்போது ஒவ்வொரு விசுவாசிக்கும் கீழே பட்டியலிடப்பட்ட 34 காரியங்களை தேவன் அளிப்பரவராக உள்ளார்.

1. தேவனது நித்திய திட்டத்தில். (கிறிஸ்துவின் முடிவில் பங்குபெறுதல்)
    - முன்னறிதல் (அப்போஸ்தலர் 2:23, ரோமர் 8:29, 1 பேதுரு 1:2)
    - தேர்ந்தெடுத்தல் (ரோமர் 8:33, கொலோசெயர்3:12, 1 தெசலோனிக்கேயர்1:4, தீத்து 1:1).
    - முன்குறித்தல் (ரோமர் 8:29, 30, எபேசியர்1:5, 11).
    - தெரிந்து கொள்ளுதல் (ம்த்தேயு22:14, 1 பேதுரு 2:4).
    - அழைத்தல் (1 தெசலோனிக்கேயர்5:24)

2. ஒப்புரவாக்குதல்.
    - தேவனால் (2 கொரிந்தியர்5:18, 19, கொலோசெயர்1:20).
    - தேவனுக்கு (ரோமர் 5:10, 2 கொரிந்தியர் 5:20, எபேசியர் 2:14-17).

3. மீட்கப்படுதல் (ரோமர் 3:24, கொலோசெயர் 1:14, 1 பேதுரு1:18).

4. ஆக்கிணைத்தீர்ப்பு அகற்றப்படல் (யோவான் 3:18, 5:24, ரோமர் 8:1).

5. நியாயத்தீர்ப்புக்குப் பதிலாக கிருபையின் கீழ் கடந்து வருதல், தேவன் தமது குமாரனின் மரணத்தில் திருப்தியடைந்துள்ளார் (ரோமர் 3:24-26, 1 யோவான் 2:2).

6. எல்லாப் பாவங்களும் கிறிஸ்துவின் மரணத்தினால் நியாயந்தீர்க்கப்பட்டு விட்டன. (ரோமர் 4:25, எபேசியர் 1:7, 1பேதுரு 2:24).

7. பழைய ஜீவியத்திற்கு மரித்து - தேவனுக்காக வாழ்தல்.
கிறிஸ்துவுடன் சிலுவையில் அறையப்படுதல் (ரோமர் 6:6, கலாத்தியர்2:20).
கிறிஸ்துவுடன் மரித்தல் (ரோமர் 6:8, கொலோசெயர் 3:3, 1 பேதுரு 2:24).
கிறிஸ்துவுடன் அடக்கம் பண்ணப்படுதல் (ரோமர் 6:4, கொலோசெயர் 2:12).
கிறிஸ்துவுடன் எழுப்பப்படல் (ரோமர் 6:4,கொலோசெயர் 3:1).

8. நியாயப்பிரமாணத்திலிருந்து விடுதலைப்பெறல் .
மரித்தல் (ரோமர் 7:4).
விடுதலையாக்கப்படுதல் (ரோமர் 6:14, 7:6, 2 கொரிந்தியர்3:11, கலாத்தியர்3:25).

9. புதிதாக்கப்படுதல் (யோவான் 13:10, 1 கொரிந்தியர் 6:11, தீத்து3:5).
மறுபடி பிறத்தல். (யோவான் 3:7, 1 பேதுரு 1:23).
தேவனுடைய பிள்ளைகள் (கலாத்தியர்3:26).
தேவனுடைய குமாரர்கள் (யோவான்1:12, 2 கொரிந்தியர்6:18, 1யோவான் 3:2).
புது சிருஷ்டி (2 கொரிந்தியர்5:17, கலாத்தியர்6:15, எபேசியர்2:10).

10. புத்திர சுவிகாரம் (ரோமர் 8:15, 8:23 (எதிர்காலம்) எபேசியர் 1:5)

11. தேவனுக்கு அங்கீகாரமாய் இருத்தல் (எபேசியர்1:6, 1 பேதுரு 2:5)
நீதிமானாக்கப்படுதல் (ரோமர் 3:22, 1 கொரிந்தியர் 1:30, 2 கொரிந்தியர் 5:21, பிலிப்பியர்3:9).
பரிசுத்தமாக்கப்படுதல் (1 கொரிந்தியர்1:30, 6:11).
நித்தியகாலமாய் பூரணராக்கப்படுதல் (எபிரெயர்10:14)
பரிசுத்தவான்களின் சுதந்திரம் (தகுதியடைதல்) (கொலோசெயர் 1:12).

12. நீதிமானாக்கப்படுதல் (நீதிமானாக அறிவிக்கப்படுதல்) (ரோமர் 3:24, 5:1, 5:9, 8:30, 1 கொரிந்தியர் 6:11, தீத்து3:7).

13. பாவமன்னிப்பாகிய மீட்பு (எபேசியர் 1:7, 4:32, கொலோசெயர் 1:14, 2:13, 3:13).

14. உன்னத நிலை. (பரலோக பிரஜாஉரிமை, ஒப்புரவாக்கப்பட்டதன் அடிப்படையில்) (லூக்கா10:20, எபேசியர் 2:13, 19).

15. சாத்தானின் இராஜ்ஜியத்திலிருந்து விடுதலையாக்கப்படல். (கொலோசெயர் 1:13, 2:15).

16. தேவனுதைய இராஜ்ஜியத்திற்குள் மாற்றப்படுதல் (கொலோசெயர் 1:13).

17. பாதுகாக்கப்பட்ட அஸ்திபாரத்தின் மேல். (1கொரிந்தியர் 3:11, 10:4, எபேசியர் 2:20).

18. பிதாவாகிய தேவனிடமிருந்து கிறிஸ்துவுக்கு அளிக்கப்படும் வெகுமதி. (யோவான் 10:29, 17:2, 6, 9, 11, 12, 24).

19. பாவத்தன்மையின் வல்லமையிலிருந்து விடுவிக்கப்படுதல். (ரோமர்2:29,கொலோசெயர் 2:11).

20. தேவனுக்கென்று நியமிக்கப்பட்ட ஆசாரியர்கள்.
    பரிசுத்த ஆசாரியத்துவம் (1 பேதுரு2:5).
    ராஜரீக ஆசாரியத்துவம். (1பேதுரு 2:9, வெளிப்படுத்தல்1:6).

21. தேவனுடைய பராமரிப்பின் கீழ் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி மற்றும் சொந்த ஜனம். (தீத்து2:14, 1 பேதுரு 2:9).

22. தேவனுடன் சேரும் சிலாக்கியம் (ரோமர் 5:2, எபேசியர் 2:18, எபிரெயர்4:14, 16, 10:19, 20).

23. தேவனது பராமரிப்பின் கீழ் "அதிக நிச்சயமானவைகள்" (ரோமர் 5:9, 10).
    அதிக நிச்சயமான அவரது அன்பு (எபேசியர் 2:4, 5:2).
    அதிக நிச்சயமான அவரது கிருபை;
        இரட்சிப்பிற்கான அவரது கிருபை (எபேசியர் 2:8, 9)
        நம்மை காப்பதற்கான அவரது கிருபை (1பேதுரு 1:5)
        ஊழியத்திற்கான அவரது கிருபை (யோவான் 17:18)
        போதனக்கான அவரது கிருபை (தீத்து2:12)
    c) அதிக நிச்சயமான அவரது வல்லமை (எபேசியர் 1:19, பிலிப்பியர்2:13)
    d)அதிக நிச்சயமான அவரது உண்மை.(பிலிப்பியர் 1:6, எபிரெயர் 13:5,6)
    e) அதிக நிச்சயமான அவரது சமாதானம் (யோவான்14:27)
    f)அதிக நிச்சயமான அவரது ஆறுதல் (2 தெசலோனிக்கேயர் 2:16)
    g) அதிக நிச்சயமான அவரது பரிந்துபேசுதல் (ரோமர்8:34, எபிரெயர் 7:25)

24. தேவனுடைய சுதந்திரம் (அவருடையவைகள்) (எபேசியர் 1:18)

25. தேவனுடைய வாரிசுகளாய் அவரது சுதந்தரத்தை, கிறிஸ்துவுடன் இணை வாரிசுகளாய் அநுபவித்தல். (ரோமர்8:17எபேசியர்1:14 கொலோசெயர் 3:24, எபிரெயர் 9:15, 1 பேதுரு1:4)

26. புதிய ஸ்தானம் (எபேசியர்2:6)
    ஜீவனில் கிறிஸ்துவுடன் பங்காளிகளாதல் (கொலோசெயர்3:4)
    ஊழியத்தில் கிறிஸ்துவுடன் பங்காளிகளாதல் (1 கொரிந்தியர்1:9)
    தேவனுடன் உடன் வேலையாட்கள் (1கொரிந்தியர் 3:9, 2கொரிந்தியர் 6:1)

புதிய ஏற்பாட்டின் ஊழியர்கள் (2 கொரிந்தியர் 3:6)
ஸ்தானபதிகள் (2 கொரிந்தியர் 5:20)
ஜீவனுள்ள நிரூபங்கள் (2கொரிந்தியர் 3:3)
தேவனுடைய ஊழியர்கள் (2 கொரிந்தியர் 6:4)

27. நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்பவர்கள். (யோவான் 3:15, 10:28, 20:31, 1யோவான் 5:11, 12).

28. தேவனுடைய வீட்டாரும் மற்றும் அவருடைய குடும்ப அங்கங்களுமாய் இருக்கிறர்கள். (கலாத்தியயர்6:10, எபே 2:19).

29. உலகிற்கு ஒளியாய் இருக்கிறார்கள் .(எபேசியர் 5:8, 1 தெசலோனிக்கேயர் 5:4).

30. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருடன் இணைக்கப்பட்டுள்ளோம்.
தேவனுக்குள் (1 தெசலோனிக்கேயர்1:1) "நமக்குள் தேவன்" (எபேசியர் 4:6).
கிறிஸ்துவுக்குள். (யோவான்14:20 "உங்களுக்குள் கிறிஸ்து" கொலோசெயர் 1:27).
கிரிஸ்துவின் சரீரத்தின் ஓர் அங்கம் (1 கொரிந்தியர் 12:13).
திராட்சை செடியின் ஒரு கொடி (யோவான் 15:5)
கட்டிடத்தின் ஒரு கல் (எபேசியர் 2:21, 22, 1 பேதுரு2:5)
மந்தையின் ஒரு ஆடு (யோவான் 10:27-29)
அவரது மணவாட்டியின் ஒரு பகுதி (எபேசியர் 5:25)
ஆசாரிய இராஜ்ஜியத்தின் ஒரு ஆசாரியன் (1பேதுரு 2:9)
"புது சிருஷ்திப்பின்" ஒரு பரிசுத்தர் (2 கொரிந்தியர் 5:17)
c) பரிசுத்த ஆவிக்குள் (ரோமர் 8:9) "உங்களுக்குள் ஆவியானவர்"

31. பரிசுத்த ஆவியானவரின ஊழியத்தை பெற்றுக்கொள்பவர்கள்.
ஆவியானவரால் பிறத்தல் (யோவான் 3:6)
ஆவியானவருடன் ஞானஸ்நானம் பெறுதல் (அப்போஸ்தலர்1:5, 1 கொரிந்தியர் 12:13)
ஆவியானவரால் வாசம் செய்யப்படுதல் (யோவான் 7:39, ரோமர்5:5, 8:9, 1 கொரிந்தியர் 3:16, 6:19, கலாத்தியர்4:6, 1யோவான் 3:24).
ஆவியானவரால் முத்திரையிடப்படுதல் (2கொரிந்தியர் 1:22, எபேசியர்4:30).
ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்படுதல் (ரோமர் 8:30).

32. மகிமையடைதல் (ரோமர் 8:30)

33. கிறிஸ்துவுக்குள் பரிபூரணமுள்ளவர்கள் ஆகுதல் (கொலோசெயர் 2:10)

34. கடந்த காலநித்தியத்தில் அளிக்கப்பட்ட ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை சுதந்தரித்தல் (எபேசியர் 1:3).

ஆசாரியர்கள்

1. ஆசாரியர் தனக்காகவும், பிறமனிதருக்காகவும், தேவனுக்கு முன்பாக பிரதிநிதியாய் இருப்பவர் ஆகும்.

2. மனித சரித்திரத்தில் மூன்று வகைப்பட்ட ஆசாரியத்துவம் இருக்கின்றன.

குடும்ப ஆசாரியர் - ஆதாம் முதல் லேவி வரை.

லேவிய ஆசாரியத்துவம் - மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் நியமிக்கப்பட்டவர்கள்.

ராஜரீக ஆசாரியத்துவம்.

மெல்கிசேதேக்கு - எருசலேமின் ராஜா, உன்னதமானவருக்கு ஆசாரியரகவும் இருந்தார். (ஆதி. 14:18).

இயேசுக்கிறிஸ்து - இராஜாதி ராஜாவும், மகாப் பிரதான ஆசாரியரும் (எபிரெயர் 10:17).

சபையுக விசுவாசி - நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளபடியால், அவரது ராஜரீக ஆசாரியத்துவத்தை பகிர்ந்துகொள்கிறோம். (1 பேதுரு2:9).

3. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படும்வரை ஒவ்வொரு குடும்பத்தலைவரும் அவர் குடும்பத்திற்கு ஆசாரியராய் இருந்தார். (ஆதியாகமம்8:20, 26:25, 31:54).

4. நியாயப்பிரமாணம் ஏற்படுத்தப்பட்டபொழுது, முழு இஸ்ரவேலும் "தேவனுக்கு ஆசாரிய இராஜ்ஜியமாய்" இருந்தது. எப்படியிருப்பினும் இஸ்ரவேல் அவிசுவாசத்தால் தவறிபோய்விட்டது.

5. தேவன் லேவி கோத்திரத்தில் ஆரோனையும் அவன் குடும்பத்தாரையும் விஷேச ஆசாரியத்துவத்துக்கென நியமித்தார். (யாதிராகமம் 28:1).

6. சபை யுகத்தில் எல்லா விசுவாசிகளும், கிறிஸ்துவுக்குள் ஆசாரிய இராஜ்ஜியமாய் ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றனர்.
(1 பேதுரு2:9, வெளிப்படுத்தல்1:6).

7. ஒரு ஆசாரியராய் இருப்பதன் பிரதான சிலாக்கியம், தேவனோடு நேரடியாய் தொடர்பு கொள்ள முடியும். (எபிர்4:14-16, 10:19-22).

8. ஆசாரியராயிருந்து விசுவாசிகள் அற்பணிப்பது:
தங்கள் சொந்த சரீரம் (ரோமர்12:1, பிலிப்பியர்2:17).
ஸ்தோத்திர பலி (எபிரெயர்13:15-16).
பரிசுத்தவான்களின் குறைவில் அவர்களுக்கு நன்மைசெய்தல் . (ரோமர் 12:13, கலாத்தியர்6:6).
மற்றவர்களுக்காய் பரிந்துபேசி ஜெபித்தல். (கொலோசெயர்4:12,1 தீமோ.2:1).

9. ஆசாரியன் பிரதிநிதித்துவம் வகிக்கும் மக்களின் தன்மையில் பங்கெடுக்க வேண்டும். இயேசுக்கிறிஸ்துவும் மனிதனாகி, மனிதர்களின் தனமையில் பங்கெடுத்தார். (எபிரெயர்5:1, 7:4, 5, 7:14-28, 10:5, 10:10-14).

10. ஆசாரியத்துவத்தின் ஒப்புமை:

மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் கிரிஸ்துவின் ஆசாரியத்துவத்தை சித்தரிக்கிறதாய் இருந்தது. (எபி. 7:1-3).

லேவிய ஆசாரியத்துவம்.

நியாயப்பிரமாணத்தை அடிப்படையாய் கொண்டிருந்தது, அதனால் இரட்சிக்க இயலாது.

ஆரோனின் குடும்பத்தில் சரீரப்பிரகாரமான பிறப்பை அடிப்படையாய் கொண்டிருந்தது.

ஆசாரியத்துவம் ஆரோனின் குடும்பத்தாருக்கு மட்டும் கிடைக்கக்கூடியதாய் இருந்தது.

ஆசாரியர்கள் லேவி கோத்திரத்திலிருந்து வந்தனர். அரசர்கள் யூதா கோத்திரத்திலிருந்து வந்தனர் ஒரு நபரும் ஆசாரியராகவும், அரசராகவும் இருக்கமுடியாது.

ஆசாரியத்துவம் மனித அடிப்படையில் இருந்தது, அவர்கள் தங்கள் சொந்த பெலவீனத்துடனும், பாவத்துடனும் இருந்தனர்.

அவர்களது ஆசாரியத்துவம் அவர்கள் மரணத்துடன் முடிவடையும்.

c) கிறிஸ்துவின் ராஜரீக ஆசாரியத்துவம்:

கிறிஸ்துவின் தியாகபலியை அடிப்படையாய் கொண்டு இருக்கிறது. அவரது தியாகபலி எல்லா சமயங்களிலுமுள்ள எல்லா பாவங்களையும் அகற்றி விடுவதாய் இருக்கிறது.

இது ஆவிக்குரிய பிறப்பை அடிப்படையாய் கொண்டு இருக்கிறது, ஆவிக்குரிய பிறப்பு தேவனுடைய குடும்பத்தில் பிறப்பதாய் இருக்கிறது.

சபை யுகத்தில் உலகலாவிய அளவில் விசுவாசிகள் அனைவருக்கும் இது பொருந்தக்கூடியது.

இது ராஜரீக ஆசாரியத்துவமாய் இருக்கிறது - காரணம் இயேசுக்கிறிஸ்துவின் ராஜரீகம் மற்றும் ஆசாரியத்துவதத்தினால் விசுவாசிகளுக்கு கிடைத்த சிலாகியமாய் இருக்கிறது.

இது பூரண நபரான கிறிஸ்துவை அடிப்படையாய்க் கொண்டுள்ளது.

கிறிஸ்து நித்தியமாய் வாழ்கின்றபடியால், இது நித்தியமானது.

ஆசாரியர்கள்: ஆசாரிய உடைகள்

1. பொதுவான வேத பகுதி: - (யத்திராகமம் 28)

2. இஸ்ரவேலரின் மகா பிரதாண ஆசாரியரின் ஆசாரிய உடையில் ஏழு விதமான பொருட்கள் அடங்கியிருக்கும்.

மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட வஸ்திரம்,
ஏபோத்திற்கான அங்கி,
எபோத்,
ஊரிம் மற்றும் தும்மீம்,
அரைக்கச்சை,
தலைப்பாகை / கிரீடம்,
மார்ப்பதக்கம்.

3. ஆசாரிய வஸ்திரம் தேவனால் வடிவமைக்கப்பட்டது மற்றும் அதன் ஒவ்வொரு விவரங்களும் கிறிஸ்துவின் கிரியைகள் மற்றும் அவரது ஆளத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது. யாதிராகமம் 28 ல் இவ்வஸ்திரம் பரிசுத்த வஸ்திரம் என அழைக்கப்படுகிறது (வச 2) மெல்லிய பஞ்சு நூல் (வச 5) சுத்த பொன் (வச 4) விலை உயர்ந்த கற்கள் (வச 17-20)
விலை உயர்ந்த தைலத்தால் அபிஷேகம் செய்யப்பட்டது (வச 41) ஞான எழுப்புதல் அடைந்தவர்களால் (வச 3) இவ்வஸ்திரம் மிகச்சிறந்த உபகரணங்களைக்கொண்டு மிகக்கைதேர்ந்த வல்லுனர்களால் செய்யப்பட்டது.

4. மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட வஸ்திரம் (யாதிராகமம்28:39-43).
எல்லா ஆசாரியர்களும் மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட வஸ்திரம் உடுத்திக்கொண்டனர். மெல்லிய பஞ்சு நூல் கிறிஸ்துவின் மெய்யான பூரணத்தன்மையை காட்டுகிறதாய் இருக்கிறது. பிரதான ஆசாரியரின் வஸ்திரம் வெண்மையான மெல்லிய பஞ்சு நூலால் ஆனது.

<u>அடிப்படை கோட்பாடுகள்:</u> கிறிஸ்தவ வாழ்க்கையின் எல்லா கிரியைகளும் கிறிஸ்து சிலுவையின் மீது ஆற்றிய கிரியையின் அடிப்படையில் இருக்கிறது. அவரது நீதியினால் மட்டுமே நாம் நீதிக்குட்பட்டு இருக்கிறோம்.
மெல்லிய பஞ்சு நூலால் உருவாக்கப்பட்ட வஸ்திரம் குறித்த குறிப்பு : இப்படிப்பட்ட வஸ்திரம் மரித்த எகிப்தியர்களுக்கு உடுத்தி அடக்கம் செய்வர். அருங்காட்சியத்தில் இப்படிப்பட்ட மெல்லிய பஞ்சுநூலால் செய்யப்பட்ட வஸ்திரங்களை மம்மிகளுக்கு (mummies) உடுத்தப்பட்டு வைத்திருப்பதை இன்றைய அளவில் நாம் காணலாம். இப்படி செய்யப்பட்ட வஸ்திரம் மிக மென்மையுள்ளதாய் இருக்கும்.

<u>அடிப்படை கோட்பாடுகள்:</u> மெல்லிய பஞ்சு நூல் வஸ்திரம் அவரது பரிசுத்தம் மற்றும் அவரது நீதியைக்காட்டுகிறதாய் இருக்கிறது. இவ்வகை வஸ்திரம் வண்ண நூல்களால் பின்னப்பட்டது (வச 39) பின்னும் விதங்கள் குறித்து இரு வார்த்தைகள் வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஒன்று அடிப்படையாய் உருவாக்கப்பட்ட வஸ்திரத்தில் வண்ணம் சேர்ப்பது, மற்றொன்று, நெய்வதன் மூலம் அடிப்படையான வஸ்திரத்தில் வடிவமைப்பது. இரண்டாவதாய் கூறப்பட்ட வஸ்திரமே இவ்வசனத்தில் நாம் காண்கிறோம். தூரத்திலிருந்து நாம் காணும்பொழுது அது வெண்மையான

அங்கி போன்று காணப்படும். அருகில் காணும்பொழுது மிக நேர்த்தியானதும் வண்ணங்கள் அமைந்ததுமாய் காணப்படும்.

<u>அடிப்படை கோட்பாடுகள்:</u> துரத்தில் இயேசுவைக் காணும்பொழுது சிறந்த ஆசிரியராகவும், அல்லது தீர்க்கதரிசியாகவும் காணக்கூடும், அருகில் தேவக்குமாரனாக முழு அழகுடன் வெளிப்படுகிறார்.
அங்கி:- அங்கி என்னும் இப்பதம் வேதாகமத்தில் மற்றொரு இடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது - ஆதியாகமம் 3. ஆதாமும் ஏவாளும் தோல் உடையினால் (அங்கி) (ஒருமை வாக்கியம்) மூடப்பட்டனர். - ஒரு மரணம் ஆதாமுக்காகவும் ஏவாளுக்காகவும் நிகழ்ந்தது.

<u>பகுப்பாய்வு செய்தல்:</u> கிறிஸ்துவின் மரணம் எல்லா மனுக்குலத்திற்கும் கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது.

பிராயசித்த நாளில் பிரதான ஆசாரியன்: இந்நாளில் பிரதான ஆசாரியன் மெல்லிய பஞ்சு நூலால் ஆன அங்கி, தலைப்பாகை, சணல் நூலால் செய்யப்பட்ட கால்சட்டை, இவைகளை அணிந்துகொண்டு, மகாப் பரிசுத்த ஸ்தலத்தில் பலி மிருகத்தின் இரத்தத்துடன் தனக்காய் பிராயசித்தம் செய்ய பிரவேசிக்க வேண்டும்.

<u>பகுப்பாய்வு செய்தல்:</u> கிறிஸ்து தனது மனித சரீரத்தில் (மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட அங்கி) ஒரு முறை தனது சரீரத்தை முழு உலகின் பாவத்திற்காக அற்பணித்தார். அவர் நியாயந்தீர்க்கப்பட்டதன் மூலம் தேவனை திருப்திசெய்து, தனது உயிர்த்தெழுந்த சரீரமான, பிரதாண ஆசாரியருக்குரிய ஆடைகளை அணிந்து கொண்டார்.

5. ஏபோத்தின் கீழ் அங்கி: (யாத்திராகமம் 28:31-35).

ஏபோத்தின் கீழ் அங்கி இளநீல நூலால் செய்யப்பட்டு, மாதளம்பழங்கள் வடிவிலான பொன் மணிகள் அங்கியின் தொங்கல் முழுவதிலும் இருந்தன. இக்கீழ் அங்கி மற்ற அங்கியை போல் அல்லாது முக்கியம் வாய்ந்ததாய் இருந்தது. இக்கீழ் அங்கி ஏற்படுத்துதல் அல்லது அதிகாரம் அளித்தலின் உன்னத அழைப்பாயிருக்கிறது.

<u>பகுப்பாய்வு செய்தல்:</u> நமது பிரதான ஆசாரியர் நமக்கு பிரதான ஆசாரியராய் இருக்கும்படி அதிகாரம் அளிக்கப்பட்டது. கிறிஸ்து என்பதன் மற்றொரு பொருள் அதிகாரம் பெற்றவர் என்பதாகும். கீழ் அங்கி என்பது எப்பொழுதும் ராஜரீகத்துடன் சம்பந்தபட்டு இருப்பதை வேதத்தில் எப்பொழுதும் நாம் காணலாம். மெல்கிசேதேக்கின் முறைமையின்படி கிறிஸ்து ராஜரீக ஆசாரியராய் இருக்கிறார். (சங்கீதம் 110:4).நாமும் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளபடியால் ராஜரீக ஆசாரியராய் இருகிறோம்.

மெல்லிய பஞ்சு நூலால் ஆன அங்கி கிறிஸ்துவின் பரிசுத்தத்தைக்காட்டுகிறது, இவ்வங்கி ஏபோத்தின் இளநீல கீழ் அங்கியால் மூடப்பட்டுஇருப்பது, கிறிஸ்து தெய்வீகத்தால் மூடப்பட்டு இருப்பதை இது காட்டுகிறது. இதைப்போன்றே ஆசரிப்புகூடாரத்தில், உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டிருந்த கற்பலகைகள் மீது பொன்னால் மூடப்பட்ட கிருபாசனம் இருப்பதும் இருக்கிறது. பொன் தெய்வீகத்தை குறிப்பதாய் இருக்கிறது.
ஏபோத்தின் கீழ் அங்கி ஒரே அங்கியாய் வடிவமைக்கப்பட்டிருந்தது. அதற்கு ஆரம்பம் மற்றும் முடிவு இல்லாதிருந்தது.

<u>பகுப்பாய்வு செய்தல்:</u> கிறிஸ்துவின் தெய்வீகம் நித்தியமானதாய் இருக்கிறது, அதற்கு ஆரம்பம் மற்றும் முடிவு இல்லாதிருக்கிறது.
(வெளிப்படுத்தல்1:8). கிருபையின் உடன்படிக்கைகள் யாவும், இயல்பாய் நித்தியமாய் இருக்கின்றன.
கழுத்தை சுற்றிலும் கட்டப்படுவது சங்கிலியைக்காட்டிலும் பலமுள்ளதாயும், அங்கி கிழிந்து போகாத வண்ணம், இருக்கச்செய்கிறது.

<u>பகுப்பாய்வு செய்தல்:</u> நமது இரட்சிப்பு தேவ வல்லமை மூலம், பாதுகாக்கப்படுகிறது.
பழங்களின் அடையாளம்: மாதளம்பழம் = சமாதானம்; திராட்சைப்பழம் = மகிழ்ச்சி; (கிச்சிலி பழம்) ஆப்பிள் = அன்பு.
இப்பழங்கள் மூன்றும் பழைய ஏற்பாட்டில், இணைந்தே வருவதை காணலாம். புதிய ஏற்பாட்டில் இவைகள் (கலாத்தியர் 5:22) ஆவியின் கனியில், அன்பு, சந்தோஷம், சமாதானம் இம்மூன்று குணங்களும் முதற்கனியாக இருப்பது, பழைய ஏற்பாட்டு கனிகளுக்கு சமமாய் இருக்கிறது.
அங்கியில் தொங்கலில் தொங்கவிடப்பட்டுள்ள மாதளம்பழங்கள், சமாதானத்தின் ராஜாவை நமக்கு காட்டுகிறதாய் இருக்கிறது. - மெல்கிசேதேக்கு சாலேமின் (சமாதானத்தின்) ராஜாவாய் இருந்தார்.

அடிப்படைக் கோட்பாடு: மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவம் ஆரோன் ஆசாரியத்துவத்துக்குள் காட்டப்படுகிறது. அதில் உள்ள மணிகள் பரிந்து பேசும் ஜெபத்தை பிரதிபலிக்கிறது. ஆசாரியன் பரிசுத்த ஸ்தலத்தில் சஞ்சரிக்கும்பொழுது அவைகள் தொனித்துக்கொண்டே இருக்கும் - கிறிஸ்து நாம்க்காய் தொடர்ந்து பரிந்துபேசி ஜெபித்துக்கொண்டே இருக்கிறார்.

6. ஏபோத்து (யாத்திராகமம் 28:6-14).
ஏபோத்து இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், மெல்லிய திரித்த பஞ்சுநூலால் செய்யப்பட்டது. இவைகள் பொன்னினால் பின்னப்பட்டவைகள், பொன் இயேசுக்கிறிஸ்துவின் தெய்வீகத்தை பிரதிபலிக்கிறது, மற்றும் அதில் இணைக்கப்பட்டுள்ள நிறங்கள் அவரது தன்மைகள் அனைத்தையும் ஒன்றாய் இணைப்பதையும் குறிக்கிறது.
இளநீல நூல் = தேவனைக்காட்டுகிறது - யோவான் சுவிஷேசம், இரத்தாம்பர நூல் = ராஜரீகத்தைக்காட்டுகிறது - மத்தேயு சுவிஷேசம், சிவப்பு நூல் =

இரட்சகரைக் காட்டுகிறது - மாற்கு சுவிஷேசம், திரித்த மெல்லிய பஞ்சு நூல் = மனித அவதாரத்தைக்காட்டுகிறது - லூக்கா சுவிஷேசம். (நான்கு சுவிஷேசம் பகுதியைக் காண்க)
யாத்திராகமப் புஸ்தகத்தில், இந்நிறங்கள் 24 முறை திரும்பத் திரும்ப கூறப்பட்டுள்ளன.

7. ஊரீம் மற்றும் தும்மீம் (யாத்திராகமம்28:30).

ஊரீம் - வெளிச்சம்,

தும்மீம் - பூரணம்.

நியாய விதி மார்ப்பதக்கத்திலே இவைகள் வைக்கப்பட்டிருந்தன. இவைகள் என்னவென்று அறியப்படவில்லை, இருப்பினும் இவகள் வெள்ளை மற்றும் கருப்புக்கற்கள் ஆகும், இவைகள் சீட்டுப்போடும் முகாந்தரத்தில் வெள்ளைகல் ஆம் என்பதற்கும், கருப்புக்கல் இல்லை என்பதற்கும் பழங்காலத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. (வெளிப்படுத்தல்2:17).
தேவனுடைய சித்தம் ஆம் அல்லது இல்லை என கேட்கப்படும் கேள்விகளுக்கு பதில் அளிப்பதாய் இருந்தது. ஊரீம் தும்மீம் இவைகளின் உபயோகம், பழைய ஏற்பாட்டில் எப்பொழுதும் நேர்மறையாகவோ அல்லது எதிர்மறையாகவோ இருந்து வந்தது. அது ஒரு போதும் விவாதத்திற்குரியதாய் இருந்ததில்லை. இன்றைய அளவில் நமது ஊரீம் மற்றும் தும்மீம், முழுமையாய் தொகுக்கப்பட்டு முழுமைபெற்ற பரிசுத்த வேதாகமம் ஆகும், இது மனிதனுக்கு முழுமையான தேவனின் வெளிப்பாடாய் இருந்து, வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை செய்ய பயனுள்ளத்தய் இருக்கிறது.
(1 கொரிந்தியர் 2:16).

8. அரைக்கச்சை (யாத்திராகமம்28:8).
இவ்வரைக்கச்சை மெல்லிய பஞ்சு நூல், இளநீல நூல், இரத்தாம்பர நூல், சிவப்பு நூல், பொன் இவைகளால் செய்யப்பட்டவை. இது பிரதான ஆசாரியரின் இடுப்பில் இறுக்கமாய் கட்டப்பட்டது, ஆசாரியன் உடுத்தியுள்ள அங்கிகள் நெருக்கமாய் அசாரியனைவிட்டு அகலாதிருக்க கட்டப்பட்டது.
அரைக்கச்சை மூன்று விதங்களில் பயன்படுத்தப்பட்டது:
செயல்படும்பொழுது - கர்த்தர் சீஷர்களின் பாதங்களை கழுவின போது.
நடந்து செல்லும்போது - யாத்திராகம சந்ததி (யாதிராகமம்12:11).
யுத்தத்திற்கு செல்லும்போது - சத்தியம் என்னும் இடைக்கச்சை (எபேசியர்6:14).
1 பேதுரு 1:13 ல் நமது மனதின் அரையைக்கட்டிக்கொள்ள கட்டளை பெற்றுள்ளோம்.

9. தலைப்பாகை. (யாத்திராகமம்28:36-38).
இத்தலைப்பாகையில் பொன்னினாலான பட்டத்தில் "கர்த்தருக்குப் பரிசுத்தம்" என்ற வாசகத்தை முத்திரைவெட்டாக எழுதி, அதை இளநூலாலான நாடாவில் வைத்து முகப்பு நெற்றிக்கு மேல் இருக்குமாறு தலைப்பாகையை சுற்றிலும் கட்டப்பட்டது. இது மூளையின் சிந்திக்கும்

பகுதியின் மேலும் மற்றும் இஸ்ரவேலின் பிரதான ஆசாரியரியனின் ஆத்துமாவின் மீதும் கட்டப்பட்டது. (யோசுவா1:8).

10. மார்பதக்கம். (யாத்திராகமம்28:15-29).

மார்ப்பதக்கம் இளநீல நூலாலும், இரத்தாம்பரம் மற்றும் சிவப்பு நூலாலும், திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் செய்யப்பட்டு அதன் மீது பனிரெண்டு விதமான கற்களடங்கிய மார்ப்பதக்கம் அதில் பொருத்தப்பட்டது. பனிரெண்டு கற்களும் லேவி கோத்திரத்தைத் தவிர்த்து, பனிரெண்டு கோத்திரங்களை காட்டுகிறதாய் இருந்தது. அது 20 செ.மீ சதுரமாய் இருந்தது, அதில் ஊரீம் தும்மீம் வைக்கப்பட்ட பை இருந்தது. அது தோள் மேலிருந்து பொன் சங்கிலிகளால் கட்டப்பட்டு, அதன் அடியிலுள்ள இளநீல நாடாவினால் ஏபோத்தைச்சுற்றிலும் கட்டப்பட்டது.

பனிரெண்டு விதமான கற்களும் இஸ்ரவேல் கோத்திரங்களும்:

பத்மராகம் - யூதா; புஷ்பராகம் - இசக்கார்; மாணிக்கம் - செபுலோன்; மரகதம் - ரூபன்; இந்திர நீலம் - சிமியோன்; வச்சிரம் - காத்; கெம்பு - எப்ராயீம்; வைடூரியம் - மனாசே; சுகந்தி - பெஞ்சமின்; படிகப்பச்சை - தாண்;

கோமேதகம் - ஆசேர்; யஸ்பி - நப்தலி.

இரண்டு தோல்களின் மீது வைக்கப்படும் - இரண்டு கோமேதகக்கற்களில் (யாத்திராகமம் 28:9, 10) இஸ்ரவேலரின் நாமங்கள் மறுபடியும் எழுதப்படவேண்டும், யோசேப்பு, லேவி இவர்களுக்குப் பதிலாக எப்ராயீம், மனாசே என்பவர்களின் பெயர்கள் மறுபடியும் எழுதப்பட வேண்டும்.

தோல்களில் வைக்கப்படும் கற்களில் எழுதப்பட்ட பெயர்கள், அவர்கள் பிறப்பின் வரிசையில் இருந்தன (யாத்திரகாமம்28:10) - இது இரட்சிப்பைக் காட்டுகிறது - இரண்டு கற்களும் ஒரே வகையைச் சார்ந்தவை - இரட்சிப்பு என்பது எல்லோருக்கும் பொதுவானது.

மார்ப்பதக்கத்தில் உள்ள கற்களில் இஸ்ரவேல் கோத்திரங்களின் பெயர்கள் அவர்கள் மேன்மைக்கேற்ப பதிக்கப்பட்டிருந்தன. (எண்ணாகமம் 10:14-27). எல்லா கற்களும் வித்தியாசமானவைகள் - இது வித விதமான ஆவிக்குரிய வரங்களைக் காட்டுகிறது - கர்த்தரை சேவிக்க அவர்களுக்கு வித்தியாசமான தாலந்துகளைப் பெற்று இருந்தனர்.

அடிப்படைக் கோட்பாடுகள்: மார்பதக்கத்தில் பதிக்கப்பட்டிருந்த கற்கள் அனைத்தும் விலையேறப்பெற்றவை. நாம் அனைவரும் தேவனுடைய பார்வையில் விலையேறப்பட்டவர்களும், அவரது சேவையில் முக்கியம் வாய்ந்தவர்களுமாய் இருக்கிறோம். நாம் அனைவரும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு மிகவும் அவசியமானவர்கள். நாம் அனவரும் உயர்வுதாழ்வின்றி, வித்தியாசமானவர்கள்.

ஆசாரியகள்: லேவிய ஆசாரியத்துவம்

1. லேவிய ஆசாரியத்துவத்தில் முதன் முதலாக நியமிக்கப்பட்ட ஆசாரியன் ஆரோன். (யாதிராகமம்28:1,எண்ணா18:7, 8).

2. லேவிய ஆசாரியத்துவத்தில் ஆசாரியரின் குமாரர்கள், அவர்களது ஆசாரியத்துவத்துக்கு அவர்கள் தகப்பனை பின் பற்றுகிறவர்களாய் இருக்கின்றனர்.

3. ஆரோனின் வம்சத்தாரில் சரீர அங்கவீனர்கள் ஆசாரிய ஊழியம் செய்யாது விலக்கி வைக்கப்பட்டனர். (லேவியராகமம்21:21-23).

4. லேவிய ஆசாரியத்துவத்தின் செயல்பாடுகள்:

- நியாயப்பிரமாணத்தை போதிப்பது (லேவியராகமம் 10:11).
- பலி செலுத்துவது (லேவியராகமம் 9).
- ஆசரிப்புக்கூடாரத்தை பராமரிப்பது. (எண்ணாகமம்18:3). (லேவியர்கள்)
- பரிசுத்த ஸ்தலத்தின் பணிகளை செய்து, சமூகத்தப்பங்களை அவ்வப்போது மாற்றுதல், குத்துவிளக்கின் கருந்திரியை அகற்றுதல் போன்றவை. (யாத்திராகமம்30:7-8, லேவியராகமம் 24:5-8).
- வியாதிப்பட்ட நபர்களை பரிசீலனை செய்து அவர்கள் அசுத்தமுள்ளவர்கள் என அறிவிப்பது.. (லேவியராகமம் 13, 14).
- அவர்கள் தேசத்தில் உயர் நீதிமன்றங்களாய் செயல்பட்டு, பெரிதான முறண்பாடுகளை நியாயந்தீர்த்தனர்.(உபாகமம்17:8, 19:17, 21:5).
- ஆசாரியத்துவ ஆசீர்வாதங்கள். (எண்ணாகமம்6:22).

5. சில ஆசாரியர்கள் தீர்க்கரிசிகளாகவும்கூட பணியாற்றியிருக்கிறார்கள். உ.ம். எரேமியா, எசேக்கியேல், சகரியா.

6. லேவி கோத்திரம்.

- லேவியர்கள் லேவி கோத்திரத்திலிருந்து தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு பரிசுத்த தளவாடங்களை பாதுகாக்கவும் பராமரிக்கவும் ஏற்படுத்தப்பட்டனர். (எண்ணாகமம்3:5 ff, 8:14-19).
- எல்லா கோத்திரங்களிலும் முதற்பிறக்கும் பிள்ளைகள் தேவனுக்கென்று பரிசுத்தம் செய்யப்பட்டனர். இவர்கள் ஐந்து சேக்கல் வெள்ளியை மீட்கும் கிரயமாய் லேவி கோத்திரத்தாருக்கு கொடுத்து அவர்களுக்கு பதிலாக லேவியரை ஏற்படுத்தினர்.
- லேவியர் பணிசெய்யுங்காலம் 25 முதல் 50 ஆண்டுகளாகும் காரணம் ஆவிக்குரிய ஈடுபாடுகளில் அதிகமாய் இவர்கள் செயலாற்றுவதால்.
- லேவியர்களின் பணி:
    - நியாயப்பிரமாணத்தைப் பாதுகாப்பதும், எதிர்கால சந்ததியினருக்கு அவைகளை எடுத்துச்செல்வதும், தொடர்ந்து அவைகளை எழுதி பாதுகாப்பதும் ஆகும். (லேவியராகமம்10:11, நெகேமியா 8:9, எஸ்றா44:23).
    - இவர்கள் ஆசரிப்புகூடார பணிகளிலும், பின்னர் தேவாலயப்பணிகளிலும் ஆசாரியர்களுக்கு உதவி செய்தனர். (எண்ணாகமம்18:4).

இரண்டு பணிகள் லேவியர்கள் செய்யாதிருந்தனர்.
கிபியோனியர்கள் செய்த விறகு சேகரிப்பதும், தண்ணீர் சேகரிப்பதும். (யோசுவா9:21).
வாயிலை காப்பது. (1 நாளாகமம்26:1, 19).
iv)லேவியரின் வகைகள்:
கோகாத்தியர்: உடன்படிக்கைப்பெட்டி, சமூகத்தப்ப மேஜை, இரண்டு பலிபீடங்கள், குத்துவிளக்கு, பரிசுத்த பாத்திரங்கள், மற்று திரை.
கெர்சோமியர்: மூடுதிரைகள், தொங்குதிரைகள், வாயிற்கதவுகள்.
மெராரியர்: ஜமுக்காளம், பலகைகள்,தூண்கள்,வெள்ளிப்பாதங்கள, கொக்கிகள்மற்றும் கயிறுகள். (போன்றவகளை பாது காத்து, பராமறித்து, ஓரிடம் விட்டு மற்றோர் இடத்திற்கு செல்லும்போது அவைகளை சுமந்து செல்லும் பணி இவர்களது ஆகும்)
v) ஆசரிப்பு கூடாரம் இடம்பெயரும்போது லேவியர்களே அதை சுமந்து செல்பவர்கள்.
vi)இசைக்கருவிகளுக்கும் பொறுப்பாளிகள் லேவியரே ஆவர்.

7. ஆசாரியரின் உடைகள் (யாத்திரகாமம் 28)
முக்கியமான சபை ஆசரிப்பின் போதுமட்டுமே ஆசாரியர்கள் மற்றும் பிரதான ஆசாரியர் சிறப்பான ஆசாரிய வஸ்திரம் தரிப்பர், மற்ற சமயங்களில் சாதரணமாய் மற்றவர்கள் தரிக்கும் சாதாரண வஸ்திரங்களையே தரிப்பர். முக்கியமான சபை கூடும் சந்தர்ப்பங்களில் பிரதான ஆசாரியரின் உடை அலங்கரிப்பில் கீழ்க்கண்டவைகள் அடங்கியிருக்கும். மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட கால்சட்டை, மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட அங்கி, அரைக்கச்சை இது தொங்குதிரையின் நிறங்களாகிய வெண்மை, இளநீலம், இரத்தாம்பரம், சிவப்பு நிறங்களில் இருக்கும். தலைப்பாகை இதில் பொன்னினால் செய்யப்பட்ட கிரீடமும் அதில் "யெஹோவாவிற்கு பரிசுத்தம்" என எழுதப்பட்டிருக்கும். இளநீல செய்யப்பட்ட ஏபோத்தில் வண்ணநிறங்களில் பிண்ணப்பட்டு அதன் மீது பொன்னால் ஆன மார்பதக்கம் இருக்கும், இதில் பனிரெண்டு வகையான கற்கள் பனிரெண்டு கோத்திரங்களை குறிக்கும் பொருட்டு அவைகளில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு கோத்திர பெயர்கள் எழுதப்பட்டிருக்கும் (கீழே ஆசாரிய உடை என்னும் தலப்பைப்பார்க்க)

8. யாத்திராகமம் 29 ல் ஆசாரியர்கள் பிரதான ஆசாரியர்கள் இவர்கள் பரிசுத்த அபிஷேகம் செய்யப்படுவது குறிப்பிடப்பட்டுள்ளது.

9. பிராயசித்த நாள் (லேவிராகமம் 16) உன்னதமான இப்பரிசுத்த நாளில் பிரதான ஆசாரியன் தனது பரிசுத்த ஆடைகளை உடுத்திக்கொண்டு ஆசாரிப்பு கூடாரத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து பாவநிவிர்த்திக்காய் அடிக்கப்பட்ட காளையின் இரத்தத்தை தனக்காக கிருபாசனத்தின் மீது தெளிப்பான். (வச 6, 14). மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசித்து அவர் உயிருடன் காணப்படுவாரேயானால், அவர் தொடர்ந்து

ஓராண்டு பிரதாண ஆசாரியராய் இருக்க தகுதி பெறுவார். அவர் மறுபடியும் இரண்டாம் முறையாய், வெள்ளாட்டின் இரத்தத்துடன் இஸ்ரவேல் ஜனங்களின் பாவநிவிர்த்திக்காய் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பார். அவர் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து வெளியே வரும்பொழுது தேசம் மன்னிப்பைப்பெறும். இஸ்ரவேல் ஜனங்கள் காக்கப்படுவர். (வச 30).

10. The descendants of the High Priest

a) Succession occurred upon the officiating high priest's death with the eldest surviving son's installation (Numbers 20:28).

b) The line was promised to pass down through Phinehas eldest son of Eleazer, the son of Aaron (Numbers 25:10-13). Eli was a legitimate priest and descendant of Ithmar, but not an high priest; the switch in the line took place during Saul's reign. It was rightfully restored to the line of Eleazer during Solomon's reign (1 Kings 2:26, 27, 35). When Israel was about to go under dispersion in Jeremiah's day, Seraiah was high priest. He was captured by Nebuzar-adam and executed at Riblah (2 Kings 25:18-2 1). His son Josedech, who should have inherited the office, never served as high priest but lived and died in captivity at Babylon (Haggai 1:1-14). His son Joshua assumed the office when the High Priesthood was restored in the days of Zechariah and Zerubbabel (Zechariah 3).

c) His successors were Jothum, Eliashia, Joiada, Johanan, and Jaddua, who served in time of Alexander the Great. He met Alexander's conquering army with a scroll of Daniel in his hand. By reading him those passages dealing with him Jaddua won Alexander's friendship for the Jews.

d) Jaddua's successors were Onias I and Simon the Just. Onias II, too young to become the high priest, was set aside in favour of Simon's brother Eleazer.

e) The high priesthood was passed down to the Asmonaean family of the course (class or order) of Joiarits (1Chronicles 9:10, 24:7, Nehemiah 11:10), and continued in that line until Herod the Great destroyed that family, the last high priest, Aristobul being murdered by order of Herod (Herod the Great's brother in law) in 35 BC.

f) There were twenty-eight high priests until the year 70 AD. Two high priests related to the death of Christ were Caiaphas and Annas.

ஆசரிப்புக்கூடாரம்

1. ஆசரிப்புக்கூடாரம் இஸ்ரவேலிலே ஆராதிக்க அடிப்படை அமைப்பாய் நிர்மாணிக்கப்பட்டிருந்தது, மற்றும் பிரத்தியேகமான ஆசாரியரும், பிரத்தியேகமான நபரும், பிரத்தியேகமான இரட்சகருமான கிறிஸ்துவின் ஆளத்துவத்தை மோசேயின் நியாயப்பிரமாணத்தினத்தின் மூலம் ஆவிக்குரிய அர்த்தத்தினால் வருணிக்க ஏதுவாயிருக்கிறது.

- ஆசரிப்பு கூடாரம் மனித சரீரத்தை குறித்து கூறுகிறது, மனித சரீரம் ஆத்துமாவின் தற்காலிக கூடாரமாய் இருக்கிறது அல்லது தற்காலிக பாதுகாப்பு ஸ்தலமாய் இருக்கிறது எனக் கூறப்படுகிறது,
- ஆசரிப்பு கூடாரம் தேவனுடைய வாசஸ்தலமாய் வருணிக்கப்படுகிறது மற்றும் கிருபையில் தேவன் மனிதனுடன் வாசம் பண்ணுவதையும் வருணிக்கிறது.
- ஆசரிப்பு கூடாரம் மனிதன் தேவனை சந்திக்கும் இடமாய் இருக்கிறது மற்றும் இது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை பிரதிபலித்து, தேவன் ஜனங்களை சிலுவையில் சந்திப்பதையும் காட்டுகிறது.
- ஆசாரியர்கள் மட்டுமே ஆசரிப்பு கூடாரத்தில் பிரவேசிக்க முடிந்தது. இன்றைய அளவில் விசுவாசிகள் மட்டுமே தேவனுடன் ஐக்கியம் கொள்ள முடியும்.
- ஆசரிப்பு கூடாரம் அமைப்பதற்கு மிகத்தெளிவான திட்டம் அளிக்கப்பட்டது, இது தேவன் மிகத்தெளிவான திட்டம் வகுக்கிறவர் எனக் காட்டுகிறது.
- ஆசரிப்பு கூடாரம் இரு பகுதிகளாய் பிரிக்கப்பட்டு இருந்தது. வெளிப்பிரகாரம் இது பூமியைப் பிரதிபலிக்கிறது மற்றும் உட்பிரகாரம் தேவன் தாபரிக்கும் ஸ்தலத்தை பிரதிபலிக்கிறது.
- உட்பிரகாரம் இரு பகுதிகளாய் பிரிக்கப்பட்டு இருந்தது, பரிசுத்த ஸ்தலம் இங்கு லேவிய ஆசாரியர்கள் பணியில் ஈடுபடுவர், மகா பரிசுத்த ஸ்தலம் இங்கு வருடத்தில் ஒரு முறை மகாப் பிரதான ஆசாரியர் ஊழியம் செய்வர். பரிசுத்த ஸ்தலம் பரலோகை குறிப்பிடுகிறது, மகா பரிசுத்த ஸ்தலம் தேவனுடைய சிங்காசனம் இருக்கும் அறை அங்கு நமது மகாப் பிரதாண ஆசாரியராகிய இயேசுக்கிறிஸ்து இருக்கிறார் அங்கு தொடர்ந்து நமக்காய் பரிந்து பேசிக்கொண்டு இருக்கிறார்.

2. ஆசரிப்பு கூடாரம் பாளயத்தின் மத்தியில் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. அதை சுற்றிலும் இஸ்ரவேலரின் பனிரெண்டு கோத்திரத்தார் பாளயமிரங்கியிருந்தனர். அவர்கள் மூன்று கோத்திரங்கள் வீதம் நான்கு திசையிலும் பாளயமிரங்கியிருந்தனர்.
அடிப்படை கோட்பாடு: ஒவ்வொருவரும் வெளிப்பிரகாரத்தில் தொடங்குவர், உட்பிரகாரத்தில் பிரவேசிப்பவர்கள் மட்டும் (மறுபடி பிறந்தவர்கள் மட்டும்) தேவனுடன் ஐக்கியம் கொள்வர்.

3. யாத்திரகாமம் 25 ல் மகா பரிசுத்த ஸ்தலத்திலிருந்து துவங்கும் முக்கியமானவைகள் அறிவிக்கப்படுகின்றன, இது இரட்சிப்பு தேவனிடமிருந்து துவங்குகிறது மனிதனிலிருந்து அல்ல. எல்லா ஆசீர்வாதங்களும் தேவனிடமிருந்தே வருகின்றன என்பதைக் காட்டுகிறது.

4. ஆசரிப்பு கூடாரம் பரிபூரண செவ்வக வடிவில் 100 முழ நீளம் 50 முழ அகலமாய் இருந்தது. 175 அடி நீளம் 87 1/2 அடி அகலம், 8′ 9" உயரமாய் இருந்தது. இந்த அளவு எப்பொழுதும் ஒரே அளவாகவே இருந்தது. தேவன் மறுகிறவர் அல்ல என்பதை இது காட்டுகிறது. (யாத்திரகாமம்27:9-15).

5. ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளிப்பிரகாரத்தின் மறைவைக்காய் அதன் ஓரங்களில் 60 வெண்கல தூண்களும் அதை நிறுத்தும்படி 60 வெண்கலப் பாதங்களும் இருந்தன. வெண்கலம் நியாயத்தீர்ப்பை குறிக்கிறது, தூண்கள் சிலுவையைக்குறிக்கிறது. தூண்களின் மேற்பகுதியில் வெள்ளி கொக்கிகள் இருந்தன. வெள்ளி - மீட்பைக்காட்டுகிறது. இருபது தூண்கள் வடக்கிலும், இருபது தூண்கள் தெற்கிலும் பத்து தூண்கள் கிழக்கிலும் பத்து தூண்கள் மேற்கிலும் இருந்தன. (யாத்திரகாமம்27:9-15).

6. ஆசரிப்பு கூடாரத்தின் வெளிப்பிரகார மறைவுக்காய் திரித்த மெல்லிய பஞ்சு நூலால் ஆன மூடுதிரைகள் இருந்தன. திரித்த மெல்லிய பஞ்சு நூல் தேவனுடய நீதியைப் பிரதிபலிக்கிறது. (யாத்திரகாமம்27:9).

7. ஆசரிப்பு கூடாரத்துக்கு ஒரே வாசல் இருந்தது. தேவனிடம் செல்வதற்கு ஒரே வாசல் மட்டுமே உண்டு, அது இயேசுக்கிறிஸ்து மூலம் மட்டுமே. வாசல் திரை இளநீல வண்ணத்தில் 35′ அகலமாய் இருந்தது. ஒரு முறை வாசல் வழியாய் உட்பிரவேசித்தால் ஆசரிப்பு கூடாரத்தின் உள்ளே செல்லலாம், இது தேவ நீதியால் மூடப்பட்ட நிலையை பிரதிபலிக்கிறது. அதன் நீண்ட அகலம், எல்லோரும் பிரவேசிக்கலாம் என்பதை பிரதிபலிக்கிறது. மூடுதிரை மெல்லியதாய் இருந்தது இது குறைந்த பட்ச விசுவாசம் இருந்தால் உட்பிரவேசிக்க போதுமானது என்பதை பிரதிபலிக்கிறது. (பெலவீனமான மக்கள் கூட அத்திரையை விலக்கி உட்பிரவேசிக்க முடியும்). அதில் நான்கு வண்ணங்கள் இடம் பெற்று இருந்தன, அவை இளநீலம், இரத்தாம்பரம், சிவப்பு, வெள்ளை: இளநீலம் = கிறிஸ்துவின் தெய்வீகம், இரத்தாம்பரம் = கிறிஸ்துவின் ராஜரீகம், சிவப்பு = கிறிஸ்துவின் மீட்பின் கிரியை, வெள்ளை = கிறிஸ்துவின் முழுமையான நீதி. இவ்வாறு ஆசரிப்பு கூடாரத்துள் பிரவேசிக்கும் பொழுது, கிறிஸ்துவின் நீதி சுற்றிலும் முழுவதுமாய் மறைத்துக்கொள்ளும்.. (யாத்திரகாமம்26:36).

8. கதவைத் தாங்கி நிற்கும் தூண்கள் சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு பொன்னால் மூடப்பட்டு இருந்தது. இது கிறிஸ்துவின் தனித்தன்மையைக் காட்டுகிறது. ஐந்து தூண்கள்: ஐந்து = கிருபை, பொன் = தெய்வீகம், மரம் = மனுஷீகம். (யாத்.26:37).

9. ஆசரிப்பு கூடாரத்தின் தரைப்பாகம் 6 1/2 டண் எடையுள்ளது.

10. ஆசரிப்பு கூடாரத்தின் கூரைப்பகுதி நான்கு வித பொருட்களால் ஆனது. (யாதிராகமம்26:1-14).

வெளியே: தகசுத்தோல் = மனுஷீகம், சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடா தோல் = மீட்பு, வெண்மயான ஆட்டுக்கடா உரோமம் = பாவமற்றத்தன்மை.

உள்ளே: திரித்த மெல்லிய பஞ்சு நூல் = நீதி.

11. ஏழுவிதமான தட்டுமுட்டுகள் ஆசரிப்பு கூடாரத்தில் காணப்பட்டது.

12. வெண்கல பலிபீடம்: (யாத்திராகமம்27:1-8).
ஆசரிப்பு கூடாரத்தின் நுழை வாயிலுக்கு அருகில் இது வைக்கப்பட்டிருந்தது. வெண்கலம் நியாயத்தீர்ப்பை பிரதிபலிக்கிறது. வெண்கல பலிபீடத்தில் பலி செலுத்தாமல் ஆசரிப்பு கூடாரத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிக்க முடியாது. அக்கினி பலியை தகனிக்கும். அக்கினி நியாயத்தீர்ப்பைக்காட்டுகிறது.
நடைமுறை செயலாக்கம்: கிறிஸ்துவின் சிலுவையில் நம்பிக்கை வைக்காமல் தேவனுடைய திட்டத்தில் பிரவேசிக்க முடியாது.

13. வெண்கல கடல் தொட்டி: (யாத்திராகமம்30:17-21).
வெண்கல கடல் தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கும். இதுவும் ஆசரிப்பு கூடாரத்தின் வெளிப்பகுதியில் வைக்கப்பட்டிருந்தது. ஆசரிப்பு கூடாரத்திற்குள் பிரவேசிக்கும் முன்னர் ஆசாரியன் தனது கைகளை இத்தொட்டியில் கழுவுவான், இது பாவ அறிக்கை செய்வதை பிரதிபலிக்கிறது - பாவங்கள் சிலுவையில் நியாயந்தீர்க்கப்பட்டது. தண்ணீர் = சுத்திகரிப்பை காட்டுகிறது.
நடைமுறை செயலாக்கம்: தேவனுடன் ஐக்கியம் கொள்ளுமுன்னர் நமது பாவங்களை அறிக்கை செய்தல் வேண்டும். சபை யுகத்தில் நாம் அனைவரும் ஆசாரியர்கள், நாம் நமது பாவங்களை அறிக்கை செய்து பின்னர் ஐக்கியத்தில் ஈடுபடவேண்டும். நமது வெண்கல கடல்தொட்டி 1 யோவான் 1:9.

14. சமூகத்தப்ப மேஜை: (யாத்திராகமம்25:23-30).
இது பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தது. சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு பொன்தகட்டால் மூடப்பட்டிருந்தது. லேவி கோத்திரம் தவிர்த்து, 12 அப்பங்கள் பனிரெண்டு கோத்திரங்களை குறிப்பிடும் வகையில் இம்மேஜையின் மீது வைக்கப்படும். இவ்வப்பங்கள் புளிப்பில்லாமல் செய்யப்பட்டு சுகந்தவர்க்கத்துடன் அடுப்பில் பாகம் பண்ணப்படும். அப்பம் = ஐக்கியம், மெல்லிய மாவு = கிறிஸ்துவின் நீதி, சுகந்த வர்க்கம் = தயை அல்லது கருணை பெறுதல். அக்கினி = நியாயத்தீர்ப்பு. ஒரு வாரமளவும் மேஜையின் வைக்கப்பட்ட பின்னர் இவ்வப்பங்களை ஆசாரியர்கள் புசிக்க வேண்டும். புசித்தல் என்பது வேத உபதேசங்களை கைக்கொள்வதை காட்டுகிறது. ஒவ்வொரு அப்பமும் கிரீடத்திற்கு கீழ் வைக்கப்படும் இது கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து இஸ்ரவேலின் ராஜா என்பதைக்காட்டுகிறது. குஷ்டரோகியான ஆசாரியன் இதைப்புசிக்கக்கூடாது, அந்நியர் யாரும் இதைப்புசிக்கக்கூடாது.

15. பொன் குத்துவிளக்கு: (யாத்திராகமம் 25:31-40).
இது பொன்னினால் செய்யப்பட்டு பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தது. குத்துவிளக்கு இயேசுக்கிறிஸ்துவை உலகத்தின் வெளிச்சம் என பிரதிபலிக்கிறது. இதில் ஏழு குத்துவிளக்குகள் இருந்தன.

மத்தியில் உள்ள குத்துவிளக்கை சுற்றிலும் மற்ற ஆறு குத்துவிளக்குகள் இருந்தன. இவைகள் இரு பக்கங்களிலும் மூன்று வீதம் இருந்தன. ஆறு மனிதனைக்குறிக்கும் எண். ஏழு தேவனைக்குறிக்கும் எண் - பூரணமான எண்.

பகுப்பாய்வு: மனிதன் கிறிஸ்துவில் பூரணமாக்கப்படுகிறான்.

பரிசுத்த ஸ்தலத்துக்கு வெளிச்சம் கொடுப்பது இக்குத்துவிளக்கு மட்டுமே. இதை எரியச் செய்ய ஒலிவ எண்ணெய் பயன்படுத்தப்பட்டது. எண்ணெய் பரிசுத்த ஆவியானவரை பிரதிபலிகிறது. நடுத்தண்டில் உள்ள எண்ணெய் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறது, அவர் மனுஉருவில் இருந்தகாலங்களில் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அவரையே முற்றிலும் சார்ந்து இருந்தார் என்பதை இது காட்டுகிறது. மற்ற ஆறு தண்டுகளில் இருந்த எண்ணெய் கிறிஸ்தவ வாழ்விற்குரிய வழிமுறை, ஆவிக்கேற்றபடி நடப்பது என்பதைக்காட்டுகிறதாய் இருந்தது. (கலாத்தியர் 4:19, 5:22, 23). ஆறு தண்டுகளும் மத்தியில் உள்ள தண்டோடு இணைந்து இருப்பது, கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியத்தையும், மற்றும் கிறிஸ்தவர்களோடு உள்ள ஐக்கியத்தையும் பிரதிபலிக்கிறது.
இதன் மொத்த எடை 4.8 பவுண்ட் (21 கிலோ கிராம்) இது பொன்னினால் அடிப்பு வேலையாக செய்யப்பட்டது. இது மிகவும் விலையேறப்பட்டது, மற்றும் கிறிஸ்துவின் விலையேறப்பட்டத் தன்மையை இது காட்டுகிறது. இது அடிப்பு வேலையாய் வடிவமைக்கப்பட்டது கிறிஸ்து உலகின் பாவங்களுக்காய் சிலுவையில் பட்டபாடுகளை பிரதிபலிக்கிறது. நடுவில் உள்ள விளக்குத்தண்டின் உச்சியில் மாதுளைப்பழம் காணப்பட்டது இது கிறிஸ்துவின் பூரணத்தையும் மற்றும் நித்திய ஜீவனையும் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. அதில் காணப்பட்ட வாதுமை மொக்குகள் கிறிஸ்து எல்லா ஜீவன்களுக்கும் ஆதாரம் என்பதை பிரதிபலிக்கிறது.
பூக்கள் எல்லா விளக்குத்தண்டுகளிலும் காணப்பட்டன. இப்பூக்கள் கிறிஸ்துவின் குணநலன்களின் அழகை பிரதிபலிக்கிறது, நாமும் ஆவியினால் நிரப்பப்பட்டு இப்படிப்பட்ட குணங்களின் அழகை வெளிக்காட்ட வேண்டும் என்பதை இது பிரதிபலிக்கிறது. ஒவ்வொரு விளக்கிலும் எண்ணெயை உறிஞ்சி எரியச்செய்ய விளக்குத்திரிகள் இருந்தன. இத்திரிகள் எரிவதற்கு முன்பு எண்ணெயில் முழுக்கி பின்னர் எரிய வைக்கப்படும் இல்லையெனில் அது வெறும் புகையை மட்டும் வெளித்தள்ளும். எரியும் வெளிச்சம் = தெய்வீக நன்மையை அல்லது தெய்வீக ஆற்றல் இவற்றைக் குறிக்கிறது. புகை = மனித நன்மை அல்லது மனித ஆற்றல் இவற்றைக்குறிக்கிறது.
நடைமுறை செயல்பாடு: ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு செயல்படுவாரானால், அது ஒரு அவிசுவாசியின் செயல்பாடுகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாய் இருக்கும். எரிந்து போன திரிகள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிரியைகளை பிரதிபலிக்கிறது. ஆசாரியர்கள் இவைகளை சேகரித்து சிறிய பெட்டிகளில் அடைத்து வைப்பது வழக்கம். தேவன் அவருக்காய் நாம் செய்யும் அனைத்து கிரியைகளையும் நினைவில் வைத்துள்ளார்.
(1 கொரிந்தியர் 3:12-15).

எல்லாவற்றிற்கும் மேலாக பொன் குத்துவிளக்கைக் குறித்த வியாக்கியானம் ஏசாயா 11:2 லும், வெளிப்படுத்தல் 1:4 லும் காணப்படுகிறது. ஏழு விளக்குத்தண்டுகளும் ஏழு தேவனுடைய ஆவிகள் ஆகும். கர்த்தரின் ஆவி, ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி, ஆலோசனையும் பெலனையும் அருளும் ஆவி, அறிவையும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தை அருளும் ஆவி ஆகும்.

16. தூப பீடம் (யாத்திராகமம்30:1 -10).
இது மகா பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே வைக்கப்பட்டிருந்தது இது பரிந்து பேசி ஜெபிப்பதை பிரதிபலிக்கிறது. இது பொன்னால் செய்யப்பட்டு அதன் மீது மரத்தால் மூடப்பட்டிருந்தது, இது கிரீடம் போன்ற வடிவில் இருந்தது. ஆசாரியன் வெண்கலப்பலி பீடத்திற்குச் சென்று அதிலிருந்து நெருப்புத்தழல்களை கொண்டு வந்து பரிசுத்த ஸ்தலத்தின் வழியாய் பிரவேசித்து இக்கிரீடத்தில் அத்தழல்களை இடுவான். அதன் பின்னர் தூபவர்க்கத்தை அதன் மீது தெளிக்க அதிலிருந்து தூபப்புகை எழும்பும் இது தேவனை நோக்கி செய்யும் ஜெபத்தை பிரதிபலிக்கிறது. வெண்கல பலிபீடத்தில் நெருப்புத்தழல்களை எடுப்பது, கிறிஸ்துவின் மரணத்தை அடிப்படையாய் கொண்ட ஜெபம் மிகவும் சிறப்பு வாய்ந்ததாய் இருக்கிறது. ஒரு விசுவாசி கிறிஸ்துவை இரட்சகராய் ஏற்றுக்கொள்ளாத வரை கருத்தாய் ஜெபிக்க இயலாது. நெருப்புத்தழல்களை கொண்டு வருபவர் ஆசாரியன் மட்டுமே, இது விசுவாசியை மட்டும் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது.
கிரீடம் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. சிலுவை கிரீடத்திற்கு முன்பாக வந்தாக வேண்டும், கிரீடம் மெல்கிசேதேக்கு முறைமையின் படி ராஜரீக ஆசாரியத்துவத்தை குறித்து பேசுகிறது. நெருப்பு நியாயத்தீர்ப்பை குறித்து பேசினது, நியாயத்தீர்ப்பு சிலுவையின் அடிப்படையில் இருக்கிறது.
கருத்தான ஜெபத்திற்காக: தூபவர்க்கம் நான்கு விதமான பொருட்களின் சேர்க்கையினால் உண்டானது இவைகள் கிறிஸ்துவின் கிரியையைக்குறித்து பேசுகின்றன.

வெள்ளைப்போளம் - ஒரு வகை பிசின் மரத்திலிருந்து எடுக்கப்படும் திரவம் இது ஜெபத்தை அங்கிகரிக்கும் பிதாவை பிரதிபலிக்கிறது.
குங்குலியம் - இது நிலத்திலிருந்து கிடைக்கும் அரிய வகை சிப்பி (நியாயத்தீர்ப்பை பிரதிபலிகிறது). இவ்வகையான சிப்பி எரியும் போது சுகந்த வாசனை வெளிவரும் (இது தயவு அல்லது கருணை பெறுதலை காட்டுகிறது)
அல்பான் பிசின் - இது ஒரு வகை தாவரத்தின் கொழுப்பு இது செழிப்பைக்காட்டுகிறது மற்றும் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை பிரதிபலிக்கிறது.
சுத்தமான சாம்பிராணி - வெள்ளை நிற பிசின் ராஜாக்கள் முடிசூட்டப்படும்போது பயன்படுத்துவது. இது கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்துள்ளதை பிரதிபலிக்கிறது.

17. உடன்படிக்கைப்பெட்டி மற்றும் கிருபாசனம் (யாத்திராகமம்25:10-22).
இது மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்தது கிருபாசனம் பசும்பொன்னினால் செய்யப்பட்டிருந்தது. இதன் மீது இரண்டு கேருபீன்கள்

தங்களது செட்டைகளால் கிருபாசனத்தை மூடிக்கொண்டு, மேலிருந்து கிருபாசனத்தைப் பார்த்தவண்ண்ம் வடிவமைக்கப்பட்டிருந்தது. கிருபாசனத்தின் கீழ் பாவத்தை பிரதிபலிக்கும் வகையில் மூன்று காரியங்கள் சிறு பெட்டியில் வைக்கப்பட்டிருந்தன. பிரமாணங்கள் எழுதப்பட்ட கற்பலகைகள், இது ஒழுக்கப் பிரமாணங்களுக்கு எதிரான மீறுதலை பிரதிபலிக்கிறது, மன்னா நிறைந்த கலசம் இது தேவன் அளிக்கும் நன்மையை புறக்கணித்ததை காட்டுகிறது, மற்று ஆரோனின் துளிர்த்த கோல் இது அதிகாரத்தை புறக்கணித்ததை காட்டுகிறது. இது உடன்படிக்கை பெட்டியாய் இருந்தது. வருடத்தில் ஒருமுறை பிராயசித்தப் பண்டிகையின் போது, மகா பிரதாண ஆசாரியர் பலிபீடத்திலிருந்து பலியின் இரத்தத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பார், அங்கு கொண்டு சென்ற இரத்தத்தை கிருபாசனத்தின் மீது தெளிப்பார். வெண்கலப்பலிபீடத்திலிருந்து எடுத்து வரப்படும் இரத்தம் கிறிஸ்துவின் மரணத்தை பிரதிபலிக்கி/றது. கேருபீன்கள் ஒன்று தேவனின் நீதியை பிரதிபலிக்கிறது, மற்றொண்று தேவனின் நியாயத்தை பிரதிபலிக்கிறது அவைகள் கிருபாசனத்தில் தெளிக்கப்பட்ட இரத்தத்தை பார்த்து திருப்தி அடைந்தன. மனித வர்க்கத்தின் பாவங்கள் கிறிஸ்துவின் மரணத்தால் அகற்றப்பட்டு விட்டன.

<u>பாடம் 32 -- இஸ்ரவேலரின் பண்டிகைகள்</u>

முன்னுரை:

பண்டிகை [feast] என்ற சொல்லில் இருந்து பரிசுத்த நாள் [holy day] என்றவார்த்தை வந்தது இதிலிருந்தே நாம் விடுமுறை நாள் [holiday] என்கிறபதத்தைப் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். லேவியராகமம் 23 ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இஸ்ரவேலரின் எட்டு பண்டிகள் இருக்கின்றன. சாபத் [வச 1-3], பஸ்கா [வச 4-5], புளிப்பில்லா அப்பப்பண்டிகை [வச 6-8], முதற்பலன்களை சேர்க்கும் பண்டிகை [வச 9-14], பெந்தெகொஸ்தே பண்டிகை [வச 15-21], எக்காளப்பண்டிகை [வச 22-25], கூடாரப்பண்டிகை [வச 33-36].

பண்டிகைகள், இஸ்ரவேலரின் சரித்திர தீர்க்கதரிசனத்தை சித்தரிக்கும் வகையில் முன்னதாகவே எழுதப்பட்டது. பண்டிகைகள் மூலம் இஸ்ரவேலருக்கு என்ன சம்பவிக்கப்போகிறது எனச்சித்தரிக்கப்பட்டு இருக்கிறது. இவைகள் அனைத்தையும் கைக்கொள்ளும்படி கட்டளையிடப்பட்டது, ஆனால் ஜனங்கள் இவ்வித பண்டிகைகளை ஆசரிப்பதன் மூலம் எவ்வித ஆவிக்குரிய பலனையும் பெற்றுக்கொள்கிறவர்களாய் இல்லை.

இது ஒரு ஞாபகார்த்தமான உபதேசமாய் மற்றும் தேவனுடைய இரட்சிப்பின் கிரியை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மூலம் விளங்கச்செய்கிறதாய் இருக்கிறது. சபையில் முக்கியமான விஷேசித்த நாட்கள் என்று எதுவும் இல்லை, நமக்கு விஷேசமான பண்டிகை நாட்கள்

என எதுவும் கிடையாது காரணம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்தவர்களுக்கு விஷேசித்த நாளாய் இருக்கிறது.

இருப்பினும் அநேக ஜனங்கள் விஷேசித்த நாட்களை ஆசரிக்க விரும்புகிறார்கள். இவ்வாறு விஷேசித்த நாட்களை விரும்பும் ஜனங்களிடமிருந்து ஒருவர் கண்டுகொள்வது என்னவெனில், அவர்கள் ஒவ்வொரு நாளையும் ஆவிக்குரிய ரீதியில் செலவழிப்பது கிடையாது. தேவன், கர்த்தருக்கென ஒவ்வொரு நாளையும் ஆவிக்குரிய ரீதியில் வாழ்ந்து கழிக்க தெளிவு படுத்துகிறவராய் இருக்கிறார். ரோமர் 14 கூறுகிறது விஷேசித்த நாட்களை நியமித்துக்கொள்ள ஒருவர் விரும்பினால் அது அவர்களை பொறுத்தது, பலவீன சகோதரரை பரிகசிக்காமல் இருங்கள் என இவ்வசம் கூறுகிறது.

சாபத்:

பண்டிகைகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது, பஸ்காவிலிருந்து, பெந்தெகொஸ்தெ பண்டிகைவரை அதாவது ஏபரல் முதல் ஜூன் வரையும் மற்றும் எக்காளப்பண்டிகை முதல் கூடாரப்பண்டிகை வரை அதாவது செப்டம்பர் முதல் அக்டோபர் வரையும் இருபிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து இஸ்ரவேலருடன் உள்ள ஈடுபாட்டில் பண்டிகைகள், தீர்க்கதரிசன கால அட்டவணையாய் இருக்கின்றன.

சாபத் குறித்த நோக்கம் என்னவெனில், கிருபையை போதிப்பது ஆகும், ஆறு நாட்கள் வேலை செய்து ஏழாம் நாளில் ஓய்ந்து இருத்தல் வேண்டும். ஏழாம் நாளில் யூதர்கள் ஒரு வேலையும் செய்யக்கூடாது என ஞாபகப் படுத்தப்பட்டு இருந்தனர். இரட்சிப்பு என்பது தேவனது கிருபையின் அடிப்படையில் இருந்தது. நீங்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, விசுவாசத்தின் மூலம் கிருபையைக் கொண்டு இரட்சிப்படைந்தீர்கள்.

சாபத் என்பது கிருபையை ஞாபகப்படுத்துகிறதாய் இருக்கிறது. சாபத் குறித்த நோக்கம் யாத்திராகமம் 31:13, எசேக்கியேல் 20:12 ல் கூறப்படுகிறது, தேவனோடுள்ள உறவை கிருபையின் மீது கட்டி எழுப்புவதற்கு இது இஸ்ரவேலருக்கு ஓர் அடையாளமாய், இருந்தது. இது அவர்களது பரிசுத்தமாக்கப்படுதலின் அடிப்படையில் இருந்தது, இது அவர்களது கிரியைகளினால் அல்ல.

இஸ்ரவேலருக்கு மட்டுமே சாபத் அளிக்கப்பட்டது. சாபத் என்னும் ஒரே கட்டளையே புதிய ஏற்பாட்டில் மறுபடியும் கைக்கொள்ள வேண்டும் எனக்கேட்டுக்கொள்ளப்படாத கட்டளையாய் இருக்கிறது. காரணம் கிறிஸ்தவர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஓய்வுநாளாய் இருக்கிறது. ஒரு வாரத்தில் உள்ள ஏழு நாட்களும் நமக்கு சாபத் தினமாய் கருதப்படுகிறது. ஒவ்வொரு நாளும் கிருபையின் தினமாய் கர்த்தர் நமக்காய் செய்தவற்றை நினைவுபடுத்துகிற தினமாய் இருக்கிறது. ஒவ்வொரு ஏழாவது வருடமும் சாபத் வருஷமாய் அநுசரிக்கப்படுகிறது. ஆறு வருடமும் ஆகாரப்பொருட்கள் ஏழாவது வருடத்திற்காக சேகரிக்கப்பட்டு, பாதுகாத்து

வைக்கப்படும், ஒவ்வொரு ஏழாவது ஆண்டும் நிலமானது விதைப்பும் அறுப்புமின்றி ஓய்வாக விடப்படும். இந்த ஓராண்டு அவர்கள் வேதாகமப் பள்ளிக்கு செல்லவேண்டியவர்களாய் இருக்கிறார்கள். இஸ்ரவேலர் சாபத் வருடங்களை அநுசரிக்க தவறி விட்டனர், இதினிமித்தம் அவர்கள் பாபிலோனுக்கு அடிமைகளாய் கொண்டு செல்லப்பட்டனர், அவர்கள் அங்கிருந்த 70 ஆண்டுகள் நிலமானது ஓய்வு ஆண்டுகளை அநுசரித்தது. நானூற்று தொன்னூறு ஆண்டுகள் அவர்கள் அத்தேசத்தில் வாழ்ந்தும் அவர்கள் சாபத் ஆண்டுகளை ஆசரிக்காது இருந்தனர்.

அவர்களுக்கு யூபிலி வருடம் குறித்தும் கட்டளையிடப்பட்டிருந்தது, ஒவ்வொரு ஏழாண்டு சுழற்சி வீதம், ஏழு முறை சுழற்சிக்குப்பின்னர், ஐம்பதாவது வருடம் யூபிலி ஆண்டாய் ஆசரிக்கப்பட்டது. ஐம்பதாவது வருடத்தில் அடமானமாய் பெற்ற அனைத்தும் திரும்ப அளிக்கப்பட்டது. நீங்கள் ஒருவரிடம் கடன் வாங்கி அக்கடனை குறிப்பிட்டகாலத்தில் திரும்ப செலுத்தாத நிலையில் அந்நபருக்கு கடன்பட்டது உண்டானால், அந்நபருக்கு நீங்கள் அடிமையாகிறீர்கள். ஏழாவது ஆண்டில் விடுதலை செய்யப்படுகிறீர்கள். நிலம் அடமானமாய் கொடுக்கப்பட்டிருக்குமேயானால், அது 49 ஆண்டுகள் கொடுக்கப்பட்டவரின் ஆதிக்கத்திலிருந்து, ஐம்பதாவது ஆண்டில் அந்நிலமானது அதன் உரிமையாளருக்கு திரும்ப அளிக்கப்படும்.

இஸ்ரவேலரின் பண்டிகைகள்:

பஸ்கா பண்டிகையின் போது, ஆட்டுக்குட்டியானது மாலைப்பொழுதில் 3 லிருந்து 6 மணிக்குள் அடிக்கப்பட்டு, இப்பண்டிகையானது ஆசரிக்கப்படும், இந்த நேரம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் மரித்த நேரமாய் இருப்பது குறிப்பிடத்தக்கது. கர்த்தரின் ஊழிய நாட்களும் மூன்று ஆண்டுகளாய் கணக்கிடப்படுகிறது, இதே எண்ணிக்கையானது யூதர்கள் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியை குறித்தும் கணக்கிடுகிறவர்களாய் இருக்கின்றனர். கர்த்தாராகிய இயேசுக்கிறிஸ்து இறுதி பவனி எருசேலேமிற்குள் செல்லும் போது நிசான் மாதம் 10 ம் தேதியாய் இருந்தது, அவரது மரணம் அம்மாதம் 14 ம் தேதியில் நிகழ்ந்தது. அன்றைய தினத்தில் சிலுவையில் மரித்த "ஆட்டுக்குட்டியை" அகற்றிவிட்டு, அவர்கள் பஸ்காவின் ஆட்டுக்குட்டியை அடிக்கலானார்கள், இவ்வாட்டுக்குட்டி கிறிஸ்துவை பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பண்டிகை மோசே முதல் சிலுவை வரை 1500 ஆண்டுகாலங்கள் திரும்பத் திரும்ப நிகழ்ந்து வந்தன. அவர்கள் இவ்வாறுச் சித்திரிக்கப்படுவதை நம்பினர், ஆனால் அதன் உண்மைத்தன்மையை புறிந்து கொள்ள இயலாமல் போயினர்.

பஸ்காவின் போது, இரண்டு புளிப்பில்லா அப்பங்கள் கர்த்தருக்கு முன்பாக அசைவாட்டப்படும். பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளும், ஒரு இளங்காளை, இரண்டு செம்மறியாட்டுக்கடாவும் கர்த்தருக்காய் பலிசெலுத்தப்படும். இங்கு சிலுவையினால் ஏற்பட்ட விளைவை நாம் பார்க்கிறோம். இது ஒவ்வொரு ஞாயிறன்றும் நிகழும் நிகழ்ச்சியாய் இருக்கிறது, ஞாயிறன்று சபைதுவங்குகிறது என்பது தெளிவாய் இருந்தது, இந்நாள் கர்த்தர்

உயிர்த்தெழுந்த நாளாகவும், வார்த்தின் முதல் நாளாகவுமாய் இருக்கிறது. இது ஞாயிறன்று சபை கூடுவதற்குறிய அர்த்தத்தை விளங்கச்செய்கிறதாய் இருக்கிறது. சபையானது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் மீது கட்டப்பட்டதாய் இருக்கிறது, மற்றும் சபையானது அணிவகுத்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் முன்னேறிச் செல்கிறதாய் இருக்கிறது.

பஸ்கா பண்டிகைக்கும் எக்காளப்பண்டிகைக்கும் இடையில் ஒரு பெரிய இடைவெளி காணப்பட்டு, தேவனது திட்டத்தின் படி, அதற்குள் சபையானது பொருத்தப்படுகிறதாய் இருக்கிறது. எல்லாப் பண்டிகைகளும், பெந்தெகொஸ்தே பண்டிகை முதலாக எழுத்தின்படியே நிறைவேறி முடிந்து விட்டன, இரண்டாவது பிரிவான எக்காளம் முதற்கொண்டு இன்னும் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது.

எக்காளம் எப்பொழுதும் ஜனங்களை ஒன்று கூட்டிச் சேர்க்கிறதாய் இருக்கிறது. யூதர்கள் 1900 ஆண்டுகாலங்கள் சிதறிடிக்கப்பட்டு இருந்தனர். சிலர் கூற்றின் படி எக்காளப்பண்டிகையின் நிறைவேறுதல் நடந்தாயிற்று என்கின்றனர, ஆனால் அந்த சந்தர்ப்பத்தில் எக்காளமானது ஊதப்படுவது காணப்பட வில்லை. நாம் எசேக்கியேலில் உலர்ந்த எலும்புகள் ஒன்று சேருவதை காண்கிறோம், முதலில் அவிசுவாசத்துடன் எலும்புகள் மீது சதை உண்டானது, பின்னர் சுவாசம் அதற்குள் பிரவேசித்தது அல்லது ஆவிக்குரிய வாழ்வு அதற்குள் பிரவேசித்து, அது பலத்த சேனையாய் இருக்கிறது. இது ஒரு வேளை 1,44,000 யூதர்கள் வெளிப்படுத்தல் 7 ல் கூறப்பட்டவர்களாய் இருப்பதை பிரதிபலிக்கக்கூடுமோ?

இஸ்ரவேலில் இருக்கும் யூதர்களைவிட இன்னும் நியூயார்க் பட்டணத்தில் அநேக யூதர்கள் இருக்கின்றனர். சுவாசமானது அவர்களுக்குள் உபத்திரவக்காலத்தில் கடந்து வருகிறதாய் இருக்கும். இது அவர்கள் திரும்ப சேர்க்கப்படுவது மட்டுமல்லாது தேசத்தின் சுவாச மீட்புமாய் இருக்கிறது. ஏசாயா 11:11-12, யோவேல் 2:15-21, மத்தேயு 24:31 மற்றும் சகரியா 12:10-13. சகரியா வேதபகுதியில் யூதர்கள் தாங்கள் உருவக் குத்தினவரை நோக்கிப்பார்ப்பார்கள். யூதர்கள் முறையாக கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருப்பார்கள்.

யூத நாள் காட்டியில் பிராயச்சித்தப் பண்டிகையானது, மிகமுக்கியமான பரிசுத்த நாளாய் விளங்கி வருகிறது. இந்தப் பண்டிகையில் அவர்கள் தங்களை தேவனுக்கு முன்பாக பரிசோதித்து பார்க்கும் நாளாய் இருந்து வந்தது. இது இஸ்ரவேல் தேசமானது கர்த்தரை ஏற்றுக்கொள்ளுவது சம்பந்தமாய் இருக்கிறது. இது மேசியாவின் இரண்டாம் வருகையுடன் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது.

கூடாரப்பண்டிகையான இறுதிப்பண்டிகை, ஆயிரம் வருட ஆளுகையைக் குறித்துப் பேசுகிறது, இது யாத்திராகமச் சந்ததியினருக்கு, அக்காலத்தில் கர்த்தர் அளித்த கிருபையின் கொடுகைகளை மட்டுமல்லாது, தேவன் மறுபடியும் யூதர்களை அவர்களது வாக்குத்தத்த தேசத்தில் கொண்டுவந்து

மீண்டு அப்படிப்பட்ட கொடுகைகளினால் அவர்களை ஆசீர்வதிக்கப்போவதை இப்பண்டிகையானது நினைப்பூட்டுவதாய் இருக்கிறது. இது அவர்களுக்கு சமாதானமும் செளிப்புமுள்ள காலம் எனக்கூறுகிறதாய் இருக்கிறது.

இவ்விறுதிப் பண்டிகையானது, புளிப்பில்லா அப்பப்பண்டிகையாய் ஏழுநாட்கள் ஆசரிக்கப்படு கிறதாய் இருக்கிறது. இவ்விரண்டும் கர்த்தரின் முதல் மற்றும் இரண்டாம் வருகையின் போது, அவரது பூரணமான பணி நிறைவேற்ற பட்டதையும், நிறைவேற்றப்படப் போகிறதையும் குறித்துப் பேசுகிறது. கர்த்தர் ஒன்றைச் செய்யும் போது அவர் எப்பொழுதும் பூரணமாகவே செய்கிறவராய் இருக்கிறார்.

பண்டிகைகளை நாம் காணும்போது, அவற்றை யுகங்கள் மற்றும் உடன்படிக்கையின் வெளிச்சத்தில் காண்பது மிகவும் அவசியம். பண்டிகைகளில் முதல் நான்கும் நிறைவேறி தீர்ந்து இருக்கிறது, இன்னும் இறுதி மூன்று பண்டிகைகள் நிறைவேற வேண்டியனவையாய் இருக்கின்றன. ஆயிரவருட ஆழுகை முந்தியது என்பதைக் கண்ணோட்டமாய் கொண்டவர்கள், பண்டிகைகளை வேத வசனப்படி, எழுத்தின்படியே அவைகள் ஆசரிக்கப்பட்டவைகளாய் இருக்கின்றன எனக் கண்ணோக்குகின்றனர். கிறிஸ்தவர்களாகிய நாம் கர்த்தரின் வார்த்தைகளை மிகக் கவனமாய் எடுத்துக்கொண்டு, எந்த அளவு நாம் கடைசிக் காலத்தில் வாழ்கிறோம் என்பதனை அனுபவப்பூர்வமாய் அறிந்து உணர்ந்து அதற்கேற்ப அனுபவப்பூர்வமாய் வாழவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இஸ்ரவேலருக்கும் அரேபியர்களுக்குமுள்ள முறண்பாடு இறுதிவரை நீடிக்கிறதாய் இருக்கிறது. இறுதி யுத்தமானது இஸ்ரவேலைச் சுற்றிலும், அர்மெகதோன் யுத்தத்தின் போது முற்றிகையிடப்படும். இது வட ஆபிரிக்கா முற்றுகையிலிருந்து துவங்குகிறதாய் இருக்கிறது. மேற்கத்திய இராணுவம், வட தேச இராஜக்களுக்குரிய உதவியை நிறுத்திவிட்டு அவர்களை அர்மெகதோனுக்கு நேராக திரும்பும்படியான விளைவை உண்டாக்கும். இந்த யுத்தம் கிழக்கத்திய இராணுவத்துடன் இணைந்து, மத்திய கிழக்கு தேசத்தின் ஊடாக செல்கிறதாய் இருக்கும். ஆப்பிரிக்காவில், எய்ட்ஸ் ன் விளைவுகள், மத்திய ஆப்பிரிக்காவை ஜனத்தொகையற்றதாக்கி வருகிறது என கணக்கெடுப்பின் படி விளங்கிவருகிறது, தொடர்ந்து ரஷ்யர்களும் இழுக்கப்பட்டு வருகின்றனர். காலம் நமக்கு குறுகிக்கொண்டே வருகிறதாய் இருக்கிறது, நாம் பயிற்சி அளிப்பது போதிப்பதும் மிகவும் அவசியாமாய் வருகிறது.

உபதேசங்கள்:

இஸ்ரவேலரின் பண்டிகைகள்

1. யூத நாள்காட்டியில், ஏழு பண்டிகைகள் யூதர்கள் ஆசரிக்கும்படி தேவனால் நியமிக்கப்பட்டுள்ளது. இவைகள் மற்ற விசுவாசிகளுக்கும் அடையாளங்களாய் இருக்கின்றன.

2. பண்டிகைகளின் விவரம்:

பஸ்கா பண்டிகை
புளிப்பில்லா அப்பப்பண்டிகை
முதற்பலன் சேர்ப்பு பண்டிகை
பெந்தெகொஸ்தே பண்டிகை
எக்காளப் பண்டிகை
பிராயச்சித்தப்பண்டிகை
கூடாரப்பண்டிகை

3. பஸ்காப்பண்டிகை (உபாகமம்16:1-8, லேவியராகமம்23:5)
சரித்திரம்:

இப்பண்டிகை இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து, விடுபட்ட அன்று ராத்திரியில் கர்த்தருடைய தூதனானவர் எகிப்தை கடந்து சென்று அவர்களின் தலைச்சன்கள் அனைத்தையும் சங்கரித்தார், அன்று இரவே இஸ்ரவேலர் மோசேயின் கீழ் எகிப்தைவிட்டு வெளியேறினர்.

b) ஒரு வயது நிரம்பிய பழுதற்ற ஆண் ஆட்டுக்குட்டியை நிசான் மாதம் 14 ம் நாளில் அடிக்கப்படுவதற்கு, நான்கு நாட்கள் முன்னதாகவே கொண்டு வரப்படவேண்டும். அதன் எலும்புகள் ஒன்றும் முறிக்கப்படாவண்ணம் மிக கவனத்துடன் அதை அடித்து புசிக்கவேண்டும். (யாத்திராகமம் 12:1-6)

c) ஆட்டுக்குட்டியை அடித்து அதை நெருப்பில் சுட்டு, அதை கசப்பான கீரையுடன் புசிக்கவேண்டும், அதில் விடியற்காலம் வரைக்கும் எதுவும் மீந்திருக்கக்கூடாது.
(யாத்திராகமம் 12:7-10).

d)பஸ்கா பண்டிகையின் ஆரம்பத்தில், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தை கதவு சட்டத்திலும், ஜன்னலின் சட்டத்திலும் பூச வேண்டும், அப்படி பூசப்பட்ட வீடு எகிப்தின் கடைசி வாதைக்கு உட்படாது. (யாத்திராகமம் 12:21-28). எகிப்தின் மீது வந்த வாதைகள் அனைத்தும் அவர்கள் தேவர்கள் மீது வந்த வாதைகள் ஆகும்.

e) பஸ்கா பண்டிகை, ஆபிரகாமுக்கு அளித்த வாக்குத்தத்தின்படி, வருடாந்திரப்பண்டிகையாய் இருக்கிறது.

நிறைவேறுதல்:

பலிக்கான ஆட்டுக்குட்டி கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவைக் காட்டுகிறது. (1 கொரிந்தியர் 5:7).

கிறிஸ்து நிசான் மாதம் 14 ம் தேதி சிலுவையில் தொங்கி மரித்தார், அவர் தான் மரிப்பதற்கு நான்கு தினங்களுக்கு முன், நிசான் மாதம் 10 ம் தேதிக்கு முன்னரே எருசலேமில் பிரவேசித்தார்.

ரோம சிப்பாய்கள் கள்ளரின் கால் எலும்பை முறிக்கும்போது, இயேசு மரித்து இருந்தார், ஆகையால் அவர் கால் எலும்பை அவர்கள் முறிக்கவில்லை. (யோவான் 19:32, 33).
சுடப்பட்ட ஆட்டுக்குட்டி - நியாயத்தீர்ப்பையும், கசப்பான கீரை, - பாவம் அல்லது தோல்வி இவைகளை பிரதிபலிக்கிறது.
ஆட்டுக்குட்டியை புசிப்பது - இயேசுக்கிறிஸ்துவின் கிரியையில் விசுவாசம் வைப்பதைக்காட்டுகிறது, (கர்த்தருடைய மேஜையில் புசித்து பானம் பண்ணுவதை காட்டுகிறது)
கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசத்தினால் தேவனின் இறுதி நியாயத்தீர்ப்பில் நாம் பாதுகாக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

தற்பொழுது:
ஒவ்வொருமுறையும் கர்த்தருடைய மேஜையில் பங்கு பெறும்பொழுது, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் நிறைவேற்றிய கிரியைகளை பின்னிட்டுப் பார்க்கிறோம். (1 கொரிந்தியர் 11:23-26).
இது விசுவாசியின் இரட்சிப்புக்கு முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

4. புளிப்பில்லா அப்பப்பண்டிகை: (லேவியராகமம்23:6-8).
நிசான் மாதம் 15 ம் தேதி தொடங்கி ஏழு நாட்கள் இப்பண்டிகை ஆசரிக்கப்படுகிறது, இது தேவனுடைய பராமரிப்பு, ஐக்கியம் இவைகளை வருணிக்கிறதாய் இருக்கிறது.
எகிப்தைவிட்டு துரிதமாய் புறப்பட்டகாரணத்தால் அப்பம் புளிக்கவில்லை. அதனுடன் பருகும் திராட்சை ரசமும் கூட புளிப்பற்றதும் ஆல்ககால் (alcohol)சேர்க்கப்படாததுமாய் இருந்தது. இப்பண்டிகையின் போது திராட்சைரசம் கொதிக்கவைத்து பருகப்பட்டது. இது கல்தேயரின் பட்டாளத்திற்கு அளிக்கப்பட்ட கட்டளைகள் மூலம், புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் போது யூதர்களுக்கு போதையூட்டப்பட்ட கல்தேயரின் பீர் பரிமாறப்பட்டால் யூதர்கள் கலகம் செய்வார்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,
புளித்தமா வேதாகமத்தில் தீங்கு மற்றும் துர் உபதேசதத்தைக்குறிக்கிறது, தேவன் புளித்த மாவை அகற்றுங்கள் என்பது தீங்கை உங்கள் நடுவிலிருந்து அகற்றுங்கள் எனப்பொருள்படுகிறது.
வேதாகமத்தில் பல நிலையில் புளித்தமா குறிப்பிடப்பட்டுள்ளது:
சதுசேயரின் புளித்தமா - மனுஷீக நிலையில் காண்பது (மத்தேயு16:6)
பரிசேயரின் புளித்தமா - சடங்காச்சாரம் (மாற்கு8:15)
ஏரோதின் புளித்தமா - உலகப்பிரகாரம் (மற்கு8:15)
கொரிந்தியரின் புளித்தமா - ஒழுக்க சீர்கேடு (I கொரிந்தியர் 5:6, 7)
கலாத்தியரின் புளித்தமா - சட்ட ஒழுங்கை கண்டிப்புடன் கைக்கொள்ளுதல் (கலாத்தியர்5:9).
e) புளிப்பற்ற அப்பம் கிறிஸ்துவின் பூரணத்தைக்காட்டுகிறது. (லேவியராகமம்2:11)

f)இது ஒரு விசுவாசியின் கிறிஸ்தவ நடக்கையைக்காட்டுகிறது.
g) புளிப்பில்லா அப்பம் சுடப்படும் போது அதில் வரிகள் காணப்படும் மற்றும் துவாரங்கள் காணப்படும். அவரது தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5)
அவரைக்குத்தினவர்கள் அவரை நோக்கிப்பார்ப்பார்கள். (சகரியா12:10)

5. முதற்பலன்கள் (லேவியராகமம்23:9-14).
இப்பண்டிகை எப்பொழுதும் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் இடம்பெறுகிறது. நிசான் மாதம் 17 ம் தேதியில் இப்பண்டிகை கொண்டாடப்படுகிறது.
இப்பண்டிகை கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை சித்தரிக்கிறது. மற்றும் இப்பண்டிகை புளிப்பில்லா அப்பப்பண்டிகையின் மத்தியில் இடம் பெறுகிறது.
நித்திரையடைந்தவர்களில் முதற்பலனாக கிறிஸ்து இருக்கிறார். (1 கொரிந்தியர் 15:20).
பஸ்கா பண்டிகையின்போது மரித்த இயேசுக்கிறிஸ்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார்.
எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறின இஸ்ரவேலர்கள் மூன்றாம் நாளில் சிவந்த சமுத்திரத்தை கடந்தனர்.
நோவாவின் பேழை அரராத் மலையில் இதே நாளில் அமர்ந்தது. (ஆதி. 8:4).
இது விசுவாசியின் உயித்தெழும் சரீரத்தை பிரதிபலிக்கிறது.

6. பெந்தெகொஸ்தே பண்டிகை: (லேவியராகமம்23:15-21)
பென்டா (Pente) - ஐம்பது - இப்பண்டிகை எப்பொழுதும் வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில் நிகழ்கின்றது, முதற்பலன்களை சேர்க்கும் பண்டிகையிலிருந்து ஐம்பதாவது நாளில் இப்பண்டிகை ஆசரிக்கப்படுகிறது, பொதுவாக இப்பண்டிகை மே அல்லது ஜூன் மாதத்தில் வருகிறது. (லேவி.23:15)
கி.பி. 70 ல் சரித்திரபூர்வமாய் யூதர்கள் இந்நாளில் சிதறடிக்கப்பட்டனர். இதன் பின்னர் அவர்கள் இப்பண்டிகையை ஆசரிக்கமுடியாமல் வெகுகாலம் தங்கள் தேசத்திற்குப் புறம்பே இருந்தனர்.
கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட வருஷத்தில், கொண்டாடப்பட்ட பெந்தெகொஸ்தே பண்டிகையின்போது, எருசலேமில், பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்துடன் சபையுகம் ஆரம்பமானது. (அப்போஸ்தலர்2:1-4).
பெந்தெகொஸ்தே பண்டிகை நாளில் 3,000 பேர் மறுபடி பிறந்தனர், நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டபோது 3,000 பேர் கொல்லப்பட்டனர்.

7. எக்காளப்பண்டிகை: (லேவியராகமம்23:23, 24)

இப்பண்டிகை செப்டம்பர் மாதத்தில் இடம்பெறுகிறது. எக்காளம் ஊதப்படுவது ராஜா வருவதை குறிக்கிறது. இது யூதர்களின் புதிய வருடப்பிறப்பின் நாள்.
இது சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளில் இயேசுக்கிறிஸ்து தனது சபைக்காய் திரும்ப வருவதைக் குறிக்கிறது. இது யூதர்களுடன் தேவன் திரும்ப உறவுகொள்ளும் நாள் என யூதர்கள் உணருவார்கள்.

8. பிராயச்சித்தப்பண்டிகை: (லேவியராகமம்23:26-32).
எக்காளப்பண்டிகைக்குப் பத்து தினங்களுக்குப் பின்னர், இப்பண்டிகை இடம்பெறுகிறது. விசுவாசிக்கும் யூதர்கள் மட்டும் ஆயிரவருட ஆழுகையில், பிரவேசிப்பார்கள் என இது பிரதிபலித்துக்காட்டுகிறது.
தானியேல் 12:11&12 மற்றும் இணையான வேதபகுதிகளின் கருத்துக்கணிப்பின் படி, இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் 45 நாட்கள் நியாயத்தீர்ப்பு நடைபெறும். இக்காலப்பகுதியில், கோதுமை மற்றும் பதர், செம்மரியாடு மற்றும் வெள்ளாடு வேறுபிரிப்பு இடம் பெறும். அவிசுவாசிகள் அக்கினி ஞானஸ்நானம் பெறுவர். (மத்தேயு3:11,12.). விசுவாசிகள் ஆயிரவருட ஆழுகையில் பிரவேசிப்பர்.
இப்பண்டிகை நாளில் பிரதாண ஆசாரியன் கையிலிலுள்ள பாத்திரத்தில் இரத்தத்துடன், மகா பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பான். தனக்காக ஒருமுறையும், தேசத்திற்காக ஒரு முறையும் பிரவேசிப்பான். (எபிரெயர்9:6-7).அவனது பிரவேசம் கிறிஸ்துவின் தியாக பலியை பிரதிபளிக்கிறது.
இப் பண்டிகையின் நிறைவேறுதல் கிறிஸ்துவின தியாகபலியாகும். பாவமற்ற பழுதில்லா பலியாக ஒரேமுறை கிறிஸ்து சர்வ லோகத்தின் பாவத்திற்கான காணிக்கையாக தன்னை ஒப்புக்கொடுத்தார். (எபிரெயர்9:11-14).
(On the feast of Atonement red wool, the Atonement Lot, was tied to the temple pillar. After the blood was spilt the lot turned white until the time of the cross. Afterwards it stayed red. This sign showed Christ's once and for all sacrifice)

9. கூடாரப்பண்டிகை: (லேவியராகமம்23:33-36).
இப்பண்டிகை பிராயச்சித்தப்பண்டிகை முடிந்த ஐந்து நாட்களுக்குப் பின்னர் இடம்பெறும். ஒரு வாரமளவும் கொண்டாடப்படும். இது இயேசுக்கிறிஸ்துவின் ஆயிரவருட ஆழுகையை பிரதிபலிக்கிறது. பூரணமான நன்மைகளும், சூழலும் அளிக்கப்படும். (உபாகமம் 16:13-15, ரோமர்8:19-22).

10. தேவனின் பூரணமான நன்மைகளை அருளும் இருபண்டிகைகள் ஆர்வமூட்டக்கூடியதாய் இருக்கிறது. - புளிப்பில்ல அப்பப்பண்டிகை, கூடாரப்பண்டிகை - மற்றப் பண்டிகைகள் யாவும் ஒரே நாளும், இப்பண்டிகள் ஏழு நாளும் ஆசரிக்கப்படுகிறது. இவைகள், சிலுவையில் அறையப்படுதல், உயிர்த்தெழுதல், அல்லது சபை எடுத்துக்கொள்ளப்படுவது போன்றவற்றை குறிக்கிறது.

11. பண்டிககளின் சுருக்கம்:

பஸ்கா பண்டிகை: கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட பஸ்கா தினத்தில் நிறைவேறியது கி.பி. 32.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை: புளிப்பில்லா அப்பப்பண்டிகைநாளில் கிறிஸ்து அடக்கம்பண்ணப்பட்டபோது நிறைவேறியது கி.பி. 32

முதற்பலனை சேர்க்கும் பண்டிகை: முதற் பலனை சேர்க்கும் நாளில் கிறிஸ்து உயிர்த்தெழுந்த போது நிறைவேறியது. கி.பி 32.

பெந்தெகொஸ்தே பண்டிகை: யூதர்களின் யுகம் நிறைவடைந்த பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. கி.பி 32.

எக்காளப்பண்டிகை : சபை எடுத்துக்கொள்ளப்படும்போது நிறைவேறும்.

பிராயச்சித்தப்பண்டிகை: கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது நிறைவேறும்.

கூடாரப்பண்டிகை: கிறிஸ்துவின் ஆயிரவருட ஆழுகையின் போது நிறைவேறும்.

12. பவுல் முதல் நான்கு பண்டிகைகளும் எட்டு வாரகாலங்களில் கி.பி. 32 ல் எழுத்தின்படி நிறைவேறியதை கண்டவராய் இருக்கிறார். "சபை எடுத்துக்கொள்ளப்படும், சந்ததியில்" மற்ற பண்டிகளும் நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை. (1 தெசலோனிக்கேயர்4:13-18, 2 தெசலோனிக்கேயர் 2:1).

<u>பாடம் 33 -- எண்ணாகமும் உபாகமும்</u>

எண்ணாகம புஸ்தகம், வனாந்திரம் முதல் யோர்தான் வரை உள்ள நாற்பது வருடங்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிந்த காலத்தை உள்ளடக்கியுள்ளது. யாத்திராகமம் லேவியருடன் சென்ற பயணத்தின் விளக்கவுரையாக கருதப்படுகிறது, எண்ணாகமும் இதைப்போன்றே உபாகமத்துடன் பயணம் செய்து விளக்க உரையாக இருக்கிறது, மற்றும் யோசுவா வாக்குத்தத்த தேசத்திற்குள் சென்ற விவரம் விவரிக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து நியாதிபதிகள் 450 ஆண்டுகள் இஸ்ரவேலை வாக்குத்தத்த தேசத்தில் நியாயம் விசாரித்து வந்தனர்.

எண்ணாகம புஸ்தகம் ஜனத்தொகை கணக்கிடப்படும் புஸ்தகமாய் இருக்கிறது. யுத்த சன்னதரானவர்கள் எண்ணப்படவில்லை, அவர்கள் எகிப்தில் அடிமைகளாய் இருந்தபோது, தேவன் அவர்களை பாதுகாத்துவந்தார். அவர்கள் எகிப்தை விட்டு வெளியேறி ஒரு தேசமாய் ஸ்தாபிக்கப்பட்ட போது, தங்களை பாதுகாத்துக்கொள்ளும் கடமை அவர்களுக்கு இருந்தது. மோசே யுத்தமனிதரை இலக்கம் பார்த்து, ஒழுங்குபடித்தினார்.

தேவன் ஆதரவற்றவர்களை பாதுகாத்து, பாதுகாப்பு அவசியப்படுவோரை பெலப்படுத்தினார். வெற்றி அவசியமான நேரங்களில், தேவன் அருளும் வெற்றியை அவர்கள் நின்று காணக்கூடியவர்களாய் இருந்தனர். ஒரு தகப்பன் தனது மனைவி பிள்ளகளுக்காய், யுத்தம் செய்து மரிக்க ஆயத்தமுள்ளவனாய் இருந்தான். இப்படிப்பட்ட அடிப்படை கோட்பாடுகளையே இங்கு நாம் காண்கிறோம்.

மெக் கீ [Mc Gee] எண்ணாகமத்தை இவ்வாறு அழைக்கிறார், [Walking, Wandering, Working, Warring, Witnessing and Worshipping.] நடத்தல், அலைந்து திரிதல், கிரியை செய்தல், எச்சரிக்கப்படுதல், சாட்சியாய் இருத்தல், மற்றும் ஆராதித்தல். எண்ணாகம புஸ்தகம் அலைந்து திரியும் மக்களுக்கு ஒரு நல்ல புஸ்தகமாய் இருக்கிறது, நாமும் கூட இத்தேசத்தில் யாத்திரை செய்கிறவர்களாய் இருக்கிறோம், நித்தியமான வாசஸ்தலமின்றி தவிக்கிறவர்களாய் காணப்படுகிறோம். உங்கள் ஜீவனானது கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்து இருக்கிறது. இங்கு ஜனங்களை பரலோகத்தில் இருப்பவர்களாய் பார்க்கிறீர்கள், இருப்பினும் பூமியின் மீது எல்லாவித காரியங்கள் ஊடாய் கடந்து செல்கிறவர்களாய் இருக்கிறார்கள் மட்டுமல்லாது தோல்வியையும் தழுவிக்கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். எவ்வாறு அழுத்தத்திற்குள் ஜீவிப்பது என்பது இங்கு காணப்படுகிறது.
இப்புஸ்தகத்தின் பிரச்சனை கிருபையாய் இருக்கிறது. தேவன் விசுவாசத்தை அளிக்கிறவராய் இருக்கிறார், தேவனை நம்ப முடியும். தேவனுக்காய் நீங்கள் பணிசெய்து, அவரது வார்த்தையை உங்கள் வாழ்வில் கைக்கொள்ள எதிர்பார்க்கிறார்.

இஸ்ரவேல் தேவனது கிருபை, விசுவாசம் மற்றும் கிரியைகளை மறந்து போனது, இப்புஸ்தகத்தில் தேசத்தில் நிகழ்ந்த பெரும் நிகழ்ச்சியாய் குறிப்பிடப்படுகிறது. புதிய ஏற்பாட்டின் வியாக்கியான புஸ்தகமாய் எண்ணாகம புஸ்தகத்தில் இருப்பது எபிரெயர் 3 மற்றும் 4 அதிகாரங்கள் ஆகும், இவ்வதிகாரங்களை சபையின் சூழலில் போதிக்கும் போது முன்னதாகவே படிக்க வேண்டிய பாடங்களாய் இருக்கிறது.

தேக்க நிலை:

முதல் ஜனத்தொகை கணக்கெடுப்பில், 6,03,550 யுத்த சன்னதர்கள் கணக்கிடப்பட்டு வனாந்திரத்தில் பிரவேசித்தனர். அவர்கள் யோர்தானைக் கடந்து, வாக்குத்தத்த தேசத்திற்குள் கால் மிதித்த போது அதாவது 40 ஆண்டுகளுக்கு பின்னர் உள்ள கணக்கெடுப்பின் போது 6,01,730 யுத்த வீரர்களாக கணக்கிடப்பட்டனர். 2,000 போர் வீரர்கள் வழியில் இழந்து போகப்பட்டனர். இது அவர்கள் ஒரு தேசமாய் கடந்த 40 ஆண்டுகளில் வளராதிருந்தனர் எனக்காட்டுகிறதாய் இருக்கிறது. அவர்கள் வளர்ச்சிக்கு தடையான காரியம், அவர்கள் தேவனது நியாத்தீர்ப்பிற்கு கீழாய் இருந்தனர், அவர்கள் தோல்வியை தழுவினவர்களாய் இருந்தனர். அவர்கள் 11 நாட்களில் நடந்து முடிக்க வேண்டிய பிரயாணத்தை 40 ஆண்டுகள் எடுத்துக்கொண்டனர். இவ்வாறு அதிக காலம் எடுத்துக்கொண்டதற்கான

காரணம், அவர்கள் அலைந்து திரிகிறவர்களாய் இருந்தனர், காரணம் அவர்களது வாழ்வில் முதிர்ச்சி அடையும் முன்னர், சில காரியங்கள் சரிசெய்யப்பட வேண்டி அவசியம் இருந்தது.

இது நமது வாழ்வில் சோகத்தை தருகிறதாய் இருக்கிறது. மிகவிரைவாக கர்த்தர் நம்முடன் அதிகமானவற்றை செய்ய இயலும், ஆனால் நாம் அலைந்து திரிந்து சுற்றிலும் உள்ள காரியங்களை கற்றுக்கொண்டு வருகிறோம். நாம் வாழும்படி குறுகிய காலமே இருக்கிறது, இதினிமித்தம் நமது வாழ்வின் அதிகமான காலத்தை கிறிஸ்தவர்களாய் வாழ செலவிட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இப்படிப்பட்ட பாடங்களை கற்றுக்கொள்ள நீண்ட காலத்தை எடுத்துக்கொள்ளக் கூடாது. நாம் கற்றுக்கொள்வதை துரிதப்படுத்த வேண்டும், ஆவியில் நடந்து கொண்டு, வேத வசனங்களை புறிந்துகொள்ள வேண்டும்.

ஸ்தாபன அமைப்பு:

இது கூட புஸ்தகத்தின் ஒழுங்காய் இருக்கிறது. தேவன் ஸ்தாபன அமைப்புள்ளவராய் இருக்கிறார். அவர் ஒரு திட்டத்தினை பெற்று இருக்கிறார். அவர் உங்கள் வாழ்க்கை ஒரு ஸ்தாபன அமைப்பாக விரும்புகிறார். கால அட்டவணையை சார்ந்து ஜீவிப்பதன் முக்கியத்துவம் இங்கு காணப்படுகிறது. இப்படிப்பட்ட ஜனங்கள் ஸ்தாபன அமைப்பை கொண்டவர்களாய் இருந்தனர், நீங்கள் அதிகமான ஜனங்களைக் கொண்டவர்களாய் இருப்பீர்கள என்றால், ஸ்தாப அமைப்பை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள், இல்லையெனில் நீங்கள் வியாதிபட்டு, குழுவின் மீது அழிவை உங்களது நீண்ட காலம் அலைந்து திரிவதில் காண நேரிடும்.

ஒழுங்கு படுத்தப்பட்ட அணுகுமுறை தேவன் விரும்புவதாய் இருக்கிறது, இது தேவனது வார்த்தையை சார்ந்து சுலபமாய் பகுதி பகுதியாய் ஜனங்கள் அந்த வழியில் பயிற்றுவிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. எண்ணாகமம் ஒரு நம்பிக்கையின் புஸ்தகமாயும் இருக்கிறது, காரணம் முடிவாக அவர்கள் யோர்தானுக்கு இறங்கி அதைக் கடந்தும் இருக்கிறார்கள். அவர்கள் உபாகமத்தில் முன் வரிசையை அடைந்து இருக்கிறார்கள், அவர்கள் யோசுவாவில் கடந்து செல்கிறவர்களாய் இருக்கின்றனர்.

உபாகமம்:

உபாகமம் "இப்படிப்பட்ட வார்த்தைகள்" என அழைக்கப்படுகின்றன. இதன் பெயர் நியாயப்பிரமாணத்தை இரண்டாம் முறை வாசித்தல் என்பதிலிருந்து எடுக்கப்பட்டு, கிரேக்க மொழி பெயர்ப்பின் போது இதற்கு 'டெயூட்ரானமி' எனப் பெயரிடப் பட்டது. நியாயப்பிரமாணம் முதலாவது வாசிக்கப்பட்டது சீனாய் மலையில், இரண்டாவது வாசிக்கப்பட்டது மோவாபில், யாத்திராகமம் உங்களை லேவிய கட்டளைகளுடன் சீனாய்

மலைக்கு எடுத்துச் செல்கிறது, அதே சமயம் எண்ணாகமம் உபாகம கட்டளைகளுடன் மோவாபிற்கு எடுத்துச் செல்கிறது. லேவியராகமம் நியாயப்பிரமாணத்தை கிருபை எனக் காட்டுக்கிறது, அதே சமயம் எண்ணாகமம் அதை அன்பு எனக் காட்டுகிறது.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தனது ஊழியத்தில் மேற்கோள் காட்டும் பகுதிகள் உபாகம புஸ்தகத்திலிருந்து வருகிறதாய் இருக்கிறது. அவகள் நேரிடையான மேற்கோள்களாகவும் அல்லது இப்புஸ்தகத்தின் எதிரொலியாகவும் இருக்கிறது.

இந்த புஸ்தகம் கடந்த காலத்தில் நிகழந்த நல்லது மற்றும் கெட்டது போன்றவற்றை நினைவுகூற வலியுறுத்துகிறதாய் இருக்கிறது, கடந்தகாலத்தில் கற்றுக்கொண்டவற்றிலிருந்து அதே தவறினை மீண்டும் செய்யாதிருக்க அறிவுறுத்தப்பட்டது. கிறிஸ்தவர்களாய் இருக்கும் நாம் நமது தவறுகளில் இருந்து மட்டுமல்லாது, வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்ட தவறுகளிலிருந்தும் அரிய பாடங்களை கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இரண்டாவதாய் உபாகம புஸ்தகம் வேதாகம உபதேசங்களை கற்றுக்கொள்ளவேண்டிய அவசியத்தையும் அதை புறிந்து கொள்வதன் அவசியத்தையும் நமக்கு போதிக்கிறதாய் இருக்கிறது.

எல்லா நற்போதனைகளும் வீட்டிலிருந்தே வருகிறதாய் இருக்கிறது என்பதை உபாகமம் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. குடும்ப வேத பாடத்தின் அவசியத்தையும் இப்புஸ்தகம் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது, இது குடும்பத்தில் செயல்படுத்தப் படுமேயானால் ஞாயிறு பள்ளியின் அவசியம் இல்லாது போகும். பெற்றோர்கள் இதை குடும்பத்தில் நிறைவேற்ற தவறுவதால் சபையில் ஞாயிறு பள்ளியின் அவசியம் தேவைப்படுகிறது. இது எப்படியிருப்பினும், பெற்றோர்கள் தங்களது வேலையை செய்யத் தவறுவதினால் இது அவசியம் தேவைப்படுவதாய் இருக்கிறது. இந்த இடம் யுத்தத்திற்கான இறுதி ஆலோசனை அளிக்கும் இடமாய் இருக்கிறது, காரணம் இராணுவமானது செயல்பட துவங்கி, தனது முதலாவது யுத்தத்தை எரிகோவின் மீது தொடுக்க தயார் நிலையில் உள்ளது. ஒரு போதகராய் அல்லது சபைத்தலைவராய், தங்களது மக்களை யுத்தத்திற்காய் ஆயத்தப்படுத்தி, ஒவ்வொரு நாளும் தேவதூதர்களின் முறண்பாடுகளுடன் யுத்தம் செய்யவைக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். ஊழியரின் வேலை என்னவெனில் யுத்த வீரர்களுக்கு பயிற்சி அளித்து காணப்படாத யுத்தத்தை செய்யவைப்பது ஆகும். யோசுவா கடைசி அதிகாரத்தை எழுதும் போது, அதை யோசுவா புஸ்தகத்தின் முகவுரையாய் எழுதினார்.

உபாகமம் 30

உபாகமம் 30 அதிகாரம் வனாந்திரத்தில் உள்ள பாடசாலை என அழைக்கப்படுகிறது. உபாகமம் 29:24-26 ஐ நாம் காண வேண்டிய அவசியமாய் இருக்கிறது, அது கூறுவது என்னவெனில், இஸ்ரவேல்

தேசத்திற்குள் நுழைவதற்கு முன்னரே, அவர்கள் அத்தேசத்திலிருந்து வெளியே எறியப்படுவர் எனக்கூறுகிறது. மோசே அவர்களுக்கு கூறும் போது, தேவன் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து வழிநடத்தி வந்தார், அவர்கள் பெற்றுக்கொள்ளப்போகும் தேசத்தைக்குறித்து கடமை அவர்களுக்கிருந்தது என்றார். அவர்கள் அதைக்குறித்து கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாய் இருந்தனர்.

ஒவ்வொருவரும் உங்களை மன்னிக்கக்கூடும், ஆனால் தேவன் அப்படி செய்ய மாட்டார். நீங்கள் ஒரு போதகராய் இருப்பதனால் தேவனது வார்த்தையை போதிக்க தவறும் போது தேவன் உங்களை சிட்சிக்கிறவராய் இருக்கிறார். கர்த்தர் உங்களை அழைத்த காரியத்தை செய்யத் தவறும் போது, அவர் உங்களை நியாயம் விசாரிக்கிறவராய் இருக்கிறார். அவர்கள் தேசத்தினின்று அகற்றப்படுவதன் காரணம் என்னவென்றால், அவர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிய வில்லை.

நடைமுறைப் படுத்தும் போது, கிறிஸ்தவர்கள், தேவன் சொல்லியபடி சிட்சைக்குள்ளாவர்கள் என்பதை ஜாக்கிரதையாய் எடுத்துக்கொள்ளத் தவறும் போது, அவர்கள் சிட்சைக்குள்ளாவார்கள் காரணம் அவர்கள் தேவனது வார்த்தையை மிக எளிதாய் எடுத்துக்கொண்டு மற்ற வழியைப் பின்செல்லுகிறவர்களாய் காணப்படுகிறார்கள். தேவனது வார்த்தையை அறியாமல் இருப்பது உங்களை அதிகமான பிரச்சனைக்குள் வழி நடத்துகிறதாய் இருக்கிறது. அவர் பரிசுத்த தேவனாய் இருக்கிறார் மற்றும் அவரது பரிசுத்தத்தை உங்கள் வாழ்வில் பிரதிபலிக்க வேண்டும்.

நீங்கள் வழிதப்பி நடப்பீர்களானால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை ஒரு போதும் பற்றிக்கொள்ள இயலாது, பாவத்துடன் "பிரச்சனைக்குள்ளாவீர்கள்". இது தொடர்ந்து நீடிக்குமேயானால், நீங்கள் கிறிஸ்தவர்களாயிருந்தும், இவ்வுலகின் மீதுள்ள எந்த ஒரு நபரைக் காட்டிலும் அதிகமான துன்பத்திற்குள்ளாவீர்கள்,

அற்புதங்கள்

இந்த ஜனங்கள் பெரிய அனுபவங்களைப் பெற்று இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது, அவர்கள் பெரிய அற்புதங்களை கண்ணாரக்கண்டவர்கள். இன்றைய அளவில் ஜனங்கள் கூறுவது, அவர்கள் அற்புதங்களைக் காண்பார்களேயானால், மிகப்பெரிய எழுப்புதல் உண்டாயிருக்கும் என்கின்றனர். இப்பகுதி அவ்வாறு எண்ணுவது தவறு என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இந்த ஜனங்கள் நாற்பது ஆண்டுகள் அற்புதத்தின் மேல் அற்புதங்களை கண்டவர்கள் மற்றும் அனுபவித்தவர்கள். அனுதினமும் அவர்களது தேவைகள் சந்திக்கப்படுவதன் அற்புதம், இதில் அவர்கள் வருத்தப்படக்கூடிய அளவில் தவறிப்போனார்கள். இவர்கள் நாற்பது ஆண்டுகள் அற்புதங்களை கண்டனர் அனுபவித்தனர், அதே வேளையில் நாற்பது ஆண்டுகளாய் தோல்வியையும் தழுவிக்கொண்டு வாழ்ந்தவர்கள். இவர்கள் 6,00,000 மனிதரை இராணுவத்திற்கென ஏற்படுத்தி யிருந்தனர், இருப்பினும்

மிகச்சிறிய பட்டணமாகிய ஆயி என அழைக்கப்படும் பட்டணத்தில் தோல்வியடைந்து முறிந்து விழுந்தனர்.

அவர்கள் எகிப்தை விட்டு மிகுந்த ஐசுவரியத்தோடு வெளியேறிய போதும் அவர்கள் தோல்வியுற்றனர். நீங்கள் எவ்வளவு ஐசுவரியம் மிகுந்தவர்களாயிருந்தாலும், அது பெரிய காரியங்களை, உங்கள் பணத்தாலும், அல்லது உங்கள் உடமைகளாலும் செய்ய இயலாது என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. சபையில் பெரிய எண்ணிக்கை உள்ளவர்களை ஒரு கணக்காய் எடுத்துக்கொள்ள முடியாது, சபையில் தரமுள்ள மற்றும் அற்பணிப்புள்ள நபர்கள் எத்துனை பேர்கள் இருக்கிறார்களோ அவர்களே எண்ணிக்கையில் அடங்குவர். இந்த சந்ததியினர் மேலோட்டமான அனுபவங்களை காட்டுகிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் அவர்கள் அனுபவங்களுக்காய் வாழ்கின்றவர்களாய் இருக்கின்றனர்.

இந்த ஜனங்கள் பெந்தெகொஸ்தே குழுவினர் கண்ட அற்புதங்களைக் காட்டிலும் அதிகமான அற்புதங்களை கண்டிருந்தனர். நீங்கள் பெற்றிருக்கும் அனுபவங்களைக்கொண்டு வாழமுடியாது. தேவனது வார்த்தையை உங்கள் வாழ்வில், அனுபவத்துடன் அல்லது அனுபவமில்லாது நடைமுறைப் படுத்துதல் வேண்டும். எவ்விதமான ஆதாரங்களுமின்றி தேவனது வார்த்தையை நம்புதல் வேண்டும். இவ்வாறு செய்த இரு நபர்கள் யோசுவாவும் காலேபும் இவர்கள் வெற்றிபெற் றவர்களாய் காணப்பட்டனர். தேவனது வார்த்தையானது, காண்பது அல்லது தொடுவது இவற்றிற்கு மேலாக தேவனது வார்த்தையானது அதிக உண்மையுள்ளதாய் உங்களுக்கு இருத்தல் வேண்டும். அவர்கள் தோல்வியுற்ற போது தேவன் கோபப்பட்டார், அவர்கள் தோல்வியை தழுவி இருந்திருக்கக்கூடாது.

வசனம் 29 ல் மோசே கூறுவது, அவர்கள் அறியாதவற்றை பேசும்படி ஆவல் கொண்டனர். இங்கு உங்களுக்கு தெரியாத காரியங்கள் இருக்கின்றன அவைகளை நீங்கள் கடைபிடித்தல் வேண்டும். நீங்கள் அறியாத காரியங்களைக் குறித்து கவலைப் பட வேண்டாம். தேவன் எதை வெளிப்படுத்தியுள்ளாரோ அவைகள் உங்களுக்குரியதாய் இருக்கின்றன.

அதிகாரம் 30 ல் கீழ்ப்படியாமையால் சிருஷ்டி கர்த்தரை விட்டு அகன்று சென்றுவிடக்கூடாது. இறுதியில் நியாயத்தீர்ப்பின் கீழ் வேறு தேசத்தில் இருக்கும்போது, நீங்கள் சொல்வீர்கள் ஏன் நாம் இங்கு இருக்கிறோம். உபாகம புஸ்தகம் எதிர்கால யூதர்களுக்கு, அவர்கள் எல்லா தேசங்களுக்குள்ளும் சிதறிடிக்கப் பட்டிருக்கும் போது மிக முக்கியமான புஸ்தகமாய் விளங்கப்போகிறது.

மோசே இப்புஸ்தகத்தை கிறிஸ்துவுக்கு 1500 ஆண்டுகளுக்கு முன் எழுதினார், 1600 ஆண்டுகளுக்கு முன்னதாகவே சிதறிடிக்கப்படுதல் நிகழ்ந்தாயிற்று, இருப்பினும் இந்த அதிகாரம் முழுவதுமாய் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது. தேவனால் உரைக்கப்பட்ட காரியங்கள் 3,500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே நிகழும் என்றால், மற்றும் அவரது திட்டம்

மிகவும் நன்றாய் இருந்திருக்குமேயானால், தேவன் உங்களையும் என்னையும் பார்த்துக்கொள்கிறவராய் இருக்கிறார். கண்டிப்பாய் அவரால் பார்த்துக்கொள்ள முடியும்.

நீங்கள் கர்த்தரிடமாய் திரும்பி அவரது குரல் கேட்டு கீழ்ப்படிவீர்களானால், அவர் உங்கள் மீது மனதுருகி உங்கள் சப்தம் கேட்பார். இஸ்ரவேல் மறுபடியும் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள். இதுவே தலையங்கமாயும் [theme] யோவேல் தீர்க்கதரிசி எடுத்துரைத்த தீர்க்கதரிசனமுமாய் இருக்கிறது.

பவுல் வசனம் 6 ஐ தனது நிரூபத்தில் எடுத்துக்கொண்டு, இருதயத்தில் விருத்தசேதனம் செய்தல் குறித்து தனது அறிக்கையை வெளியிட்டுள்ளார். பவுல் தேவனது வார்த்தையை மனநிறைவுடன் எடுத்துக்கொள்கிறவராய் இருந்தார். அவர் அடிக்கடி வேத வசனங்களை மேற்கோள் காட்டும்பொழுது, கிரேக்க மொழிபெயர்ப்பான செப்துவஜிந்திலிருந்து காட்டுகிறவராய் இருந்தார்.

அவர் பழைய ஏற்பாட்டை மனப்பாடமாய் அறிவார். அன்பு செலுத்துவதற்குரிய வேதகுறிப்புக்கள், சுவிஷேசத்தைவிட பழைய ஏற்பாட்டிலேயே அதிகமாய் இருக்கின்றன. தேவன் தனது தனிப்பட்ட குணாதிசியங்கள் மாற்றத்திற்கு கீழ் புதிய ஏற்பாட்டில் செயல்படுகிறவராய் இல்லை. அவர் எப்பொழுதும் மாறாதவராய் இருக்கிறார். இயேசுக் கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றுமே மாறாதவராய் இருக்கிறார். இயேசு சொன்னார், தாம் பரிபூரண ஜீவனை அளிப்பதற்காக வந்தேன் என்றார். யோவான் 10:10. இதை அவர், தன்னில் அன்புகூர்ந்து, தனது கட்டளைகளை கைக்கொள்ளும் போது இதைத் தருவதாய் வாக்களித்துள்ளார்.

உபாகமம் 30:9 ல் மோசே கூறுகிறார், விசுவாசிகளாய் இருக்கும் உங்களுக்கு தெரிந்துகொள்ளும் உரிமை இருக்கிறது, கர்த்தரை முழுமனதுடன் அன்பு கூறுவீர்களா இல்லையா? யோவான் 15 ல் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து அன்பு மற்றும் நிலைத்து இருத்தல் குறித்து பேசுகிறார். ஓ! என் இயேசுவை எவ்வளவாய் நேசிக்கிறேன், என்ற பாடலுக்கு முக்கியத்துவம் அளித்து, அவரது கட்டளைகளை நிறைவேற்றாது போனால் எப்படி? எந்த இடத்திற்கும் சென்று தேவனது சித்தம் செய்ய சென்றது இல்லை. நீங்கள் எருசலேமுக்கு புனித யாத்திரை செல்ல அவசியமில்லை, அதை இங்கேயே நீங்கள் பெற்றுக்கொள்ள இயலும், யோவான் சுவிஷேசத்திற்குள் செல்லுங்கள் போதும்.

சுயசித்தம்:

வசனம் 15-16 ல் உங்களுக்கு தெரிந்து கொள்ளுதல் என்று ஒன்று இருக்கிறது. மோசே இதைத் தெளிவுபடுத்துகிறார், ஒவ்வொரு நாளும் ஜனங்களுக்கு தெரிந்துகொள்ளுதல் ஒன்று இருக்கிறது. அவர்கள் தேவனது வார்த்தையை கைக்கொள்கிறார்களா இல்லையா என்பதே.

கிறிஸ்துவைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள். இது ஒரு அவிசுவாசிக்கு இரட்சிப்படைவதற்குரிய கேள்வி மட்டுமல்லாது, விசுவாசியானவன் வளருவதற்குரிய விஷயமாயும் இருக்கிறது. அவர் உங்களை இரட்சித்து இருக்கிறார், அவர் உங்களை பரிசுத்தமாக்குவாராக.

வசனம் 19 ல் மோசே ஜீவனைத் தெரிந்துகொள்ளக் கூறுகிறார். கர்த்தர் நினைக்கும் பிரகாரம், உங்கள் வாழ்க்கையை அனுபவியுங்கள். எடுத்துக்கொண்டு புதிதாய் செயல்படுத்துங்கள். இப்படிப்பட்ட பழைய ஏற்பாட்டு வேத பகுதிகளை எடுத்து உங்கள் சபைமக்களுக்கு பிரசிங்கிக்கும்போது, அது மின் உற்பத்தியை உங்கள் சபையில் பெருக்குவதாய் இருக்கிறது. இதுவே ஆரம்ப கால சபையின் உந்துதலாய் இருந்தது என்பதை மனதில் கொண்டு, நாம் இதை புறக்கணியாது இருப்போமாக.

உபதேசங்கள்

விசுவாசிகளின் சிட்சை

1. ஒரு விசுவாசி தேவ சித்தத்திற்கு கீழ்படியாதிருக்கும்ப்போது, தெய்வீக சிட்சையே அதன் விளைவய் இருக்கிறது.

2. உண்மையான பிள்ளைகள் அனைவரையும் தேவன் சிட்சிக்கிறார். உண்மையற்ற பிள்ளைகள் சிட்சையை அறியாதிருக்கிறார்கள்
(12:8; 1 பேதுரு 5:9-10).

3. தேவன் விசுவாசிகளை சிட்சிப்பதை கீழ்க்கண்ட வேதபகுதிகளில் காணலாம்.
பழைய ஏற்பாடு (நீதிமொழிகள் 3:11-12)
புதிய ஏற்பாடு (எபிரெயர்12:3-13; வெளிப்படுத்தல் 3:19).

4. தேவனது சிட்சை பற்றிய மனப்பான்மை (எபிரெயர் 12:3-15).
fh;j;jUila rpl;iria mw;gkhf vz;zhNj> (வச 5).
mtuhy; fbe;Jnfhs;sg;gLk;NghJ Nrhh;e;JNghfhNj.(வச 5).
rpl;iriar; rfpf;fpwth;fshapUத்jy;வேண்டும்(வச 7).
சிட்சகளின் மூலம் பயனடைதல் மற்றும் கற்றுக்கொள்ளுதல் வேண்டும். (வச 11).

5. தேவனுடைய சிட்சையால் உண்டாகும் பலன்:
சிட்சை விசுவாசிகளுக்கு ஆசீர்வாதங்களை அருளுகின்றது (சங்கீதம் 94:12)
ஜீவியம் மாற்றப்படுகிறது (எபிரெயர் 12:11)
சிட்சை வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே (1 பேதுரு1:6,7)

இது விசுவாசிகளின் நன்மைக்காய் இருக்கிறது (எபிரெயர் 12:10)

6. விசுவாசி மனந்திரும்ப மறுப்பானேயானால் சிட்சை மரணபரியந்தம் தொடரும் (1 கொரிந்தியர் 11:30-31, 1 யோவா 5:16)

7. தெய்வீக சிட்சை ஒருபோதும் இரட்சிப்பு இழக்கப்படுவதை தெரிவிப்பதில்லை. கலாத்தியர் 3:26, 2 தீமோத்தேயு 2:11-13.)

குணமாக்கப்படுதல் மற்றும் அற்புதங்கள்

1. இயேசுக்கிறிஸ்துவின் சுகமளிக்கும் ஊழியங்கள், அடிப்படையில் வேதனைகளிலிருந்து விடுவிப்பது மட்டுமல்லாது, யூதர்களுக்கு தன்னை மேசியாவாகக் காட்டுவதாயிருந்தது.

2. இயேசுக்கிறிஸ்துவின் ஊழியத்தில், முக்கியமான அம்சம் என்னவெனில், அவர் சரீர சுகத்தை விட பாவத்திலிருந்து சுகமாக்குவதற்கே முக்கியத்துவம் கொடுத்தார். காரனம் பாவத்திலிருந்து சுகாமாக்குவது நித்திய விளைவையும், சரீர சுகம் தற்காலிக விளைவையும் அளிக்கிறது.

3. இயெசுக்கிறிஸ்துவினால் குணமாக்கப்பட்ட உதாரணங்கள்:

குஷ்டரோகி (மத்தேயு 8:1 -4).

யூதன் குணமாக்க இயலாத வியாதியினால் வருத்தப்பட்டான் - அது குஷ்டரோகம். சரித்திரத்தில், அக்காலத்தில் சாதாரணமாக குணமாக்க இயலாத வியாதியாகவும், கைவிடப்பட்ட நிலையிலும் குஷ்டரோகிகள் இருந்தனர். இயேசுவால் குணமாக்கப்பட்ட குஷ்டரோகி ஆசாரியனிடத்தில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டான். தேவனால் லேவிய ஆசாரியருக்கு பழய ஏற்பாட்டில் இதைப்போன்ற வியாதிகளை பரிசீலிக்க இரண்டு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இருந்தன. அசுத்தன் என்று தீர்க்க (லேவியராகமம் 13), சுத்தமானான் என்று அறிக்கை செய்ய (லேவியராகமம் 14). 14 ம் அதிகாரத்தை உபயோகிக்க அறியாதிருந்தனர். மேசியா பூமியில் இருக்கிறார் என்பதை குஷ்டரோகம் சுகமாக்கப்பட்டதன் மூலம் லேவிய ஆசாரியர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

b) நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன்: (மத்தேயு8:5-13).

நூற்றுக்கதிபதி, பெரிய விசுவாசத்தைப்பெற்ற புறஜாதிய விசுவாசியாய் இருந்தான். அவன் ஒரு முதிர்ந்த விசுவாசியாய் காட்டப்படுகிறான். அவனது வேலைக்காரன் திமிர்வாத வியாதியினால் (போலியோ) கஷ்டப்பட்டான். நூற்றுக்கு அதிபதி, இயேசுக்கிறிஸ்து, வேலைக்காரனை குணமாக்க தனது வீட்டுற்குள்

வர அவசியமில்லை, என பெரிய விசுவாசத்தை காண்பித்தான். இதை இயேசுக்கிறிஸ்து யூதர்கள் தன்னில் நம்பிக்கை வைக்க சவாலாய் எடுத்துக்கூறினார்.

c)திமிர்வாதக்காரன் குணமடைதல்: (மத்தேயு 9:1-8).
ஒரு யூத விசுவாசி தன் பாவங்கள் மன்னிக்கப்பட உறுதியற்ற நிலையில் இருத்தல். அவனது நண்பர்கள் நால்வர் அவனை இயேசுவிடம் பெரிதான விசுவாசத்துடன் கொண்டு வந்தனர். இயேசு அவனை குணமாக்கி, பாவங்கள் மன்னிக்கப்பட்ட நம்பிக்கையை அருளினார்.
d) பேதுருவின் மாமி (மத்தேயு 8:14-17). இயேசு அவளை குணமாக்கினார் காரணம் அவள் கர்த்தருக்கு பணிவிடை செய்ய, மற்றும் அவருக்கு உதவி செய்து அவரைத் தாங்க.

4. தேவனால் குணமாக்கப்பட்ட பற்பல விதங்கள்:
நேரடித்தொடர்பின் மூலம் (மத்தேயு 8:3,15; மாற்கு6:5)-
நண்பர்களின் விசுவாசத்தின் பிரதிபலனாய் (மாற்கு 2:5).
ஜெபத்திற்கு பிரதிபலனாய் (யாக்கோபு 5:15,16).
வைத்தியர்கள் மூலம் (கொலோசியர்4:14) மற்றும் மருந்து மூலம் - அத்திப்பழ அடை - ராஜ பிளவைக்கட்டிக்கு (2 இராஜாக்கள்20:7),குடற்புண்ணுக்கு திராட்சை இரசம் (1 தீமோத்தேயு 5:23).

5. வியாதியுடனும் அல்லது பிரச்சனையுடனிருந்த அநேக மிகப்பெரிய பரிசுத்தவான்களை தேவன் குணமாக்கவில்லை.
எலிசா (2 இராஜாக்கள் 13:14).
பவுல் (2 கொரிந்தியர் 12:7-10)
எப்பாபிராதீத்து (பிலிப்பியர் 2-26,27)
தீமோத்தேயு (1 தீமோத்தேயு 5:23)
வியாதிபடுகிற பரிசுத்தவான்களுக்குரிய அடிப்படை (2 கொரிந்தியர் 12:9).

6. வியாதி பல காரணங்களால் அநுமதிக்கப்படுகின்றன:
தேவனுடைய வார்த்தைக்கு நாம் திரும்ப வரும்படி (சங்கீதம்119:6 7).
தேவனுடைய வார்த்தை உயர்த்தப்படும் படியாக (யோவான்9:1-3)
இயேசுக்கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படியாக (யோவான் 11:4)
மற்றவர்களுக்கு நாம் ஆறுதலாய் இருக்கும்படியாக (2 கொரிந்தியர்1:4)
எதிர்கால மகிமைக்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படியாக (2 கொரிந்தியர் 4:17)
ஐக்கியத்திற்கு நாம் திரும்பும்படிக்கு (எபிரெயர்12:5-10)
நம்மை அதிக கனிகொடுக்கும்படி செய்ய (யோவான் 15:2; எபிரெயர் 12:1).

7. அற்புத குணமாக்குதல் ஒவ்வொரு நேரங்களிலும் நிகழ்ந்து வருகின்றன. தேவன் ஒரு நபரை எந்த நேரத்திலும் குணமாக்கலாம், ஆனால் வேதம்

அப்படிச் செய்வது பொதுவாய் அவரது நோக்கமில்லை எனக்காண்பிக்க்றது. தெய்வீக சுகத்தை சாத்தான் தெய்வீக சுகமளிப்பவர்கள் மூலம் போலி சுகத்தை அருள முடியும்

சுயசித்தம்

1. சுயசித்தம் என்பது தேவனுக்கு முன்பாக தெரிந்து கொள்ளும் செயல்பாட்டின் கடமையாய் இருக்கிறது.

2. தேவன் ஆதாமுக்கு ஏதேன் தோட்டத்தில் தெரிந்து கொள்ளும் ஆற்றலை அளித்தார். (ஆதியாகமம் 2:16-17).

3. தெரிந்துகொள்ளும் ஆற்றல் விசுவாசி மற்றும் அவிசுவாசியில் இருக்கிறது. (யோவான்7:17)

4. கிறிஸ்தவத்தில் சுயசித்தம் ஒருபோதும் வற்புறுத்தப்படுவதில்லை. கீழ்ப்படிதலே காரியமாய் கொள்ளப்படுகிறது (2 கொரிந்தியர்5:10)

5. மனிதன் தனது செயல்கள் ஒவ்வொன்றிற்கும், உத்திரவாதியாய் இருக்கிறான். மற்றும் அவன் ஒவ்வொன்றிற்கும் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். (வெளிப்படுத்தல்20:11-15).

6. ஏனெனில் மனிதன் நியாயத்தீர்ப்புக்கு கீழ்பட்டிருக்கிறான். குறிப்பிட்ட காலக்கட்டத்தில், பிள்ளைகள் அனைவரும் தங்களது கிரியைகள் ஒவ்வொன்றிற்கும். தேவனிடம் கணக்கொப்புவித்தாக வேண்டும்.

7. வேதாகமம் சுயசித்தம் குறித்த மூன்று பிரச்சனைகளை தீர்த்து வைக்கிறது.

சுவிஷேசத்தை கேட்குமுன்னர் மரிக்கும் சிசுக்களின் நிலை என்ன? அல்லது மனோரீதியான நிலையில் தீர்மானிக்க இயலாதவர்கள் நிலை என்ன? தீர்வு: (2 சாமுவேல்12:18)தாவீதுக்கும் பத்சேபாளுக்கும் பிறந்த ஏழு நாள் சிசு இறந்துபோனது, எட்டாவது நாளில் உடன்படிக்கை உறவுக்குள் வருமுன்னர் அதாவது, விருத்தசேதனம் செய்வதற்கு முன் மரித்துப்போனது. தாவீது சொல்கிறார். நான் அந்த சிசுவினிடத்திற்கு செல்வேன், இதன் பொருள் அந்த சிசு உடன்படிக்கை அவசியமில்லாமல் இயல்பாகவே இரட்சிக்கப்பட்டிருக்க வேண்டும்.

சரீர அங்கவீனம் ஒரு நபரில் சுயசித்தத்திற்கு தடை கொண்டு வரக்கூடுமா? தீர்வு: (யோவான்9:1-7) பிறவியிலேயே குருடனாய் பிறந்த நபர் கண்பார்வையடைந்தார். இயேசு ஒருபோதும் சுயசித்தத்தை மீறவில்லை, அனால் குருடனுக்கு கண்பார்வை அளித்தார். அவர் ஒரு நபர் தேவசித்தம் செய்வதை தடைசெய்யும்

தடைகளை தகர்க்கிறார். ஆனால் ஒரு நபரின் சுயசித்தம் செயல்படாதிருக்கச் செய்வதில்லை.

ஆவிக்குரிய நிலையில் சேதம் அடைந்துள்ள நபரின் சுயசித்தம் குறித்து வேதம் கூறுவது என்ன? தீர்வு: (ஆதியாகமம்3:8) மனிதனின் வீழ்ச்சிக்குப்பின்னர், தோட்டத்தில் தேவனை விட்டு ஒளிந்து கொண்டிருந்த ஆதாமையும், ஏவாளையும் தேவன் கண்டு பிடித்தார். தேவன் எல்லா மனிதரையும் தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு இரட்சிப்பின் தருணங்களை அளிக்கிறார்.

8. உங்களது இருதயத்தை விசுவாசிக்கவோ, அல்லது மனந்திரும்பவோ இயலாது, கடினப்படுத்த உங்களால் கூடும்.
வேதாகமத்தில் இதற்கான உதாரணங்கள்:

யோசுவாவின் நாட்களில் இருந்த அமோரியர்களும், கானானியர்களும். (ஆதியாகமம் 15:16).

யாத்திராகமத்தின் பார்வோன் (யாத்திராகமம்7- 11).

சிருஷ்டிகரை தொழுது சேவியாமல், சிருஷ்டிகளை தொழுது சேவிப்பவர்கள் (ரோமர்1:1-32).

மிருகத்தின் முத்திரையை தரித்துகொள்பவர்கள் (வெளிப்படுத்தல் 13:8).

இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் அவிசுவாசிகளின் பிரதிக்கிரியைகள் (வெளிப்படுத்தல் 6:16).

9. தேவனைத்தேட வாஞ்சையுள்ள நபர் அவரைக் கண்டுகொள்வார்கள். (யோவான் 7:17).

10. தேவன் உண்மையாகவே ஏகாதிபதியாய் இருப்பார் என்றால் மனிதன் எவ்வாறு உண்மையில் சுயமாய் தெரிந்துகொள்ளுதலை செயல்படுத்த முடியும்?

கடந்தகால நித்தியத்தில், தேவன் எல்லா சிருஷ்டியில் நிகழவிருக்கும் ஒவ்வொரு தீர்மானத்தையும் மற்றும் நிகழ்வுகளையும் முன்னறிந்தவராயருக்கிறார். எல்லாக்காரியங்களிலும் அவர் கிரியை நடப்பித்து, தனது ஏகாதிபத்திய நோக்கத்தை அடைந்து கொள்ளும்படி கிரியை செய்கிறவராய் இருகிறார். தேவன் தனது ஏகாதிபதித்துவ சித்தத்தை திட்டமிடுகிறவராயும், சிருஷ்டிகராயும் இருந்து பயன்படுத்துகிறார், மனிதன் தனது சுய சித்தத்தை சிருஷ்டியில் ஒருபகுதியாய் இருந்து பயன்படுத்துகிறான்.

அ) பவுல் ஒரு கைதியாய் கட்டப்பட்டு ரோம் நகருக்குச் செல்கையில், தேவ தூதனின் அறிவுரையைப் பெற்றுக்கொண்டவனாய் அறிவித்ததாவது, ஒருவருடைய ஜீவனுக்கும் எந்த சேதமும் வராது ஆனால் கப்பல் சேதம் மட்டுமே இருக்கும் என்றார். இப்படிப்பட்ட உத்திரவாதம், ஏகாதிபதித்துவ உத்திரவாதமாய் இருக்கிறது ஆகையால் அது முழுமை பெற்றதாய் இருக்கிறது. பவுல் கேட்டுக்கொண்டபடி, போர்ச்சேவகர்கள் அனைவரும் கப்பலில்

இருப்பார்களேயானால் பாதுகாக்கப்படுவர். இதற்கு அவர்கள் கீழ்ப்படிந்தனர் பாதுக்காக்கப்பட்டனர். இதினிமித்தம் ஏகாதிபதித்துவ கட்டளைகளில் மனிதனின் சுயசித்த தீர்மானம் என்பது அடங்கியிருக்கிறது. (அப்போஸ்தலர் 27).

ஆ) ஏகாதிபதித்துவ கட்டளையானது, சகலமும் நன்மைக்கேதுவாய் நடக்கிறது என்ற முன்தீர்மானம் மற்றும் இறுதி மகிமைப்படுத்தப்படல் போன்றவற்றின் இலக்கு நோக்கி இருக்கிறதாய் இருக்கிறது. நாம் பரலோகில் இருப்பொம் என்கிற உறுதிப்பாடு நமக்குண்டு. இருப்பினும் நாம் தொடர்ந்து சுய சித்த தீர்மானங்களை எடுக்கும் செயல்முறையில் இருக்கிறவர்களாய் இருக்கிறோம். (ரோமர் 8:28)

இ) தானியேல், எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்த "பாழாக்கப்பட்ட நிலை" எழுபது ஆண்டுகள் என்பதை புறிந்து கொண்டு அது முடிவுக்கு வந்ததை அறிந்து கொண்டார். இதினிமித்தம் தானியேல் சணல் நூல் இரட்டு உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து தேவனைத் தேடி விண்ணப்பத்தோடும், வேண்டுதலோடும் இஸ்ரவேலின் பாவம் மன்னிக்கப்பட மன உறுதியுடன், பாவமன்னிப்பின்றி சிட்சையானது அகற்றப்பட முடியாது என்ற அடிப்படையில் செயல்படுவதைப் பார்க்கிறோம். (தானியேல் 9:2)

11. சுயசித்தம் ஒருபோதும் நடுநிலை வகிப்பதில்லை - நீங்கள் ஒன்று தேவனுக்குக் கீழ்ப்படிகிறவராய் இருக்கவேண்டும் அல்லது அவருக்குக் கீழ்ப்படியாதவராய் இருக்கவேண்டும். (ஏசாயா55:7-9).

<u>பாடம் 34 -- எண்ணாகமம் 5</u>

முன்னுரை:

எண்ணாகமம் நம்மை சீனாய் மலையிலிருந்து மோவாபின் சமவெளிகள் வரை எடுத்துச் செல்கிறதாய் இருக்கிறது. இது 40 ஆண்டுகால அலைந்து திரிதலை காட்டுகிறது. தேவனுக்கு இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து வனாந்திரத்திற்கு கொண்டு வர நான்கு நாட்கள் மட்டுமே ஆனது, ஆனால் இஸ்ரவேல் மக்களிலிருந்து எகிப்தை வெளியேற்றுவதற்கு 40 ஆண்டுகாலங்கள் சென்றது.

நிலைத்து இருத்தல்:

அவர்கள் அனுபவத்தைக் காட்டிலும், தேவன் மீது நம்பிக்கை வைப்பது மிகவும் அவசியமாய் இருந்தது. அவர்களது அமைப்பிலிருந்து, மதத்தை அகற்றி விட்டு, அந்த இடத்தில் உறவை ஏற்படுத்த வேண்டிய சமயம்

அவர்கள் வாழ்வில் ஏற்பட்டது. இது இஸ்ரவேல் மக்கள் தேவனுக்கென்று என்ன முடியும் என்பதை என்பது ஒரு காரியமாய் இல்லை. அவர்களது நம்பிக்கைக்கு ஆதாரமாய் இஸ்ரவேல் மக்களுக்கு தேவன் என்ன செய்தார் என்பதே முக்கியமான காரியமாய் இருக்கிறது. தேவன் ஜனங்கள் ஆவியினால் நிரப்பப்பட்டவும் மற்றும் அவர்கள் பயன்படக்கூடியவர்களுமாய் இருக்க வாஞ்சிக்கிறவராய் இருக்கிறார். ஒரு விசுவாசியின் மிகவும் அத்தியாவசியமான காரியம் என்னவெனில் தேவனண்டை நெருக்கமாய் கிட்டிச் சேருவதாகும்.

எகிப்து என்பது ஒருவகையான மதமாய் இருந்தது, எகிப்திற்குள் செல்லுதல் என்பது தவறான் மதத்திற்குள் செல்வது என்ப்பொருள்படும், உண்மையற்ற சடங்காச்சரங்களுக்குள் செல்வது, அனுபவமற்ற உபதேசங்களை கைக்கொள்ளுதல். நமது விசுவாசம் என்பது தேவனுடன் உள்ள உறவு ஆகும், அது ஒரு மதமல்ல. ஒரு விசுவாசியின் அவசியம், தேவனுடன் நெருங்கி ஐக்கியம் கொள்ளுதல் ஆகும். எகிப்து வெளிப்படையான காரியங்களை காட்டுகிறதாய் இருக்கிறது, தேவன் உள்ளான காரியங்களை வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார், ஒரு காரியம் எப்படி இருக்கிறது என்பதைகாட்டிலும், அது பார்ப்பதற்கு எப்படியிருக்கிறது என்பதே முக்கியமானதாய் இருக்கிறது. தேவன் உள்ளான காரியங்களுக்கு மிக அழுத்தத்தைக் கொடுக்கிறவராய் இருக்கிறார், முடிவாக உள்ளே இருப்பது மட்டுமே வெளியே செல்லுகிறதாய் இருக்கிறது. தேவன் இஸ்ரவேலரை எண்ணாகமத்தில் மெதுவாக மாற்றுகிறவராய் இருக்கிறார், தேவன் முதல் சந்ததி அனைவரையும் கொன்று போட்டார், காரணம் அவர்கள் கற்றுக்கொள்ள முன்வருகிறவர்களாய் இல்லை.

தேவன் உங்களைப் பயன்படுத்தப் போவார் என்றால் உங்கள் வாழ்க்கை சுத்திகரிக்கப்படுதல் அவசியம். ஆவியானவர் பரிசுத்த ஆவியானவராய் இருக்கிறார். தேவனது மிகப்பெரிய கரிசனை என்னவெனில், தனது மக்களின் நிலையாய் இருக்கிறது. நீங்கள் சுத்தமாய் / களங்கமற்று இருக்க வேண்டும் என கட்டளைப் பெற்று இருக்கிறீர்கள் 1தீமோத்தேயு 5:22, பிலிப்பியர் 4:8.

நான் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராயிருங்கள் எனக் கர்த்தர் சொல்லுகிறார். நீங்கள் வளரும்படி கட்டளை பெற்று இருக்கிறீர்கள். நீங்கள் இதன் மூலம் ஆசீர்வதிக்கப் படப்போகிறீர்கள் ஆனால் இது இன்னும் ஒரு கட்டளையாய் இருக்கிறது. தேவன் சொல்வது என்னவென்றால், நீங்கள் எனது பிள்ளைகளாய் இருப்பதனால், எனது பிள்ளைகளைப்போல செயல்படக் கற்றுக்கொள்ளுங்கள் என்கிறார். சபையானது தனது அங்கத்தினர்களை தேவனின் இராஜரீக குடும்பத்தினராக்குவது, இராஜரீக குடும்பத்தினரின் அங்கதினராய் செயல்படுவதற்காகும். இதையே உங்களது ஊழியத்தில், முக்கிய வேலையாய் உணராத பட்சத்தில், நீங்கள் எப்பொழுதும் உங்கள் குதிங்காலில் நிற்கிறவர்களாய் இருப்பீர்கள்.

பரிசுத்தமாக்கப்படுதல்

பரிசுத்தமாக்கப்படுதல் எண்ணாகமத்தில் போதிக்கப்படுகிற காரியங்களில் ஒன்றாய் இருக்கிறது. இது அனுபவ ரீதியான கண்ணோட்டத்திலிருந்து, நீங்கள் ஏற்கனவே இருக்கும் உங்கள் ஸ்தானத்திலிருந்து காணக்கூடியதாய் இருக்கிறது, நீங்கள் தேவனது குமாரரும், குமாரத்திகளுமாய் மாறி இருக்கிறீர்கள், நீங்கள் பரலோக பிரஜைகளாய் இருக்கிறீர்கள், நீங்கள் இவ்வுலகத்தாரல்ல.

இந்த வேதபகுதியில் ஒருவருக்கு குஷ்டம் உண்டாகும் எனில், அவர்களை பாளயத்திற்கு புறம்பாக்குதல் குறித்து பார்க்கிறோம். இது தொற்றிக்கொள்ளக்கூடிய வியாதியானபடியால், பொதுவான சமுதாயத்திலிருந்து இப்படிப்பட்ட வியாதியுள்ளவர்களை தனிமை படுத்த அவசியம் ஏற்பட்டது. மோசேக்கு சொல்லப்பட்டது என்னவெனில், யாராகிலும் ஒருவருக்கு குஷ்டம் ஏற்பட்டால், பாளயத்திற்கு புறம்பே அவர்களை அனுப்பிவிட கேட்டுக்கொள்ளப்பட்டது, காரணம் இப்படிப்பட்ட வியாதி மற்றவர்களுக்கு பரவாதபடி பாதுகாக்க இவ்வாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. தொற்று வியாதியுள்ளோரை ஜனக்கூட்டங்களுக்குள் வைக்கலாகாது அவர்களை தனிமைப் படுத்துதல் வேண்டும். குஷ்டரோகிகள் பாளயத்திற்கு புறம்பாக்கி அவர்களை மரிக்கச் செய்வதற்கல்ல, அந்த குஷ்டம் சுகமானபின்னர் விஷேசித்த காணிக்கைகள் அற்பணிக்கப்பட்டு அவர்கள் சமுதாயத்தில் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

குஷ்டம் பாவத்தின் ஒரு வகையாய் இருக்கிறது. இது சரீரத்தின் வியாதியாய் இருந்து, சரீரத்தில் உள்ள மாம்சத்தை தின்று, எல்லா நரம்பு மண்டலத்தையும் செயல் இழக்கச் செய்கிறதாய் இருக்கிறது. மாம்சம் அழுகிப்போகும். குஷ்டரோகி இவ்வியாதியைக்காட்டிலும் தனக்குத்தானே அதிக தீமையை இழைத்துக்கொள்கிறவனாகிறான், காரணம் இவர்களது சரீரம் எவ்வித வேதனையையும் உணராது மறத்துப்போயிருக்கும். இவர்கள் தங்களது மாம்சத்தை சுட்டுக்கொண்டாலும் அதன் வேதனையை இவர்கள் உணரமாட்டார்கள். பாவம் செய்யும் போது உங்களது உணர்வுத் தன்மையை இழக்கச்செய்து, உங்களின் ஒரு பகுதியை அழுகச் செய்து கொண்டிருக்கும். இது தொற்றக்கூடிய தன்மையுள்ளதாய் இருந்து, உங்கள் மனதை விஷமுள்ளதாக்கி, உங்கள் சரீரத்தை அழித்துப் போடுகிறதாய் இருக்கிறது. இன்றைய அளவில் ஜனங்கள் அடிக்கடி வியாதிக்குட்படுவதற்குக் காரணம் மது அருந்துதல், போதை மற்றும் லாகிரி வஸ்துக்களை உபயோகித்தல் போன்ற பாவங்களில் ஈடுபடுவதால் உண்டாகிறது.

போதை வஸ்துக்களுக்கு அடிமைப் பட்ட ஒரு நபர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் இரட்சிப்பின் அறிவிற்குள் வந்த பின்னரும், அவர்களுக்கு எஞ்சிய பண இழப்பு இருந்து கொண்டே இருக்கலாம் காரணம் அவர்களது இதற்கு முந்தைய பழக்கவழக்கங்களின் விளைவினால் அப்படி நடக்கிறது. பாலுறவு சம்பந்தமான ஒழுக்கக்கேடுபாடுகளின் இயல்பான பாவ விளைவுகள் V.D. and AIDS போன்றவைகள் ஆகும். அநேக ஜனங்கள் மனோரீதியான வியாதிக்கு

உட்படுவதன் காரணம் அவர்களது வாழ்வில் வளர்க்கும் பாவங்கள் harbouring sin இருப்பதால் ஆகும். இப்படிப்பட்ட பாவத்தை சரிசெய்யாத பட்சத்தில், உளவழி உடல் நோய்களால் psychosomatic illnesses பாதிக்கப்படுவார்கள். மன அழுத்தத்திற்கான முக்கியமான காரணங்கள், சில காரியங்களை வெளியே விடாது ஒரு நபருக்குள் அடக்கி வைக்கப்படுவதன் விளைவு ஆகும், புற்று நோய் என்பது உங்கள் சரீரம் உங்களிடமே திரும்பவருவதாகும். பாவம் உங்களுக்குள்ளிருந்து அழுகும் போது, நீங்கள் தனிமைப் பட்டு அதோடு ஈடுபட்டு அதை சரிசெய்தல் வேண்டும்.

பவுலும் கொரிந்தியர்களும்

பாவம் குறித்து பவுல் கொரிந்தியர்களை எச்சரித்தார். அவர் சபையில் சிலர் பழகிப்போன பாவத்தை habitual sin செய்து வருகிறபடியால் சிலர் வியாதிப்பட்டு இருக்கிறார்கள், சிலர் மரித்தும் இருக்கிறார்கள் என்றார். நம்மை நாமே சோதித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்பட மாட்டோம். ஒரு குஷ்டரோகி இஸ்ரவேலில் பாளயத்திற்கு புறம்பே இருக்க நேரிடுமானால், அறிக்கைச் செய்யப்படாத பாவத்துடன் ஒருவர் சபையில் இருப்பாரேயானால் அவரை சபைக்கு புறம்பாக்குதல் வேண்டும். நாம் பாவத்தை நமது வாழ்விலிருந்து புறம்பாக்க வேண்டியது அவசியம். அவ்வாறு செய்யாது இருப்போமானால் நாம் நம்மைத்தாமே அழித்துக்கொள்கிறவர்களாய் இருப்போம். குஷ்டரோகம் வழக்கமாய் அசுத்தமான இடங்களிலிருந்து தொற்றுகிறதாய் இருக்கிறது, இது ஒரு அசுத்தமுள்ள வியாதியாய் இருக்கிறது, இது பாவத்திற்கு ஒரு நல்ல ஒப்புமையை அளிக்கிறதாய் இருக்கிறது. இஸ்ரவேலில் உள்ள அநேக ஜனங்கள் குஷ்டரோகத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களாய் காணப்படுகின்றனர் காரணம் அவர்கள் தனது சொந்த வாழ்க்கையை கெட்ட பழக்கவழக்கங்களுக்கு ஈடுபடுத்திக் கொள்வதால் இது ஏற்படுகிறதாய் இருக்கிறது.

சில ஜனங்கள் சமாதான முத்தம் அல்லது அரவணைப்பு செய்ய மிகவும் ஆபத்தானவர்களாய் இருக்கின்றனர் காரணம் அவர்கள் ஏதோ சில தொற்று நோய்களால் பாதிக்கப்பட்டவர்களாய் இருப்பர். உங்கள் இரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கும் அட்டையைப் போல சிலர் இருக்கிறார்கள். மந்திரிமார்களும், வைத்தியர்களும் செயல் இழக்கச்செய்வோரின் பட்டியலில் முதன்மையாய் திகழ்கின்றனர். இரத்தத்தை உறிஞ்சும் அட்டையைக் குறித்து அகற்றுவது குறித்து நீங்கள் கவனக்குறைவாய் இருப்பீர்களானால் அவர்கள் உங்களை ஒன்றுமில்லாது உறிஞ்சிப் போடுவார்கள். நீங்கள் ஒரு சபையை பொறுப்பெடுக்கும் போது, உங்களுக்கு முன் இருந்த போதகர் ஒரு நல்ல போதிப்பவராய் இல்லாதிருந்திருப்பாரேயானால், அந்த சபையில் சுமார் 80% இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் போன்றவர்கள் இருப்பார்கள். இதினிமித்தம் நமது சொந்த வாழ்வில் உள்ள பாவத்தை சரிசெய்வது மற்றும் மற்றவர்கள் பாவத்தை சரிசெய்வது மிகவும் அவசியம் இல்லையேல் நாம் பாவக்குஷ்டத்தால் பாதிக்கப்படுகிறவர்களாய் இருப்போம். நமது வாழ்வில்

பாவம் உண்டானால், அதை சரியாய் கையாண்டு அறிக்கை செய்து விட்டு விடுதல் அவசியம். 1 யோவான் 1:9.

பிரிவினை

பாவம் செய்கிற ஒரு நபரைப் பெற்று இருந்து, அவர் தனது பாவத்தை அறிக்கை செய்யாது இருப்பாரேயானால், அந்நபரை வேறுபடுத்தி பிரித்து வைத்தல் வேண்டும். ஐக்கியத்திற்கு புறம்பே இருக்கும் கிறிஸ்தவர்கள், அடிக்கடி (தோட்டப்பாதைக்கு மேலே) தவறான பாதைகளில் உங்களை வழிநடத்தக்கூடும். இதினிமித்தம் வேதாகம உபதேசங்களை அதிக ஆர்வத்துடனும், மிகுந்த உற்சாகத்துடனும் வேதாகம வார்த்தையிலிருந்து போதித்தல் அவசியமாகிறது. வாலிபர் குழுக்களை ஒருவரும் பார்த்துக் கொள்ள இல்லாத சமயத்தில், தனிப்பட்ட விதத்தில் அவர்களுடன் ஈடுபடுதல் அவசியம். இளம் வாலிபர்களை உபதேசத்தினால் காத்துக்கொள்ளுதல் மிகவும் அவசியம். இதற்கு முன் ஒருவரும் அவர்களுக்கு போதித்திராத வகையில் நீங்கள் அவர்களுக்கு போதனைகள் அளித்தல் அவசியம். இளம் வாலிபர்கள் முட்டி மோதிக்கொண்டு தங்களையே அழித்துக் கொள்பவர்கள், மற்றும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்கு அவ கீர்த்தியை கொண்டு வருபவர்கள்.

வேண்டுமென்றே கர்த்தரின் திட்டத்தை விட்டு ஒருவர் செல்வதை உணருவீர்களானால் அவர்களுடன் மத்தேயு 18:15-22 ன் ஈடுபடுங்கள். துவக்கத்தில் அவர்களுடன் சென்று அவர்களது பாவத்தை குறித்து அவர்களுடன் பேசுங்கள். அவர்கள் அதற்கு கவனம் செலுத்தாது போவார்களேயானால், மூப்பர்களுடன் சென்று அவர்களது பாவத்தைக்குறித்துப் பேசுங்கள். அப்படியும் அவர்கள் கவனியாது போவார்களேயானால் அவர்களை சபைக்கு முன் கொண்டு வாருங்கள்.

இறுதிச் செயல்பாடு அவர்கள் தொடர்ந்து மனந்திரும்பாத பட்சத்தில் அவர்களை வேறுபிரித்து சபைவிட்டு விலக்கி வையுங்கள். விலக்கி வைத்தல் குறித்த வேதாகம அறிக்கை எதுவும் இல்லை. இவ்வாறு செய்யாத பட்சத்தில், மறுப்பு தெரிவிக்கும் பிடிவாதம் செய்யும் நபர் சபையில் இருந்து மற்றவர்களையும் திசை மாறிச் செல்ல வழிநடத்துகிறவர்களாய் இருப்பர்.

கிறிஸ்தவர்களாய் இருக்கும் ஒவ்வொருவரையும் அன்பு கூர்ந்து விரும்பும் நபர்களாய் ஏற்றுக்கொள்ளுதல் கூடாது. நீங்கள் ஒரு மேய்ப்பனாய் இருக்கும் போது, ஆடுகளின் தோலைப் போர்த்துக்கொண்டு வரும் ஓநாய்களை இனம் கண்டு கொண்டு அவைகளை மந்தையை விட்டு புறம்பாக்குதல் வேண்டும். சபை விதிமுறைகளில் நீங்கள் இப்படிப்பட்டவர்களை விட்டு விலகி ஜீவிக்க தகுதியுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்.

இவ்வாறு நீங்கள் வேறு பிரித்த பின்னர், ஆவியானவருக்கு இடம் கொடுத்து ஜெபித்தல் வேண்டும். இது சபைக்கு மட்டும் பயன்தரக்கூடியதாய் இராமல்,

சபையை விட்டு புறக்கணிக்கப்பட்ட நபரும், தங்கள் நிலையை உணர்ந்து, மனந்திரும்பும் செயல்பாட்டில் ஈடுபட வழிவகிக்கிறதாய் இருக்கிறது.

1 கொரிந்தியர் 5 ம் அதிகாரத்தில் தன் தாயுடன் பாலுறவு கொள்ளும் மனிதனை, சபையை விட்டு புறம்பாக்குவது புறஜாதியாருக்கும் கூட இது அதிர்ச்சியை அளிக்கக்கூடியதாய் இருந்தது.

அவன் மனமகிழ்ச்சியுடன் மனந்திரும்பி மற்றும் சபைக்குத் திரும்புவதில் பிரச்சனை உள்ளவனாகிறான். 2 கொரிந்தியரில் பவுல் அப்படிப்பட்டவனை திரும்ப சபைக்குள் வரவேற்கிறவராய் இருக்கிறார். அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில், அவர்களுக்கு ஆவிக்குரிய ரீதியில் அல்லது சமுதாய ரீதியில் ஒன்றும் செய்ய இயலாதவர்களாய் இருக்கிறோம். நாமும் இப்படிப்பட்ட விசுவாச துரோக மதம் சார்ந்த ஸ்தாபனத்தை விட்டு வேறுபட்டு விலகுதல் வேண்டும். கிறிஸ்தவர்கள் ஒருவரும் ஒரு அவிசுவாசியை திருமணம் முடிக்கக் கூடாது, மட்டுமல்லாது அப்படிப் பட்டவர்களோடு நெருங்கிய வியாபாரத் தொடர்பும் வைத்துக்கொள்ள கூடாது, உங்களது கிறிஸ்தவ சாட்சியானது அவர்களோடு ஒத்துப்போக ஏதுவுண்டாகும்.

இவற்றைக்குறித்த பரிகாரம் மத்தேயு 18:15-22, தீத்து 1:13-14, 3:10, கலாத்தியர் 1:6-10, 1 தீமோத்தேயு 1:20 போன்ற வேதபகுதிகளில் காண்கிறோம். இது மிகவும் பயனுள்ளதாய் யோவான் ஸ்நானகன் மதத்தலைவர்களிடம் சவால் விட்டு பேசும் வேதபகுதி அமைந்துள்ளது. லூக்கா 3:7ff. அவர்கள் அதிர்ஷ்டம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் அன்று ஞானஸ்நானம் பெற வந்தனர். யோவான் சொன்னது அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை காட்ட வேண்டியவர்களாய் இருந்தனர்.

மற்றொரு உதாரணம், சுங்கம் வசூலிப்பவரான சகேயு என்ற ஆயக்காரன் லூக்கா 19, இவரது மனந்திரும்புதலின் போது, அதிகமாய் வசூலித்த வரிப்பணத்தை மோசேயின் நியாயப்பிரமாணத்தின் படி, திரும் அளிப்பதற்கு ஒப்புக்கொண்டதை பார்க்கிறோம். தனது பாவங்களை தேவனிடம் மற்றும் மனிதனிடம் தீர்த்துக்கொள்கிறவனாய் இருக்கிறான். இப்படிப்பட்ட செய்கை அவனது உண்மைத்தன்மையை அவனது செயல்கள் மூலம் வெளிக்கொண்டுவரப்படுவதைப் பார்க்கிறோம்.

உபதேசங்கள்:

நிலைத்து இருத்தல்

1. நிலைத்து இருத்தல் என்ற வார்த்தை பூரண பராமரிப்பு, தேவைகளை சந்திப்பது, போஷிப்பது, மற்றும் ஐக்கியம் குறித்து பேசுகிறது. உபாகமம் 33:27-28

2. தேவனுடைய பராமரிப்பில் வாழ்தல் என்பது "நிலைத்து இருத்தல்" என்பதின் திறவுகோலாய் இருக்கிறது. யோவான் 13:17

3. "நிலைத்து இருத்தல்" என்பதன் பொருள் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்வில், எல்லா பகுதியிலும் அவசியமான ஒவ்வொரு தேவைகளுக்கும் அளிக்கப்படும் முழுமையான பராமரிப்பு ஆகும். சங்கீதம் 23:1,5. 91:1-10 யோவான் 15:4; யாக்கோபு 1:2-4.

4. உலகப்பிரகாரமான பிரச்சனைகள் அநித்தியமானவைகள், பலதரப்பட்டவைகள், ஆனால் அவைகளுக்கு உண்டான தெய்வீகத்தீர்வு முழுமையானது. ஆதியாகமம் 50:20 ரோமர் 8:28.

5. நாம் அவரில் நிலைத்து இருக்கும்பொழுது மட்டுமே, இயேசுக்கிறிஸ்து நமது வீடாகிய இருதயத்தில் தரித்து இருக்கமுடியும். எபேசியர் 3;16,17, கொலோசெயர் 3:15,16.

பரிசுத்தமாக்கப்படுதல்

1. பரிசுத்தமாக்கப்படுதல் என்பதன் பொருள் சுத்திகரிக்கப்படுதல் ஆகும் - தேவனுக்கென்று வேறுபிரிக்கப்படுதல் என்பது இதன் பொருள். பரிசுத்தமாக்கப்பட்ட ஒருவர் பரிசுத்தவான் என அழைக்கப்படுகிறார்.

2. நாம் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்படுகிறோம்.. (1 கொரிந்தியர்1:2).

3. பரிசுத்தமாக்கப்பாடுதல் மூன்று கட்டங்களில் நிகழ்கின்றன.

முதல் கட்டம்: இரட்சிக்கப்படும்போது - கிறிஸ்துவுடன் இணைக்கப்படுதல் - அந்தஸ்து சம்பந்தமான பரிசுத்தமாக்கப்படுதல். (1 கொரிந்தியர் 12:13, ரோமர்1:1-7).

இரண்டாவது கட்டம்: கிறிஸ்தவ வாழ்க்கை முறையில் - பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும்போது - ஆவிக்குரிய நிலையில் பரிசுத்தமாக்கப்படுதல். (ரோமர் 16:2; 1கொரிந்தியர் 1-2).

மூன்றாவது கட்டம்: உயிர்த்தெழுந்த சரீரத்தில் - பரலோகில் - எல்லாவற்றிற்கும் மேலான பரிசுத்தம். (1 யோவான்3:2).

4. கிறிஸ்துவில் நமது அந்தஸ்து அவரின் நீதியை பகிர்ந்துகொள்ளச்செய்கிறது.

தெய்வீக நியாயத்தீர்ப்பினின்று நம்மைப் பாதுகாக்கிறது (ரோமர் 8:1).
தேவனோடு என்றென்றும் வாழ நம்மை தகுதிப்படுத்துகிறது.
கிறிஸ்துவுக்குள் நம்மை புது சிருஷ்டியாக்குகிறது. (2 கொரிந்தியர்5:17).
ஒவ்வொரு விசுவாசிக்கும் நித்திய பாதுகாப்பை அளிக்கிறது. (ரோமர் 8:38, 39).

5. எப்படியிருப்பினும், பழைய பாவசுபாவத்தை நாம் பெற்று இருப்பதால், மாம்சீக சுபாவம் ஆண்டுகொள்ளும்போது, இந்த வாழ்க்கையில் இன்னும் நாம் பாவம் செய்கிறவர்களாய் இருக்கிறோம். (ரோமர்7:21, எப்படியிருப்பினும் ஒரு விசுவாசியின் ஆவிக்குரிய அந்தஸ்தில் பரிசுத்தமாக்கப்பட்டிருந்தும், அனுபவப்பூர்வமாய் மாம்சீகத்தில் இருக்கிறார்.

6. நாம் உயிர்த்தெழுந்த சரீரத்தைப் பெற்றுக்கொள்ளும்போது, நாம் பாவம் செய்வதில் நிலைத்து இருக்க முடியாது, நமது பரிசுத்தமாக்கப்படுதல் பூரணமாக்கப்படும். (1 கொரிந்தியர்15:56, பிலிப்பியர் 3:21, 1 தெசலோனிக்கேயர்5:23).

வேறுபிரிக்கப்படுதல்

1. வழக்கமாய் மாம்சீகத்துக்குரிய விசுவாசிகளைவிட்டு பிரிந்து வாழ விசுவாசிகள் போதிக்கப்படுகின்றனர்.
(1 கொரிந்தியர் 5:10, 11).

2. அவிசுவாசிகள் மற்றும் விக்கிரகங்களை விட்டு வேறுபிரிந்து வாழ விசுவாசிகள் கட்டளையிடப்பட்டுள்ளனர்.
(2 கொரிந்தியர் 6:14).

3. அவிசுவாசிகள் மற்றும் அவர்கள் உறவுகளை விட்டு பிரிந்துவாழ விசுவாசிகள் கட்டளையிடப்படுள்ளனர்.
(2 கொரிந்தியர்6:14 ff).

4. மனிதக் கண்ணோட்டத்தில் வேறுபிரிந்து வாழ்தல் கட்டளையிடப்பட்டுள்ளது. (ரோமர் 12:2, ரோமர்16:17, 18).

5. கற்றுக்கொண்ட உபதேசங்களுக்கு விரோதமாய் பிரிவினைகள், இடறல்களை உண்டாக்குகிறவர்களைவிட்டு பிரிந்து வாழ கட்டளையிடப்படுகின்றனர். (ரோமர் 16:17, 18).

6. புறஜாதிய இஷ்டப்படி, காமவிகாரம், துரிச்சை, மதுபானம்பண்ணுதல், களியாட்டுக்கள், வெறிகொள்ளுதல், அருவருப்பான விக்கிரக ஆராதணை போன்றவற்றிற்கு விலகியிருக்க கட்டளை பெறுதல் (1 பேதுரு 4:3,4).

7. வேதாகம உபதேசங்களை மறுதளித்து வாழும் மற்ற விசுவாசிகளுடன் வேறுபிரிந்து வாழ கட்டளை பெற்றனர்.
(2 தெசலோனிக்கேயர் 3:14, 15)

பாடம் 35 -- எண்ணாகமம் 11,12.

முன்னுரை:

ஜெபிப்பதில் சிறப்பற்றவர்களாயிருந்தும், ஜெப்த்திற்குரிய பதிலை பெறுவது எவ்வாறு என்பது குறித்து இப்பகுதிக்கு தலைப்பை இடலாம். எண்ணாகமம் 11 உபயோகமற்றவர்களாய் இருப்பதற்குரிய குறுக்கு வழியாய் இருக்கிறது. இந்த அதிகாரம் சுய பரிதாபத்துடன் ஆரம்பமாகிறது. போதகராய் இருக்கும் நீங்கள் ஆட்டின் குரலை வைத்து, ஆடு எதற்காய் கத்துகிறது என்பதை புறிந்துகொள்ளும் ஆற்றலை பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். மாம்சீகத்திற்காய் கதறுகிற ஆடாய் இருக்கலாம். நீங்கள் உங்கள் இருதயத்தை அப்படியே புளிந்து ஊற்றுக்கொண்டிருப்பீர்கள், அதையே ஜனங்கள் வேறுவிதத்தில் எடுத்துகொண்டு அதற்கு வேறு விளக்கம் அளித்துகொண்டிருப்பர். நீங்கள் போதிப்பதை குறித்து ஜனங்கள் பேசிக்கொள்வதை கேட்கும்போது, நீங்கள் வியப்பிற்குள்ளாகக் கூடும்.

தேவனது வார்த்தையை விட்டு வெளியே செல்ல நேரிடும் போது நீங்கள் மிகுந்த பாரத்திற்குள்ளாக சாத்தியம் ஏற்படலாம். வாழ்ந்த மனிதர்களில்

மிகப்பெரிய மனிதர்கள் இருவர் மோசே மற்றும் பவுல், மூன்றவதாய் நாம் தாவீதையும் இப்பட்டியலில் சேர்த்துக்கொள்ளலாம். இவர்களது வாழ்வில் 40 ஆண்டுகாலங்கள் அவர்கள் எங்கும் செல்லாது அடைபட்டிருந்தனர். அவர்கள் தங்களது ஆகாரத்திற்காய் வேலை செய்ய வேண்டும் என்கிற அவசியம் இல்லாதிருந்தது, காரணம் தேவன்தாமே அவர்களை போஷிக்கிறவராய் இருந்தார்.

மோசே ஜனங்களுக்கு 40 ஆண்டுகள் the university of B.D [the backside of the desert]. பல்கலை கலகத்தில் பேராசிரியராய் பணியாற்றினார். அவர்கள் என்ன செய்தார்கள், அவர்கள் புலம்பினார்கள். கிறிஸ்தவர்கள் புலம்புவதை தேவன் அருவருக்கிறார். நீங்கள் புலம்புவீர்களானால் நீங்கள் ஐக்கியத்தைவிட்டு வெளி இருக்கிறீர்கள் என்பது புலனாகிறது. உங்களது சூழலைக் கர்த்தரிடம் இருந்து எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட காரியங்கள் நிகழ்வதற்கான காரணம் நீங்கள் சுத்திகரிக்கப்படுவதற்காய் இருக்கிறது.

உங்கள் வழிகளில் எல்லாம் அவரை நினைத்துக்கொள்ளுங்கள், அவர் உங்களுக்கு பாதைகாட்டுகிறவராய் இருக்கிறார். உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மீது வைத்து விடுங்கள், அவர் உங்களை பொறுப்பாய் பார்த்துக்கொள்வார். [Casting all your cares on Him for He cares for you.]. இந்த ஜனங்கள் பகுத்து அறிதலை இழந்து போய்விட்டபடியால், தேவன் இவர்களை தீக்கொழுத்திப்போட்டார். நீங்கள் புலம்பி, குற்றம் சாட்டத் தொடங்குவீர்களானால், தேவனது நியாயத்தீர்ப்பிற்குள்ளாய் வருகிறவர்களாய் இருப்பீர்கள். 1 கொரி.11:30. கர்த்தரின் மேஜையை அலட்சியம் பண்ணின மனநிலை கொரிந்து சபையில் மரணத்திற்கு வழிநடத்துகிறதாய் இருந்தது. சுயப்பரிதாபம் வேரறுக்கப்பட்டு, குற்றமன சாட்சியானது அகற்றப்படவேண்டியது அவசியம். எலியா சுயப்பரிதாபத்தை உணர்ந்தபடியால், அவர் அலமாரியில் உள்ள காட்சிப்பொருள் போன்று அநேக ஆண்டுகள் இருக்க வேண்டியதாயிற்று. தேவனது சிட்சைக்கு மேலானவர்கள் என உங்களை நீங்களே எண்ணிக்கொள்ளக்கூடாது. கர்த்தர் கதவுகளை அடைப்பார். அவர் அவ்வாறு செய்யும்போது, அதைக் கர்த்தரிடம் எடுத்துச் சென்று, மற்றும் நமது சிட்சையையும் எடுத்துக்கொண்டு, நமது வாழ்வை சரிசெய்ய எத்தணிப்போமாக.

எண்ணாகமம் 11

வசனம் 3-5 ல் தேவனது வழிநடத்துதலுக்கு செவிசாய்ப்பதைத் தவிர்த்து, அவர்கள் தாங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என தேவனுக்கு சொல்ல முயன்றுகொண்டு இருந்தனர். ஜனங்கள் கர்த்தாவே நீர் இதைமட்டும்தான் தந்துள்ளீர் எங்களுக்கு அதுதான் வேண்டும் எனக் கூறுகிறவர் களாய் இருக்கின்றனர். தேவன் ஒரு காரியத்திற்கு இல்லை எனப் பதில் அளிக்கும் போது, அவரை தர்மசங்கடத்திற்குள்ளாக்குவது குறித்து எச்சரிக்கையாய் இருங்கள். குறைகூறாதிருங்கள்,

புலம்பாதிருங்கள். உங்களது பாரங்களை கர்த்தரிடம் எடுத்துச் சென்று அதை அங்கேதானே விட்டு விடுங்கள்.

இந்த அதிகாரம் நாம் மிகவும் கவனமாய் இருக்க வேண்டியது குறித்து, நமக்கு ஞாபகப்படுத்துகிறதாய் இருக்கிறது. மட்டுமல்லாது தேவன் மிகச் சிறப்பானவற்றை அறிந்து இருக்கிறார், அவர் எப்பொழுதும் சிறப்பானவற்றையே அருளுகிறவராய் இருக்கிறார். ரோமர் 8:28, அவர் உங்களை நேசிக்கிறார் என்பதைக்குறித்த கவனம் எப்பொழுதும் உங்களுக்கு இருக்க வேண்டிய அவசியமாய் இருக்கிறது. உங்களுக்கு விருப்பமற்ற ஒன்றை அவர் கொடுக்கும் போது ஏன் அவரைக் குறை கூறுகிறவர்களாய் இருக்கிறீர்கள்? உலகம் உங்களுக்கு வெறும் எலுமிச்சம் பழங்களை அளிக்குமேயானால், எலுமிச்சம் ஜூஸ் செய்து பருகுங்கள்.

இவர்கள் கலப்பின மக்களாய் ஒரு முற்பிதாவின் வழிவந்தவர்கள் என அறியக்கூடாதபடி இருந்தனர். இப்படிப்பட்ட காரியம் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்பதை பிரதிபலிப்பதாய் இல்லை.

அவர்கள் ஜனக்குழுக்களுக்குள் இருந்தனர் ஆனால் அவர்கள் இஸ்ரவேலர் அல்லர். இப்படிப்படிப்பட்ட கலப்பின குழுக்கள் நீங்கள் ஊழியம் செய்யும் ஒவ்வொரு சபையிலும் இருப்பர். இவர்கள் ஆவியினால் நடத்தப்படுகிறவர்களாய் இருப்பதில்லை, தங்களது சொந்த பாவ சுபாவத்தால் நடத்தப்படுகிறவர்களாய் இருப்பர். இச்சைகளானது அவர்களை ஆழுகை செய்வதாய் இருக்கும்.

தேவன் அளித்தவைகள்

மன்னாவை, தேவன் அவர்களுக்கு பூரணமாய் அளித்தார். இதில் எல்லாவகையான வைட்டமின்களும், மினரல்களும் இருந்தது, இது ஒரு பூரணமான ஆகாரப்பொருளாய் இருந்தது. இந்த ஆகாரத்தினால் உண்டான பலன் மிக ஆரோக்கியமானதாய் இருந்தது குறித்து சாட்சிபகரப்பட்டது.

எப்படியிருப்பினும் வசனம் 10 ல் அவர்கள் இப்படிப்பட்ட தேவனது கொடுகையை புறக்கணித்தனர், அவர்கள் விரும்பினதை குறித்து ஆவல் உள்ளவர்களானார்கள். அவர்கள் இங்கே, தங்கள் கூடார வாசலில் நின்று ஒவ்வொரு மனிதரும், தங்களுக்குத் தாங்களே அழுகிறவர்களாய் இருந்தனர். புருஷர்கள் தங்கள் குடும்பத்தினருக்கு உற்சாகம் அளிக்கிறவர்களாய் இருந்திருக்க வேண்டும். இது அவரது கொடுகையாய் இருக்கிறபடியால், அது கிருபையாய் அளிக்கப்படுகிறதை உணர வேண்டியதாய் இருந்தது. தேவன் நான் உங்களுக்கு அருளினதைப் பாருங்கள் என்கிறார், தான் அருளாதாதை அவர் பார்க்கக் கூறவில்லை. நீங்கள் அவர் அளிக்காதவற்றைப் பார்க்கும் பொழுது, மிகவும் கசப்புள்ளவர்களாகி, சலித்துப்போகிறவர்களாய் காணப்படுவீர்கள்.

மோசேயை இது வருத்தத்திற்குள்ளாக்கியது. தேவன் எவ்வாறு நினைக்கிறாரோ அவ்வாறே பார்த்தார். அவர் ஜனக்கூட்டத்தின் வாஞ்சையாக, தங்களுக்கு காடைகள் வேண்டும் என்ற தேவனது கொடுகைக்கு எதிரான கலகத்தை கண்டார்.

நீங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தால் கிரயம் கொள்ளப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள், உங்களது சொந்த வாழ்க்கையை நடத்துவது உங்களுக்கடுத்த காரியம் அல்ல அல்லது தேவனின் கிரியைக் குறித்து புகார் அளிப்பதும் உங்களுக்கு அடுத்த காரியமாய் இல்லை. உங்களுக்கு அவர் எதை அளிக்கவில்லையோ அது அவரது தனிச்சிறப்பாய் இருக்கிறது. இப்படிப்பட்டவைகளை அவரிடம் அளித்துவிட்டு, நீங்கள் பெற்றுக்கொண்டவைகளுக்காய் அவருக்கு நன்றி கூறுங்கள்.

வசனம் 11 ல் மோசே தேவனிடம் தான் எங்கு தவறிழைத்துவிட்டேன் எனக்கேட்கிறார். சில சந்தர்ப்பங்களில் நாம் தவறிழைக்கிறவர்கள் இருக்கிறோம், மற்றும் நமது ஊழியத்தை நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், ஊழியத்தில் எங்கு சரிசெய்ய வேண்டுமோ அங்கு சரி செய்து கொள்ளுதல் மிக அவசியம். தேய்ந்து பயனற்றதாய் மாறுவது எளிதான காரியமாய் இருக்கிறது. நீங்கள் ஒரு கூட்டம் மக்களுக்கு போதனை அளித்து அவர்கள் அதை அறியாது இருப்பார்கள் என்பது மிகவும் கடினமான காரியமாய் இருக்கிறது. இந்த சூழலில் அபிப்பிராய பேதம் மிகவும் குறிப்பிடத்தக்க விஷயமாகி, முழு தேசமும் அதைரியத்துக் குள்ளாகிறதாய் இருக்கிறது. மோசேயின் ஊழியத்தில், எல்லா ஜனங்களும் மோசேயை விட்டு பின் திரும்பி தங்களது முதுகைக் காட்டும் சமயம் ஏற்பட்டது. உங்களது ஊழியத்திலும் நீங்கள் தனித்துவிடப்பட்டு, சபையில் உதவிக்காரர் மற்றும் மூப்பர்கள் அனைவரும் உங்களுக்கு எதிராய் நிற்கும் சமயம் வரலாம். அதைக்குறித்து நீங்கள் ஒரு போதும் கலக்கமடைய அவசியமில்லை. உங்களது சொந்த வாழ்வை சரிசெய்து கொள்ளுங்கள், பின்னர் அவர்களிடம் சென்று அவர்களை சந்தியுங்கள், தேவனது வார்த்தையை மறுபடியும் அவர்களுக்கு போதியுங்கள்.

உற்சாகம் இழத்தல்

வசனம் 15 ல் மோசே மிகவும் உற்சாகம் இழந்தவராய் காணப்படுகிறார். கிறிஸ்தவர்கள் உற்சாகமின்றி இருப்பது தவறா? இல்லை, நெருக்கப்படும் காலங்களில் உற்சாகம் இழத்தல் சகஜமான காரியமாய் இருக்கிறது, மோசேயும் இப்படிப்பட்ட சூழலில் இங்கு காணப்படுகிறார். நீங்கள் கர்த்தருக்கு முன் நேர்மையுடன் உத்தமராய் இருக்கும் போது, அவர் உங்களை சரி செய்கிறவராய் இருக்கிறார். தேவன் ஒவ்வொரு காரியத்திலும் நீங்கள் மன உண்மையாய் இருக்க வேண்டும் என்பதை விரும்புகிறவராய் இருக்கிறார்.

வசனம் 16-17 ல் மோசேக்கு உதவியாய் எழுபது பேர் நியமிக்கப்படுகிறார்கள். 1500 ஆண்டுகளுக்குப் பின்னர் மேசியாவிற்கு விரோதமாய் செயல்பட்டு, அவருக்கு மரண ஆக்கினையை வருவித்ததும் இந்த 70 பேர் அடங்கிய சனகரீம் சங்கமே ஆகும். அனைத்து மக்களின் பாரத்தையும் மோசே ஒருவரே சுமந்து தீர்த்தபோது, கர்த்தர் சொன்னார் 70 பேரைத்தெரிந்து கொண்டு தனது ஆவியை இந்த 70 பேரின் பேரிலும் மோசேயின் பேரிலும் அமரச்செய்வேன் என்றார். பிரதிநிதித்தும் மிகவும் நன்மை பயக்கக்கூடியது.

இவர்கள் மீது ஒரு நிழல் இருக்கிறதாய் இருந்தது. நீங்கள் நெருக்கப்படுகிற போது, உங்கள் கவலைகல் அனைத்தையும் கர்த்தர் மீது வைக்கிறவர்களாய் இருக்கிறீர்கள், ஆனால் நீங்கள் கேட்கிறபோது மிகவும் கவனமாய் இருத்தல் வேண்டும். மோசேக்கு உதவி அவசியமாய் இருக்கவில்லை, அவருக்கு தேவையாய் இருந்ததெல்லாம் தேவனது வல்லமை, தனது சொந்த வல்லமையைக் கொண்டு எதுவும் செய்ய இயலாதவராய் இருந்தார். உங்கள் பிரச்சனை பெரிய அளவில் இருக்கும் போது ஒழுங்குபடுத்துதலும் மற்றும் போதனையும் அவசியப்படுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பிரச்சனைகளை தீர்த்து வைக்கும் போது மிகவும் சோர்வை உணருவீர்கள். நாம் இப்பொழுது போதனை மற்றும் நிர்வாகம் இவற்றிலிருந்து ஒழுங்கு படுத்துதலுக்கு திரும்புவோமாக. நீங்கள் விசுவாசிகளாய் பாவத்துடன் வெளியேறாதீர்கள். ஜனங்கள் தேவனது வார்த்தையை அறிந்து கொண்டால் மட்டும் போதாது, அவர்கள் ஒழுக்க ரீதியின் மூலமாயும் அவைகளை எதிர்கொள்ளுதல் அவசியம். இந்த வேத பகுதிக்கு எதிராய் எபிரெயர் 12 ஐ எழுதலாம்.
கர்த்தர் சொல்கிறார், "உங்களுக்கு இறைச்சி வேண்டும், அவைகளால் நீங்கள் வியாதிப்படும் அளவுக்கு அவைகள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்றார்". இங்கேதான் கர்த்தரின் இருதயத்தை நாம் பெற்றுக் கொள்கிறவர்களாயிருக்கிறோம்.

கீழ்ப்படியாமை

உங்கள் கீழ்ப்படியாமை கர்த்தரிடம் கலகம் செய்ய வைக்கிறது. உங்கள் வாழ்வில் நடப்பன குறித்து தேவனிடத்தில் முறையிடுகிறவர்களாய் இருப்பீர்களானால், தேவன் உங்களுக்கு விரோதமாய் இருக்கிறார். உங்களது முறையீட்டை தேவன் ஒரு பக்கத்தில் வைத்துக் கொண்டு சும்மா இருப்பதில்லை, அது குறித்து உங்களுடன் ஈடுபடுகிறவராய் இருக்கிறார். நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது, அது முற்றிலும் விமர்சனத்திற்குரியதாய் இருக்கிறது.

உங்களை எப்பொழுதும் மற்றவர்களுடன் ஒப்பிடாதீர்கள். பரிசேயனும் பாவியும் ஒப்பிட்டுக்கொள்வதை நீங்கள் அறிவீர்கள், ஜெபிக்கும் போது அவர்களது குணாதிசயங்கள் வெளிப்படுகிறதைக் காண்கிறோம், பரிசேயன் தேவனுக்கு நன்றி சொன்னான், மற்ற பாவி அவ்வாறு செய்யவில்லை.

நீங்கள் தேவனது வார்த்தைக்கு கீழ்ப்படியாதவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் தேவனது வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை எனில், நீங்கள் சிட்சைக்கு உட்படுகிறீர்கள், தேவன் தம்மை பரியாசம் பண்ணவொட்டார். நாம் எல்லாவற்றிலும் அவருக்கு நன்றி சொல்கிறோம். நாம் திருடுவதோ, விபச்சாரம் செய்வதோ கிடையாது, இருப்பினும் சில காரியங்களைக் குறித்து புலம்புவோமெனில், இது ஆவிக்குரிய நிலையில் மிக மோசமான செயலாய் கருதப்படுகிறது.

கர்த்தர் இவைகளின் மூலம் உங்களை சுமக்கமுடியும் ஆனால் நாம் நினைக்கிறபடி, நாம் அவருக்கு உதவாதபட்சத்தில் அவரால் அப்படி செய்ய இயலாது. நாம் ஒரு பிரச்சனையுடன் இருக்கிறோம் அது பாவம். கர்த்தருக்கு எவ்வித பிரச்சனையும் இல்லை.

நீங்கள் ஒரு முறை நெருக்கப்படுவீர்களானால், அது சுழற்சியாய் குறிப்பிட்ட காலம் வரை தொடர்ந்து வந்து அந்த சூழல் வெளியேற நேரம் எடுத்துக்கொள்கிறது. நெருக்கங்களிலிருந்து வெளிவர மோசே சில காரியங்களை கூறுகிறவராய் இருக்கிறார். கர்த்தர் மோசேயை தைரியப்படுத்துவதன் மூலம் மற்றும் அவர் தேசத்தை சிட்சிப்பதன் மூலம் இதை செய்யப்போகிறார்.

காடைகள்:

வசனம் 31 ல் "தேவன் காடைகளை வருஷிக்கப் பண்ணினார்" அவைகள் மத்திய தரைக்கடல் வழியாய் பிரயாணம் செய்து, பாளயத்துக்கு வெளியே வந்து விழத்துவங்கியது, அவைகள் ஒரு நாள் பிரயாண தூரம் அதாவது 20 கிலோமீட்டர் தூரம் வரைக்கும் விழுந்து கிடந்தன. இதன் பொருள் அவர்களுக்கு இவ்வித உணவு தேவைப்படுமென்றால் அவர்கள் அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டியதாய் இருந்தது. இதினிமித்தம் கர்த்தர் அவர்களது இச்சைகளை நிறை வேற்றிக்கொள்ள அவர்கள் கடின பிரயத்தனங்களை எடுக்க வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தினார். அவர் கிருபையுள்ளவராய் இருந்து, அது அவரது சித்தம் அல்ல என்பதை என்பதை அவர்கள் காணும்படி செய்தார். இதினிமித்தம் ஜனங்கள் இறைச்சி புசிக்க வேண்டுமென்றால், அவர்கள் வெகுதூரம் சென்று அதைக் கொண்டுவர வேண்டியதாய் இருந்தது. எப்படியிருப்பினும் 36 மணி நேரங்கள் அவர்கள் காடைகளை சேகரித்தனர், அவைகள் எடுத்துச் சென்ற பாத்திரங்கள் அனைத்தையும் நிரப்பிக்கொண்டனர். காடைகளை அவர்கள் புசிக்கும் முன்னரே அவர்களைத் தேவன் வாதைகளால் அடிக்கத் துவங்கியபடியால், அவ்வாதைகளால் இச்சித்தவர்கள் மரித்தனர். தேவன் எச்சரிப்பை அளித்தார், அவர் அவர்களது இச்சைகளை அடைவதை கடினமாக்கியிருந்தும், அவர்கள் பிடிவாதமாய் சென்று முயன்று பெற்றுக்கொண்டனர்.

உங்களது சூழ்நிலை காரணமாய் சில நேரங்களில், உங்களது சிறிது முயற்சியினாலே உங்களது இச்சைகளை நிறைவேற்றிக் கொள்ள இயலும்.

எப்பேர்பட்ட இச்சைகளாய் இருப்பினும் கிருபையின் தேவன் அதைக் கடினமாக்குகிறவராய் இருக்கிறார்.

எச்சரிப்பாய் எடுத்துக்கொள்ளுங்கள், அவைகளிலிருந்து பின்வாங்கினவர்களாய் தேவனது பரிசுத்தத்தை நினைவு கூறுங்கள். அவருக்கு முன்பாக அவற்றை அறிக்கை செய்யுங்கள். இச்சையின் ஆதாரத்தை யாக்கோபு 1:13-15, 19-25 சுய இச்சைகளாலே இழுக்கப்படுகிறீர்கள். அதை பாவம் எனக்கருதி ஈடுபடுங்கள் மற்றும் எங்கு சென்று அவைகள் முடிவடையும் என்பதையும் உணர்ந்து கொள்ளுங்கள்.

அதிகாரம் 12

இந்த அதிகாரத்தில் மிரியாமும் ஆரோனும் மோசேயை நியாயந்தீர்க்கிறவர்களாய் காணப்படுகிறார்கள். மோசே தேவனது வேலையை செய்ய தீர்மானித்த போது, அவரது மனைவி அவரைவிட்டுப் பிரிந்தாள். மோசேயின் மாமனார் தன் மகளை திரும்ப அழைத்துவந்து மறுமணம் செய்து வைத்தார். ஆரோனும் மிரியாமும் மோசேக்குப் பின்னாக அவமானப்படுத்த துவங்கினர். ஒரு தேவனுடைய மனிதன் தவறிழைக்கும்போது, அவரை அவமானப்படுத்தி, அவருக்குப் பின்னாக ஓடி தவறிழைக்கிறவர்களாய் இருந்தனர். நீங்கள் ஒருவர் சேவைக்கென அழைக்கப்பட்டிருக்கும் போது அந்நபர் தவறிழைத்து இருந்தும் அதை சுட்டிக்காட்டுவது உங்களது தவறாய் இருக்கிறது. ஒரு வேளை உங்கள் சகோதரர் தவறிழைக்கும் போது அவரிடத்தில் சென்று அவரது தவறை உணர்த்தி அவரை திரும்ப சகோதரராய் அங்கீகரித்துக்கொள்ள முயலுங்கள். இவ்வாறு அவர்களை சிட்சையின் மூலம் அவமானப்படுத்தி, அவமானப்படுத்தப்படும் நபர் ஆசீர்வாதத்தைப் பெறுகிறவராய் இருப்பார்.

ஜனங்கள் உங்களை அவமானப்படுத்தும் போது, போதகராகிய நீங்கள் அதைக் குறித்து பயப்பட வேண்டாம். ஏதோ நிகழ்ந்து விட்டது என நீங்கள் கண்டு கொள்ளும் போது, நீங்கள் அவர்களிடம் சென்று தீவிர விசாரணை செய்து மிரியாமும் ஆரோனும் சொல்கிற விஷயமாகிய "மோசே மட்டும்தான் போதகரா, தேவன் எங்களையும் உபயோகிக்கவில்லையா?" என்கிற காரியத்தை கண்டுகொள்ள முயலுங்கள்.

அவர்கள் மோசேயின் அதிகாரத்தை அவமதிக்க முற்பட்டனர், மோசேயைக் குறித்து, அவர்கள் அவர் மட்டுமே அதிகம் உயர்ந்தவர், பராக்கிரமம் செய்கிறவர் இவ்வாறு கூறி பெருமையினால் பாதிப்புக்குள்ளானார்கள். இதைப்போன்ற பிரச்சனைகளை மிகச் சிறப்பாய் முன்னேறிச் செல்லும் சபைகளில் காணமுடியும். அங்கு உள்ள ஜனங்கள் உங்களை அவமானப்படுத்த முயலுவர். அப்படிப்பட்ட ஜனங்களைக் குறித்து ஜாக்கிரதையாய் இருங்கள்.

தாழ்மை

மோசே மிகவும் சாந்த குணமுள்ள மனிதராய் இருந்தார். சாந்த குணம் என்பது வலிமை சேர்க்கக்கூடியது, அது பெலவீனம் என சொல்வதற்கில்லை. நீங்கள் தேவனைக் குறித்து மிகவும் கரிசனை உள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், மற்றவர்கள் உங்களைக் குறித்து எப்படி நினைத்தாலும் அதைக் குறித்து பொருட்படுத்தாது இருத்தல் வேண்டும். மோசே சாந்த குணமுள்ளவராய் இருந்து தனது திருமணத்தைக் குறித்து எதைக் கூறினாலும் அதைப் பொருட்படுத்தாது இருந்தார்.

மோசே மிரியாமையும் ஆரோனையும் ஆசரிப்புக் கூடாரத்திற்கு கீழாக அழைத்தார். தேவன் சொன்னார் தீர்க்கதரிசிகளுக்கு தரிசனத்திலும் சொப்பனத்திலும் அவர்களுடன் பேசுவேன் ஆனால் மோசேயுடன் முக முகமாய் பேசுகிறவராய் இருக்கிறேன். தேவன் அவர்களுக்குச் சொன்னதாவது தேவனுடைய மனிதரிடம் அவர்கள் தாக்குதலை நடப்பித்தல் கூடாது என்றார். அவர்களுக்கு அவர்கள் செய்ய வேண்டிய சொந்த வேலைகள் இருக்கின்றன, அவர்கள் மோசேயின் வேலையை எவ்விதத்திலும் செய்யக்கூடாது என்றார். நீங்கள் சபையில் ஒரு பின்தங்கிய ஊழியராய் இருந்த போதிலும், மிகவும் சிறப்பான பின்தங்கிய ஊழியராய் இருங்கள். தகுந்த நேரத்தில் தேவன்தாமே உங்களை உயர்த்துகிறவராய் இருக்கிறார்.

நீங்கள் ஜனங்களின் முதுகில் குத்துகிறவர்களாய் இருக்கக்கூடாது. தேவன் உங்கள் ஊழியத்தை விரிவுபடுத்தட்டும் அல்லது விரிவுபடாமலே இருக்கட்டும். மிரியாம் மிகப்பெரிய உபதேசப்பாடலை பாடின ஒருத்தியாய் இருக்கிறாள். இவள் பெருமைக்கு அனுமதியளித்து இவ்விஷயத்தில் தன்னை மேகம்போன்று மூடிக்கொள்ள அனுமதித்தாள். பெருமைப்படும் மக்கள் மற்ற வரங்களையும் பெற்றுக்கொள்ள ஆசிப்பர். கிறிஸ்தவர்கள் அகந்தையுள்ளவர்களாகிறார்கள். நீங்கள் தேவனை சோதனைக்குட்படுத்தி அவரை உங்களை நியாயந்தீர்க்கிறவராக்குகிறீர்கள். உங்கள் ஜெபம் கர்த்தாவே நான் எங்கு இருக்க வேண்டும் என்பதை எனக்குக் காட்டும் அல்லது இப்பொழுது என்ன செய்வேண்டும் என நீர் விருப்பமுள்ளவராய் இருக்கிறீர்? என்பதைக் குறித்து எனக்கு சொல்லும். நீங்கள் காணும்போது செய்யுங்கள். ஆவியின் பெலத்துடனும் மற்றும் ஆர்வத்துடனும் அவற்றை செய்யுங்கள்.

மிரியாம் குஷ்டரோகியானாள். ஆரோன் அவளைப்பார்த்த போது வெண்குஷ்டம் அவள் மீது படர்ந்திருப்பதைக் கண்டான். குஷ்டம் பாவத்தின் அடையாளமாய் இருக்கிறது. பெருமையாகிய பாவம், கீழ்ப்படியாமையாகிய பாவம். அவளை குஷ்டத்தினால் மூடின போது, தேவனுக்கு முன் பாவம் எப்படி இருக்கும் என காட்ட மனதுள்ளவரானார். மோசே தேவனை நோக்கி, அவளுக்காய் ஜெபம் பண்ணி தனக்கு முன் அவள் அழிந்து போகாதிருக்க வேண்டுதல் செய்தார். கர்த்தர் சொன்னார் இன்னும் ஏழு நாட்களில் அவள் சுகமாவாள் என்றார். இவ்வாறு பாடம் கற்பிக்கப்பட்டது, இருப்பினும் இப்பாடம் கண்டு கற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றாய் இருந்தது.

உபதேசங்கள்

மன்னா

1. மன்னா ஒவ்வொரு நாளும் அருளப்பட்டது, ஆனால் இப்பொழுது இல்லை (யாதிராகமம்16:4,5, 16:22-27). கர்த்தர் ஒவ்வொரு நாளும் மன்னா அளித்து பராமறித்தார், சனிக்கிழமை தவிர்த்து மற்ற எல்லா நாட்களிலும் அவர்களுக்கு மன்னா அளிக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை தோறும் இஸ்ரவேலருக்கு கர்த்தர் மன்னாவை இருமடங்கு அளித்துவந்தார்.
வெள்ளிக்கிழமை தவிர மற்றநாட்களீல் அதிகமாய் சேகரித்து மீதம் வைப்பார்களெனில், அவை அழுகி புழு அவைகளில் காணப்பட்டது. இதில் கற்றுக்கொள்வன: - சில உபதேசங்களை தினமும் பயன்படுத்தவேண்டும், சிலவற்றை குறிப்பிட்ட காலங்களில் மட்டும் பயன்படுத்த வேண்டும்.

2. நிறைவாய் சேர்ப்பவர்களுக்கும், குறைவாய் சேர்ப்பவர்களுக்கும் மன்ன சரி சமமாய் அளிக்கப்பட்டது. மன்னாவின் அளவு, ஒருவருக்கு எந்த அளவு அளிக்கப்படவேண்டுமோ அது சரியாய் அளிக்கப்பட்டது. (யாத்திராகமம்16:16-18,
2 கொரிந்தியர்8:15). இது சமநிலை பிரமாணத்தை குறிக்கிறது. தேவன் எப்பொழுதும் அவர்களுக்கு சமமான அளவீட்டையே அளித்து வந்தார். கிறிஸ்துவுக்குள் ஒவ்வொருவரும் சமமாய் இருக்கிறோம், அனால் ஒவ்வொரு விசுவாசியும் ஒரே விதமான ஆவிக்குரிய அனுபவத்தை பெற்று இருப்பதில்லை. தேவன் உங்கள் நிறைவு இழக்கப்படுவதை தவிர்க்கவராய் இருக்கிறார்.

3. மன்னா கெட்டுப்போனது, மற்றும் கெடாமலும் இருந்தது. (யாத்திராகமம்16:19, 20). மன்னாவில் மீந்ததை இரவில் மீதம் வைத்தபோது அது கெட்டுப்போயிற்று, அதே சமயம் ஆறாம் நாளில் மறு நாளைக்கும் சேர்த்து வைக்கப்பட்ட மன்னா, பாதுகாப்பாய் கெடாமல் இருந்தது. நமக்கு அளிக்கப்படும் நன்மைகளில் களிகூற மனிதன் தேவனுடைய நடத்துதல் மற்றும் திட்டங்களை கடைபிடித்து அவற்றை பின்பற்றவேண்டும்.

4. அதிகமாய் சேர்த்துவைக்கப்பட்ட மன்னா அழுகிப்போனது அனால் உடன்படிக்கைப்பெட்டியில் வைக்கப்பட்ட மன்னா காலவரையற்ற நிலையில் பாதுகாக்கப்பட்டு வந்தது. . (யாத்திராகமம்16:19, 20, எபிரெயர்9:4, யாத்திராகமம் 16:33).

5. மன்னா உருகிப்போனது அனால் உருகாமலும் இருந்தது. (யாத்திராகமம் 16:21). சேகரிக்கப்பட்ட மன்னா மட்டும் சூரிய ஒளியில் உருகாமல் இருந்தது. நமது ஆத்துமாவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வேத உபதேசம் மட்டும் நெருக்கப்படுகிற காலங்களிலும், மற்றும் செழிப்புள்ள காலங்களிலும் உதவியாய் இருக்கும். சேகரிக்கப்படாத மன்னா வேதத்தில் ஏற்றுக்கொள்ளாத உபதேசங்களுக்கு ஒப்பாய் இருக்கிறது.

6. மன்னாவின் ருசி சிலருக்கு பிடித்திருந்தது, சிலருக்குப் பிடிக்கவிலை (யாத்திராகமம் 16:31, எண்ணாகமம்21:5). இது தேவ வசனதிற்கு நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் இருப்பதை விவரிக்கிறது.

7. மன்னா இஸ்ரவேலர் முறுமுறுத்து முறையிட்டபோது அவர்களுக்கு கிடைத்தது. (யாத்திராகமம் 16:2-4). இதினிமித்தம் மன்னா கிருபையாய் அளிக்கப்பட்ட உணவாய் இருந்தது, இஸ்ரவேலர் அதற்காய் கிரயம் செலுத்தவோ, அதற்கு தகுதியுள்ளவர்களாகவோ இல்லை (சங்கீதம்78:18-25). தேவன் உண்மையுள்ளவராய் இருந்து அவர்களுக்கு மன்னாவை அருளினார். (யாத்திராகமம் 16:35).

8. கிருபையாய் அருளப்பட்ட மன்னாவைப் புறக்கணிப்பது தெய்வீக சிட்சைக்கு வழிவகுக்கிறது. (எண்ணாகமம்21:5, 6). தேவன் விசுவாசியை கிருபையின் கீழ் ஆசீர்வதிக்கிறார், அவ்விசுவாசி கிருபையினின்று விலகும்போது, அவ்விசுவாசி கிருபையினின்று விழுந்து போகிறார் (கலாத்தியர்5:4). கிருபையில் தவறிப்போதல் (எபிரெயர்12:15).

உங்களைக் குறித்த தேவனின் கரிசனை

1. தேவன் அறிகிறவர்:

வேதனகளை அறிகிறவர் (யாத்திராகமம்3:7)
நமது தியானங்களை அறிகிறவர் (2 நாளாகமம்16:9)
நமது சிந்தனைகளை அற்கிறவர். (சங்கீதம்44:21)
நமது புத்தியீனங்களை அறிகிறவர். (சங்கீதம் 69:5)
நமது உருவம் இன்னதென அறிபவர் (சங்கீதம் 103:14)
நமது கிரியைகளை அறிபவர் (சங்கீதம் 139:2)
நமது வார்த்தைகளை அறிகிறவர் (சங்கீதம் 139:4)
நட்சத்திர இலக்கங்களை எண்ணி பெயரிடுபவர் (சங்கீதம் 147:4)
எல்லா காரியங்களையும் அறிபவர் (நீதிமொழிகள்15:3)
நமது தேவைகளை அறிபவர்: (மத்தேயு6:32)
விலங்கினங்களின் சிருஷ்டிப்பைக் குறித்து அறிபவர் (மத்தேயு10:29)
மனுக்குலத்தை அறிபவர் (மத்தேயு10:30)
என்ன நடக்கவிருக்கிறது அல்லது அது எப்படியிருக்கப்போகிறது என்பதை அறிகிறவர் (மத்தேயு 11:23)
தமக்கு சொந்தமானவர்களை அறிகிறவர். (யோவான்10:14)
கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலத்தை அறிபவர் (அப்போஸ்தலர் 15:18)

2. தேவன் வல்லவராய் இருக்கிறார்.

- கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார். - எபிரெயர்7:25
- ஒவ்வொரு தேவைகளையும் சந்திக்க வல்லவராய் இருக்கிறார். - 2 கொரிந்தியர்9:8
- சோதிக்கப்படுகிற எல்லோரையும் விடுவிக்க வல்லவராய் இருக்கிறார். - எபிரெயர் 2:18
- பெலவீன விசுவாசிகளைத் தாங்கி அவர்களை நிற்க செய்கிறார் - ரோமர்14:4
- வழுவாமல் நம்மைப்பாதுகாத்து, குற்றமற்றவர்களாகுகிறார். - யூதா24,25
- நாம் நினைப்பதற்கும், வேண்டிகொள்வதற்கும் அதிகமாய் கிரியை செய்கிறவர் - எபேசியர் 3:20
- தனது குமாரனின் சாயலுக்கொப்பாக, உயிர்த்தெழுதலில் நம்மை எழுப்புகிறார். - எபிரெயர் 11:19

3. தேவனால் எல்லாம் கூடும் - மத்தேயு 19:26

4. தேவனை மிஞ்சி எதுவும் நமது வாழ்வில் நிகழ்வதில்லை - (1 கொரிந்தியர் 10:13)

5. தேவனுடைய பண்புகள் நிலையானது:
    - தேவன் நம் பட்சத்தில் இருந்தால் நமக்கு விரோதி யார்? (ரோமர்8:31-34)
    - என்ன நேரிடினும், பொருட்டல்ல, தேவனுடைய அன்பு நிலையானது. (ரோமர்8:35-39).

6. தேவனின் வாக்குத்தத்தங்கள் பாதுகாப்பனது காரணம் அவர் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார். (மத்தேயு 28:19-20, எரேமியா1:19).

7. தேவனின் வல்லமை எப்பொழுதும் ஒரே விதமாய் இருக்கிறது.
    - அவர் எப்பொழுதும் நம்மை காக்கிறவர். (யோவான்10:29, 2 தீமோத்தேயு 1:12,).
    - தேவன் நம்மை மறக்கிறவர் அல்ல அல்லது நம்மை பாதுகாக்க அவரது வல்லமை இழக்கப்படுவதும் இல்லை (யூதா24).
    - ஒருவேளை ஐக்கியத்தினின்று நாம் விழுந்துபோக நேரிடினும், நாம் இரட்சிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறோம். (2 தீமோத்தேயு 2:13).

8. நமக்கு என்னதேவை என்பதை தேவன் முன்கூட்டியே அறிகிறவராய் இருக்கிறார், நமது தேவைகள் அனைத்தையும் அவர் சந்திக்கிறார்.
(பிலிப்பியர் 4:19, எபிரெயர்4:16, எபேசியர்3:12,).

9. நம்மை ஆசீர்வதிக்க தேவன் வல்லமையுடையவராய் இருக்கிறார். (2 கொரிந்தியர் 9:8).

10. தேவன் எல்லா கிருபையையும் நம்மில் பெருகச்செய்கிறவராய் இருக்கிறார். (எபேசியர் 3:20).

தாழ்மை

1. தாழ்மைத் தேடப்படவேண்டிய ஒன்று. செப்பனியா 2:3.

2. தாழ்மை காணப்படுகிற வரையறையில் இருக்கிறது லூக்கா 6:28-29.

3. பரிசுத்த ஆவியானவரால் தாழ்மை உருவாக்கப்படுகிறது. கலாத்தியர் 5:22-23.

4. போதனையில் தாழ்மை அவசியமான ஒன்று 2 தீமோத்தேயு2:25.

5. கற்றுக்கொள்ளுதலில் தாழ்மை அவசியமான ஒன்று யாக்கோபு 1:21.

6. தாழ்மை தேவனுக்கு விலையேறப்பட்டது. நீதிமொழிகள்3:34; யாக்கோபு 4:6, 1 பேதுரு5:5.

7. தாழ்மை மேன்மைக்கு வழியாய் இருக்கிறது 1 பேதுரு 5:6.

8. தாழ்மை தன்னைத்தானே சோதித்தறிகிறது ரோமர்12:3.

9. தாழ்மைக்கு முன்மாதிரிகள்:
   மோசே - எண்ணாகமம்12:3.
   தாவீது - 2 சாமுவேல் 16:11.
   எரேமியா - எரேமியா 26:14.
   ஸ்தேவான் - அப்போஸ்தலர் 7:60.
   பவுல் - 2 தீமோத்தேயு4:16.

10. தாழ்மைக்குறிய அறிகுறிகள்:
   மற்றவர்களைத் தாங்குதல் - எபேசியர்4:2,6:9, கொலோசெயர் 3:13.
   துன்பங்களை சகித்தல் - 1 கொரிந்தியர்13:7, யாக்கோபு1:12.
   மனதுருக்கம் - 1 தெசலோனிக்கேயர்2:7.
   சமாதானமாயிருத்தல் - யாக்கோபு3:17.

11. தாழ்மை கிறிஸ்துவின் ஆரம்ப குணாதிசயமாய் இருந்தது. - ஏசாயா 53:7, மத்தேயு11:29, 21:5.

12. தாழ்மையுள்ளவர்களுக்குரிய வாக்குத்தத்தம் - சங்கீதம் 22;26, 37:11, 147:6, ஏசாயா 29:19.

அழுகை

1. அழுகை என்பது அவிசுவாசத்தை வெளிப்படுத்தும் ஒன்றாய் இருக்கிறது. உ.ம். எண்ணாகமம் 14:1 மற்றும் எபிரெயர் 3:19. இடம் பெற்றுள்ள அழுகை.

2. பாவ வகையான அழுகை:

அ] தாவீதின் தோல்விக்கான் அழுகை. (2 சாமுவேல் 18:33, 19:1-4)
ஆ] பேரழிவின் போது மனநிலை முறிவு. (1 சாமுவேல் 30:4, சங்கீதம் 42:3)
இ] இரண்டாம் ஆலயத்தின் பிரதிஷ்டையின் போது, பழைய காலத்தின் கசப்புகள் மற்றும் ஏமாற்றங்களை எண்ணி அழுதல். (எஸ்றா 3:12,13)
ஈ] குடித்து வெறித்து தேசிய அழிவின் போது அழுதல் (யோவேல் 1:5)
உ) இராட்சதர் தேசத்தில் இருப்பதால் பயந்து அழுதல். (எண்ணாகம் 14:1)
ஊ) அவிசுவாசிகளின் நியாயத்தீர்ப்பில் அழுதல் (மத்தேயு 8:12, 25:30, லூக்கா 13:28)

3. அழுகையின் உண்மையான பகுதிகள்:

அ] லாசருவின் கல்லறையில் இயேசுவின் அழுகை (யோவான் 11:35). இழப்பின் போது உண்மையில் அழுதல்.
ஆ] எருசலேம் பட்டணத்தின் மீது இயேசுவின் அழுகை (லூக்கா 19:41) தேசப்பற்றினால் அழுதல்.
இ] சிலுவை மீது இயேசுவின் அழுகை (எபிரெயர் 5:7)
ஈ] புலம்பி அழுதல் (1 தெசலோனிக்கேயர் 4:13)
உ] விசுவாசம் மற்றும் சந்தோஷத்தை வெளிப்படுத்துவதற்காய் அழுதல்.
ஊ] எதிர் விளைவுகளினால் உண்டான வேதனையின் நிமித்தம் அழுதல்.

4. எல்லா அழுகையும் முடியப்போகும் காலம் வருகிறது (ஏசாயா 30:19, வெளிப்படுத்தல் 21:4), மரணத்திற்குப் பின்.

பாடம் 36 -- எண்ணாகமம் 16

முன்னுரை

கோரா, தாத்தான், மற்றும் அபிராம் மோசேக்கு எதிராய் கலகம் செய்தல். இப்படிப்பட்ட ஜனங்கள் தெய்வீக அதிகாரத்திற்கு எதிராக கலகம் பண்ணும் உதராணமாய் யூதா புஸ்தகத்தில் தோன்றுகிறவர்களாய் இருக்கின்றனர். இங்கு ஒரு போதகர் தாக்கப்படுதலை காண்கிறோம். மனிதரின் பெருமை எவ்வளவு தூரம் செல்கிறது என்பதையும், தேவன் அதைக் குறித்து என்ன எண்ணம் கொள்கிறார் என்பதையும் நாம் காண்கிறோம்.

"மறுதலித்தல்" என்ற வார்த்தையை பயன்படுத்துவதன் மூலம், கோரா, தானும் தனது கூட்டாளிகளும் மிகவும் தாழ்ந்த கும்பலை தூண்டிவிட்டு தீமை இழைக்க முற்பட்டதாக எண்ணினான். அவன் தீமை செய்கிறவனாய் இருந்தும், அவன் ஆசாரிய கோத்திரத்தை சேர்ந்தவனாய் இருந்தான் என்பது முக்கியம் வாய்ந்த பாத்திரமாய் இருந்தபோதும் மற்றும் ஜனங்கள் மத்தியில் மரியாதைக்குரிய மனிதனாய் இருந்தும் தீமை செய்ய தன்னை அற்பணித்துக்கொண்டான். தேவனுக்கு விரோதமாய் கலகம் செய்யும் ஆத்துமா தீமையினால் நிறைந்ததாய் இருக்கிறது. சபையில் அடிக்கடி நல்ல வேலையாட்கள் அதிகாரத்திற்கு எதிராய் கலகம் செய்கிறவர்களாய் இருப்பதை நாம் கண்டு கொள்ள முடியும். அவர்கள் மிகவும் திறமைசாலிகளாய் இருப்பார்கள், இருப்பினும் அவர்களது பெருமை, சுய நீதி, கர்வம் அவர்களைத் திருடி அவர்களது திறமைகளில் செயல்பட வைக்கிறதாய் இருக்கிறது.

கலகம் அடிக்கடி சொல்லிக்கொள்வது, இந்த குறிப்பிட்ட காரியம் தேவனது சித்தமாய் இருக்கிறது அல்லது தாங்கள் செய்வது முற்றிலும் சரியானது என்று கூறும். இக்கூட்டத்தினர் மிகச் சிறந்த ஆவிக்குரிய குழுவினராய் இருப்பர், இப்படிப்பட்டவர்கள் எப்படியாவது தேவனுக்கு எதையாவது ஒன்றை செலுத்த வேண்டும் என்று நினப்பார்கள், தேவன் கதவை திறக்கும் வரையில் காத்திருக்கமாட்டார்கள். அவர்கள் தாங்கள் தேவனுக்கு அற்பணித்தது மிகவும் முக்கியமான ஒன்று அதனால் கதவை உடைக்க முற்படுவர். இதுவே பெருமையானது நிரம்பி வழிந்து தீமையான செயல்களை செய்ய வைக்கிறது.

எண்ணாகமம் 16

வசனம் 1-3 ல் ஆவிக்குரிய மொழியில் இருக்கும் தீமையான வார்த்தைகளை இவ்வசனங்களில் காண்கிறோம். சபைக்குழுவில் உள்ள ஜனங்கள் ஊழியரைவிட தாங்கள் சிறப்பானவர்கள் என விசுவாசிக்கின்றனர். அவர் ஆசாரியத்துவத்தை எல்லா விசுவாசிகளுக்கும் போதிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

எண்ணாகமம் ஆடுகளின் மேய்ப்பர்களை அதிகாரத்துடன் நியமணம் செய்கிறதாய் இருக்கிறது. மோசே அதிகாரத்தை எடுத்துக்கொண்டு அவர் ஆழுகை செய்கிறவராய் இருந்தார். அவர் வன்முறையான, கடினமுள்ளவராய் இருந்தார். கலகம் செய்யும் மனிதர்கள் மற்ற ஜனங்கள் மோசேயை எவ்வாறு கண்டார்களோ அவ்வாறே தாங்களும் காண விரும்பினர். நீங்கள் ஜனங்கள் மிகவும் மான்புமிக்கவர்களாய் இருப்பதைக் கண்டுகொள்ளக் கூடும், அதிக பாரத்தை சுமக்கும் தலைவர்களுக்கு இவர்கள் உதவ விரும்புவதில்லை, அவர்களுக்குப் பதிலாய் வேறொருவரை நியமிக்க எத்தனப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். வியக்கத் தகுந்த காரியங்களை மோசே செய்வார் என்றால் அவர்கள் மோசேக்கு உதவ முன்வருவதை விரும்புவதாக அறிவித்து இருப்பார்கள். மோசே சுமப்பதற்கரிய பாரத்தை சுமக்கிறவராய் இருந்து, அவருக்கு உதவி அவசியமாய் இருந்தது. அவரிடத்தில் அன்பு செலுத்தி, அவருக்கு துணையாய் இருக்க 250 இளவரசர்கள் இஸ்ரவேலில் அவசியப்பட்டனர்.

இப்படிப்பட்ட ஜனங்கள் அவர்களைப் பாதிக்கும் பாவத்தினை மோசே செய்தார் என குற்றம் சாட்டுகிறவர்களாய் இருந்தனர். ஜனங்களின் சொந்த வாழ்வில் பாவம் இருக்கும் போது, மற்றவர்கள் பாவத்தை உடனடியாய் சுட்டிக்காட்டுவதில் ஆர்வங்கொள்வர். ஜனங்கள் உங்களை குற்றம் சாட்டி தாக்குதல் நடத்துவார்களானால், அது அவர்கள் வாழ்வில் பயன்படுத்தி வரும் பிரச்சனைகளாய் இருக்கிறது.

யுத்தம் கர்த்தருடையதாய் இருக்கிறது:

மோசேயின் பிரதிக்கிரியை எப்பொழுதும் முகம் குப்புற விழுகிறதாய் இருந்தது. அவர் எப்பொழுதும் தனக்காய் எதையாகிலும் பேச முயற்சித்தது இல்லை. அவர் ஒருபோதும் இதை அதை, மற்றவற்றை கர்த்தருக்காய் செய்தேன் எனக்கூறியது கிடையாது. அவர் ஒரு ஸ்தானாபதியாய் இருந்து, அவரை அவர்கள் தாக்கியபோது, அது கர்த்தரை தாக்கியதாய் இருந்தது. அவற்றை அவர் ஒருபோதும் தனக்காக எனக் காணாமல், நித்திய ஜீவனுக்குரிய கண்ணோட்டத்தில் காண்கிறவராய் இருந்தார். மோசே எப்பொழுதும் தேவனது கரத்தில் இருப்பதை உணர்ந்தார், இதினிமித்தம் தேவன் அவர்கள் நடுவே நியாயந்தீர்க்கிறவராய் இருந்தார்.

ஒரே காரியத்தை உங்களது ஊழியத்தை குறைவாய் எடை போடுகிறவர்களைக் குறித்து நீங்கள் சொல்லலாம். கர்த்தர் உங்களுக்கும் எனக்கும் நடுவே நின்று நியாயந்தீர்ப்பாராக. நான் உண்மையற்றவனாயிருந்து, தகாதவற்றை நடப்பித்து இருப்பேனேயானால் கர்த்தர் என்னை நியாயந்தீர்க்கட்டும் மற்றும் எனக்குப் பதிலாய் என் ஸ்தானத்திற்கு நீங்கள் வர விருப்பப்பட்டால் அதை அதிகம் வரவேற்கிறேன். இதுவே உண்மையான சாந்த குணமாய் இருக்கிறது. நமது வழக்கை கர்த்தர் கரத்தில் விட்டுவிட வேண்டும். மோசே பரிசுத்தத்தை வலியுறுத்தி, கர்த்தரின் தெரிந்துகொள்ளுதலுக்கு விட்டுவிடுகிறவராய் இருந்தார்.

நடைமுறை படுத்துவதற்கு 1 கொரிந்தியர் 12 ல் ஆவியின் வரங்களைப் பெற்று இருக்கிறோம். சபையில் உள்ள அங்கத்தினருக்கு என்னென்ன வரங்களை யாருக்கு அருளுவது என்பது தேவன் எடுக்கும் தீர்மானமாய் இருக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள நபர்கள் அவர்களது வரங்களை பயன்படுத்தும் போது, மற்றவர்களுக்கு சபையில் ஒதுக்கப்பட்ட வேலையை எடுக்க முயற்சிப்பதும் அவைகளில் தலையிடுவதில் இருந்து விலகியிருப்பதும் மிக முக்கியமான காரியமாய் இருக்கிறது. தேவன் உங்களை ஒரு போதகராய் அழைத்து இருப்பாரேயானால், அப்படிப்பட்டவராய் இருக்க வேண்டியது உங்கள் கடமையாய் இருக்கிறது. நீங்கள் பாவசிந்தையோடு நடப்பீர்களானால், உங்கள் அழைப்பை இழந்து போகிறவர்களாய் இருக்கிறீர்கள். தேவனின் தெரிந்துகொள்ளுதல், அவருக்கு கடினமானதொன்றும் இல்லை.

ஆவிக்குரிய வரங்கள்:

1 கொரிந்தியரில், கொரிந்தியர்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிராத வரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பினார்கள், அவர்கள் மற்ற வட்டாரங்களிலும் ஊழியம் செய்ய விரும்பினர். பவுல் கர்த்தர் எதைச் செய்யும் படி நம்மைத் தெரிந்து கொண்டாரோ அதைச் செய்யும்படி உற்சாகப்படுத்தினார். இதனால் ஆவிக்குரிய தன்மை என்பது ஒரு ஆவிக்குரிய சபையின் திறவுகோலாய் இருக்கிறது. கர்த்தரது விருப்பப்படி நம்மை எங்கு வைத்து செயல்படுத்த விரும்புகிறாரோ அதைத்தவிர வேறொன்றையும் நாம் விரும்பக்கூடாது. நீங்கள் கர்த்தரின் சித்தத்தில் இருக்கும் வரை பாதுகாப்புடன் இருப்பீர்கள். அநேக மூப்பர்களும், கண்கானிகளும் போதகர்களை அவர்கள் கண்களுக்கு முன்பாக விரக்தி அடையச் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களுக்கு ஒழுங்குபடுத்தப்பட்ட, இப்படிப்பட்ட அடிப்படை சத்தியங்களை போதிக்க அவசியப்படுகிறது.

1 கொரிந்தியர் 12 ல் கண்ணுக்கும் காதுக்கும் உள்ள முறண்பாட்டை நாம் பெற்று இருக்கிறோம். பரிசுத்த ஆவியானவர் தனது சர்வ ஞானத்தினால் ஆவிக்குரிய வரங்களை பகிர்ந்தளித்து சபையில் உள்ள வேலைக்குத் தகுந்தவாறு அவற்றை பரிமாறுகிறவராய் இருக்கிறார். அநேகக் கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவ வேலைகளில் ஈடுபடுவது அவர்களது சொந்த காரணங்களுக்காய். நாம் எந்து அமைந்து கர்த்தருக்காய் சிறப்பாய் செயல்பட முடியும் என்பதை நாம் கண்டு கொள்வது அவசியமாய் இருக்கிறது. நீங்கள் சபைக்குள் தந்திர சதி ஆலோசனைகளை காண்பீர்களானால், அது தலைமைத்துவத்தில் நல்லிணக்கத்தைக் கெடுத்து, அங்கு ஒரு காரியமும் சரியாய் செயல்படா வண்ணம் தடையை ஏற்படுத்துகிறது. பிரசிங்கிப்பவரில் வல்லமை இல்லாது காணப்படும், அல்லது தேவனது வார்த்தையில் சுவிஷேசம் அறிவிப்பதும் அப்படியே காணப்படும். முன்னால் நின்று செயல்படுத்தப்படும் வேலைகளை தேடாதிருங்கள்.

வசனம் 8 ல் மோசே லேவியின் குமாரர்களுக்கு நினைவுபடுத்தி, அவர்களுக்கு பெரிய அளவிலான கடமைகள் இருக்கிறது, அவர்கள் ஜனங்களை ஆராதனைக்குள் நடத்த வேண்டிவர்களாய் இருக்கிறார்கள் என்றார். இஸ்ரவேலில் உள்ள பலதரப்பட்ட குடும்பத்தினருக்கும் பலதரப்பட்ட கடமைகள் இருந்தன. அவர்களுக்கு ஆயிரக்கணக்கான மக்கள் இணைந்து செயல் படுத்தக்கூடிய குறிப்பிட்ட பகுதியில் செயலாற்றும் பணிகள் இருந்தன. ஆசரிப்பு கூடாரத்தை ஒரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு செல்லும் பணி. ஒரு நபர் கூடாரத்தின் ஒரு ஆப்பையாவது எடுத்துச் செல்லும் கடமையைப் பெற்று இருந்தார். கூடாரம் திரும்ப அமைக்கப்படும் பொழுது இந்த ஆப்பு மிக முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

இது இல்லாமல் ஆசரிப்பு கூடாரம் அமைப்பது கடினமான காரியம். இது அவர்களுக்கு ஒரு அற்பமான காரியமாய் இருக்கலாம், ஆனால் நீங்கள் கர்த்தருக்காய் எதையாவது செய்யும்பொழுது உங்கள் திறமையை சிறப்பான நிலையில் பயன்படுத்தி அவற்றை செய்யுங்கள். நீங்கள் சிறிய காரியங்களில் உண்மையாய் இருக்கும்போது, தேவன் பெரிய காரியங்களை செய்யும்படி அருளுவார். ஒரு வேளை யாராகிலும் ஆசரிப்புக் கூடாரத்தின் ஆப்பு முக்கியமானதல்ல எனப் போதிப்பார்கள் என்றால் ஆசரிப்பு கூடாரம் நிற்பது அரிதாகிவிடும். ஒவ்வொரு ஆப்பும் ஆசரிப்பு கூடாரம் நிமிர்ந்து நிற்க மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. கர்த்தருக்காய் வேலை செய்வது மிகவும் அவசியமானதாய் இருக்கிறது.

அநேக ஜனங்கள் சபையில் அவர்கள் எதையாகிலும் செய்தால் அது முக்கியத்துவம் வாய்ந்தது என சிந்திப்பது இல்லை. இப்படிப்பட்ட ஜனங்கள் ஒரு மணி நேரம் ஜெபத்தில் செலவு செய்வார்களா. அது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. கர்த்தர் உங்களை எதைச் செய்யச் சொன்னாலும் செய்யுங்கள் அதைக் கர்த்தருக்கெனச் செய்யுங்கள். ஆசரிப்பு கூடாரம் உங்களது ஆப்பு இல்லாதபட்சத்தில் நிலைகுலைந்து காணப்படும். ஒரு வேளை நீங்கள் செய்யும் வேலை காணப்படாமல் இருக்கலாம், ஆனால் அவைகள் முக்கியம் வாய்ந்தவைகளாய் இருக்கின்றன.

இதையே மோசே கோராவிற்கு சுட்டிக்காட்டினார், அவனது வேலை மிகவும் முக்கியம் வாய்ந்தது. சிலமக்களை உற்சாகப் படுத்தினால் மட்டுமே சேவை செய்வார்கள். அவர்கள் மனிதரின் புகழ்ச்சிக்கு செவிசாய்ப்பதை விட, கர்த்தரை நம்பி அவர்கள் பணியினை செய்யும்படிக்கு நீங்கள் இப்படிப்பட்டவர்களுக்காய் ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இங்கு நமக்கு நன்றி சொல்ல யாருமில்லை என்றாலும், பரலோகம் நம்மை வாழ்த்தி நன்றி சொல்கிறதாய் இருக்கிறது. ஊழியர் வருடத்தில் ஒரு முறை அவர்களை சந்திக்காவிட்டால், அவர்கள் தொடர்ந்து சபை ஆராதணைகளில் பங்குபெறப்போவது இல்லை, அல்லது எவ்வித காணிக்கையும் கொடுக்கப்போவது இல்லை. தேவனது முகத்தைத் தேடும்படி ஜனங்களுக்கு உற்சாகம் அளித்தல் வேண்டும், உங்களை விட தேவனை நம்பும்படி அவர்களுக்கு ஊக்கம் அளித்தல் அவசியம்.

தேவனை நோக்கியுள்ள மனப்பக்குவம்

இந்த மக்கள் எகிப்து தேசத்தையும், பாலும் தேனும் ஓடுகிற தேசத்தையும் பார்த்தனர். இந்த இடத்தைவிட்டு எதற்கு அங்கு செல்ல வேண்டும். தோத்தானும் அபிராமும் இது கடினமான பிரயத்தனம் என்றனர். சில வேளைகளில் காரியங்கள் மிகக்கடினமாய் தோன்றலாம். உங்களை சுற்றியுள்ள ஒவ்வொருவோடும், பிரபலமாகி, அவர்கள் என்ன விரும்புகிறார்களோ அதைச் செய்வது மிக எளிது.

மோசே இந்த ஜனங்களை தேவனது கரத்தில் கொடுத்தார். தங்களது ஜெபம் கேட்கப்படப் போகிறதா இல்லையா என அறிய இவர்கள் நாளைய தினம் பலிசெலுத்தப் போகிறார்கள். ஜனக்கூட்டத்தினருக்கு நீங்கள் தலைவர்களாய் இருக்கிறீர்கள் என சிந்தித்துக் கொண்டால், தேவனுக்கு முன்பாக வந்து அவர் தீர்மானிக்க அனுமதியுங்கள்.

வசனம் 19 ல் கோரா ஆசரிப்புக் கூடாரத்திற்கு முன்பு அனைவரையும் கூட்டிச்சேர்த்தான், அவன் மிகவும் பெருமையுள்ளவனாய் இருந்து, இன்னும் மோசேயை எதிர்க்கிறவனாய் இருந்தான். இவ்வாறு செய்வது தேவனுக்கு எதிராய் நிற்பது என்பதைக் காணாது இருந்தான். தேவன் மோசேயுடன் பேசி ஜனங்கள் ஒவ்வொருவரையும் நோக்கி தோத்தான் அபிராம் இவர்களை விட்டு விலகி நில்லுங்கள். அவர்களுக்குரிய யாதொன்றையும் தொடாது இருங்கள் அவர்கள் அனைவரும் உட்கொள்ளப்பட போகிறார்கள் என்றார்.

மோசேயை தேவன் அழைத்து வேறுபிரித்திருக்கிறபடியால், இந்த கலகக்கூட்டாத்தாருக்கு தான் தலைவன் அல்ல என்று கூறினார். தாத்தான், கோரா, அபிராம் போன்றவர்கள் செய்வது அனைத்தும் அவர்கள் பார்வைக்கு நேர்மையாய் இருந்தது. நாம் நேர்மையுள்ளவர்களாய் இருக்கலாம், நேர்மையான வழியில் தவறு செய்கிறவர்களாயும் இருக்கலாம். இது வேதாகம ரீதியில் சரி என்றால் மாத்திரமே, இது சரியாகும். நீங்கள் தவறிழைப்பீர்களேயானால், உங்கள் பாவத்திற்குரிய தண்டனையான மரணத்திற்குள் கடந்து செல்லவேண்டியிருக்கும். கர்த்தரை சேவிக்க நீங்கள் செல்வீர்களானால், நீங்கள் அவரது வார்த்தைக்கு கீழ்ப்படிகிறவர்களாய் இருக்கிறீர்கள். கர்த்தர் நம்மை எதை செய்யக்கூறுகிறார் என்பதை தெளிவுபடுத்திக் கொண்டு, நமது கண்களை அவர் மீது பதித்தல் வேண்டும்.

இங்கு மிக உறுதியான எச்சரிப்பு இருக்கிறது. தேவன் ஒருபோதும் நல்ல எண்ணங்களால் வஞ்சிக்கப்படுகிறவர் அல்லர். தேவன் நமது கீழ்ப்படிதல் மூலம் மட்டுமே கவரப்படுகிறார். நீங்கள் ஒரு நல்ல, உண்மையுள்ள சேவகனாய் இருந்தால் மட்டுமே தேவன் விருப்பப்படும் நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே என்று அவர் உங்களை நோக்கி சொல்ல முடியும்.

இந்த தொடர்பயிற்சியின் மூலம் நாம் தேவனை சேவிக்க ஆயத்தப்பட்டு வருகிறோம். நீங்கள் இந்த தொடர் பயிற்சியை முடிக்கும்போது, தேவன் நீங்கள் அவருக்கு சேவை செய்ய ஒரு பெரிய தருணத்தை வைத்திருக்கிறார். மோசே கலகக் கூட்டத்தாரை விட்டு வேறுபட்டு நிற்கக்கூறினார். ஜனங்கள் தேவனது வார்த்தைக்கு முறண்பாடாய் இருப்பவர்களை விட்டு உங்களைத் தனிமைப் படுத்திக்கொள்ள வேண்டும். அவர்களிடத்தில் சென்று அவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ள முயலுங்கள், உங்கள் சிநேகிதருடன் செல்லுங்கள், சபைக்கு முன்பாக அவர்களைக் கொண்டுவாருங்கள். அவர்கள் மனந்திரும்ப தருணம் அளியுங்கள். கர்த்தர் தாமே இப்படிப்பட்ட நபர்களுடன் ஈடுபடுவாராக.

இப்படிப்பட்ட ஒழுங்களைச் செய்தும் அவர்கள் மனந்திரும்பாத பட்சத்தில் அவர்களை விட்டு நிரந்தரமாய் விலகி ஜீவியுங்கள். உங்களது பாவங்களை பொருத்தமட்டில் அவைகளுடன் ஈடுபட்டு அவைகளுக்கு விரைவில் தீர்மானத்தைக் கொண்டுவர முயலுங்கள், ஒருவேளை அதை பெருக்கிக்கொண்டே செல்வீர்களானால் அதற்குரிய சிட்சையும் அவர்கள் பின்னே பெருகிக்கொண்டே செல்லும்.

மோசே சொன்னார், அவர்கள் எல்லோரும் மரிக்கிறது போல மரித்தால், தான் ஒரு தீர்க்கதரிசியாய் இல்லை எனக்கூறினார். இந்த ஜனங்கள் வித்தியாசமான முறையில் மரிக்கப் போகிறார்கள், இவ்வித்தியாசத்தினால், அவர்கள் நியாயந்தீர்க்கபட்டார்கள் என மற்ற ஜனங்கள் அனைவரும் அறிந்துகொள்வார்கள். ஆர்வத்துடன் உணரும் காரியங்களுக்கு இங்கு இடமே இல்லை, தேவன் முற்றிலும் நீதிபரராய் இருக்கிறார் கர்த்தர் தமக்கு சொந்தமானவர்களை நியாயந்தீர்க்கும்போது, அவர் அதை பூரணமான நீதியைக் கொண்டு நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார். மரணத்திற்கேதுவான பாவம் எப்பொழுதுமே பரிதாபத்திற்குரிய காரியமாய் இருக்கிறது.

உங்களை நீங்களே நீதிகரித்துக் கொண்டு செயல்படுவீர்களானால், கர்த்தர் உங்களது நாட்களை எண்ணிக்கொண்டே வருகிறார். இங்கே நாம் காண்பது, கலகம் செய்யும்படி மனைவிமார்களும் குடும்பத்தினரும் உற்சாகப்படுத்தினர். இதில் நம்மை ஆர்வப்படுத்தக்கூடிய செயல் என்னவெனில் அவர்களது குமாரர்கள் ஒருவரும் மரிக்கவில்லை. எண்ணாகமம் 26 மற்றும் 1 நாளாகமம் 9 ல் அவர்களது குமாரரில் சிலர் ஜீவித்தனர். அவர்கள் காணக்கூடிய நிலையில் அவர்களைவிட்டு பின்னே இழுத்துக்கொள்ளப்பட்டனர்.

குமாரர்கள் அழியவில்லை ஆனால் அவர்களுக்கு தேசத்தில் இடம் இருந்தது. தங்கள் தகப்பன்மார்களுடன் சேர்ந்துகொண்டு கலகம் செய்தவர்கள் மட்டும் மரித்தனர். நாம் தேவனுக்கு கீழ்ப்படியக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் செல்லத்தகாத வழியில் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை அவர் அறிவார்.

உபதேசங்கள்

வரங்கள்: ஆவிக்குரிய வரங்கள்

1. மூன்று பொதுவான வேதபகுதிகள் ஆவிக்குரிய வரங்களை பட்டியலிட்டுள்ளன. (எபேசியர் 4:11, 1 கொரிந்தியர் 12:28-30,ரோமர் 12:3-8).

2. ஊழியத்திற்கென மற்றும் சபையைக் கட்டிஎழுப்ப ஆவிக்குரிய வரங்கள் அளிக்கப்பட்டதன் நோக்கமாயிருக்கிறது. (எபேசியர் 4:8-13).

3. இரட்சிப்பின்போது இவ்வரங்களை பரிசுத்தாவியானவர் அளிக்கிறார். (1 கொரிந்தியர் 12)

4. சில வரங்கள் தற்காலிகமாய் இருக்கின்றன (1 கொரிந்தியர் 13:8-10) மற்றும் சில வரங்கள் நிரந்தரமானவைகள்
(1 கொரிந்தியர் 12:28 cf. 1 கொரிந்தியர் 13:8).

5. வேதாகமப் பகுப்பு முழுமையடைவதற்கு முன்னர் தற்காலிக வரங்கள் பயன்படுத்தப்பட்டன. தற்காலிக வரங்களின் நோக்கம் முழுமை பெற்ற வேதாகமத்தின் இடத்திலிருந்து கொண்டு செயல்படுவது ஆகும். (1கொரிந்தியர் 13:8-10).

6. ஆவிகுரிய வரங்களின் செயல்பாடுகள் முற்றிலும் பரிசுத்தாவியானவரின் நிறைவினால் மட்டுமே மெய்யானதாய் இருக்கமுடியும். (அப்போஸ்தலர்2:4).

ஆவிக்குரிய தன்மை [மேலே உள்ள பாடங்களில் காண்க]

வேறுபிரிக்கப்படுதல் [மேலே உள்ள பாடங்களில் காண்க]

<u>பாடம் 37 -- பாவமும் தெய்வீக வழிநடத்துதலும்</u>

யூதா புஸ்தகத்தில் உள்ள பிலேயாம்

பண ஆசையான பாவத்தை இது காட்டுகிறது, பெருமை மற்றும் தெய்வீக நடத்துதல். யூதா 3,4,11 ஆகிய வசனங்களில் பிலேயாம் விசுவாசத்துரோகத்தின் பயங்கரத்தைக் காட்டுகிறான். இது கோரா, காயீன் மற்றும் பிலேயாம் உதாரணங்களாய் விளங்குகின்றனர். பிலேயாம் விசுவாசிகள் கர்த்தரை விட்டு வழிவிலகிச் சென்று தங்கள் பழைய பாவத்தை பின்தொடர்ந்து செல்லலாம் என்பதைக் காட்டுகிறவனாய் இருக்கிறான். கோரா கர்த்தரின் அதிகாரத்துக்கு எதிர்த்து நின்று அவனுக்கு நேரிட்ட நியாயத்தீர்ப்பை மோசேயின் ஆளத்துவத்தில் நாம் கண்டோம். பிலேயாம் பண ஆசையை உடையவனாய் இருந்தான். கோரா பதவி

மோகம் கொண்ட கண்காணியாய் இருந்த இவன் போதகராய் மாற ஆசைப் பட்டான்.

பாலாம் ஒரு போதகராய் இருந்துகொண்டு, சுவிஷேச ஊழியத்தினிமித்தம் மிகவும் ஐசுவரியவனாக முயற்சி செய்தான். இன்றைய அளவில் போதகர்கள் தங்களது ஸ்தானத்தை தக்க வைத்துக்கொண்டு, சுய இலாபத்திற்காய் முயற்சிகள் எடுக்கின்றனர். சாத்தான் தனது மனிதரைக் கொண்டு தவறான உபதேசத்தை இன்றைய அளவில் உள்ள சபையில் போதித்து, காணும் பொருளே உண்மை என்னும் வாதத்தை சபைகளில் போதித்து ஊக்கப்படுத்தி வருகின்றனர். கோடீஸ்வரர்களாயிருக்கும் பிரசங்கிகள் சாத்தானைப் போன்று பழமை மிக்கவர்கள். இந்த பிலேயாமுக்கு மாதிரிகளாய் திகழ்கின்றனர்.

யூதா தவறான உபதேசம் குறித்து கொதித்தெழும்பி அதை எதிர்க்கிறவராய் இருந்தார். ஒரு போதகர் கர்த்தரின் வார்த்தையை சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் பிரசிங்கிக்கிறவராய் இருக்க வேண்டும், அவர் கடிந்துகொண்டு, நிந்தித்து, புத்திசொல்லி போதிக்கிறவராய் இருத்தல் அவசியம். ஊழியர் தவறான உபதேசத்தைக் காண்பாரானால் அவர் குதித்தெழுகிறவராய் இருத்தல் வேண்டும். முதன் முறை அந்நபருடன் பொருமையுடன் பேசி, வேதாகம முறையில் ஈடுபட்டு அன்பு காட்டுதல் வேண்டும்.

யூதா மற்றவர்களை தவிர்த்தல், மற்றும் எதிர்த்தல் போன்றவற்றை விசுவாசிக்கிறவராய் இல்லை. தவறான உபதேசம் சரியான உபதேசத்தினால் எதிர்க்கப்படல் வேண்டும். இதுவே பிரஸ்பிட்டேரியன் சபையில் நிகழ்ந்தது, தாராளவாதம் [liberalism] வந்து சபையில் அமர்ந்து கொண்டது. அப்படிப்பட்ட உபதேசம் வந்தமைக்குக்காரணம் அதற்கு எதிரான சத்தியம் போதிக்கப்படவில்லை. தவறான உபதேசத்துடன் கலந்து போகாதிருங்கள். சபையில் உள்ள பிரசங்க பீடம் கோழைகளுக்குரியது இல்லை.

யூதா சொல்லுகிற பிரகாரம், வேதாகமமானது ஒருமுறை மற்றும் எல்லாருக்காகவும் கொடுக்கப்பட்ட ஒன்று எனக்கூறுகிறார். நீங்கள் வேத வசனங்களால் தவறு போதிக்கப் படுவீர்களானால், நீங்கள் தவறிழைத்தவர்களாய் இருக்கிறீர்கள். கர்த்தருடைய வசனத்தை விட அதிகம் அறிந்தவராய் சிலர் சிந்திக்கிறவர்களாய் இருக்கிறார்கள், அவர்கள் சரிசெய்யப்பட வேண்டும் அல்லது புறம்பாக்கப்படவேண்டும். இப்படிப்பட்ட ஜனங்கள் இரகசியமாய் செய்தனர், எதிர்பாராத வகையில் தீடீரென செய்தனர்.

ஊழியராகிய நீங்கள் தொடர்ந்து ஜாக்கிரதையாய் இருத்தல் அவசியம், இப்படிப்பட்டவர்கள் வந்து சந்தேகத்தின் வித்தை விதைத்து விட்டு செல்வர். அநேக வேதாகம கல்லூரிகள் முடிவில் உங்களை வழுக்கி உங்கள் பக்கமாய் விழும்படி செய்கிறதாய் இருக்கிறது.

எண்ணாகமம் 20

பிலேயாமின் தவறு பணமாய் இருந்தது. யூதா 11 ல் அவன் தன்னைத்தானே கொடுத்தான், தன்னை அற்பணித்தான் "ekkeno", அவன் தன்னை பேராசை கொண்ட நோக்கத்திற்காய் அற்பணித்தான் என்பது இதன் பொருள் ஆகும். பிலேயாம் தனது சுய இச்சையினிமித்தம் மிகவும் ஐசுவரியவானாகும்படி தவறான வழியில், நடத்தப்பட்டான். அவனுக்கு பணத்தின் மீது இச்சையிருந்தது, இதினிமித்தம் அவன் கர்த்தருக்கு சேவை செய்ய மனமற்றவனாய் இருந்தான். அவன் ஒருவேளை, மிஷனரிகளுக்கு பெறுகின்ற பணத்தை செலவு செய்யலாம் என ஆசைப்பட்டிருக்கலாம், ஆனால் அவன் அப்பணத்தை தன் சுயத் தேவைகளுக்காய் உபயோக்கிக்க மனதுள்ளவனாய் இருந்தான்.

நீங்கள் இப்படிப்பட்ட வழியின் மூலம் செல்லும் போது, உங்கள் முழு வாழ்க்கையும் வரிசைப்படுத்தப்படுகிறது. நீங்கள் பாவத்தை மட்டும் அறிக்கை செய்கிறவர்களாய் இல்லை, மற்றும் உங்கள் பெலவீனப்பகுதி எது எனவும் குறிப்பிடுகிறவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் உங்களது பழைய பாவ சுபாவம் எங்கு மிகவும் கொதித்து எழுகிறதாய் இருக்கிறது என்பதையும் காணப்போகிறீர்கள். இவைகளை கண்டு பிடிக்கும் போது, உங்கள் ஆத்துமாவில் அதற்கு விரோதமாய் ஒரு பாதுகாப்பை அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். நீங்கள் பண ஆசை உடையவர்களாய் இருப்பீர்களானால், நீங்கள் தேவனிடம் அவைகளிலிருந்து பாதுகாக்கப்பட தேவனிடம் கூறுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். பிலேயாம் தனது வாழ்வில் உள்ள பாவத்துடன் ஈடுபடுகிறவனாய் இல்லை. தேவன் அவனோடு பேசினார், மட்டுமல்ல அவனது கழுதை அவனோடு பேசியது. அவன் சரியான மார்க்கத்தில் செல்வதை எதிர்த்தான்.

ஒருவரும் ஒரு தீவில் இருக்கிறவர்கள் அல்லர். நீங்கள் எதைச் செய்கிறீர்களோ அது மற்றவர்களுக்கு வழிந்தோடுகிறதாய் இருக்கிறது. நீங்கள் சமுதாயத்தின் ஒரு அங்கமாய் இருக்கிறீர்கள். இந்த மனிதன் தனது பாவத்துடன் ஈடுபாடு காட்டுகிறவனாய் இல்லை, இவன் பாவத்தில் விழுந்த போது, ஆயிரக்கணக்கான இஸ்ரவேலர்கள் மரிப்பதற்கு ஒரு காரணமாய் இருந்தான். உங்கள் வாழ்வில் தீமையோடு சரியான விதத்தில் ஈடுபட வில்லையானால், உங்களது சொந்த வாழ்க்கை அநேகரை பாதிப்பதாகிவிடும். நமக்கு தெரிந்த சோதனைக்குரிய பகுதிகளை தவிர்த்தல் வேண்டும், மதுபானம் அருந்துதல், உல்லாச விடுதிகளுக்கு செல்லுதல், திருடுதல் போன்ற சோதனைகளுக்கு விலகி வாழ வேண்டும்.

எண்ணாகமம் 22-24 ல் பிலேயாமைக்குறித்தும் மோவாபின் அரசனாகிய பாலாக் இராஜவைக்குறித்தும் உள்ள சம்பவத்தைப் பார்க்கிறோம். பாலாக் என்பதன் பொருள் "காலியான / ஒன்றுமில்லாத ஒருவன்" “empty one” அவன் சிப்போரின் குமாரனாய் இருந்தான். சிப்போர் என்பதன் பொருள் "சிறிய பறவை" "little bird". பாலாக் ஒரு அவிசுவாசியாய் இருந்து அவன் மிகவும் பயப்படுகிறவனாய் காணப்பட்டான். அவன் இஸ்ரவேலரைக் கண்டு பயந்தான் மற்றும் அவன் தனது சொந்த ஞானிகள், அவர்களது

குறிசொல்பவர்களின் வல்லமை பயனற்றது என அறிந்திருந்தான். இதினிமித்தம் அவன் தேவனது வார்த்தையை பேசும் ஒரு தீர்க்கதரிசியைத் தேடினான்.

பிலேயாம் என்பதன் பொருள், ஜனங்களை குழப்புகிறவன் மற்றும் இதைப்போலவே அவன் இருக்க வேண்டியவனாய் இருந்தான். ஒவ்வொரு ஊழியக்காரரும் ஜனங்களுக்கு நேர்மறையான வழியில் குழப்புகிறவர்களாய் இருத்தல் வேண்டும். நீங்கள் தேவனது வார்த்தையை பிரசிங்கிக்கும் போது, காரியங்களை குழப்புகிறவர்களாய் இருத்தல் வேண்டும். ஜனங்கள் தேவனது வார்த்தையால் தாக்கப்பட வேண்டும். நீங்கள் ஜனங்களை குழப்பத்திற்குள்ளாக்குதல் வேண்டும் இது கர்த்தரின் மகிமைக்காய் அமைதல் வேண்டும், மற்றும் எவ்வித ஆதாயத்திற்காகவும் இருத்தல் கூடாது.

எண்ணாகமம் 22

இந்த அதிகாரத்தில், பாலாக் அமோரியருக்கு என்ன நிகழ்ந்தது என்பதைக் கண்டான். இஸ்ரவேலர்களின் செயலால் பயமடைந்தான். ஒவ்வொரு அவிசுவாசியும் விசுவாசியின் மூலம் பயத்துக்குள்ளாகிறான், முக்கியமாய் விசுவாசிகள் பெரிய அளவில் இருப்பதைக் காணும் போது அவர்களுக்கு பயம் அதிகரிக்கிறது. பாலாக் பிலேயாமிடம் வந்து ஜனங்களை சபியும் எனக்கூறினான், காரணம் அவன் பாலாக் சபித்தால் அப்படியே நடக்கும் என அறிந்திருந்தான். அவன் இஸ்ரவேலர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தோல்வியைத் தழுவ வேண்டும் என்பது அவன் எண்ணமாய் இருந்தது. கர்த்தர் சொன்னார், அவர்களைச் சபிக்க முடியாது என்றார். பிலேயாம் பாலாக்கைப் பார்த்து, சொன்னான் கர்த்தர் அவர்களை சபிக்க எனக்கு உத்திரவு அருளவில்லை நீர் போய்விடும் என்றான்.

எண்ணாகமம் 22 வசனம் 15ல் பாலாக் அதிக பணம் தேவைப்படுமானால் தனது மனிதர்கள் அவைகளை சுமந்து கொண்டு உமது பின்னே வருவார்கள் என்றான். பாலாக் ஜனங்களின் பெலவீனத்தை நன்கு அறிந்து வைத்திருந்தான். அநேக அவிசுவாசிகள் உங்கள் பெலவீனம் என்ன என்பதை நீங்கள் கண்டு கொள்ளும் முன்னர் விரைவில் கண்டுகொண்டு அவற்றைச் சுட்டிக்காட்டுகிறவர்களாய் இருக்கின்றனர். உங்கள் பெலவீனத்தை நீங்கள் வரிசைப்படுத்தும் போது அதினிமித்தம் கர்த்தர் மீது அவமரியாதையை கொண்டுவர முடியாது. உங்களது பாதுகாப்பு கர்த்தருடன் பரிசுத்த அலங்காரத்துடன் நடப்பது ஆகும்.

தேவன் விரும்புவதை பிலேயாம் அறிந்து இருந்தானா? பிலேயாம் கர்த்தரது முகத்தை மறுபடியும் தேட விரும்புகிறேன் எனக்கூறுகிறான். பாலாக் என் வீடு நிறைய வெள்ளியையும் பொன்னையும் கொடுத்தாலும் கர்த்தர் என்னைப் போகவிடாதிருக்கிறார்.

அநேகக் கிறிஸ்தவர்கள் சொல்வது என்னவென்றால், தேவன் இல்லை என்று சொல்வாரென்றால், அவர் தனது எண்ணத்தை மாற்றிக்கொள்ளும் வரை

நீங்கள் பிடிவாதமாய் இருங்கள் என்கின்றனர். இது அபாயகரமானது, தேவன் ஒரு வேளை உங்களது விண்ணப்பத்திற்கு பதில் அளித்து உங்களை சிட்சைக்கு உட்படுத்தலாம் இது அவரது அனுமதிக்கும் சித்தத்தின் பேரில் உங்களுக்கு அளிக்கப்படலாம். தேவன் உங்களிடம் இல்ல என்பாரானால் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் உங்களை எப்பொழுதும் கர்த்தரின் கரத்தில் கொடுத்து விடுங்கள்.

பிலேயாம் பல முறை தேவனது கதவை தட்டுகிறவனாய் இருந்தான். அவன் தேவன் ஆம் எனக்கூறுவதை விரும்பி, தான் நாடின பணத்தை எப்படியாகிலும் பெற்றுக்கொள்ள ஆவல் உள்ளவனாய் இருந்தான். நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் எனக் கேட்பதை ஏன் பெற்றுக் கொள்கிறவர்களாய் இருக்கிறோம்? நமது சொந்த இச்சைகளின்படி அதை செலவு செய்வதற்காகவே அதைப்பெற்றுக் கொள்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் கரிசனைக் கொள்ளவேண்டியது என்னவெனில், நித்தியத்தை யாருடன் பகிர்ந்து கொள்ளப்போகிறோம் என்பதாகும்.

வசனம் 20 ல் உள்ள மிகப்பெரிய அபாயம் என்னவெனில், தேவனது நேரடி சித்தத்தை விட்டு விலகுவதாகும். மிகச்சிறப்பானது தேவன் அளிக்கும் நேரடிச் சித்தமாகும். அனுமதிக்கும் சித்தத்தில் தேவனது விருப்பப்படி சரியாய் எங்கு இருந்து செயல்படுவது என்ற தெளிவு கிடைப்பதில்லை. அவர் அவ்வாறு செய்ய அனுமதி அளிக்கிறார் காரணம் நீங்கள் சில காரியங்களை கற்றுக்கொள்ளும் படியாக.

கர்த்தர் பிலேயாமின் மீது கோபமுள்ளவரானார் வசனம் 22 ல் கர்த்தரின் தூதன் பிலேயாமுக்கு எதிராய் நின்றார், இதை பிலேயாம் ஐக்கியத்தைவிட்டு வெளியே சென்றபடியால் அவரைக் காணவில்லை ஆனால் அவன் ஏறிச் சென்ற கழுதை அவரைக் கண்டது. பிலேயாம் செல்ல மறுத்த கழுதையை சாகும்படி அடித்தான். அந்த மிருகம் அவனிடம் சொன்னது, என்னை ஏன் இப்படி சாகும்படி அடிக்கிறாய், உன் ஜீவனைக் காப்பாற்றும்படியாக இப்படிச் செய்தேன் என்றது.

வசனம் 31 ல் கர்த்தர் பிலேயாமின் கண்களைத் திறந்தார் அப்பொழுது கர்த்தருடைய தூதனானவரைக் கண்டு அவரைத் தொழுது கொண்டான். கர்த்தர் அவனுக்கு எதிர்பட்டதன் நோக்கம் அவன் தவறிழைத்தான் மற்றும் சொற்கேளாதவனாய் இருந்தான். இது தேவனிடமிருந்து வந்ததாயும் அவன் அபாயத்தில் இருந்தான் என கூறும் மற்றொரு எச்சரிப்பாய் இருந்தது.

வசனம் 34-35 ல் அவன் தான் பாவம் செய்தேன் என அறிக்கை செய்து வீட்டிற்கு திரும்புகிறேன் எனக் கூறினான். கர்த்தர் தான் எதைக்கூறும்படி சொல்வேனோ அதையே சொல்லவேண்டும் எனக்கூறினார். பிலேயாம் இன்னும் எப்படியாவது தேவனுக்கு கீழ்ப்படிவது போல நடித்து பாலாக்குடன் ஒத்துப்போய் தனக்குக்கிடைக்கும் பணத்தை அடைந்துவிட வேண்டும் என கிரியை செய்கிறவனாய் இருந்தான். இதுவே அறிக்கை செய்யப்படாத பாவம் உங்களில் கிரியை செய்வதாய் இருக்கிறது. நீங்கள் ஒத்துப்போகிறவர்களாய் இருக்கிறீர்கள், நீங்கள் இரண்டையும் அடைந்து

கொள்ள வேண்டுமென்று விரும்புகிறீர்கள், ஆனால் இரண்டையும் பெற்றுக்கொள்வது என்பது கூடாத காரியமாய் இருக்கிறது. உங்களது நோக்கங்களை சரிசெய்து பாருங்கள், நீங்கள் பிலேயாம் பணத்தைப் பெற்றுக்கொள்ள தீர்மானமாய் இருந்தது போல ஒரு தீர்மானத்தை எதிர் நோக்கும் போது, தேவன் அவனுக்கு, அப்பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அனுமதி அளித்தார், அவன் கோடீஸ்வரனாகி மரிக்கப்போகிறான்.

நீங்கள் காணும்படி சந்தோஷமாய் வாழ்ந்து மரிக்க விரும்புகிறீர்களா அல்லது கர்த்தர் நீங்கள் எப்படி வாழ விரும்புகிறாரோ அதன் படி வாழ்ந்து மரிக்க விரும்புகிறீர்களா? பிலேயாம் நேரடியாய் மோவாபுக்கு எடுத்துச் செல்லப்பட்டான். அவன் ஒரு விபச்சாரம் மிகுந்த இடத்திற்கு சென்றான், இவன் ஒரு ஆவிக்குரிய தலைவனாய் இருந்து அவ்விடங்களுக்கு செல்லத்தகாதவனாய் இருந்தும், அவன் மேடைகளில் சென்று ஏறினான். பிலேயாம் இஸ்ரவேலை ஆசீர்வதித்தான் அது பாலாக்கை விரக்தியடையச் செய்தது. பிலேயாம் எந்தக் கோணத்தில் சென்றாலும் அவனால் இஸ்ரவேலை சபிக்க இயலாதவனாய் இருந்தான். பாலாக் பிலேயாமிடத்தில் வீட்டிற்கு செல்லுமாறு கூறி, தேவன் அவனுக்காய் பெரிய கனத்தை வைத்துள்ளார் எனக்கூறினான். பாலாக் தேவனைத் தவிர ஒருவராலும் ஊக்கப்படுத்த இயலாது என்பதை அறியாது இருந்தான். நீதிமொழிகள் 20:10, 1 பேதுரு 5:6.

தேவனது ஆசீர்வாதத்தையே தேடுங்கள், மனிதனது ஆசீர்வாதங்களை தேடாதிருங்கள். 1 யோவான் 3:23, 2 பேதுரு 3:18, சங்கீதம் 32:8,9; நீதிமொழிகள் 3:16, ஏசாயா 58:11, ரோமர் 12:1,2. நாம் ஒவ்வொரு நாளும் இதை நடைமுறைபடுத்தி மறுரூபமடைய வேண்டும். உங்கள் வாழ்வை மாற்றி அமைக்க அவசியப்படும் ஒரு பட்டியலை தயார் செய்யுங்கள். ரோமர் 6:13, எபேசியர் 5:17,18. இந்த வசனங்கள் உங்கள் வாழ்விற்கு வழிகாட்டி மற்றும் திசைக்காட்டட்டும்.

உபதேசங்கள்

பணம்

1. கி.மு 7 வது நூற்றாண்டு வரை பணம் என்பது நாணய வடிவில் இல்லை. நாணயங்களைப் பொருத்த மட்டில், பணம் அல்லது விலையுயர்ந்த உலோகத்தால் செய்யப்பட்ட இங்காட்கள் அல்லது வளையங்கள் [ingots or rings] போன்றவைகளால் மதிப்பிடப்பட்டு வந்தது. லிதியாவின் அரசனான குரோசஸ் [Croesus] முதலில் தனது பணத்தை நாணயங்களாக பாதுகாத்தான். பெரிய கேரேஸ் [Cyrus the Great] லிதியாவை வெற்றி கொண்ட போது, அவன் நாணயங்களின் பரிமாற்றத்தை புறிந்து கொண்டு, அப்பரிமாற்றத்தை முழு உலகிற்கும் அளித்தான்.

2. பணம் தீமையானது அல்ல. இது சட்டப்பூர்வமான செயல்பாடுகளைக் கொண்டுள்ளதாய் இருக்கிறது. (ஆதியாகமம் 23:9, எரேமியா 32:44).

3. விசுவாசி போதும் என்கிற மனதுடன் தேவ பக்தி செய்யும்படி வற்புறுத்தப்படுகின்றனர், (1தீமோத்தேயு 6:6-10, பிலிப்பியர் 4:11-13, எபிரெயர் 13:5-6).

4. பண ஆசை மற்றும் பொருட்கள் மனிதனை கறைப்படுத்துகிறதாய் இருக்கிறது (யூதா 11).

5. பணம் கொடுப்பது, விசுவாசியின் ஆசாரியத்துவ வெளிப்படுத்தலாய் இருக்கிறது (1 கொரிந்தியர் 16:2, 2 கொரிந்தியர் 8 & 9).

6. பணத்தின் மீது பேராசை படுவது, ஒருவரை தனது ஆசைகளுக்கு அடிமையாக்கிவிடுகிறது (மத்தேயு 6:24). பணம் ஒரு உபயோகமுள்ள சேவகனாயும், அதே சமயம் மிகக் கடினமுள்ள எஜமானனாயும் இருக்கிறது.

7. அவிசுவாசிக்கு பணத்தினால் உண்டாகும் அபாயங்கள்:-

அ] இரட்சிப்பைப் பணத்தால் வாங்க முடியாது (மாற்கு 8:36-37).

ஆ] பணம், ஐசுவரியவான்கள் தங்களது நம்பிக்கையை தவறான காரியங்களில் இடும்படியான விளைவை ஏற்படுத்துகிறது. (மாற்கு 10:23-25).

இ] பணம் அவிசுவாசி இரட்சிப்பைத் தேடுவதற்கு பெரும் தடையைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது (லூக்கா 16:19-31)

ஈ] பணம் தேவனுடன் கடன்படவில்லை (நீதிமொழிகள் 11:4,28).

8. விசுவாசிக்கு பணத்தினால் உண்டாகும் அபாயங்கள்:-

அ] பணம் அடிமைத்தனத்திற்கு கொண்டு செல்வதும், மற்றும் வீணான சந்தோஷத்தை தேடும்படி செய்கிறதாய் இருக்கிறது. (பிசங்கி 5:10-6:2).

ஆ] பண ஆசை எல்லாத்தீங்கிற்கும் வேராய் இருக்கிறது (1 தீமோத்தேயு 6:6-12, 17-19).

இ] பணம் பெருமைக்கு பங்களிக்கக்கூடும் மற்றும் சுயத்தை மையமாய் கொண்டு செயல்பட வழி நடத்தும். (அப்போஸ்தலர் 5:1-10).

9. ஒரு நபர் தனக்கான சந்தோஷத்தை பணத்தினால் சம்பாதிக்க முடியும், அல்லது அது தனக்கு பாதுகாப்பளிக்கும் என விசுவாசிக்கும் பொழுது,

ஐசுவரியம் வஞ்சனையுள்ளதாய் இருக்கிறது, (மத்தேயு 6:24-33, லூக்கா 12:16-21, நீதிமொழிகள் 18:10-12, நீதிமொழிகள் 13:7).

10. தேவன் விசுவாசிக்கு நம்பி அளித்த சொத்தை, நேரத்தை, திறமைகள் மற்றும் ஆவிக்குரிய வரங்களை ஞானமாய் பயன்படுத்துதல் அவரது கடமையாய் இருக்கிறது.

நடத்தப்படுதல்: தேவனின் சித்தம்

1. சரித்திரத்தில் மூன்று வகையான சித்தம் இருக்கின்றன,
   - தெய்வீக சித்தம் (ஏகதிபதித்துவம்)
   - தேவதூதர்களின் சித்தம்
   - மனித சித்தம்

2. தேவ சித்தத்தின் முக்கியப்பகுதிகள். (1 யோவான்3:23).
   - அவிசுவாசிக்கு - இரட்சிப்பு (2 பேதுரு3:9).
   - விசுவாசிக்கு - ஆவிக்குரிய முன்னேற்றம் (எபேசியர்5:18)

3. கிறிஸ்து சுயசித்தம் உடையவராய் இருந்தார் (மத்தேயு 26:42, எபிரெயர் 10:7, 9).
   - மனுக்குலத்தில் உள்ள சுயசித்தம் ஒருபோதும் கிறிஸ்துவில் உள்ள சுயசித்தத்தை சார்ந்து இருப்பதில்லை.
   - தெய்வீக நடத்துதலின் அடிப்படைத் தத்துவம், மனிதனில் அமைந்துள்ள சுயசித்தம் தேவனுக்காக அல்லது தேவனுக்கு விரோதமாக தெரிந்துகொள்ளும் உண்மைத்தத்துவத்தின் அடிப்படையாய் உள்ளது.

4. மனித வர்க்க சம்பந்தப்பட்ட தேவனுடைய சித்தத்தின் வகைகள்: (உ.ம். பிலேயாம்)
   - நேரிடையான (எண்ணாகமம் 22:12) - தேவன் நடத்துவது
   - அநுமதிப்பது (எண்ணாகமம் 22:20) - தேவன் அநுமதிப்பது
   - குறுக்கிடுதல் (எண்ணாகமம் 23) - தேவன் குறுக்கிடுதல் / தலையிடுதல்.

5. நடத்துதலின் தத்துவங்கள்:
   - விசுவாசியில் உள்ள வேதாகாமத்தத்துவங்களின் அறிவு (சங்கீதம்32:8, நீதிமொழிகள்3:1-6, ஏசாயா58:11, ரோமர்12:2).
   - அற்பணித்தல் மற்றும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுதல் (ரோமர் 6:13,ரோமர் 12:1-2, எபேசியர்5:17-18, 1 யோவான் 1:9).
   - வளர்ச்சி - பாலை மட்டும் சார்ந்தல்ல கடினமான ஆகாரத்தையும் புசிக்க வேண்டும். (1 கொரிந்தியர் 3:1-4).

6. தேவ சித்தத்தின் வகைகள்.

சிந்திக்க வைக்கும் தேவசித்தம் - தேவன் நான் எதை சிந்திக்க வேண்டுமென விரும்புகிறார்?

செயல்படவைக்கும் தேவசித்தம் - தேவன் நான் எதை செய்ய வேண்டுமென விரும்புகிறார்?

பூகோள ரீதியான தேவசித்தம் - நான் எங்கு இருக்க தேவன் விரும்புகிறார்?

7. தேவ சித்தத்தைக்குறித்த உதாரணங்கள் (அப்போஸ்தலர் 11) - பேதுரு நடத்தப்படுதல்

ஜெபத்தின் மூலம் நடத்தப்படுதல் (வச 5)

மனதின் மூலம் நடத்தப்படுதல் (வச 6)

வார்த்தை மூலம் நடத்தப்படுதல் (வச 7-10)

தீர்மானிக்கப்பட்ட சூழல் மூலம் நடத்தப்படுதல் (வச 11)

பரிசுத்தாவியானவரால் நிறப்பப்படுவதன் மூலம் வழிநடத்தப்படுதல் (வச 12)

ஐக்கியம் மற்றும் ஒப்பிட்டுப்பார்த்தல் மூலம் வழிநடத்தப்படுதல் (வச 13-15)

வேத வசனங்களை நினைவு கூறுதல் மூலம் வழிநடத்தப்படுதல் (வச 16)

பாடம் 38 -- எண்ணாகமம் 25

முகவுரை

புதிய ஏற்பாட்டையும் பழைய ஏற்பாட்டையும் சேர்த்துக் கட்டுவது முக்கியம் வாயந்ததாய் இருக்கிறது. நாம் இன்னும் கூவி மதத்தை விற்பவனாகிய பிலேயாம் காரியத்தையே கண்டுகொண்டு இருக்கிறோம். 24 ம் அதிகாரத்தின் இறுதியில் பாலாம் ஏன் பாலாக் அரசன் கண்டனம் தெரிவிக்கிறான் என்றால், செல்லும் இடங்களிலெல்லாம் அவன் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிறவனாய் இருந்தான்.

எப்படியிருப்பினும், 2 பேதுரு 2:15-16 ல் பாலாக் பிலேயாமுக்கு, அவன் இஸ்ரவேலை ஆசீர்வதித்திருந்தும் பணம் கொடுத்தான் எனக்காட்டுகிறதாய் இருக்கிறது.

வெளிப்படுத்தின விஷேசம் 2:14-16 ல் பிலேயாம் பாலாக் இராஜாவால் நான்கு வித்தியாசமான குன்றுகளுக்கு அழைத்துச் சென்ற போதும், பிலேயாம் இஸ்ரவேலை ஆசீர்வதிக்கிரவனாய் இருந்தான். இந்த தீர்க்கதரிசி பாலாக்கை விட்டுச் சென்ற போது அவன் ஒரு கோடீஸ்வரனாக சென்றான். அவன் செல்லும் முன் பாலாக்கிற்கு கொடுத்துச் சென்ற அறிவுரை குறித்து வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் கூறப்பட்டுள்ளது. அவன்

பாலாக்கிடம் அவர்களது ஆசீர்வாதத்திலிருந்து ஒன்றும் அவர்களை அசைக்கப் போவது இல்லை, அவர்கள் தேவனோடு கொண்டுள்ள உறவில் நீர் பிளவு ஏற்படச் செய்வீரானால் அவர்களது ஆசீர்வாதம் பாதிக்கப்படும் என்று கூறினான். அவர்கள் மதம் மற்றும் ஒழுக்கநெறி இவைகளுக்கு உட்பட்டு செயல்படுவார்களேயானால் தேவனது ஆசீர்வாதம் அவர்களை விட்டு எடுபடும் என்றான்.

இந்த வேதபகுதியில் விமர்சனம் செய்யப்படுவோர் நிக்கொலாய் மதஸ்தர், இவர்கள் அந்தியோகியா பட்டணத்தின் நிக்கொலாய் மதஸ்தர், எல்லாவற்றையும் உட்படுத்திய மதம் என்ற கொள்கை ஆதரிப்பவர்கள். இவர்கள், நீ ஒரு காதல் மன்னனாய் ஊரை சுற்றிக்கொண்டு திரிந்தால் பராவாயில்லை, எதிரே இருக்கும் சபைக்குச் செல் அங்கு சரியான காரியங்களை செய், நீ அங்கு செய்யும் சரியான காரியம், அங்குள்ள தட்டில் பணம் வைப்பது. தேவன் வெளிப்படுத்தின விஷேசத்தில் இக்காரியங்களை தெளிவுபடுத்தி அவர் பாவத்தை வெறுக்கிறார், இவ்வாறு செய்துவந்தால் தேவனால் நியாயந்தீர்க்கப்படுவாய். நீ விசுவாசியாய் இருப்பாயானால் எபிரெயர் 12ன் படி சிட்சிக்கப்படுவாய்.

இஸ்ரவேலுக்காக தேவனின் நிலை உபாகமம் 7:1 ff. ல் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லா நேரங்களிலும் "நான் பரிசுத்தராய் இருக்கிறது போல நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்" அவர் கூறுகிறவராய் இருக்கிறார். இந்தக் கொள்கையின் அடிப்படையில் பலனடையும்படியாக தேவன் இஸ்ரவேலருடன் கிரியை செய்து வந்தார். நான் உனக்களித்துள்ள அந்த உன்னத ஸ்தானத்தின் படியே வாழ்வாயாக.

சிதைவு

அத்தேசத்தில் ஜனங்களின் சிதைவு முழுமையாய் இருந்தது. புதைபொருள் ஆராய்ச்சியாளர் மோவாபியர் மற்றும் கானானியர்கள் முழுமையாய் சிதைவுற்று இருந்தனர் என்பதை கண்டறிந்துள்ளனர். அவர்கள் உண்மையில் பாலுறவு மற்றும் வேசித்தனம் இவற்றை ஆவலுடன் நடப்பித்து வந்தனர். இந்த தேசத்தினர் வேசித்தனத்தின் மூலம் மிகத்தாழ்வான் இழிநிலைக்கு ஆளானார்கள், இவர்களில் அநேகர் பாலுறவு சம்பந்தமான நோய்களால் [venereal diseases] வெகுவாய் பாதிக்கப்பட்டவர்களாய் இருந்தனர், மற்றும் மிருகங்களுடன் பாலுறவு கொண்டு இவ்வியாதியை மிருகங்களுக்கும் பரவச் செய்தனர். இவ்வாறு செயல்பட்ட இந்த ஜனங்கள் முற்றிலுமாய் அழிக்கப்பட்டு போயினர்.

தாராளவாதிகள் [liberals] இங்கு தேவனை கோபாக்கினையின் தேவன் என அழைக்கின்றனர், ஆனால் அன்பின் தேவன் இந்த ஜனங்கள் முறைதிரையற்றவர்களாய் வெகுதூரம் சென்றுவிட்டார்களே என உணருகிறவர்களாய் இருக்கின்றனர். இந்த ஜனங்கள் பாலுறவு நோய்களால் நோய்கொண்டு, மற்றும் அவர்கள் மிருகங்களையும் இவ்வியாதியினால் பெருகும்படி செய்து முடிவாய் முற்றிலும்

அழிக்கப்பட்டனர். அவர்களில் உள்ள இவ்வியாதி பரவாது இருக்க ஒருவரும் மீதியாய் வைக்கப்படவில்லை. பாலுறவு சம்பந்தமான வியாதிக்கு [venereal diseases] மருத்துவமே அந்நாட்களில் இல்லாதிருந்தது, இன்றைய அளவிலும் இதற்கு சரியான மருத்துவம் கிடையாது. இது குணப்படுத்த முடியாத நோய்களில் ஒன்றாகும்.

இன்றைய அளவில் இப்படிப்பட்ட தீமைகளாலும் மற்றும் அதைப்போன்ற பாவபழக்க வழக்கங்களினால் தங்களையே அழித்துகொள்வோருக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லை. இதைப்போன்றே நமது நாட்களில் எய்ட்ஸ் வியாதி பரவி வருகிறது. இதைப்போன்ற பழக்கவழக்கங்கள் இல்லாதவர்களுக்கு இது இரட்சிப்பாய் இருக்கிறது, இவர்கள் வேசித்தனத்திற்கு விலகியோடி இப்படிப்பட்ட தீமைகளுக்கு நீங்கலாகி பாதுகாப்புடன் இருக்கிறார்கள். வேசித்தனத்தினால் ஆரம்ப காலங்களில் நிகழ்ந்தது போல ஒவ்வொரு வேசித்தன செய்கைகளுக்கும் இறுதியான தீர்ப்பு இப்படிப்பட்ட வியாதிகளால் பாதிப்படைந்து மரணமடைவதே ஆகும்.

ஏன் இப்படிப்பட்ட மக்கள் அழிக்கப்பட வேண்டும் என்றால், தேவன் அன்பாய் இருக்கிறார், அவர் அறியாமையுள்ள ஜனங்கள் அதினால் அவதியுறக்கூடாது என அவ்வாறு செய்தார். அறியாமையுள்ளோர் பாதுகாக்கப்பட்டு, குற்றங்களை செய்தோர் வாதிக்கப்படுவது நல்லதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட ஜனங்கள் தீமையில் தொடர்ந்து செயல்பட்டதை பிலேயாம் அறிந்தான். அவன் பாலாக்கிடம் சொன்னது, உனது தேசத்தில் உள்ள பெண்கள், உயர்ந்த வஸ்திரம் தரித்து, உயர்ந்த வாசனை திரவியங்களைப் பூசிக்கொண்டு, கவர்ந்திழுக்கக்கூடிய ஆடை ஆபரணங்களை உடுத்திக்கொண்டு இஸ்ரவேலரின் மனிதர்களிடத்தில் செல்லும்படி கேட்டுக்கொண்டான். அவர்கள் அப்படியே சென்றபோது ஒழுக்கக்கேட்டிற்கு இஸ்ரவேலர் உட்பட்டபோது, தேவன் அவர்களை நியாயந்தீர்த்தார். இதுவே அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சியாய் இருக்கிறது.

எண்ணாகமம் 25

பிலேயாமின் ஆலோசனையால் நிகழ்ந்த விளைவை கண்டோம். இங்கு சொல்லப்படுவது என்னவெனில் அவர்கள் மோவாபியருடன் சம்பந்தம் கலந்தனர் எனக்கூறப்படுகிறது. இதன் பொருள் என்னவெனில் அவர்கள் மோவாபியருடன் பாலுறவு கொண்டனர் என்பது அர்த்தமாகிறது. முக்கியமாய் சுவிஷேச ஊழியத்தில், நீங்கள் தீமையுடன் கலந்து போகக்கூடாது. இஸ்ரவேலின் மனிதர்கள் மோவாபியரின் ஆலயம் வரை ஈர்க்கப்பட்டு, அவர்களுடன் பாலுறவு கொண்டனர். இது அநேக சபைகளிலும் நிகழ்ந்துள்ளது, வேசித்தனம் செய்வோருக்கு தேவனது கரம் எதிராகவே செயல்பட்டு வருகிறது. மிகவும் சௌந்தரியமுள்ள அழகிய பெண்கள் குணமாக்க முடியாத கொடிய வியாதியினால் பிடிக்கப்பட்டு இருக்கின்றனர்.

இன்றைய அளவிலும் அதைப்போன்றே நடந்து வருகிறது. ஒழுக்கக்கேடான காரியங்களில் ஈடுபடுவோருக்கு, தேவனது நியாயத்தீர்ப்பானது அவர்கள் மீது கடந்துவருகிறதாய் இருக்கிறது. தேவன் இல்லை என்பாரானால் அதற்கு ஒரு காரணம் உண்டு. மோவாபிய பெண்களுடன் பாலுறவு கொண்டதன் விளைவால், இஸ்ரவேலின் மனிதர்கள் இஸ்ரவேலின் எதிர்காலத உயிர் உடமைகளுக்கு பங்கம் வருவித்தனர். இவர்கள் எதிர்காலச் சந்ததியாகிய அவர்களது பிள்ளகளுக்கு பால்வினை நோய்களை கொண்டு செல்கிறவர்களாய் இருந்தனர்.

வசனம் 4 ல் மோசே மோவாபிய பெண்களுடன் உடலுறவு கொண்ட அனைவரின் தலைகளையும் வெட்டி எறியுமாறு கூறினார். விபச்சாரம் என்பது தேவனால் உங்களுக்கென நியமிக்கப்பட்ட மனைவியை அல்லாது வேறு பெண்களுடன் உடலுறவு கொள்ளுதல் ஆகும். அவர்களை நீங்கள் கண்டறிய வேண்டும், அவர்கள் தலைகளை வெட்ட வேண்டும், பின்னர் அவர்களது வெட்டப்பட்ட தலையை கம்பங்களில் தொங்கவிடப்பட வேண்டும், அவர்களது உறவினர்கள் இத்தகைய செயல் எவ்வளவு கொடூரமானது என்பதை புறிந்து கொள்ள வேண்டும். விபச்சாரம் தீமையாய் இருக்கிறது. ஆவியில் நடந்துகொண்டு, நாம் இதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம். பாவம் செய்வது எளிது, அவ்வாறு செய்யும்போது நீங்கள் கர்த்தரோடுள்ள ஐக்கியத்திலிருந்து வெளியேறுகிறீர்கள்.

தங்களது சொந்த குடும்பத்தினரை கொலை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. நீங்கள் குடும்பத்தில் தகப்பனாய் இருந்து, உங்களது மகன் மோவாபிய ஆலயத்திலிருந்து வருகிறது தெரிந்தால் உங்களது பட்டயத்தால் அவனை கொலை செய்தல் வேண்டும். ஒருவரும் தீவில் வாழ்கிறவராய் இல்லை. பாவம் நிரம்பிவழியக்கூடிய வழக்கத்தைப் பெற்றிருக்கிறது. பாவம் தொற்று நோய்போல தொட்டால் ஒட்டிக்கொள்ளும் தன்மையுள்ளதாய் இருக்கிறது அதைத் தொடுபவரை எல்லாம் பாதிப்புக்குட்படுத்தும். நமது வாழ்க்கையை பார்த்து இதன் உண்மையை கண்டுகொள்ளுதல் வேண்டும். நாம் நமது பாவத்திலிருந்து கற்றுக்கொள்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், அது சிந்தனையிலிருக்கும் போதே, அது செயல்பாட்டுக்கு வருமுன், அதோடு ஈடுபட்டு அதற்குரிய பரிகாரத்தைத் தேடுதல் வேண்டும்.

கிறிஸ்தவர்களில் அநேகர் தாங்கள் நினைத்த எதை வேண்டுமானாலு செய்யலாம், அவைகள் அவர்களைப் பாதிக்கப்போவது இலலை என்கின்றனர், அது உண்மையல்ல கண்டிப்பான பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. பினகாஸ் என்பவன் அடுத்த பிரதாண ஆசாரியனாய் இருந்தான், அவன் தேவனது வார்த்தையை கவனமாய் கேட்டிருந்தான், அவன் தனது கையில் ஒரு ஈட்டியை எடுத்துக்கொண்டு ஓடிப்போய் வேசித்தனம் செய்யும் ஒரு தம்பதிகளைக் கண்டு தனது ஈட்டியினால் இருவரையும் உருவக் குத்திப்போட்டான். தீமை இருக்கும் இடத்தில், நாம் விரைவாக சென்று அதை அகற்றும் நடவடிக்கைகளில்

ஈடுபடுதல் வேண்டும், அப்பொழுது பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல் சுலபமாய் இருக்கும்.

நீங்கள் ஒரு அபாயகரமான சூழலில் இருக்கிறீர்கள் என சிந்திப்பீர்களானால், உங்களுடன் ஒருவரை அழைத்துக்கொள்ளுங்கள். நாம் மிக தீவிரமாய் ஆவியின் பட்டயத்தை உபயோகித்து, அதைக் கையில் எடுத்து செயல்படுதல் வேண்டும். வெளிப்படுத்தல் 2 அதிகாரத்துடன் இதை கட்டி செயல்படுத்தும் போது, புதிய ஏற்பாட்டால் இப்படிப்பட்ட அடிப்படை நீக்கப்படவில்லை என்பதை காண்கிறவர்களாய் இருப்போம், இப்படிப்பட்ட செயல்கள் பலப்படுத்தப்பட்டவைகளாய் இருக்கின்றன. தேவனது திட்டங்கள் ஒருபோதும் மாற்றப்படுவதில்லை. கிறிஸ்தவர்களாய் இருக்கும் நீங்கள் பாவத்துடன் வெளியே செல்ல முடியாது, அவைகளுடன் ஈடுபட்டு அவைகளுக்கு பரிகாரம் தேடிக்கொள்ளுதல் அவசியம்.

நீதி மொழிகள்:

நீதிமொழிகள் 5:1-9 ல் உள்ள வேதபகுதி வாலிப குழுக்களுக்கு மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. சாலமோன் தனது குமாரனுக்கு தொழில்சார்ந்த விபச்சாரத்தைக் குறித்து அதன் அபாயத்தை கூறுகிறவராய் இருக்கிறார். இதைப்போலவே ஒருகாதல் மன்னனுடன் செல்லும் பெண்பிள்ளைக்கும் இது பொருந்தும். கிறிஸ்தவ வாலிப ஜனங்கள் இப்படிப்பட்ட சோதனைகளை சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர். சாலமோன் தனது குமாரனுக்கு "உன் வழியை அவளுக்குத் தூரப்படுத்து" என்கிறார். அவள் உதடுகளில் பூசப்படும் வண்ணச்சாயம் தேனினால் தயாரிக்கப்பட்டு அழகிய சுவையுடன் இருந்தது. அவளது வாய் ஆரம்பத்தில் இனிமை, முடிவிலோ கசப்பிலும் கசப்பு.

நீதிமொழிகள் 6:16-19 ல் தேவன் அருவருக்கும் ஏழு கொடிய பாவங்களை காட்டுகிறது. ஒழுக்கக்கேடான காரியங்களை தேவன் இவ்வேழு கொடிய பாவங்களை விட அதிகமாய் வெறுக்கிறவராய் இருக்கிறார்.

மேட்டிமையான கண்ணை தேவன் வெறுக்கிறார், தனது சுய நீதியை பார்ப்பது, ஜனங்கள் மற்றவர்களின் குற்றத்தைக் காண்பது போன்றது ஆகும். தேவனின் நீதி எல்லாவற்றிற்கும் மேலானதாய் இருக்கிறது, தனது ஒரே பேரான குமாரனை விசுவாசித்து இருந்தும், இன்னும் பாவத்தில் சிக்கித்தவிக்கின்றனர். நீங்கள் ஒருவேளை இப்படிப்பட்ட சபையில் இருக்கலாம். அல்லது நீங்கள் ஒருவேளை ஒழுக்கக்கேடுகள் இல்லாத சபையாய் இருக்கக்கூடும் ஆனால் அவர்கள் மன நிலை சார்ந்த பாவங்களுடன் இருக்கக்கூடும்.

மற்றொரு பாவ அமைப்பு பொய்சொல்லும் நாவுகள். இவைகள் முகஸ்துதியான பொய் இதில் அடங்கியுள்ளது, பொய் சொல்லும் போதகர்கள் நான் சத்தியத்தைப் போதிக்கிறே என்பர் ஆனால் அவர்கள் சத்தியத்தை ஒரு போதும் போதித்ததில்லை.

குற்றமில்லாத இரத்தத்தை சிந்தும் கைகள், சிசு கொலை செய்பவர்கள், குடிபோதையில் வாகனம் ஓட்டுபவர்கள், கூலிக்காய் கொலைசெய்யும் குண்டர்கள், போதை வஸ்துக்களை வியாபாரம் செய்வோர், ஐசுவரியமிக்க மருத்துவர்கள், மற்றும் மேற்சொன்னவர்களை நிரபராதிகள் என பாதுக்காக்கும் வக்கீல்கள் போன்றவர்கள்.

JuhNyhridiag; gpizf;Fk; ,Ujak;> இப்படிப்பட்டவர்களின் மனம் இச்சைகளால் நிறைந்து இருக்கும், இவர்கள் எல்லா நேரங்களிலும் இதே சிந்தையாய் இருப்பார்கள், பண ஆசைபிடித்தவர்களாய் இருப்பார்கள், பதவி மோகத்துடன் இருப்பார்கள், பாலுறவு ஆசை இச்சைகளை பேணிக்காப்பர், கோபதாபத்துடன் காணப்படுவர் மற்றும் வெறுப்புடன் இருப்பர், பொறாமையுடன் இருப்பர். உங்களது பாவத்தை அறிக்கை செய்வது மிகவும் முக்கியம்.

jPq;F nra;tjw;F tpiue;NjhLq;fhy;. இப்படிப்பட்ட ஜனங்கள் தவறான காரியங்களில் தங்கிதாபரிப் பவர்கள், இதைக் குறித்து ஜனங்களுக்கு பெரிய அளவில் விவரிப்பவர்களாய் இருப்பர். இப்படிப்பட்டவர்கள் பாலுணர்வை ஊட்டுகிறவைகளைக் கண்டு பாலின்பம் நுகர்பவர்கள், இப்பட்ட ஜனங்கள் தங்களுக்குத்தாங்களே இப்படிப்பட்ட காரியங்களை செய்துகொள்ள தைரியம் அற்று, மற்றவர்கள் கீழ்த்தர சிற்றின்பத்தில் கிடந்து புரளுகிறதைக் காண்பதில் விருப்பம் கொள்பவர்கள். ஆபாச நிர்வாண படங்களை கண்டு ரசிப்பவர்கள். இப்படிப்பட்டவைகளைக் குறித்த அடிப்படை காரியங்களைக் குறித்து பேசி மகிழ்வர், இப்படிப்பட்டவர்களுக்காய் அதிகம் ஜெபிக்க நீங்கள் கடமைப் பட்டு இருக்கிறீர்கள்.

தங்கள் மனதை குப்பைகளால் நிரப்பிக்கொள்ளாத ஜனங்களும் இருக்கின்றனர், அறியாமையுள்ள ஜனங்கள் தங்களது மனதை கிறிஸ்தவர்கள் குப்பைகளால் நிரப்புகிறவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்ட காரியங்களின் பெயர் முதலாய் உங்களில் காணக்கூடாது.

பாவிகளுக்காய் ஜெபியுங்கள், ஆனால் பாவத்தின் மீது தரித்து இராதேயுங்கள். உங்கள் சாட்சியானது தேவன் உங்கள் வாழ்வில் என்ன செய்தார் என்பதாய் இருக்கட்டும், சாத்தான் என்ன செய்தான் என்பதாய் இருக்கக்கூடாது. தேவன் பரிசுத்தராய் இருக்கிறார், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள். பாவத்தில் தலையிடாதவர்களுடன் ஈடுபடுங்கள், தவறான சாட்சிகள், குற்றமற்றவர்களை காயப்படுத்தும் ஜனங்கள், முறண்பாடுகளை விதைக்கிறவர்கள் போன்றோருடன் ஈடுபடுங்கள். தவறான வழியில் திசை திருப்புகிறவர்கள் உண்டு, திரித்துக்கூறும் சம்பாஷனை செய்வோர் உண்டு, மறைவான காரியங்களை மனதில் வைத்துக்கொண்டு பேசி அவைகளில் விழப்பண்ணுவோரும் உண்டு.

இப்படிப்பட்டவைகள் நடவா வண்ணம் அவைகள் குறைக்கப்படும் சந்தர்ப்பங்களை எடுத்துகொள்வது மிக முக்கியமான ஒன்றாய் இருக்கிறது.

பாவத்தை வேதாகமக் கண்ணோட்டத்தில் காண்பது மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது. தேவன் பாவத்தை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். நாம் அவர் முன் வராவிட்டால், எபிரெயர் 12 ன் படி, நாம் பயங்கரமான நியாயத்தீர்ப்புக்கு உள்ளாகிறவர்களாய் இருப்போம். உங்களது ஜனங்களை தேவனது கொள்கைகளுக்கு எடுத்துச் செல்வதன் மூலம், அவர்களை விரோதியானவனிடத்திலிருந்து காப்பாற்றுகிறவர்களாய் இருப்பீர்கள். அவர்களது பாவத்தை குறித்த சாக்குப்போக்குகளை சொல்லாது இருக்க நீங்கள் அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள். நீங்கள் அவர்களை தேவனது வார்த்தைக்கு முன்பதாய் சகோதர சகோதரிகளாய் நிறுத்தும்படி, அவர்களிடம் முயற்சி செய்து, அவர்களை ஆதாயப்படுத்துதல் வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில், தேவனது வார்த்தையுடன் தீமையை எதிர்கொள்ளுதல் வேண்டும். நாம் ஜீவனுள்ள நீதியை நமது வாழ்விற்கு போதித்தல் அவசியம்.

உபதேசம்:

விபச்சாரம்

1. விளக்கம் -- திருமண உறவுக்கு வெளியில் உள்ள பாலுறவு செயல்பாடுகள். இது வேசித்தனம், ஓரின சேர்க்கை [homosexuality], நெருங்கிய உறவினர்களுடன் பாலுறவு கொள்ளுதல் [incest.] போன்றவைகளை உள்ளடக்கியுள்ளது.

2. விபச்சாரம் தேவனது வார்த்தையினால் விலக்கி வைக்கப்பட கூறப்பட்டுள்ளது (யாத்திராகமம் 20:14; உபாகமம் 5:18; கொலோசெயர் 3:5; 1 தெசலோனிக்கேயர் 4:3).

3. மனதளவில் செய்யும் விபச்சாரம் கூட, கண்டனம் செய்யப்பட்டுள்ளது (மத்தேயு 5:27-28).

4.];jph;PAlNd tpgrhuk;gz;Zfpwtd; kjpnfl;ltd;@ mg;gbr; nra;fpwtd; jd; Mj;Jkhitf; nfLj;Jg; NghLfpwhd;. (நீதிமொழிகள் 6:32)

5. பாலுறவு ஒழுக்கக்கேடு ஆண் பெண் இருபாலரின் மனித சரீரத்தில், அழிவு விளைவுகளை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. (cf. 1 கொரிந்தியர் 6:13-18).

அ] ஆண் -- வீரியக்குறைவு மற்றும் பாலுறவில் ஈடுபட இயாலாமை.

ஆ] பெண் -- பாலுறவு செயல்பாட்டில் இன்பத்தை அடைவதில் முறிவு. விரைப்புத்தன்மை அல்லது பெண்ணின் இயற்கைக்கும் மீறிய காம

வெறிகொள்ளுதல், இருவரும் மனம் தளர்ந்து போதல் மற்றும் உடல் உறவு கொள்ள இயலாமை.

இ] பால்வினை நோய்கள் பெருகுவதற்கான சந்தர்ப்பங்கள்.

6. எப்படிப்பட்ட பாலுறவு ஒழுக்கக்கேடானாலும், எல்லாவற்றிற்கும் மேலான மனச்சோர்வை அளித்து, மகிழ்ச்சிக்கும் மனநிறைவுக்குமுரிய பாலுறவை நிறைவேற்ற முடியாமல் தவிப்பை ஏற்பத்தும். (எபேசியர் 4:19,5:3).

7. விபச்சாரம் விவாகரத்துக்குரிய நல்லெண்ணத்தின் அடிப்படையாய் இருக்கிறது (மத்தேயு 5:32; 19:9; லூக்கா 16:18). விபச்சாரம் என்பது புருஷன் மனைவி இவர்களிடையே மகாப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது, அவர்கள் இருவரின் மனோரீதியான (நம்பிக்கை) மற்றும் சரீர ரீதியிலான ("ஒரே சரீரம்") போன்ற பகுதிகளில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துகிறது. எப்படியிருப்பினும், மன்னிப்பு மற்றும் தேவனின் கிருபை இவைகளினால் எல்லாப்பாவங்களின் விளைவை மேற்கொள்ள முடியும்.

8. விபச்சாரம் அல்லது வேசித்தனம் வேதாகமத்தில் அடிக்கடி விசுவாசத் துரோகம் மற்றும் உண்மையற்ற நிலை போன்றவற்றை விவரிக்கிறதாய் இருக்கிறது. (எரேமியா 3:8-10, எசேக்கியேல் 16:23-43, 23:24-28; வெளிப்படுத்தல் 17:1-5).

பாடம் 39 -- உபாகமம் 32

உபாகமம் 32

நாம் மோவாபின் சமவெளியில் இருக்கிறோம் இங்கிருந்து யோர்தான் ஆற்றைக் கடக்க தயாரக உள்ளோம். இதுவே மோசேயின் இறுதிப் பிரமாணமாயும் மற்றும் உடன்படிக்கையுமாய் இருக்கிறது. இந்த இடம் மோசே மரிப்பதற்கு உரிய இடமாய் இருக்கிறது, மற்றும் இங்கே தேவனது வார்த்தையின் முக்கியத்துவம் சுட்டிக்காட்டப்படுகிறது.

வசனம் 1 ல் மோசே தூதர்களையும் மற்றும் பூமியையும் பார்த்து பேசுகிறார். அவர் மனிதனது விவகாரங்கள் அனைத்தையும் துதர்கள் பார்வையாளர்களாய் இருந்து கவனிக்கின்றனர் எனக்காட்டுகிறவராய் இருக்கிறார். கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துப்பற்றிய அறிவிலும், கிருபை யிலும் ஜனங்கள் வளருவதை அவர்கள் நேசிக்கிறவர்களாய் இருக்கின்றனர். விழுந்து போன தூதர்கள் விசுவாசியின் நடையை தடை செய்ய முயலுகிறவர்களாய் இருக்கின்றனர். உலகம் ஒரு நாடக மேடை என ஷேக்ஸ்பியர் கூறுகிறார். நாம் அனைவரும் அந்த மேடையின் மீது கண்கானிக்கப்படுகிறோம், மற்றும் பரலோகில் உள்ள சிங்காசனங்களிலிருந்தும் காண்கானிக்கப் படுகிறோம்.

இந்த செய்தியானது ஜனங்களை சென்றடைய தெரிந்து கொள்ளப்பட்ட 70 பேரும் உதவியளித்தனர். மோசே இங்கு 2 மில்லியன் ஜனங்களுக்கு பேசுகிறார். அவர் பேசிய அனைத்தும் நீண்ட முழுமையான செய்தியாய் எழுதப்பட்டன. எப்படியிருப்பினும் பூமியில் நிகழ்ந்த அனைத்தும் ஒரு நித்திய பரிமானமாய் இருந்தன. நாமும் கண்காணிக்கப்பட்டு அது நித்திய விளைவைப் பெற்றதாய் இருக்கிறது. நாம் தேவ தூதர்களின் முறண்பாட்டில் இருக்கிறோம். பிசாசுகளின் படையும் இருக்கின்றன.

நாம் அறிந்துணர வேண்டியது என்னவெனில், நாம் ஆரம்பத்திலிருந்தே யுத்தத்திற்கு உட்பட்டவர்களாய் இருக்கிறோம். - எபேசியர் 6:10-14. மோசே சொல்வது என்னவெனில், எல்லோரும் இங்கேயில்லை, பெரிய பகுதியானது இருக்கிறது அதற்காக நாம் கிரியை செய்து கொண்டு இருக்கிறோம். இந்த உலகத்தில் இருப்பவனிலும் நமக்குள் இருப்பவர் பெரியவர்.

சேவைக்கான சந்தர்ப்பம் நித்தியமாய் இருக்கிறது. இங்கு உங்களுக்கு என்ன நடக்கிறது என்பது முக்கியமல்ல ஆனால் நித்தியத்தில் கர்த்தர் என்ன சொல்கிறாரோ அதுவே மிக முக்கியமாய் இருக்கிறது. உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே என வாழ்த்துவதே அதிக முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. ஒரு விசுவாசியாய் இருந்து நீங்கள் செய்யும் அனைத்தும் ஒரு யுத்த செயலாய் இருக்கிறது. நாம் தேவனது சர்வாயுத வர்க்கத்தைப் பெற்று இருக்கிறவர்களாய் இருக்க வேண்டும், நாம் ஆவியில் நடந்துகொண்டு, ஆவியின் பட்டயமாகிய தேவனது வசனத்தை உபயோகிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

மோசே ஜனங்களுக்குச் சொன்னது என்னவெனில், செவிசாய்த்து இதைக் கேளுங்கள் என்றார். இது எல்லா ஜனங்களும் கவனித்தனர், ஆனால் சொல்லும் செய்தியில் கவனம் செலுத்தி கேட்பது அவசியமாய் இருந்தது. ஜனங்களே கேட்டு அதன்படி கீழ்ப்படியுங்கள், இது மிகவும் பலம் வாய்ந்ததாய் இருக்கிறது. அவர்களுக்கு என்ன சொல்லப்படுகிறதோ அவைகள் மிகவும் முக்கியம் வாய்ந்தவை மற்றும் அற்பணிப்பு அதன் கோரிக்கையாய் இருக்கிறது. கேளுங்கள் மற்றும் கீழ்ப்படியுங்கள். நாம் சிட்சைக்கு கீழாகும்படி ஆயத்தமாக வேண்டும்.

வேத பாடம்

வசனம் 2 ல் மூன்று விதமான வேதபாடம் உதாரணமாய் கொடுக்கப்பட்டுள்ளன, காலையில் பெய்த பனி, காலை தியானம், சிறிய மலை, தனிப்பட்ட வேதபாடம், மழை, ஒழுங்குபடுத்தப்பட்டு, கவனம் செலுத்தி படிக்கும் படிப்பு. ஒரு நாளைத் துவங்கும் முன் ஜெபத்துடனும் தியானத்துடனும் துவங்குவது முக்கியமானதாய் இருக்கிறது. ஒரு நாளைத் துவங்கும் போது தேவனது வார்த்தையினால் உங்கள் உதடுகளை ஈரமாக்குங்கள். சிறிய மழை என்பது தனிப்பட்ட படிப்பு இது அரை மணிநேரத்திலிருந்து ஒரு மணி நேரம் வரை எடுத்து செயல்பட வேண்டியது, இது பொருட்கள் நகருவதற்கு போதுமானது ஆனால் அதிகமான

உற்பாதனைக்கு இது போதுமானதாய் இருக்காது. மிகவும் கனமழை என்பது, தேவனது வார்த்தையை ஒழுங்குபடுத்தி போதிப்பதற்க்கான சபை கூடுகை இதினிமித்தம் நீங்கள் ஆழத்திற்குள் செல்ல இயலும். உங்களுக்கு இம்மூன்றும் அவசியம், நீங்கள் தியானத்தால் மட்டும் உயிர்வாழ முடியாது.

இதன் பொருள் என்னவெனில், நீங்கள் ஒரு வேதாகம ஆசிரியர் என்றால், ஒரு வாரத்தில் நான்கிலிருந்து ஐந்து முறை போதிக்கலாம். உளவியல் அறிஞர்கள் கூறுவது, உங்களிடமிருந்து ஜனங்கள் கற்றுக்கொள்ள விரும்புவார்கள் எனில் அது முக்கியமானது, ஒன்று விட்ட ஒருநாள் அவர்களுக்கு போதனை அளியுங்கள். இதன்படி செய்யும் போது மூன்று நாட்கள் மட்டுமே கற்றுக்கொள்ளும் பாட வேளை அமையும். ஞாயிறு, செவ்வாய், வியாழன் போன்ற தினங்களில் பாடம் நடத்துவது மிகச் சிறப்பாய் அமையும். வாரத்தில் ஏழு நாட்களும் போதிக்கலாம், இருப்பினும் மற்றகாரியங்களுக்கும் சமயம் கொடுக்க வேண்டுமே.

வசனம் 3-4 ல் கர்த்தருடைய வார்த்தையை போதிப்பதற்கான காரணம் காணப்படுகிறது, இது தேவனது நாமத்தை நிலை நிறுத்த அவசியமாகிறது. தேவனது கிரியை பூரணமானதாய் இருக்கிறது, அவரது வழிகளெல்லாம் நீதியாய் இருக்கிறது. இங்கு நாம் தேவனது குணாதிசயங்களை காண்கிறோம். தேவனுடைய வார்த்தைகளை போதிக்க துவங்கும் போது, தேவனது குணாதிசயங்கள் மற்றும் பாவத்தை அறிக்கை செய்வது இவற்றைக்கொண்டு துவங்க வேண்டும். இவைகளே உங்களது வழிகாட்டியாகவும் மற்றும் பெலப்படுத்துகிறதாயும் இருக்கிறது. இவ்விரு உபதேசங்களையும் குறித்த தெளிவு உண்டாகுமானால், நீங்கள் அவருடன் நடக்க முடியும். மோசே கூறுகிறார் தேவன் பூரணர், நிலையானவர், நீதியுள்ளவர், அவர் கன்மலையாய் இருக்கிறார் என்கிறார். நாம் அந்தக்கன்மலையின் ஒரு பகுதியாய் / துண்டாய் இருத்தல் வேண்டும். உங்கள் வாழ்வை தேவனுடன் சரிசெய்து கொள்ளுங்கள். உங்களது நிலையானத் தன்மையை தனிப்பட்ட நிலையிலும், தேசம் அவரை அறியும்படி உங்களை சார்ந்து இருப்பதையும் அறிந்து உணர்ந்து கொள்ளுங்கள்.

விசுவாசத்தைத் தவிர்த்து உணர்ச்சிகள்:

வசனம் 5-7 ல் இஸ்ரவேல் மக்களது பிரச்சனைகளின் மேல் மோசே தன் விரலைவைக்கிறவனாய் இருக்கிறான். யாத்திராகமத்தைக் கடந்துவந்த சந்ததியினர் தோல்வியுற்றனர். அவர்கள் துஷ்டர்களும், சொற்கேளாதவர்களும், தேவனை விட்டு அகன்று சென்றவர்களாயும் இருந்தனர். நீங்கள் ஞானத்தில் குறைவுள்ளவர்களாய் இருப்பீர்களானால், உபதேசத்திலும் குறைவுள்ளவர்களாய் இருப்பீர்கள். இந்த ஜனங்கள் புத்தியீனராய் இருந்தனர். வேத உபதேசத்தில் இவர்கள் குறைவுபட்டவர்களாய் இருந்தபடியால், மோசே ஜனங்களை விமர்சிக்கிறவராய் இருந்தார். தேவன் எதை விரும்பினாரோ, அதை நீங்கள் செய்து நிறைவேற்றவில்லை. நீங்கள் மதியற்றவர்களாய் இருக்கிறீர்கள், நீங்கள் சத்தியத்தை அறிவதில் குறைவுள்ளவர்களாயிருக்கிறீர்கள் மற்றும்

பொய்யை மனதார நம்புகிறவர்களாய் இருக்கிறீர்கள். காதேஸ்-பர்னேயாவில் அவர்கள் தங்களது உணர்ச்சிகளை அதிகம் நம்பினர்.

தேசத்தை வேவு பார்க்கச் சென்றிருந்த யோசுவாவும் காலேபும் மன உறுதியுடன் தேவனைச் சார்ந்து இருந்தனர், மற்றவர்கள் தங்களது உணர்வுகளைச் சார்ந்து கோழைகளாக இருந்தனர். யோசுவாவும் காலேபும் வேதாகம உபதேசத்தைப் பெற்றிருந்தனர் மற்றவர்கள் அவற்றைப் பெறாதவர்களாய் இருந்தனர். தேவனது வல்லமையினால், நாம் அவர்கள் அமரும் இடத்தை எளிதாய் தட்டிவிடலாம்.

எபிரெயர் 3 மற்றும் 4 அதிகாரங்களில் அவர்கள் தங்களது வார்த்தைகளை விசுவாசத்துடன் கலக்கவில்லை. மோசே அப்போஸ்தலராகிய பவுலைப் போன்றவர், அவரைப்போன்று வேதாகமத்தை போதிப்பதில் தலைசிறந்தவர்கள் எவரும் இல்லை, இருப்பினும் வேதாகமப் போதனைகளை தங்கள் வாழ்க்கைக்கு எடுத்துக்கொள்ளாத ஜனங்கள் அவர் நாட்களில் இருக்கத்தான் செய்தார்கள். மோசே இந்த ஜனங்களுக்கு 40 ஆண்டுகளாய் போதித்து வந்தார், இருப்பினும், அவர்களுக்குச் சொல்லப்பட்ட அனைத்தையும் அவர்கள் அறியாதவர்களாய் இருந்தனர். ஊழியராய் இருக்கும் உங்களுக்கும் அதைரியம் வரக்கூடும். நீங்கள் உங்கள் நேரத்தை வீணடிக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் தனது கிரியைகளை நடப்பிக்கட்டும், நீங்கள் உற்சாகப்படுத்துங்கள், நீங்கள் புத்திசொல்லுங்கள், போதனை அளியுங்கள், அறிவுரை கூறுங்கள், ஊழியர்கள் பொறுமையுடனும், நீடிய பொறுமையுடனும் இருத்தல் அவசியம்.

தேவன் உங்களைக் குறித்து அக்கறையுள்ளவராய் இருக்கிறார்:

வசனம் 11-12ல் தேவனது அக்கறையை ஒப்பிடும்போது கழுகு குறிப்பிடப்படுகிறது. கழுகு தனது கூட்டை கன்மலை வெடிப்பில், வனாந்திர முட்களைக் கொண்டு அமைக்கிறது. பின்னர் அது தனது மார்பக இறகுகளை பிடுங்கி அதன் மீது வைத்து தனது குஞ்சுகளை அம்முட்கள் பாதிக்காவண்ணம் செய்கிறது. குஞ்சுகள் பறக்க ஆரம்பிக்கும் தருணத்தில், கூட்டில் உள்ள அவ்விறகுகளை களைத்துவிட்டு முட்கள் தென்படச்செய்கின்றன, இதன் நோக்கம் குஞ்சுகள் கூட்டைவிட்டு நிரந்தரமாய்ச் சென்று பறக்கவேண்டும் என்பதாகும்.

இந்த விதமாக தேவன் தனது மக்களுடன் இடைபடுகிறவராய் இருக்கிறார். கர்த்தர் உங்களுக்கு பயிற்சி அளித்து பின்னர் சேவை செய்யும்படி உங்களை விட்டுவிடுகிறார். அவர் உங்களைச் சுமப்பவராய் எப்பொழுதும் உங்களுடனே இருக்கிறார். இந்த உலகத்தில் உள்ளவனைவிட உங்களோடு இருப்பவர் பெரியவர். ஆவிக்குரிய வளர்ச்சியடைந்து அவருக்கு உங்களால் இயன்ற வண்ணம் சேவை செய்யுங்கள்.

தேவன் உங்களது கூட்டைக்கலைப்பாரானால், நீங்கள் செல்ல வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். நீங்கள் எப்படியிருப்பினும் உறுதிசெய்து கொண்டு கர்த்தரின் நடத்துதலுக்கு ஒப்புக்கொடுத்து முதிர்ச்சியடையாத குஞ்சுகளாய் கூட்டிலேயே இராதபடிக்கு முன்செல்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். நாம் ஆட்டுக்குட்டிகளை பரமாரித்து பாதுகாத்தல் வேண்டும், அவைகளுக்கு நல்ல ஆகாரம் அளிக்கிறோமா என்பதை உறுதிசெய்துகொள்ளல் வேண்டும். இவைகள் மற்ற கிறிஸ்தவர்களுடன் சென்று என்ன நிகழ்கிறது எனக்கண்டறிதல் முக்கியம் வாந்தது. காரியங்களை அவர்களாகவே செய்யவேண்டும் எனக்கேட்டுக்கொள்ளாதிருங்கள், அவர்களால் செய்ய இயலாது. நீங்கள் சிறப்பான முன்மாதிரியாய் இருப்பீர்களானால் அவர்கள் உங்களிடமிருந்து கற்றுக்கொள்ள இயலும்.

இஸ்ரவேலின் மறு மொழி:

வசனம் 15 ல் இஸ்ரவேல் மக்கள் கொழுத்து சோம்பேறிகளானார்கள், கர்த்தரை மதியாமலும், அவருக்கு அளிக்க வேண்டிய மரியாதையை அளிக்கத் தவறிப்போனார்கள். அநேக ஜனங்கள் வாழ்க்கையின் கடினமான காரியங்களை கையாண்டவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் செழிக்க ஆரம்பித்தவுடன் அவர்களது கண்ணோட்டமானது நித்திய காரியங்களை விட்டு வெளிப்பிரகாரமான காரியங்கள் மீது செல்கிறதாய் இருக்கிறது. அவர்கள் பொருட்களை சார்ந்து வாழ்கிறவர்களாகி விடுகின்றனர். மோசே ஜனங்கள் மிகவும் ஐசுவரிவான்களாகி விட்டனர் எனக்கூறுகிறார். அவர்கள் எகிப்தை விட்டபோது மிகுந்த பொன்னை சுமந்து கொண்டு வந்தனர். அவர்கள் கொழுத்துப் போனவர்களாய் வளர்ந்தனர், அவர்கள் செயல்படுவதற்கு ஏதுவாய் தங்களை நேர்த்தியாய் வைத்துக்கொள்ளவில்லை. அவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தை அசட்டை செய்தனர்.

நீங்கள் கர்த்தருக்காய் என்ன செய்தீர்கள் என்பது, உங்கள் வாழ்க்கை மூலம் தெரிய வருகிறதாய் இருக்கிறது. உங்கள் கண்களை ஒரு புறஜாதியானைப் போல உருட்டிக்கொண்டு, நீங்கள் தேவன் அதிசயமானவர் என்று சொல்லமுடியாது. காரியங்கள் தவறாய் சென்றுகொண்டிருக்கும் போது, கர்த்தர் உங்களுக்கு எப்படிப்பட்டவராய் இருக்கிறார் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நீங்கள் கர்த்தர் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்களா, இல்லை உங்கள் சுயத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்களா?

அவர்கள் விசுவாசத்துரோகத்திற்குள் சென்றனர். அவர்கள் வாழ்வில் எல்லாவிதமான நல்ல காரியங்களை பெற்று இருந்தனர், ஆனால் கடலில் மூழ்கிப் போகிறவர்களானார்கள், அவர்கள் தவறான மதத்திற்குள் சென்றனர். நம்மைக்குறித்த தேவனது மதிப்பீடு என்ன? அநேகக்கிறிஸ்தவர்களின் குறிக்கோள் என்னவெனில், "நீங்கள் பயப்படுவீர்களானால் எதற்காக தேவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்"

வசனம் 21 ல் தீர்க்கதரிசன உண்மை ஒரு முக்கிய அம்சமாய் இருக்கிறது. நாம் ஜனங்களல்லாத ஜனமாய் இருக்கிறோம் - ரோமர் 10,11. பவுல் சொல்வது என்னவெனில் சபையின் மூலம் இஸ்ரவேலர் தூண்டிவிடப்பட்டனர். தேவன் எல்லாவற்றையும் இஸ்ரவேலில் செய்து முடிக்கவில்லை, அவர்கள் வருங்காலத்தில் / எதிர்காலத்தில் இன்னும் பெரிய முக்கியத்துவம் வகிப்பவர்களாய் தேவனது திட்டத்தில் இருக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

இஸ்ரவேலரின் சிட்சை:

வசனம் 22-27 ல் இஸ்ரவேலருக்கு சம்பவிக்கப்போகும் பயங்கரமான சம்பவங்களின் பட்டியல் இருக்கிறது. இது சிலுவைக்கு 1500 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, எருசலேமின் வீழ்ச்சியின் போது இஸ்ரவேலுக்கு என்ன சம்பவிக்கப்போகிறது என்பது குறித்த விபரங்கள் கொடுக்கப்பட்டு இருந்தன. பட்டயம் இல்லாத பயங்கரம் அதற்குள் சம்பவிக்கும். இங்கு நடக்கப்போகும் நிகழ்சிகளும் மற்றும் பேரழிவு குறித்து சொல்லப்பட்டது.

இஸ்ரவேலரின் வீழ்ச்சிக்குப்பின்னர் அவர்கள் உலகெங்கும் சிதறடிக்கப்படுவர் (வச 16). தற்பொழுது இஸ்ரவேலில் இருக்கும் யூதர்களை விட அதிகமான யூதர்கள் நியூயார்க் பட்டணத்தில் வசித்துவருகிறார்கள். இன்றைய அளவில் யூதர்கள் பூமியின் ஒவ்வொரு மூலையிலும் வசித்து வருகின்றனர். அவர்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றனர் காரணம் அவர்கள் உபதேசத்தை புறக்கணித்து வாழ்கின்றனர். தேவன் இவைகளை இஸ்ரவேலருக்கு செய்து இருக்கும் போது, அவர் சபைக்கு என்ன செய்யப்போகிறார். பவுல் உண்மையாகவே ரோமரில் அழுத்தத்தை வைக்கிறவராய் இருக்கிறார். நீங்கள் இதை அடைந்தே தீர வேண்டும், தேவன் உங்களை கடுமையாய் நியாயந்தீர்க்கப் போகிறவராய் இருக்கிறார்.

இந்த தொடர்பயிற்சியில் வேதாகம போதனைகள் 530 மணி நேரங்கள் எடுத்து போதிக்க வேண்டியவைகளாய் இருக்கின்றன. இது கேட்க பயங்கரமானதாய் இருக்கிறது ஆனால் இதை நடைமுறை படுத்த இயலாது. ஒரு ஊழியருக்கு இது ஒரு ஆறுதலான காரியமாய் இல்லை. தேவன் உம்மைக்குறித்து வைராக்கியமுள்ளவராய் இருக்கிறார், அவர் நீங்கள் பிரகாசிக்க வேண்டுமென விரும்புகிறார். கர்த்தரது வார்த்தையில் வாழ்ந்து கொண்டு இருக்கும் போது, பாடுகளைப் பெற்றுக் கொள்வீர்களானால் அதனிமித்தம் தேவனுக்கு நன்றி கூறுங்கள்.

கர்த்தர் தமது ஜனங்களை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். வசனம் 36-39. நீங்கள் ஏதோ ஒரு வரையரைக்குட்பட்ட தெய்வங்களோடு ஈடுபடாமல், சர்வ வல்லமையுள்ள தேவனுடன் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறீர்கள். ஜீவிக்கிறவர்கள் மரிக்கிறவர்கள் அவர் தீர்மானத்தின்படியே இருக்கிறது. நீங்கள் வியாதிப்பட்டு அவர் நீங்கள் குணமடையாது இருக்க தெரிந்து கொள்வார் எனில் அது மிகப்பெரிய சேவைக்காக ஆகும் குறைவான சேவைக்காக அல்ல. நமது தேவன் கட்டுப்பாட்டிற்குள் உள்ள தேவன். அவர் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை அறிவார். நாம் எவ்வளவு காலம்

ஜீவிக்கப்போகிறோம் என்பது நமக்குத் தெரியாது. உங்கள் சிநேகிதரின் மரணத்தை நீங்கள் காணும்போது உங்கள் அழிவைக் குறித்து உணருகிறவர்களாய் இருக்கிறீர்கள். தன் வாலிபப்பிராயத்தில் தன் சிருஷ்டிகரை நினைக்கிற வாலிபன் பாக்கியவனாய் இருக்கிறான், அவன் தனது நேரத்தை ஞானமாய் செலவிட அறிந்திருக்கிறான்.

வசனம் 45-47 ல் மோசே வேதாகம உபதேசம் சார்ந்த காரியங்களை சொல்லி அவைகள் உங்கள் வாழ்வில் இருக்க வேண்டும் எனக்கூறுகிறார். உங்கள் மரணத்தில் என்ன இழக்கப்போகிறீர்கள்? நீங்கள் ஒன்றும் இழக்கப்போவதில்லை. கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவது எனக்கு ஆதாயம். கிறிஸ்தவர்களின் அணுகுமுறை இன்றைய அளவில் இவ்வாறு இல்லை, இதனிமித்தமே சபையானது வல்லமையின்றி காணப்படுகிறது. ஒரு வேளை இரத்த சாட்சியாய் கர்த்தருக்காய் மரித்து புறஜாதியாரை கர்த்தரிடமாய் திருப்பும் ஒரு சந்தர்ப்பத்தை அடையலாம் அல்லது அநேக சபைகளை புறஜாதியாராக்கி, ஒரு இரவில் எல்லோரையும் புறஜாதியாக்கி விடலாம். மிகச் சிலரே கர்த்தரை மிகவும் நெருங்கி ஜீவிக்கிறவர்களாய் மற்றும் அவருக்காய் மரிக்க ஆயத்தமுள்ளவராய் இருக்கின்றனர்.

வசனம் 47 ல் ஓர் நல்ல இலக்கு கூறப்படுகிறது மற்றும் வேதாகம நிறைவுடன் விளங்கும்படி தூண்டப்படுகிறது, பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படும் கிறிஸ்தவரைப்பற்றிக் கூறுகிறது. நமது கிறிஸ்தவ வாழ்வில் நாம் தற்போது எங்கே இருக்கிறோம்? இது மிக முக்கியமான ஒன்றாய் இருக்கிறது.

உபதேசங்கள்

உங்களைக்குறித்த தேவனது அக்கறை (இதற்கு முன் உள்ள பாடங்களில் காண்க)

இஸ்ரவேல்

1. ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டபடியே, இஸ்ரவேலுக்கு எதிர்காலம் உண்டு. (ஆதியாகமம்12:1-3).

2. இஸ்ரவேலரின் எதிர்காலம் திரும்ப உருவாக்கப்படுதலின் அடிப்படையில் இருக்கிறது. (ரோமர்9:6-14).

3. இஸ்ரவேலரின் எதிர்காலம் வாக்குத்தத்த தேசம் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது. (ஆதியாகமம் 15:18, எண்ணாகமம்34:1-12, உபாகமம்30:1-9).

4. இஸ்ரவேலருக்கு சதாகாலமும் ஒரு ராஜா இருப்பார். அவர் தாவீதின் குமாரனாகிய இயேசுக்கிறிஸ்து ஆயிர வருட அரசாட்சி செய்பவர்.

(2 சாமுவேல்7:8-16, சங்கீதம்89:20-37).

5. புதிய உடன்படிக்கையில் எரேமியாவுக்கு இவ்வாக்குத்தத்தம் உறுதிசெய்யப்பட்டது. (எரேமியா 31:31ff,எபிரெயர்8:8-13).

6. கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், இஸ்ரவேலின் எதிர் காலம் ஒரு தேசமாய் துவங்கும். (சகரியா14:1-9).

7. இப்பொழுது தேவனின் ஒழுங்கின் கீழ் இஸ்ரவேல் தேசம் சிதறடிக்கப்பட்டு இருந்த போதும், இஸ்ரவேலின் எதிர்காலம் உறுதியாய் இருக்கிறது,
(ஏசாயா5:26-30, 14-1-3, 10:20-23, 11:11-16, சகரியா 10:6-12).

8. இஸ்ரவேலுக்கு ஒரு நோக்கம் உண்டு.
ஒரே மெய்யான பரிசுத்த தேவன் உண்டு என சாட்சி பகர (உபாகமம்6:4, ஏசாயா43:10,12).
ஒரே மெய்யான தேவனை சேவிப்பதன் மூலம் ஆசீர்வாதங்களை அடையமுடியும் என தேசங்களுக்கு விவரிப்பதற்காக (உபாகமம் 33:26-29, 1 நாளாகமம்17:20-21, சங்கீதம்144:15).
வேதவசனங்களைப்பெற்று, பதிவு செய்து, பாதுகாத்து அறிவிக்கும்படி (உபாகமம் 4:5-8, ரோமர்3:1-2).
வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட மேசியாவை ஏற்றுக்கொள்வதற்கும் அறிவிப்பதற்கும் (ஆதியாகமம்3:15, 12:3, 2 சாமுவேல்7:12-16, ஏசாயா7:14, 9:6).

9. இஸ்ரவேல் தேசம் இப்பொழுது தேவ ஒழுங்கின் கீழ் சிதறடிக்கப்பட்டு இருக்கிறது. சபையுகத்தில் சபையானது இஸ்ரவேல் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யும்படியாக நியமிக்கப்பட்டுள்ளது.. (ரோமர் 11). சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, உபத்திரவக்காலத்தில் திரும்பவும் தனது நோக்கத்திற்கேற்ப செயல்பட துவங்கும். (வெளிப்படுத்தல்7:4-8).

<u>பாடம் 40 -- உபாகமம் 4</u>

முன்னுரை

உபாகமம் இரண்டாம் முறையாக நியாயப்பிரமாணத்தை வாசிப்பதாய் இருக்கிறது. இப்புஸ்தகத்தின் பெயர் எகிப்தில் வைத்து 150 -200 கி.மு. வில் தயாரிக்கப்பட்ட செப்துவஜிந்திலிருந்து எடுக்கப்பட்டது. இதுவே மோசே 40 ஆண்டுகளாய் வனாந்திரத்தில் போதித்த வேத பாடமாய் இருக்கிறது. இது தேவனது வார்த்தை கைக்கொள்ள பேருதவியாய் இருக்கிறது. அன்பு என்பது பழைய ஏற்பாட்டின் தலைப்பாய் இருக்கிறது, இது புதிய ஏற்பாட்டிலும் அவ்வாறே இருக்கிறது. இங்கு தேவனது அன்பைக் குறித்து பார்க்கிறோம், இவ்வன்பானது மனிதனுக்கு ஒரு வேண்டுகோளாய் இருக்கிறது.

உபாகமம் 4

வசனம் 1 நற்செய்தியாய் இருக்கிறது. கற்றுக்கொண்டு செயல்படுத்துங்கள். இரு விளைவுகள் இங்கு நிகழ்கிறதாய் இருக்கிறது சாதாரணமாய் இருப்பதைக் காட்டிலும் அவர்கள் வாழ வேண்டியவர்களாய் இருந்தனர். கிறிஸ்தவர்கள் அதைச் செய்வதில்லை, வாழ்வில் அதை முறித்துப் போடுகிறவர்களாய் இருக்கின்றனர்.

இவர்கள் பந்தய சாலையில் ஓடுவதைத் தவிர்த்து, கூட்டத்திற்குள் பயனற்ற காரியங்களை செய்கிறவர்களாய் இருக்கின்றனர். ஒரு இராணுவத்தை வழி நடத்துவதை விட்டு விட்டு, கூட்டத்திற்குள் கூக்குரலிட்டுக் கொண்டு இருக்கின்றனர். மோசே கர்த்தர் என்கிறார் பவுல் வாழ்க்கை என்கிறார். இரண்டாம் விளைவாய் தேவனது வார்த்தையில் ஜீவிப்பது என்பது, தேவன் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்ற விருப்பமாய் இருக்கிறது.

இஸ்ரவேலுக்கான தேவனது வாக்குத்தத்தம், வாக்குத்தத்த தேசமாய் இருந்தது, அது இளைப்பாறுதலின் தேசம், பாலும் தேனும் ஓடுகிற தேசம்.

சபையின் நோக்கம் எபிரெயர் 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது. இதைப்போன்ற ஒரு காரியத்தையே உபாகமம் 4 ல் பார்க்கிறோம். இரு உடன்படிக்கைகளும் ஒன்றோடு ஒன்றிற்கு உரியதாய் இருக்கிறது. எபிரெயர் 4:1 கூறுவது என்னவெனில் கிறிஸ்துவில் உள்ள இளைப்பாறுதலை அடையத் தவறுபவர்களைக் குறித்து கூறுகிறதாய் இருக்கிறது. தேவன் உங்களுக்கு சமாதானமும் இளைப்பாறுதலும் வேண்டுமென விரும்புகிறார். யூதர்கள் அத்தேசத்தில் உள்ள கனிகளைத் தேடினது போல, நாம் ஆவிக்குரிய கனியைத் தேடி அதற்கு பின்னாக இருக்கிறோம்.

யூதர்கள் தேவனது வார்த்தையை விசுவாசத்துடன் கலக்காது இருந்தனர். வசனம் 2, அவர்கள் சுவிஷேசத்தைக் கேட்டனர், அதை அவர்கள் விசுவாசிக்கவில்லை, அவர்கள் வனாந்திரத்தில் மடிந்து போயினர். நாம் வனாந்தரத்திலே மடியப்போகிறோமா அல்லது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நமது ஆத்துமாவிலே பெற்றுக்கொள்ளப்போகிறோமா? நீங்கள் இளைப்பாறப்போவதனால் பரலோகம் செல்லவிருக்கிறீர்களா அல்லது நீங்கள் பயப்படுகிற நிலையில் தரித்திருக்கப் போகிறீர்களா.

பொது மேடைகளில் செய்யப்படும் ஜெபமானது சுருக்கமானதாயும், எல்லாவற்றைக்குறித்தும் நல் ஒழுக்கத்தைப் போதிப்பதாயும் இருத்தல் வேண்டும். உங்கள் ஜெபங்கள் பரிசுத்த ஆவியானவரின் கனியின் அடிப்படையில் இருக்கிறதா அல்லது விசுவாசமற்றதன் அடிப்படையில் இருக்கிறதா. இதையே எபிரெய நிரூப எழுத்தாளர் நம்மைப்பார்த்து கேட்கிறார், வாக்குத்தத்த தேசத்திறுகுள் பிரவேசித்த சந்ததியைப்போல இருக்கப்போகிறோமா அல்லது வனாந்தரத்தில் செத்து அழிந்த சந்ததியைப் போல இருக்கப்பொகிறோமா, காரணம் இப்படிப்பட்டவர்கள்

தேவனது வார்த்தையை எடுத்துக்கொள்ளவில்லை. கற்றுக்கொள்ளுங்கள் மற்றும் நடைமுறைப் படுத்துங்கள்.

நமது வாழ்வில் கிரியை செய்ய வேண்டும் காரணம் கனியானது நமது வாழ்வில் காட்டப்பட வேண்டும். தேவன் எல்லா உண்மைகளையும் அறிந்தவராய் இருக்கிறார், நமக்கடாத காரியங்களில் தலையிட்டுக்கொண்டு தேவனை அதற்குள் இழுத்தல் நமது மதீயீனத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. அநேக ஜனங்கள் தங்களது ஆவிக்குரிய வாழ்வை அதிகமாய் ஜெபிப்பதன் மூலம் சொற்பத்தை மூடுகிறவர்களாய் இருக்கிறார்கள். நீங்கள் உங்களையே புத்தியீனராக்கிக்கொள்கிறீர்கள் தேவனையல்ல.

நமது கிரியைகள்:

உபாகமத்தில் மோசே உங்களது வேலைசெய்ய தேவன் விருப்பமுள்ளவராய் இருக்கிறார் எனக்கூறுகிறார். நாம் உள்ளான நிலையில் மாற்றப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும், அது உள்ளிருந்து நிரம்பி வழிவதன் மூலம் உங்கள் பழக்க வழக்கங்களில் மாறுதலை ஏற்படுத்தும். ஒரு கிறிஸ்தவனாய் இருப்பதற்காக முயற்சி செய்து ஓடுவதை நிறுத்துங்கள். ஜனங்கள் உங்களிடத்தில் எதைச் செய்ய எதிர்பார்க்கிறார்களோ அதை செய்யுங்கள். மோசே, காலேப், மற்றும் யோசுவா போன்று இருங்கள், தேவனது வார்த்தையானது எல்லாவற்றைக் காட்டிலும் அதிக உண்மையாய் இருக்கக்கடவது. அதன் பின்னர் ஆவியானவர் உங்கள் உள்ளான நிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவாராக. மற்ற எல்லாவற்றையும் விட தேவனது வார்த்தை உண்மையாய் மாறும்போது, அவருக்கு சேவை செய்ய தலைப்படுங்கள். காலேபும் யோசுவாவும் இராட்சதரைக் கண்டார்கள் ஆனால் அவர்கள் சொன்னது, நாம் சென்று அதை பிடித்துக்கொள்ளலாம் என்றனர், காரணம் தேவனது வார்த்தையானது இராட்சதர்களைக் காட்டிலும் அவர்களுக்கு மிகவும் உண்மையானதாய் இருந்தது.

வேதாகமப் பகுதிகளில் பெரிய அபாயத்திற்கு உரிய செயல் என்னவெனில், தங்களது சொந்தக் கிரியை, அனுபவம், பாரம்பரியம் போன்றவற்றை கலப்பது ஆகும். இதில் மற்றொரு காரியம் என்னவெனில், வேதாகமத்தில் உள்ள தேவனது வார்த்தையை எடுத்துவிட்டு, அதப்பார்த்துக் கொண்டு இருப்பதற்கு அவசியம் இல்லை, அது இப்பொழுது அவ்வளவு முக்கியம் வாய்ந்ததாக இல்லை என வேதத்தை புறக்கணிப்பது ஆகும். இது 2 தீமோத்தேயு 3:16,17 வசனங்களுக்கு முற்றிலுமாய் எதிர்விளைவை ஏற்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. இவ்வசனங்கள் வேதவசனங்களின் அவசியத்தையும், அவைகளை படிப்பதன் அவசியத்தையும் காட்டுகிறதாய் இருக்கிறது.

உபாகமம் 4:3,4 பாகால் பேயோரைக் குறித்து பேசுகிறது, மோவாபியரின் கடவுள், இக்கடவுளுக்கு முன் பாலுறவு பாவங்களுக்கு தங்களை உட்படுத்திக்கொண்டதை எண்ணாகமத்தில் காட்டப்பட்டுள்ளது. மோசே,

இஸ்ரவேலர் ஒழுக்கக்கேடானவைகளுக்கு சென்ற போது, தேவன் அவர்களுக்கு செய்ததை நினைவு கூறச் சொன்னார். அப்படிச்சென்றவர்களது விளைவு குறித்து சொல்லி, மனந்திரும்பாது போனால், சீக்கிரத்திலே மரணத்தை சந்திக்க நேரிடும் எனக்கூறினார். தேவன் தன்னிடத்தில் அன்பு கூறுகிறவர்களைக் குறித்து வைராக்கியம் பாராட்டி, தன்னைத்தவிர வேறு எந்த தேவர்களையும் அவர்கள் பெற்றிருக்கக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாய் இருந்தார்.

நீங்கள் யாருடன் செயல்படுகிறீர்கள் என்பது குறித்து மிகவும் கவனமுடையவர்களாய் இருங்கள். எல்லா ஜனங்களும் மரித்துவிட்டனர். நாம் ஜீவனை தெரிந்து கொள்ளுதல் வேண்டும். தேவன் நியாயந்தீர்க்கிற இடத்தில் நீங்கள் இருக்கக்கூடாது. நீங்கள் அசுத்தமான வாழ்க்கை வாழுவீர்களானால், தேவனை நியாயந்தீர்க்கும்படி கேட்டுக் கொள்கிறவர்களாய் இருக்கிறீர்கள். அழிவுக்கு அருகில் வேளா வேலைகளில் கிட்டிச் சேருகிறவர்களாய் இருக்கிறீர்கள். விசுவாசிகள் ஒருபோதும் விழுந்து போகக்கூடாது.

வசனம் 6 ல் புறஜாதியார் உங்களிடம் வந்து, அவர்கள் உங்களுடன் ஒத்துப்போகமுடியாது என அவர்கள் அறிந்திருந்தும் நீங்கள் நிற்கும் தோரணை அவர்கள் அறிந்து உங்களை பாராட்டும் போது, உங்கள் ஆத்துமாவில் உபதேசத்தைப் பெற்றிருக்கிறீர்கள் என அறிந்து கொள்ளுங்கள். தேவனது கொள்கை, அவிசுவாசிக்கும் உங்களை உற்று கவனிக்கும்போது அர்த்தம் கொடுக்கிறதாய் இருந்து. உபதேசம் உங்கள் வாழ்வுக்கு புறிந்து கொள்ளுதலையும், ஞானத்தையும் அளிக்கிறதாய் இருக்கிறது. ஸ்தானத்தில் இருப்பது யார், நாம் சொல்லுவோம் மோசே. யார் அவர்களது சிருஷ்டிகருடன் பேசுவது யார் அவருடன் தொடர்புகொள்வது? யாய் அவர்களது ஆழமான சிந்தனைகளை அவர்களது சிருஷ்டிகருடன் பேசுவது? வழிநடத்துதலை கொடுப்பவரிடமிருந்து யார் பெற்றுக்கொள்வது? நாம் வெற்றி பெறுகிறவர்களாய் இருக்கிறபடியால், வெற்றி பெற்றவர்களைப் போல நடந்துகொள்ளுதல் வேண்டும். உங்கள் ஸ்தானத்தை உற்றுப்பார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்.

வசனம் 7-8 ல் தேவன் அனுமதிக்காத பட்சத்தில் ஒரு தேசமும் பெரிதாய் இருக்கமுடியாது. ஒரு தேசம் பெரியதாய் இருக்குமேயானால், அது வேதாகம அடிப்படையில் இருந்தாக வேண்டும். சோவியத் யூனியன் ஒன்பது கட்டளைகளை அடிப்படையாய் கொண்டு இருந்தது, அவர்கள் கடவுளற்றவர்களாய் இருந்தபடியால், முதலாவது கட்டளையைப் புறக்கணித்து விட்டனர், அவர்கள் தேவனை முதல் இடத்தில் வைக்க வில்லை. எப்படியிருப்பினும் அவர்கள் மேற்கத்தியவர்களை தரம் நளிந்தவர்களாய் பெருகச் செய்ததன் மூலம், மரணதண்டனைக்கு தப்பிக்கொண்டனர். ஒரு தேசம் முற்றிலுமாய் நியாயப்பிரமாணத்தை மீறிச் செல்லுமேயானால் அது அழிந்து போகிறதாய் இருக்கும்.

நீங்கள் இங்கு இருப்பதைக் காட்டிலும் மாஸ்கோவில் மிகப் பாதுகாப்பாய் இருக்க முடியும். அவர்கள் முதல் கற்பணையை நிராகரித்து விட்டதால்

அவர்கள் மது பான பிரச்சனைகளுக்கு பெரிய அளவில் சோரம் போய் இருந்தனர். ஒரு தேசம் வேதாகம அடிப்படையில் நிலைத்திருக்குமேயானால், அத்தேசம் சமூக, பொருளாதார, மற்றும் ஆவிக்குரிய நிலையில் செழிப்புடன் விளங்கும், இவைகளை விட்டு வழி விலகுமேயானால் அது முற்றிலும் கீழான நிலைக்குச் சென்று விடும். மேற்கத்திய நாடுகள் இதினிமித்தமே அதிகமாய் பெலவீனப்பட்டுப் போனார்கள். உங்களுக்கு நியாயப்பிரமாணம் இருக்குமேயானால், உங்களுக்கு நிலையானத் தன்மை இருக்கிறதாய் இருக்கும். மோசே சொன்னார், நியாயப்பிரமாணத்தை விட்டு அகலுவார்களேயானால் அவர்கள் பெலவீனமடைந்து நளிந்து விடுவர் என்றார். மோசே கூறுவதற்கு செவி கொடுங்கள்.

ஞாபக மறதி

விசுவாசிகளைப்போன்றே எல்லா மனுக்குலமும் ஞாபக மறதியுள்ளவர்களாய் இருக்கின்றனர். எத்துனை முறை வாஞ்சையுடன் நாம் கர்த்தருடன் ஊழியத்தில் இருப்பதைக் குறித்து, இருப்பதைக்குறித்து சொல்லியிருப்போம். எப்படியிருப்பினும் உங்களது மனோரீதியான காரியம் வித்தியாசமாய் இருக்கிறது. உங்களது தவறான மனநிலையில் இயேசு இங்கிருந்தாலும் கூட உங்களால் வளர முடியாது. உங்கள் ஆத்துமாவில் என்ன இருக்கிறது என்பதே, கர்த்தரை உயர்த்துவதைக் குறித்து தீர்மானிக்கிறதாய் இருக்கிறதாய் இருக்கிறது. அது உங்கள் கண்களால் காண்கிறதோ, அல்லது உங்கள் காதுகளால் கேட்கிறதோ அல்ல, அது உங்கள் ஆத்துமாவில் என்ன இருக்கிறது என்பதை பொருத்ததாய் இருக்கிறது. தேவனது வசனத்தைக் குறித்து உங்களது மனோரீதியான காரியம் என்னவாய் இருக்கிறது.

மோசே அவர்களுக்கு ஞாபகப்படுத்தியதையும் மறக்கிறவர்களாய் இருந்தனர். மோசே போதனையின் விளைவு மிகப் பரிதாபத்திற்குரியதாய் இருந்தது, இரண்டு மில்லியன் ஜனங்களுக்குப் போதித்தும் இருவர் மட்டுமே போதனைக்குச் செவிசாய்த்து நடக்கிறவர்களாய் இருந்தனர். அதைரியப்பட்டு போய்விடாதிருங்கள், மோசே இந்த ஜனங்களுடன் 40 ஆண்டு காலமாய் பேசுக்கொண்டு வந்தார். யாத்திரகாம சந்ததி மக்கள் எப்படியோ இவற்றின் ஊடாக கடந்து செல்கிறவர்களாய் இருந்தனர்.

நாம் நமது பிள்ளகளுக்கும், நமது பேரப்பிள்ளைகளுக்கும் போதனை கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். உங்களது நான்கு வயது பிள்ளையுடன், நீங்கள் நல்ல இறையியல் சார்ந்த விவாதத்தை விவாதிக்க இயலும். நீங்கள் அவரை அறிந்து, உங்களது பிள்ளைகளுடன் அவரைப் பகிர்ந்துகொள்ளுங்கள். இதை அவர்கள் மிகக் கவனத்துடன் எடுத்துக்கொண்டு, அவர்கள் உங்களுடன் கர்த்தரைக் குறித்துப் பேசுவார்கள். கர்த்தரைக் குறித்து சிந்திக்கும் படி, அவர்களை உற்சாகப்படுத்துங்கள்,

காணக்கூடிய உபகரணங்கள்:

வசனம் 11, 12, 15 ல் மோசே சொன்னார் நான் சொல்கிறகாரியங்களுக்கு நீங்கள் மிகக்கவனமாய் செவி சாய்த்து, யாக்கோபு 1 ம் அதிகாரத்தில் கூறுவதைப் போலவே செய்யுங்கள். யாக்கோபு சொல்வது கண்ணாடியில் பாருங்கள் ஆனால் உங்களைப்போன்ற ஒரு உருவத்தை உண்டாக்காதீர்கள். அவர்கள் என்ன செய்தார்கள், அவர்கள் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை, ஒரு கன்று குட்டியை செய்தனர். அது எகிப்திய சின்னமாய் இருந்ததது, அப்பீஸ் - எருதுக் கடவுள். மற்றும் அவர்கள் பலிசெலுத்தும் முறையையும் எடுத்துக்கொண்டனர். அவர்கள் பொன்னால் ஆன பலிசெலுத்தும் மிருகத்தை தங்கள் ஞாபக உபகரணமாய் எடுத்துக்கொண்டனர்.

எப்படியிருப்பினும் அது தவறாய் இருந்தது. தேவன் ஒரு பொன்னாலான கன்றுகுட்டியை விரும்பினது இல்லை, ஆனால் அவர் உண்மையான ஒரு எருதை பலி செலுத்தி உண்மான இரத்தம் சிந்துதலை விரும்பினார். ஆரோன் ஒத்துப்போகலானான். இதைக்குறித்து சபைசரித்திரத்தில் கத்தோலிக்கர்கள் மற்றும் ஆர்த்தொடாக்ஸ் சபைகள் இடையே உள்ள முறண்பாடுகளில் பார்க்கப் போகிறோம். நாம் எப்படிப்பட்ட உருவங்களையும் செய்து நமஸ்கரிக்கக்கூடாது. சரீரப்பிரகாரமாய் ஏதோ ஒன்றை விரும்பும் நபர்களுடன் எவ்விதத்திலும் ஒத்துப்போகக்கூடாது, அல்லது அவர்களது எண்ணப்படி அவர்களது விசுவாசத்திற்கு வலுசேர்க்கும்படி இப்படிப்பட்ட காரியங்களை செய்கிறார்கள் அதைப்போன்ற செயல்களில் ஈடுபடுதல் கூடாது. இங்கு கேட்கப்படும் கேள்வியானது பரிசுத்த ஆவியானவருக்கு, உங்களது ஆத்துமாவில் உருவங்கள் அல்லாது விவரிப்பதற்கு ஏதேனும் கஷ்டம் அவருக்கு உண்டா? அதற்கு பதில் இல்லை என்பதுதான். பரிசுத்த ஆவியானவர் உங்களது ஆத்துமாவில் வல்லமை அளிப்பதற்கு அவருக்கு எவ்வித பிரச்சனையும் கிடையாது அல்லது அவரது திறமை குறுகிப்போகவில்லை. என்ன காரியம் தேவனது வார்த்தையை காணவிடாது தடைசெய்வது? பதில் பாவமே அப்படிச் செய்கிறது.

காணக்கூடிய உபகரணங்கள் மிகவும் நல்லது ஆனால் கர்த்தரைக்குறித்து பேசும்பொது, ஹால்மென் ஹண்டின் சித்திரமாகிய, கர்த்தர் வாசற்படியில் நின்று தட்டும் சித்திரம் அவசியமில்லாததாய் இருக்கிறது. உங்கள் இருதயத்தில் அவரது சமூகம் உங்களுக்கு தெளிவில்லாமல் இருந்தால் மட்டும் அவரது சித்திரத்தை சுவற்றில் மாட்டி அதைப் பார்க்கலாம். நமக்கு ஒரு பொன் கன்றுக்குட்டி அவசியம் இல்லை.

மோசே இஸ்ரவேல் மக்களை பொன்கன்றுகுட்டியை அரைத்து தண்ணீரில் கரைத்து குடிக்கும்படி செய்தார். இதினிமித்தம் அவர்களுக்குள் பொன்கன்றுகுட்டி இருந்தது. இது விக்கிரகத்தை குறித்த கர்த்தரின் மனப்பாங்கை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. கர்த்தரை ஆராதிப்பவர்கள் அவரை ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்க

வேண்டும். சிலுவையில் அறையப்பட்ட காட்சியுடன் இருக்கும் சிலுவையை விட, அவரது வார்த்தையில் முழுமையான கவனம் செலுத்த வேண்டும். சிலுவை மீது நமது கவனத்தை வைத்தல் வேண்டும்.

இஸ்ரவேலின் சரிவு:

வசனம் 17 ல் ஜனங்கள் சரிவடைவதலின் தொடர்ச்சியை பட்டியலிட்டு காட்டப்படுகிறது. கர்த்தரால் சிருஷ்டிக்கப்பட்டவைகளை ஆராதிப்பது, நீண்டகாலத்திற்கு முன்பதாகவே ஜாதகத்தை பார்த்ததற்கு சமமாய் இருக்கிறது. வசனம் 19. ஜனங்கள் சிருஷ்டிகரை தொழுது சேவியாமல், சிருஷ்டியை தொழுது சேவித்தனர். ரோமர் 1:19-32. நாம் சிருஷ்டிகரை அறிந்துகொள்ளுதல் அவசியம். சூரிய, சந்திர நட்சத்திரங்களை உண்டாக்கினவரை அறிந்து கொள்ளுங்கள்.

வசனம் 20 ல் கர்த்தர் இஸ்ரவேலை கிறிஸ்துவால் கைப்பற்றப்பட்ட தேசமாய் எடுத்துக் கொள்கிறவராய் இருக்கிறார். அவர் உங்களை எகிப்திலிருந்து தமது ஜனங்களாயிருக்கும் படிக்கு விடுவித்து கொண்டுவந்தார். கற்பாறையை அடித்து செய்யத் தகாத காரியத்தை செய்ததினிமித்தம் மோசே முதலாய் நியாயத்தீர்ப்புக்கு கீழாய் இருக்கிறார். அவர் தோல்வியுற்றதினால், யோர்தானைக் கடந்து வாக்குத்தத்த தேசத்திற்குள் பிரவேசிக்க இயலாது என்று, மோசே அவர்களுக்கு நினைவுபடுத்தினார். அவருக்குண்டாயிருந்த தாழ்மையினிமித்தம், அவர்களுக்கு முன்பதாய் தான் தோலிவியுற்றதையும், தேவன் தன்னை நியாயந்தீர்ப்பதையும் அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். வசனம் 23 ல் தேவன் அவர்களது பெலவீனப்பகுதியை அறிந்து கொண்டு, கடந்த காலத்தில் விழுந்ததை குறித்து எச்சரிக்கையாய் இருக்க ஞாபகப்படுத்துகிறார்.

வசனம் 26-29 ல் மோசே வானத்தையும் பூமியையும் இஸ்ரவேலருக்கு விரோதமாய் சாட்சியாய் இருக்க அழைத்து, யூதர்கள் ஒரு குறிப்பிட்ட காலம் அடிமைகளாய் சிறைப்பட்டு போவார்கள் என்பதை தீர்க்கதரிசனமாய் கூறினார். அவ்வடிமைத்தனத்திலிருந்து எப்படியிருப்பினும் அவர்கள் மீது பாதுகாப்பாய் இருந்துவரும் தேவனது கரம் அவர்களுடன் இருப்பதால், அவர்கள் மீண்டும் வாக்குத்தத்த தேசத்திற்கு வருவார்கள். அவர்களது பிரச்சனைகளுக்குரிய பதிலை அவர் வேதவசனங்களில் கூறியிருக்கிறார். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறவர்களாய் இருப்பீர்களானால் நீங்கள் மறுபடியும் அவரது ஐக்கியத்திற்குள்ளும் அல்லது ஆசீர்வாதத்திற்குள்ளும் கடந்து வருவீர்கள். அவர்கள் தாங்கள் குத்தினவரை நோக்கிப்பார்க்க இருக்கிறார்கள். மோசே பின்னர் அவர்களுக்கு, தேசங்களுக்குள் சிதறிப்போவதைக் குறித்து கூறி, அவர்களது கீழ்படிதலினால் படிப்படியாய் திரும்புவார்கள், இன்னும் சில காரியங்கள் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது.

வசனங்கள் 39-40 நமக்கு கூறுவது வெற்றிக்கு மறைக்கப்பட்ட சத்தியம் எதுவும் இல்லை. நாம் கிறிஸ்துவிலும் அவர் நம்மிலும் நிலைத்து இருத்தல்

வேண்டும். நாம் கர்த்தருக்கு அருகிலேயே நடக்க வேண்டும், தேவன் நமக்களித்த மகாப்பெரிய ஸ்தானத்தை நாம் காண்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். மோசே இஸ்ரவேலுக்கு அளித்த செய்திகள் இங்கு இருக்கின்றன ஆனால் அதன் அடிப்படைக்கு காலம் குறிப்பிடவில்லை.

உபதேசங்கள்:

மனப்பாங்கு / நடத்தை [மேலே உள்ள பாடங்களில் காண்க]

தேவனின் வாக்குத்தத்தம் [மேலே உள்ள பாடங்களில் காண்க]

பாடம் 41 -- வனாந்திரத்தில் வேதபாடம்:

முன்னுரை:

இது வனாந்தரத்தின் வேத பாடமாய் இருக்கிறது. இங்கு இஸ்ரவேல் மக்கள் 40 ஆண்டுகாலமாக, வேதாகமத்தைக் கற்றுக்கொண்டனர். இந்த அதிகாரத்தில் அன்பு மற்றும் கீழ்ப்படிதல் இவ்விரு கருத்துக்களும் ஒன்று சேர்த்துக் கொண்டுவரப்படுகின்றன. அன்பைக்குறித்து போதித்த, முதல் பெரிய போதகர் இயேசு அல்ல என்றும் முதல், முதல் இதைக்குறித்து போதிக்க ஆரம்பித்தவர் மோசே என்பதையும், இந்த அதிகாரம் காண்பிக்கிறதாய் இருக்கிறது.

வசனம் 1-2 ல் தேவன் தனது தர நிலையையே, நாம் வாழ்வதற்குரிய தரநிலையாக அளிக்கிறவராய் இருக்கிறார். நாம் சில புத்தியீன மக்களைப் பெற்று இருக்கிறோம், அவர்கள் கூறுவது, நித்தியத்தில் சென்று நித்தியநித்தியமாய் வேதத்தை தவறாது வாசித்து அறிந்துகொள்ளப் போகிறோம். வேதாகாமத்திற்கு வேறு மாற்றுவழி எதுவும் கிடையாது. இது வாழ்க்கைக்குறிய சட்டமாய் இருக்கிறது, இதை உங்களுக்கு நீங்களே போதித்துக்கொள்ள வேண்டும். உங்களது தலையாய பொறுப்பாய் எடுத்துக்கொண்டு, உங்கள் பிள்ளைகளுக்கு வேதாகமத்தை கருத்தாய் போதித்தல் அவசியம். ஆவிக்குரிய தன்மையை அடைய ஜனங்கள் குறுகிய, எளிதான வழிகளை தேடுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் வேதனையில்லாமல், கஷ்டமில்லாமல், எல்லா ஆதாயத்தையும் அடைந்து கொள்ள விரும்புகிறார்கள், இவ்வாறு ஒருபோதும் அவர்கள் நினைப்பதை அடைய முடியாது.

இப்பகுதி நமக்கு போதனைகளை அளிக்கும் பகுதியாய் இருக்கிறது. இது உங்களுக்கு இரட்சிப்பு அவசியம் என்பதை காட்டுகிறதாய் இருக்கிறது, மற்றும் கட்டளைகள், விதிமுறைகள், மற்றும் நியாயத்தீர்ப்பு போன்ற மூன்று உண்மைகளை மோசேயின் நியாயப்பிரமாணம் நமக்கு காண்பிக்கிறதாய் இருக்கிறது. நியாயப்பிரமாணம் நமக்கு, நாம் யாரைப்

போன்று இருக்கிறோம் என்பதை காண்பிக்கிறதாய் இருக்கிறது. ஆரம்பத்திலிருந்து, கர்த்தரது வசனம் சொல்வதை முடிவுமட்டாக நாம் அறிவோமெனில், ஆரோக்கியமான தேவனுக்குரிய மரியாதை, நமது சொந்த பாவத்தைக் குறித்த உணர்வு, மற்றும் நமது சுயத்தேவை போன்றவற்றை நமக்கு தெளிவாய் காட்டுகிறதாய் இருக்கிறது.

கர்த்தரது வார்த்தையின்படி செய்கிறவர்கள்:

யாக்கோபு நிருபத்தில் 1:21 ff ல் கர்த்தருடைய வசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரம் அல்லாது அவைகளின்படி செய்கிறவர்களாய் இருங்கள். கண்ணாடியில் தனது சுய ரூபத்தை பார்த்துவிட்டு பின்னர் அப்புறம் சென்று தனது உருவத்தை மறந்து விடுகிறவர்களைப்போல இருக்கக்கூடாது என யாக்கோபு கூறுகிறவராய் இருக்கிறார். யாக்கோபு தேவனது வார்த்தையை நாம் பார்த்து, அதன்படி செயல்படுங்கள், அது நமது வாழ்க்கையை மாற்றி அமைக்கும் எனக்கூறுகிறார். இதன் விளைவு, உங்களது வாழ்வில் உள்ள பாவத்துடன் ஈடுபடவைத்து அதற்குரிய பரிகாரத்தைக் கண்டைந்து, மற்றவர்கள் மீது மனதுருக்கத்தை அடையச் செய்கிறது. இது உங்களது பாவத்துடன் ஈடுபடாது, அதற்குரிய பரிகாரத்தைத் தேடாது, மற்றவர்கள் மீது மனதுருக்கத்தைக்காட்டாது இருக்கச் செய்யுமேயானால், நீங்கள் ஒரு மாய்மாலக்காரனாய் இருக்கிறீர்கள் என ருசுப்படுத்துகிறதாய் இருக்கிறது. தேவனது வார்த்தை உங்கள் வாழ்க்கையில் செயல்படுகிறதாய் இருத்தல் அவசியம்.

உங்களுக்கு சமயம் கிடைக்குமானால், வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளபடி, ஒரு தேசம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்ளும் போது, அது உங்களது ஆர்வத்தை அதிகமாய் தூண்டுவதாய் இருக்கும். இதுவே சமுதாய குறியீடாய் இருக்கிறது. இஸ்ரவேலில் ஜெயில் என்பது கிடையாது. சிலகாரியங்களுக்காய் ஜனங்கள் மரணத் தண்டனை அடைந்தனர். இதுவே ஒரு தேசத்தை நடத்துவதாயும், பூமியின் மீது சமாதானத்தை அடைவதாயும் இருக்கிறது. இந்த அடிப்படையின் பேரில், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பூமியை 1000 ஆண்டுகாலம் ஆழுகைச் செய்யப்போகிறார்.

லேவியப்பலிகளில் ஒவ்வொன்றும் சரியாய் இருக்கவேண்டியுள்ளது. வேதவசனங்களில் ஒவ்வொரு வார்த்தையும் முக்கியமாய் இருக்கிறது. தேவனது வார்த்தை, ஒரு காரணத்துடன் இருக்கிறது. எல்லா உபதேசங்களையும் கொண்டுள்ளதாய் இருக்கிறது. எல்லா அமைப்புகளையும் கொண்டுள்ளதாய் இருக்கிறது. நமது ஆர்வத்தைத் தூண்டும் வகையில் ஆசரிப்பு கூடாரத்துக்கு வெளியே வைக்கப்பட்டிருந்த பாத்திரங்கள் வெண்கலத்தால் செய்யப்பட்டிருந்தன, வெண்கலம் நியாயத்தீர்ப்பைக் காட்டுகிறதாய் இருந்தது, மற்றும் ஆசரிப்புக் கூடாரத்திற்குள் உள்ள பாத்திரங்கள் அனைத்தும் பொன்னால் செய்யப்பட்டு இருந்தது, பொன் கிறிஸ்துவின் ஆளத்துவத்தைக் காட்டுகிறது. நீங்கள் அதிகம் அதிகமாய் கிறிஸ்துவின் ஆளத்துவத்தை உணரும்போது, உங்களது அதிகமான கவனம் கிறிஸ்துவின்

ஆளத்துவத்தில் வைக்கப்படுகிறது மற்றும் அவரது சிலுவைக் கிறியைகளை குறைப்பதாய் இருக்கிறது. எப்படியிருப்பினும், பொன்னை அடைய நீங்கள் நீங்கள் வெண்கல நியாயத் தீர்ப்பை தாண்டிதான் செல்ல வேண்டியிருக்கிறது.

ஆசரிப்புக் கூடாரத்தின் கம்பங்கள் வெள்ளியினால் செய்யப்பட்ட பாதங்களில் நின்றது, வெள்ளி மீட்பைப் பிரதிபலிக்கிறது. கம்பங்கள் தரையை தொடுவதில்லை, அது வெள்ளியினால் தரையிலிருந்து வேறுபிரிக்கப்பட்டு இருந்தது. மோசே இவைகளை தங்களது பிள்ளைகளுக்கும், தங்களது பேரப்பிள்ளைகளுக்கும் போதித்து அவர்கள் புறிந்து கொண்டதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும் என்றார்.

பழைய ஏற்பாட்டில் தேவனது ஆசீர்வாதம் நீண்ட நாட்கள் தேசத்தில் வாழ வேண்டும் என்பதாய் இருந்தது. இது புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு இது குறிப்பிடப்படவில்லை. தேவன் தமது வார்த்தையை அறிந்து கொள்வதன் மூலம் மற்றும் அதற்கு கீழ்ப்படிவதன் மூலம் அவர்களை ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறார். கிறிஸ்தவ வாழ்வில் எவ்வித குறுக்கு வழியும் இல்லை. நாம் பரிசுத்தமாக்கப்படுதலுக்கும் மற்றும் இரட்சிப்பிற்கும் நாம் கர்த்தரில் உறுதியாய் நிற்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

தேவன் ஆசீர்வதிக்க விரும்புகிறார்:

வசனம் 3 ல் தேவன் உங்களது கீழ்ப்படிதலைச் சார்ந்தே, அவர் உங்களை ஆசீர்வதிக்க விரும்புகிறார். உங்களது இரட்சிப்பில் நீங்கள் ஆசீர்வதிக்கப்பட போகிறீர்கள். எப்படியிருப்பினும் நீங்கள் ஒரு கிறிஸ்தவராக சரியான நேரத்தில் ஆசீர்வதிக்கப்பட விரும்புவீர்களானால் அது தேவனது வழியில் அமைய வேண்டும்.. இவைகளை நீங்கள் நடைமுறை படுத்தாத பட்சத்தில், உங்கள் வாழ்வில் உங்கள் விசுவாசம் வீணாய் இருக்கிறது. இது விசுவாசம் இருப்பது போல் பாசாங்கு செய்தல் அல்லது விசுவாசத்தை நடைமுறைப் படுத்துவதாய் இருக்கிறது.

ஒரு ஆர்த்தொடாக்ஸ் யூதனின் விசுவாச அறிக்கை வசனம் 4 ல் கொடுக்கப்பட்டுள்ளது, இதைத் தொடர்ந்துள்ள வசனங்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவால் மேற்கோள் காட்டப்பட்டு மோசே நியாயப்பிரமாணத்தின் சுருக்கம் அளிக்கப்படுகிறது, இதனுடன் உன்னை நேசிப்பது போல உன் பிறனையும் நேசிக்கக்கடவாய் என்பது சேர்க்கப்பட்டுள்ளது.

யெஹோவா தேவன் **நான் இருக்கிறவராகவே இருக்கிறேன்,** இந்த சொற்றொடரில் ஒருமை வாக்கியம் பயன்பட்டிருந்த போதும், ஏலோஹிம் என்கிற பன்மை சொல்லும் இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது. நமது கர்த்தர் ஒருவரே என்று இருந்த போதும், நமது தேவன் பன்மை வாக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். இது ஒரேத் தன்மையுள்ள திரித்துவம் குறித்து இது பேசுகிறது.

இஸ்ரவேலின் தேவன் என்கிற தலைப்பில் டாக்டர் கூப்பர் அவர்கள் எழுதிய புஸ்தகத்தில், அவர் பழைய ஏற்பாட்டின் புஸ்தகத்தை எடுத்துக்கொண்டு யூதர்களுக்கு ஒரு சுவிஷேசக புஸ்தகத்தை எழுதி, அவர்களை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தும் படி உருவாக்கியுள்ளார். இந்த புஸ்தகத்தில் அவர் யூதர்களுக்கு பாதுகாப்பான முறையில் திரித்துவத்தை அளித்துள்ளார்.

உபாகமம் 6:4 ல் யூதர்கள் இவ்வுபதேசத்தில் நிலை நின்ற போதும், ஐக்கியத்தில் உள்ள திரித்துவத்தை அறியாது இருக்கிறார்கள். அவர்கள் இவ்வசனத்தில் உள்ள திரித்துவத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். யூதர்கள் இயேசுவை, ஒழுக்க முறைகேடான நிலையில் ஒரு யூதப்பெண்மணி ஒரு ரோம சிப்பாய்க்கு அவள் பெற்றெடுத்தாள், அவர் பிரச்சனைகளை உண்டாக்கியபடியால் அவர் கொலை செய்யப்பட்டார் எனத்தீர்மானிக்கிறவர்களாய் இருக்கின்றனர். யூதர்கள் வெறுத்து ஒதுக்கப்பட்டனர் என்பது வெளியங்கமாய் காணப்படுகிறது, காரணம் ரோமன் கத்தோலிக்க சபையினரால், யூதர்கள் அநேக ஆண்டுகளாய் உபத்திவப்படுத்தப்பட்டு வந்தனர், மற்றும் இதைத் தொடர்ந்து அவர்களைச் சார்ந்த விசுவாசிகளும் யூதர்களை கொடிய உபவத்திரத்திற்குள்ளாக்கினர்.

பவுல் சொல்வது என்னவெனில், தான் இனி யூதனல்ல, ஆனால் தான் ஒரு கிறிஸ்தவன் என்கிறர், இருப்பினும் தனது யூதத்தன்மையானது அதிகமாய் பெருகுவதற்குக் காரணம் அவர் தனது மேசியாவை யூதகுலத்தில் கண்டு கொண்டதன் நிமித்தமே ஆகும். ஒரு யூதன் கிறிஸ்தவனாய் மாறுவதற்கான பெரிய தடை என்னவெனில், அவர்கள் யூதத்தனமையை இழந்துவிடுவோமோ என்ற அச்சம் காரணமாய் இருந்தது. ஒரு கிறிஸ்தவன் ஆன யூதனின் மனநிலையானது, தனது யூதத்தன்மையை தக்கவைத்துக்கொள்ள வாஞ்சையுள்ளவனாய் இருந்தான். உங்கள் விசுவாசம் உண்மையாய் இருக்குமேயானால், உங்களது கலாச்சாரம் உங்கள் விசுவாசத்திற்கு ஒரு வெகுமதியாய் இருக்க வேண்டியதாய் இருக்கிறது.

அநேக நேரங்களில், கிறிஸ்தவரல்லாத பிண்ணனியத்திலிருந்து வந்தவர்களின் கலாச்சாரமானது, ஒரே தேவன் என்கிற கொள்கை பெற்றிருக்க வேண்டியதாய் இருந்தது. இதன் காரணமாகவே மயோரிஸ் [Maoris] இனத்தவரின் வயது சென்றவர்கள் கிறிஸ்தவர்களான போது, இதை சம்பந்தப்படுத்த வேண்டிய அவசியம் அவர்களுக்கு இருந்தது. தேவன் இதற்கு முன்பாகவே சென்றுவிட்டார். அடிப்படைவாதிகள் தீமையை எழும்பப்பண்ணுகிறவராய் இருக்கிறார்கள், ஆனால் நாம் அதைப்பொருட்படுத்தாது, அங்குள்ள நன்மைக்கு திரும்பவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

தேவன் ஒரு சாட்சியில்லாமல் தன்னை விட்டுச்செல்லவில்லை. கிறிஸ்துவே நாமனைவரும் சார்ந்துகொள்ள வேண்டிய ஒருவராய் இருக்கிறார். இயேசு சொன்னார், அவர் நமக்கு பரிபூரண ஜீவனை அளிப்பதற்காவே வந்தேன்

என்றார். தேவனுக்கு மகிமையை கொண்டுவரக்கூடிய ஒவ்வொன்றையும், நீங்கள் செய்யக்கடமைப் பட்டுள்ளீர்கள். சந்தேகத்திற்கு இடமளிக்கும் காரியங்களை பரிசுத்த ஆவியானவர் அப்புறப்படுத்தட்டும்.

தேவனது சித்தம், நீங்கள் அவரிடத்தில் அன்பு கூற வேண்டும். தேவனது வார்த்தையில் நீங்கள் தரித்து இருத்தல் வேண்டும். ஆவியில் நடந்து அது பொங்கி வழியக்கூடியதாய் இருத்தல் வேண்டும். உங்கள் வாழ்நாட்கள் முழுதும் நீங்கள் தேவனுடன் கர்த்தருடன் நடக்கவேண்டிய வர்களாய் இருக்கிறீர்கள். பாவம் ஆதாமை பாழ்ப்படுத்தியது மற்றும் அது நம்மையும் பாழ்ப்படுத்தக்கூடியதாய் இருக்கும். நாம் படிக்க, அன்புகூற, போதிக்க, கீழ்ப்படிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவரிடத்தில் நீங்கள் அன்பு கூறுவதை, உங்களது கீழ்ப்படிதல் மூலம் காட்டுகிறவர்களாய் இருங்கள்.

உபதேசங்கள்:

மோசேயின் நியாப்பிரமாணம் [இதற்கு மேல் உள்ளப் பாடங்களில் காண்க]

இருக்கிறேன் [இதற்கு மேல் உள்ளப் பாடங்களில் காண்க]

திரித்துவம்

1. தேவன் ஒருவரே. அவர் மூன்று ஆளத்துவத்தில் வியாபித்திருக்கிறார். (2 சாமுவேல் 23:1-3, ஏசாயா 48:16, ஏசாயா 63:7-10, மத்தேயு 28:19, அப்போஸ்தலர் 2:33, 2 13:14).

2. தேவனுடைய ஒருமைத்துவம் அவர்களது ஒற்றுமை அல்லது ஒரே தன்மையுள்ள குணாதிசயங்கள் போன்றவைகளால் குறிப்பிடப்படுகின்றன. திரித்துவத்தில் மூவரும் சமமானவர்கள். (பிலிப்பியர்2:6,உபாகமம் 6:4, அப்போஸ்தலர் 17:29, ரோமர் 1:20, கொலோசெயர் 2:9),மனிதனுக்கு அவர்கள் பல வகைகளில் செயலாற்றுவதிலும் / அவர்களது நோக்கங்களிலும் வேறுபட்டு இருந்த போதிலும் அவர்கள் சமமானவர்களாகவே இருக்கின்றனர்.

3. இரட்சிப்பின் திட்டத்தில் இம்மூவரும் அவர்களது செயல்பாடுகளுக்குத் தக்கவாறு வேறுபட்டு விளங்குகின்றனர்.
(1 பேதுரு 1:2-3).

பிதாவாகிய தேவன் - நமது இரட்சிப்பை திட்டமிட்ட அதிகாரத்தை உடையவர் (ஏசாயா14:27, யோவான் 4:34, 5:17, 12:44, 1 கொரிந்தியர் 8:6a, எபேசியர்3:11).

குமாரனாகிய தேவன் - கீழ்ப்படிதலுள்ள குமாரனாய், மனிதனாகப் பிறந்து, நமது பாவங்களுக்காய் மரித்து, மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். (யோவான் 4:34, 5:17, எபிரெயர்10:7).
பரிசுத்த ஆவியானவர் - ஊழியம் செய்யும் சேவகர், குமாரனை வெளிப்படுத்துகிறவர் மற்றும் நம்மை சுத்திகரிக்கிறவர் (யோவான் 16:8-11).

4. குமாரனாகிய கிறிஸ்து மட்டுமே திரித்துவத்தில் காணப்படக்கூடியவராய் இருக்கிறார். (யோவான் 1:18, 6:46,
1 தீமோத்தேயு 6:16, 1 யோவான் 4:12).பழைய ஏற்பாட்டில் யெஹோவாவின் தூதனானவராய் வெளிப்பட்டவர் புதிய ஏற்பாட்டில் மாம்சத்தில் வெளிப்பட்டார். (யாத்திராகமம் 3:14 cf யோவான் 8:58; சங்கீதம் 10:16 cf வெளிப்படுத்தல் 11:15; சகரியா 14 cf வெளிப்படுத்தல் 19).

5. திரித்துவத்திற்கான ஆதாரங்கள்:
பழைய ஏற்பாடில், 'ஏலோகிம" என்கிற பன்மை சொல்லால் இது உறுதி செய்யப்படுகிறது மற்றும் 'நாம்' என்கிற பெயர் உரிச்சொல்லின் மூலமாகவும் இது உறுதி செய்யப்படுகிறது. (ஆதியாகமம் 1:26, 3:22, 11:7).
தேவனை ஆராதிக்கும் போது சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என ஆராதிக்கப்படுகிறார். (ஏசாயா6:3, வெளிப்படுத்தல்4).
பிதா குமாரன் பரிசுத்தாவியாவரின் நாமத்தில் (ஒருமை) இதில் திரித்துவம் சுட்டிக்காட்டப்படுகிறது. (மத்.28:19-20).
கர்த்தரின் ஞானஸ்நானத்தில் - ஆவியானவர் புறா ரூபம் கொண்டு அவர் மீது இறங்கினார், பிதாவாகிய தேவன் வானத்திலிருந்து பேசினார், குமாரனாகிய தேவன் ஞானஸ்நானம் பெற்றார். (மத்தேயு 3).

6. வெளிச்சம் திரித்துவத்தை விளக்க நல்ல உதாரணமாய் பயன்படுத்தப்படுகிறது. (1 யோவான்1:5). வெளிச்சம் ஒன்றே, ஆனால் அதில் மூன்று மூலக்கூறுகளை பெற்றுள்ளது.
பிதா - actinic light - காணப்படாத வெளிச்சத்தின் ஒரு பகுதி, இதை உணர முடியாது.
குமாரன் - luminiferous - இது வெளிச்சத்தின் ஒரு பகுதி இதைக்காணமுடியும் மற்றும் உணர முடியும்.
c) ஆவியானவர் - calorific - இது வெளிச்சத்தின் ஒரு பகுதி இதைக்காணமுடியாது மற்றும் உணர முடியும்

<u>பாடம் 42 -- உபாகமம் 6:6-9.</u>

வேத பாடம்

நாம் யாருடனெல்லாம் இருக்கிறோமோ அவர்களுக்கு தேவனது வார்த்தையை பகிர்ந்தளிக்க வேண்டும் என மோசே கூறுகிறார். உங்கள் குடும்பத்தினருக்கு அல்லது நண்பர்களுக்கு இதன் அடிப்படையில் தேவனது வார்த்தையை அளித்தல் வேண்டும். நீங்கள் ஒரு அவிசுவாசியுடன் நடக்கும்போது, சுவிஷேசத்தை அறிவிக்கும் தருணத்தை எதிர்பார்த்து கொண்டிருந்து சமயம் வாய்க்கும் போது அவருக்கு சுவிஷேசத்தை அறிவித்தல் வேண்டும்.

இது கூறுவது என்னவெனில் தேவனது வார்த்தையை உங்கள் கைகளில் கட்டிக்கொள்ள வேண்டும், மற்றும் உங்கள் கண்களுக்கு எதிராய் அவைகளை எழுதி ஞாபகமாய் வைத்தல் வேண்டும். யூதர்கள் இந்த காரியத்தை எழுத்தின்படியே எடுத்துக்கொண்டனர். மோசே இதைக் கூறும்பொழுது, தேவனது வார்த்தையானது எப்பொழுதும் மனதில் இருந்து கொண்டே இருக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் கூறினார். இதினிமித்தம் தேவனது வார்த்தையானது, உங்களுக்கும் பிரச்சனைகளுக்கும் நடுவில் வருவதை விட, தேவனது வார்த்தையானது உங்களுக்கும் உங்கள் பிரச்சனைகளுக்கு நடுவில் வரும், (so that the Word comes between you and the problem rather than your problem coming between you and the Word.)

பண்டைய எபிரெயர்கள தேவனை தங்கள் நினைவில் நிறுத்திக்கொள்ளுமாறு சிலகாரியங்களை அவர்களது வஸ்திரங்களில் எழுதிக்கொள்வர். நீங்கள் தேவனது வார்த்தையைக் குறித்து என்ன எண்ணம் கொள்கிறீர்களோ அவற்றை செய்யுங்கள். ஒரு விசுவாசி செய்யும் அனைத்து காரியங்களும் தேவனுக்காய் செய்யப்பட வேண்டும். தகாத காரியங்களை சிந்திக்க வேண்டாம், தேவனைக் குறித்து சிந்தித்தல் அவசியமானதாய் இருக்கிறது. பிலிப்பியர் 4:8-9. உபதேசங்கள் உங்களுக்கு அரணாய் இருந்து உங்களை பாதுகாப்பதாக.

யூதர்கள் வேதபகுதிகளை தங்கள் நுழைவாய் கதவுகளில் செதுக்குவார்கள் அதில் முதன்மையாய் இருப்பது உபாகமம் 6:4 ஆகும். நீங்கள் வேத வசனங்களை மறந்து விடாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்.

செழிப்பு

6 ம் அதிகாரம் வசனம் 10-12ல் அபாயமும் குழப்பமும் இருக்கிறது, கிறிஸ்தவர்கள் தீடீரென்று தாங்கள் உல்லாச வாழ்வின் மடியில், முன்பு ஒருபோதும் இருந்திராத நிலையில் இருப்பதாய் உணருகின்றனர். அவர்கள் மிகவும் செழிப்புள்ளவர்களாகி, அப்படிப்பட்ட செழிப்பு எங்கிருந்து வந்தது என்பதை மறந்து வாழ்கின்றனர். அநேக ஜனங்கள் ஜெயத்தை சரியாய் கையாள முடியவில்லை. நீங்கள் வாக்குத்தத்த தேசத்திற்குள் சென்ற போது, அவர்களது வஸ்திரங்கள், நீங்கள் கட்டாத வீடு அனைத்தும் அங்கு இருந்தன. அந்த தேசத்தை சுதந்தரிக்கும் போது அவர்கள் அத்தேசத்தின் முந்தின ஜனத்தொகையை முற்றிலுமாய் அகற்றினர்.

வனாந்திரத்தில் அலைந்து திரிந்தவர்கள் உல்லாசத்தில் வாழப்போகிறார்கள். நீங்கள் உங்களது உல்லாச வாழ்வில் வாழும் போழுது

தேவனது வார்த்தையை மறந்துவிடாதபடி எச்சரிப்புடன் இருக்க வேண்டியது மிகவும் அவசியம். அநேக ஜனங்கள் எதிர்ப்பு நிறைந்த சூழலில் ஜெயம் பெற்று, செழிப்பு நிறைந்த சூழலில் தோற்றுவிடுறார்கள். உங்களது செழிப்பிலும் உலகப்பொருட்களிலும் அதிக கவனம் செலுத்தி, ஆவிக்குரிய வாழ்க்கைக்கு கவனம் செலுத்தப்பட வேண்டிய நேரம் முடிந்துவிடுகிறதாய் இருக்கிறது.

நீங்கள் மிகவும் ஏழ்மையில் உள்ள போது, உங்கள் அடுத்த நேர ஆகாரத்திற்காய் ஜெபிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். ஒரு வேளை உங்கள் அடுத்த நேர ஆகாரத்திற்காய் ஜெபிக்காத நிலையில், உங்கள் வீதியில் உள்ள மற்ற நபர்களது இரட்சிப்பிற்காய் ஜெபிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். மோசே தான் சொல்வதைக் கேட்கும் நபர்களைப்பார்த்து அவர்கள் பரீட்சையில் தேர்ச்சியடைவார்களா என சவால் விடுகிறவராய் இருக்கிறார். அநேக சபைகளில் உள்ள ஜனங்கள் அனைவரும் செழிப்புள்ளவர்களாய் வளர்ந்து கொழுத்து சோம்பேறிகளாய் இருக்கின்றனர். நாம் விவரனையான காரியங்களிலே கவனம் செலுக்கிறவர்களாயிருக்கிறோமே அன்றி, தேவன் எதை நாம் செய்ய விரும்புகிறார் என்பதை மறந்து விடுகிறவர்களாய் இருக்கிறோம்.

இதற்கான பரிகாரம் வசனம் 13 ல் கொடுக்கப்பட்டுள்ளது, இது தேவனுக்கேற்ற பயபக்தியில் நிற்பதாய் இருக்கிறது. அவர் உங்கள் நெருங்கிய சிநேகிதன் அல்லர். அவர் பெலவீனர் அல்லர். நீங்கள் எப்பொழுதும் தேவன் உங்கள் சிருஷ்டி கர்த்தர் என்பதை நினைவில் கொள்ள வேண்டியது அவசியம், அவர் உங்கள் பக்கத்து வீட்டு அயலகத்தார் என எண்ணுதல் கூடாது. அவர் உங்கள் பிதவாய் இருக்கிறார் என அவர் முன் வருதல் அவசியம்.

கீழ்ப்படியாமையும் நியாயத்தீர்ப்பும்:

சேவைக்கான சந்தர்ப்பம் இருக்கும் இடத்தில் எப்பொழுதும், தீமைக்கான அபாயம் தலைதூக்குகிறதாய் இருக்கிறது. நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மரணத்தை எதிர் நோக்குகிறவர்களாய் இருக்கிறோம். நாம் வாழ்வின் மீது அடமானம் செய்யவில்லை. நாம் செழிப்படையும் போது, நாம் இங்கேயே இருக்கப் போகிறவர்களாய் எண்ணிவிடுகிறோம்.

நாம் இந்நாள் நமது வாழ்வின் இறுதி நாள் என எண்ணி செயல்படவேண்டும். உங்களை நியாயந்தீர்க்கும்படி தேவனை நிர்பந்தத்திற்குள்ளாக்கக் கூடாது. மிக மோசமான பாவங்களில் ஒன்று கீழ்ப்படியாமை, மற்றும் தேவனை புறக்கணிக்கும் பாவமாகும். ஜனங்கள் நரகத்திற்கு செல்வதன் காரணம், தேவனைக் குறித்து அவர்கள், அவர் கவனித்து கேட்கிறவர் என்பதை சிந்தியாமலும், இரட்சகரை புறக்கணித்துவிட்டு, சிலுவையை அவர்கள் ஒரு பொருட்டாய் எண்ணாமல் இருந்ததே காரணமாய் அமைகிறதாய் இருக்கிறது.

சாத்தானின் யுக்தி எப்பொழுதும், குறைவாய் மதிப்பிடுதலும் அல்லது முற்றிலும் மறைத்துவிடுவதுமாய் இருக்கிறது. மேரிபா என்ற இடத்தில் இஸ்ரவேலர் முறையிட்டனர். நாம் தேவனை நோக்கி முறையிடலாமா? நீங்கள் முறையிடும்போது, தேவனை நியாயந்தீர்க்க நிர்பந்திக்கிறவர்களாய் இருக்கிறீர்கள். நாம் சீக்கிரமாகவே நமது நித்திய வீட்டிற்கு அழைக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம் என்பது ஆச்சரியப்படக் கூடியதாய் இருக்கிறது.

தேவனிடம் முறையிடுதல் கண்டிப்பாய் தவிர்க்கப்படல் வேண்டும். ஒருவேளை நாம் யாத்திரகாமச் சந்ததியினராய் இருப்பொமெனில், நாம் தேவனிடம் முறையிட்டு, எகிப்திற்கு திரும்ப செல்கிறவர்களாய் இருப்போம். ஒருவேளை நீங்கள் முறையிடுகிறவர்களாய் இருப்பீர்களானால், தேவனை நியாயந்தீர்க்க கேட்டுக்கொள்கிறவர்களாய் இருக்கிறீர்கள்.

தேவனது வார்த்தையை போதித்தல்:

முதலாவது நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படியக் கற்றுக்கொண்டு, பின்னர் உங்களது பிள்ளைகள் அவருக்குக் கீழ்ப்படிய கற்றுக்கொடுத்தல் வேண்டும். கர்த்தர் எதைச் சொல்கிறாரோ அதற்கு மனப்பூர்வமாய் கீழ்ப்படியுங்கள். இதுவே உங்கள் சாட்சிக்குறிய வாழ்க்கையாய் இருக்கிறது. எதைப் போதிக்கிறீர்களோ அதைக் கடைபிடியுங்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளகளுக்கு கீழ்ப்படிந்து செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அது நமது குடும்பத்தின் கொள்கையாய் இருக்கிறது என செய்ய வற்புறுத்தல் அவசியம். ஒரு குழந்தை "ஏன்" எனக் கேட்கும் எனில், அது வியத்தகும் கேள்வியாய் இருக்கிறது, தேவனது வார்த்தையை நீங்கள் அறிந்த வகையில் அதற்கு விளக்கி கூற உங்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. ஒரு வேளை "ஏன்" என்கிற கேள்விக்கு பதில் அளிக்கப் பயப்படுவார்கள் எனில் அவர்களது அறியாமையை அது காட்டுகிறதாய் இருக்கிறது.

இந்த வேத பகுதியில் மோசே நமது நன்மை கருதி சில காரியங்களை செய்யக்கூறுகிறார், மற்றும் அவர்களது பிள்ளைகள் அவர்கள் இருக்கும் தேசத்தை கர்த்தர் அவர்களுக்கு அருளியுள்ளார் என்பதைக் காணவேண்டும். மோசே அவர்கள் அத்தேசத்தில் தாபரிக்கக்கூறுகிறார், அதினிமித்தம் அந்த பெரிதான ஆசீர்வாதத்தை அவர்கள் மறந்து விடாது இருக்கக்கூறுகிறார், பிள்ளகள் எழும்பி "ஏன்" எனக்கேட்கும்போது, அவர்கள் எவ்விதம் அத்தேசத்திற்குள் வந்தனர் என்பதை அவர்களுக்குக்கூற வேண்டும்.

நீங்கள் மகிழ்ச்சியிருப்பதை தவிர்த்து துன்பத்திற்குள்ளாகிறீர்களே ஏன்? அவிசுவாசிகள் திருப்தியை நாடிச் செல்கிறவர்களாய் இருக்கின்றனர், வாழ்க்கைக்கு அர்த்தத்தைக் கண்டுக்கொள்ளும்படி நாடுகின்றனர், அவற்றை கிறிஸ்துவுக்கு வெளியே அவர்கள் கண்டு கொள்வது என்பது அசாத்தியமாய் இருக்கிறது. அவர்களது செயல்பாடுகள் அனைத்தும்

அவர்களுக்கு தவறான பதிலை அளிக்கிறதாய் இருக்கிறது. நீங்கள் இத்தொடர் பயிற்சியில் கற்றுக்கொள்வதற்கான காரணம், ஒரு அவிசுவாசி அல்லது இளம் விசுவாசி உங்களிடத்தில் கேட்கும் போது அவர்களுக்கு தக்கப் பதிலை கூறுவதற்காகும். அவர்களுக்கு பதில் கூறுவதற்கு முன்பு நீங்கள் அவற்றை அறிந்து இருத்தல் அவசியம். வேதாகமம் வாழ்க்கைக்கு அடுத்த சத்தியத்தை ஏறாளமாய் போதிக்கிறதாய் இருக்கிறது. உறவு சார்ந்த காரியங்களையும் போதிக்கிறதாய் இருக்கிறது. பால் உறவு சார்ந்த விஷயங்கள் குறித்து உலகில் பல குழப்பங்கள் இருந்து வருகின்றன.

பரிசுத்த வேதாகமத்தில் உன்னதப்பாட்டு, ஆதியாகமம், எபேசியர், கொலோசெயர், மற்றும் நீதிமொழிகள் போன்ற புஸ்தகங்களின் மூலம், பாலுறவு குறித்த அடிப்படைக் காரியங்களும், தெளிவான விதிமுறைகளும் கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் உண்டாக்கப்பட்ட அடிப்படையின்படி வேசித்தனம் என்பது தகாத செயலாய் கருதப்படுகிறது, நீங்கள் அதைவிட்டு வெளியேறாத பட்சத்தில் உங்கள் சரீரம் தீராத வியாதியுள்ளதாய் மாறுகிற அபாயத்தில் இருக்கிறது.

உங்களுக்காய் வடிவமைக்கப்பட்ட நபரைத் தவிர்த்து, மற்ற நபர்களுடன் பாலுறவு கொள்ள நீங்கள் வடிவமைக்கப்பட வில்லை. நீங்கள் தேவனோடுள்ள உறவில் நம்பத்தகுந்த வகையில் உங்கள் அற்பணம் இருக்குமேயானால், உங்கள் வாழ்க்கைத் துணையுடன் பாலுறவு கொள்ளும் சமயம் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்ட நேரமாய் அமையும். சாலமோன் மிகப்பெரிய அளவில் வேசித்தனம் செய்கிறவராய் இருந்தார். அவர் தொடர்ச்சியாய் பல தவறுகளை செய்கிறவராய் இருந்தார், அவரிடமிருந்து அத்தவறுகளை செய்யாதிருக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவருக்கு பாலுறவு கொள்ள ஆயிரம் நபர்கள் இருந்தனர் மற்றும் தேவன் அப்படிப்பட்ட செயல்களை விரும்பவில்லை, அவர் சூலேமித்தியாளை நேசித்து அவள் ஒருத்தியுடன் அன்பு செலுத்தி வாழத்தவறிவிட்டார்.

நீங்கள் கீழ்ப்படிந்து நடக்காத பட்சத்தில், உங்கள் வாழ்வானது அழிவு நோக்கி முன்னேறிச் செல்கிறதாய் இருக்கும். இக்காரியங்களில் தேவனது கொள்கை என்ன என்பதை நீங்கள் தெளிவுபட அறிந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். தேவனது வார்த்தையில் நீங்கள் தரித்து நிலைத்து இருந்து மற்றவர்களுக்கும் அதைப் பகிர்ந்துகொள்கிறவர்களாய் இருங்கள். நீங்கள் இதைச் செய்கிறவர்களாய் இருக்கும் போது, அவர்கள் தேவன் எதை நன்மை எனக்கருதி விரும்புகிறவராய் இருக்கிறார் என்பதைக் காண்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

அதிகாரம் 7.

வசனம் 1-3 ல் கர்த்தர் மோசேயிடம் வாக்குத்தத்த தேசத்தில் வசித்த ஏழு ஜாதியினரையும் அவர்கள் மிருகங்களையும் முற்றிலுமாய் அழித்துவிடக் கேட்டுக்கொண்டார், காரணம் அவைகள் அனைத்தும் மிதமிஞ்சிய பாலுறவு காரியங்களால் நோய்கொண்டு இருந்தன. தாராளவாதிகள் [liberals]

அன்புள்ள தேவன் எவ்வாறு இதைச் செய்ய முடியும் எனக்கேட்கின்றனர். இதைச் செய்யவில்லை என்றால் இஸ்ரவேல் அவர்களுடன் ஒத்துப்போகிறவர்களாய் இருந்திருப்பர்.

மம்ரே இசக்கேல் என்ற இடத்தில் உள்ள நபர்களை ஆபிரகாம் கர்த்தருக்குள் வழிநடத்தினதை நாம் அறிகிறவர்களாய் இருக்கும் போது, அவர்களது தேசமானது மிகவும் தரம் நலிந்து, அவர்கள் யூதர்களுக்கு நடமாடும் டைம் பாம் ஆக இருந்தனர். அவர்கள் மிகவும் பயங்கரமானவர்களாகவும் ஒருவரும் அவர்களை தொடக்கூடாத வகையில் பாதுகாப்பற்றவர்களாயும் இருந்தனர். அவர்கள் நோய்களை சுமந்து செல்கிறவர்களாய் இருந்தனர், அவர்கள் ஆவிக்குரிய நிலையிலும் சரீரப்பிரகாரமான நிலையிலும் அப்படி இருந்தனர். அந்த அளவுக்கு அவர்களது மதம் தரம் நலிந்த நிலையில் இருந்தது. நவீன உதாரணம் எய்ட்ஸ் தொற்றுக்கிருமிகள் இந்நாட்களுக்கு ஒருதார திருமணம் மற்றும் நம்பகத்தன்மை அவசியமாய் இருக்கிறது.

நீங்கள் ஒரு நல்ல அவிசுவாசியைக் காணும் போது, அவர்கள் மதவாதிகளாய் இருப்பார்களேயானால் அவர்களுடன் ஒத்துப்போவதை குறித்து சிந்தித்து செயல்படுவது எளிதாய் இருக்கிறது. அவர்களுடன் ஒத்துப்போவீர்களானால், ஒரு விசுவாசி அவர்களுடன் ஒத்துப்போவது மிகவும் கேவலமான தரம் நலிந்த செயலாய் காணப்படுகிறது. மிகவும் கீழ்த்தரமானவர்களுடன் ஒத்துப்போவது, உங்கள் சாட்சியுள்ள வாழ்க்கையை மறைந்து போகச் செய்கிறதாய் இருக்கிறது. அவர்களில் உள்ள தீமையினால் நீங்கள் பாதிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறீர்கள்.

அநேகக் கிறிஸ்தவர்கள் தீமைக்கு பக்கத்தில் சரியாய் வாழமுடியும் என எண்ணுகின்றனர் ஆனால் அவை அவர்களை கறைப்படுத்திவிடும். கானான் தேசத்தில் வாழ்ந்த ஏழு தேசத்தினரும் பாதிப்புக்குள்ளாகி பிறந்திருந்தனர். கணக்கொப்பிவிக்க வயதுக்கு உட்படாத குழந்தைகள் மரிக்கும் போது அவர்கள் பரலோகம் செல்கிறவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்ட சூழல்கள் தேவனது குணாதிசயங்களுக்கு கொண்டு செல்கிறதாய் இருக்கிறது. உபாகம புஸ்தகத்தில் இப்படிப்பட்ட கருத்துக்கான காரணங்களை பற்றி தேவனை அறிவதன் மூலம் காணவேண்டும்.

தீமை இவ்வுலகில் இருப்பது தேவனது சித்தம் அன்று, இருப்பினும் அவர் இதை அனுமதிப்பதன் நோக்கம், மனிதன் அவனது விருப்பப்படி வாழ்வதற்குரிய தெரிந்து கொள்ளுதலை தேர்வுசெய்யவும், அல்லது தேவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்வதை தெரிந்துகொள்வதற்கும் ஏதுவாய் அமைகிறதாய் இருக்கிறது. தேவனது நீதி நியாயங்கள் உங்களது ஆத்துமாவில் ஊர்ஜிதப்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இவைகள் கடினமான காரியங்களாய் இருக்கின்றன. இக்கடின காரியங்களை செயல்படுத்த இப்புஸ்தகங்களை எழுதிய எழுத்தாளரைக் குறித்து நீங்கள் அறிந்து கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சில காரியங்களை தேவனை முகமுகமாய்

காணும் போது மட்டுமே நாம் அவைகளைக்குறித்து அறிந்து கொள்கிறவர்களாய் இருப்போம்.

தேவன் நம்மை தெளிவுபடுத்த விரும்புவது என்னவெனில் தீமையோடு ஒத்துப்போகாது இருப்போமாக. ஒரு ஆப்பிள்கள் நிறைந்த கூடையில் ஒரு அழுகிப்போன ஆப்பிள் இருக்குமேயானால், அது கூடையில் உள்ள அனைத்து ஆப்பிள்களையும் அழுகிப்போகச் செய்யுமே அல்லாது அழுகாத ஆப்பிள்கள் அழுகிப்போன ஆப்பிளை அழுகாமல் பாதுகாப்பது என்பது அசாத்தியமானதாய் இருக்கிறது. சபையில் ஒருவர் பிரச்சனைகளை எழுப்புபவராய் இருப்பார் எனில், அவர்களுக்கு ஆலோசனை கூறி அதற்கு அவர் சரியாகவில்லையெனில், அவரை சபைக்கு புறம்பாக்கி விடுங்கள். குறிப்பிடத்தக்க வகையில் ஒத்துப்போவது என்பது ஒரு விசுவாசி அவிசுவாசியுடன் திருமணம் கலப்பது ஆகும். இப்படிப்பட்ட திருமண நோக்கோடு தம்பதிகள் உங்களிடம் வருவார்களேயானால் அது முறையல்ல என்பதை ருசுப்படுத்தி கூற முயலுங்கள்.

தேவன் ஒரு காரியத்தை செய்யக்கூறும் போது, நாம் மாற்றொருவர் அக்காரியத்தை செய்யவார்கள் என எண்ணுகிறோம். தேவன் நமக்கு தெரிந்துகொள்ளும்படியான காரியங்கள் இருக்குமானால் அவர் பத்துக்கும் அதிகமான ஆலோசனைகளை தருகிறவராய் இருக்கிறார். அவர் அப்படி செய்கிறவர் அல்லர் அவர் நமக்கு பத்து கட்டளைகளை அளித்து இருக்கிறார். தேவன் கொலைசெய்து ஆனந்திப்பவர் அல்லர் அவர் நமது நலன் கருதியே இவைகளை அளித்துள்ளார். தேவனது வார்த்தையை செயலாக்குவதற்கு நீங்கள் 2 தீமோத்தேயு 2:19 ஐ நன்கு அறிந்திருத்தல் அவசியம்.

உபதேசம்:

பாவம் [மேலே உள்ள பாடங்களில் காண்க]

<u>பாடம் 43 - உபாகமம் 31-34.</u>

முன்னுரை:

மோசே 120 வயது நிரம்பினவராய் மரிக்கும் தருணத்தில் தற்போது இருக்கிறார். மோசே இதைக் குறித்து கலங்கவில்லை. அவர் தேவன் இதைக்குறித்து முன்னமே அறிவார் என உணர்ந்திருந்தார். மோசேயிக்கு பதிலாய் யோசுவாவை அவர் ஸ்தானத்தில் அமர்த்த வேண்டியதாய் இருந்தது. மோசே முக்கியம் வாய்ந்தவராய் இல்லை, அவர் அளித்த செய்திகள் மிகவும் முக்கியம் வாய்ந்தனவாய் இருந்தது. இது ஒரு பாட்டிலில் உள்ள குடிக்கும் தண்ணீரைப்போன்றது, தண்ணீரே முக்கியம் பாட்டில் அல்ல. எல்லா செய்திகளும் ஆவியினால் தயார் செய்து பரிசுத்த

ஆவியானவரின் வல்லமையால் அளிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. நாம் நமது கண்களை தேவன் மீது பதித்தல் வேண்டும்.

மோசே கூறுகிறார் அவர் வெளியே செல்லவோ அல்லது உள்ளே வரவோ இயலாதவராய் இருப்பதாய் கூறுகிறார். அவர் விருத்தாப்பியராய் இருக்கிறார். அவர் தனது கடைசிபெலனை பயன்படுத்தி, மலையின் மீது ஏறி, வாக்குத்தத்த தேசத்தை கண்டு பின்னர் மரிக்க இருக்கிறார்.

வசனம் 3-8 ல் தேவன் இதையும் அதையும் செய்யப்போகிறவராய் இருக்கிறார். தேவன்தாமே கிரியைகளை நடப்பிக்கிறவராய் இருக்கிறார், நீங்கள் அவருடன் நடந்தால் போதும். இயேசு சொன்னார் என்னைப்பின்பற்றுங்கள், நான் கிரியைகளை செய்கிறவராய் இருக்கிறேன் நீங்கள் என்னைப்பின்பற்றுங்கள் என்றார். தொடர்ந்து தேவனது குணாதியத்தையும், கிருபையினால் ஆவிக்குரிய காரியங்களையும் நினைவகூறுங்கள்.

எரிகோவில் இருந்த எல்லா மனிதரும் முற்றிலுமாய் அழிக்கப்பட்டனர், ராகாப் விசுவாசித்தவளாய் இருந்தபடியால் அவள் மட்டும் அற்புதமாய் பாதுகாக்கப்பட்டாள். இங்கு தேவனது நியாயத்தீர்ப்பில் ஒரு கருத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். தேவன் கானானிய தேசங்களை முற்றிலுமாய் நிர்மூலமாக்க செயல்படுகிறவராய் இருக்கிறார். இங்கு நிகழ்ந்த காரியம் சோதோம் கொமோராாவைத் தேவன் அழித்த போது, லோத்து பாதுகாக்கப்பட்டதற்கு ஒப்பனையாய் இருக்கிறது.

உங்கள் வாழ்வில் நெருக்கடிகளை சந்திக்கும்போது, இது ஏன் வாழ்வில் சம்பவிக்கிறது என நீங்கள் கேட்கக் கூடும். எல்லா உண்மைகளுடன் தேவன் தாமே எல்லா காரியங்களையும் செய்கிறார் என்பதனை நினைவில் கொள்ள வேண்டியது அவசியம். சில காரியங்களை மட்டும் நாம் பார்க்க முடியும், இங்கே தேவனது குணாதிசயமான எல்லாவற்றையும் அறிகிறவர் என்பது காண்பிக்கப்படுகிறது.

நீங்கள் உங்களது பிரச்சனைகளை காணும் போது, தேவனது குணாதிசயத்தின் வெளிச்சத்திலே காண்பீர்களானால் உங்களது கேள்விகளுக்கான பதில் கிடைக்க ஆரம்பித்துவிடும். தேவன் நம்பிக்கைக்கு பாத்திரராய் இருக்கிறார். அவர் என்ன சொல்வாரோ அதை செய்கிறவராய் இருக்கிறார். அவர் உன்னை ஒரு போதும் விட்டு விலகுவதோ, கைவிடுவதோ இல்லை. அவர் இவ்வுலகின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நம்மோடிருப்பதாய் கூறுகிறார். -- எபிரெயர் 13:5.

திடமனதுடன் இரு;

வசனம் 6 ல் மோசே "பலங்கொண்டு திடமனதாய் இரு" என்கிறார். யோசுவா ஒரு சாதாரண மனிதர், அவர் தேவன் விரும்புவதை செய்தபடியால், ஆவிக்குரிய நிலையில் அவர் ஒரு பெரிய சாதணையாளராய் விளங்குகிறார். அவர் தேவனை தனது வாழ்வில் ஒப்பற்றவராய்

ஏற்றுக்கொண்டு அவருக்காய் நிற்கிறவராய் இருந்தார். யோசுவா தனது வேலையைச் செய்கிறவராயும் தேவனுக்கு எல்லாவிதத்திலும் கீழ்ப்படிகிறவருமாய் இருந்தார். அநேகம் ஜனங்கள் தலைசிறந்தவர்களாக இருக்க எண்ணுகிறவர்கள் உண்டு. ஒரு வேதாகம பாடசாலையின் போதனையாளராகவோ, அல்லது ஒரு போதகராகவோ ஆக வேண்டுமென நீங்கள் விரும்பினால், ஒரே காரியத்தை உங்கள் வழியில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாது. உங்கள் நேரத்தை தேவனுடன் செலவு செய்யுங்கள். அவர் சாதாரண மக்களை, அதாவது தங்களை கர்த்தருக்கென அற்பணித்துக் கொண்டவர்களை அவர் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். மோசே கூறுவது என்னவெனில், நீங்கள் பயப்படும் போது, அல்லது நெருக்கப்படும் போது, தேவன் உங்களுடன் உள்ளார் என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். பின்னோக்கிப்பார்த்து தேவனின் குணாதிசயங்களை நினைவுக்குக் கொண்டு வாருங்கள், உங்கள் தேவன் நம்பிக்கைக்கு பாத்திரராய் இருக்கிறார்.

உங்கள் மனஅழுத்தங்களின் போது, தேவனது வாக்குத்தத்தங்களின் வெளிச்சத்தில், அவரை நம்புவதற்கு தீர்மானம் எடுங்கள். நீங்கள் எழுந்திருந்து தொடர்ந்து உங்கள் பயணத்தை மேற்கொள்ளுங்கள். எபிரெயர் 12:12. தேவன் ஜனங்களின் வாழ்வானது தன்னை கனப்படுத்தக்கூடியதாய் இருக்க விரும்புகிறவராய் இருக்கிறார். எங்களைப் பெலப்படுத்தும் நாங்கள் எதையாகிலும் உமக்காக செய்து முடித்தாக வேண்டும் என்று தேவன் தமது ஜனங்கள் தன்னிடம் கூற விரும்புகிறவராய் இருக்கிறார், ஒரு சாதாரண மனிதன் அசாதாரணமான காரியங்களை செய்கிறார் என யோசுவாவில் நமக்கு ஒரு முன்மாதிரி கொடுக்கப்பட்டுள்ளது. யோசுவா தொடர்ந்து தேவனை நம்புகிறவரராய் இருந்தார், அவர் ஒருபோதும் தனது கூடாரத்தில் அமர்ந்து கொண்டு மனம் தளர்ந்து போனது இல்லை. அநேகமான கிறிஸ்தவர்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தில் எழுந்து நிமிர்ந்து நிற்பதற்கு பதிலாக தங்களது இல்லத்தில் அமர்ந்து கொண்டு இருக்கின்றனர்,

வசனம் 9 க்கு பிறகு உபாகம புஸ்தகத்தின் தொடர் பகுதியை யார் எழுதியது மோசேயா அல்லது யோசுவாவா என்பது குறித்த விவாதம் இருக்கிறது. ஒவ்வொரு ஏழு ஆண்டுகளிலும் பெண்கள் மற்றும் பிள்ளைகள் உட்பட டோராவை [பஞ்சாகமத்தை] வாசிக்க வேண்டும். பதிநான்கு வயது நிரம்பிய வாலிபன் பெரியவராய் ஏற்றுக்கொள்ளப்படுவதால் அவர்கள் டோராவை [பஞ்சாகமத்தை]இருமுறை கேட்டாக வேண்டும்

வேதாகமத்தின் அறிவு:

பதினான்கு வயது நிரம்பிய ஒவ்வொரு யூத ஆண்மகனும் டோராவை [பஞ்சாகமத்தை] மனப்பாடமாய் அறிந்து இருத்தல் வேண்டும். 21 வயது நிரம்பும் போது அவர்கள் முழு வேதாகமத்தையும் மனப்பாடமாய் அறிதல் வேண்டும், எப்படியிருப்பினும் வேதத்தைக் கேட்பது மட்டும் முக்கியமல்ல

அதற்கு கீழ்ப்படிதல் அதிக முக்கியம் என வசனம் 12 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

சில கிறிஸ்தவர்கள் இன்றைய அளவில் வேதாகமத்தின் எல்லா புஸ்தகங்களையும் கற்றுக்கொண்டு வருகிறார்கள் அவைகளை உங்கள் வாழ்விற்கு நடைமுறைபடுத்திக் கொள்ளுங்கள். இது மனப்பாட சாதனையாய் மட்டும் இருத்தல் போதாது. தங்கள் வயது கடந்து போகும் வரைக்கும் ஜனங்கள் வேதவாக்கியங்களை மனப்பாடம் செய்கிறவர்களாய் இருப்பர். நாம் தேவனைக் குறித்து அதிகமாய் அறிந்து, அவரிடம் பயபக்தியுடன் நடந்துகொண்டு, அவர் நாம் என்ன செய்ய விருப்பமாயிருக்கிறாரோ அதை நிறைவேற்றுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். தேவனது வார்த்தையை கேட்கிறவர்கள் அதை மறந்து வாழுதல் தவிர்க்கப்படல் வேண்டும். யாக்கோபு 1.

நாம் அநேக கேள்விகளை கேட்டு தேவனது வார்த்தையை புதைத்துவிடாது இருக்க கவனமாய் இருத்தல் வேண்டும். கிணற்றண்டையிலே தண்ணீர் மொள்ள வந்த சமாரியப் பெண் இறையியல் விவாதங்களை செய்ய முயலுகிறவளாய் இருந்தாள், எங்கு ஜனங்கள் தேவனை ஆராதிக்க வேண்டும் எனக்கேட்ட அவளுக்கு கர்த்தர் மறுமொழியாக அவளது வாழ்வின் பாவத்தைச் சுட்டிக்காட்டி, அவள் ஒரு பாவி என உணர்த்தி, அவளுக்கு ஒரு இரட்சகரின் அவசியத்தை உணர்த்தினார்.

அநேக ஜனங்கள் பாவத்துடன் வாழ்கிறவர்களாய் இருக்கின்றனர், அவைகளை எதிர் கொள்ள விருப்பமற்று இருக்கின்றனர். நீங்கள் சபை ஆராதனையின் முடிவில், ஆவியானவர் கர்த்தரது வார்த்தையினால் இடைபட்ட காரியத்தை கெடுத்துவிடாது இருக்க எந்த ஒரு காரியத்தையும் அனுமதித்து விடக் கூடாது. நீங்கள் கர்த்தருக்கு பயப்படும் பயம் உங்கள் கீழ்ப்படிதலில் காட்டப்படுவதாக.

நெகேமியா எருசலேமை திரும்ப கட்டிக்கொண்டிருக்கும் போது, நியாயப்பிரமாணத்தை வாசித்தார், ஜனங்களுக்குள் வேதபாரகர் கலந்து இருந்து அவர்களிடம் வாசித்ததை புறிந்து கொண்டனரா என வினவினர். பரிசுத்த ஆவியானவரால் உணர்த்தப்படும் எவ்வித ஊழியமும் அந்நபர்களிடையே காணப்பட வில்லை. நீங்கள் தேவனது வார்த்தையை போதிப்பீர்களானால், சத்துருவின் தாக்குதலுக்கு விதிவிலக்காய் இருப்பீர்கள் என எதிர்ப்பார்க்காதிருங்கள். தேவன் தமது வழியில் இடைபடுவாராக.

உங்கள் ஊழியம்;

வசனம் 14-18 ல் கர்த்தர் மோசேயிடம் அவர் மரிக்கப்போகிறார் ஜனங்கள் வேறே தேவரிடம் திரும்புவார்கள் என்றார். இது ஒரு மோசமான செய்தி. மோசே தனது வேலையை மிக நேர்த்தியாய் செய்தார், ஆனால் ஜனங்கள் மோசே எச்சரித்த காரியங்களை செய்ய துணிகரம் கொள்கிறவர்களாய்

இருந்தனர். அடிக்கடி நீங்கள் மனவேதனையுடன் பாரப்படும் மக்களே விழுகிறவர்களாய் இருக்கின்றனர்.

நீங்கள் ஆவியில் நடந்து கொண்டு கவனமாய் இருத்தல் அவசியம், இல்லையெனில் நீங்கள் நொந்து போய் சிலவேளைகளில் முறிந்து போகவும் நேரிடும். நீங்கள் சுவாசிப்பது வீண் என எண்ணுவீர்கள், நல்ல வேலையைத்தானே செய்தேன் ஏன் இவ்வாறு நடக்கிறது என வியாதிப்பட நேரிடலாம். நாம் தேவனது வார்த்தைக்கு ஊழியராய் இருத்தல் வேண்டும். நீங்கள் உங்களது வேலையைக் கர்த்தருக்காய் செய்தல் வேண்டும், விளைவு என்ன என்பதைக் குறித்து நீங்கள் எண்ணம் கொள்ளாமல் அவைகளை கர்த்தர் கரத்தில் விட்டுவிடுதல் வேண்டும்.

தேவன் பூரணமான திட்டத்தை உடையவராய் இருக்கிறார், அவர் பூரணமானவராய் இருக்கிரார். நீங்கள் சரிவர செய்ய வில்லை என அறியும் போது, அப்பாவத்தை அறிக்கை செய்யுங்கள் மற்றும் நீங்கள் தேவனிடம் சொல்லுங்கள் இனி ஆவியானவரின் வல்லமையோடு சிறப்பாய் செய்யப்போகிறேன் எனக்கூறுங்கள். தொடர்ந்து முன்னேறுகிறவர்களாய் இருங்கள்.

நீங்கள் தேவனது வசனத்தை குறிப்பிட்ட வழியில்தான் போதிக்க வேண்டும் என உணராதிருங்கள். அநேக மக்கள் தங்களது மிகுதியான நேரத்தை ஜெபத்தில் செலவு செய்து ஆவிக்குரிய உணர்வுகளைப் பெறுகிறார்கள். நீங்கள் ஆவிக்குரிய உணர்வில் நன்றாக இல்லை மற்றும் ஆவிக்குரிய நிலையில் நன்கு இல்லை என்பது பல காரணங்களால் இருக்கக்கூடும், உங்கள் வாழ்வில் பாவம் உண்டா என பரிசோதித்து பார்த்து அவரது பெலனுக்காய் ஜெபித்தல் வேண்டும். உங்கள் போதனையானது தேவனுக்கு சுகந்த வாசனையாய் இருப்பதாக.

தேவன் நமது மனவெழுச்சிகளை விரும்புகிறவராய் இல்லை, நமக்கு ஒரு வேளை அவ்வாறு இல்லையெனில் நாம் ஒன்றும் செய்யவில்லை எனக்கருதுகிறோம். சிலுவையை நோக்கிப்பார்த்து கர்த்தர் உங்களுக்காய் என்ன செய்துள்ளார் என்பதை பாருங்கள். கர்த்தாவே நான் செல்கிறேன் என்னைப்பெலப்படுத்தும் ஜெபியுங்கள். நீங்கள் சரியான உணர்வைப் பெறும்வரை காத்திருக்க அவசியமில்லை. நீங்கள் உணர்வோடு என்ன சொல்லுகிறீர்கள் என்பதைவிட, நீங்கள் இடைபடும் பிள்ளைகள் மற்றும் ஜனங்கள் மிகவும் முக்கியம் வாய்ந்தவர்களாய் இருக்கிறார்கள். கர்த்தர் உங்களை எதையாகிலும் செய்யக்கேட்டுக் கொள்வார் எனில் அவருக்கு கீழ்ப்படிந்து அதை செய்யுங்கள், ஜெபத்துடன் முன்னேறுங்கள். நீதிமொழிகளில் உங்கள் வழிகளை கர்த்தருக்கு ஒப்புவியுங்கள் அவர் உங்களை வழி நடத்துகிறவராய் இருக்கிறார் என்று கூறுகிறது. கர்த்தர் சொல்லுகிறார் நான் உனக்கு காண்பிக்கும் வழியில் நடந்து முன்செல் என்கிறார்.

மோசேயும் யோசுவாவும் நெருக்கப்பட்டார்கள் ஆனால் அவர்கள் வாக்குத்தத்தங்களையும் உபதேசங்களையும் உரிமைபாராட்டினார்கள்.

நீங்கள் ஒன்றைக் குறித்தும் கவலை கொள்ள வேண்டாம் நீங்கள் உங்கள் கடமையை செய்து முடித்துள்ளீர்கள். நாம் ஒவ்வொரு காரியத்தினையும் அவரது நடத்துதலின்படியே செய்தல் வேண்டும், தேவன் நமது கீழ்ப்படிதலுடன் ஈடுபட்டு, நாம் இடைபடும் ஜனங்களுடன் ஈடுபடுகிறவராய் இருக்கிறார். நீங்கள் துள்ளியமாய் மற்றும் சரியாய் செல்லுகிறீர்கள் என்பதை மட்டும் உறுதிபடுத்திக்கொள்ளுங்கள்.

ஒரு பட்டணத்தின் வீழ்ச்சிக்கு அதன் காவற்காரன் பொறுப்பாளியாக மாட்டான் காரணம், அவன் எச்சரிக்கையின் எக்காளத்தை ஊதி எச்சரித்துள்ளான். நீங்கள் கேட்கிறீர்களோ இல்லையோ தேவனது வார்த்தையை பிரசிங்கியுங்கள், நீங்கள் அதை உணர்வுப்பூர்வமாய் உணருகிறீர்களோ இல்லையோ பிரசிங்கியுங்கள். ஜனங்களுக்கு பிரசிங்கித்தல் வேண்டாம். உங்கள் செய்திகளை தேவனுக்கென்று கொடுங்கள்.

புஸ்தகமானது இப்பொழுது உடன்படிக்கைப் பெட்டியில் வைக்கப்பட்டது. இரத்தமானது இரு தேவதூதர்கள் கிருபாசனத்தை நோக்கிக்கொண்டிருக்க அங்கு தெளிக்கப்பட்டது. இதை நடைமுறைப் படுத்தி பார்க்கும்போது, தேவனது வார்த்தையானது, நீங்கள் தேவனோடு கொள்ளும் உறவினாலும், இயேசுக்கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் வல்லமை பொருந்தியதாய் இருக்கிறது. புஸ்தகங்களுக்குள் செல்வது உங்களுக்கு கடினமாய் தோன்றுமென்றால், இரத்தத்தின் மூலம் வரப் பிரயாசப்படுங்கள். வேதவசனங்கள் மூலம் நீங்கள் பயனடைய, நீங்கள் இரட்சிப்படைய வேண்டியதாய் இருக்கிறது.

நமக்கு மோசேயின் பாடல் அளிக்கப்பட்டுள்ளது. எந்த வழியில் தேவனது வார்த்தை வந்தாலும் அதை எடுத்துக்கொள்கிறவர்களாய் இருங்கள். 33 ம் அதிகாரத்தில் மோசே இஸ்ரவேலரை தனது மரணத்திற்கு முன்னதாய் ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறார். இதைத் தொடர்ந்துள்ள அதிகாரத்தில் அவர் மரிக்கப்போகிறார். யோசுவாவும் அவர் வாக்குத்தத்த தேசத்தில் பிரவேசித்தலும் இந்த இடத்திலிருந்து ஆரம்பமாகிறது.

மாமனிதர் மரித்துப்போனார். ஏதாகிலும் மாற்றம் ஏற்பட்டதா? -- இல்லை. தேவன் சிங்காசனத்தில் இருக்கிறவராகவே இருக்கிறார். கர்த்தருக்கு அம்மாமனிதர் நிமித்தம் நன்றி செலுத்துங்கள், அவரைத் தொடர்ந்து அடுத்த கட்டத்தில் செயல்பட வேறொருவர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்.

நாம் தேவனை நமது கீழ்ப்படிதலுடன் கனப்படுத்துதல் வேண்டும். நம்மை வழிநடத்தினவர்களை கனப்படுத்துதல் முக்கியம், அதிலும் முக்கியம் தேவனைக் கனப்படுத்துதல் ஆகும்.

உபதேசங்கள்:

தேவன்: தேவனது குணாதிசயங்கள் [மேலே உள்ள பாடங்களில் காண்க]

மோசே -- நியாயப்பிரமாணம்

1. வேதபகுதி -- யாத்திராகமம் - உபாகமம்; அப்போஸ்தலர் 7:18-44.

2. வாழ்க்கை வரலாறு:

மோசே, என்பதன் பொருள் "தண்ணீரிலிருந்து எடுக்கப்பட்டவன்" இவர் லேவி சந்ததியில் அம்ராம் என்பவரின் குடும்பத்தில் பிறந்தவர். (யாத்திராகமம் 6:16ff.). பார்வோனின் கட்டளையின் படி, இஸ்ரவேலில் பிறக்கும் ஆண்பிள்ளைகள் அனைவரும் கொலைசெய்யப்பட வேண்டும் என்றிருந்தபோது, மோசே ஒரு நாணற்பெட்டியில் வைத்து நைல் நதியில் விடப்பட்டார், அங்கு அவரை பார்வோனின் குமாரத்தி கண்டுஎடுத்து, எகிப்தில் தனது அரமணைக்கு அவரை கொண்டு சென்று வளர்க்க ஆரம்பித்தாள். அவர் அரண்மனையில் அதிகமாய் கற்றுக்கொண்டார்.(அப்போஸ்தலர் 7:22) அவர் எகிப்திய வேலை வாங்குபவன், இஸ்ரவேலனை கொடூரமாய் வேலைவாங்கினதின் நிமித்தம் அவனைக் கொலை செய்தபடியால், மீதியான் தேசத்திற்கு ஓடிப்போக நேர்ந்தது. அப்பொழுது அவருக்கு வயது 40. அவர் எத்திரோவின் மகளான சிப்போராளை மணம் முடித்து அவளிடத்தில் இரு குமாரரை பெற்றெடுத்தார். (அப்பொஸ்தலர் 7:29). தொடர்ந்து 40 ஆண்டுகளை மீதியானில் கழித்துக்கொண்டிருக்கும் போது, ஓரேப் மலையில் (யாத். 3:1) எரிகிற முட்புதரைக் (அப். 7:30) கண்டார். அந்த முட்புதரிலிருந்து தேவன் அவரை அழைத்து, எகிப்திற்கு திரும்பச்சென்று, பார்வோனுக்கு எதிர்படும் படி கேட்டுக்கொண்டார். (யாத்திராகமம் 3:2 - 4:17). எகிப்திற்கு பயணமாய் செல்லும்போது, சிப்போராள் தனது குமாரருக்கு ஆதி. 17:13,14 ன் படி விருத்த சேதனம் செய்தாள். (cf. யாத்திராகமம் 4:24-31). மோசே பார்வோனுக்கு எதிர்பட்டபோது, பத்துவிதமான வாதைகளை தேவன் எகிப்தியரின் மீது அனுப்பினார். (see Pharaoh, Topic 37), இதன் உச்சக்கட்டமாய் பஸ்கா ஆசரிக்கப்பட்டது. (யாத்திராகமம் 7:7 - 12:36). மோசே இஸ்ரவேலரை எகிப்திலிருந்து வெளியே அழைத்து வந்தார், அதோடு யோசேப்பின் எலும்புகளையும் கொண்டுவந்தார். (யாத்திராகமம் 13:19, cf. ஆதியாகமம் 50:26). அக்கினி ஸ்தம்பம் மற்றும் மேக ஸ்தம்பம் அவர்களை வழி நடத்த இஸ்ரவேலர்கள் 40 ஆண்டுகளாய் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தனர். மோசேயின் அந்திய காலத்தில் அநேக நிகழ்வுகள் அவரது வாழ்வில் நிகழ்ந்தன, இஸ்ரவேலர்களால் புறக்கணிக்கப்படுதல், கட்டளைகள் அளிக்கப்படுதல், பொன் கன்றுக்குட்டியினால் உண்டான விசுவாசத் துரோகம், மற்றும் ஆசரிப்பு கூடாரம் நிறுவுதல் போன்றவைகள் சம்பவித்தன. மோசே தேவனுக்குக் கீழ்ப்படிய மறுத்து கற்பாறையை அடித்தார், இதினிமித்தம் வாக்குத்தத்த தேசத்திற்குள் செல்ல அவருக்கு தடைவிதிக்கப்பட்டது. அவர் தனது 120 வது வயதில் வல்லமையுள்ள மரணத்தை நெபோ மலையில் தழுவிக்கொண்டார். (உபாகமம் 34:1-7). அவர் தேவனது தீர்க்கதரிசி என்கிற ஸ்தானத்தில் மரித்தார். (உபாகமம் 34:10).

3. மதிப்பீடு:

அ] தேவன் கட்டளைகளை அளித்தார் (யாத்திராகமம் 20:1).

ஆ] அவைகள் இஸ்ரவேலருக்கு மட்டும் கொடுக்கப்பட்டது.

இ] தேவன் விடுதலையின் ஆதாரமாய் இருக்கிறார் (யாத்திராகமம் 20:2).

ஈ] முதலாம் கட்டளை: தேவன் நமது வாழ்வில் முதன்மையான இடத்தில் இருக்கிறார், இது உண்மையான நோக்குநிலையை மனிதனின் சுயசித்தம் மூலம் நிலைநாட்டுகிறதாய் இருக்கிறது. (யாத்திராகமம் 20:3).

உ] இரண்டாம் கட்டளை: நீங்கள் விக்கிரக ஆராதனை செய்தல் கூடாது அது உங்களது தனித்தன்மையை அடிமைத்தனத்திற்குள்ளாக்குகிறது (யாத்திராகமம் 20:4-6). நமது பிறப்பு அடிமைத்தனத்தில் இருக்கிறது (ரோமர் 5:12) ஆனால் நாம் மறுபடி பிறந்து சுதந்தரவாளி களாகிறோம். (யோவான் 8:36).

ஊ] மூன்றாவது கட்டளை: நீங்கள் உண்மையைக் கூறவேண்டும், இது உங்களது கடமையாய் இருக்கிறது. தேவனை மற்றவர்கள் கட்டாயப்படுத்தும்படி பயன்படுத்துதல் கூடாது. இது மனித சுதந்திரத்திற்கு பங்களிக்கிறதாய் இருக்கிறது. (யாத்திராகமம் 20:7).

எ] நான்காவது கட்டளை: ஓய்ந்து இருக்கும் நாளானது தேவனது கிருபையை தீர்மானிக்கிறதாய் இருக்கிறது. தேவனது கிருபையே மனித சுதந்தரத்தின் அடிப்படையாய் இருக்கிறது. (யாத்திராகமம் 20:8-11).

ஏ] ஐந்தாம் கட்டளை: பிள்ளைகளின் மூலம் அதிகாரத்திற்கு கனமளிக்க அவசியமாய் இருக்கிறது. ஒருவிசுவாசியின் வாழ்வில் தங்கள் அதிகாரிகளை கனப்படுத்துவதன் மூலம் சுதந்திரம் உருவாக்கப்பட்டு அது மகிழ்ச்சிக்கு வழி நடத்துகிறதாய் இருக்கிறது. (யாத்திராகமம் 20:12).

ஐ] ஆறாம் கட்டளை: கொலை செய்யாதிருப்பாயாக (Ratscach, Heb.). இது தனிப்பட்ட நபரின் சுதந்தரத்தைப் பாதுகாத்து அவர்கள் தங்களது சுயசித்தத்தை செயல்படுத்த வகை செய்கிறது. (யாத்திராகமம் 20:13).

ஒ] ஏழாம் கட்டளை: விபச்சாரம் செய்யாதிருப்பாயாக, இது திருமணத்தில் குடும்பத்தை பாதுகாப்பதோடு மட்டுமல்லாமல், திருமணத்திற்கு முன்பும் இது பாதுகாப்பளிக்கிறதாய் இருக்கிறது. (யாத்திராகமம் 20:14).

ஓ] எட்டாவது கட்டளை: திருடாதிருப்பாயாக, இது பிற சொத்துக்களை சொந்தமாக்கிக்கொள்ள விடுதலையை பாதுகாக்கிறதாய் இருக்கிறது. (யாத்திராகமம் 20:15).

ஔ] ஒன்பதாவது கட்டளை: பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, இது நியாய சங்கத்தில் ஒரு நபரது சுதந்திரத்தை பாது காக்கிறதாய் இருக்கிறது. (யாத்திராகமம் 20:16).

ஃ] பத்தாவது கட்டளை: பிறருக்குள்ளதை இச்சியாதிருப்பாயாக (யாத்திராகமம் 20:17). இது பவுலின் வழி முறை மூலம் பாவத்தன்மையானது இடம்பெற்றுள்ள கண்டு பிடிக்கும் முறையாய் இருந்தது. (ரோமர் 7:7) இந்தக் கட்டளையானது பாவத்தன்மையின் இச்சைகளை கட்டுப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது.

4. கொள்கைகள்:

அ] நியாயப்பிரமாணம் பரிசுத்தமானது, அது நீதியும் நன்மையுமாய் இருக்கிறது (ரோமர் 7:16).

ஆ] சுதந்திரம் பொறுப்புகளைக் கோருகிறது (கலாத்தியர் 5:1; 1 கொரிந்தியர் 6:12).

இ] மனித சுதந்திரம் தேவனுடன் உள்ள உறவிற்கான தருணங்களை அளிக்கிறதாய் இருக்கிறது. (வெளிப்படுத்தல் 22:17).

ஈ] அறிந்த மற்றும் அறியாத எல்லா பாவங்களும் சுயசித்தத்தின் செயல்பாடுகளை உள்ளடக்கியுள்ளது (cf. ரோமர் 7:19-23).

உ] சுயசித்தம் என்பது இரட்சிப்பில் பிரச்சனையாய் இருக்கிறது. (யோவான் 3:36).

ஊ] மனித சுதந்திரம் பத்து கட்டளைகளால் பாதுகாக்கப்படுகிறது (மாற்கு 12:31).

எ] தேவன் சுதந்திரம் மற்றும் சத்தியத்தின் ஆதாரமாய் இருக்கிறார் (யோவான் 8:32).

ஏ] அரசின்மை ஒரு தேசத்தை அழித்துவிடுகிறதாய் இருக்கிறது (நியாதிபதிகள் 21:25).

ஐ] நியாயப்பிரமாணம் மனிதனை ஒரு பாவியாகத் தீர்க்கிறது (ரோமர் 7:7).

யோசுவா -- தலைமைத்துவம்

1. வேதபகுதி -- யோசுவாவின் புஸ்தகம்.

2. வாழ்க்கை வரலாறு:

எகிப்திய இறுதிகட்ட அடிமைதனத்தின் போது இவர் ஒரு அடிமையாய் பிறந்தவர், யோசுவா ஒரு தலைசிறந்த போர்வீரனாகவும், யூதர்களின் மாவீரனாயும் மாறினார். இவர் எப்பிராயீம் கோத்திரத்தின் நூன் என்பவரின் குமாரனாய் இருந்தார் (எண்ணாகமம் 13:8) இவரது இயற்பெயர் ஒசேயா என்பது இதன் பொருள் "உதவி" என்பது. பின்னர் இவரது பெயரை மோசே யோசுவா (எண்ணாகமம் 13:16) என மாற்றினார், இதன் பொருள் "இரட்சகர்". யோசுவா என்னும் எபிரேயப்பெயர் கிரேக்க பாஷையில் இயேசு என அறியப்படுகிறது (எபிரெயர் 4:8). யோசுவா முதன் முதலாய் யூதர்களின் வெற்றித் தளபதியாய் ரெபிதீபிமிலே அமலேக்கியருக்கு விரோதமாய் யுத்தம் செய்யும் போது அறியப்படுகிறார். (யாத்திராகமம் 17:13). யோசுவா தனது வாழ்வை மோசேயின் நிழல் ஒதுக்கில் துவங்கினார். (எண்ணாகமம்11:28; cf. யாத்திராகமம் 24:13, யோசு. 1:1). சீனாய் அடிவாரம் வரை இவர் மோசேயுடன் பயணித்தார் (யாத்திராகமம்24:13), மோசே திரும்பவரும் 40 நாட்கள்வரை அவருக்காய் காத்திருந்தார், மோசே இவரை ஆசரிப்பு கூடாரத்தின் பொருப்பாளராய் ஏற்படுத்தினார் (யாத்திராகமம் 33:7-11). இப்படிப்பட்ட பயிற்சியின் போது, மோசே 12 வேவுகாரரில் ஒருவனாய் யோசுவாவை தெரிவுசெய்தார், இது யோசுவா பொறுப்பெடுப்பதற்கு 40 ஆண்டுகளுக்கு முந்தின சம்பவமாய் இருக்கிறது. அவர் மோசே மரித்த பின்னர் பொறுப்பெடுத்தார் (உபாகமம் 31:14-16). கர்த்தர் யோசுவாவுடன் நேரடியாய் பேசினார் (யோசு. 1:1-9) இவர் தனது 85 வயதில் பொறுப்பேற்றார். யோசுவா இஸ்ரவேல் மக்களை யோர்தான் நதியின் நடுவில் உலர்ந்த தரைமார்க்கமாய் அக்கரையை சென்றடையச் செய்தார். (யோசுவா 3). அங்கு ஒரு நினைவு சின்னத்தை உருவாக்கிய பின்னர், யோசுவா எரிகோ பட்டணத்தை பிடிக்கச் சென்றார், எக்காள தொனியின் சத்தத்தை தொனிக்கச்செய்த போது எரிகோவின் மதில்கள் இடிந்து விழுந்தன. பாவமானது ஆயி பட்டணத்தை பிடிக்க முடியாது தோல்வியை தழுவ வைத்தது, தொடர்ந்து கானானை வென்று, எல்லாப் பட்டணங்களையும் எடுத்துக்கொள்ள இயலாது இருந்தது.(யோசுவா 11:23; 13:1). யோசுவா கிபியோனியர்களால் ஏமாற்றப்பட்டார் (யோசுவா 9) இருப்பினும் படிப்படியாய் தேசத்தை பங்கிட முடிந்தது (யோசுவா 14-21). யோசுவா இஸ்ரவேலரை தைரியப்படுத்தி, கர்த்தரிடத்தில் நம்பிக்கை வைக்கக் கேட்டுக்கொண்டு தனது 110 வது வயதில் மரித்தார் (யோசுவா 24:29). அவர் திம்னாத் - சேராவில் அடக்கம் செய்யப்பட்டார்.

3. மதிப்பீடு:

அ] யோசுவா தாழ்மையுள்ளவராய் இருந்தார், மோசேக்கு இருந்த இயல்பான தாலந்துகள் இவருக்கில்லை என்பதை உணர்ந்து கொண்டார்.

ஆ] இவர் தேவன் பயன்படுத்தும்படி அவ்வளவு முக்கியம் வாய்ந்தவராய் இல்லை, இவ்வாறு தேவன் அவரை அப்பதவிக்கு உயர்த்தினார் (யோசுவா 3:7; 4:14).

இ] இவர் பலமான விசுவாசமுள்ள மனிதராய் விளங்கினார் மற்றும் தனது அழைப்பில் உண்மையுள்ளவராய் இருந்தார்.

ஈ] தனது தளபதியை விரைவாய் பணிந்துகொள்கிறவராய் இருந்தார் (யோசுவா 5:13-15).

உ] எரிகோவை வென்றது காண்பதற்கு கேலியான சம்பவமாய் இருந்த போதிலும், யோசுவா திடமனதுடன் தேவனுக்கு கீழ்ப்படிந்தார். (யோசுவா 6).

ஊ] அவர் ஆயி பட்டணத்தில் தனது தேசத்திற்காய் மனந்திரும்பி கதறினார் (யோசுவா 7:6-9).

எ] அவர் ஏபால் மலையின் அடிவாரத்தில் அதை மேற்கொள்வதற்கு முன்னர் ஆராதிக்கிறவர்களை வைத்தார் (யோசுவா 8:30-35).

ஏ] கிபியோனின் யுத்தத்தின் போது, தேவன் கல்மலையின் மூலம் யோசுவாவிற்கு உதவியாய் இருந்தார். (யோசுவா 10:10-14).

ஐ] அவர் தனது வாழ்வில் தேவனது வார்த்தைக்கு அதிக கவனம் செலுத்தினார் (யோசுவா 1:8-18).

ஒ] யோசுவா மிகச்சிறந்த இராணுவத்தலைமைத்துவத்தில் செயல்பட்டு ஆயி பட்டணத்தையும் பெத்தேலையும் கைப்பற்றினார், இவர் கானான் தேசத்தை இரண்டாய் பகுத்து, தென் தேச மற்றும் வட தேசத்தினருடன் தனித்தனியே அவர்களது இராஜாக்களுக்கு விரோதமாய் பாளயமிரங்கினார்.

ஓ] அவர் மிக நேர்த்தியாக நியாய விசாரணை செய்து தேசத்தை இஸ்ரவேல் கோத்த்ரத்தாருக்கு பங்கிட்டு கொடுத்தார்.

4. கொள்கைகள்:

அ] தாழ்மை என்பது நல்ல தலைமைத்துவத்திற்கு முன் நிபந்தனையாய் இருக்கிறது. (1 தீமோத்தேயு 3:6; தீத்து 1:6).

ஆ] நீங்கள் மற்றவர்களை வழிநடத்த வேண்டுமானால், நீங்கள் கற்றுக்கொள்கிறவர்களாய் இருத்தல் அவசியம் (1 பேதுரு 5:5).

இ] தேவன் தனது நேரத்தில் உயர்வை அளிப்பார் (1 பேதுரு 5:6).

ஈ] சிறிய காரியங்களில் உண்மையாய் இருப்பது, பெரிய வல்லமையை நம்புவதற்கு முன்னதாய் அவசியப்படுகிறதாய் இருக்கிறது. (மத்தேயு 25:21,23).

உ] தேவனது வார்த்தையைக் குறித்த அறிவும், அவற்றை வாழ்க்கையின் பிரச்சனையின் போது பயன்படுத்துவதும் வெற்றியை நிர்ணயிக்கிறதாய் இருக்கிறது (சங். 119:9).

ஊ] பாவம் வாழ்வில் இருக்குமேயானால், அது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்வை முற்றிலும் அழித்துவிடுகிறதாய் இருக்கிறது. (1 யோவான் 1:6-7).

எ] வெற்றியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால் பாவத்தை நேர்மறையான விதத்தில் கையாளுதல் வேண்டும். (1 யோவான் 1:9).

ஏ] முதிர்ந்த விசுவாசிகள் கூட வஞ்சிக்கப்படலாம் (கிபியோனியர்கள்) (மத்தேயு 24:24).

ஐ] வாழ்க்கைப் பிரச்சனையில் கர்த்தர் உதவி அளிக்கிறவராய் இருக்கிறார். (சங். 23:1; யாக். 1:5).

ஒ] முதிர்ந்த விசுவாசிகள் தலைமைத்துவத்தில் சிறப்பான நீதி வழங்க பொது அறிவை பயன்படுத்துதல் அவசியம் (நீதிமொழிகள் 24:5,6).

DOCTRINE INDEX

DOCTRINE	PAGE
Abiding நிலைத்து இருத்தல்	121
Abraham – Faith ஆபிரகாம் -- விசுவாசம்	5
Adultery விபச்சாரம்	133
Ambassadorship ஸ்தானாபதித்துவம்	76
Angel of Jehovah யெஹோவாவின் தூதனானவர்	19
Angels தேவதூதர்கள்	31
Attitude மனப்பான்மை	72
Baptism ஞானஸ்நானம்	81
Carnality மாம்சீகம்	7
Charity: Biblical Charity தொண்டு / சேவை: வேதாகமத் தொண்டு	43
Christian Life கிறிஸ்தவ வாழ்க்கை	21
Circumcision விருத்த சேதனம்	23
Communion: The Lord's Supper திருவிருந்து: கர்த்தரின் இராவிருந்து	80
Death மரணம்	42
Discipline of Believers விசுவாசிகளின் சிட்சை	117
Drinking Alcohol மது அருந்துவது	32
Eternal Security நித்திய பாதுகாப்பு	7
Family குடும்பம்	22

Feasts of Israel இஸ்ரவேலரின் பண்டிகைகள்	112
Forgiveness மன்னிப்பு	64
Four Generation Curse நான்கு சந்ததிகளாய் தொடரும் பாவம்	15
Free Will சுய சித்தம்	118
Gifts Given at Salvation இரட்சிப்பின்போது அளிக்கப்படும் வரங்கள்	102
Gifts: Spiritual Gifts வரங்கள்: ஆவிக்குரிய வரங்கள்	128
God Cares For You தேவன் உங்களில் அக்கறை செலுத்துகிறவர்.	125
God: Character of God தேவன்: தேவனது குணாதிசயங்கள்	17
Grace கிருபை	58
Guidance: The Will of God வழிநடத்தப்படல்: தேவனது சித்தம்	131
Healing and Miracles குணமாக்குதலும் அற்புதமும்	117
Holy Spirit: Teacher பரிசுத்த ஆவியானவர்: போதிப்பவர்	102
Humility தாழ்மை	125
I Am இருக்கிறேன்	74
Isaac – Type of Christ ஈசாக்கு -- கிறிஸ்துவுக்கு ஒப்பனை.	38
Israel இஸ்ரவேல்	136
Jacob – The Patriarch யாக்கோபு -- முற்பிதா	47
Jealousy பொறாமை	62
Joseph and Romans 8:28 யோசேப்பும் ரோமர் 8:28 ம்.	53
Joseph – Plan of God யோசேப்பு -- தேவனின் திட்டம்	50
Joshua – Leadership யோசேப்பு -- தலைமைத்துவம்	145
Lamb ஆட்டுக்குட்டி	37
Law of Moses மோசேயின் நியாப்பிரமானம்	88
Laws in the New Testament புதிய ஏற்பாட்டில் நியாயப்பிரமாணங்கள்	94
Leaven புளித்த மா	96
Legalism தாராளவாதம்	34
Lot – Carnality லோத்து -- மாம்சீகம்	28
Manna மன்னா	124

DOCTRINE	**PAGE**
Marriage திருமணம்	18
Military இராணுவம்	11
Ministers ஊழியர்கள்	73
Model Servant மாதிரி சேவகன்	40
Money பணம்	130
Moses – The Law மோசே -- நியாயப்பிரமாணம்	144
Names and Titles of God தேவனது தலைப்பு மற்றும் நாமங்கள்	77
Nations and Races தேசங்களும் இனங்களும்	92
Offerings: Levitical Offerings Represent Christ பலிமுறைகள்: கிறிஸ்துவை பிரதிபலிக்கும் லேவிய பலிமுறைகள்.	99
Old Age விருத்தாப்பியம்	45
Pharaoh – God's Power பார்வோன் -- தேவனது வல்லமை	82
Plan of God தேவனது திட்டம்	55
Prayer ஜெபம்	26
Priests ஆசாரியர்கள்	104
Priests: Levitical Priesthood ஆசாரியர்கள்: லேவிய ஆசாரியத்துவம்	107

Priests: Priestly Garments ஆசாரியர்கள்: ஆசாரிய உடைகள்.	105
Promises of God தேவனது வாக்குத்தத்தம்	43
Prophecies of the Tribes of Israel இஸ்ரவேல் கோத்திரத்தாரைக்குறித்த தீர்க்கதரிசனங்கள்	65
Propitiation கருணை அல்லது இரக்கம் பெறுதல்	37
Reconciliation ஒப்புரவாகுதல்	64
Rewards and Crowns பிரதிபலன்களும் கிரீடங்களும்	14
Rock கன்மலை	86
Sabbath and the Lord's Day சாபத் மற்றும் கர்த்தரின் நாள்	89
Salt உப்பு	27
Sanctification பரிசுத்தமாக்கப்படல்	121
Separation வேறுபிரிக்கப்படல்	121
Shekinah Glory ஷெக்கினா மகிமை	83
Sin பாவம்	58
Spirituality ஆவிக்குரியத் தன்மை.	8
Tabernacle ஆசரிப்புக் கூடாரம்	109
Trinity திரித்துவம்	140
Types: Jacob as a Type of Israel ஒப்புமைகள்: யாக்கோபு இஸ்ரவேலுக்கு ஒப்பிடப்படுகிறார்.	47
Types: Joseph as a Type of Christ ஒப்புமைகள்: யோசேப்பு கிறிஸ்துவுக்கு ஒப்பிடப்படுகிறார்.	52
Weeping அழுகை	126
Wells கிணறுகள்	35
Worry – Cure For Worry கவலை -- கவலை குணமாக்கப்படல்	13